பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

புதிய பதிப்பு
2020 - 2021

# தமிழ் அமுது

# 10

## பகுதி - 1



நூலின் கட்டமைப்பு:

பாடநூலில் இருப்பது போன்றே கற்றல்
நோக்கங்கள், பாடலின் பொருள், நூல் மற்றும்
ஆசிரியர் குறிப்புகள், பொருள் கூறுக, இலக்கணக் குறிப்பு,
பகுபத உறுப்பிலக்கணம், பலவுள் தெரிக, செய்யுள் - வினாவிடை,
பத்தி வினாவிடை, குறுவினா, சிறுவினா, கற்பவை கற்றபின்,
விடைக்கேற்ற வினாக்கள், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு
"பா" நயம் பாராட்டல், கட்டுரை, கடிதம், அலகிடுதல்
சந்திப்பிழையை நீக்கி எழுதுதல், ஒருமை பன்மை பிழைகளை நீக்குக
அலகுத் தேர்வுகள், மனப்பாடப் பாடல்கள்

இலக்கு 100/100

இணைப்பு
பகுதி 2, வினா வங்கி

பெங்குயின் பப்ளிகேஷன்

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972

# பெங்குயின்

# தமிழ் அமுது

## பகுதி - 1

10

புதிய பாடத்திட்டத்தின் படி
தயாரிக்கப்பட்டுள்ளது

இணைப்பு: பகுதி - 2, வினா வங்கி

எச்சரிக்கை
வெளியீட்டாளர் அனுமதியின்றி இந்த புத்தகத்தின் எந்த பகுதியும் மீண்டும்
உருவாக்கப்படக்கூடாது மற்றும் நகல் எடுக்கக்கூடாது மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை ரூ. 199

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழிசிரியப் பெருமக்களே!

நாங்கள் 10 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின்படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்கால வாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சில வினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்ட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையான அழகு, தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலை நிறுத்துங்கள். அரசுப்பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 1 | மொழி | அன்னை மொழியே* | 6 |
| | அமுதஊற்று | தமிழ்ச்சொல் வளம் | 12 |
| | | இரட்டுற மொழிதல் | 17 |
| | | உரைநடையின் அணிநலன்கள் | 21 |
| | | எழுத்து, சொல் | 23 |
| 2 | இயற்கை, சுற்றுச்சூழல் | கேட்கிறதா என்குரல் | 39 |
| | உயிரின் ஓசை | காற்றே வா | 48 |
| | | முல்லைப்பாட்டு* | 54 |
| | | புயலிலே ஒரு தோணி | 61 |
| | | தொகைநிலைத் தொடர்கள் | 64 |
| 3 | பண்பாடு | விருந்து போற்றுதும் | 77 |
| | கூட்டாஞ்சோறு | காசிக்காண்டம்* | 86 |
| | | மலைபடுகடாம் | 91 |
| | | கோபல்லபுரத்து மக்கள் | 98 |
| | | தொகாநிலைத் தொடர்கள் | 100 |
| | | திருக்குறள் | 110 |
| 4 | அறிவியல், தொழில்நுட்பம் | செயற்கை நுண்ணறிவு | 121 |
| | நான்காம் தமிழ் | பெருமாள் திருமொழி* | 130 |
| | | பரிபாடல் | 134 |
| | | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | 139 |
| | | இலக்கணம் - பொது | 142 |
| 5 | கல்வி | மொழிபெயர்ப்புக் கல்வி | 157 |
| | மணற்கேணி | நீதி வெண்பா* | 169 |
| | | திருவிளையாடற் புராணம்* | 172 |
| | | புதிய நம்பிக்கை | 182 |
| | | வினாவிடை வகை, பொருள்கோள் | 185 |
| 6 | கலை, அழகியல், புதுமைகள் | நிகழ்கலை | 200 |
| | நிலை முற்றம் | பூத்தொடுத்தல் | 207 |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்* | 210 |
| | | கம்பராமாயணம்* | 215 |
| | | பாய்ச்சல் | 227 |
| | | அகப்பொருள் இலக்கணம் | 229 |
| | | திருக்குறள் | 240 |

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 7 | நாகரிகம், தொழில் வணிகம் நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | சிற்றகல் ஒளி (தன் வரலாறு) | 252 |
| | **விதை நெல்** | ஏர் புதிதா? | 259 |
| | | மெய்க்கீர்த்தி | 264 |
| | | சிலப்பதிகாரம்* | 273 |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே | 282 |
| | | புறப்பொருள் இலக்கணம் | 284 |
| 8 | அறம், தத்துவம், சிந்தனை | சங்க இலக்கியத்தில் அறம் | 296 |
| | **பெருவழி** | ஞானம் | 303 |
| | | காலக்கணிதம்* | 309 |
| | | இராமானுசர் (நாடகம்) | 314 |
| | | பா - வகை, அலகிடுதல் | 317 |
| 9 | மனிதம், ஆளுமை | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) | 333 |
| | **அன்பின் மொழி** | சித்தாளு | 339 |
| | | தேம்பாவணி* | 343 |
| | | ஒருவன் இருக்கிறான் | 351 |
| | | அணிகள் | 354 |

| பின் இணைப்பு | ப. எண் |
|---|---|
| மனப்பாடப் பாடல்கள் | 1 |
| கடிதம் | 365 |
| கட்டுரை | 371 |
| அலகிடுதல் | 377 |
| கவிதை | 381 |

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## மனப்பாடப் பாடல்கள்

மனப்பாடப் பாடல்களை ஆடியோ வடிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

### அன்னை மொழியே!

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

### முல்லைப்பாட்டு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்

**- நப்பூதனார்**

### காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

**இல்லொழுக்கம், (பா எண் : 17)**

**- அதிவீரராம பாண்டியர்**

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. **(பாசுர எண் : 691)**

**- குலசேகராழ்வார்**

## நீதிவெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

**- கா.ப. செய்குதம்பிப் பாவலர்**

## திருவிளையாற்புராணம்

**மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்**

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

**- பரஞ்சோதி முனிவர்**

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

ஆடுக செங்கீரை!
செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

**செங்கீரை பருவம், பா.எண் : 8) - குமரகுருபரர்**

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## கம்பராமாயணம்

**பாலகாண்டம் - நாட்டுப்படலம்**

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ

**அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம்**

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

**- கம்பர்**

## சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

**- இளங்கோவடிகள்**

## காலக்கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்தவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

**- கண்ணதாசன்**

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## தேம்பாவணி

**இயற்கை கொண்ட பரிவு**

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே

**- வீரமாமுனிவர்**

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



இயல் ஒன்று

மொழி

# அமுதஊற்று



தமிழ் எழுத்துகளில் ஊர்ப் பெயர்கள் பொறிக்கப்பட்ட பண்டைய காசுகள்.

**கற்றல் நோக்கங்கள்**

- தமிழ்மொழியின் செழுமை குறித்து அற்றலுடன் உரையாற்றுதல்.
- மொழியிலுள்ள வகைப்படுத்தப்பட்ட சொல்வளங்களைச் சொற்களின் வாயிலாகப் பேச்சிலும் எழுத்திலும் இடமறிந்து கையாளுதல்.
- உரைநடையிலுள்ள அணிநலன்களை உள்வாங்கிக்கொண்டு நயமிகு தொடர்களை உருவாக்கி வெளிப்படுத்துதல்.
- மொழி தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரும் நுட்பத்தை அறிந்து பயன்படுத்துதல்.
- சொல்லாக்க விதிமுறைகளை அறிந்து புதிய சொற்களை உருவாக்குதல்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



மொழி
க

கவிதைப் பேழை

# அன்னை மொழியே

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3EGD9S



பாடல் :

**அழகார்ந்த செந்தமிழே!**

"அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!"

**- கனிச்சாறு**

## பாடலின் பொருள்

- அன்னை மொழியே! அழகாய் அமைந்த செந்தமிழே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! குமரிக் கண்டத்தில் கடல் கொண்ட நாட்டில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
- பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெருமைக்குரிய புகழை உடையவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கி எழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.
- செம்மை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமைகளை என்னுடைய தமிழ்நாக்கு எவ்வாறு எடுத்து விரித்துரைக்கும்? பழம் பெருமையும் தனக்கெனத் தனிப்புகழும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வியக்கத்தக்க உன் நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன. எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துச் சிறகினை அசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

## நூற் குறிப்பு

- பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலிருந்து இரு வேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும் ) எடுத்தாளப் பட்டுள்ளன.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழ் உணர்வை உலகெங்கும் பரவச் செய்யப்பட்டுள்ளது.
- இவரது பாடல்கள் சில நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
- இவரது பாடல்கள் தமிழுக்குக் கருவூலமாய்த் திகழ்கிறது.

## ஆசிரியர் குறிப்பு

**பெயர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
**பெற்றோர்** : துரைச்சாமி - குஞ்சம்மமாள்
**ஊர்** : சேலம் மாவட்டம் - சமுத்திரம்
**இயற்பெயர்** : துரை மாணிக்கம்
**பிறப்பு** : 10.03.1933
**படைத்த நூல்கள்** : மல்லிகை, பூக்காரி, சாதி ஒழிப்பு, கொய்யாக்கனி, ஐயை, கனிச்சாறு, பள்ளிப்பறவைகள், ஓ! ஓ! தமிழர்களே, கழுதை அழுதகதை முதலியன.
**தொடங்கிய இதழ்** : தென்மொழி, தமிழ்ச்சிட்டு

## பொருள் கூறுக

**முகிழ்த்த** - தோன்றிய;
**தென்னன்** - பாண்டியன்;
**எண்தொகையே** - எட்டுத்தொகை;
**நற்கணக்கு** - பதினெண் கீழ்க்கணக்கு;
**மாண்பு** - பெருமை;
**மன்னும்** - நிலைத்த;
**தும்பி** - வண்டு;
**முந்துற்றோம** - முழங்குகின்றோம்;
**முடிதாழ** - தலை பணிந்து;
**கனி** - பழம்;
**உந்தி** - பற்று;
**பாபத்தே** - பத்துப்பாட்டு.

## இலக்கணக் குறிப்பு

**செந்தமிழ்; நறுங்கனி; செந்தாமரை** - பண்புத்தொகை
**முகிழ்த்த; எழுப்ப** - பெயரெச்சம்
**செந்தமிழே! நறுங்கனியே! மகளே!** - விளித்தொடர்

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



| | | |
|---|---|---|
| **கன்னிக்குமரி; மண்ணுலகம்** | - | உருவகம் |
| **தென்னன் மகள், நின் பெருமை** | - | 6 ஆம் வேற்றுமைத் தொகை |
| **வாழ்த்துவோம், முந்துற்றோம்** | - | தன்மை பன்மை வினைமுற்று |
| **குடித்து** | - | வினையெச்சம் |
| **யாண்டும்** | - | முற்றும்மை. |

## உறுப்பிலக்கணம்

**முகிழ்ந்த = முகிழ் + த் + த்(ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| **முகிழ்** | - | பகுதி; |
| **த்** | - | சந்தி; |
| **த்-ந்** | - | ஆனது விகாரம்; |
| **த்** | - | இறந்தகால இடைநிலை; |
| **அ** | - | பெயரெச்ச விகுதி. |

**வாழ்த்துவோம் = வாழ்த்து + வ் + ஓம்**

| | | |
|---|---|---|
| **வாழ்த்து** | - | பகுதி; |
| **வ்** | - | எதிர்கால இடைநிலை; |
| **ஓம்** | - | தன்மை பன்மை வினைமுற்று விகுதி. |

## பாடநூல் வினா - பலவுள் தெரிக.

**1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும்?**

(அ) எந் +தமிழ் +நா (ஆ) எந் +தமிழ் +நா

(இ) எம் +தமிழ் +நா (ஈ) எந்தம் +தமிழ் +நா

**[விடை : எம் +தமிழ் +நா]**

## பாடநூல் வினாக்கள்- குறுவினா

1. **"மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே" -இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

   சீவகசிந்தாமணி, வளையாபதி குண்டலகேசி.

## கூடுதல் வினாக்கள்- குறுவினா

**1. தமிழின் தனிச்சிறப்பு யாது ?**

தமிழ் மொழி பழம்பெருமையும், தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டது.

**2. பாவலரேறு தமிழின் பெருமையை எவ்வாறு முழங்குகிறார் ?**

தமிழ்மொழியின் பெருமையை பாவலரேறு, வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**3. பாவலரேறு எந்தெந்த இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரவச்செய்தார் ?**

தென்மொழி, தமிழ்சிட்டு

**4. பாவலரேறு படைத்த நூல்கள் சிலவற்றை கூறுக?**

1. உலகியல் நூறு 2. பாவியக்கொத்து 3. நூறாசிரியம் 4. கனிச்சாறு

**5. "இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே நற்கணக்கே! - இவ்வடிகளில் கூறப்படும் மொத்த நூல்கள் எத்தனை?**

| | | |
|---|---|---|
| பாப்பத்து | - பத்துப்பாட்டு | - 10 |
| எண்தொகை | - எட்டுத்தொகை | - 8 |
| நற்கணக்கு | - பதினெண்கீழ்க்கணக்கு | - 18 |
| மொத்த நூல்களின் எண்ணிக்கை | | - 36 |

**6. தமிழ் எப்பகுதியில் நிலைத்து நிற்கின்றது?**

கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் தமிழ் மண்ணுலகப் பேரரசாய் அரசாண்டு நிலைத்து நிற்கின்றது.

**7. பெருஞ்சித்திரனார் தமக்குள் தமிழ்ப்பற்று எவ்வாறு எழுந்ததாகக் கூறுகின்றார்?**

- வியக்கத்தக்கதான தமிழின் நீண்ட நிலைத்த தன்மையும்
- வேற்று மொழியார் தமிழைப் பற்றி உரைத்த புகழுரையும்

தமக்குள் பற்றுணர்வை எழுப்பியதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

## பாடநூல் வினா - சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?**

1. செழுமை மிக்க தமிழ், எம் உயிர்.
2. சொல்லுதற்கு அரிய நின் பெருமைகளை என்னுடைய நா விரித்துரைக்கும்.
3. பழம் பெருமையும், தன்கெனத் தனிச்சிறப்பும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ்.
4. வியக்கத்தக்க நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உரைத்த புகழுரையும் பற்றுணர்வும் கொண்டவை தமிழ் மொழி.

## கூடுதல் வினாக்கள்- சிறுவினா

**1. பாவலரேறு தமிழன்னையை எவ்வாறு வாழ்த்துகின்றார் ?**

- அன்னை மொழியே! அழகாய் அமைந்த செந்தமிழ் பழைமைக்கும் பழைமையாய்த் தோன்றும்.
- கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு.
- பாண்டிய மன்னனின் மகள் திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவள்.
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, நிலைத்த சிலப்பதிகாரம் , அழகான மணிமேகலை என்று பாவலரேறு தமிழன்னையை வாழ்த்துகிறார்.

**2. குறிப்பு வரைக -பாவலரேறு பெருஞ்சிச்திரனார்.**

| | |
|---|---|
| **பெயர்** | : பாவலரேறு பெருஞ்சித்திரனார். |
| **பெற்றோர்** | : துரைச்சாமி - குஞ்சம்மாள் |
| **ஊர்** | : சேலம் மாவட்டம் - சமுத்திரம் |
| **இயற்பெயர்** | : துரை மாணிக்கம் |
| **பிறப்பு** | : 10.03.1933 |

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**படைத்த நூல்கள்** : மல்லிகை, பூக்காரி, சாதி ஒழிப்பு, கொய்யாக்கனி, ஐயை, கனிச்சாறு, பள்ளிப்பறவைகள், ஓ! ஓ! தமிழர்களே, கழுதை அழுதகதை முதலியன.

**தொடங்கிய இதழ்** : தென்மொழி, தமிழ்ச்சிட்டு

## பாடநூல் வினா - நெடுவினா

**தமிழ்த்தாய் வாழ்த்து**

| | மனோன்மணீயம் சுந்தரனார் | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
|---|---|---|
| 1 | பூமி என்று பெண் நீராலான கடலை ஆடையாகக் கொண்டு விளங்குகின்றாள் என்கிறார். | கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்த அரசாண்ட மண்ணுலகப் பேரரசு என்கிறார். |
| 2 | அழகிய முகமாக பாரதக் கண்டம் திகழ்கிறது. முகத்திற்கு பிறைநிலவு போன்ற நெற்றியாக தக்காணபீடபூமி அமைந்துள்ளது. | ஆழகாய் அமைந்த செந்தமிழ் பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி, பாண்டிய மன்னனின் மகள் திருக்குறளின் பெருமைக் குரியவள். |
| 3 | நெற்றியில் நறுமணமிக்க பொட்டு வைத்தது போல் தமிழகம் உள்ளது. பொட்டின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வது போல் எல்லாத் திசைகளிலும் புகழ் பெற்றவளாக தமிழ்த்தாய் இருக்கிறாள். | எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, நிலைத்த சிலப்பதிகாரம், அழகிய மணிமேகலையாக புகழ் பெற்று விளங்குகிறாள். |
| 4 | உலகின் மூத்த மொழியாக இருந்தும் இன்றளவும் இளமையாகி இருக்கிறாள். தமிழ் மொழியின் வளம் பெருகுகின்றதே தவிர குறையவில்லை. இத்தனைப் புகழுடைய தமிழே! தமிழாகிய பெண்ணே! தாயே! உன்னை வாழ்த்துகிறேன். | பழம் பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டது. வேற்று மொழியார் கூட தமிழைப்பற்றி உரைத்த புகழுரை பெரிய பற்றுணர்வை எழுப்புகின்றன என்று பாவலரேறு பாடுகிறார். |

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. அன்னை மொழியே என்ற கவிதையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- அன்னை மொழியே! அழகாய் அமைந்த செந்தமிழே!பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! குமரிக் கண்டத்தில் கடல் கொண்ட நாட்டில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
- பாண்டிய மன்னினன் மகளே! திருக்குறளின் பெருமைக்குரிய புகழை உடையவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! மணிமேகலையே! பொங்கி எழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.
- செம்மை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்குரிய நின் பெருமைகளை என்னுடைய தமிழ்நாக்கு எவ்வாறு எடுத்து விரித்துரைக்கும்? பழம் பெருமையும் தனக்கெனத் தனிப்புகழும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே!
- வியக்கத்தக்க உன் நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



- எமக்குள்பற்றுணர்வை எழுப்புகின்றன. எம் தனித்தமிழே! செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துச் சிறகினை அசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

---

## கற்பவை கற்றபின்

1. "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என
இத்திறத்து எட்டுத்தொகை"
**இச்செய்யுளில் இடம் பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர் காரணத்துடன் எடுத்துக் காட்டுக**
   - **நற்றிணை :**
     எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. 400 பாடல்களைக் கொண்டது. 9-12 பாடல் அடிவரையறை உடையது. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.
   - **குறுந்தொகை :**
     நல்ல குறுந்தொகை எனச் சிறப்பிக்கப்படுகிறது. 4-8 பாடல் அடி வரையறை உடையது. இந்நூல் மூலம் இல்வாழ்க்கை, மகளிர் மாண்பு, அறவுணர்வு, ஒழுக்கம் ஆகியன பற்றி அறியலாம்.
   - **ஐங்குறுநூறு :**
     ஐந்து +குறுமை +நூறு. ஐங்குறுநூறு 500 அகத்திணைப் பாடல்களைக் கொண்டது. மூன்றடிச் சிறுமையும், ஆறு அடிப் பெருமையும் கொண்டது. இதில் உள்ள பாடல்கள் சங்க காலத்தைச் சார்ந்தவை.
   - **பதிற்றுப்பத்து :**
     புறம் சார்ந்த நூல் ஆகும். 100 பாடல்கள் உடையது. சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றி பத்துப் புலவர்கள் பத்து பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு. சேரமன்னர்களின் பல்வேறு திறன்களைக் கூறுகிறது.
   - **பரிபாடல் :**
     அகம், புறம் சார்ந்த நூல் 25 முதல் 400 அடிகள் வரை இருக்கும். தமிழின் முதல் இசைப்பாடல். நான்கு பாவின் உறுப்புகளும் கொண்ட பாடல்.
   - **கலித்தொகை :**
     ஐந்திணைக்கு கலிப்பாவால் அமைந்த நூல். 150 பாடல்கள் உள்ளன. கலிப்பாவின் ஓசை துள்ளல் ஓசை. "கற்றறிந்தோர் ஏத்தும் கலி" எனவும் கூறப்படுகிறது.
   - **அகநானூறு :**
     அகத்திணை சார்ந்த நூல். இதனை "நெடுந்தொகை" எனவும் கூறுவர். 13-31 அடி வரையறை உடையது. களிற்றியானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவுகளைக் கொண்டது.
   - **புறநானூறு :**
     புறம் சார்ந்த நூல். 400 பாடல்கள் உடையது. 4-40 பாடல் அடி வரையறை உடையது. தமிழரின் வரலாற்றுப் பெட்டகம். இதனை ஜி.யூ. போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.
2. **"எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடிகளைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிடம் உரை நிகழ்த்துக.**
   - பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழன் பெருமையை "வீறுடை செம்மொழி தமிழ் மொழி, உலகம் வேரூன்றிய நாள்முதல் உயர்மொழி" என பறைசாற்றுகிறார். தமிழ் மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்த இலக்கிய வளம் மிக்க மொழி . காலத்தால் மூத்த மொழி.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



- வடமொழியில் தமிழ், பிராகிருதம், பாலிமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பிற மொழிச் சொற்களை நீக்கினால் பிறமொழிகள் இயங்காது. ஆனால், தமிழ் மொழி ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினால் இனிமையுடன் இயங்கக் கூடியது. மிகுதியான வேர்ச் சொற்களைக் கொண்டது. தமிழ் உலகில் 6000 மேற்பட்ட மொழிகள் உள்ளன.
- முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டம். அவன் பேசிய மொழி தமிழ் மொழியே. அக்குமரிக்கண்டத்தில் முதல், இடைத் தமிழ்ச் சங்கங்கள் அமைத்து தமிழர் மொழியை வளர்த்தனர்.
- இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.
- "தமிழே மிகவும் பண்பட்ட மொழி. தமிழ்மொழியே எல்லா மொழிகளுக்கும் தாய் மொழியாகத் திகழ்கிறது". ஆதலால் ,உலகமொழிகளுக்கெல்லாம் தாய் மொழியாகத் திகழ்கிறது.
- இதனை உணர்ந்து தமிழின் சீரிளமையைக் காக்க என்றும் பாடுபடுவோம். சிறப்புக்குரிய தமிழை என்னுடைய "தமிழ்நா" நின் பெருமையை எடுத்தே உரைவிரிக்கும் என்றும்.

நன்றி ! வணக்கம்

---

உரைநடை உலகம்

மொழி


க

# தமிழ்ச்சொல் வளம்

*– தேவநேயப் பாவாணர்*

3TZ8B4







**பாடநூல் வினாக்கள்**

1. "காய்ந்த <u>இலையும்</u> காய்ந்த <u>தோகையும்</u>" நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது **<u>சருகும் சண்டும்</u>**

   (அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும்

   (இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்

2.வேர்க்கடலை, மிளகாய் விதை ,மாங்கொட்டை- ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை **<u>மணிவகை.</u>**

   (அ) குல வகை (ஆ) மணிவகை

   (இ) கொழுந்து வகை (ஈ) இலைவகை

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## விடைக்கேற்ற வினா அமை

1. **நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று பாடியவர் பாரதியார்**
   நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று பாடியவர் யார்?
2. **திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள இடம் திருச்சிக்கு அருகே அல்லூர்**
   திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள இடம் எது?
3. **தமிழச்சொல் வளம் என்னும் கட்டுரை இடம் பெற்றுள்ள நூல் சொல்லாய்வுக் கட்டுரைகள்.**
   தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரை இடம் பெற்றுள்ள நூல் எது?

## பாடநூல் வினா - குறுவினா

1. **புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க**
   அ) கன்று - மாங்கன்று விற்பனைக்கு உள்ளது.
   ஆ) பிள்ளை - தென்னம்பிள்ளை வாங்கி வந்தேன்
   இ) நாற்று - வயலில் நாற்று நட்டினேன்
   ஈ) பைங்கூழ் - நெல் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

## சிறுவினா

1. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
   **மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடர் பிழைக்கான காரணத்தைக் கூறுக.**
   - **சரியான தொடர்கள் :**
     ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
     ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
   - **பிழையான தொடர் :**
     ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
   - **பிழைக்கான காரணம் :**
     வாழைக்குலை என்பது தாறு; வாழைத்தாற்றின் பகுதி சீப்பு;
     வாழைத்தாற்றில் பல சீப்புகள் உள்ளன என்று தான் கூற வேண்டும்.

## நெடுவினா

1. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.**

**தமிழின் சொல்வளம்.**

- இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும் ,தமிழ் மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.

- ஒரு பொருட் பல சொல் வரிசைகள் தமிழைத் தவிர வேறு எந்தத் திராவிட மொழிகளின் அகராதிகளிலும் காணப்படவில்லை.
- "கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள" என்கிறார் திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் எழுதிய கால்டுவெல்.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவைகள்**

- சொல்லாக்கத்தின் பயன்பாட்டு முறையைக் கொண்டு அமைகிறது.
- தமிழ் மொழியின் ஒலி, சொல், பொருள் அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
- மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும், இலக்கிய மேன்மைக்கும் தேவை.
- மரபு வழிப்பட்ட தமிழ் இலக்கணத்தில் மாற்றங்கள் தேவை.
- மொழியின் வளர்ச்சிக்கு சொல்லாக்கம் தேவை.
- உயர்கல்வித்துறைக்கும், பாடநூல்களை எழுதுவதற்கும் சொல்லாக்கம் தேவை.
- தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குறையாமல் இருக்க சொல்லாக்கம் தேவை.
- சொல்லாக்கத்தினால் உலகின் பிற ஆய்வுச் சிந்தனைக்களைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிற மொழியை அறியலாம்.
- மக்களிடையே ஆளுமையும், பரந்த மனப்பான்மையும் வளர சொல்லாக்கம் தேவை.
- பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையாமல் இருக்க சொல்லாக்கம் தேவை.
- தமிழ் தனித்து இயங்கும் தன்மை மாறாமலிருக்க சொல்லாக்கம் மிகவும் அவசியமாகும்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி டாக்டர் கால்டுவெல் கூறுவன யாவை?**

தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்று டாக்டர் கால்டுவெல் கூறுகிறார்.

**2. தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?**

தாள், தண்டு, கோல், தூறு, தட்டு அல்லது தட்டை, கழி, கழை, அடி.

**3. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**

கவை,கொம்பு அல்லது கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு

**4. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**

சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை

**5. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு.

**6. தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

துளிர் அல்லது தளிர், முறி அல்லது கொழுந்து, குருத்து, கொழுந்தாடை.

**7. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

அரும்பு, போது, மலர் அல்லது அலர், வீ, செம்மல்.

**8. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**

பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக்குரும்பை, நுழாய், கருக்கல், கச்சல், இளநீர்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**9. தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்களை எழுதுக?**

கொத்து, குலை, தாறு, கதிர், அலகு, குரல், சீப்பு

**10. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்களை எழுதுக?**

சூம்பல், கோட்டான்காய், அல்லது கூகைக்காய், தேரைக்காய், அல்லிக்காய் ஒல்லிக்காய், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு.

**11. பழங்களின் மேற்பகுதியினைக் (பழத்தோல்) குறிக்க வழங்கும் சொற்களைக் எழுதுக?**

தொலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்மை.

**12. மணிவகைகள் அல்லது தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**

கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை.

**13. தாவரங்களின் இளம் பருவத்திற்கான (இளமைப் பெயர்களுக்கான சொற்களை எழுதுக)**

நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, பைங்கூழ், மடலி அல்லது வடலி

**14. தமிழ்நாட்டில் விளையும் சிறு கூலங்கள் யாவை?**

வரகு, காடைக் கண்ணி, குதிரை வாலி

**15. சம்பா நெல் வகைகளை எழுதுக.**

- ஆவிரம் பூச்சம்பா,
- குண்டுச் சம்பா,
- சிறுமணிச்சம்பா,
- ஆனைக் கொம்பன் சம்பா,
- குதிரை வாலிச் சம்பா,
- சீரகச் சம்பா

முதலிய 60 வகைகள் சம்பாவில் உள்ளன.

**16. கோதுமையின் வகைகளில் சிலவற்றைக் கூறுக.**

- சம்பாக் கோதுமை
- குண்டுக் கோதுமை
- வாற் கோதுமை.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. புலவர் . இரா. இளங்குமரனார் குறித்து எழுதுக.**

| | |
|---|---|
| **பெயர்** | : புலவர் இரா. இளங்குமரனார். |
| **தமிழ் மீது பற்று** | : விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர். |
| **கற்றுக் கொண்டது** | : தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்வர். |
| **சிறப்பு** | : திருச்சிக்கு அருகே அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" ஒன்றை அமைத்தவர். **"பாவாணர் நூலகம்"** ஒன்றை உருவாக்கியவர். |
| **எழுதிய சிறந்த நூல்கள்** | : இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி, உரை யாப்பருங்கலம், புறத்திரட்டு உரை, திருக்குறள் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலியன. |

**2. தாவரங்களின் இலைகள் அதனை என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதை எழுதுக ?**

- புளி ,வேம்பு - இலை
- தென்னை, பனை - ஓலை
- நெல், புல் - தாள்
- காய்ந்த இலை - சருகு

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



- சோளம், கரும்பு - தோகை

**3. தாவரங்களின் குலைகள் அதனை என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதைக் கூறுக.**

- கொத்து - அவரை, துவரை கதிர் - கேழ்வரகு, சோளக்கதிர்
- குலை - கொடிமுந்திரி அலகு (அ) குரல் - நெல், தினை
- தாறு - வாழைக்குலை சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி

**4. தாவரங்களின் இளமைப் பெயர்கள் அதற்குரிய தாவரங்களின் பெயர்கள் அட்டவணைப்படுத்துக .**

| தாவரங்களின் இளமைப் பெயர்கள் | தாவரங்களின் பெயர்கள் |
|---|---|
| நாற்று | நெல், கத்தரியின் இளநிலை |
| கன்று | மா, புளி, வாழையின் இளநிலை |
| குருத்து | தென்னையின் இளநிலை |
| குட்டி, பிள்ளை | விளாவின் இளநிலை |
| மடலி (அ) வடலி | பனையின் இளநிலை |
| பைங்கூழ் | நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர் |

**5. எந்தெந்த தாவரங்களின் அடிப்பகுதி என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகிறது என்பதை எழுதுக.**

- தாள் - நெல், கேழ்வரகு முதலியற்றின் அடி.
- தண்டு - கீரை, வாழையின் அடி.
- கோல் - நெட்டி, மிளகாய்ச் செடியின் அடி.
- தூறு - குத்துச் செடி, புதர் முதலியவற்றின் அடி.
- தட்டு (அ) தட்டை - கம்பு, சோளம் முதலியவற்றின் அடி.
- கழி - கரும்பின் அடி.
- கழை - மூங்கிலின் அடி.
- அடி - புளி, வேம்புவின் அடி.

**6. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க அவற்றின் தன்மைக்கேற்ப தாவரங்களுக்கு வழங்கப்படும் சொற்களை எழுதுக.**

- தொலி - மிக மெல்லியது.
- தோல் - திண்ணமானது.
- தோடு - வன்மையானது.
- ஓடு - மிக வன்மையானது.
- குடுக்கை - சுரையின் ஓடு.
- மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி.
- உமி - நெல், கம்பு ஆகியவற்றின் மூடி.
- கொம்மை - வரகு, கேழ்வரகு உமி.

## கற்பவை கற்றபின்

**1. பின் வரும் நில வகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க**

(தரிசு, சீவல் கரிசல், முரம்பு, புறம் போக்கு, சுவல் ,அவல்)

தரிசு - பயிர் செய்ய இயலாத நிலம்.

சிவல் - செந்நிலம் (அ) செம்மண் நிறைந்த நிலம்.

கரிசல் - கரிய நிறமுடைய மண். அதிகமாக நீரை உறிஞ்சும் தன்மை கொண்டது.

முரம்பு - வறண்ட நிலம் பருக்கைக் கற்கள் கொண்ட மேட்டு நிலம்.

புறம் போக்கு - சாகுபடிக்குத் தகுதியற்ற நிலம், ஊர்ப்புறத்தே குடிகள் வாழ்தல் இல்லாத நிலம்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



சுவல் - மேட்டு நிலம் (மலைப்பகுதிகள் நீண்ட காலமாக அரிக்கப்பட்ட நிலம்).

அவல் - பள்ளம். பள்ளமான நிலப்பகுதி விளைச்சலுக்கு ஏற்ற நிலம்.

**2. ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

படகு - ஓடம், அம்பி, கட்டு மரம், கப்பல், கலம், நாவாய், பரிசல், புணை, தோணி, திமில்.

ஞாயிறு - சூரியன், ஆதவன், கதிரவன், பகலவன், ஆதித்தன், வெய்யோன், பரிதி

மொழி க


கவிதைப் பேழை

## இரட்டுற மொழிதல்

*– சந்தக்கவிமணி தமிழழகனார்*

4NS2C4



➢ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட அமைந்து வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனை சிலேடை அணி என்றும் அழைப்பர்.

ஆழிக்கு இணை

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்தே தேதமிழ் ஈண்டு - தனிப்பாடல் திரட்டு

### பாடலின் பொருள்

**தமிழ் :** தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல், இடை, கடை, ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**கடல் :** கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது; மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **இயற்பெயர்** | : சண்முக சுந்தரம் |
| **சிறப்புப் பெயர்** | : சந்தக் கவிமணி தமிழழகனார் |
| **காலம்** | : 1929 -2015 |
| **ஊர்** | : தூத்துக்குடி |
| **பெற்றோர்** | : வேலு - வள்ளியம்மை |
| **எழுதிய நூல்கள்** | : இராம கவிதை, ஒளியைத் தேடி, பூ மத்தாப்பு, மழலை அமுதம், தமிழ்மகன் கவிதைகள். |

## நூல் குறிப்பு

புலவர் பலர் எழுதிய பாடல்களின் தொகுப்பாக தனிப்பாடல் திரட்டு என்னும் நூலிலிருந்து இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

## இலக்கணக் குறிப்பு

**மெத்த** - பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. கிடந்த = கிட + த்(ந்) + த் + அ

| | |
|---|---|
| கிட | - பகுதி |
| த் | - சந்தி |
| த் -ந் | - ஆனது விகாரம் |
| த் | - இறந்தகால இடைநிலை |
| அ | - பெயரெச்ச விகுதி |

2. காக்க = கா + க் + க் + அ

| | |
|---|---|
| கா | - பகுதி |
| க் | - சந்தி |
| க் | - இடைநிலை |
| அ | - பெயரெச்ச விகுதி |

## பொருள் அறிதல்

| | | | |
|---|---|---|---|
| **துய்ப்பது** | - கற்பது, தருதல் | **ஆழி** | - கடல் |
| **மேவலால்** | - பொருந்துதல், பொறுதல் | **இணை** | - ஈடு |

## விரித்து எழுதுதல்

| | |
|---|---|
| **முத்தமிழ்** | - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| **முச்சங்கம்** | - முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் |
| **ஐம்பெருங்காப்பியம்** | - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி |

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



முச்சங்கு - வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1.மெத்த வணிகலன் - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.**

(அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்

(ஆ) பெரும் வணிகமும் பெருங் கலன்களும்

(இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்

(ஈ) வணிக கப்பல்களும் அணிகலன்களும் **[விடை : வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்]**

## குறுவினா

**1. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக**

வெளியூர் சென்று வந்த பாவாணரிடம் அவரது நண்பர் பகலுணவும் இரா உணவும் எப்படி இருந்தது என்று கேட்டார். அதற்கு பாவாணர் பகலுணவு "பகல் உணவாகவும் இராவுணவு "இரா" உணவாகவும் இருந்தன என்றார்.

பகல் உணவு - பகலில் கிடைத்த உணவு என்றும் இரா உணவு - அனைவரும் உணவின்றி இரவைக் கழித்ததாகவும் நயம்படக் கூறினார்.

## சிறுவினா

**1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக .**

- **தமிழ் :** இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. முதல், இடை, கடை ஆகிய முச்சங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
  சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது
- **கடல் :** முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
- மிகுதியான வணிகக்கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

**இலக்கணக் குறிப்பு தருக :**

| | |
|---|---|
| **முத்தமிழ், முச்சங்கம்** | - பண்புத்தொகை |
| **துய்ப்பதால், கண்டதால் ,மேவலால்** | - தொழிற்பெயர் |
| **காக்க** | - வியங்கோள் வினைமுற்று |

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. முத்தமிழ் யாவை ?**

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

**2. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

**3. கடல் எவை எவற்றைத் தருகிறது?**

- முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளையும் தருகிறது.

**4. சிலேடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சிலேடை இரண்டு வகைப்படும்.

- செம்மொழிச் சிலேடை.
- பிரிமொழிச் சிலேடை.

**5. இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன? அதன் வேறுபெயர் என்ன?**

- ஒரு சொல்லோ சொற்றொடரோ இரு பொருள்பட செய்யுளில் அமைந்து வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும்.
- வேறு பெயர் ‘சிலேடை’ ஆகும்.

**6. தமிழைக் காத்தவர்கள் யாவர்?**

சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களே, தமிழைக் காத்தவர்கள் ஆவர்.

**7. தமிழ் எவ்வாறு வளர்க்கப்பட்டது?**

தமிழ் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கங்கள் அதைத்து வளர்க்கப்பட்டது.

**8. தமிழ் எவற்றோடெல்லாம் இணைத்துப் பேசப்படுகிறது?**

விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும், கதிரவனோடும் கடலோடும் தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது.

**9. தமிழ்மொழி குறித்து தமிழழகனார் கூறிய செய்தி யாது?**

- தமிழ் இயல், இசை, நாடகம் முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

---

## கற்பவை கற்றபின்

1. அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் . அவரை மாலையிட்டு வரவேற்றனர் . அப்போது கி.வா.ஜ. “அடடே !காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே” என்றார் . எல்லோருக்கும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.

ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசை நிகழ்ச்சியை விமரிசனம் செய்யும் போது அவர் குறிப்பிட்டது: “அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்”.

இ) தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்த போது ”இவர் பல்துறை வித்தகர் ” என்று குறிப்பிட்டார்!

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



இவை போன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள் . அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.

**2. மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

- "வீறுடைய செம்மொழி தமிழ் மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர் மொழி" -பெருஞ்சித்திரனார்.
- "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" -பாரதியார்

---

விரிவானம்

மொழி

க

# உரைநடையின் அணிநலன்கள்

*– எழில்முதல்வன்*

5ITRER




**1. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்கு தமிழ் மொழியைப் பேச மட்டுமேதெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்பு பற்றி உரையாடுதல்.

**பங்குபெறுவோர் : குமரன், உறவினர் மகள் யாழினி**

**யாழினி** : வணக்கம் ஐயா!

**குமரன்** : வணக்கம்; தாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தது மிக்க மகிழ்ச்சி.

**யாழினி** : உரையாடுதல் என்பது என்ன ?

**குமரன்** : நீயும் நானும் பேசினால் உரையாடல். அதையே எழுதினால் உரைநடை.

**யாழினி** : உரைநடை வளர்ச்சி பற்றிக் கூறுங்கள் ஐயா!

**குமரன்** : அற இலக்கியங்களாக காப்பியங்களாக சிற்றிலக்கியங்களாக, புதுக்கவிதைகளை உரை நடையில் வருகிறது.

**யாழினி** : தமிழ் மொழியின் உரைநடைச் சிறப்புப் பற்றி கூறுக .

**குமரன்** : 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழில் உரைநடை நூல்கள் தோன்றியன. தொல்காப்பியர் காலம் தொட்டே உரைநடை பற்றிய குறிப்பு இருப்பதை அறிய முடிகிறது.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



யாழினி : தமிழ் உரைநடையின் வேறு சிறப்புகளைக் கூறுங்கள் ஐயா!

குமரன் : உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழி உரைநடையில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி வெற்றி பெறுகின்றன.

யாழினி : உணர்ச்சியான உச்ச நிலை எது ?

குமரன் : சொல்லையோ, கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறை உணர்ச்சியின் உச்ச நிலை.

யாழினி : சங்க இல்கியங்கள் யாவை ?

குமரன் : எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும்.

யாழினி : ஆங்கிலத்தில் நான் பல நாவல்களைப் படித்துள்ளேன். தமிழிலும் இது போன்று உள்ளனவா?

குமரன் : ஆம்! தமிழில் அதை தொடர் கதை என்பார்கள். தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கம்பராமாயணம் முதலியனவாகும்.

யாழினி : ஆங்கில மொழியைப் போல் தமிழ்மொழியும் சிறப்பு பெற்றுள்ளதுதானே!

குமரன் : ஆமாம் ! தமிழ் மூத்த மொழி, எல்லா மொழிகளுக்கும் தாயாக விளங்குகிறது. பிறமொழிக் கலப்பின்றி தனித்து இயங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

யாழினி : மிக்க நன்றி , ஐயா ! தங்களிடம் மொழியின் சிறப்பு ,உரைநடையின சிறப்பு ஆகியன பற்றி நன்கு அறிந்து கொண்டேன்.

குமரன் : வணக்கம்.

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கள் இடம் பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

| இலக்கியத் தொடர் | இடம் பெற்றுள்ள நயம் |
|---|---|
| 1. உள்ளங்கை நெல்லிக்கனி போல | உவமை |
| 2. பசுமரத்தானி போல | உவமை |
| 3. கரகமலம் | உருவகம் |
| 4. விழிகயல் | உருவகம் |
| 5. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் | மோனை |

**2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்**

**தலைப்பு - நேரம் தவிர்க்க வேண்டிய சொல் - கடிகாரம்**

**குறிப்பு - ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச் சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது.**

**இது போன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.**

"காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது"

காலம் நமக்காகக் காத்திருக்காது. நாம் கழித்த காலம் மீண்டும் திரும்புவதில்லை . உரிய நேரத்தில் உரிய செயலினை முடித்தால் அனைவராலும் போற்றப்படுவர்.காலம் தவறாமல் பல்வேறு தலைவர்கள் வாழ்ந்ததால் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர்.

காலத்தை வீண் செய்யாதீர்!
காலம் தவறாமல் செயலைச் செய்வீர்
காலம் நம்மை நலமாய் வாழவைக்கும்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



3. கொடுத்த தலைப்பில் பேசுவோம் .

ஆசிரியர், வகுப்பிற்கு வந்த புதிய மாணவனை நோக்கி உன் பெயர் என்ன? என்று வினவினார் உடனே அந்த மாணவன் "கவியரசன்" என்று கூறினான். அப்படியானால் உனக்கு இருக்க வேண்டிய நீண்ட வாலையும் கூர்மையான நகங்களையும் காணவில்லையே என்றார் ஆசிரியர். உடனே மாணவர்கள் அனைவரும் காரணம் புரியமால் சிரித்தனார். (கவி - குரங்கு என்ற பொருளும் உண்டு).

மொழி

க

கற்கண்டு

# எழுத்து, சொல்

5Y3QEF

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையலணையும் பெயரும் முறையே.**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர் **[விடை : பாடல்; கேட்டவர்]**

## குறுவினா

**1. "வேங்கை" என்பதை தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக**

- வேங்கை ___ வேங்கை என்பது மரத்தை குறிக்கும் .
  இது தனிமொழி ஆகும்.
- **வேம் + கை ___ "வேகுகின்ற கை" எனப் பொருள் படும்.**
  இது தொடர் மொழியாகும்.

**2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர் மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்"**

இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி , அதன் இலக்கணம் தருக.

இக்குறளில் இன்னிசை அளபெடை வந்துள்ளது.

செய்யுளின் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

## பாடநூல் வினாக்கள் - சிறுவினா

**1. அறிந்தது , அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் நாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எனக்குத் தெரியம். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக**

- அறிதல், அறியாமை.
- தெரிதல், தெரியாமை.
- புரிதல், புரியாமை.
- பிறத்தல், பிறவாமை

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## பொருத்துக

அ) 1. உரனனசஇ - அ) இன்னிசை அளபெடை
2. ஓஓதல் வேண்டும் - ஆ) ஒற்றள பெடை
3. கெடுப்பதூ உம் - இ) இசை நிறை அளபெடை
4. எக்க்கிலங்கிய - ஈ) சொல்லிசை அளபெடை **[விடை : 1 - ஈ, 2 - இ, 3 -அ, 4 - ஆ]**

ஆ) 1. அந்தமான் - அ) தொடர் மொழி
2. கண் - ஆ) தொழிற் பெயர்
3. மணி படித்தான் - இ) தனிமொழி
4. படித்தல் - ஈ) பொதுமொழி **[விடை : 1- ஈ, 2- இ, 3- அ, 4- ஆ]**

இ) 1. சுடு - அ) தொழிற்பெயர்
2. நின்றவர் - ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
3. ஓடுதல் - இ) முதனிலைத் தொழிற்பெயர்
4. சூடு - ஈ) வினையாலணையும் பெயர் **[விடை : 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1.இலக்கணம் என்பது யாது?**

மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணமாகும்.

**2. சார்பெழுத்துகள் யாவை?**

உயிர் மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை குற்றியலிகரம், குற்றியலுகரம் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என பத்து வகைப்படும்.

**3.உயிரளபெடை என்றால் என்ன?**

உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகள் ஏழும் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதற்கு உயிரளபெடை என்று பெயர்.

**4.உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மூன்று வகைப்படும்

1. செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. சொல்லிசை அளபெடை

**5. செய்யுளிசை அளபெடை என்பது யாது?**

செய்யுளில் ஓசை குறையும் போது ,அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்று கூறுவர். இதனை இசை நிறை அளபெடை என்றும் கூறுவர்.

**(எ.கா) : ஓஓதல்**

**6. இன்னிசை அளபெடை - விளக்குக.**

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**(எ.கா) எடுப்பதூஉம்**

**7. சொல்லிசை அளபெடை என்பது யாது?**

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் வினைச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**(எ.கா) உரனசைஇ.**

**8. ஒற்றளபெடை - விளக்குக**

செய்யுளில் ஓசை குறையும் போது ,அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளான ங் ,ஞ், ண், ந், ம், ன், வ்,ய், ல், ள், ஆய்தம் (ஃ) என 11 எழுத்துகளும் அளபெடுப்பது ஒற்றளபெடை எனப்படும்

**(எ.கா) இலங்ங்கு கதிர்**

**9. சொல்லின் வேறு பெயர்கள் யாவை?**

பதம் ,மொழி, கிளவி

**10. சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருவது சொல் எனப்படும்.

**11. மொழி என்பது எத்தனை வகைப்படும் , அவை யாவை?**

மொழி மூன்று வகைப்படும். அவை தனிமொழி , தொடர் மொழி , பொது மொழி என்பன.

**12. தனி மொழி என்பது யாது?**

ஒரு சொல் தனித்து நின்று தன் பொருளைத் தருவது தனிமொழி எனப்படும்.

(எ.கா கண்)

**13. தொடர்மொழி என்பது யாது?**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருளைத் தருவது தொடர்மொழி எனப்படும்.

(எ.கா) இராமன் படித்தான்.

**14. பொது மொழி என்பது யாது?**

ஒரு சொல் தனித்து நின்று தன் பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.

(எ.கா ) பலகை , அந்தமான்

**15. மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மொழி மூன்று வகைப்படும்

அவை : தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி

**16. விகுதி பெற்ற தொழிற்பெயர் என்றால் என்ன ?**

வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர், விகுதி பெற்ற தொழிற் பெயர் ஆகும் (எ.கா) நடத்தல். நட - வினையடி, தல் - விகுதி.

**17. தொழிற் பெயர் என்றால் என்ன ?**

ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயர், எண், இடம், காலம், பால் முதலியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும். (எ.கா) வாழ்க்கை , ஈதல்

**18. எதிர் மறைத் தொழிற்பெயர் என்பது யாது?**

எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும். (எ.கா கொல்லாமை.)

**19. தொழிற்பெயரின் இரு வகைகள் யாவை?**

முதனிலை தொழிற்பெயர்

முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**20. முதனிலை தொழிற்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.**

விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலை தொழிற்பெயராகும்.

**21. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.**

விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது முதனிலைத் திரிந்த தொழிற்பெயராகும்.

**சான்று :** கெடு, சுடு

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**22. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

அளபெடை இரண்டு வகைப்படும்.

அவை : 1. உயிரளபெடை 2. ஒற்றளபெடை.

**23. உயிர் அளபெடை எத்தனை வகைப்படும்?**

செய்யுளில் அளபெடை மூன்று வகைப்படும்.

அவை :1. செய்யுளிசை அளபெடை - ஓஒதல்.

2. சொல்லிசை அளபெடை - நசைஇ.

3. இன்னிசை அளபெடை - எடுப்பதூஉம்.

**24. வினையாலணையும் பெயர் - விளக்குக.**

- வினையைக் குறிக்காமல் வினைசெய்தவனைக் குறிக்கும்
- தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.
- மூன்று காலங்களிலும் வரும்.
- ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடியும்.

**சான்று :** வந்தவர்.

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. சொல்லின் செயல்களை (பொது இலக்கணத்தை) எழுதுக**

- இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.
- மூவகை இடங்களிலும் வரும்.
- உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
- வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வரும்.

**2. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக**

| | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1 | வினை பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். (தொழிலைக் குறிக்கும்) | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| 2 | காலம் காட்டாது | காலம் காட்டும் |
| 3. | படர்க்கைக்கே உரியது (எ.கா) படித்தல்,பாடுதல் | மூவிடத்திற்கும் உரியது(எ.கா) படித்தவர், பாடியவள் |

**3. தொழிற்பெயரை வகைகளுடன் விவரி.**

- **தொழிற்பெயர் :** ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவே வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.
  **சான்று :** கெடுதல், சுடுதல்
- தொழிற்பெயர் இரண்டு வகைப்படும்.
- **முதனிலைத் தொழிற்பெயர் :** விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராக வருவது முதனிலைத் தொழிற்பெயராகும்.
  **சான்று :** கெடு, சுடு.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



- **முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் :** விகுதி பெறாமல் முதனிலைத் திரிந்து வருவது முதனிலைத் தொழிற்பெயராகும்.
  **சான்று :** கேடு, சூடு.

**4. மொழியின் வகைகளை சான்றுடன் விளக்குக.**

**மொழியின் வகைகள் :**

- மொழி மூன்று வகைப்படும்.
- தனி மொழி, தொடர்மொழி, பொதுமொழி.

**தனி மொழி :**

- ஒரு சொல் தனித்து நின்று தன் பொருளைத் தருவது தனிமொழி எனப்படும்.
- **சான்று :** கண், மரம்.

**தொடர் மொழி :**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி எனப்படும்.
- **சான்று :** மணி படித்தான்.

**பொதுமொழி :**

- ஒரு சொல் தனித்து நின்று தன் பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும். இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமையும்.
- **சான்று :** வைகை
- வை + கை - கையை வை என்றும்
  'வைகை' என்ற நதியையும் குறிக்கிறது.

---

## கற்பவை கற்றபின்

**1. தேன், நூல், பை, மலர், வா -இதை தனி மொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர் மொழிகளாக்குக.**

தேன் - தேன் மருத்துவக் குணம் நிறைந்தது    நூல் - நூல் பல கல்

பை - பையை எடுத்து வா    மலர் - மலர் பறிக்கச் சென்றான்

வா - வேகமாக வா

**2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. (காண், சிரி ,படி, தடு)**

சிரி - சிரித்தல, சிரிப்பு, சிரிக்காமை    காண் - காணுதல், காணல், காணாமை

படி - படித்தல், படிப்பு, படிக்காமை    தடு - தடுத்தல், தடுப்பு, தடுக்காமை

**3. தனிமொழி, தொடர் மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

பாலா : எங்கே செல்கிறாய்? (தொடர் மொழி)    கவிதா - பள்ளிக்கு (தனிமொழி)

பாலா - வீட்டிற்கு எப்பொழுது வருவாய்? (தொடர் மொழி)

கவிதா - மாலையில் (தனிமொழி)    பாலா - நன்றாகப் படி (தொடர்மொழி)

**4. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன் சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அதை எய்தும்.**

| **வினைமுற்று** | **தொழிற் பெயர்கள்** |
|---|---|
| அழைக்கும் | - அழைத்தல் |
| ஏறுவேன் | - ஏறுதல் |
| அமர்வேன் | - அமர்தல் |

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



பார்ப்பேன் - பார்த்தல்
எய்தும் - எய்தல்

**5. சுட்டு , சொட்டு , வழிபாடு , கேடு , கோறல் - இத் தொழிற்பெயர்களை வகைப்படுத்துக**

சுட்டு - முதனிலை தொழிற்பெயர்
சொட்டு - முதனிலை தொழிற்பெயர்
வழிபாடு - விகுதி பெற்ற தொழிற்பெயர்
கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
கோறல் - விகுதி பெற்ற தொழிற்பெயர்

## மொழியை ஆள்வோம்

### படித்துச் சுவைக்க

பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.

"மரமது[1] மரத்தில்[2] - ஏறி
மரமதைத்[3] தோளில் வைத்து
மரமது[4] மரத்தைக்[5] கண்டு
மரத்தி[6] னால் மரத்தைக்[7] குத்தி
மரமது[8] வழியே சென்று
வளமனைக் கேகும் போது
மரமது[9] கண்ட மாதர்
மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்"

தனிப்பாடல் திரட்டு - சுந்தரகவிராசர்

| 1 | 2 | 3 | 4, 9 | 5, 7 | 6 | 8 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரசன் (அரசமரம்) | மா-குதிரை (மாமரம்) | வேல் (கருவேலம்) | அரசன் | புலி (வேங்கை) | வேல் | காட்டு வழி | ஆல் (ஆலமரம்) | ஆத்தி (அத்தி மரம்) ஆல் +அத்தி ஆரத்தி |

### மொழி பெயர்ப்பு

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart – Nelson Mandela.
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – Rita Mae Brown.

1. நீங்கள் ஒரு மனிதனிடம் அவன் புரிந்து கொள்ளும்வகையில் ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அதை அவன் புரிந்து கொண்டு தன் அறிவை வளர்த்துக் கொள்ளலாம் . அதுவே தாய் மொழியில் பேசினால் அது அவனுடைய மனதையே சென்றடையும் என்றார் - நெல்சன் மண்டேலா.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



2. மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி . அக்கலாச்சாரமே மக்கள் எங்கிருந்து வந்தார்கள் எங்கு செல்கிறார்கள் என்பதை நமக்குப் புரிய வைக்கும் - ரிட்டா மே பிரவுண்

## சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பத் காறமதை
ஊனிர்லே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"
- கவிமணி தேசிக விநாயகனார்

**திருத்தம் :**

"தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேறும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே"
-கவிமணி தேசிக விநாயகனார்

➢ கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக

(குவியல் ,குலை ,மந்தை ,கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | கற்குவியல் | புல் | புற்கட்டு |
| பழம் | பழக்குலை | ஆடு | ஆட்டுமந்தை |

## வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

**விடை :**

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
2. ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக**

1. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசித்தலை**ப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.
2. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.
3. நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
4. **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.
5. **பசு**ப்போல் **சாந்தமும்** புலிபோல் **தீரமும் யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**விடை :**

1. புவியில் **வாழும்** மானுடர்கள் **சிலர்** பழ**மிருக்கக் காய்** உண்பதை**ப்போல,இன்சொல் இருக்க வன்சொல் பேசி** துன்பப்**படுகின்றனர்.**
2. **வள்ளல் குமணன்** ஏழ்மையால் **வாடிவந்த** அறிஞர்களுக்குத் **தனது தலையைக்** ஈந்து **மங்காப்** பெருமை **பெற்றான்.**
3. **நளனும் அவனது** மனைவியும் **நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை** மேகம் **கண்ட** மயிலை **போலக்** மகிழ்ச்சி **கொண்டனர்.**
4. நந்தவனத்தில் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடி தேனைவுண்டன.
5. "ஆ"**வை ப் போல்** - அமைதியும் வேங்கை**போல்** வீரமும் களிறு **போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.**

---

**கட்டுரை**

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப்பூட்டி அழகூட்டி அகம் மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

**சான்றோர் வளர்த்த தமிழ்**

**குறிப்புச்சட்டம் :**

முன்னுரை - ஜி.யூ போப் - வீரமாமுனிவர் - ஆறுமுக நாவலர் - குணங்குடி மஸ்தான் சாகிபு - உலகத்தமிழ் மாநாடு - நான்காம் தமிழ்ச் சங்கம் - முடிவுரை. ("கல் தோன்றி மண்தோன்றாக் காலாத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி")

**முன்னுரை :**

செந்தமிழ் ஒரு பூந்தோட்டம். அப்பூந்தோட்டத்தில் அன்றலர்ந்த மலர்கள் மணம் பரப்பி வருகின்றன. காலந்தோறும் நந்தமிழ்நாட்டில் தமிழச் சான்றோர் பலர் தோன்றித் தமிழ் மொழிக்குப் புத்துயிரூட்டிப் புதுமணம் பரப்பி வருகின்றனர். இவர்களுக்கு முன்பே தமிழில் அகர முதலியை தோற்றுவித்தும் இசைப்பாடல்கள் பாடியும் தமிழுக்கு உரைவளம் சேர்த்துதொண்டாற்றிய தமிழறிஞர் பலர் உள்ளனர். அவருள் சிலரைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

**ஜி.யூ.போப் :**

ஜி.யூ. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யூக்ளோ போப் கி.பி 1820ஆம் ஆண்டு ஏப்ரல்24 ஆம் நாள், பிரான்சு நாட்டில் எட்வர்டு தீவில் பிறந்தவர். சிறந்த தொண்டுள்ளம் உடையவர். கல்விப்பணியையும் சமயப் பணியையும்

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



ஒருங்கே ஆற்றினார். தமிழ் இலக்கியத்தில் ஆர்வமும், பாட நூலின் முன்னோடியாகவும் விளங்கினார். திருக்குறளை 40 ஆண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1886 ஆம் ஆண்டில் வெளியிட்டார். நமது 80 ஆம் அகவையில் 1900 ஆம் ஆண்டு திருவாசகத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். ஆங்கில மொழியை அன்னை மொழியாகக் கொண்ட போப் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என தனது கல்லறையில் எழுதுமாறு இறுதிமுறியில் எழுதி தன்னைத் தமிழராகவே ஆக்கிக் கொண்டார்.

**வீரமாமுனிவர் :**

இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவர் தமிழகம் வந்து தமிழைக் கற்றார். தமிழ் மொழிப்பற்றினால் "தைரிய நாதர்" என முதலில் சூட்டிக் கொண்ட தனதுபெயரைத் தனித்தமிழாக்கி "வீரமாமுனிவர்" எனச் சூட்டிக் கொண்டார். இவர், தமிழில் முதன் முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார். இவர் எழுதிய தேம்பாவணி, காவலூர் கலம்பகம், கதம்ப மாலையாகவும், தொன்னூல் பொன் நூலாகவும், சதுரகராதி முத்தாரமாகவும் விளங்குகிறது. தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகிறார் வீரமாமுனிவர் என ரா.பி. சேதுப்பிள்ளை புகழாரம் சூட்டினார்.

**ஆறுமுக நாவலர்:**

யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த இவர்தம் மொழித்திறமையும் வாக்கு வன்மையும் பொருள் விளக்கும் தன்மையும் கண்டு திருவாவடுதுறை ஆதினத்தார் மகிழ்ந்தனர். அதனால் ஆதினத்தார் இவருக்கு "நாவலர்" என்னும் பட்டத்தைச் சூட்டிச் சிறப்பித்தனர். இவரை "வசன நடை கைவந்த வள்ளலார்" என பரிதிமாற் கலைஞர் பாராட்டியுள்ளார். சென்னையில் அச்சுக்கூடம் அமைத்து சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தும், பல பாடல்களை எழுதி பதிப்பித்தும் வெளியிட்டு தமிழ் மொழியை வளர்த்தார்.

**குணங்குடி மஸ்தான் சாகிபு :**

"மாதவஞ் சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்" என்று புலவர் பெருமக்களால் புகழப்பட்டவர். இவரின் இயற்பெயர் "சுல்தான் அப்துல் காதிறு" என்பதாகும். தம் இளம் வயதில் முற்றும் துறந்து தனித்திருந்து ஞானம் பெற்றவர். இவர் தாயுமானவரைப்போல் பல்வேறு கண்ணி நூல்களைப் பாடியுள்ளார். இவர்தம் பாடல்கள் உலகின் உண்மைநிலை என்றும் அழியாப் பேரின்ப வாழ்வுக்கு அழைத்துச் செல்வன. இவர் குருநிலை, தவநிலை, துறவுநிலை, தியான நிலை, சமாதிநிலை எனப்பொருள் தரும் வகையில் பாடல்கள் பல இயற்றி தமிழுக்குத் தொண்டாற்றினர்.

**உலகத்தமிழ் மாநாடு :**

உலகிலேயே மொழிக்காக முதன் முதலில் மாநாடு நடத்திய நாடு மலேசியா. அதுவும் தமிழ் மொழிக்காக நடைபெற்றது. இலங்கை, சிங்கப்பூர் ,மலேசியா ஆகிய நாடுகளில் இன்றும் தமிழே ஆட்சிமொழியாகத் திகழ்கிறது. காரணம் அவ்விடங்களில் குடிபெயர்ந்த தமிழர்கள் தமிழ்ப்பற்றும் தமிழை வளர்க்கும் நோக்கமும் உடையவர்களாக இருப்பதால்தான்.

**நான்காம் தமிழ்ச்சங்கம் :**

முதல், இடை, கடைஆகிய முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தனர் புலவர்கள். ஆனால், இவை கடற்கோளால் அழிந்தன. அதன் பின்னர் பரிதி மாற்கலைஞர், உ.வே.சா, இராகவனார் முதலிய பேராசிரியர்களின் முயற்சியால் பாசுகர சேதுபதியின் தலைமையில் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் மேற்பார்வையில் 14.09.1901 இல் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தனர்.

**முடிவுரை :**

தமிழச் சான்றோர்கள் உலகம் யாவையும் தாமுளவாக்கித் தம் கலைகளையும் சிந்தனைகளையும் வேர்விட்டுப் பயிர் வளர்த்த செந்தமிழ் மரபில் தோன்றியவர்கள். தரணியெங்கும் தொண்டாற்றி வருகிறார்கள். "யாதும் ஊரே

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



யாவரும் கேளீர்” எனப் பாடிய தோடல்லாமல் உலகம் உய்யவும் நலம் பெறவும் அடித்தளமிட்டு வருகிறார்கள். குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழினம் உலகமெங்கும் பரவி புகழ் பெறக் காரணம் நம் சான்றோர்களால்தான்.

“தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு”

## நயம் பாராட்டுக.

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!**

**- கா. நமச்சிவாயர்.**

**திரண்ட கருத்து :**

**“வாழைக்கு அழகு குருத்து, பாடலுக்கு அழகு கருத்து”.**

“தேனினும் இனிமையான செம்மை பெற்ற மொழி தமிழ் மொழி”. தென்னாட்டில் சிறந்து விளங்குகின்ற மொழி தமிழ் மொழி. ஒளி வீசி அறிவும், செறிவும், நுட்பமும் கொண்ட மொழி தமிழ் மொழி. உணர்வோடு உணர்வான மொழி. வானைக் காட்டிலும் உயர்ந்து விளங்குகின்ற வன்மையான மொழி. தழைத்து ஓங்குவாய் குளிர்ச்சி தங்கிய தமிழ் மொழி என தமிழ் மொழியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் கு. நமச்சிவாயர்.

**மையகருத்து :**

இப்பாடலில் தமிழ் மொழியின் இனிமையையும் பெருமையினையும் ,புகழையும் ,சிறப்பையும் அழகாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

**தொடைநயம் :**

**“தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்”**

செய்யுளானது எதுகை ,மோனை, இயைபு, முரண் முதலியவற்றால் தொகுக்கப்படுவது தொடை எனப்படும். இப்பாடலில் தொடை நயங்கள் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன.

**மோனை நயம் :**

**“மோனையற்ற பாட்டு சேனையற்ற நாடு”**

செய்யுளில் அடி அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத்தொடை ஆகும்.

(எ.கா) தேனினும் - தென்னாடு வானினும் - வண்டமிழ் - வயங்கு
ஊனினும் - உணர்வினும் தானனி - தனித்தமிழ் - தழைத்தினி

**எதுகை நயம் :**

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத் தொடை ஆகும்.

(எ.கா ) தேனினும்
ஊனினும்
வானினும்

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



**இயைபு நயம் :**

செய்யுளில் கடைசி எழுத்தோ, சீரோ, அசையோ ஒன்றி வரத்தொடுப்பது இயைபுத் தொடை ஆகும். "மொழியே" என்னும் சொல் அடிதோறும் வந்து இயைபாக அமைந்துள்ளது.

**(எ.கா)** மொழியே

**அணி நயம் :**

**"கோவிலுக்கு அழகு மணி; செய்யுளுக்கு அழகு அணி"**

இப்பாடலில் ஆசிரியர் இயல்பான தமிழ் மொழியை சற்று உயர்வுபடுத்தி (தமிழ் மொழியை ) கூறியுள்ளதால், உயர்வு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

**சந்த நயம் :**

**"யானைக்கு அழகு தந்தம்; செய்யுளுக்கு அழகு சந்தம்"**

இப்பாடலைப் பாடுவதற்கு இனிமையாகவும் பொருள் புரிவதற்கு எளிமையாகவும் அழகிய சந்த நயத்துடனும் பாடியுள்ளார்.

**சொல் பொருள் நயம் :**

இச்செய்யுளில் சொல்லும் பொருளும் அழகுபட அமைந்துள்ளன.

**(எ.கா)** செந்தமிழ் - செம்மையான மொழி; ஒண்டமிழ்-ஒளிர்கின்ற மொழி; வண்டமிழ் - வளமிக்கமொழி.

**தலைப்பு :**

தலைப்பில்லாக் கவிதை "தாயில்லாப் பிள்ளைபோல" இச்செய்யுளுக்கு ஏற்ற தலைப்பு தமிழ் மொழியின் சிறப்புகள்.

## மொழியோடு விளையாடு

### சொற்களை இணைத்து புதிய சொற்களை உருவாக்குக.

(தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ)

**புதிய சொற்கள்** தேன்மழை; மழைத்தேன்; மணிவிளக்கு; வான்மழை; விண்மணி; மணிமேகலை; பொன்மணி; பொன் விலங்கு; செய்வான்; பொன்விளக்கு; பூமழை; பூமணி; பூவிலங்கு.

**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்கள் அமைக்க .**

(குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறை நாள்)

- குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
- மனிதர்கள் சுவைக்காத இளநீர் உண்டோ?
- நீ காப்பியச் சுவையை அறிந்துள்ளாயா ?
- இக்காலங்களில் மனிதகுல மேன்மை சிறப்புற உள்ளதா?
- தேரோட்டம் அன்று உள்ளூர் விடுமுறை நாள் "என அறிவிக்கப்படுமா?

ஆர்டர்கள் தொடர்புக்கு : 89256 12359 - 86430 07972



## எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

## அகராதியைக் காண்க.

அடவி - காடு

அவல் - பள்ளம்


சவல் - பிடரி, முதுகு

செறு - வயல் கோபம்

பழனம் - வயல்

புறவு - சிறு காடு

## காட்சியைக் கண்டு கவிதை எழுதுக



மனிதர்களின் மனமாற்றம் என்றும்
மரத்திற்கு மரம் தாவும் குரங்கு போல
மனம் போன போக்கில் கற்கும் பாடம்
மதியைக் கெடுக்கும் பூட்டு - உன்
மதியைத் திறக்கப்படாதே காரணம்
மதியென்னும் அறிவு பூட்டைத் திற
வாழ்க்கையில் வெற்றி பெறுவாய்.
வாழ்வும் மலரும் உடலும் உள்ளமும் செழிக்கும்
வாழ்வில் வளமாய் இருப்பாய் நீ

## நிற்க அதற்குத் தக.

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக்குக் காட்டும் வழி யாது?**

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

நாம் இன் சொல்லையே பேசுவோம்; நம் நண்பர்களையும் தீய சொல்லை நீக்கி இன்சொல்லைப் பேசி வாழ்க என அறிவுரை கூறுவோம்; அதன் வழியை பின்பற்றச் செய்வோம்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Vowel | - உயிரெழுத்து | Monolingual | - ஒரு மொழி |
| Consonant | - மெய்யெழுத்து | Conversation | - உரையாடல் |
| Gomograph | - ஒப்பெழுத்து | Discussion | - கலந்துரையாடல் |

## இயல் 1

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

**I. நிரப்புக.** 3x1=3

1. பெருஞ்சித்திரனாருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் ___________
2. பதராய்ப் போன மிளகாயை ___________ என அழைப்போம்.
3. தமிழ் ___________ ஆல் காக்கப்பட்டது.

**II. பொருத்துக:** 2x1=2

4. தாள் - இளநெல்
5. தோகை - அடிவகை
 - இலை வகை

**III. விடையளி:** 2x2=4

6. உனக்குத் தெரிந்த பாண்டிய மன்னர்களின் பெயர்கள் இரண்டினை எழுதுக.
7. தமிழின் தனிச்சிறப்பு யாது?

**IV. விடையளி:** 2x3 ½=7

8. தாவரங்களின் இளமைப் பெயர்கள் அதற்குரிய தாவரங்களின் பெயர்கள் அட்டவணைப்படுத்துக.
9. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக

**V. 10. காடசியைக் கண்டு கவிதை வரிகளில் எழுதுக.** 1x5=5



**VI. கட்டுரையை ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதுக.** 1x6=6

11. சான்றோர் வளர்த்த தமிழ்.

**VII. கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலின் நயங்களை எழுதுக.** 1x6=6

12. "தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேறும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஒதி யுணர்ந்தின் புறுவோமே"
- கவிமணி .

**VIII. அடி பிறழாமல் எழுதுக.** 4x1=4

13. அன்னை மொழியே!..... எனத் தொடங்கும் பாடல்.

**IX. விடையளி :** 1x6=6

14. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

**X. மொழிப் பயிற்சி :**

**15. பொருள் கூறுக. :** செறு 1x1=1

**16. உறுப்பிலக்கணம் தருக :** முகிழ்த்த 1x2=2

**17. விடைக்கேற்ற வினா அமை :** 1x1=1

பாவாணர் நூலகத்தை உருவாக்கியவர் இரா. இளங்குமரனார் ஆவார்.

**18. சந்திப் பிழை நீக்கி எழுதுக :** 1x1=1

அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாக கருதி கற்பனை செய்து எழுதுவோம்.

**19. எதுகையை எடுத்து எழுதுக :** 1x1=1

"அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

**20. கலைச் சொல் எழுதுக :** Discussion. 1x1=1

## இயல் 1

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

**I. நிரப்புக.** 3x1=3

1. தென்னன் மகள் என்பதன் பொருள் ___________
2. கார்டிலா என்னும் நூல் ___________ வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது.
3. ஓஒதல் என்பது ___________ அளபெடையாகும்.

**II. பொருத்துக:** 3x1=3

4. மாண்புகழ் - சிலப்பதிகாரம்.
5. மன்னும் - மணிமேகலை
6. வடிவு - பத்துப்பாட்டு
- திருக்குறள்

**III. விடையளி:** 2x2=4

7. தாவரங்களின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் யாவை?
8. தமிழ்மொழி குறித்து தமிழழகனார் கூறிய செய்தி யாது?

**IV. விடையளி:** 2x3 ½=7

9. மொழியின் வகைகளை சான்றுடன் விளக்குக.
10. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது"
- இது போல் இளம் பயிர் வகை நான்கின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

**V. பாடலைப் படித்து விடையளி :** 1x5=5

"அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!"

1. இப்பாடலை எழுதியவர் யார்?
2. எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
3. செந்தமிழ் என்பதன் இலக்கணக் குறிப்பு.
4. விளிச் சொற்களை எடுத்து எழுதுக.
5. நறுங்கனியே - பிரித்து எழுதுக.

**VI. விடையளி:** 2x6=12

12. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு எழுதுக.

13. சூழலை ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.
    வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும், ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி எழுதுக.

**VII. மொழிப்பயிற்சிகள்:**

14. **உறுப்பிலக்கணம் தருக:** வாழ்த்துவோம். 1x2=2

15. **பொருள் தருக:** அவல் 1x1=1

16. **விரித்து எழுதுக:** முச்சங்கு 1x2=2

17. **கலைச் சொல் எழுதுக:** Homograph 1x1=1

18. தெலுங்கு, கன்னடம் முதலியவை திராவிட மொழிகளாகும். 1x1=1
    - விடைக்கேற்ற வினா அமைக்க.

19. தமிழ்சொல் வளத்தை பலதுறைகளிலும் காணலாம். 1x1=1
    - சந்திப்பிழையை நீக்கி எழுதுக.

20. தமிழ், ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றன. 1x1=1
    - ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.

21. **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.** 1x2=2
    (தேன், விளக்கு, மழை, பொன்)

22. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.** 1x1=1
    ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீணட வாழ்நாள் பெற்றார்.

23. **மொழி பெயர்க்க:** 1x2=2
    Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going
    - Rita Mae Brown.

இயல் இரண்டு

இயற்கை, சுற்றுச்சூழல்

# உயிரின் ஓசை



**கற்றல் நோக்கங்கள்**

- காற்று மாசுபாடு குறித்துக் கலந்துரையாடி விழிப்புணர்வு பெறுதல்.
- இயற்கை ஆற்றல்களை அனுபவித்துப் போற்றும் உணர்வு பெறுதல்.
- குளிர்கால வாழ்வு செய்யுளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நுட்பத்தினையும் அதன் மொழிப் பயன்பாட்டுத் திறத்தினையும் படித்துச் சுவைத்தல்.
- கதை நிகழ்வுகளைச் சுவையுடன் படிக்கவும் அது போன்ற படைப்புகளை உருவாக்கவும் முனைதல்.
- தொகைநிலைகளின் தன்மைக்கேற்பத் தொடர்களைப் புரிந்து கொண்டு பயன்படுத்துதல்.
- எண்ணங்களை விவரித்தும் வருணித்தும் எழுதுதல்.

உரைநடை உலகம்

இயற்கை

உ

# கேட்கிறதா என் குரல்!

6T5FH3



## பாடநூல் வினாக்கள்

1. செய்தி 1 - ஒவ்வொர் ஆண்டும் ஜீன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமை.
செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்களே!
**[விடை : ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி]**

**2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

**அ) கொண்டல்** - 1. மேற்கு
**ஆ) கோடை** - 2. தெற்கு
**இ) வாடை** - 3. கிழக்கு
**ஈ) தென்றல்** - 4. வடக்கு
**[விடை : 3, 1, 4, 2]**

**3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
**[விடை : மோனை, எதுகை]**

## குறுவினா

1. **"நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வைப்போம்"-இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக் கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.**

- மரங்கள் வளர்ப்போம்; உயிர்கள் வாழ தூய்மையான காற்றைப் பெறுவோம்.
- மண் வளத்தைக் காக்க மரங்களை வளர்ப்போம்

## சிறுவினா

**1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான் ,இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு "நீர்" தன்னைப் பற்றி பேசினால் 'உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

நான்தான் நீர். நான் நிலப்பரப்பில் நான்கில் மூன்று பங்கு ஆவேன். கடலாக, ஆறாக, குளமாக, அருவியாக இருக்கிறேன். மக்களுக்கு உணவாகவும் அமிழ்தமாகவும் இருக்கிறேன். நான் இல்லை என்றால் உலகம் இல்லை. விண்ணிலிருந்து நான் மழையாகப் பிறப்பேன். சிரிக்க வைத்தால் உலகிற்கு வளத்தை அழிப்பேன். மரத்தை அழித்து அழவைத்தால் வெள்ளமாக வந்து உலகை அழிப்பேன்.

**2. சோலைக் (பூங்கா) காற்றும் மின் விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.**

**சோலைக்காற்று** - நண்பா! நான் மக்களுக்கு இதமான காற்றைத் தருகிறேன். உன்னால் முடியுமா?

**மின்விசிறிக் காற்று** - முடியும் நண்பா! நான் மெதுவாகவும் வேகமாகவும் சுழன்று காற்றைத் தருகிறேன்.

**சோலைக்காற்று** - நானும் உன்னைப் போல் வீசுவேன்.

**மின்விசிறிக் காற்று** - நானும் எந்நேரமும் சுழன்று பயன் தருவேன்.

**சோலைக்காற்று** - நீ ஓரிடத்திலிருந்து நிலையாக வீசினால் உன்னை இயக்க ஒருவர் தேவை. மின்சாரம் தடைப்பட்டால் மனிதர்கள் உன்னை இயக்க முடியாது.

**மின்விசிறிக் காற்று** - மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா? என்னால் யாருக்கும் எந்த வித தீங்கும் ஏற்படாது.

**சோலைக்காற்று** - ஆம். நான் மக்களுக்கு குளிர்ந்த காற்றைத் தருகிறேன். நான் ஒன்றும் மனிதர்களுக்குத்தீங்கு செய்ய நினைப்பதில்லை.

**மின்விசிறிக் காற்று** - நான் வீடு கட்டி வாழ்பவர்களுக்கு வீட்டிற்கு அணிகலனாக இருக்கிறேன்.

**சோலைக்காற்று** - ஆமாம். நாம் இருவருமே மக்களின் துன்பத்தைப் போக்கி மகிழ்ச்சியுடன் வாழ வழிவகுக்கிறோம்.

**மின்விசிறிக் காற்று** - ஆம். நாம் இருவரும் என்றும் மக்களுக்கு இதமான காற்றளிப்போம். நன்றி!

## நெடுவினா

மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

"நான் என்றும் நிரந்தரமானவன் அழிவதில்லை " என்ற சொற்றொடருக்குச் சொந்தமானவர் கவியரசு கண்ணதாசன். திரையிசைப் பாடல்களில் குழந்தை, பெண், கவலை, இயற்கை முதலிய பொருள்களில் "இனிமை யாகவும் ,சுவையாகவும் பாடி மக்களின் மனதில் என்றும் அழியாப் புகழினைப் பெற்றுள்ளார்.

**தவழும் காற்று :**

மலர்ந்து மலராத பாதி மலரையும் ,விடிந்தும் விடியாத காலைப் பொழுதில் தவழும் காற்றை கவிஞர் நதியில் ஆடி அசைந்து துள்ளிக்குதித்து வருகிறது என்றும், மரங்களிலும், செடிகளிலும் காற்றானது ஈரமான தலையைச் சீவிக் கொண்டேஅழகுடன் வருகிறது என்றும் தலை சீவிய காற்று இளமையான தென்றலாக இனிமை தருகிறது என்றும் தெற்கிலுள்ள பொதிகை மலையில்தோன்றி வளர்ந்ததாக நம் கண் முன்னே படைத்துள்ளார் கவிஞர் கண்ணதாசன்.

**கவிதை நயம்**

கவிஞர் மோனை, எதுகை, முரண், இயைபு, அணி, சொல் பொருள், சந்த நயங்களை வெளிப்படுத்தியுள்ளார். மலர்ந்தும் மலராத பாதி மலராக விழிகளுக்கு உவமையாகக் கூறப்படுகிறது. ஆகையால் ,இக்கவிதையில் உவமையணி இடம் பெற்றுள்ளது.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. காற்றின் இயக்கம் பற்றி திருமூலர் கூறுவதுயாது ? (அல்லது) மூச்சுப்பயிற்சி குறித்து திருமூலர் கூறிய செய்தி யாது?**

மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று திருமந்திரத்தில் திருமூலர் கூறியுள்ளார்.

**2. காற்றைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?**

வளி, தென்றல் ,புயல் ,சூறாவளி.

**3. காற்று என்னென்ன பெயர்களில் அழைக்கப்படுகிறது?**

*தென்றல் காற்று *வாடைக் காற்று *மேல்காற்று *கீழ்க்காற்று *பூங்காற்று

*புயல்காற்று *ஆடிக்காற்று *சூறாவளிகாற்று *அனல்காற்று

**4. திசையை வைத்து காற்றுக்கு தமிழர்கள் வழங்கிய பெயர்கள் யாவை?**

*கிழக்கு -கொண்டல் *மேற்கு- கோடை *வடக்கு ___ வாடை * தெற்கு ___ தென்றல்

**5. கிழக்கு (அ) கொண்டல் காற்று குறிப்பு வரைக**

- கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் காற்று.
- மழையைத் தருவதால் மழைக் காற்று என்றும் அழைக்கப்படுகிறது.

**6. வாடைக் காற்று ___ குறிப்பு வரைக**

- வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக் காற்று.
- பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறது.

**7. தென்றல் காற்று ___ குறிப்பு வரைக**

- தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் காற்று.
- மரம் , செடி ,கொடி ,ஆறு ,மலை ,பள்ளத்தாக்கு எனப்பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான காற்றைத்தருகிறது.

**8. காற்றின் ஆற்றலைப் புலவர்கள் எவ்வாறு வருணித்துள்ளனர்?**

- "வளி மிகின் வலி இல்லை" என்ற புறநானூற்றில் ஐயூர் முடவானார் சிறப்பித்துள்ளார்.

- கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது " என்று மதுரை இளநாகனார் கூறியுள்ளார்.

**9. காற்று குறித்து சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறிய செய்தி யாது?**

தென்றல் காற்று பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வருகிறது. என இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

**10. இருவகைப் பருவக்காற்றுகள் யாவை?**

- தென்மேற்குப் பருவக்காற்று
- வடகிழக்குப் பருவக்காற்று

**11. காற்று மாசைடைவதினால் ஏற்படும் நோய்கள் யாவை ?**

*கண் எரிச்சல் *தொண்டைக்கட்டு *காய்ச்சல் *தலைவலி *நுலையீரல் புற்று நோய் *இளைப்பு *மூளை வளர்ச்சி குறைவு

**12. ஓசோன் படலத்தின் பயன்களைக் கூறுக**

- கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கிறது.
- புவியைப் போர்வை போலச் சுற்றி கதிரவனின் வெப்பத்தை குறைத்துக் கொடுக்கிறது.

**13. ஓசோன் படலத்தில் உருவான ஓட்டையால் ஏற்படக்கூடிய தீமைகள் யாவை?**

- புற ஊதாக் கதிர்கள் நேரடியாக உயிரினங்களைத் தாக்குவதால் மிகுந்த துன்பத்தை அடைகின்றன.
- கண்களும் தோலும் பாதிப்படைகின்றன.

**14.ஹிப்பாலஸ் பருவக்காற்றின் பயன்களைக் கூறுக ?**

- புதிய கடல்வழி ஏற்படக் காரணமானது.
- கிரேக்கம் - முசிறிக்கு விரைவான கடல் பயணம்.
- யவனக் கடல் வணிகம் பெருகியது.

**15. பருவக்காற்று எவ்வாறு உருவாகிறது?**

கதிரவனின் வெப்பத்தால் அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்றானது அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பி பருவக்காற்றாகிறது.

**16. காற்றாலையின் பயன்களைக் கூறுக ?**

- மின்னாற்றாலை உற்பத்தி செய்தல்.
- நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளம் பாதுகாக்கப்படல்.

**17. "உலகக்காற்று நாள் : என்று கொண்டாடப்படுகிறது ? காற்றின் ஆசை யாது?**

- ஒவ்வொரு ஆண்டும் ஜீன்15ஆம் நாள் உலகக் காற்று நாள் கொண்டாடப்படுகிறது.
- காற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியது காற்றின் ஆசையாகும்.

**18. அமில மழை எப்போது பெய்கிறது?**

காற்றில் கலந்து விடும் கந்தக - டை ஆக்ஸைடு ,நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகியவை மழை பெய்யும் போது நீரில் கரைந்து விடுவதால் அமில மழை பெய்கிறது.

**19. நாற்றிசையின் பெயர்களையும் அவற்றின் வேறுபெயர்களையும் எழுதுக.**

| திசைகள் | வேறுபெயர்கள் |
|---|---|
| கிழக்கு | குணக்கு |
| மேற்கு | குடக்கு |
| வடக்கு | வாடை |
| தெற்கு | தென்றல் |

**20. தென் மேற்குப் பருவக் காற்று குறிப்பு வரைக.**

- ஜுன் முதல் செப்டம்பர் வரை தென் மேற்குப் பருவக்காற்றுக் காலம்.
- இவை மழைப் பொழிவினைத் தருகின்றன.
- இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையினை இப்பருவக்காற்று மூலம் பெறுகிறோம்.

**21. அமில மழையினால் ஏற்படும் தீமைகள் யாவை?**

மணல், நீர், கட்டடங்கள், காடுகள், நீர்வாழ் உயிரினங்கள் மிகுந்த துன்பத்திற்குள்ளாகின்றன.

**22. குளோரோ புளோரோ கார்பன் குறிப்பு வரைக.**

- குளிர்ப்பதனப் பெட்டியிலிருந்து வெளிவரும் நச்சுக்காற்று குளோரோ புளோரோ கார்பன்.
- குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு, ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளை சிதைத்துவிடும்.

**23. மின்சாரம் தயாரிப்பதில் காற்றின் பங்கு யாது?**

- "காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்" என்பது புதுமொழி
- புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமாக மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.
- உலகக் காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடமும் தமிழகம் முதலிடமும் பெற்று திகழ்கிறது.

**24. உயிரினங்களின் முதன்மைத் தேவைகள் என்னென்ன?**

மூச்சுக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் ஆகியவை உயிரினங்களின் முதன்மைத் தேவைகளாகும்.

**25. திருமூலரும் ஔவையாரும் காற்றினை எவ்வாறு சிறப்பித்துள்ளனர்?**

- மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்கிறார் திருமூலர்.
- வாயுதாரணை எனும் குறள் அதிகாரத்தில் ஔவையார், மூச்சுக்காற்றின் போக்கைத் தெரிந்து கொண்டு பயிற்சி செய்தால், வாழ்நாள் பெருகும் என்கிறார்.

**26. காற்றினால் நடந்த கடல் பயணம் குறித்துப் புறநானூறு தரும் சான்றினை எழுதுக.**

- "கரிகால் வளவனே! கடலில் செல்லும் மரக்காலம், காற்று உரிய திசையிலே வீசாததனால் ஓடவில்லை.
- அதனால், காற்று இயங்குமாறு கலத்தைச் செலுத்துதற்குரிய வழிமுறைகளைக் கையாண்டு கலம் செல்லுமாறு செய்த அறிவாற்றல் உடையவர் நின் முன்னோர்" எனப் புறநானூற்றின் 66 ஆவது பாடல், காற்றினால் நடந்த கடல் பயணம் குறித்து உரைக்கிறது.

**27. காற்றின் ஆற்றல் குறித்துப் புறநானூறு கூறுவது என்ன?**

- வளி மிகின் வலி இல்லை" (புறம். 51) என்று ஐ யூர்முடவனார், காற்றின் ஆற்றலைச் சிறப்பித்துள்ளார்.
- மதுரை இளநாகனார் (புறம். 55) "கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது" என்று, காற்றின் வேகத்தைச் சிற்ப்பிக்கிறார்.

**28. காற்று இல்லையெனில் மனிதனின் நிலை என்ன?**

- மனிதன், உணவு இல்லாமல் ஐந்து வாரம் உயிர்வாழ முடியும்.
- நீர் இல்லாமல் ஐந்து நாள் உயிர்வாழ முடியும்.
- ஆனால் காற்று இல்லாமல் ஐந்து நிமிடம் கூட உயிர்வாழ முடியாது.

**29. உயிர் வளியைப் (ஆக்ஸிஜன்) பெருக்க நாம் செய்ய வேண்டியன யாவை?**

- உயிர் வளியைப் பெருக்க, மேம்பட்ட குப்பை வேளாண்மையை மேற்கொள்ள வேண்டும்.
- பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளைப் பயன்படுத்த வேண்டும்.
- கச்சா எண்ணெய், நிலக்கரி முதலிய புதை வடிவ எரிபொருளைத் தவிர்க்க வேண்டும்.

- வீட்டுச் சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்தக்கூடாது.

**30. இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் தென்றலை எவ்வாறு நயம்பட உரைக்கிறார்?**

- தென்றலானது பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வருகிறது.
- அவ்வாறு வரும்போது கூடவே வண்டுகளையும் அழைத்து வருகிறது.

## கூடுதல்வினாக்கள் - சிறுவினா

**1. காற்றின் பயன்கள் யாவை?**

- உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.
- தாவரங்கள் ,ஒளிச்சேர்க்கை மூலம் உணவை உற்பத்தி செய்ய உதவுகிறது.
- விதைகளை பல இடங்களுக்குப் பரப்புகிறது
- உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.
- நவீன தொலைத்தொடர்பின் மையமாக விளங்குகிறது.
- காற்றாலை மூலம் மின்னாற்றலைப் பெறுகிறோம்

**2. காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகளைக் கூறுக**

- சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்தாமை.
- பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளித்தல்.
- புதை வடிவ எரிபொருட்களைத் (கச்சா எண்ணெய் ,நிலக்கரி) தவிர்த்தல்.
- மேம்பட்ட குப்பை மேலாண்மை மேற்கொள்ளுதல்.
- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகள் மிகுதியாகப் பயன்படுத்தல்.

**3. இலக்கியங்களில் காற்று எவ்வாறெல்லாம் குறிப்பிடப்படுகிறது ?**

- பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும் போது கூடவே வண்டுகளையும் தென்றல் அழைத்து வருகிறது என்று சிலம்பில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.
- ”நந்தமிழும் தன்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே” என பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் தாம் எழுதிய பத்ம கிரிநாதர் தென்றல் விடு தூதுவில் கூறியுள்ளார்.
- ”நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே ” எனப் பாடியுள்ளார் கவியரசு கண்ணதாசன் தம் திரையிசைப் பாடலில்.

**4. கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் பற்றிக் குறிப்பு வரைக.**

- கி.பி . முதல் நூற்றாண்டில் வாழ்ந்த மாலுமி.
- பருவக்காற்றின் உதவியால் முசிறி துறைமுகத்திற்குப் புதிய வழிகளைக் கண்டுபிடித்தார்.
- இப்புதிய வழிகளின் உதவியால் யவனக் கப்பல்கள் சேரர்களின் முசிறி துறைமுகத்திற்கு அதிகமாக வந்தன.
- யவனர் இப்பருவக்காற்றிற்கு அதைக் கண்டுபிடித்த ஹிப்பாலஸ் பெயரையும் சூட்டினார்.

**5. நான்கு திசைகளில் இருந்தும் வீசுகின்ற காற்றின் பெயர்களையும் அதன் தன்மைகளையும் எழுதுக.**

- கிழக்கில் இருந்து வீசும் கொண்டல் காற்று குளிர்ச்சியானது. இது மழையைத் தரும். கடல் பகுதிக்கு மேலுள்ள மழை மேகங்களைச் சுமந்து வருவதால், இது மழைக்காற்று எனப்படும்.
- மேற்கிலிருந்து வீசும் கோடைக்காற்று அதிக வலிமையோடு வீசும். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால், இது வெப்பக் காற்று எனப்படும்.

- வடக்கிலிருந்து வீசும் வாடைக்காற்றானது பனிப்பகுதியிலிருந்து வீசுவதால், குளிர்ச்சியான ஊதைக்காற்று என அழைக்கப்படுகிறது.
- தெற்கிலிருந்து வீசும் தென்றல் காற்றானது மரம், செடி, கொடி ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால், வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறது.

**6. முந்நீர் நாவாய் ஓட்டியாக காற்று எவ்வாறு கூறப்பட்டுள்ளது?**

பழங்காலத்தில் கடல் கடந்து பயணங்கள் அனைத்தும் காற்றால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களி இயல் யானைக் கரிகால் வளவ"

எனக் கரிகால் பெருவளத்தானை சங்க காலப் பெண்பாற்புலவர் வெண்ணிக்குயத்தியார் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**7. பருவக் காற்றின் வகைகளைக் கூறி விளக்குக.**

கதிரவனின் வெப்பத்தால் சூடாக்கி அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்று அங்குள்ள வெற்றிடத்தை நிரப்பி பருவக்காற்றாகிறது.

**பருவக்காற்றின் வகைகள் :**

தென் மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று என இருவகைப்படும்.

**தென் மேற்குப் பருவக்காற்று :**

- ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும்.
- இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தருகிறது.

**வடகிழக்குப் பருவக்காற்று :**

- அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும்.
- இந்தியாவின் முதுகெலும்பான வேளாண்மை சிறக்கிறது.
- நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற உதவுகிறது.

---

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. மனிதனால் காற்று எவ்வாறெல்லாம் மாசடைகிறது?**

- குப்பைகள், நெகிழிப்பைகள், மெது உருளைகள் போன்றவற்றை எரிப்பதால் மாசடைகிறது.
- குளிர்சாதனப்பெட்டி பயன்படுத்துவதால் மாசடைகிறது.
- புகைவடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவதால் காற்று மாசமடைகிறது.
- வானூர்திகள் இதர ஊர்திகள் வெளியிடும் புகை ஆகியவற்றாலும் காற்று மாசமடைகிறது.
- குளிர் சாதனப் பெட்டி வெளியிடும் குளோரோ புளோரோ கார்பன் என்னும் நச்சுக் காற்றால் ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படுகின்றது.
- மிகுதியாகப் பட்டாசுகளை வெடிப்பதால் காற்று மாசடைகிறது.
- ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படுவதால் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்களும் துன்பம் அடைகின்றன.

## பொருத்துக

1. மூச்சு - அ) நீர்
2. தாகம் - ஆ) நிலம்
3. உறைவது - இ) காற்று
4. ஒளி - ஈ) கதிரவன்

**[விடை : 1- (இ) ; 2 - (அ) ; 3 - (ஆ) ; 4 - (ஈ)]**

## விடைக்கேற்ற வினா அமைக்க

**1. காற்று தெற்கிலிருந்து வீசும் போது தென்றல்காற்று எனப்படுகிறது.**

தெற்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் யாது?

**2. காற்று வீசுகின்ற திசையைக் கொண்டு தமிழர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.**

காற்று வீசுகின்ற திசையைக் கொண்டு யார் பெயர்களைச் சூட்டியுள்ளனர்?

**3. உலக் காற்றாலை மின் உற்பத்தில் இந்தியா ஐந்தாம் இடம் பெற்றுள்ளது.**

உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா எத்தனையாவது இடத்தைப் பெற்றுள்ளது?

**4. மேற்கிலிருந்து வீசும்போது காற்று கோடை எனப்படுகிறது.**

மேற்கிலிருந்து வீசும்போது காற்றின் பெயர் யாது?

## சந்திப் பிழையை நீக்கி எழுதுக

**1. வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்ப காற்றாகிறேன்.**

வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக் காற்றாகிறேன்

**2. உலக காற்று நாளாக கொண்டாடப்படும் நாள் ஜீன் 15.**

உலக காற்று நாளாகக் கொண்டாடப்படும் நாள் ஜீன் 15.

## ஒருமை பன்மைப் பிழைகளை நீக்குக

**1. பழங்காலத்தில் கடல்கடந்த பயணங்கள் பாய்மரக் கப்பல்களால் நிகழ்ந்தது .**

பழங்காலத்தில் கடல்கடந்த பயணங்கள் பாய்மரக் கப்பல்களால் **நிகழ்ந்தன.**

**2. ஒவ்வொரு விநாடியும் நான் உங்களால் மாசுபடுகிறோம்**

ஒவ்வொரு விநாடியும் நான் உங்களால் **மாசுபடுகிறேன்.**

## கற்பவை கற்றபின்

**நிலம் பேசுகிறது :**

உழவர்கள் என்னை வெட்டுகிறார்கள், தோண்டுகிறார்கள், சேறாக்குகிறார்கள். நான் எதற்கும் கவலைப்படுவதில்லை. திருவள்ளுவர் என்னை"அகழ்வாரைத் தாங்கும் நிலம்" என்று கூறியுள்ளார்.

மனிதா !உன்னைத்தாங்குவதால் நான் பெருமையடைகிறேன். மலையாக உயர்ந்து நிற்கும் போதுநான் குறிஞ்சி என அழைக்கப்படுகிறேன். நீரினைத் தாங்கும் போது குளிர்ச்சி அடைகிறேன். காடுகள் நிறைந்த என்னை முல்லை என அழைக்கிறார்கள். வயல்கள் நிறைந்த என்னை மருதம் என்று அழைக்கிறார்கள். எண்ணற்ற கனிம வளங்களை மறைத்து வைத்திருக்கிறேன். அனைத்து உயிர்களும் வாழ மகிழ்வுடன் என்னையே தருகிறேன்.

நெகிழிப் பைகளை உபயோகித்து என் வளத்தை பாழ்படுத்தி விடாதீர்கள். தொழிற்சாலை கழிவுகளை பாதுக்காப்பான முறையில் அப்புறப்படுத்துங்கள். குப்பைகளை குப்பைத் தொட்டிகளில் போடுங்கள். தரிசாகப் போட்டு என்னை வெறுமையாக்கி விடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலமாக அமைய மனிதர்களே சிந்தியுங்கள் செயல்படுங்கள் என்றும்.

**2.17ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்கு கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள் பழுப்பு எனநிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.**

**வாணி :** உலகின் அன்பின் சின்னமாகத் நிகழ்வது தாஜ்மகால். உலக அதியங்களுள் கவர்ந்திழுக்கும் அற்புத படைப்பு தாஜ்மகால். இந்தியப் பண்பாட்டின் கட்டிடக் கலைக்கு சான்றாகத் திகழ்வது தாஜ்மகால்.

**ராணி :** இத்தகையை சிறப்புகளை உடைய தாஜ்மகாலின் இயல்புத் தன்மை மங்கி மஞ்சள் பழுப்பு ஆகிய நிறங்களாக மாறிக் காட்சியளிக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

**வாணி :** தாஜ்மகாலைச் சுற்றியுள்ள தோல் தொழிற்சாலை மற்றும் எண்ணெய் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நச்சு வாயு, காற்றில் கலந்து பரவுதால் அவற்றின் நிறத்தன்மை மாறுகிறது.

**ராணி :** இதற்கு தீர்வுதான் என்ன ?


**வாணி :** அருகில் உள்ள தொழிற்சாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றலாம். வருடம் தோறும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளலாம் . எல்.பி.ஜி வாயு உருளைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். உலக அதிசயத்தைக் காப்போம். அதன் அழகை உலகிற்கு என்றும் காட்டுவோம்.

இயற்கை
உ

கவிதைப் பேழை

# காற்றே வா!

– பாரதியார்



**பாடல் :**

காற்றே, வா.
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா;
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து,
மிகுந்த
ப்ராண ___ ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு .

காற்றே , வா .
எமது உயிர் - நெருப்பை நீடித்துநின்று நல்லொளி
தருமாறு
நன்றாக வீசு.

சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகின்றோம்

- பாரதியார்

**விளக்கம்**

- மணம் தரும் மகரந்தத் தூளைத் தாங்கிக் கொண்டு காற்றே வருவாயாக.
- மனதினை மயங்கச் செய்கின்ற இனிமையான நறுமணத்துடன் வருவாயாக
- தாவரங்கள், மரங்களின் இலைகள் மேலும் அலைகளின் ஆர்ப்பரிப்பில் எழுந்து உரசிக் கொண்டும் அதிகமான உயிர்வளியை (ஆக்சிஜனை ) எங்களுக்கு கொண்டு வருவாயாக .
- எமது உயிராகிய நெருப்பினை, நன்மை தரும் ஒளியை வீசுமாறு காற்றே நன்றாக வீசுவாயாக.
- காற்றே ,உனது சக்தி குறைந்து உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே ! பேய்போல அகோரமாக வீசி அதனை மடியச் செய்து விடாதே.
- மெல்ல மெல்ல ஒரே சீராக நீண்ட நெடுங்காலம் வீசிக்கொண்டே இரு.
- காற்றே உனக்குப் பாடல் பாடுகிறோம் புகழ் மாலைகள் சூட்டுகிறோம் . உன்னை வணங்கி வழிபடுகின்றோம்.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : பாரதியார் |
| **இயற்பெயர்** | : சுப்பிரமணியன் |
| **புனைப் பெயர்** | : ஷெல்லி தாசன் |
| **பெற்றோர்** | : திரு. சின்னச்சாமி - திருமதி. இலக்குமி அம்மையார் |
| **காலம்** | : 11.02.1882 - 11.09.1921 |
| **பிறந்த ஊர்** | : எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டம் |
| **சிறப்புப் பெயர்கள்** | : மகாகவி, தேசியக்கவி, சிந்துக்குத்தந்தை, பாட்டுக் கொரு புலவன், விடுதலைக் கவிஞர், நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா. |
| **எழுதிய நூல்கள்** | : கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள் தொகுப்பு முதலியன. |
| **பணி** | : இந்தியா, சுதேச மித்திரன் முதலிய இதழ்களில் ஆசிரியர் பணி. |

## பொருள் அறிதல்

| | | | |
|---|---|---|---|
| மயலுறுத்த | - மயங்கச் செய் | வாசனை | - நறுமணம் |
| ப்ராண - ரஸம் | - உயிர்வளி (ஆக்ஸிஜன்) | சக்தி | - ஆற்றல் |
| அவித்து | - அணைத்து | மடித்து | - அழித்து |
| லயத்துடன் | - சீராக | | |

## இலக்கணக் குறிப்பு தருக

| | | | |
|---|---|---|---|
| **காற்றே வா** | - விளித்தொடர் | **நெடுங்காலம்** | - பண்புத்தொகை |
| **சுமந்து** | - வினையெச்சம் | **பாடுகிறோம், கூறுகிறோம், வழிபடுகின்றோம்** | - தன்மை பன்மை வினைமுற்று |
| **மிகுந்த** | - பெயரெச்சம் | | |
| **எமது உயிர்** | - ஆறாம் வேற்றுமை | | |
| **நல்லொளி** | - பண்புத்தொகை | | |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. உராய்ந்து = உராய் +த்(ந்) +த் +உ**

| | |
|---|---|
| **உராய்** | - பகுதி, |
| **த்** | - சந்தி |
| **த்-ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **உ** | - வினையெச்ச விகுதி |

**2. பாடுகிறோம் = பாடு +கிறு +ஓம்**

**கூறுகிறோம் = கூறு +கிறு +ஓம்**

**வழிபடுகின்றோம் = வழிபடு +கின்று +ஓம்**

| | |
|---|---|
| **பாடு, கூறு, வழிபடு** | - பகுதி |
| **கிறு, கிறு, கின்று** | - நிகழ்கால இடைநிலை |

**ஓம்** - தன்மை பன்மை வினைமுற்று விகுதி

## பொருத்துக

**விடைகள் :**

1. அ) மயலுறுத்து - 1) நறுமணம்
   ஆ) புராண - ரஸம் - 2) மயங்கச்செய்
   இ) லயத்துடன் - 3) உயிர்வழி
   ஈ) வாசனை - 4) சீராக **[விடை : அ- 2, ஆ- 3, இ- 4, ஈ- 1]**
2. அ) பாஞ்சாலி சபதம் - 1) குழந்தைகளுக்கான நீதிப்பாடல்
   ஆ) சுதேசமித்திரன் - 2) பாராட்டுப் பெயர்
   இ) புதிய ஆத்திச்சூடி - 3) இதழ்
   ஈ) சிந்துக்குத் தந்தை - 4) காவியம்
   (அ) 4, 3, 1, 2 ஆ) 3, 2, 4, 1 (இ) 2, 3, 1, 4 (ஈ) 1, 4, 3, 2 **[விடை : 4, 3, 1, 2]**

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. " உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"
   - பாரதியின் இவ்வடிகளால் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
   (அ) உருவகம், எதுகை (ஆ) மோனை, எதுகை
   (இ) முரண், இயைபு (ஈ) உவமை, எதுகை **[விடை : மோனை, எதுகை]**

## குறுவினா

**1. வசன கவிதை ___ குறிப்பு வரைக**

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம்.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. பாரதியின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக?**

- கண்ணன் பாட்டு
- பாப்பா பாட்டு
- குயில்பாட்டு
- பாஞ்சாலி சபதம்

**2. பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டப்பட்டார்?**

- நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா
- பாட்டுக்கொரு புலவன்
- சிந்துக்குத் தந்தை
- மகாகவி

- தேசிய கவி
- கலைமகள்

**3. காற்றே வா பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களைக் கூறுக**

- பாடுகிறோம்.
- கூறுகிறோம்.
- வழிபடுகின்றோம்.

**4. எதனைக் கொண்டு வந்து கொடுக்குமாறு காற்றிடம்பாரதியார் வேண்டுகிறார்?**

- மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு வர வேண்டும்.
- மனதை மயங்கச் செய்யும் விதமாக நறுமணத்துடன் வர வேண்டும் என்று பாரதியார் வேண்டுகிறார்.

**5. காற்று எப்படி வீசிக்கொண்டிருக்க வேண்டுமென்று ஆசிரியர் கூறுகிறார்?**

- தன் சக்தி குறைந்து போய் உயிராகிய நெருப்பை அணைத்து விடக் கூடாது.
- பேய் போல அகோரமாக வீசி உயிராகிய நெருப்பை அழித்து விடக் கூடாது.
- நாம் நீண்ட காலம் மெதுவாக, ஒரே சீராக நீண்ட காலம் நிலையாக நின்று வீச வேண்டுமென்று ஆசிரியர் கூறுகிறார்.

**6. எப்படி வீசுமாறு காற்றைப் பாரதியார் பணிக்கிறார்?**

காற்றை மெதுவாக, நல்ல முறையில் சீராக நீண்டகாலம் நின்று வீசிக் கொண்டிருக்குமாறு பாரதியார் பணிக்கிறார்.

**7. பாரதி எவ்வாறெல்லாம் பாராட்டப் பெறுகிறார்?**

தம் பாடல்களில், சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், பெண்ணடிமைத் தனத்தையும் பாரதி எதிர்த்து எழுதினார்.

**8. பாரதி நாளிதழ்களில் எவற்றைப் புதிதாக உருவாக்கினார்?**

தம் நாளிதழ்களில் கேலிச் சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றைப் பாரதி புதிதாக உருவாக்கினார்.

**9. பாரதி பாடிய முப்பெரும் பாடல்கள் யாவை?**

குயில்பாட்டு, கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் முப்பெரும் பாடல்களைப் பாரதி பாடியுள்ளார்.

**10. பாரதி ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்களைக் கூறுக.**

இந்தியா, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**11. பாரதி ஒரு பன்முகத்திறனாளர் - எவ்வாறு?**

கவிஞர், கட்டுரையாளர், இதழாசிரியர், சிறுகதை ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், சமுதாய முற்போக்கு சிந்தனையாளர் எனப் பல்வேறு திறன்களைப் பெற்றவராதலால், பாரதி ஒரு பன்முகத்திறனாளர் ஆவார்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. மகாகவி பாரதியார் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பாரதியார் |
| **இயற்பெயர்** | : | சுப்பிரமணியன் |
| **புனைப் பெயர்** | : | ஷெல்லி தாசன் |
| **பெற்றோர்** | : | திரு. சின்னச்சாமி - திருமதி. இலக்குமி அம்மையார் |
| **காலம்** | : | 11.02.1882 - 11.09.1921 |
| **பிறந்த ஊர்** | : | எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டம் |
| **சிறப்புப் பெயர்கள்** | : | மகாகவி, தேசியக்கவி, சிந்துக்குத்தந்தை, பாட்டுக் கொரு புலவன், விடுதலைக் கவிஞர், நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா. |
| **எழுதிய நூல்கள்** | : | கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள் தொகுப்பு முதலியன. |

**பணி** : இந்தியா, சுதேச மித்திரன் முதலிய இதழ்களில் ஆசிரியர் பணி.

**2. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம் யாது?**

- உரைநடையும் கவிதையும் இணைத்து யாப்பிலக்கணத்திற்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனக்கவிதை ஆகும்.
- ஆங்கிலத்தில் prose poetry (tree verse )என்றழைக்கப்படும்

இவ்வடிவம் பாரதியாரால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை கையாண்டார்.
- இந்த வசன கவிதையே "புதுக்கவிதை " என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று

**3. 'காற்றே வா' படலில் பாரதியார் கூறும் செய்தி யாது?**

- மகரந்தத்தூளைச் சுமந்து, கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற வாசனையுடன் வா.
- இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து வா.
- உயிர் வளியைக் கொடு. ஆனால், பேய் போல் வீசி உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே.
- நீடித்து நின்று நன்றாக வீசு, உன் சக்தி குறைந்து எம் உயிரை அவித்து விடாதே!
- உம்மை நாம் பாடுகிறோம், புகழ்கிறோம், வழிபடுகிறோம் என்றெல்லாம் பாரதி. 'காற்றே வா' என்ற பாடலில் பாடுகிறார்.

"உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகின்றோம்.

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. "காற்றே வா" கவிதையில் பாரதியார் கூறுவன யாவை?**

- மணம் தரும் மகரந்தத் தூளைத் தாங்கிக் கொண்டு காற்றே வருவாயாக.
- மனதினை மயங்கச் செய்கின்ற இனிமையான நறுமணத்துடன் வருவாயாக
- தாவரங்கள், மரங்களின் இலைகள் மேலும் அலைகளின் ஆர்ப்பரிப்பில் எழுந்து உரசிக் கொண்டும் அதிகமான உயிர்வளியை (ஆக்சிஜனை ) எங்களுக்கு கொண்டு வருவாயாக.
- எமது உயிராகிய நெருப்பினை, நன்மை தரும் ஒளியை வீசுமாறு காற்றே நன்றாக வீசுவாயாக.
- காற்றே, உனது சக்தி குறைந்து உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே ! பேய்போல அகோரமாக வீசி அதனை மடியச் செய்து விடாதே.
- மெல்ல மெல்ல ஒரே சீராக நீண்ட நெடுங்காலம் வீசிக்கொண்டே இரு.
- காற்றே உனக்குப் பாடல் பாடுகிறோம், புகழ் மாலைகள் சூட்டுகிறோம், உன்னை வணங்கி வழிபடுகின்றோம்.

## கற்பவை கற்றபின்

**1. இவ்வசன கவிதையில் இடம் பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனையுடன் வா, அவித்து விடாதே..) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணை நிற்பது குறித்துப் பேசுக.**

**வாசனையுடன் வா**

காற்றே வா மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற இனிய வாசனையுடன் வா நெடுங்காலமாக வீசிக் கொண்டிரு" என்று காற்றை வா வா என அழைக்கிறார்.

**மடித்து விடாதே**

நெருப்பு எரிய சீரான காற்று தேவை. அதிவேகமாக வீசினால் மிகுந்த தீங்கினை உருவாக்கும். மிகவும் குறைவாக வீசினால் எரியவிடாமல் நெருப்பு அணைவதற்கு காரணமாகிறது.

பாரதியார் தமது உயிரை நெருப்புக்கு ஒப்பிட்டுள்ளார். காற்றின் சக்தி குறைந்து உயிரை அவித்து விடக் கூடாது என்றும் பேய் போல வீசி தமது உயிரை மடித்துவிடக் கூடாது எனவும்

உட்பொருள் கொண்டு இச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**2.**

**"திக்குகள் எட்டும் சிதறி - தக்கத்**
**தீமதரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட**
**பக்க மலைகள்உடைந்து வெள்ளம்**
**பாயுது பாயுது பாயுது -தாம்தரிகிட**
**தக்கத் ததிங்கிட தித்தோம் -அண்டம்**
**சாயுது சாயுது சாயுது - பேய்கொண்டு**
**தக்கை யடிக்குது காற்று- தக்கத்**
**தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட - பாரதியார்**

**இது போன்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் கவிதைகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

(அ) குடுகுடுக குடுகுடுக குடுகுடுக குடுகுடுக
நல்ல காலம் வருகுது நல்ல காலம் வருகுது
சாதிகள் சேருது, சண்டைகள் தொலையுது
சொல்லடி, சொல்லடி சக்தி மாகாளி
வேதபுரத்தருக்கு நல்ல குறி சொல்லு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
சொல்லடி சொல்லடி மலையாள பகவதி
அந்தரி! வீரி, சண்டிகை சூலி!
குடுகுடு குடுகுடு

**- பாரதியார்**

(ஆ) மழையே மழையே வா வா- நல்ல
வானப் புனலே வா வா- இவ்
வையத் தமுதே வா வா
தகரப் பந்தல் தணதணஎன்ன
தாழும் கூரை சள சள என்ன
நகரப் பெண்கள் செப்புக்குடங்கள்
நன்றெங் கும்கண கணகண என்ன (மழையே மழையே)

**- பாரதியாசன்**

கவிதைப் பேழை

இயற்கை உ

# முல்லைப்பாட்டு

– நப்பூதனார்

8HYYKQ



பாடல் :

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம் புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போக,
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அலிழ் அலரி தூஉய், கைதொழுது
பெருமுது பெண்டிர், வீரிச்சி நிற்ப
*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், 'கைய
கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்"*

**பாடலின் பொருள்**

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது . வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும் பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம், ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகி பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து,விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில் ,முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர் . யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்; அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது ,தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

அங்கு,சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள். குளிர் தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்து விடுவர், வருந்தாதே" என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முது பெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர் . இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

நின் தலைவன் பகைவரை வென்று திரைப் பொருளோடு வருவது உறுதி ,தலைவியே !மனத்தடுமாற்றம் கொள்ளாதே என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர் .

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| தனந்தலை | - அகன்ற | நறுவீ | - நறுமணமுடைய மலர்கள் |
| நேமி | - வலம்புரிச்சங்கு | பெண்டிர் | - பெண்கள் |
| தடக்கை | - நீண்டகை | தூஅய் | - தூவி |
| கோடு | - மலை | விரிச்சி | - நற்செயல் |
| கொடுஞ்செலவு | - விரைவாகச் செல்லுதல் | தாம்பு | - கயிறு |
| ஆர்ப்ப | - ஆரவாரம் | சுவல் | - தோள் |
| கோவலர் | - இடையர் | ஆய்மகள் | - இடைமகள் |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| **வளைஇ** | - செய்யுளிசையளபடை |
| **பொறித்த, எழுந்த ,தொடுத்த** | - பெயரெச்சம் |
| **தடக்கை** | - உரிச்சொல் தொடர் |
| **கொடுஞ் செலவு, சிறுபுன், மூதூர், நன்மொழி, பெரும் பெயல்** | - பண்புத் தொகை |
| **பருகி ,கொண்டு ,தொழுது** | - வினையெச்சம் |
| **கை தொழுது** | - மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| **உறுதுயர்** | - வினைத்தொகை |
| **கேட்டனம்** | - தன்மை பன்மை வினைமுற்று |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. பொறித்த = பொறி +த் + த் + அ**

| | |
|---|---|
| **பொறி** | - பகுதி; |
| **த்** | - சந்தி |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அ** | - பெயரெச்சு விகுதி |

**பொழிந்த = பொழி +த்(ந்) +த்+ அ**

| | |
|---|---|
| **பொழி** | - பகுதி, |
| **த்** | - சந்தி, |
| **த்-ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

**2. கொண்ட = கொள் (ண்) +ட் +அ**

| | |
|---|---|
| **கொள்** | - பகுதி, |
| **ள்-ண்** | - ஆகத் திரிந்தது விகாரம் |
| **ட்** | - இறந்தகால இடைநிலை; |
| **அ** | - பெயரச்ச விகுதி |

## பொருத்துக

| | | | விடை |
|---|---|---|---|
| 1. | அ) வளைஇ | - தோல் | - வளைந்து |
| | ஆ) தடக்கை | - வளைந்து | - பெரியகை |
| | இ) சுவல் | - மகளிர் | - தோள் |
| | ஈ) பெண்டிர் | - பெரியகை | - மகளிர் |

| | | | விடை |
|---|---|---|---|
| 2. | அ) பெரும் பொழுது | - கொன்றை, காய | - கார்காலம் |
| | ஆ) சிறுபொழுது | - முல்லை, பிடவம் | - மாலை |
| | இ) மரம் | - கார்காலம் | - கொன்றை ,காயா |
| | ஈ) பூ | - மாலை | - முல்லை, பிடவம் |

| | | | விடை |
|---|---|---|---|
| 3. | அ) நேமி | - மலை | - வரம்புரிச் சங்கு |
| | ஆ) கோடு | - வலம்புரிச்சங்கு | - மலை |
| | இ) விரிச்சி | - அகன்ற | - நற்சொல் |
| | ஈ)நனந்தலை | - நற்சொல் | - அகன்ற |

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பாடு இமிழ் பனிக்கடல் பருகி " என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

(அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் (ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

(இ) கடல்நீர் ஒலித்தல் (ஈ)கடல் நீர் கொந்தளித்தல்

**[விடை : கடல்நீர் ஆவியாகி மேகமாதல்]**

## குறுவினா

**1. மாஅல் -பொருளும் இலக்கணக் குறிப்பு தருக.**

மா அல் என்பதன் பொருள் திருமால்

மா அல் என்பதன் இலக்கணக்குறிப்பு செய்யுளிசையளபெடை

**2. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் சீக்கிரமாக வந்து விடுவார்கள். வரும் போது உனக்கு தின்பண்டமும் விளையாட்டுப் பொருள்களையும் வாங்கி வருவார்கள். இப்போது உனக்கு என்ன வேண்டும் வாங்கித் தருகிறேன் வா.

## நெடுவினா

**1. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியைத் தொகுத்து எழுதுக.**

**மழைமேகம் :**

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்த திருமாலின் உருவத்தைப் போன்று அமைந்தது பெரிய மழைமேகம்.

**மழைப்பொழிவு :**

ஒலி முழங்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப்பெருந்தோற்றம் கொண்டு வலமாய் எழுந்து மலையைச் சூழ்ந்து விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

**தெய்வ வழிபாடும் நற்செயல் கேட்டலும் :**

- காவலுடைய ஊர்ப்பக்கம், முதுபெண்கள் சென்றனர்
- நறுமணம் கொண்ட பூக்களைச் சுற்றி, யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் ஆரவாரிக்கும்.
- யாழிசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு

நாழி கொண்ட, நறுவீ முல்லை"

மலர்ந்த முல்லைப்பூவோடு நாழியளவு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவித் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பார்.

**தலைவியே வருந்தாதே**

- சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.
- குளிர் தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள் "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்டு எம் இடையர் ஒட்டி வர இப்போது வந்து விடுவர் ,வருந்தாதே "என்றாள்".
- "இன்னே வருகுவர், தாயர் என்போள்

நன்னர் நன்மொழி கேட்டனம்

முது பெண்கள் தலைவியிடம் "நின் தலைவன் பகைவரை வென்று திரைப் பொருளோடு வருவது உறுதி மனத்தடுமாற்றம் கொள்ளாதே " என்ற நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினார்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. நப்பூதனார் - குறிப்பு வரைக**

- முல்லைப்பாட்டைப் பாடியவர் நப்பூதனார்
- காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகரது மகனாவார்.

**2. விரிச்சி என்றால் என்ன?**

- ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? ஐயம் கொண்டே பெண்கள், தெய்வத்தைத் தொழுது நின்று, அயலார் பேசும் நற்சொல்லைக் கேட்டலாகும்.

**3. நன்னார் நன்மொழி கேட்டனம்-யார் யாரிடம் கூறியது?**

**கூற்று :** முது பெண்கள் தலைவியிடம் கூறினார்

**4. இளங்கன்று வருந்தக் காரணம் யாது?**

சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது.

**5. தலைவியை முது பெண்டிர் எவ்வாறு ஆற்றுப்படுத்தினர்?**

- நின் தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவான்.
- தலைவியே !மனத்தடுமாற்றம் கொள்ளாதே .

**6. முல்லைப்பாட்டில் திருமால் குறித்து கூறப்பட்ட செய்தி யாது?**

- வலம்புரிச்சங்கு பொறித்த கைகளை உடையவன் திருமால்
- குறுகிய வடிவம் எடுத்தவன்.
- மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்கும் பேருருவம் எடுத்தவன்.

**7. பொழுது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

பொழுது இரண்டு வகைப்படும். அவை :

- சிறுபொழுது
- பெரும்பொழுது

**8. நிமிர்ந்த மாஅல் போல - உவமையை விளக்குக**

திருமால் குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர்வார்த்துத் தரும் பொழுது மண்ணுக்கும் விண்ணுக்குமாக பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழை மேகம் என்று ஆசிரியர் கூறுகிறார்.

**9. முல்லை நிலத்துக்குரிய பொழுதுகள் எவை?**

- சிறுபொழுது - மாலை
- பெரும்பொழுது ___ கார்காலம் (ஆவணி ,புரட்டாசி)

**10. முல்லைப்பாட்டில் இடம் பெற்றுள்ள கருப்பொருளைச் கூறுக**

நீர் - காட்டாறு, குறுஞ்சுனைநீர்

மரம் - கொன்றை, காயா, குருத்தம்

பூ - முல்லை, பிடவம், தோன்றிப்பூ

**11. முதிய பெண்கள் (முதுபெண்டிர்) தெய்வத்தை எவ்வாறு தொழுது நின்றனர்?**

- முல்லைப் பூக்களோடு நாழி அளவு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவினர்.
- தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

**12. முல்லை நிலம் பற்றி வருணனை இப்பாடலில் அமைந்துள்ளதைக் குறிப்பிடுக.**

- யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகளின் ஆரவாரம்.
- நறுமணம் கொண்ட அரும்புகள், மலர்ந்த முல்லைப் பூக்கள்.
- நாழியில் கொண்டு வந்த நெல்.
- கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று.

**13. தமிழர்கள் எத்தகைய வாழ்வை மேற்கொண்டிருந்தனர்?**

தமிழர்கள், இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர்.

**14. திருமாலில் திருக்கரங்களில் பொறிக்கப்பட்ட குறிகள் யாவை?**

திருமாலின் திருக்கரத்தில் பொறிக்கப்பட்ட குறிகள் சக்கரம், வலம்புரிச் சங்கு.

**15. மேகம் எவ்வாறு மழையைப் பொழிந்தது?**

ஒலிக்கும் கடல் நீரைப் பருகிய மேகம், திருமாலைப் போல விரைவாக உயர்ந்து எழுந்து, பெருந்தோற்றம் கொண்டு, வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

**16. கார்கால மாலைப் பொழுது எத்தகையது?**

கார்கால மலைப்பொழுது பிரிந்து வாழ்பவர்க்கு மிகுந்த துன்பத்தைச் செய்கின்ற பொழுதாகும்.

**17. முல்லைத் திணைக்குரிய முதல் பொருளாவன யாவை?**

- நிலமும் பொழுதும் முதற் பொருளாகும்.
- காடும் காடு சார்ந்த இடமும் - முல்லைத் திணைக்குரிய நிலம்.
- கார்காலம் - பெரும்பொழுது; மாலை - சிறுபொழுது.

**18. முதுபெண்கள் தலைவியிடம் யாது கூறினர்?**

"உன் தாய்மார் இப்போதே வந்துவிடுவர் என இடைமகள் கூறிய நற்சொல்லைக் கேட்டோம். நீ வருந்தாதே" எனத் தலைவியிடம் முதுபெண்கள் கூறினர்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. முல்லைப்பாட்டு - நூல் குறிப்பு வரைக**

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று
- அடிகளின் எண்ணிக்கை 103
- ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது
- முல்லை நிலத்தைப் பற்றி பாடப்பட்டது.
- பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளைக் கொண்டநூல்.
- இப்பாடலைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த பொன் வணிகனார் மகனார் நப்பூதனார்.
- மறைமலையடிகள் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

**2. விரிச்சி கேட்டல் - விளக்குக**

- ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ என ஐயம் கொண்டே பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய் தெய்வத்தைத் தொழுது நிற்பர்.
- அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்டார்.
- அயலார் நல்ல சொல்லைக் கூறினால் தம் செயல் நன்மையில் முடியும்.
- தீய மொழியைக் கூறின் தம் செயல் தீயதாய் முடியும் என்று எண்ணுவார்.

**3. பெருமழை எவ்வாறு பொழிந்தது ? அல்லது மழை மேகம் -மழைப் பொழிவு குறித்து முல்லைப்பாட்டில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?**

- வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடையவர் திருமால்.
- மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும் போது விண்ணுக்கும் மண்ணுக்குமாய் பேருருவம் எடுத்தவன் திருமால். இப்பேருருவத்தைப் போன்றுள்ளது மழைமேகம்.
- இப்பேருருவம் கொண்டே மேகமானது வலமாய் எழுந்தது.
- மலையைச் சூழ்ந்தது விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது

**4.முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப் பொருள்களை எழுதுக**

**முதற் பொருள் : நிலம் பொழுது**

| | |
|---|---|
| நிலம் | - காடும் காடு சார்ந்த நிலம் |
| பொழுது | - சிறுபொழுது - மாலை |
| பெரும்பொழுது | - கார்காலம் |

கருப்பொருள்கள் - நீர் - காட்டாறு, குறுஞ்சுனைநீர்

மரம் - கொன்றை, காயா, குருத்தம்

பூ - முல்லை, பிடவம், தோன்றிப்பூ

உரிப்பொருள் : இருத்தல் இருத்தல் நிமித்தமும்

**5. முதுபெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி யாது?**

**இளங்கன்றின் பசி :**

- சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது.
- அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.
- புல்லை மேய்ந்த உன் தாயாரை வளைந்த கத்தியுடைய கம்பைக் கொண்ட எம் இடையர் இப்போது ஓட்டி வந்து விடுவர். வருந்தாதே! என்றாள் இடைமகள்.

**நற்சொல்லைக் கேட்டோம் :**

- இடைமகளது நற்சொல்லை நாங்கள் கேட்டோம்.
- தலைவன் திறைப் பொருளோடு வருவது உறுதி.

## கற்பவை கற்றபின்

**1. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழக்கைச் சூழலை உணரமுடிகிறதா ? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க**

முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கைச் சூழலை நன்கு உணரமுடிகிறது. முல்லை நிலம் வளமான காடுகள் நிறைந்த இடமாகும். காடுகளில் ஓடுகின்ற ஆறுகளும் மரங்களில் கூடுகட்டி வாழும் பறவைகளும் இதமான ஒலிகளை எழுப்பகின்றன.

மக்கள் இந்நிலத்தில் வளமான சூழலில்வாழ்ந்தனர்.இயற்கையாகக் கிடைக்கும். தேனும் தினைமாவும் கிழங்களும் ஒருவருக்கொருவர் அன்பு பரிமாறிக் கொண்டு பகிர்ந்துண்டு வாழ்ந்தனர்.

வேட்டையாடுதல் தொழில் செய்து அதில் கிடைக்கும் பொருள்களையும் உண்டு மகிழ்ந்தனர் ஆடும், மாடும் மேய்த்து வாழ்ந்தனர். நீர் வளம் மிகுந்த நிலங்களைத் திருத்தி பயிரிட்டு வேளாண்மைத் தொழிலையும் செய்து வந்தனர்.

**2. குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுதுக**

அனுமதி - வனம்-மனதைத் தொட்டது-கொஞ்சம்-அச்சம்-ஆனால் பிடித்திருந்தது -இரவில் வீட்டின் அமைதியை விட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில்-இலைகளின் சலசலப்பு-பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் -திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம்-அழகான ஆறு-உருண்டை சிறு கூழாங்கற்கள்-இயற்கையின் கண்காட்சி

**வனக்காட்சி**

அடர்ந்த மரங்களைக் கொண்ட காடு .அக்காடு பசுமை மிகுந்த அமைதி நிறைந்த காடு. இங்கு நான் சென்றேன் . அங்குள்ள மலர்களின் நறுமணம் என் மனதைத் தொட்டது. தனியாகச் செல்லும் போது கொஞ்சம் அச்சமாக இருந்தது. ஆனால், எனக்கு மிகவும் பிடித்திருந்தது .இரவில் வீட்டில் இருக்கும் அமைதியை விட வனத்தின் அமைதி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இவற்றை பார்க்கும் போது ஒரு புதுமையாக இருந்தது. என் கால்கள் தரையில் இருப்பது போல் தெரியவில்லை.

இலைகளின் சலசலப்பும் மரங்களில் அமர்ந்திருந்த பறவைகளின் ஒலியும் கேட்பதற்கு இனிமையாக இருந்தன. அமர்ந்திருந்த பறவைகள் தன் சிறகை அடித்துக் கொண்டு அங்கும் இங்குமாக பறந்து கொண்டிருந்த காட்சி அழகாக இருந்தது. அருகில் திரும்பியவுடன் திடிரென ஓர் ஆரவார ஓசை அது என்ன என்று பார்த்தால் அழகான ஆறு ஒன்று

தண்ணீரின் ஓட்டம் சீராக இருந்தது. இவ்வாற்றில் உருண்டையான சிறுசிறு கூழாங்கற்களை அடித்துச் செல்லுகின்ற காட்சி மனதிற்கு இதமான கண்காட்சிகளாக அமைந்தன.

---

இயற்கை உ

விரிவானம்

## புயலிலே ஒரு தோணி

– ப.சிங்காரம்

8X8XKE



கலக்கும் காற்று கலங்கும் கப்பல்

### பாடநூல் வினாக்கள்

**1. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக**

**குறிப்பு :**

இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் சளப்தளப் என்று குதிக்கும் குழந்தைகள் ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

மழை நின்றவுடன் மர இலையிலிருந்து சொட்டும் நீர் தேனடையிலிருந்து விழும் துளியினைப்போல் சொட் சொட் என விழுந்தது. நும் உடலில் ஒடும் (வருடும்) மெல்லிய குளிர் காற்று ,மயிலிறகால் தம் உடலை வருடுவது போல் இருந்தது. தேங்கிய குட்டையில் குழந்தைகள் ”சளப்தளப் என்று மிதிக்கும் காட்சி பல வகையான மீன்களும் தவளைகளும் தாவிக் குதிக்கும் போது ஏற்படும் ஓசையைப் போன்று இருந்தது.அமைதியான நதியானது தன் நீரோட்டத்தில் சிறுசிறு கட்டைகளை இழுத்து வரும் காட்சி போன்று குழந்தைகள் ஒடும் நீரில் காகிதக் கப்பல்களை விடும் காட்சி இருந்தன.

**2. "புயலிலே ஒரு தோணி " கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.**

**முன்னுரை :**

தமிழர்கள் புலம் பெயர்ந்த நிகழ்வைப் பற்றிக் கூறும் முதல் புதினம் புயலிலே ஒரு தோணி. தமிழர்கள் இந்தோனேசியாவில் இருந்தபோது தென்கிழக்காசியப் போர் மூண்டது. இந்நிலையில் மலேசியா, இந்தோனேசியப் பகுதியில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பே இப்புதினமாகும். இப்புதினத்தின் ஒரு பகுதியான "கடற்கூத்து " பகுதியை பின்வருமாறு காணலாம்.

**வருணனை :**

கொளுத்தும் வெயில் இமை நேரத்தில் மறைந்தது . மேகங்கள் பொதிந்து கும்மிருட்டாய் ஆகியது. காற்றைக் காணோம் ஒரே இறுக்கம். இடி முழக்கத்துடன் மின்னல் கீற்று வானைப் பிழந்தது. வானம் உடைந்தன. வெள்ளம் கொட்டியது. சூறாவளி ஆடிக்குதித்து கொக்கலித்தன. வானுடன் கடல் கலந்து விட்டது. மழை தெரியவில்லை. திடுமென அமைதி. வானும் கடலும் பிரிந்து தென்பட்டன. வானும் கடலும் ,வளியும் மழையும் மீண்டும் ஒன்று சேர்ந்து கூக்குரல் இட்டது. வான் பிளந்து தீ கக்கியது.

**அடுக்குத் தொடர்கள்**

- தொங்கன் நடு : நடுங்கித் தாவிக் குதிகுதித்தது.
- தொங்கன் குதித்து விழுந்து நொறுநொறு என்று நொறுங்கியன.
- சுழன்று கிறுகிறுத்து கூத்தாடியது.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்**

- தொங்கன் தாவி விழுந்து, சுழல்கிறது
- சிலு சிலு மரமரப்புப் நொய்ங் புய்வ் ,நொய்ங் புய்வ் என இடி முழங்க சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றது.

**தோணி படும் பாடு**

வான், கடல், வயி, மழை ஆகிய நான்கும் சேர்ந்து கப்பலை நொறு நொறுவென நொறுக்கியன. கப்பல் மூழ்கி நீந்துகிறது. கப்பலில் உள்ள பொருட்களெல்லாம் கடல் நீரில் மிதந்தன.

**முடிவுரை**

கடலில் கப்பலின் போராட்டம் மிக அழகாக, வருணனைகளோடும் அடுக்குத் தொடர்களோடும் ஒலிக் குறிப்புகளோடும் இக்கட்டுரையுள் தெளிவாகவும் ,கற்பனை நயத்துடன் கூறியுள்ளார் ஆசிரியர்.

---

## கற்பவை கற்றபின்

**1. கடலின் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்டுத்த அடுக்குத் தொடர்களும் வருணைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன. என்பது குறித்து வகுப்பில் பேசுக.**

- புயல் ஏற்பட்டு அதன் சீற்றத்தால் சிக்கித் தவித்தார்கள். இருள் நீங்கி சூரிய வெளிச்சத்தைக் கண்டதும் மக்கள் "சூரியன் சூரியன் : என பதற்றம் நீங்கிக் கூறினார். புயலில் சிக்கி ஐந்தாம் நாள் கரையைக் கண்டதும் மக்கள் "கரை கரை" என சத்தமிட்டனர்.
- அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன என்று அலையின் தன்மையை வருணிக்கப்படுகிறது.
- கிடுகிடுக்கும் இடிமுழக்கத்துடன் மின்னல் கீற்றுகள்வானைப்பிளந்தன. வானம் உடைந்து வெள்ளம் கொட்டு கொட்டென்று கொட்டியது.
- மின்னலின் அகோரஒளி வீச்சையும் மழைப்பொழிவின் அளவு மற்றும் வேகத்தைக் குறிப்பதாய் அமைந்தன..தலைக்கு மேல் ,வானுடன் கடல் கலந்து வளியுடன் இணைந்து விட்டது.
- புயலின் கோர தாண்டவத்தை வருணனைகளும்,
- அடுக்குத்தொடர்ளும்அமையஅமைத்துள்ளார் ஆசிரியர்.

**2. நீங்கள் எதிர் கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.(மழை ,வெள்ளம் புயல், வறட்சி)**

**மழை**

- பருவமழை தவறிப்பெய்ததால் அறுவடைக்குத் தயாராய் இருக்கின்ற பயிர்கள் நீரில் நனைந்து நாசம் அடைந்தன.
- மிகுதியான மழைப்பொழிவின் காரணமாக மக்கள் பலர் வெளியே செல்ல முடியாததாலும் மின்சாரம் தடை செய்யபட்டதாலும் பல தொழில்கள் முடங்கிவிட்டன.
- போக்குவரத்து பாதிப்புகளால் மக்கள் பல இன்னல்களும் ஆளாயினர்.

**வறட்சி**

மழைக்காலத்தில் மழை பெய்யாததனால் ,விதைத்த விதை முளைக்காமல் ,பயிர்கள் வாடியும் காணப்பட்டன. ஏரி, குளம் ,கிணறு வற்றத் தொடங்கின. இன்னும் ஒரு மாதத்திற்கு மழை பெய்யாவிட்டால் குடிக்கக் கூட தண்ணீரின்றி அவதிப்பட்டுவிடுவார். மரங்கள் விறகாகவும் பயிர்கள் சருகாகவும் காய்ந்து போயின. எங்கும் வறட்சியே நிலவுகிறது. வெயிலின் கொடுமையினால் அனைத்து உயிர்களும் குடிநீரின்றி தவித்து வருகின்றன.

**புயல்**

சென்னைக்குத் தென் கிழக்கே மையம் கொண்டியிருந்த "கஜாபுயல் : தென்மேற்குத் திசையில் நகர்ந்து கடலூர் பாம்பன் இடையே நாகைக்கு அருகே கரையைச் கடந்தது. அதிதீவிரப்புயலினால் டெல்டா மற்றும் கடலோரப் பகுதி மக்களின் நிலையைக் கண்டேன். அது இன்னும் என் நினைவை விட்டு அடங்கவில்லை. அதில் மீனவர்கள் விவசாயிகளின் வாழ்வாதாரமே அழிந்து விட்டது. இதைப் போன்று பாணி புயல் ஒடிசாப் பகுதியை சீர்குலைத்து சின்னா பின்னமாக வீசி மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தொலைக் காட்சி மூலம் கண்டு மனம் வேதனைப்பட்டேன்.

**வெள்ளம்**

கடந்த 2015 இல் சென்னையிலும் 2018 இல் கேரளாவிலும் ஏற்பட்ட வெள்ளமானது. சென்னையையும், கேரளா மாநிலத்தையும் புரட்டிப் போட்டு விட்டது. ஊரெங்கும் தண்ணீர் தண்ணீர். ஆனால், குடிக்கத்தண்ணீர் கிடைக்கவில்லை. மின்சாரம் இல்லாததால் தகவல் தொடர்பு இல்லாமல் போய்விட்டது.உணவுக்கும் பஞ்சம் வந்து விட்டது. மொட்டை மாடியிலேயே தங்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. கேரளாவில் ஒரு குறிப்பிட்ட பகுதிகளான வயநாடு, இடுக்கி, கோழிக்கோடு முதலிய பகுதியில் மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

கற்கண்டு

# இயற்கை உ தொகைநிலைத் தொடர்கள்

9CRSLQ




9SAMN2

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. "பெரிய மீசை" சிரித்தார்- வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

(அ) பண்புத்தொகை (ஆ)உவமைத் தொகை

(இ) அன்மொழித்தொகை (ஈ) உம்மைத்தொகை **[விடை : அன்மொழித்தொகை]**

## குறுவினா

1. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்கள் விரித்து எழுதுக . தொடரில் அமைக்க

- **தண்ணீர் குடி** - தண்ணீர் + ஐ + குடி = தண்ணீரைக்குடி
  இரண்டாம் வேற்றுமைத் தொகை
  நாம் நாள்தோறும் மூன்று லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்
- **தயிர்க்குடம் -** தயிரையுடைய குடம்
  இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
  - பூமிகா தயிர்க்குடத்திலிருந்து தயிரை எடுத்து தின்றாள்.

## சிறுவினா

**1. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி ,வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.**

**இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளை குறிப்பிட்டு விரித்து எழுதுக.**

**மல்லிகைப்பூ**

- இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
- மல்லிகை என்னும் பூ (மல்லிகை சிறப்புப் பெயர்; பூ - பொதுப் பெயர்)

**பறித்த பூங்கொடி :** பெயரெச்சத் தொடர்

பறித்த - யெரெச்சம்,

பூங்கொடி என்ற பெயருடன் வந்துள்ளது.

**பூங்கொடி :** உவமைத் தொகை

- பூ போன்ற கொடி

**ஆடு மாடு :** உம்மைத்தொகை

- ஆடும், மாடும் - உம் சொல் மறைந்துள்ளது

**தண்ணீர் தொட்டி :**

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

தண்ணீரை உடைய தொட்டி என்று விளக்கம் தரும்.

**குடிநீர்** : வினைத்தொகை

- மூன்று காலங்களும் மறைந்து வந்துள்ளன (குடிக்கும்நீர், குடிக்கின்ற நீர், குடித்த நீர்)

**குடிநீர் நிரப்பினாள் :** இரண்டாம் வேற்றுமைத் தொகை

குடிநீர் நிரப்பினாள்

**மணியைப் பார்த்தாள்** : இரண்டாம் வேற்றுமைத் தொகை

மணியைப் பார்த்தாள்

## பொருத்துக

அ) 1) மதுரை சென்றார் - அ) வினைத்தொகை
2) வீசு தென்றல் - ஆ) பண்புத்தொகை
3) செங்காந்தள் - இ) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
4) மார்கழித்திங்கள் - ஈ) நான்காம் வேற்றுமைத்தொகை

1. ஆ, ஆ, இ, ஈ   2. ஈ, ஆ, இ, அ   3. ஈ, அ, ஆ, இ   4. இ, ஈ, அ, ஆ

**[விடை : ஈ, அ, ஆ, இ]**

ஆ) 1) தேர்பாகன் - (i) பண்புத்தொகை
2) இன்மொழி - (ii)அன்மொழித் தொகை
3) அண்ணன் தம்பி - (iii)உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
4) முறுக்கு மீசை வந்தார் - (iv) உம்மைத்தொகை

**[விடை : 1 - (iii) 2 - (i) 3 - (iv) 4 - (ii)]**

## கூடுதல்வினாக்கள் - குறுவினா

**1. சொற்றொடர் என்றால் என்ன? சான்று தருக**

- சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தரும்
- இது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும்

**சான்று : பாலா பாடம் படித்தான்**

**2. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன? சான்று கூறுக?**

பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோடு, வினா, பண்பு முதலியவற்றின் உருபுகளோடு நோக்கி மறைந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்குமானால் அதனைத் தொகை நிலைத் தொடர் என்று கூறுவர். சான்று கரும்பு நின்றான்.

**3. தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

- தொகை நிலைத்தொடர் ஆறு வகைப்படும்
- அவை வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன் மொழித் தொகை.

**4. வேற்றுமை உருபுகள் யாவை?**

ஐ, ஆல், கு, இன், அது, கண்

**5. வேற்றுமைத் தொகை என்றால் என்ன ? சான்று கூறுக?**

ஒரு தொடரில் வேற்றுமை உருபுகளில் ஏதேனும் ஒன்று மறைந்து வந்து பொருள் தருவது ஆகும்.

**சான்று :** மதுரை சென்றான் - மதுரைக்குச் சென்றான்

**6. வினைத்தொகை சான்றுடன் விளக்குக?**

- காலம் கரந்த பெயரெச்சம் முக்காலமும் காட்டும்
- இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்கும்
- வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நிற்கும்.

**சான்று : வீசு தென்றல்**

**7. பண்புத்தொகை சான்றுடன் விளக்குக.**

- நிறம், அளவு, வடிவம், சுவை ஆகியவற்றை உணர்த்தும்.
- பண்புபெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கு இடையில் "மை" என்னும் பண்பு விகுதி மறைந்து வரும்.
- ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகள் மறைந்து வரும்

  **சான்று :** ___ வட்டத்தொட்டி, செங்காந்தள்.

**8. உம்மைத் தொகை எத்தனை அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும் ? அவை யாவை ?**

நான்கு அளவுப் யெர்களைத் தொடர்ந்து வரும்

- எண்ணல்
- எடுத்தல்
- முகத்தால்
- நீட்டல்

**9. இடைச்சொல் மறைந்து வரும் தொகைச் சொற்கள் எவை?**

- வேற்றுமைத் தொகை
- வினைத்தொகை

- பண்புத்தொகை

**10. உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்றால் என்ன?**

- ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வருவது உடன் தொக்க தொகையாகும்.

  **எ.கா :** தமிழ்த் தொண்டு
- தமிழுக்குச் செய்யும் தொண்டு என விரியும்.

**11. வினைத் தொகை எவ்வாறு அமையும்?**

- வினைப் பகுதியே பகுதியாய் இருக்கும், சுடுசோறு - சுடு
- மூன்று காலங்களுக்கும் பொருந்திவரும், சுட்ட, சுடுகின்ற, சுடும்.
- பெயர்ச்சொல்லால் தழுவப் பெறும், வினைப்பகுதி - சுடுபெயர்ச்சொல் - சோறு

**12. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை எவ்வாறு வரும்?**

- சொற்றொடரில் சிறப்புப் பெயர் முன்னும், பொதுப் பெயர் பின்னும் நின்று இடையில் ‘ஆகிய’ என்னும் பண்பு உருபு தொக்கி வருவது, இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாகும்.

  **எ.கா :** மாமரம், மா - சிறப்புப் பெயர், மரம் - பொதுப்பெயர்

**13. உவமானம், உவமேயம் - விளக்குக.**

- உவமைத் தொகையில் முதலில் நிற்பது உவமானம், அடுத்து நிற்கும் சொல் உவமேயம்.

  **எ.கா.** கயல்விழி
- கயல் - உவமானம், விழி - உவமேயம். போன்ற - என்னும் உவம உருபு தொக்கி (மறைந்து) நின்றது.

## கற்பவை கற்றபின்

### வண்ணமிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக

**1. அன்புச்செல்வன் திறன் பேசியில் தொடுதிரையில் படித்துக் கொண்டிருந்தார்.**

**2. அனைவருக்கும் மோர்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்**

**3. வெண்டைக்காய்ப் பொரியல் மோர்க்குழம்புக்கு பொருத்தமாக இருக்கும்**

**4. தங்க மீன்கள் தண்ணீர் தொட்டியில் விளையாடுகின்றன.**

1. அன்புச்செல்வன் திறன் பேசியில் தொடுதிரையில் படித்துக் கொண்டிருந்தார்.

   அன்புச் செல்வன் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

   தொடுதிரை - வினைத் தொகை
2. அனைவருக்கும் மோர்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்

   மோர்பானை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

   மோர் கொடுக்கவும் -இரண்டாம் வேற்றுமைத் தொகை.
3. வெண்டைக்காய்ப் பொரியல் மோர்க்குழம்புக்கு பொருத்தமாக இருக்கும்

   வெண்டைக்காய் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

   மோர்க்குழம்பு : மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.
4. தங்க மீன்கள் தண்ணீர்த் தொட்டியில் விளையாடுகின்றன.

   தங்க மீன்கள் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

தண்ணீர்த் தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

## மொழியை ஆள்வோம்

### தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful brids start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**இயற்கை (அ) காலைப்பொழுது**

காலையில் கதிரவன் தன் தங்கக் கதிர்களை உதிக்கின்றது. தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது. வெண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது. வண்ண நிறமான பறவைகள் காலையில் தன் இசைக் கீதத்தை இசைக்கின்றன. சுறுசுறுப்பாக வண்ணத்து பூச்சிகளும் மலர்களைச் சுற்றி நடமாடுகின்றன. பூக்களின் நறுமணம் தென்றல் காற்றை நிரப்பும். அந்தக் காற்று எல்லா இடங்களிலும் விரவி ஒரு புத்துணர்வு சூழ்நிலையை உருவாக்கும்.

### சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க

(இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழலிவந்தாள், மலை வாழ்பவர், முத்துப்பல்)

1. இன்சொல் - பண்புத்தொகை
   இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.
2. எழுகதிர் - வினைத்தொகை
   கடலின் நடுவே தோன்றும் ஏழுகதிரின் அழகே அழகு
3. கீரிபாம்பு - உம்மை தொகை
   பூமிகாகவும் புவனாவும் கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் பகைமை உடையவர்கள்.
4. பூங்குழலி வந்தாள் - அன்மொழித் தொகை
   பூப்போன்ற கூந்தலையுடைய பெண் வந்தாள்
5. மலை வாழ்பவர் - ஏழாம் வேற்றுமைத் தொகை
   குறிஞ்சி நில மக்கள் மலையின் கண் வாழ்பவர்
6. முத்துப்பல் - உவமைத் தொகை
   வெண்மதியின் முத்துப்பல் மேலும் அவளுக்கு அழகு சேர்க்கிறது.

## செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

**பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்**

பூ உண்டு. ஆனால் கண்ணீற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் : ஆல மலர் : பலா மலர்

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இது தான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் : சுள்ளி மலர்; பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் : அத்தி; ஆலம்; கொழிஞ்சி; பலா.

பயன்பாடு, நாற்றம் மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு, பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை, குரீ இப்

பூளை, இலுப்பைப்பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாக அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

- கோவை. இளஞ்சேரன்

**வினா :**

1. மலர் உண்டு; பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.
2. அரும்பாகி மொட்டாகி பூவாகி .... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.
3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.
4. அரிய மலர் - இலக்கணக் குறிப்புத் தருக.
5. தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.

   இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை, கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும் பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

**விடை :**

1. மலருக்குப் பெயர் உண்டு
2. மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும்.
3. பாதிரிப்பூ - குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும் . உடல் நலத்தைப் பெருக்கி குளிர்ச்சியூட்டும்.

முருங்கைப்பூ - இப்பூவைக் கசாயம் செய்து வாரம் இருமுறை குடிக்கவும் .குடித்துவர நீரழிவு நோய் ,நரம்புத்தளர்ச்சி நோய் நீங்கும் . நினைவு ஆற்றல் பெருகும்.

4. அரிய மலர் - குறிப்புப் பெயரெச்சம்
5. மறத்தின் - மரத்தின், பரித்து - பறித்து ,மனத்தை - மணத்தை

## வாழ்த்து மடலை எழுதுக

**மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக**

மணிநகர்,
சிவகாசி,
15.04.2019.

**அன்புள்ள நண்பா!**

வணக்கம். இங்கு நான் மற்றும் அனைவரும் நலம். அங்கு உன் நலமும் உன் வீட்டில் உள்ள அனைவரின் நலமும் அறிய ஆவலாக உள்ளேன்.

நண்பா உன் திறமையைக் கண்டு மகிழ்ந்தேன் "மரங்களின் இயற்கை வரம்" என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பெற்று பரிசு வாங்கிய செய்தியை நாளிதழில் புகைப்படத்துடன் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

நீ கட்டுரையில் எழுதிய செய்தியின் கரு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீட்டிற்கொரு மரம் வளர்ப்போம், மரங்களை அழிக்காதீர: என்ற செயலில் ஈடுபடுவோம்.

தூய் காற்றை சுவாசிப்போம் என்ற செய்திக்குறிப்புகள் அருமையாக உள்ளன.

தொடர்ந்து உன் திறமைகளை வளர்த்துக்கொள் . பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி மேல் வெற்றி பெற வாழ்த்துகிறேன்

**இப்படிக்கு,**
அன்பு நண்பன்,
இரா .தமிழழகன்.

**<u>உறைமேல் முகவரி</u> :**

**பெறுநர்**

இரா.முத்தமிழன்,
6/96 பாரதி நகர்,
பசுமலை,
மதுரை - 4.

## பாரதியின் வசன நடை

### சிட்டுக்குருவி

சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக்கண்கள், சினனத்தலை, வெள்ளைக் கழுத்து அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு, கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு, சிறிய தோகை, துளித்துளிக்கால்கள் இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலேயே பிடித்து விடலாம்.இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டில் இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண். இது போன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.

உறுதியான மூக்கு, விதையொத்த கண்கள், கூர்மையான பார்வை, மெல்லிய கண்கள், கரும் பச்சை நிறமுடைய பட்டுப் போர்த்திய வயிறு, கருமை சாம்பல் மற்றும் செந்நிறம் கலந்த முதுகு, நீண்ட அழகிய பல வண்ணத்தாலான தோகை, பனங்கிழங்கை யொத்த கால்கள் இவை அனைத்தையும் சேர்த்து ஒருவர் கையில் பிடிப்பது மிகவும் அரிதாகும். இப்படிப்பட்ட உடலைச் சுமந்துகொண்டு என் வீட்டுத் தோட்டத்திற்கு இரண்டு, உயிர்கள் வந்து போகின்றன. அவற்றில் ஒன்று ஆண்மயில் மற்றொன்று பெண்மயில்.

## மொழியோடு விளையாடு

### சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும் : நீக்காவிட்டால் வாசனைதரும்
   **விடை : நறுமணம்**
2. பழமைக்கு எதிரானது - எழுது கோலில் பயன்படும்
   **விடை : புதுமை**
3. இருக்கும் போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை
   **விடை : காற்று.**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்
   **விடை : விண்மின்.**
5. ஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்
   **விடை : காடு**

### நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது .வாடைக் காற்று வீசியது.
   **விடை : காற்றின் பாடல்**
2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிரு மொட்டு முகிழ்த்தது, அச்செடியை வரவேற்கும் விதமாக பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.
   **விடை : மொட்டின் வருணனை**
3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல் : பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.
   **விடை : மிதக்கும் வாசம்**
4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரனங்கள்.
   **விடை : உயிர்ப்பின் ஏக்கம்**
5. நின்றுவிட்ட மழை தரும் குளிர் ;சொட்டுச் சொட்டாக வளிம்புகளிலிருந்து மரங்களிலிருந்து விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.
   **விடை : நீரின் சிலிர்ப்பு**

6. குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள் சூறைக்காற்றின் ஆலோலம் (வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம் ,நீரின் சிலிர்ப்பு) **விடை : வனத்தின் நடனம்**

**எ.கா :** கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது, வானம் இருண்டது .வாடைக்காற்று வீசியது. தலைப்பு - காற்றின் பாடல்

## அகராதியில் காண்க

அகன்ற சுடர் - சூரியன், அகன்ற சுடர், விரிந்த சுடர்
ஆர்கலி - கடல், மழை, ஆரவாரம், பேரொலி, வெள்ளம்
கட்புள் - பறவை, ஒரு புலவன்
கொடுவாய் - புலி, வளைந்த வாய், பழிச்சொல்
திருவில் - வானவில், இந்திரவில்

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

| | |
|---|---|
|  | காற்றே!<br>உன் அருமை யாருக்கும் தெரியவில்லை<br>உயிர் வாழ நீ அவசியம்<br>மரங்களை அழித்தோம் நாங்கள்<br>வளம் இல்லா உயிரினமாகி விட்டோம்<br>மரங்களை வளர்ப்போம்<br>தூய்மையான காற்றை சுவாசிப்போம் |

## நிற்க அதற்கு தக

வானொலி அறிவிப்பு

**ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ.. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

**புயலின்போது**

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த்திசையிலிருந்து மறுபடி |

| | |
|---|---|
| பின்பற்றவும். | வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

**விடை :** 1. வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும்

2. புயலின் போது வெளியே செல்ல மாட்டேன்
3. மாடியில் இருப்பதைத் தவிர்த்து தளப் பகுதியிலேயே தங்குவேன்
4. மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்
5. தொலைபேசி மின் சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன்

---

## கலைச் சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Storm | - புயல் | Land Breeze | - நிலக்காற்று |
| Tornado | - சூறாவளி | Sea Breeze | - கடற்காற்று |
| Tempest | - பெருங்காற்று | Whirlwind | - சுழல்காற்று |

---

## இயல் 2

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நயங்கள் _________, ___________, ___________.
2. பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் _________, _________.
3. காலம் கரந்த பெயரெச்சம் ___________.

II. பொருத்துக: 3x1=3

4. நேமி - மலை
5. கோடு - வலம்புரிச்சங்கு
6. விரிச்சி - அகன்ற
- நற்சொல்.

III. விடையளி: 2x2=4

7. பண்புத்தொகை சான்றுடன் விளக்குக.
8. மா அல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

IV. விடையளி: 2x3=6

9. மகாகவி பாரதியார் குறிப்பு வரைக.
10. காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகளைக் கூறுக.

V. அடிபிறழாமல் எழுதுக: 1x6=6

11. சிறுதாம்பு தொடுத்த .... எனத் தொடங்கும் பாடல்.

VI. விடையளி: 1x6=6

12. "காற்றே வா" கவிதையில் பாரதியார் கூறுவன யாவை?

VII. 13. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1x5=5



VIII. 'பா' நயம் பாராட்டி எழுதுக. 1x6=6

14. "மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே"

IX. மொழிப்பயிற்சி:

15. விடைக்கேற்ற வினா அமை : 1x1=1

காற்று தெற்கிலிருந்து வீசும் போது தென்றல் காற்று எனப்படுகிறது.

16. சந்திப் பிழையை நீக்கி எழுதுக. 1x1=1

என் ஆற்றலை பயன்படுத்தி கடல் கடந்து வணிகம் செய்தவர்கள் தமிழர்கள்.

17. ஒருமை பன்மைப் பிழைகளை நீக்குக. 1x1=1

ஒவ்வொரு விநாடியும் நான் உங்களால் மாசுபடுகிறோம்.

18. நிறுத்தற்குறியிடுக: 1x1=1

காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள் என்னும் புது மொழிக்கு வித்தாகிறேன்.

19. பொருள் கூறுக: ஆர்கலி 1x1=1

21. ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம் அது என்ன? 1x1=1

22. கலைச்சொல் அறிக: Tempest. 1x1=1

23. உராய்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக. 1x2=2

24. மூதூர் - பிரித்து எழுதுக. 1x1=1

## இயல் 2

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. 'பெரிய மீசை' சிரித்தார் - மேற்கோளில் உள்ள சொல்லுக்கான தொகையின் வகை எது?
2. வசன கவிதை வடிவத்தை அறிமுகப்படுத்தியவர் ___________.
3. முல்லை நிலத்தின் சிறுபொழுது ___________.

II. பொருத்துக: 4x1=4

4. கொண்டல் - அ) மேற்கு
5. கோடை - ஆ) தெற்கு
6. வாடை - இ) கிழக்கு
7. தென்றல் - ஈ) வடக்கு

III. விடையளி: 3x2=6

8. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
9. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?
10. வசன கவிதை - குறிப்பு வரைக.

IV. விடையளி: 3x4=12

11. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடலை அமைக்க
12. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம் யாது?
13. மழைமேகம் - மழைப்பொழிவு குறித்து முல்லைப் பாட்டில் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?

V. விடையளி: 3x6=18

14. கார்காலச் செய்தியை முல்லைப்பாட்டு வாயிலாக அறிந்து எழுதுக.
15. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
16. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும்ட தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழத்தி மடல் எழுதுக.

VI. மொழிப்பயிற்சிகள்:

17. கலைச் சொல் அறிக: Sea Breeze. 1x1=1
18. பொருள் தருக: திருவில். 1x1=1
19. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை அது என்ன? 1x1=1
20. இலக்கணக் குறிப்பு தருக: முத்துப்பல். 1x1=1
21. மலர் உண்டு; பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரே தொடராக்கு. 1x1=1
22. பகுபத உறுப்பிலக்கணம் தருக: கொண்ட 1x1=1
23. மோனை, எதுகை எடுத்து எழுதுக: 1x2=2

 "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
 கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி"

24. மொழி பெயர்க்க: 1x2=2

 The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark.
 The milky clouds start their wandering.

இயல் மூன்று

பண்பாடு

# கூட்டாஞ்சோறு



உணவு ஆக்கலும் அளித்தலும் – 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

**கற்றல் நோக்கங்கள்**

- நம் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான விருந்தோம்பலின் மாண்பை உணர்ந்து பெருமித்ததுடன் பின்பற்றுதல்
- உணவு வகைகளும் உணவு சமைக்கும் முறைகளும் மொழியில் நயம்படச் சொல்லப்படும் முறைமையைப் படித்துச் சுவைத்து அது போல ஈர்ப்புடன் எழுதப்பழகுதல்.
- உடலை மட்டும் வளர்க்கும் உணவுகளைத் தவிர்த்தல் குறித்தும் உயிரை உணர்வை வளர்க்கும்உணவுகளைக் குறித்தும் செய்திகளை அறிந்து வெளிப்படுத்துதல்.
- சிற்றூர் மக்களின் வாழ்வியல் முறைகளை வட்டார இலக்கியங்களின் நடையில் புரிந்து படித்தல்.
- மொழிப் பயன்பாட்டில் தொகாநிலைத் தொடர்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

உரைநடை உலகம்

# பண்பாடு ௩

# விருந்து போற்றுதும்!

4913CF


விருந்தோம்பல்
17 ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பின்வருவனற்றுள் முறையான தொடர்.**

(அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கும் இடமுண்டு
(ஆ)தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
(இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
(ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு]

**[விடை : தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு]**

**2. "விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்களித்தான் என்கிறது புறநானூறு ".**

இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
(அ) நிலத்திற்கேற்ற விருந்து (ஆ) இன்மையிலும் விருந்து
(இ) அல்லிலும் விருந்து (ஈ) உற்றாரின் விருந்து **[விடை : இன்மையிலும் விருந்து]**

## குறுவினா

**1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

- வாருங்கள் வாருங்கள்
- அங்கு எல்லோரும் நலமாக உள்ளார்களா?
- உங்கள் பயணம் இனிமையாக இருந்ததா?
- தண்ணீர் குடியுங்கள்
- உட்காருங்கள்

**2. "தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி " என்பது இலக்கியத் செய்தி . விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா ? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக**

- "வெறுங்கை முழம் போடுமா" என்ற பழமொழியைக் கூறியவர்கள் நம் முன்னோர்கள். எனவே, விருந்தோம்பலுக்கு செல்வம் மிகவும் இன்றியமையாததாகும்.
- "மனம் இருந்தால் மார்க்கம் உண்டு" என்ற பழமொழியும் முன்னோர்கள் கூறி வைத்தனர். விருந்தினரை உபசரிக்க வேண்டும். என்ற மனநிலை இருந்தால் மட்டுமே வறுமையிலும் விதைக்காக வைத்திருந்த தானியத்தைக் குற்றி உணவளிக்க முடியும்.

## சிறுவினா

1. **புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.இப்படியாகக் கலமாற்றம் ,தமிழர் விருந்தோம்பில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து கருத்துகளை எழுதுக .**
   - திருமணம், வளைகாப்பு, புதுமனை புகுவிழா, காதணி விழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர் தமிழர். ஆனால் தற்போது வீட்டில் நடைபெறும் சிறுவிழாக்கள் கூட திருமண மண்டபங்கள், உணவங்களுக்கும் இடம் பெயர்ந்து விட்டன.
   - கால மாற்றத்தால் விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. இன்று வீட்டிற்கு முன்பு திண்ணை வைத்துக் கட்டுவதும் இல்லை. அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்பதும் இல்லை. காரணம் மனித நேயம் இல்லை. தன் வீடு ,தன் மனைவி,தன் பிள்ளை என்ற சுயநலமே காரணமாகும்.
   - பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் உபசரித்து வழியனுப்புகிற வரையிலும் திருமண ஏற்பாடு செய்திருக்கக் கூடிய தனியொருவராக செய்யும் நிலைக்கு மாறிவிட்டது. ஒரு வாழை இலை சாப்பாட்டிற்கு இவ்வளவு கட்டணம் என்று இருக்கக் கூடிய கால கட்டம் தற்போது உள்ளது. விருந்து அருகிப் போனதற்கு சுயநலமும், குறுகிய மனப்பான்மையும் நகர்புறம் நோக்கி மக்கள் இடம் பெயர்ந்ததும் காரணமாக அமைகின்றன.

## நெடுவினா

1. **உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

நீண்ட நாட்களாக எங்கள் வீட்டிற்கு வராத என் தாய்மாமா சென்னையிலிருந்து வருகை புரிந்தார். அவரை வாங்க! வாங்க மாமா நலமாக உள்ளீர்களா, அங்கு அத்தை மற்றும் வீட்டில் உள்ள அனைவரும் நலமாக உள்ளார்களா? உட்காருங்க மாமா தண்ணீர் கொண்டு வருகிறேன் என்றேன்.

வீட்டிற்கு வந்த மாமாவுக்கு அறுசுவை உணவையும் தயார் செய்து சாப்பிட வருமாறு அழைத்தேன். நம் தமிழர் தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவுபரிமாறுவது மரபாகும். அதன் படி என் மாமாவிற்கு உணவு பரிமாறினேன்.

"வாழை இலையின் கறிவகைகள் - சூழ வைத்துக்" என்ற பாரதிதாசனின் கூற்றுப்படி வாழையிலையை விரித்து, இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு, சிறிய வகை உணவு வைத்தேன் .வலது ஓரத்தில் காய்கறி கீரை, கூட்டு, பெரிய உணவு வகையும் நடுவே சோறுவைத்தேன்.

மாமா சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சுவையாக இருக்கிறதா மாமா என்று கேட்டேன்.

அவர் விரும்பிச் சாப்பிட்ட உணவு வகையை போதும் என்று சொல்கிற வரை மீண்டும் மீண்டும் வைத்தேன்.

மாமா சாப்பிட்டு எழுந்தவுடன் கைகழுவதற்கு ஒரு சொம்பில் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தேன். பின்பு ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு, சுண்ணாம்பு கொடுத்தேன். அதை அவர் மகிழ்வுடன் உண்டார்.பின்பு மாலையில் சூடான இட்டிலியுடன் சட்டினி சாம்பார் விருந்து வைத்தேன். மறு நாள் காலையில் சூடான தேநீர் பருகக் கொடுத்தேன். சிறிது நேரம் கழித்து ரவை கேசரி, தக்காளிச்சோறும், சப்பாத்திக் குருமாவும் தயார் செய்து நானும் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் அவருடன் சேர்ந்து வட்டமாக உட்கார்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தோம்.

## பொருத்துக

அ) 1. விருந்தே புதுமை - இளங்கோவடிகள்.
2. இல்லறவியல் - செயங்கொண்டார்.
3. சிலப்பதிகாரம் - திருவள்ளுவர்.
4. கலிங்கத்துபரணி - தொல்காப்பியர்.

அ) 2, 3, 4, 1 ஆ) 3, 2, 4, 1 இ) 4, 3, 1, 2 ஈ) 1, 4, 2, 3 **[விடை : 4, 3, 1, 2]**

ஆ) 1. மோப்பக் குழையும் அனிச்சம் - இளங்கோவடிகள் (அ) 2, 3, 1
2. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் - திருவள்ளுவர் (ஆ) 3, 1, 2
3. விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை - ஔவையார் (இ) 2, 1, 3

அ) 2, 3, 1 ஆ) 3, 1, 2 இ) 2, 1, 3 **[விடை: 2, 3, 1]**

## விடைக்கேற்ற வினா அமைக்க

**1. வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு உண்ண உணவு கொடுத்து வரவேற்பது விருந்தோம்பல்**
விருந்தோம்பல் என்பது யாது?

**2. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின**
சத்திரங்கள் பெருகக் காரணம் என்ன ?

**3. மருந்தே ஆயினும் விருந்தோடு உன் என்கிறார்_ஔவையார்**
மருந்தே ஆயினும் விருந்தோடு உன் என்பவர் யார் ?

**4. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை .**
தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது?

**5. விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது .**
இல்லறக் கடமையாக இருந்தது எது?

## ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக

1. பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தார்.
பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் **கொடுத்தனர்**

2. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகியது

விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் **பெருகின**

3. உயரிய தமிழ்ப்பண்பாடு பல முறைகளில் தமிழர்களிடம் பின்பற்றப்படுகின்றன.

உயரிய தமிழ்ப்பண்பாடு பல முறைகளில் தமிழர்களிடம் **பின்பற்றப்படுகின்றது.**

4. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம்மரபாகக் கருதப்படுகின்றன

தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம்மரபாகக் **கருதப்படுகிறது**

## சந்திப்பிழை நீக்கி எழுதுக

**1. விருந்தினரை போற்றி பேணல் பழந்தமிழர் மரபு.**

விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு

**2. மிகுதியான சத்திரங்கள் வழி செல்வோர்க்காக கட்டப்பட்டன**

மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன

**3. பண்டை தமிழர் இல்லங்களில் உயரிய தமிழ் பண்பாடு இருந்தது.**

பண்டைத் தமிழர் இல்லங்களில் உயரிய தமிழப் பண்பாடு இருந்தது.

## நிறுத்தற் குறியிடுக

**1.மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என்று கொன்றே வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார்.**

"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்று கொன்றே வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார்.

**2. முருங்கைக்காய் சாம்பார் மோர்க்குழம்பு வேப்பம்பூ ரசம் வெண்டைக்காய்க் கூட்டு தினைப் பாயாசம் அப்பளம் எனச் சுவையாக தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.**

முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயாசம், அப்பளம் எனச் சுவையாக தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. விருந்தோம்பல் என்றால் என்ன ?**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்தல் ,அவர்களிடம் அன்பு பாராட்டுதல் இவையே விருந்தோம்பல் எனப்படும்.

**2. யாருடைய ஆட்சிக்காலத்தில் மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன?**

- நாயக்கர்
- மராட்டியர்

**3. உலகம் நிலைத்திருப்பதற்கான காரணங்கள் எவை ? என இளம் பெருவழுதி குறிப்பிட்டுள்ளார் ?**

- தமிழரின் விருந்தோம்பல் பண்பு தனித்து உண்ணாமை
- அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது. பிறருக்குக் கொடுக்கும் .நல்லோர் உள்ளதால் உலகம் நிலைத்திருக்கிறது.

**4. இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து புறநானூறு எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?**

- வறுமையான நிலையிலும் தம் வீட்டிற்கு வந்தவர்க்கு எவ்வழியிலும் விருந்தளிக்க மகிழ்ந்தனர் நம் முன்னோர்.
- தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குற்றி விருந்தினருக்கு உணவளித்த நிகழ்வு காட்சிப்படுத்தப்படுகிறது.

**5. விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கிய நூல்கள் எவை?**

- புறநானூறு
- நற்றிணை
- குறுந்தொகை

**6. மோப்பக்குழையும் அனிச்சம் உவமை கொண்டு வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து யாது?**

முகம் வேறுபடாமல் முகமலர்ச்சி யோடு விருந்தினரை வர வேற்கவேண்டும் என்பதாகும்.

**7. "விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று கண்ணாகி வருந்தக் காரணம் யாது ?**

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துகிறாள்.

**8. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது?**

தனித்து உண்ணாமை

**9. உலகம் நிலைபெற்றிருக்கக் காரணம் யாது?**

அமிழ்தே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுத்து மகிழ்வர் நல்லோர். அத்தகையவர்களால் தான் உலகம் இன்றும் நிலைபெற்று இருக்கின்றது.

**10. விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?**

- இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம், தன்னிடத்து வந்த விருந்தினரை உபசரிப்பதே.
- அனிச்ச மலர் முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். அதுபோல விருந்தினரோ முகம் வேறுபட்டு நோக்க வாடிவிடுவர்.

"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

"மோப்பக் குழையும் அனிச்சம்; முகம் திரிந்து
நோக்கம் குழையும் விருந்து"

**11. சிலப்பதிகாரம் உணர்த்தும் விருந்தோம்பல் குறித்து எழுதுக.**

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி கோவலனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இல்லறக் கடமைகளுள் விருந்தோம்பல் பண்பு உயர்வானது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

"துறவோாக் கெதிர்தலும் தொல்வோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.

**12. கம்பரும், செயங்கொண்டரும் விருந்து பற்றிக் கூறும் கருத்துகள் யாவை?**

- கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பரும்.
- வந்த விருந்தினர்களும், வறியவர்களும் அருகே அமர்ந்து உண்டதனைக் கண்டு முகமலர்ச்சி அடையும் தேவர்கள் என்று செயங்கொண்டாரும் விருந்தோம்பலைப் புகழ்ந்துள்ளார்.

"பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் - கம்பராமாயணம்
விருந்தும் அன்றி விளைவன யாவையே"

"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண.
மேன்மேலும் முகமலரும் மேலோலர் போல - கலிங்கத்துப்பரணி

**13. தனித்து உண்ணாமை குறித்து கூறுக.**

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பார் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைபெற்று வாழ்கிறது என்கிறது புறநானூறு.

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே"......... - புறநானூறு

**14. நற்றிணை நூலில் விருந்தோம்பல் பண்பு குறித்த கருத்து யாது?**

நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை நற்றிணை நூல் எடுத்தியம்புகிறது.

"அல்லல் ஆயினும் விருந்துவரின் உவக்கும்"

**15. விருந்தினை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் கூறுக.**

- வீட்டில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், 'உணவு வேண்டியவர் யாரேனும் உள்ளார்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்தது என்பதனை குறுந்தொகை விளக்கும்.
- "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளதன் மூலம் விருந்தினை எதிர்கொள்ளும் தன்மை புலப்படுகிறது.

**16. விருந்தினை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

- வாருங்கள்
- நலமா?
- அமருங்கள்
- நீர் அருந்துங்கள்

**17. உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதைக் குறித்து நற்றிணை குறிப்பிடும் செய்தி யாது?**

- விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.

**18. வாளையும் யாழையும் பணையம் வைத்து விருந்தளிக்கப்பட்ட செய்தியைக் கூறு.**

**பழைய வாள்:**

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்.

**சீறியாழ் :**

இன்றும் விருந்தினர் வந்ததால்தான் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்.

**19. இளையான்குடி மாறநாயனார் சிவனடியார்க்கு விருந்தளித்த நிகழ்வை எழுது.**

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியம் இல்லை. தானியமில்லாததால் அன்று விதைத்துவிட்டு வந்த விதை நெல்லை அரித்து சமைத்து விருந்து படைத்தார்.

**20. பாரம்பரிய உணவு வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- முருங்கைக்காய்ச் சாம்பார்
- தினைப்பாயாசம்
- வெண்டைக்காய்க் கூட்டு
- அப்பளம்
- மோர்க்குழம்பு
- வேப்பம்பூ ரசம்.

**21. விருந்து பற்றி எடுத்துரைக்கும் தமிழ்நூல்கள் யாவை?**

- தொல்காப்பியம்
- திருக்குறள்

- புறநானூறு
- சிலப்பதிகாரம்
- நற்றிணை
- கம்பராமாயணம்
- குறுந்தொகை
- கலிங்கத்துப்பரணி
- கொன்றை வேந்தன்

**22. விருந்து பேணுவதற்கு எவற்றையெல்லாம் தலைவன் பணயம் வைத்ததாகப் புறநானூறு கூறுகின்றது?**

இரும்பினால் செய்யபட்ட பழைய வாள், கருங்கோட்டு சீறியாழ்.

**23. விருந்து மற்றும் விருந்தோம்பல் பற்றிக் குறிப்பிடும் புலவர்கள் யாவர்?**

- தொல்காப்பியர்
- கம்பர்
- திருவள்ளுவர்
- செயங்கொண்டார்
- இளங்கோவடிகள்
- ஔவையார்

**24. அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும் தொடர் விளக்கம் தருக.**

**தொடர் இடம் பெறும் நூல் :** நற்றிணை

**தொடர் விளக்கம் :** நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நற்பண்பு குடும்பத்தலைவிக்கு உண்டு.

**25. பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளரோ தொடர் விளக்கம் தருக.**

**தொடர் இடம் பெறும் நூல் :** குறுந்தொகை.

**தொடர் விளக்கம் :** இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர் உணவு உண்ண வேண்டியவாகள் யாரேனும் உள்ளனரா? என்று கேட்க்கின்றனர்.

**26. வீட்டில் நடக்கும் பகிர்ந்துண்ணலை விளக்குக.**

முளிதயிர் பிசைந்த சோற்றை உருட்டி அனைவருக்கும் கையில் ஓர் உருண்டை கொடுத்து உருண்டையின் நடுவில் வைத்த குழியில் புளிக்குழம்பு இட்டு உண்ணச் சொன்ன அன்னையின் அன்பில் தொடங்குகிறது வீட்டில் அனைவருடனான பகிர்ந்துண்ணல்.

**27. இன்றைய காலகட்டத்தில் விருந்தோம்பல் நிலை குறித்து எழுதுக.**

- புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர்.
- இன்று வீட்டிற்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை. அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதும் இல்லை.

**28. இன்று நடைபெறும் வீட்டு விழாக்களைப் பற்றி எழுதுக.**

- முன்னர் வீட்டில் நடைபெற்ற விழாக்கள், இன்று திருமணக்கூடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டன.
- பண்பாட்டு மாற்றமாக இன்றுசில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுகிறது.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து இலக்கியங்கள் கூறும் செய்தியைக் கூறுக**

- வறுமையான நிலையிலும் தம் வீட்டிற்கு வந்தவர்க்கு எவ்வழியானும் முயன்று விருந்தளித்தனர் தமிழர் என்று புறநானூறு கூறுகிறது.

- தானியம் எதுவும் இல்லாத சூழ்நிலையில் விதைக்காக வைத்திருந்நத தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தளித்தாள் தலைவி. இன்று வந்த விருந்தினருக்கு விருந்தளிக்க கருங்கோட்டுச் சீறியாழைப் பாணையம் வைத்தாள்
- தன் வீட்டிற்கு வந்த சிவனடியாருக்கு விருந்து அளிக்க அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரிந்து படைத்ததைப் பெரிய புராணம் கூறுகிறது.

**2. வாழை இலை விருந்து , உணவு பரிமாறும் முறை குறித்து எழுதுக**

- தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவு அளிப்பது பழந்தமிழர் மரபாகக் கருதப்படுகிறது.
- உண்பவரின் இடப்பக்கம் குறுகிய பகுதியும் *வலப்பக்கம்இலையின் விரிந்த பகுதியும் வருமாறு அமைய வேண்டும்
- இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு, முதலானவைகளையும் சிறிய உணவு வகைகளையும் வைத்தனர். வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான உணவும், நடுவில் சோறும் வைத்து ,எடுத்து உண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.
- விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் மீண்டும் மீண்டும் வைத்து முகமலர்ச்சியுடன் விருந்து உபசரித்தனர்.

**3. விருந்தோம்பல் அன்றும் இன்றும் எவ்வாறு உள்ளது என வேறுபடுத்திக் காட்டுக**

| அன்றும் | இன்றும் |
|---|---|
| ➢ புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலைவைக்கத் திட்டும் அமைத்தனர் | ➢ இன்று வீட்டிற்குத் திண்ணை வைத்துக் காட்டுவதில்லை ,அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களா ஏற்பதும் இல்லை |
| ➢ இல்ல விழாக்களான திருமண உறுதி செய்தல் திருமணம் வளைகாப்பு, பிறந்த நாள், புது மனை புகுவிழா முதலியவற்றைத் தங்கள் இல்லத்திலேயே நடத்தி விருந்தினர்களுக்கு விருந்து அளித்தனர். | ➢ இல்ல விழாக்கள் தற்போது திருமண மண்டபத்திலேயே நடைபெறுகிறது |
| இல்ல விழாக்களில் இப்பகுதி வாழ் மக்கள் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்கின்றனர் | திருமணக்கூடங்களில் நடைபெறும் இல்ல விழாக்களில் விருந்தினரை வரவேற்பதிலிருந்து வழியனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்ளே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுகிறது. |
| பண்டைத்தமிழர்கள் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு சிறந்திருந்தது | உயரிய தமிழ்ப்பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறையில் உள்ளது. |

**4. உற்றாரோடு நின்ற விருந்து குறித்து எழுதுக?**

- சங்க காலத்தில் அரசனாயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர்.
- கால மாற்றத்தினால் அரசனாயினும் புதியவர்களை வீட்டிற்கு அழைத்து உணவளிப்பது குறைந்தது.
- விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராத்தியர் ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

**5. மின்சோட்டா, வாழையிலை விருந்து விழா பற்றி எழுதுக?**

- அமெரிக்காவின் மின்சோட்டா தமிழ்ச் சங்கம் வாழையிலை ஆண்டு நடத்தி வருகிறது.
- தமிழர்களின் பாரம்பரிய உணவுகளை விருந்து வைக்கின்றனர்.

- தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

**6. அறவுணர்வும் தமிழர் மரபும் குறித்து எழுதுக?**

- இல்லறவியல் விருந்தோம்பலை வலியுறுத்தி ஓர் அதிகாரத்தையே திருவள்ளுவர் அமைந்துள்ளார் அதில் இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.
- கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி, அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.
- கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் கூறுகிறார். கலித்துப் பரணியிலும் செயங்கொண்டார், விருந்தினருக்கு உணவிடுவேன் முகமலர்ச்சியை உவமையாக்கி உள்ளார். இவற்றால் தமிழர்தம் அறவுணர்வையும் மரபையும் தெளிவாக்கலாம்.

---

## கற்பவை கற்றபின்

**1. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல் ,தமிழர் பண்பாட்டில் ஈகை பசித்தவருக்கு உணவிடல் - இது போன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிருள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.**

**ராணி** : புதிதாக விருந்தினர் வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன் திண்ணையும் அதில் தலை வைக்க திண்டும் அமைத்தனர்.

**வாணி** : விருந்தினரைப் பேணுதல் எவ்வாறு?

**ராணி** : விருந்தினரைப் பேணுதல் என்பது பழந்தமிழர் மரபாகும். இதைப் பற்றி சில இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**வாணி** : தமிழர் பண்பாட்டில் ஈகை பற்றிக் கூறிய செய்தி என்ன?

**ராணி** : பழந்தமிழர் பண்பாட்டில் ஈகையும் ஒன்று. இதைப்பற்றி இலக்கியங்கள் சில கூறுகின்றன. பாரி வள்ளல் முல்லைக்குத் தேர் கொடுத்ததாகவும், பேகன் என்பவன் மயிலுக்குப் போர்வை கொடுத்ததாகவும். என்பதையும் இலக்கியங்கள் கூறுகின்றன. இது தான் ஈகை

**வாணி** : பசித்தவர்க்கு உணவிடல் குறித்து உன் பெற்றோர் கூறிய செய்தியைக் கூறு.

**ராணி** : "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்கிறது இலக்கியம். பசியின் துயரினால் வாடி வருபவர்க்கு உணவளிப்பது பழந்தமிழரின் சிறந்து பண்புடைமையாகும்.

**2. "இட்டதோர் தாமரைப்பூ**
**இதழ்விரித் திருத்தல் போல**
**வட்டமாய் புறாக்கள் கூடி**
**இரையுண்ணும் ---- பாரதிதாசனார்**

**இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்து பேசுக.**

- தன்னினத்தைக் கூவியழைக்கும் காகம் போலிரு
- பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும்
- கிடைத்த இரையைப் பகிர்ந்து உண்ணும் பொருட்டு
- புறாக்கள் வட்டமாய் அவ்விரையைச் சுற்றி கூடி நின்றன.
- குறட்டை ஒலி என்ற சிறுகதையில் ஓர் ஏழைத்தாய் தன் குழந்தைக்கு ஊட்ட வேண்டிய பாலால் பட்டினி கிடந்த நாய்க்குட்டிகளுக்கு ஊட்டுகிறாள். ஓர் ஏழைத்தாயின்

வறுமையிலும் பகிர்ந்துண்ணும் தாய்மைப் பண்பு இக்கதையில் புலப்படுத்தியுள்ளார் மு.வ. அவர்கள்.

இக்காலத்தில் பகிர்ந்துண்ணும் வழக்கம் அதிகமாக மனிதர்களிடம் இல்லை. ஐந்தறிவு படைத்த காக்கை கூட தனக்குக் கிடைத்த சிறிதளவு உணவைக் கூட தன் இனத்தையும் அழைத்து பகிர்ந்துஉண்ணுகிறது. இத்தகைய உயிரினங்களைக் கண்டு மனிதர்களாகிய நாம் பகிர்ந்துண்ணும் பழைய பண்பாட்டை கடைபிடித்து வாழ வேண்டும்.

கவிதைப் பேழை

பண்பாடு ௩

# காசிக்காண்டம்

– அதிவீரராம பாண்டியர்

54AWDF



பாடல் :

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே
(பா எண்:17)

பாடல் விளக்கம் :

இல்லற ஒழுக்கில் முக்கியமான ஒன்று விருந்தினராக வந்தவரை உபசரிப்பது ஆகும். எப்படி நமது இல்லம் நாடி வரும் விருந்தினரை எவ்வாறு உபசரிக்க வேண்டும் என்பதை காசிக்காண்டம் ஒன்பது பண்புகளாக நயத்துடன் எடுத்துரைக்கிறது.

விருந்தினராக ஒருவர் வந்தால்,

- அவரை வியந்து உரைத்தல்,
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்,
- முகமலர்ச்சியுடன் இனிமையாகப் பேசுதல்,
- வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்,
- விருந்தினர் எதிரில் நின்று உபசரித்தல்,
- அவர் மனம் மகிழும்படி பேசுதல்,
- விருந்தினர் அருகிலேயே அமர்ந்து இருத்தல்,
- அவர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல்,
- விருந்தினரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்

ஆகிய ஒன்பதும் இல்லொழுக்கம் மற்றும் விருந்தினரை உபசரிக்கும் பண்புகள் ஆகும்.

## பொருள் அறிக

1. வியத்தல் - வியந்து உரைத்தல்
2. திருந்துற - முகமலர்ச்சியுடன்
3. செப்பல் - கூறுதல்
4. அருகுற - அருகில்
5. பிரிந்து - புகழ்ந்து

## இலக்கணக் குறிப்பு

**1. நன்மொழி** - பண்புத்தொகை

**2. வருக** - வியங்கோள் வினைமுற்று

**3. வியத்தல்**
**4. நோக்கல்**
**5. எழுதுதல்**
**6. உரைத்தல்**
**7. செப்பல்**
**8. இருத்தல்**
**9. வழங்கல்**
} - தொழிற்பெயர்

## பகுபத உறுப்பிலக்கணம் தருக

**1. உரைத்த = உரை + த் + த் + அ**

**ஊரை** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்த கால இடைநிலை
**அ** - பெயரெச்ச பகுதி

**2. வருக = வா (வரு) + க**

**வா** - பகுதி (வரு) எனக் குறுகியது விகாரம்
**க** - வியங்கோள் வினைமுற்று விகுதி

## பொருத்துக

அ) 1. சங்கரசங்கிதை - அ) புகழ்ச்சிச்சொல்
2. முகமன் - ஆ) முத்துக் குளித்தல்
3. வெற்றிவேற்கை - இ) வடமொழி நூல்
4. கொற்கை - ஈ) நறுந்தொகை

**[விடை: 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ]**

ஆ) 1. சீவலமாறன் - அ) காசிக்காண்டம் நூற்பகுதி
2. பாண்டிய நாடு - ஆ) சிவன்கோவில்
3. பூர்வ காண்டம் - இ) அதிவீரராம பாண்டியர்
4. தென்காசி - ஈ) கொற்கை

**[விடை: 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ]**

## நூற் குறிப்பு

- காசி நகரத்தின் பெருமைகளைக் கூறிய நூல் காசிக் காண்டம்.
- இந்நூல் துறவு, இல்லறம், பெண்களின் பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.
- வடமொழி நூலான சங்கர சங்கிதையில் இருந்து இதற்குரிய பொருள் எடுத்தாளப்பட்டுள்ளது.
- பூர்வகாண்டம், உத்தரகாண்டம் எனும் இரு காண்டங்களையும் 2526 விருத்தப்பாக்களையும் கொண்டது.
- நம் பாடப்பகுதி இல்லொழுக்கங் கூறிய பகுதியில் உள்ள பதினேழாவது பாடலாகும்.

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. காசிக் காண்டம் என்பது ____________**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல் **[விடை : காசி நகரத்தின் பொருமையைப் பாடும் நூல்]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. காசிக் காண்டம் - நூற்குறிப்புத் தருக.**

- காசி நகரின் பெருமைகளை கூறும் நூல் காசிக்காண்டம்.
- துறவு, இல்லறம், பெண்களுக்கு பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றை கூறுகிறது.
- பூர்வ காண்டம் உத்தரக்காண்டம் என்னும் இரு காண்டங்களையும் 2526 விருத்தப்பாக்களையும் கொண்ட நூல்.
- காசிக் காண்டம் நூலை இயற்றியவர் அதிவீரராம பாண்டியர் ஆவர்.

**2. அதிவீரராம பாண்டியர் - குறிப்பு தருக.**

- காசிக்காண்டம், நைடதம், லிங்கபுராணம், நறுந்தொகை, வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம் இயற்றியவர்.
- முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசாகவும் தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தார்.
- தென்காசியில் இருக்கும் சிவன் கோவிலைக் கட்டியவர்.

**3. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்கள் யாவை?**

காசிக் காண்டம், நைடதம், லிங்கபுராணம், நறுந்தொகை, திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம், வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை.

**4. முகமன் வழங்கல் என்ற சொல் எவற்றை உணர்த்துகிறது?**

முகமன் வழங்கல் என்ற சொல் ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொல்லாகும்.

**5. பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல் - தொடர் பொருள் விளக்கம் தருக.**

தொடர் இடம் பெறும் நூல் : காசிக்காண்டம்

தொடர் விளக்கம் : விருந்தினர் அருகிலேயே விருந்து மேற்கொள்வர்

**6. விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டும்?**

இன்பத்துடன் பார்த்து இனிய சொல் பேசி, வருக! வருக! என வரவேற்க வேண்டும்

**7. விருந்தினரை இல்லத்தில் எவ்வாறு நடத்தல் வேண்டும்?**

விருந்தினர் வந்தபோது வரவேற்றல், அவருடன் அமர்ந்து கொள்ளுதல் அவர் மனம் மகிழுமாறு பேசுதல் ஆகியன செய்தல் வேண்டும்.

**8. விருந்தினரை எவ்வாறு உபசரித்தல் வேண்டும்?**

நம்மிடம் உள்ள பொருள்களை, அல்லது அவர் விரும்பும் பொருள்களைப் பரிமாறும்போது இன்முகத்துடன் உபசரித்தல் வேண்டும். உப்பில்லாக் கூழானாலும் இன்முகத்துடன் உபசரிப்பதே மேலானதாக இருத்தல் வேண்டும்.

**9. விருந்தினரை எவ்வாறு வழியனுப்ப வேண்டும்?**

நமது இல்லத்திற்கு வந்து திரும்பும் விருந்தினரை, இனிய புகழ் மொழிகளைக் கூறி, வாயிற்படிவரை சென்று, வழியனுப்ப வேண்டும்.

**10. 'உண்பதே அமிர்தம் ஆகும்' என விவேக சிந்தாமணி கூறுவது யாது?**

விருந்தினரை முகமலர்ச்சியோடு உபசரித்து, உண்மையான இனிய மொழிகளைப் பேசி, உப்பில்லாத கூழைக் கொடுத்தாலும், அது உண்பவர்க்கு அமிர்தம் ஆகும் என, விவேக சிந்தாமணி கூறுகிறது.

**11. உண்பவர்க்குக் கடும் பசியைத் தந்திடும் என விவேக சிந்தாமணி எதனைக் கூறுகிறது?**

மா, பலா, வாழை என முக்கனியோடு உயர்வாகிய அன்னத்தை, அன்பில்லாமல் முகம் கடுத்துக் கொடுப்பார்களேயானால் அவை உண்பவர்க்கும் இருக்கும் பசியோடு கடும்பசியை உண்டாக்கிவிடும் என, விவேக சிந்தாமணி கூறுகிறது.

**12. காசிக்காண்டம் எனும் நூல் எவற்றைப் பாடுகிறது?**

காசிக்காண்டம் எனும் நூல், இல்லறம், துறவறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறு வாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுகிறது.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. அதிவீரராம பாண்டியர் குறிப்பு வரைக?**

| | |
|---|---|
| **பெயர்** | : அதிவீரராம பாண்டியர். |
| **யார் அவர்?** | : கொற்கையின் அரசர், தமிழ்ப்புலவர் |
| **பட்டப் பெயர்** | : சீவலமாறன் |
| **இயற்றிய நூல்கள்** | : காசிக்காண்டம், நைடதம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம் வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை. |

**2. காசிக் காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் முறை இல்லற ஒழுக்கங்களைக் கூறுக? (அல்லது) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

1. அவரை வியந்து உரைத்தல்.
2. நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
3. முகமலர்ச்சியுடன் விருந்தினரை நோக்குதல்.
4. வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்.

5. விருந்தினர் அருகிலேயே எதிரில் நின்று உபசரித்தல்.
6. அவர் மனம் மகிழும்படி பேசுதல்.
7. விருந்தினர் அருகிலேயே அமர்ந்து இருத்தல்.
8. அவர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லல்.
9. விருந்தினரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்.

---

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

- வைகறைப் பொழுதில் வீட்டு வாசலில் மகிழுந்து வந்து நின்றுது. விரைந்து சென்ற என் தந்தை, அதில் வந்தோரை வாருங்கள் வாருங்கள் என, மலர்முகத்தோடு முகம் நோக்கி வரவேற்றார். அவருடைய பெட்டியை எடுத்துக்கொண்டு, அவரையும் வீட்டினுள் அழைத்து வந்தார். வீட்டில் இருந்த என் அம்மா, தங்கை, நான் என அனைவரும் வந்து வாருங்கள் என்று கூறி நலம் விசாரித்தோம்.
- அவர், காலைக்கடனை முடிக்க நான் உதவி செய்தேன், முகமலர்ச்சியோடு முன் அறையில் கூடத்தில் அமர்ந்மோம். அம்மா தேநீர் கொடுத்து உபசரித்தார். சிறிது நேரம் கிராமத்து நிகழ்வுகள், உறவுகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.
- கோடை காலமாதலால், குளிர்ந்த நீரில் குளிர்ப்பதற்கு தேவையானவற்றைக் கொடுத்து, நீராடச் செய்தோம். காலைச் சிற்றுண்டி தயார் ஆனது. பூப்போன்ற இட்லி, சட்னி, சாம்பார், பூரி, கிழங்குகள் ஆகியவற்றைத் தேவையறிந்து பரிமாறி மகிழ்ந்தோம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்த்துக்கொண்டு ஓய்வெடுக்க வைத்தோம்.
- அறுசுவை உணவு தயாரானது. மிக எளிமையாகவே இருந்தது. மதிய உணவு - வாழையிலை - முதல் இனிப்பு வெள்ளைச் சர்க்கரை, பொரியல் கூட்டு, கீரைவடை, மாங்காய்ப் பச்சடி, வடை, பாயச்சத்தோடு விருந்து, விருந்தினர் தேவை அறிந்து உபசரித்தோம். உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு அல்லவா! ஆதலால் சிறிது நேரதம் ஓய்வெடுத்துத் தூங்கினர். அவர் எழுந்தவுடன் மாலைச் சிற்றுண்டி கொடுத்து, மகிழுந்தில் அடுத்த வேலைக்கு அனுப்பி வைத்தோம்.

**2. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் குறித்து காசிக்காண்டம் குறிப்பிடும் செய்தி யாது?**

"விருந்தினராக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்"

- விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்
- முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்றல்
- அவர் எதிரில் நின்று அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல் வேண்டும்
- அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு அவர் விடைபெற்றுச் செல்லும் போது, வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல் வேண்டும்
- அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறிய வழியனுப்புதல் வேண்டும்.

---

## கற்பவை கற்றபின்

**1. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறாா. நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக எழுதிப் படித்துக் காட்டுக.**

நெடுநாட்களாகப் பார்க்க எண்ணியிருந்த நண்பர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்று, அவருக்கு காலைக்கடன் முடிக்க அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தேன். அவரும் பல்துலக்கி, குளித்து வந்தார். வந்தவருக்கு கேசரி, இட்லி, வடை, பொங்கல், தோசை, சட்னி, சாம்பார், இட்லி பொடியோடு காலைச் சிற்றுண்டியைக் கொடுத்து உண்பித்தேன். பிறகு கிராமத்து நிகழ்வுகள், தாய், தந்தை உறவுகள் நலத்தினைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். பிறகு தேநீர் கொடுத்தேன். வீட்டிற்கு வந்ததற்கு நினைவாக இலக்கிய இன்பம் என்ற நூலைக் கொடுத்தேன். பேருந்து நிலையம் வரை சென்று வழியனுப்பி வைத்தேன்.

பண்பாடு ௩

கவிதைப் பேழை


# மலைபடுகடாம்

*– பெருங்கௌசிகனார்*

83G4JE

**நுழையும் முன்**

பண்டைத் தமிழர்கள் பண்பில் மட்டுமின்றி, கலைகளிலும் சிறந்து விளங்கினர் . அன்று கூத்தர், பாணர், விறலியர் போன்ற கலைஞாகள் ஊர் ஊராகச் சென்று தம் கலைத்திறன்களை நிகழ்த்திக்காட்டி மக்களை மகிழ்வித்தனர். அவர்களுக்கு மன்னர்களும் வள்ளல்களும் விருந்தோம்பியும் பரிசளித்து போற்றினார். அவ்வகையாக விருந்தோம்பிய தன்மையைக் காட்சிப்படுத்துகிறது தினைச்சோற்று விருந்து.



**பாடல் :**

அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,

அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,

நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

அடி: 158

**பாடலின் பொருள் :**

நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல்.

"பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள்; எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்துகொள்ளுங்கள்; சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்; அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள். அங்குள்ளவர்களிடம்," பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தார்கள்" என்று சொல்லுங்கள். அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்து வந்த உங்களின் துன்பம்தீர இனிய சொற்களைக் கூறுவர். அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| அசைஇ | - இளைப்பாறி | அல் | - இரவு |
| அல்கி | - தங்கி | கடும்பு | - சுற்றம் |
| நரலும் | - ஒலிக்கும் | ஆரி | - அருமை |
| படுகர் | - பள்ளம் | செரு | - போர்க்களம் |
| வயிரியம் | - கூத்தர் | கிழவிர் | - உறவினர் |
| வேவை | - வெந்தது | இறடி | - தினை |
| பொம்மல் | - சோறு | | |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| **அசைஇ, கெழிஇ** | - சொல்லிசை அளபெடை | **இனிய** | - குறிப்புப் பெயரெச்சம் |
| **எய்தி** | - வினையெச்சம் | **பரூஉக்குறை, குரூஉக்கண்** | - இன்னிசை அளபெடை |
| **கேளா** | - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | **பொழிந்த** | - பெயரெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. மலைந்து = மலை +த்(ந்) +த் +உ**

| | |
|---|---|
| **மலை** | - பகுதி |
| **த்** | - சந்தி, |
| **த்-ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்த கால இடைநிலை |
| **உ** | - வினையெச்ச விகுதி |

**2. பொழிந்த = பொழி +த்(ந்) +த் +அ**

| | |
|---|---|
| **பொழி** | - பகுதி, |
| **த்** | - சந்தி |
| **த்-ந்** | - ஆனதுவிகாரம், |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1."சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி " என்னும் அடியில் "பாக்கம்" என்பது சிற்றூர்.

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்.

---

## குறுவினா

1. **"இறடிப் பொம்மல் பெறுகுவீர் " தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக"**

கூத்தரே !தினைச் சோற்றைப் பெறுவீர்கள்.

---

## சிறுவினா

1. **முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவு வகைகள் யாவை?**

**முல்லை நிலத்திலிருந்து கிடைக்கும் உணவு பொருட்கள் :**

தினை, வரகு, சாமை, முதிரை, பால், நெய்

**மருத நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருட்கள் :**

- செந்நெல்லரசி
- வெண்ணெல்லரிசி
- தினைச் சோறு

2. **கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?**

**ஆற்றுப்படுத்துதல் :**

ஆற்றுப்படுத்துதல் என்பதுஒரு கூத்தன் வள்ளலைப் பாடி பரிசு பெற்றுவரும் போது வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்து யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம்.

நீயும் அவ்வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக எனக் கூறுதல்.

**பயணம் மேற்கொள்ளல் :**

பகலில் இளைப்பாறி செல்லுங்கள் .இரவில் சேர்ந்து தங்குங்கள் . எரியும் நெருப்பைப் போல் ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்.சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், அசையும் மூங்கில்களின் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள். அங்கு உள்ளவர்களிடம் பகைமை பொறாமல் போர்செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**இனிய சொல்லில் பேசி உணவு அளித்தல் :**

நீங்கள் உரிமையுடன் நன்னன் ஊரார் வீட்டிற்குள் நுழையுங்கள் . அவர்கள் உங்களுக்கு உறவினர்கள் போலப் பழகி இனிய சொற்களைப் பேசி நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாக அளிப்பர் மேற்கண்டவாறு ஒரு கூத்தன் வழி தேடி வரும் கூத்தனுக்கு ஆற்றுப்படுத்தினான்.

---

## நெடுவினா

1. **ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது . அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

**அன்றைய ஆற்றுப்படுத்துதல் :**

- வாழ்க்கையதைத் தேடி வருபவர்களை பரிசு பெற்று வரும் புலவர்களோ, கலைஞர்களோ பரிசு பெற வழிக்காட்டி ஆற்றுப்படுத்தினர்கள்.
- பாடி பரிசு பெறச் செல்லும் புலவர்களும் கலைஞர்களும் பகலில் இளைப்பறிச் செல்லுங்கள் என்றும் இரவில் சேர்ந்து தங்குங்கள்.
- எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். அசோக மரங்கள் இருக்கும் பாதையில் செல்லுங்கள். ஒரு சிற்றூரை அடையும் இந்தப் பாதை. அங்கு நாங்கள் நன்னனின் கூத்தர் என்று சொல்லுங்கள்.
- உரிமையுடன் அச்சிற்றூரில் உள்ள வீட்டிற்குள் நுழையுங்கள். உறவினர்களைப் போல இனிமையாகப் பேசுவார்கள். நமக்குத் தேவையான உணவைத் தருவார்கள். மகிழ்ச்சியுடன் உண்ணுங்கள் என்று ஆற்றுப்படுத்தி வழி அனுப்பினார்கள்.

**இன்றைய வழிக்காட்டும் நிலை**

- வழிகாட்டல் நிலை பல உள்ளன. அவைகளில் கல்வி ஆளுமை வளர தேர்வில், திருமணத்தில் தனிநபர் பிரச்சினைக்கு ஒய்வு நேரத்தைப் பயனள்ளவையாக அமைய வழிகாட்டல் எனப்பல துறைகள் இன்று இருந்து வருகின்றன.
- கல்வி வழிக்காட்டுதலில் நம் திறன்களுக்கு ஏற்ற வகையில் கல்வி கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.திறமையாகக் கற்று, நமக்குத் தேவையான படிப்பைத் தேர்ந்தெடுக்கவும் துணை புரிகிறது.
- புதிய படிப்புகளை அறியவும், இதற்குத் தேவையான அறிவை வளர்த்துக் கொள்ளவும் துணைபுரிகிறது.
- தொழில் தேர்வில் வழிகாட்டுதலானது வெவ்வேறு பணிகளைப் பெறவும், அப்பணிகளைப் பெற கல்வித்தகுதி, பயிற்சிகள் பணியின் வளர்ச்சி நிலைகள் பற்றிய தகவல்களை அறிய முடிகிறது.
- தனி நபர் வழிகாட்டுதலுக்குத் தேவையான மனவெழுச்சி சமநிலையும், மனநலமும் அமைய வேண்டும் வீண் கவலைகள், சிந்தனைகள், போராட்டங்கள்அனைத்தையும் தவிர்ப்பதற்கு வழிகாட்டுதலாக அமைகிறது. ஆற்றுப்படுத்துதலின் பழைய காலப் பண்பு இன்று வழிக்காட்டலாக ஒரு சேவைத் துறையாக வளர்ந்துள்ளது. நிலம் வாங்கவும், திருமணம் பேசி முடிப்பது, வாகனங்கள் விற்க வாங்க, வீடுகள் விற்க வாங்க, ஒத்திகை, வாடகை போன்ற வழிகாட்டல் முறை இன்று செழித்து வளர்ந்து வருகின்றது.

---

## பொருத்துக

1)

| | | |
|---|---|---|
| 1. கடும்பு | - | (அ) தினை |
| 2. ஆரி | - | (ஆ) கூத்தர் |
| 3. வயிரியம் | - | (இ) அருமை |
| 4. இறடி | - | (ஈ) சுற்றம் |

**[விடை : 1.-ஈ 2- இ 3-ஆ 4 -அ]**

| | | | | |
|---|---|---|---|---|
| 2) | 1. அசைஇ | - | (அ) கன்றின் நெருப்பு | |
| | 2. அல்கி | - | (ஆ) இளைப்பாறி | |
| | 3. கன்றுளரி | - | (இ) ஒலிக்கும் | |
| | 4. நரலும் | - | (ஈ) தங்கி | [விடை : 1-ஆ 2.ஈ 3.அ 4-இ] |
| 3) | 1. படுகர் | - | (அ) சோறு | |
| | 2. வேவை | - | (ஆ) பள்ளம் | |
| | 3. பொம்மல் | - | (இ) வெந்தது | [விடை : -1-ஆ 2-இ 3-அ] |

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. மலைபடுகடாம் -பெயர்க்காரணம் கூறுக**

மலைக்கு யானையை உவமையாகக் கூறி அதன் ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்துள்ளதால் மலைபடுகடாம் எனப் பெயர் பெற்றது.

**2. பண்டையத் தமிழ் கலைஞர்கள் யாவர் ?**

கூத்தர் ,பாணர், விறலியர்

**3. ஆற்றுப்படை என்றால் என்ன?**

- ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்தல்.
- யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகிறோம்.
- நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல்.

**4. குறுநில மன்னன் நன்னனின் ஊரில் கூத்தர்களுக்கு வழங்கப்படும் உணவாக மலைபடுகடாம் கூறுவன யாவை?**

- நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியல்
- தினைச்சோறு

**5. மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்கு கூறப்பட்ட உவமை யாது?**

மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்குக் கூறப்பட்ட உவமை எரியும் நெருப்பு ஆகும்.

**6. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள் மான விறல்வெள் வயிரியம் எனினே" என்று யார் யாரிடம் கூறினார்?**

நன்னனைப் புகழ்ந்து பாடி பரிசில் பெற்ற கூத்தர் பரிசில் பெறப்போகும் கூத்தரிடம் கூறினார்.

**7. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள் மானா விறல்வெள் வயிரினம் எனினே" தொடர் பொருள் விளக்குக.**

தொடர் இடம் பெறும் நூல் : மலைபடுகடாம்

தொடர் பொருள் விளக்கம் : பகைவரைப் பெறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**8.தினை, சோறு ஆகியவற்றிக்கு மலைபடுகடாம் தரும் சொற்கள் யாவை?**

தினை - இறடி; சோறு - பொம்மல்

**9. அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர் இவ்வடியில் கழை என்னும் பொருள் தரும் சொல் எது?**

கழை - மூங்கில்

**10. அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர் இவ்வடியில் ஆரி படுகர் ஆகிய சொற்களின் பொருள் யாது?**

ஆரி - அருமை; படுகர் - பள்ளம்

**11. தினைச்சோறு விருந்து என்றால் என்ன?**

நன்னனிடம் பரிசு பெறச் சென்ற கூத்தர், வழி இடையில் சிற்றூர்களில் தங்கினர். அங்கு வாழ்ந்தோர் அவர்களுக்குத் தினைச்சோறு விருந்து அளித்தனர்.

**12. பரிசில் பெற்ற கூத்தர் மற்றொரு கூத்தரை எவ்வாறு ஆற்றுப்படுத்துவார்?**

நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறை ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கும், நன்னனிடம் செல்வதற்கும் வழிப்படுத்துவர்.

**13. நன்னன் எத்தகைய வெற்றிச் சிறப்புடையவன்?**

பகைவரை எதிர்த்துப் போரிடாமலே, வெற்றி பெறுவதற்குக் காரணமான வலிய முயற்சியையும் மானத்தையும், வெற்றியையும் உடைய சிறப்புக்குரியவன் நன்னன்.

**14. நன்னனின் கூத்தர்கள் கானவர் இல்லத்தில் எத்தகைய விருந்து தரப்படும்?**

நன்னனின் கூத்தர்க்குக் கானவர் இல்லத்தில், நெய்யில் வெந்த மாமிசத்தைப் பொரியலுடன், தினைச்சோறும் கலந்து விருந்து தரப்படும்.

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. மலைப்படுகடாம் நூல் குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| **பாடியவர்** | : | இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் |
| **வேறு பெயர்** | : | கூத்தராற்றுப்படை |
| **மொத்த அடிகள்** | : | 583 அடிகள் |
| **பாட்டுடைத் தலைவன்** | : | நன்னன் என்னும் குறுநில மன்னன் |
| **நூல்களுள் ஒன்று** | : | பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று |
| **உவமை** | : | மலைக்கு யானையை உவமையாக்கி அதன் ஓசையைக் கடா அம் எனச் சிறப்பித்தது. |

**2. பத்துப்பாட்டில் அமைந்த ஆற்றுப்படை நூல்கள் யாவை?**

| **நூல்** | | **ஆசிரியர்** |
|---|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | - | நக்கீரர் |
| 2. பெரும்பாணாற்றுப்படை | - | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| 3. சிறு பாணாற்றுப்படை | - | நல்லூர் நந்தத்தனார் |
| 4. பொருநராற்றுப்படை | - | முடத்தாமக்கண்ணியார் |
| 5. கூத்தராற்றுப்படை | - | பெருங்கௌசிகனார் |

**3. நெய்கண் வேலையொடு குரூ உக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர் இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:**

பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் எனும் பாடல் பொருள் பரிசில் பெற்ற கூத்தன் பெறபோகும் கூத்தனை ஆற்றுப்படுத்தல்.

**விளக்கம்:**

நன்னனின் ஊரில் பரிசு பெற்ற கூத்தன் பரிசு பெறப்போகும் கூத்தனிடம், அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீ என்று ஆற்றுப்படுத்துகின்றான்

**4. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள் மான விறல்வேள் வயிரியம் எனினே" - இத்தொடரின் பொருளை விளக்குக.**

"பகைவரைப் பொறுக்காமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர் நாங்கள்" என்று சொல்வீர்களேயானால், உங்களைக் கானவர்கள் தம் உறவினர்களைப்போல நடத்துவர். நன்னன் தன் குடிகளால் போற்றப்படும் பண்புடையவன் என்பது அறியத்தக்கது. மன்னனின் கூத்தரைத் தம் உறவினர்போல நன்னன்குடிகள் நடத்துவர் என்பதே இவ்வரியின் பொருள்.

## கற்பவை கற்றபின்

**1. உணவு விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.**

**"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"**

குளத்து நீரில் விழுந்து தத்தளித்த எறும்பைத் தக்க சமயத்தில் ஓர் இலையைப் பறித்துப்போட்டு காப்பாற்றிய புறாவின் பண்பு போற்றுதலுக்குரியது. செய்ந்நன்றி மறவாத எறும்பு, ஒருமுறை புறாவை வேடன் அம்பால் எய்ய முற்படும் போது வேடனின் காலைக் கடித்ததால் அம்பு தவறி வேறுபக்கம் சென்றது. புறா காப்பாற்றப்பட்டது.

**விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு**

தம் உறவினர் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றால் ஒரு மாத வரை தங்கக் கூடாது. ஏனென்றால் "விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு" என்ற பழமொழியே கூறுகிறது. விருந்துக்குச் சென்றால் மூன்று நாட்கள் மட்டும் தான் நமக்கு தடபுடலாக பல வகை உணவுகளும் உபசரிப்புகளும் இருக்கும். மூன்று நாட்களுக்குப் பிறகு தேய்பிறை போல உபசரிப்பு குறைந்து கொண்டே போகும். ஆகையால், இதை அறிந்து முன்கூட்டியே நம் வீட்டிற்குப் புறப்படுவதே சிறப்பு. நோய் ஏற்பட்டிருந்தால் மருந்து உண்டவுடன் மூன்று நாள்களில் குணமாக வேண்டும் என்பதே பொருளாகும்.

**2. பத்தியைப் படித்து வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக**

**கம்மங்கூழ்**

பொசுக்கிறது வெயில். ஒரு துளி மழைபட்டால் வறுத்த உளுந்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம். செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் கத்தி சுளகில் புடைக்க அதன் உமி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து, மீண்டும் உரலில் இடிக்க அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புக்கலந்து உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கலையவிட்டுக் கிண்ட, கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டிவைத்து, பின் மோர் விட்டு கரைத்தால் அது கம்மங்கஞ்சி அல்லது கம்மங்கூழ் மோர்மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால் உச்சி தொட்டு உள்ளங்கால் வரை தேகம் குளிர்ந்து போகும். அனல் அடங்கும். உயிர் வரும். கம்பு - கறுப்பு நிறக்கரிசல் மண்ணின் இயற்கைத்தங்கம்

**கம்மங்கூழ் (சமையல் குறிப்பு**

**தேவையான பொருட்கள்**

கம்மம் பயிர், நீர், உப்பு,மோர் மிளகாய் வற்றல், மோர் மிளகாய், சின்ன வெங்காயம், பானை, கரண்டி

**செய்யும் முறை :**

கம்மம் பயிரை சிறிதளவு தண்ணீர் தெளித்து மாவாகும் வரை நன்றாக உரலில் இட்டு இடிக்கவும். பின்பு ஒரு பானையில் தேவையான அளவு நீரை ஊற்றி அடுப்பில் வைக்கவும். நீருடன் கம்மம் மாவுக்கு ஏற்ப கல் உப்பினை நீரில் இட்டு கொதிக்க வைக்க வேண்டும். பின் இடித்த கம்மம் மாவினை நீரில் சிறிது சிறிதாகப் போட்டு கட்டி சேராமல் கரண்டியால் கிண்டிக் கொண்டே இருக்க வேண்டும். ஒரு நல்ல சுவையான கம்மங்கூழ் கிடைக்கும். ஒரு நல்ல சுவையான கம்மங்கூழ் கிடைக்கும் நாம் கம்மங்கூழினை மோர்மிளகாய், சின்ன வெங்காயம், மிளகாய் வற்றல் ஆகியவற்றுடன் குடிக்கின்ற பொழுது உடல் குளிர்ச்சி பெறும் இந்த உணவு நமக்கு தேவா மிர்தம் போன்று இருக்கும்.

விரிவானம்

# பண்பாடு ந

# கோபல்லபுரத்து மக்கள்

– கி.ராஜநாராயணன்

255P7G



## பாடநூல் வினா

**1. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

**முன்னுரை :**

கோபல்லபுரத்து கிராமத்து வெள்ளந்தியான மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல் மனதிற்கு "பசுமரத்தாணி போல" எப்பவும் பசுமையாக இருக்கும் இவர்களது எளிமையான உணவு களைப்பை மறக்கடிக்கச்செய்யும். பகிர்ந்து கொடுக்கும் நேயப்பண்பு ஆகியவற்றைப் பற்றி இக்கதையில் பின்வருமாறு ஆசிரியர் கி. ராஜ நாராயணன் தெளிவாகக் கூறுகிறார்.

**புளியமரத்தடியில் வாலிபன்**

புளியமரத்தடியில்அழுக்கும் ஆடையும் தாடியுடன் சாமியாரைப் போன்று ஒரு வாலிபன் சாய்ந்திருந்நதான். அன்னமய்யா அருகில் சென்று பார்த்த பிறகு தான் பசியால் வாடிப்போய் அந்த வாலிபன் முகத்தில் தெரிந்த கண்களின் தீட்சண்யம் கவனிக்கக் கூடியதாய் இருந்தது.

**வாலிபன் தண்ணீரை கேட்டல் :**

அன்னமய்யாவைப் பார்த்து ஒரு நேரப் புன்னகையும் அந்த வாலிபன் ,குடிக்கத்ததண்ணீா் கிடைக்குமா? எனக் கேட்டான் அதற்கு அன்னமய்யா நீச்சுத் தண்ணீா் அருகில் உள்ளவர்களிடம் இருக்கும் வாங்கிவரவா? ஏனக் கேட்டான் பக்கத்தில் இருந்த ஒரு வேப்பமரத்தின் அடியில் கறுப்புக் கலயத்தில் கரிய மண் தரையில் பாதி புதைக்கப்பட்டு கலயங்களின் வாய் தேங்காய் பருமன் உள்ள கற்களால் மூடப்பட்டியிருந்தது.அனனம்ய்யா ஒரு கலயத்தின் மேலிருந்த கல்லை அகற்றினான்

**ஜீவ ஊற்று பொங்குதல் :**

கலயத்தின் மூடியாய் இருந்த சிரட்டையில் காணத்துவையிலும் ஊறுகாயும் இருந்தன .மற்றொரு சிரட்டையில் மோர்மிளகாயும் இருந்தது . ஒரு சிரட்டையில் கஞ்சியின் நீத்துப்பாகத்தை ஊற்றிக் கொடுத்தான் . வாலிபனும் மடக்கு மடக்காய் குடிக்கும் பொழுது அவனிடத்தில் ஜீவ பொங்கி நிறைந்து வந்தது.

**தாய்மை உணர்வு :**

நீத்துக் தந்த தண்ணீரை குடிக்க வாலிபன் வேப்பமர நிழலைச் சொர்க்கமாய் நினைத்து துாங்கினார். வாலிபகுக்கு ஏற்பட்ட நிறைவை விட அன்னமய்யாவிற்கு தாய்மை உணர்வு மேலிட்டது. மார்பில் பால் குடித்துக்

கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்து அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் போலவே வாலிபனை பிரியத்தோடு பார்த்தான் அன்னமய்யா.

**முடிவுரை :**

**"மனமிருந்தால் மார்க்கம் உண்டு"**

**மனித நேயமே உயர்வான பண்பு"**

தாய்மை உள்ளம் கொண்ட அன்னமய்யாவிடன் மயக்கம் தெளிந்து எழுந்த வாலிபன் "உன் பெயர் என்ன? என்று கேட்டான் . அதற்கு தன் பெயரைக்கூ றினேன் ."எனக்கு இன்று இடும் அன்னம் தான்" என் வாழ்வுக்கு மீண்டும்உயிர் கொடுத்தது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு உன் பொருளுக்கு ஏற்ப அன்னமிட்டு மனித நேயம் காத்து வாழ்வாயாக என வாழ்த்தினான்.

---

## கற்பவை கற்றபின்

1. **பசித்தவனுக்கு உணவிடுதல் என்ற அறச் செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டுப் பேசுக.**

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற புகழ்மொழிக்கும் ஏற்ப வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும் நீடிய பிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தோரைக் கண்டு வருந்திய வள்ளலார் வடலூரில் சத்திய தரும சாலை நிறுவி சாதிமத வேறுபாடின்றிப் பசித் தோர்கெல்லாம் உணவுஅளித்தார் . அது இன்று வரையும் நடைமுறையில் உள்ளது. இது அறச் செயலாக அமைகிறது.

- "சாவா மருந்தெனின் விருந்தோடு உண்" என்பதற்கு ஏற்ப விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகும் .தமிழர்கள் விருந்து அளிப்பதனையே தன் பெருமையாகக் கருதி உணவளித்தனர் .விருந்தினருக்கு உணவிடுதல் நாச்சுவைக்காகவும் விரும்தோம்பல் காரணமாகவும் உணவளிக்கப்படுகிறது. விருந்தோம்பல் பண்பு பற்றி பல்வேறு இலக்கியங்களும், புலவர்களும் எடுத்துக் கூறுகிறார்கள்.

**2. உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வை கதையாக்குக?**

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும் போது, விருந்தினர்வருகை அவர்களைஅன்பான கணவன் மனைவியராக மாற்றி விடும் .அம்மாவின் கெடுபிடியும்அப்பாவின் கீழ்ப்படிதலும்ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வர மாட்டார்களா என்று இருக்கும்.

**விருந்தினர் தினம் என்பது எப்படி விடியும் தெரியுமா**

காலையிலிருந்தே வீட்டுக்குள்ளிலிருந்து வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்து செல்வாள் அம்மா. திண்ணையில் பேப்பர் பார்த்துக் கொண்டியிருக்கும் அப்பா கேட்பார்." என்ன விஷயம் இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போறாங்களா என்ன? ஏங்க --- காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப் போறங்க பாருங்க" அடடே, ஆமாம் காக்கா கத்துது யாரு வரப் போறா? இது பலாப்பழ சீசன் ஆச்சே' உன் தம்பிதான் வருவான். பலாப்பழத்தைத் தூக்கிக்கிட்டு" நாங்கள் ஓடிப்போய் தெருவில் பார்ப்போம். அப்பா சொன்னதும் சரி, காக்கா கத்தியதும் சரி தூரத்தில் தெரு முனையில் அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருப்பார்.அம்மாவுக்கு காக்கை மொழி தெரியுமா!

அதிகாலைப் பொழுதில் கீழ்த்திசையில் தன் கதிர்களை கதிரவன் அழகாக வீசிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் பறவைகள் ஒலி எழுப்பின. வீட்டின் முற்றத்தில் சாண நீர் தெளித்து கோலமிட்டனர் வீட்டுப் பெண்கள். அந்நேரத்தில் ஒருவர் வீட்டின் கூரையின் மீது ஒரு காகம் கரைந்து வீட்டில் உள்ள இல்லத்தரசி விருந்துக்கான உணவினை தயார் செய்ய ஆரம்பித்தனர். இமையில் தன் கணவனுடன் மனவருத்தம் ஏற்பட்டு

சண்டை வேறு ,குழந்தைகளின் மனதில் விருந்தினர்வந்தால் பெற்றோர் சண்டையை விட்டு விட்டு மகிழ்வார் என்று கருதிக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று தாத்தா மாம்பழங்களுடன் வருகை தர அம்மா உடனே மாமா வாங்க வாங்க என்று அழைத்தர். அப்பாவைப் பார்த்து தாத்தா ஏண்டா? "முகத்தை உம்முனு வைத்திருக்கிறாய். என்று கேட்டார்." உங்க மருமக சமையலைச் சாப்பிட்டு நாக்கே செத்துப் போச்சுப்பா .மதிய உணவு விடுதியில் போய் சாப்பிட்டார். வாங்கப்பா எனக் கூறினான். உடனே அவங்க அப்பா உன் அம்மா சமையல் சரியில்லாமல்தான். உன் வீட்டில் சாப்பிட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தேன். என்னடா நீ இப்படிக் கூப்பிடுகிறாய் என்று கூறினார். உடனே தாத்தா அப்பாவிடம் எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் சரியாக வராது அதையும் பொருட்படுத்தவும் கூடாது என்றார். தாத்தா என் அம்மாவிடம் மதிய உணவு தயார் செய் மருமகளே! அனைவரும் உணவு அருந்துவோம் என் மகனுக்கு நான் அறிவுரை கூறுகிறேன். இருவரும் சண்டை இல்லாமல் இருந்தாலே குழந்தைகளும் ,குடும்ப மகிழ்வுடன் இருக்கும் என்று கூறினார். மதிய உணவு உண்டார். எங்களுக்கு முத்தமிட்டு டாட்டா காட்டிவிட்டுச் சென்றார்.

கற்கண்டு

பண்பாடு ௩

# தொகாநிலைத் தொடர்கள்

AM3GP2 B2LBQD

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. அறிஞருக்கு நூல் அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தல் காரணமாக அமைவது.**

(அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்

[**விடை : வேற்றுமை உருபு**]

## குறுவினா

**1. "எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள் " என அடுக்குத் தொடரானது . அப்படி என்றாள் "சிரித்துப் பேசினார்" என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்.**

சிரித்து சிரித்துப் பேசினாாள் என்று உவகை மகிழ்சியின் காரணமாக அடுக்குத் தொடராகும்

**2. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார் ?**

ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

கவிஞர், சென்றார், யார்? (பெயர், வினை, வினா பயனிலைகள்)

## சிறுவினா

"கண்ணே கண்ணுறங்கு" மாம்பூவே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு பாடினேன் தாலாட்டு
மாமழை பெய்கையிலே ஆடி ஆடி ஓய்ந்துறங்கு

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

கண்ணே கண்ணுறங்கு - விளித்தொடர்
காலையில் நீரியெழும்பு - 5ஆம் வேற்றுமை தொகா நிலைத் தொடர்
மாமழை பெய்கையில் - உரிச்சொல் தொடர்
மாம்பூவே கண்ணுறங்கு - விளித்தொடர்
பாடினேன் தாலாட்டு - வினைமுற்று தொடர்
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - அடுக்குத் தொடர்

## பொருத்துக

1. எழுவாய்த்தொடர் - அ) எழுதிய நூல்
2. விளித்தொடர் - ஆ) படித்து மகிழ்ந்தன
3. வினைமுற்றுத்தொடர் - இ) சாலப் பசித்தது.
4. பெயரெச்சத் தொடர் - ஈ) ஓடு ஓடு
5. வினையெச்சத்தொடர் - உ) தமிழுக்குத் தொண்டு செய்
6. இடைச்சொல்தொடர் - ஊ) தமிழ் வாழ்க
7. உரிச்சொல் தொடர் - எ) முடிந்தது கதை
8. அடுக்குத் தொடர் - ஏ) கந்தா வா
9. வேற்றுமைத் தொகா நிலைத்தொடர் - ஐ) மற்றொன்று

**[விடை : 1) ஊ 2) ஏ 3) எ 4) அ 5) ஆ 6) ஐ 7) இ 8) ஈ 9) உ]**

ஆ) 1.பாடத்தைப்படித்தவர் - அ) 5 ஆம் வேற்றுமைத் தொடர்
2. இசையால் ஈர்த்தார் - ஆ) 4 ஆம் வேற்றுமைத் தொடர்
3. கடல் விழிக்குப் பரிசு - இ) 3 ஆம் வேற்றுமைத் தொடர்
4. முருகனின் சட்டை - ஈ) 2 ஆம் வேற்றுமைத் தொடர் **[விடை 1-ஈ 2-இ 3-ஆ 4-அ]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. தொகா நிலைத்தொடர் என்றால் என்ன?**

பெயர்சொல்லோடு பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் சேர்ந்த இரு சொற்களுக்கு இடையில் உருபுகளும் காலமும் வெளிப்படையாக அமைந்து வருவது தொகாநிலைத்தொடராகும்.

**(எ.கா) கட்டுரை படித்தாள்**

**2. தொகா நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகாநிலைத்தொடர்கள் ஒன்பது வகைப்படும்

அவை, 1. எழுவாய்த்தொடர் 2. விளித்தொடர் 3. வினைமுற்றுத்தொடர் 4. பெயரெச்சத்தொடர் 7. இடைச்சொல் தொடர் 8. உரிச்சொல் தொடர் 9. அடுக்குத்தொடர்.

**3. எழுவாய்த் தொடர் என்றால் என்ன ? சான்று தருக**

எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகியன பயனிலைகள் தொடர்வது எழுவாய்த் தொடராகும்.

**சான்று : இனியன் கவிஞர்**

**4. விளித் தொடர் என்றால் என்ன? சான்று தருக**

விளியுடன் வினை புரிந்து தொடர்வது விளித்தொடராகும்.

**சான்று :** நண்பா எழுது,!

**5. வினைமுற்றுத் தொடர் என்றால் என்ன? சான்று தருக**

வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத் தொடராகும்.

**சான்று :** பாடினாள் கண்ணகி

**6. பெயரெச்சத் தொடர் என்றால் என்ன? சான்று தருக**

முற்றுப்பெறாத வினை பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சத்தொடராகும்

**சான்று :** கேட்டபாடல்

**7. வினையெச்சத் தொடர் என்றால் என்ன, சான்று தருக**

முற்றுப் பெறாத வினை வினைச்சொல்கைகொண்டு முடிவது வினையெச்சத் தொடராகும்.

**சான்று :** பாடி மகிழ்ந்தனர்

**8. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் என்றால் என்ன ?**

வேற்றுமை உருபுகள் வெளிப்டையாக அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகா நிலைத் தொடராகும்

**சான்று : அன்பால் கட்டினார்**

**9. இடைச்சொல் தொடர் என்றால் என்ன ?**

இடைச் சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது இடைச்சொல் தொடராகும்

**சான்று : மற்றொன்று**

**10. உரிச்சொல் என்றால் என்ன?**

உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது உரிச்சொல் தொடராகும்

**சான்று : சாலத் சிறந்தது**

**11. அடுக்குத் தொடர் என்றால் என்ன?**

ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத் தொடராகும்

**சான்று : வருக! வருக! வருக**

**12. கூட்டு நிலைப் பெயரெச்சம் என்றால் என்ன?**

ஒன்றிற்கு மேற்பட்ட வினையெச்சங்கள் சேர்ந்து பெயரைக் கொண்டு முடிவது கூட்டு நிலை பெயரெச்சம் எனப்படும்.

**13. கூட்டு நிலைப் பெயரெச்சம் எவ்வாறு உருவாககிறது?**

வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை 'செய்' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பது மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் எனப்படும்.

**சான்று : கேட்கவேண்டிய பாடல்**

**14. இளங்கோ படித்தான் - இது எவ்வாறு எழுவாய்த் தொடராகும்?**

இளங்கோ - எழுவாய்

படித்தான் - பயனிலை

எழுவாய் முதலிலும் அதைத் தொடர்ந்து பயனிலையும் நின்று இடையில் வேறு சொற்கள் எவையும் மறையாது வருமாயின் அதனை எழுவாய்த் தொடர் என்போம். இத்தொடரிலும் அவ்வாறே வந்துள்ளது.

**15. தம்பி! வா - எவ்வாறு விளித்தொடராகும்?**

தம்பி என்பது விளி . விளியைத் தொடர்ந்து வா என்ற சொல் வந்து நின்று பொருள் தருகிறது. இவ்வாறு விளியுடன் வினை தொடர்வது விளித்தொடராகும்.

**16. படித்த பெண் - எவ்வாறு பெயரெச்சத் தொடராகும்?**

படித்த என்ற எச்சவினை பெண் என்னும் பெயரைக் கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு முற்றுப் பெறாத வினைபெயர்ச்சொல்லைத் தொடர்வது பெயரெச்சத் தொடர் எனப்படும்.

**17. உரிச்சொல் தொடரை விளக்குக.**

சாலப் பேசினான்

இதில் சால என்பது உரிச்சொல். உரிச்சொல்லைத் தொடர்ந்து பேசினான் என்ற சொல் நின்று பொருள் தருகிறது. இவ்வாறு உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும்.

## சொல்லத் தக்க செய்தி

### கற்பவை கற்றபின்

**1. இன்று நீங்கள் படித்த செய்தித்தாள்களில் உள்ள தொகா நிலைத் தொடர்களைத் தொகுத்து எழுதுக?**

ஐதராபாத்தில் நடைபெற்ற பிரிமியர் தொடரின் பரபரப்பான பைனலில் கடைசி பந்தில் சென்னை அணி ஒரு ரன் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

முதலில் விளையாடி மும்பை அணி 149 ரன்களை எடுத்து ஆட்டம் இழந்தது. பிராவோ வீசிய கடைசி ஒவரில் அடுத்து அடுத்து பவுண்டரிகளை அடித்தார்.

போலார்டு அடுத்து விளையாடிய சென்னை அணி வீரார்கள் நிதானமாக ஆடினார்கள் .ராகுல் சாகர் சுழலில் ரெய்னா சிக்கினார். சீரான இடைவெளியில் மேன்மேலும்அவுட்டானார்கள் கடைசி ஒவரில் மலிங்கா வீசிய பந்தில் ஒடிய வாட்சன் ரன் அவுட்டானார் .இறுதியில் மும்பை அணி ஒரு ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தியது.

கடைசி பந்து - வினையெச்சத்தொடர்
தோல்வியைத் தழுவியது - வேற்றுமை தொகா நிலைத்தொடர்
விளையாடிய மும்பை - பெயரெச்சத்தொடர்
அடுத்து அடுத்து, மேன் மேலும் - அடுக்குத்தொடர்
ரெய்னா சிக்கினார், அடித்தார் - எழுவாய்த் தொடர்

**2. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

**மாடியிலிருந்து இறங்கினார் முகமது . அவர் பாடகர் பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்கு பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்குகாக வைத்திருப்பார்.**

மாடியிலிருந்து - இடைச்சொல் தொடர்
இறங்கினார் முகமது - வினைமுற்றுத் தொடர்
அவர் பாடகர் - எழுவாய்த் தொடர்
பாடல்களைப் பாடுவதும் - வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்
பாடுவதும் கேட்பதும் - உம் இடைச்சொல் தொடர்
அவருக்கு பொழுது போக்கு - வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
அவரது அறையில் - வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
கேட்ட பாடல், கேட்காத பாடல் - பெயரெச்சத் தொடர்கள்
குறுந்தகடுகளை அடுக்கு - வேற்றுமை தொகாநிலைத் தொடர்
அடுக்கு அடுக்காக - அடுக்குத்தொடர்

**3. அடிக்கோடிட்ட வண்ணச் சொற்களில் தொடர்வகைகளை எழுதுக .**

- பழகப் பழகப் பாலும் புளிக்கும் - அடுக்குத்தொடர்
- வந்தார் அண்ணன் - வினைமுற்றுத்தொடர்
- வடித்த கஞ்சியில் சீலையை அலசினேன் - பெயரெச்சத் தொடர்
- அரிய கவிதைகளின் தொகுப்பு இது - வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
- மேடையில் நன்றாகப்பேசினான் - வினையெச்சத் தொடர்

## மொழியை ஆள்வோம்

### படித்துச் சுவைக்க

**சர்க்கரைப் பொங்கல்**

இளஞ்சிவப்பாக வறுத்த, பாதி உடைத்த பருப்பும் பச்சை அரிசியும் பானையில் கொப்புளமிட்டுக் கொதிக்க, மென் துணியில் வடிகட்டிய வெல்லக் கரைசல் நார்ப்பாகு பதத்தில் வெந்த பொங்கலுடன் கலக்கின்றது. உலர்ந்த திராட்சைகள் பசு நெய்யில் தங்கமென ஊதி உருண்டு வர, பிறை போன்ற முந்திரிப் பருப்புகள் அதனுள் சேர்த்து மின்னுகின்றன. காற்றெங்கும் பால் கலந்த இனிப்பின் வாசம். இனி, இடித்த ஏலக்காய் தூவ, எல்லாமும் பொங்கலுடன் இணைந்து குழைய, இந்தச் சர்க்கரைப் பொங்கலின் தித்திப்பு திகட்டாது. நறுக்கிய ஈர வாழையிலையில் ஒரு அகப்பை சுடும் பொங்கலிட, அது விழுந்தெழுப்பும் மணம், அறுவடையின் மகிழ்வு அது! சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை (திருக்குறள் 1031).

### மொழிபெயர்க்க

Respected Ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam Literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamil who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, SrilanKa, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very is old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

மரியாதைக்குரிய என் சகோதர சகோதரிகளே என்னுடைய பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழர் நாகரித்தைப் பற்றிய ஒரு சில வார்ததைகள் உங்கள் முன் பேச விழைகிறேன். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு தமிழரின் நாகரிகமும் பண்பாடும் சிறந்து விளங்கியதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மொழிக்கும் இலக்கணம் வகுத்த தமிழர்கள் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர் .தமிழர்களின் நாகரிகம் இந்தியா, ஸ்ரீலங்கம் இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தில் வேரூன்றி உள்ளது .நம் நாகரிகம் பழமையானதாக இருந்தாலும் அது சீரான முறையில் மேம்படுத்தி உள்ளது. நாம்நம் கலாச்சராத்தைப் பற்றி பெருமிதம் கொள்ள வேண்டும். அனைவருக்கும் இனிய நன்றி.

## பழமொழிகளை நிறைவு செய்க

1. உப்பில்லாப் -------------
2. ஒரு பானை ----------
3. உப்பிட்டவரை --------
4. விருந்தும்--------------
5. அளவுக்கும் -----------

**விடை :**

1. உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே**
2. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
3. உப்பிட்டவரை உள்ளவும் நினை
4. விருந்தும் மருந்தும் **மூன்று நாட்கள்**
5. அளவுக்கு மீறினால் **அமிர்தமும் நஞ்சு**

## பத்தியைப் படித்து கருத்தைச் சுருக்கி எழுது

**பழையசோறு**

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து ,நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து காய்ந்து குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகு முன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும்; விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம் போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்த்துகொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல் நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம் . பழைய சோறு - அது கிராமத்து உன்னதம்

"மைக்கடல் முத்துக்கு ஈடாய்மிக்க நெல்முத்து ---- முக்கூடற்பள்ளு"

**விடை :**

அறுவடை செய்த நெல்லை நீராவியில் அவித்து காயவைத்து குத்தி எடுத்த புழுங்கல் அரிசியை சோறாக்கி ,அதனை உச்சி வெயிலுக்கு ஏற்ற உணவாக இரவு நேரத்தில் நீரில் ஊறவைத்து கிடைத்த பழைய சோற்றுடன் சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், வடுமாங்காய் ,உப்பு நாரத்தங்காய் மற்றும் சுண்ட வைத்தகுழம்பு இவற்றில் ஒன்றைக் கூட்டாக வைத்து சாப்பிடுவது கிராமத்து உன்னதம்.

## கதையாக்குக

"மனித வாழ்வில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்.புதுப்புதுச் செய்திகள் கிட்டும். கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர் பார்த்திருப்பவராக ,யாருமற்றவராக --- இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக."

ஒரு நாளையில் நான் காலையில் ஒரு பூங்காவில் நடைபயிற்சி மேற்கொண்டிருந்தேன். அப்போது ஒரு புதரில் வயதானவர் பசியால் வாடி வதங்கிக் கிடந்தார். உடனே அருகில் சென்று அவரை விசாரித்தேன். தனக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர். நல்ல பணியில் உள்ளனர். இருந்தும் என்னைக் கவனிக்கவில்லை என்று கூறினார்.

அவரை அழைத்துச் சென்று ஓர் இடத்தில் அமரச் செய்து விட்டு வயதானவர்க்குத் தேவையான உணவைக் கொண்டு வந்து கொடுத்தேன்.

அவ்வுணவினைச் சிறிது சிறிதாகச் சாப்பிட்டார்.பின் அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்து முதியவர் காப்பகத்தில் சேர்த்து விட்டேன். அவருக்கு ஒவ்வொருமாதமும் தேவையான பொருள்களைக் கொடுத்து இன்றும் உதவி செய்து வருகிறேன். அந்த முதியவர் மனதில் ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி தென்பட்டது.

## கடிதம் எழுதுக

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**அனுப்புநர்**

திரு .இரா.ஆறுமுகம்
60,சுண்ணாம்புக்காரத்தெரு,
அண்ணா நகர்,
திருவண்ணாமலை.

**பெறுநர்**

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு அலுவலகம்,
திருவண்ணாமலை.

**மதிப்பிற்குரிய ஐயா**

**பொருள் :** தரமற்ற உணவை கூடுதல் விலைக்கு விற்பது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுதல் சார்பு.

வணக்கம். நான் சென்ற வாரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அணிதா உணவகத்திற்கு மதிய உணவு உண்ணச் சென்றேன். முட்டைப் பிரியாணி ரூ.100 என தகவல் பலகையில் எழுதி வைத்திருந்தனர். நானும் சாப்பிட்டு விட்டு உணவுத் தொகையை காசாளரிடம் செலுத்தும் போது முட்டைப்பிரியாணி ரூ.125 எனக் கூறினார் . நான் எதிர்ப்புத் தெரிவித்து சண்டையிட்ட பின் உரிய தொகையை வாங்கிக் கொண்டார்.

மேலும், உணவு உண்ட சில மணி நேரத்திலேயே வயிற்று வலியும் வாந்தியும் ஏற்பட்டது. பின் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தேன்.

எனவே, உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும், விற்ற உணவு விடுதியில் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இடம் : திருவண்ணாமலை,
29. 03. 2020.

**இப்படிக்கு,**
தங்கள் உண்மையுள்ள,
இரா.ஆறுமுகம்,

**உறைமேல் முகவரி**

**பெறுநர் :**

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு அலுவலகம்,
திருவண்ணாமலை

## நயம் பாராட்டுக

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் -குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்"

- காளமேகப் புலவர்.

**திரண்ட கருத்து**

கடல் சூழ்ந்த ஊர் நாகப்பட்டினம். அங்கு இருக்கும் காத்தான் சத்திரத்தில் பொழுது இறங்கும் போது தான் அரிசி வரும். அதனைத் தீட்டி உலையில் போடும்போது ஊரே அடங்கிப் போயிருக்கும். ஓர் அகப்பைச் சோறு இலையில் போடும் போது விடிவெள்ளி முளைத்து விடும்.

**தொடைநயம்**

செய்யுளில் எதுகை ,மோனை, முரண் , இயைபு ஆகிய உறுப்புகளால் தொடுக்கப்படுவது தொடையாகும்.

**மோனை நயம் :** செய்யுளில் சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வந்துள்ளதால் மோனை நயம் இடம் பெற்றுள்ளது.

**எ.கா :** கத்துக்கடல் - காத்தான்
அத்தமிக்கும் - அரிசி வரும்
உலையிலிட - ஊடங்கும்

**எதுகை நயம் :** செய்யுளில் அடிதோறும் ,சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளதால் எதுகை நயம் இடம் பெற்றுள்ளது.

**(எ.கா)**

கத்துக்கடல் - சத்திரத்தில்
அத்தமிக்கும் - குத்தி
} - அடி எதுகை

கத்து கடல் - உலையிலிட
அத்தமிக்கும் - இலையிலிட
} - அடி எதுகை

**அணிநயம் :**

செய்யுளில் பொருள் ,இருபொருள்பட வந்துள்ளதால் இரட்டுற மொழிதல் அணி இடம் பெற்றுள்ளது. இச் செய்யுள் "நேரிசை வெண்பா " வகையைச் சார்ந்தாகும்.

**தலைப்பு :** இச்செய்யுளுக்கு ஏற்ற தலைப்பு "சத்திரம்

## மொழியோடு விளையாடு

**விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடி**

| | | | |
|---|---|---|---|
| இறகு | - (பறவையிடம் இருப்பது) | அக்கா | - (தங்கைக்கு மூத்தவள்) |
| குருதி | - (சிவப்பு நிறத்தில் இருக்கும்) | மதி | - (அறிவின் மறுபெயர்) |
| வாள் | - (மன்னனிடம் இருப்பது) | படகு | - (நீரில் செல்வது) |

## இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக

| | |
|---|---|
| சிலை - சீலை | - சிலையைத் திரைச்சீலையால் மூடியவை. |
| தொடு - தோடு | - மதி பூக்களைத் தொடுத்து அணித்து கொண்டு ,தோடுவையும் அணிந்து கொண்டாள் |
| மடு - மாடு | - மடுவில் மாடுகள் தண்ணீர் குடித்தன |
| மலை - மாலை | - மலை மீது ஏறி மாலையில் விளையாடினோம். |
| வளி - வாளி | - வளிமண்டலத்தின் மேலடுக்கு சுழற்சியால் பெருமழை பெய்தவுடன் வாளியில் தண்ணீர் பிடித்தேன். |
| விடு - வீடு | - மணி விடுதலை பெற்று வீடு திரும்பினேன் |

## அகராதியில் கண்டு பொருள் எழுதுக

| | | | |
|---|---|---|---|
| ஊண் | - உணவு, இரை | ஊன் | - மாமிசம், உடல் |
| திணை | - ஒழுக்கம் | தினை | - தானிய வகை |
| அண்ணம் | - மேல்வாய், உள்நாக்கு | அன்னம் | - பறவை, அரிசி (சோறு) |
| வெல்லம் | - கருப்பஞ்சாற்றின் கட்டி | வெள்ளம் | - நீர்ப்பெருக்கு |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



கிராமத்தின் வறுமை - ஒரு
நாட்டின் வறுமை
பகுத்துண்டு வாழும் பண்பு
அனைத்து உயிர்களுக்கும் உண்டு
வறுமையிலும் மனித நேயம்
அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?
மனித நேயத்துடனும் அன்புடனும்
வாழ்வோம் என்றும்

## செயல் திட்டம்

உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வு தொடர்களையும் திரட்டி அகர வரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக:

- அளவுக்கு மிஞ்சினால் அமுதம் நஞ்சு
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை
- உப்பில்லா பண்டம் குப்பயையிலே
- ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்
- கொட்டிய பாலை நினைத்து குமுறி அழாதே
- நொறுங்கத் தின்றால் நூறு வயது
- பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்

- பணம் பந்தியிலே குணம் குப்பையிலே
- பழகப் பழகப் பாலும் புளிக்கும்
- மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
- விருந்தும் மருந்தும் மூன்று நாள்
- விளையும் பயிர் முளையிலே தெரியும்
- வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் திணை அறுப்பான்

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| செவ்விலக்கியம் | - classical literature |
| பக்தி இலக்கியம் | - Devotional literature |
| வட்டார இலக்கியம் | - Regional literature |
| நவீன இலக்கியம் | - Modern literature |
| காப்பிய இலக்கியம் | - Epic literature |
| பண்டைய இலக்கியம் | - Ancient literature |
| நாட்டுப்புற இலக்கியம் | - Folk literature |

## நிற்க அதற்குத் தக

| | |
|---|---|
| "தம்பி உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?" | - "கேரட்" |
| "பிடிச்ச பழம்?" | - "ஆப்பிள்" |
| பிடிச்ச காலை உணவு?" | - "நுடுல்ஸ்" |
| "மத்தியானத்துக்கு " | - "ப்ரைடு ரைஸ்" |
| : ராத்திரி -- ?" | - "பீட்ஸா அல்லது பாஸ்தா" |

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல". சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும். கத்திரிக்காய் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில்'' ஆம் காணாமல் போய்விடும் !உங்கள் குழந்தைகள்" ஆடு மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்!

மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

இயற்கையோடு இயைந்த உணவுப் பழக்கத்தை நாம் கைவிட்டதால் அனைத்துவகை நோயும் நம்மை ஆள்கின்றன. எள்ளுருண்டை, கடலை உருண்டை, பதநீர், தானிய வகை உணவுகளை கைவிட்டதால் பலவித நோய்கட்கு ஆடபட்டுள்ளோம். ஆகையால், இவற்றைக் கைவிடாமல் நாம் பயன்படுத்தி வந்தால் நலமாக வாழலாம். தற்போது உண்ணும் இட்டிலி, சாம்பார் சட்டினி எல்லாம் இனி காணமால் போய்விடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் உள்ளது .இது மட்டுமில்லாமல் பிற்காலத்தில் உள்ள சந்ததியினர் இதையுமா உண்பார்கள் என்று வியப்புடன் கேட்பார்கள் தமிழர்களாகிய நாம் பாரம்பரிய உணவுளை உண்டு வாழ்வில் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கு ஏற்ப நலமாய் வாழ்வோம்.

பண்பாடு ௩

வாழ்வியல் இலக்கியம்

# திருக்குறள்

BH56RP

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| ஓம்ப | - பாதுகாகக் | ஏமரா | - பாதுகாப்பு இல்லாத |
| பண் | - பாடல் | ஒழுகல் | - நடத்தல் |
| எய்தா | - அடையாத | வெகுளி | - சினம் |
| கருமம் | - கடமை | நாமம் | - பெயர் |
| காமம் | - ஆசை | தமரா | - உறவினராக |
| திரு | - செல்வம் | நாடி | - ஆராய்ந்து |
| மயக்கம் | - அறியாமை | கண்ணோட்டம் | - இரக்கம் |
| உப்பக்கம் | - வெற்றி | அசாவாமை | - தளர்ச்சி இல்லாமை |
| பேணி | - போற்றி | இன்மை | - வறுமை |
| எய்துவர் | - சிறப்புடையவர் | உஞற்றி | - வெற்றி |

## இலக்கணக் குறிப்பு தருக

| | |
|---|---|
| **ஒழுக்கம், கொளல்** | - தொழிற்பெயர் |
| **உயிரினும்** | - உயர்வு சிறப்பும்மை |
| **படும்** | - செய்யும் என்னும்வாய்பாட்டு வினைமுற்று |
| **எய்துவர்** | - படர்க்கை பலர் பால் வினைமுற்று |
| **எய்தா, ஏமரா** | - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| **கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம்** | - இன்னிசை அளபெடை |

## பகுபத உறுப்பிலக்கணம்

**(அ) எய்துவர் - எய்து +வ் +அர்**

| | |
|---|---|
| **ஏய்து** | - பகுதி |
| **"வ்"** | - எதிர்கால இடைநிலை |
| **அர்** | - பலர்பால் வினைமுற்று விகுதி |

**(ஆ)நின்றான் = நில் (ன்) +ற் +ஆன்**

| | |
|---|---|
| **நில்** | - பகுதி |
| **"ல்"** | - ன் ஆனது விகாரம் |
| **ற்** | - இறந்தகால இடைநிலை |
| **ஆன்** | -ஆண்பால் வினைமுற்று விகுதி |

**(இ) அறிந்து = அறி +த்(ந்) +த் +உ**

| | |
|---|---|
| **ஆறி** | - பகுதி, |
| **த்** | - சந்தி |
| **"த்"ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **உ** | - வினையெச்ச விகுதி |

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. நச்சப்படாதவன் ”செல்வம் -இத்தொடரில் வண்ணம் இட்ட சொல்லுக்குப் பொருள் தருக**

நச்சப்படாதவன்-பிறருக்கு உதவி செய்யாதவன். ஆகையில், எவராலும் விரும்பப்படாதவர்.

**2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.**

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் - இன்னிசை அளபெடை

**3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணி காக்கப்படும் | உயிரினும் ஓம்பப் படும் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

**4. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**

(அ) கூவிளம் - தேமா - மலர் (ஆ) கூவிளம் - புளிமா - நாள்
(இ) தேமா - புளிமா - காசு (ஈ)புளிமா - தேமா - பிறப்பு **[விடை : கூவிளம் - தேமா - மலர்]**

## சிறுவினா

**1. வேலொடு நின்றான் இடு என்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு”**
**- இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக**

**அணி சுட்டல் :**

இக்குறளில் உவமையணி இடம் பெற்றுள்ளது.

**இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் (பொருள்) ஒரு வாக்கியமாகவும் அமைந்து இடையில் உவம உருபு வெளிப்பட்டு வருவது உவமையணி எனப்படும்.

**விளக்கம் :**

வழிப்பறி செய்பவன் வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வான். அதுபோல, ஓர் அரசன் தன் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு அதிகமான வரியை விதிக்கின்றான்.

**பொருத்தம்**

உவமை - வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்தல்

உவமேயம் - ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்

உவம உருபு - போல்

இவ்வாறு உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து, உவம உருபு வெளிப்பட்டு வந்துள்ளதால் இது உவமையணியாகும்.

**2. கவிதையைத் தொடர்க**

| | |
|---|---|
|  | தண்ணீர் நிறைந்த குளம்<br>தவித்தபடி வெளிநீட்டும் கை<br>கரையில் கைபேசி படமெடுத்தபடி<br>இதைப் பார்த்து என் நெஞ்சும் பதறுதடி<br>இரக்கம் இல்லா மனிதர்கள்<br>உண்மை அறியாத மனிதர்கள்<br>தங்களுக்கும் இந்நிலை வரும் என அறியாமல்<br>முகநூலில் போட அலைகிறதே!<br>மனிதநேயம் செத்துப் போச்சே |

**திருக்குறள் பற்றிய கவிதை**

உரை(றை) ஊற்றி ஊற்றிப்
பார்த்தாலும்
புளிக்காத பால்!
தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்
- அறிவுமதி

## பொருத்துக

1. ஒழுக்கமுடைமை - அ) 56 ஆவது அதிகாரம்
2. மெய் உணர்தல் - ஆ) 101 ஆவது அதிகாரம்
3. பெரியாரைத் துணைகோடல் - இ) 36 ஆவது அதிகாரம்
4. கொடுங்கோண்மை - ஈ) 62 ஆவது அதிகாரம்
5. கண்ணோட்டம் - உ) 14 ஆவது அதிகாரம்
6. ஆள் வினை உடைமை - ஊ) 45 ஆவது அதிகாரம்
7. நன்றி இல் செல்வம் - எ) 58 ஆவது அதிகாரம்

**[விடை : 1-உ 2-இ 3-ஊ 4-அ 5-எ 6-ஈ 7-ஆ]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**

உயிரினும் ஓம்பப் படுவது ஒழுக்கம் ஆகும். ஏனெனில், ஒழுக்கமானது அனைத்துச் சிறப்புகளையும் தருகிறது.

**2. ஒழுக்கத்தினால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?**

ஒழுக்கத்தினால் எய்துவது மேன்மை

இழுக்கத்தினால் எய்துவதுஅடையக்கூடாத பழிகள்

**3. பலகற்றும் கல்லாதவராக கருதப்படுபவர் யார்?**

பலகற்றும் கல்லாதவராக கருதப்படுபவர்உலகத்தோடு பொருந்தி வாழத் தெரியாதரே ஆவார்

**4. நாமம் கெடக்கெடும் நோய் பற்றி எழுதுக?**

ஆசை, சினம், அறியாமை ஆகிய மூன்றும் அழிதல் வேண்டும். இவை அழிந்தால் வரும் துன்பங்களும் அழியும்.

**5. பெரும்பேறு எது?**

பெரியோரைப்ப போற்றி துணையாகிக் கொள்ளுதல் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்.

**6. கெடுப்பர் இலானும் கெடுபவர் யார்? ஏன்?**

குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தி நல்வழிப் படுத்தும் பெரியோரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன் தன்னைக் கெடுக்க பகைவர் இல்லை எனினும்தானே கெட்டு அழிவான்.

**7. ஒருவற்கு பெருமை தருவது எது?**

ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு இயலாது என்று நினைத்து சோர்வடையக் கூடாது. அச்செயலை முயற்சியுடன் முடிப்பதே பெருமை தரும்.

**8. உயர்ந்த நிலையயை எப்போது அடைய முடியும்?**

விடாமுயற்சி என்னும் உயர்பண்பு கொள்ளுதல், பிறருக்கு உதவுதல். இவ்விரு பண்புகளால் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

**9. "செல்வம் பெருகுதல் " வறுமை வருதல் எப்போது?**

முயற்சி செய்வதால் செல்வம் பெருகும்,

முயற்சி இல்லாவிட்டால் வறுமையே வந்து சேரும்

**10. பல கோடி பெறினும் பயனில்லை எப்போது?**

பிறருக்கு கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் பல கோடிப் பொருள்களைப் பெற்றிருந்தாலும் அதனால் எந்த ஒரு பயனும் இல்லை.

**11. "பொறியின்மை யார்க்கும் பழியன்று" இவவடிகளில் "பொறி "என்பது எதனைக் குறிக்கும் ?**

பொறி என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளைக் குறிக்கும்.

**12. நாள்தோறும் நாடு கெடும் என்று வள்ளுவர் கூறக் காரணம் யாது?**

தன்நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் நாடு, நாள்தோறும் கெடும்.

**13. கற்றும் கல்லாதவர் அறிவிலாதார் : யார் ?**

உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

**14. எப்பொருளைக் காண்பது அறிவு?**

எந்தப் பொருள் எந்த இயல்பினதாய்த் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பது அறிவு.

**15. நல்லார் தொடர்பை கைவிடல் எத்தன்மையது?**

தான் ஒருவனாக நின்று பலரோடு பகை மேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையை தரும். ஆகவே நல்லார் நட்பைக் கைவிடல் கூடாது.

**16. ஆட்சியதிகாரம் கொண்டுள்ள அரசன் குறித்து கூறப்பட்டுள்ள செய்தி யாது?**

- ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பான்.
- அரசானது இச்செயலானது வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகராகும்.

**17. ஆராயாது ஆட்சி செய்யும் மன்னனைக் குறித்து குறள் கூறும் செய்தி யாது?**

தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் தன் நாட்டை நாள்தோறும் இழக்க நேரிடும்.

**18. இரக்கம் இல்லா கண்கள் எதனைப் போன்று பயனற்றது?**

- பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை
- அதைப்போல இரக்கம் இல்லாத கண்களாலும் பயனில்லை

**19. உலகமே உரிமையுடையதாகும் எப்போது?**

நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

**20. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் யார்? ஏன்?**

- விரும்பத்தக்க இரக்ககுணம் கொண்டவர்கள் நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர்.
- ஏனெனில் பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணுவர்.

**21. இழிவற்றது இழிவானது எது?**

- ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பின் அது இழிவன்று
- அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாததே இழிவாகும்.

**22. விரும்பப்படாதவர் செல்வம் எதனைப் போன்றது?**

பிறருக்கு உதவாமல் ஒருவராருலும் விரும்பபடாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சு மரம் பழுத்தது போன்றதாகும்.

**23. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்த முரண் சொற்கள் எவை?**

முரண் சொற்கள் : முயற்சி, முயற்றின்மை.

**24. அடுக்கிய கோடி உண்டாயினும் பயன் இல் ஏன்?**

பிறருக்கு கொடுக்காமல், தானும் அனுபவிக்காமல் இருப்பவர் அடுக்கிய பல கோடி பெரினும் பயன் இல்லை.

**25. மெய்யறிவின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவது யாது?**

எப்பொருளாயினும், அஃது எப்படிப்பட்ட தன்மை உடையதாக இருப்பினும் அப்பொருளின் மெய்ம்மையைக் காண்பதே, உண்மை அறிவின் இலக்கணமாகும்.

**26. மூவகைக் குற்றங்கள் யாவை?**

குாமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றும் மூவகைக் குற்றங்களாகும்.

**27. அரியவற்றுள் அரிதாகக் கருதப்படுவது யாது?**

பெரியோரைப் போற்றித் தன் சுற்றத்தவருள் ஒருவராகக் கொள்ளுதலே, அரியவற்றுள் அரியதாகும்.

**28. பகைவர் இல்லாமல் மன்னவன் தானே கெடுவது எதனால்?**

குற்றம் கண்டபோது இடித்துக் கூறித் திருத்தும் பெரியவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாத மன்னவன், பகைவர் இல்லாமலும் தானே கெடுவான்.

**29. கொடுங்கோலன், தன் நாட்டை இழக்கக் காரணம் என்ன?**

நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத கொடுங்கோல் மன்னவன், தன் நாட்டை நாள்தோறும் இழக்க நேரிடும்.

**30. பண்ணும் கண்ணும் எப்போது பயன்படா?**

பாடலோடு பொருந்தாத போது பண்ணால் பயன் விளையாது. கண்ணோட்டம் இல்லாத போது கண்ணால் பயன்விளையாது.

**31. அருமையைப் பெருமையாக்கும் வழியாது?**

முடிப்பதற்கு அரியது என்று எண்ணி ஒரு செயலைச் செய்தலில் சோர்வு அடையக் கூடாது. அரிய செயலையும் முயற்சியால் முடிப்பதே பெருமை பெற வழியாகும்.

**32. வேளாண்மை என்னும் பெருமிதத்தை எய்த வழி யாது?**

பிறருக்கு உதவுதல் என்னும் செருக்கை விடாமுயற்சி என்னும் உயர் பண்பு கொண்டவர்களால் மட்டுமே எய்த முடியும். அதாவது, விடாமுயற்சியே வேளாண்மை என்னும் பெருமிதத்தை எய்தும் வழியாகும்.

**33. ஊழையும் உப்பக்கம் காண்பவர் யார்?**

உளச்சோர்வு இல்லாமல் முயற்சி செய்பவர், தம் செயலுக்கு இடையூறாக முன்வினைப் பயனே தோன்றினாலும் அதனைத் தோற்கடித்து வெற்றி பெறுவர்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறிய செய்தி யாது**

ஒழுக்கம் அனைவருக்கும் அனைத்துச் சிறப்புகளையும் தருவதால் அதை உயிரினும் மேலானதாகக் கருதி காத்தல் வேண்டும்.

ஒழுக்கத்தினால் கிடைப்பது மேன்மை .இழுக்கத்தினால் கிடைப்பது அடையக் கூடாத பழி.

உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர்கள் பல நூல்களைக் கற்றவராயினும் அறிவு இல்லாதவராகவே கருதப்படுவார்.

**2. பெரியாரைத் துணை கோடல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.**

- பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதலே பெரும் பேறாகும்.
- குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தி பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன் தன்னைக் கெடுக்கப் பகைவர்கள் இல்லையெனினும் தானே கெட்டழிவான்.
- நற்பண்புடைய பெரியோரின் நட்பைக் கைவிடுவதாது, தனி யொருவனக நின்று பகைவர் பலரைப் பகைத்துக் கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத்தரும்

**3. கொடுங்கோண்மை பற்றிய செய்தியைக் கூறு.**

**ஆட்சியதிகாரம்:**

தன் ஆட்சியதிகாரத்தைக் கொண்டு வரி விதிக்கும் மன்னனது செயலானது வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்பவனின் செயலுக்கு ஒப்பானது.

**தன் நாட்டை இழத்தல்:**

தன் நாட்டின் நன்மை, தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் தன் நாட்டை இழக்க நேரிடும்.

**4. கண்ணோட்டம் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை எழுது.**

**இரக்கம் இல்லாத கண்கள்:**

பாடலோடு பொருந்தாத இசையால் பயன் ஒன்றுமில்லை. அதுபோல, இரக்கமில்லா கண்களால் பயன் ஒன்றுமில்லை.

**நடுநிலை:**

நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

**நஞ்சை உண்ணும் பண்பாளர்:**

விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள் பிறரது நன்மைக்காக தனக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவார்.

**5. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இப்பாடலில் பயின்று வரும் அணி ஏகதேச உருவக அணி.

**அணி இலக்கணம்:**

கவிஞர் தாம் எடுத்துக் கொண்ட இரு பொருள்களில் ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி விட்டு அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**விளக்கம் :**

விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால்தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பது பொருள். இதில், விடாமுயற்சியை உயர்பண்பு என உருவகப்படுத்திய கவிஞர் உதவும் தன்மையை உயர்ந்தநிலை என உருவகப்படுத்தாமல் விட்டு விட்டார்.

**6. பண் என்னாம் பாடற் கிளையின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியைக் கூறி விளக்குக.**

இப்பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம்:**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

**விளக்கம்:**

உவமை : பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயனில்லை.
உவமேயம் : இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை.
உவமஉருபு : போல (மறைந்து வந்துள்ளது)
பொருத்தம் : பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயன் இல்லை.

அதுபோலவே, இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை.

## கற்பவை கற்றபின்



**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

**கலா** : மேற்கண்ட படத்தைப் பார்க்கும் போது உனக்கு என்ன தெரிகிறது?
**பாலா** : மாட்டு வண்டிக் காரனின் உழைப்பு தெரிகிறது
**கலா** : எப்படி கூறுகிறாய்
**பாலா** : மாட்டு வண்டியில் மூட்டைகளை ஏற்ற இறக்க யாருடைய தயவும் இல்லாமல் பணி செய்து தெரிகிறது. அது மட்டுமில்லாமல் வண்டியில் நின்றபடியே ஓட்டுகிறான். இதில் அவன் சோம்பல் இல்லாதவன் போல் அறிய முடிகிறது.
**கலா** : இதன் மூலம் நீ கூறவிருக்கும் நீதி என்ன?

**பாலா** : "உழைப்பே உயர்வு தரும்" முயற்சி திருவினையாக்கும்" இத்தொடர்களுக்கு ஏற்ப வாழ்ந்தால், வறுமையின்றி வளமாய் வாழலாம்



**பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல், கண்என்னாம்"**
**கண்ணோட்டம் இல்லாத கண்"**

**ராதா** : மேற்கண்ட படத்தைப் பார்க்கும் போது உனக்கு என்ன தோன்றுகிறது சாந்தி?

**சாந்தி** : வறியவர்க்கு ஒன்று தருவதே ஈகை" ஈ எனக் கேட்டல் இழிவான செயலாகும் கேட்டும் கேட்ட பொருளைத் தராமல் இருப்பது அதைவிட இழிவான செயலாகும். இசையோடு பாடல் பொருந்தாததால் இசை எப்படி பயன் இல்லையோ அதைப்போல இரக்கம் இல்லாத கண்ணும் பயனில்லாத, சரியாகக் பாடாததால் பார்வையாளர்கள் அனைவரும் வெளியே செல்வதை கவனிக்கவும். எனவே இசை என்பது இனிமைக்குத்தான் இனிமை இல்லாத இசையினால் எந்த பயனும் இல்லை.

**2. கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக?**

"சின்னச்சாமி ' யாரோ மரத்தோரமா நிற்கிறாங்க. யாராய் இருக்கும் மாட்டு ஒட்டிக்கிட்டே அப்பா கேட்டார்.
"தெரியலப்பா .."
"இறங்கி யாருன்னு பாரு '"
வாட்ட சாட்டமாய் ,கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்.
"ஐயா நீங்க
"வெளியூருப்பா ___ வண்டி நின்னு போச்சு'......!
அப்படியா ... வண்டியைத் தூக்கிமாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க மழை வர்ற மாதிரியிருக்கு.. ஊறு ரொம்ப தூரம் .. வேற வண்டியும் வராது'"
அவர் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில் இருந்தோம். சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு .. நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்
இரவுல தூங்கப் போறப்ப'. அப்பா சொன்னார் தம்பி ' அந்த சூட்டுக்காரர் மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு' வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில. கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்கா' பாவம் படிச்சவரா இருக்காரு'. சூழ்நிலை புரியாம'. வரமாட்டேன்னு சொன்னாரு . அப்ப வேதனைப்பட்டாரே'

**பொருத்தமான குறள்**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

**காரணம்**

எவ்வளவுதான் கல்வி கற்றிருந்தாலும் வண்டிக்காரரின் உடையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து ,அவர்களுடன் வண்டியில் ஏறாமல் நடந்து வந்தான். வரும் போது தலையில் அடிபட்டு ஆபத்தான

நிலையிலிருந்தும் உதவ வந்த அவனை ஒதுக்கித் தள்ளினான் சூட்டுக்காரன் உலகத்தாரோடு பொருந்தி வாழும் தன்மையற்றவனாய் இருந்ததால் அவன் விபத்துக்குள்ளானான். இவன் கற்றிருந்தும் அறிவில்லாதனே.

## இயல் 3

## அலகுத் தேர்வு 1

மதிப்பெண்கள்: 50

I. நிரப்புக. 3x1=3

1. மின்சோட்டா தமிழ்ச்சங்கம் அமைந்துள்ள இடம் எது?
2. காசிக்கணடம் என்பது ___________.
3. கன்று எரி - என்பதில் ‘எரி’ எனக் குறிப்பிடப்படுவது ___________.

II. பொருத்துக: 4x1=4

4. மேன்மை - அ) அறியாமை
5. வெகுளி - ஆ) வறுமை
6. மயக்கம் - இ) மேன்மை
7. இன்மை - ஈ) சினம்

III. விடையளி: 3x2=6

8. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
9. அதிவீரராம பாண்டியன் இயற்றிய நூல்கள் யாவை?
10. அடுக்குத் தொடர் - விளக்குக.

IV. விடையளி: 3x4=12

11. “வேலொடு நின்றான் இடு என்றது போலும்
    கோலொடு நின்றான் இரவு” - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.
12. மலைபடுகடாம் குறிப்பு வரைக.
13. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

V. விடையளி: 1x7=7

14. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப புலவர்களையும் கலைஞர்களையும், வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாற்றியிருப்பதை விளக்குக.

VI. கடிதம் எழுதுக 1x7=7

15. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது, குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

VII. மொழிப்பயிற்சிகள்:

16. பழமொழியை நிறைவு செய்க. 1x2=2
    அ) ஒரு பானை ___________. ஆ) அளவுக்கு ____________.
17. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமை: 1x1=1
    சிலை - சீலை.
18. பொருள் கூறுக: ஊண், ஊன். 1x1=1
19. இலக்கணக் குறிப்பு தருக: பருஉக்குறை. 1x1=1
20. பகுபத உறுப்பிலக்கணம் தருக: வருக 1x2=2
21. காட்சி கண்டு கவினுற எழுதுக. 1x4=4



## இயல் 3

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது __________
2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது __________ எனக் குறிக்கும்.
3. அதிவீரராம பாண்டியனின் பட்டப் பெயர் __________

II. பொருத்துக: 4x1=4

4. சிறுபாணாற்றுப்படை - நக்கீரர்.
5. பொருநறாற்றுப்படை - பெருங்கௌசிகனார்.
6. திருமுருகாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார்.
7. மலைபடுகடாம் - முடத்தாமக் கண்ணியர்.

III. விடையளி: 4x2=8

8. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" - இத்தொடர் உணர்தததும் பொருளை எழுதுக.
9. சிலப்பதிகாரம் உணர்த்தும் விருந்தோம்பல் குறித்து எழுதுக.
10. உரிச்சொல் தொடரை விளக்குக.
11. உலகம் நிலைபெற்றிருக்கக் காரணம் யாது?

IV. விடையளி: 3x4=12

12. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது.
13. விருந்தோம்பல் அன்றும் இன்றும் எவ்வாறு உள்ளது என வேறுபடுத்திக்காட்டுக.

V. விடையளி: 3x6=8

14. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.
15. விடல், விடும் என முடியும் குறள்களையும் எப்பொருள் .... எனத் தொடங்கும் குறளையும் எழுதுக.
16. 'பா' நயம் பாராட்டுக. 1x6=6

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்" - காளமேகப் புலவர்.

VI. மொழிப்பயிற்சி

17. கலைச் சொல் அறிக: 1x2=2

Folk Literature -
Devotional Literature -

18. அகராதி காண்: 1x2=2

வெல்லம் -
வெள்ளம் -

19. இரு சொற்களையும் ஒரே சொற்றொடராக்குக. 1x1=1

வளி - வாளி.

20. பழமொழியை நிரைவு செய்க: 1x1=1

விருந்தும்

21. இலக்கணக் குறிப்பு தருக: வருக. 1x1=1
22. பகுபத உறுப்பிலக்கணம் தருக: பொழிந்த. 1x2=2

இயல் நான்கு

அறிவியல், தொழில்நுட்பம்

# நான்காம் தமிழ்



**கற்றல் நோக்கங்கள்**


- வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் நம் மொழியில் திறம்படச் சொல்லப்படும் பாங்கறிந்து மொழித்திறனையும் தொழில்சார் கருத்துகளையும் புதுப்பித்தல்.
- அறிவியல் கருத்துகள் உட்பொதிந்துள்ள செய்யுள்களின் கருத்து வெளிப்பாட்டுத் திறனைப் படித்துணர்ந்து எதிர்வினையாற்றல்.
- உரையாடல் வடிவில் கருத்துகளை வெளிப்படுத்தும் திறன்பெறுதல்.
- இலக்கணப் பிழையற்ற தொடரமைப்புகளைத் தெரிந்துகொண்டு பயன்படுத்துதல்.

உரைநடை உலகம்

# தொழில்நுட்பம் ௪ செயற்கை நுண்ணறிவு

BWE5RD






## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ?**

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ)இலா **[விடை : இலா]**

## குறுவினா

**1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடு.**

1. இயந்திர மனிதன் (Robo) 2. திறன் பேசி (Smart Phone)

## சிறுவினா

**1. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.**

- இன்றைய அறிவியலின் புதிய கண்டுபிடிப்புகளில் நன்மை, தீமை இரண்டும் இருக்கும். நாம் அதற்கேற்ப தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.
- கல்வியறிவு இருந்தால் மட்டும் போதாது, மின்னணுக் கல்வியறிவும் ,மின்னணுச் சந்தைப் படுத்தலையும்அறிந்திருக்க வேண்டும். எதிர் காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழில் புரட்சியின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவும் நம்மை வளப்படுத்த உதவும்.

- மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றவும் உடல் நலத்தைப் பேணவும், கொடிய நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து மருத்துவம் செய்யும் பட்டறிவுமிக்க மருத்துவரைப் போலப் பரிந்துரை செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. எனவே இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் சில தீமை இருந்தாலும் மனிதனை மேம்படுத்துவதற்கு மிகவும் உதவுகின்றன.

**2. மனிதர்களின் மூளையைப் போன்றது ,செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச , எழுத, சந்திக்க இத்தொழில் நுட்பம் மேம்படுத்துகிறது. இதனால் மனித குலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு எதிர்காலத் தொழில் நுட்பம் என்ற தலைப்பில் எழுதுக.**

**எதிர்காலத் தொழில் நுட்பம்**

எதிர்காலத் தொழில் நுட்பக் கருவிகளின் பயன்பாடுகள் அசுர வேகத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது. உயிரினங்களில் மனிதனை உணர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலுக்கு தொழில் நுட்பம் மிகவும் துணை செய்கிறது. திறன் பேசிகளில் இயங்கும் மென்பொருள்கள், கண்ணுக்குத் தெரியாத மனிதனைப் போல் நம்முடன் உரையாடி உதவி செய்கிறது.

**செயல்பாடுகள்**

- நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கும்.
- நாம் கட்டளையிடும் செயலைச் செய்யும்.
- நாம் கேட்பதை உடனே உலாவியில் தேடும்.
- நாம் விரும்பும் கவிதையை இணையத்தில் தேடித்தரும்.
- எந்தக் கடையில் என்ன விற்கப்படுகிறது என்று சொல்லும்.
- நாம் படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியிலிடும்.
- நாம் எடுத்த போட்டோக்களைப் பற்றி பட்டியலிடும்.
- எதிர் காலத்தில் நம்முடைய நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரைக் காட்டிலும் உதவும் மென்பொருள் நம்மைக் நன்கு அறிந்திருக்கும்.

---

## நெடுவினா

**1. "மாளாத காதல் நோயாளன் போல் " என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக**

**முன்னுரை :**

மனிதர்கள் செய்யும் வேலைகள் அனைத்தும் இன்றைய தொழில் நுட்பமான செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் பயன்களையும் ரோபோவின் செயல்பாடுகள்பற்றியும் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றியும்பின்வருமாறு காணலாம்.

**செயற்கை நுண்ணறிவு :**

எந்த ஒரு புதிய தொழில் நுட்பமும் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. புதிய தொழில் நுட்பத்தினால் ,எரி பொருள் மிச்சப்படும். பயண நேரம் குறையும், ஊர்திகளை செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்கப்படும். கல்வித்துறையிலும் இத்தொழில் நுட்பம் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகம். மனிதர்களிடம் போட்டியிட்டாலும் வியப்பதற்கில்லை.

வயதானவர்களுக்கு உதவி செய்யும், உற்ற தோழனாகவும் எதிர்காலத்தில் ரோபாவின் செயல்பாடுகள் இருக்கும். விடுதிகள், வங்கிகள் மற்றும் அலுவலகங்கள் ஆகியனவற்றில் மனிதன் அளிக்கும் சேவையை ரோபாக்கள்

செய்யும். பயண ஏற்பாடு செய்யவும், தண்ணீர் கொண்டு வந்து தருவதும், குழந்தைகளுக்கு வேடிக்கைக் காட்டுவதும்என பல செயல்பாடுகளைச் செய்யும் நிலை வரும்.

**ரோபாவின் செயல்பாடுகள் :**

எதை நாம் செய்ய விரும்புகிறமோ அதை செயற்கை நுண்ணறிவின் மூலம் செயல்படுத்தலாம். வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றத்தைக் கொண்டு வரும். ரோபாவிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு அலுவலகம் செல்லும் பெற்றோரைப் பார்க்கலாம்.மனிதர்கள் செய்ய இயலாத அலுப்புத் தட்டக் கூடிய, கடினமான செயல்களையும் செய்ய முடியும் . இவையெல்லாம் செயற்கை நுண்ணறிவின் எதிர்காலச் செயல்பாடுகளாகும்.

**முடிவுரை:**

செயற்கை நுண்ணறிவின் மூலம் பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும், புதிய வணிக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இதே போன்று எதிர்காலத்தில் உலகில் உள்ள ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும் என்பதில் வியப்பொன்றும்மில்லை.

## பொருத்துக

1. வாட்சன் - (அ) மென் பொருள்
2. வேர்டுஸ் மித் - (ஆ) இயந்திர மனிதன்
3. பெப்பர் - (இ) கட்டுரை உருவாக்கும் மென்பொருள்
4. எழுத்தாளி - (ஈ) கணிணி

[விடை 1 - (ஈ) 2 - (அ) 3 - (ஆ) 4 - இ)]

## விடைக்கேற்ற வினா அமைக்க

1. **பாரத ஸ்டேட் வங்கி இலா என்னும் உரையாடு மென் பொருளை உருவாக்கியிருக்கிறது.**

   பாரத ஸ்டேட் வங்கி உருவாக்கியிருக்கும் மென் பொருள் யாது?
2. **செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென் பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.**

   செயற்கை நுண்ணறிவு என்பது யாது ?

## சந்திப்பிழை நீக்கி எழுதுக

1. **காணொலிகளை கொடுக்கும் மென்பொருள்களில் இன்றைக்கு செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் பயன்படுகிறது .**

காணொலிகளை தொகுக்கும் மென்பொருள்களில் இன்றைக்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம்பயன்படுகிறது.

## ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக

**1. இதழியலில் ,செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறதல்களைச் செய்து வருகின்றன.**

இதழியலில் ,செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறதல்களைச் செய்து **வருகின்றது.**

**2. மனிதனின் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை ,தீமை என்ற இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றது.**

மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை தீமை என்ற இரண்டு பக்கங்கள் இருந்தே **வந்திருக்கின்றன.**

---

## நிறுத்தற் குறியிடுக

ஒளிப்படங்கள் எழுத்துகள் காணொலிகள் ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார்.

ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. மின்னணுப் புரட்சிக்கு காரணமாயிருப்பவை எவை?**

- தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப்பயன்பாட்டின் பிறப்பும் மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின.
- சமூக ஊடகங்கள் வழியாகவும் மின்னணுச் சந்தை வழியாகவும் செயற்கை நுண்ணறிவு அறிமுகமாகிறது.

**2. இலா (ELA) என்பதன் ஆங்கில விரிவாக்கத்தை எழுதுக.**

(ELA)- Electronic live Assistant

**3. "வேர்டுஸ்மித்" ___குறிப்புவரைக**

- வேர்டுஸ்மித் என்பதற்கு எழுத்தாளி என்று பெயர்
- இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருள்களின் பெயர் வேர்டுஸ்மித்.
- வேர்டுஸ்மித்திடம் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்இ சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்கின்றன.

**4. செயற்கை நுண்ணறிவின் பொதுவான பணி என்ன?**

மனிதனால் முடியும் செயல்களையும் செய்யக் கூடியது செயற்கை நுண்ணறிவு.

**5."இலா என்னும் மென்பொருள் குறித்து எழுதுக**

- இலா என்னும் உரையாடு மென்பொருளை பாரத ஸ்டேட் வங்கி உருவாக்கியுள்ளது .
- ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாகும்.
- வாடிக்கையாளர்க்கான சேவையை இணைய மூலம் அளிக்கிறது.

**6. வாட்சன் குறிப்பு எழுதுக.**

- 2016ல் ஐ.பி.எம் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினி வாட்சன்.
- சில நிமிடங்களில் இரண்டு கோடித்தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**7. செயற்கை நுண்ணறிவு நமக்கு எப்படி அறிமுகமாகிறது?**

- சமுக ஊடகங்கள்
- மின்னணுச் சந்தைகள்

இவற்றின் மூலம் செயற்கை நுண்ணறிவு நமக்கு அறிமுகமாகிறது.

**8. சீனாவில் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் இயந்திர மனிதனின் செயல்பாடுகளைக் கூறுக.**

- மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்கின்றன.
- சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும் கூட அவை புரிந்து கொண்டு பதில் அளிக்கின்றன.

**9. செயற்கை நுண்ணறிவின் சிறப்பு யாது?**

- செயற்கை நுண்ணறிவு பொதித்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.
- செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும்.

**10. 'மெய்நிகர் உதவியாளர்' என்பது எது?**

திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள், கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றன. இதனையே 'மெய்நிகர் உதவியாளர்' என அழைக்கின்றோம்.

**11. 'மெய்நிகர் உதவியாளர்' என்பதன் பணி என்னவாக இருக்கும்?**

- நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும்.
- நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும்.
- நாம் கேட்பதை உலாவியல் தேடும்.
- நாம் விரும்பும் கவிதையை இணையத்தில் தேடித் தரும்!
- எந்த கடையில் எது விற்கும் என்று சொல்லும்.
- படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்
- நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி கருத்துரைக்கும்.
- இத்தகைய பணிகளை மெய்நிகர் உதவியாளர் செயல்படுத்தும்.

**12. பாரத ஸ்டேட் வங்கியின் 'இலா' என்னும் உரையாடு மென்பொருள் பற்றி எழுதுக. (அ) 'இலா' என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.**

- 'இலா' (ELA) என்பது (Electronic Live Assistant) என்பதன் சுருக்கமாகும்.
- இது ஒரு வினாடிக்கு பத்தாயிரம் வாடிக்கையாளருடன் உரையாடும்.
- வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குச் சேவைகளை இணையம் மூலம் அளிக்கிறது.

**13. பெப்பர் என்னும் ரோபோ குறித்து எழுதுக.**

- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே 'பெப்பர்'.
- இது உலகளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று இதில் மூன்றுவகை
- ரோபோக்கள் கிடைக்கின்றன.

**14. செயற்கை நுண்ணறிவின் வரவால் ஏற்படும் வேலை வாய்ப்புகளைப் பற்றி எழுதுக.**

- செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால், தரவு அறிவியலாளர்களின் தேவை கூடியுள்ளது.
- இயந்திரக் கற்றல் வல்லுநர்கள் முதலான பல தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவையும் பெருகி வருகிறது.
- போட்டி நிறைந்த இவ்வுலகில் செயற்கை நுண்ணறிவை யார் முதலாவதாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வணிக வானம் வசப்படும்.

**15. செயற்கை நுண்ணறிவு குறித்து நடைபெற்று வரும் ஆராய்ச்சிகள் யாவை?**

மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பற்றவும், உடல் நலத்தைப் பேணவும், கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறியவும் பட்டறிவு மிக்க மருத்துவரைப் போல மருத்துவம் செய்யும் முறைகளைப் பரிந்துரை செய்யவும். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

**16. பெப்பர் என்னும் ரோபோவை எந்தெந்த வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள்?**

- ‘பெப்பர்’ என்னும் ரோபோ மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்படுகிறது.
- எனவே, வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் ‘பெப்பர் ரோபோ’ வை பயன்படுத்துகிறார்கள்.

**17. எதிர்காலத்தில் நம்மை வளப்படுத்த உதவுவது எது?**

- மின்னணு கல்வி அறிவையும், மின்னணு சந்தைப்படுத்துதலையும் அறிந்திருப்பது. தற்போது கல்வியறிவுடன் வாழ்க்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடையவும் உதவுகிறது.
- செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை எதிர்காலத்தில் வளப்படுத்த முடியும்.

**18. எதிர்காலத்தில் ரோபோவின் பணிகள் என்னவாக இருக்கும்?**

- விடுதிகளிலும், வங்கிகளிலும் அலுவலகங்களிலும் தற்போது மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும்.
- அவற்றுடன் நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, தண்ணீர் கொண்டுவந்து தருவது உடன் வந்திருக்கும் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றையும் எதிர்காலத்தில் ரோபோக்கள் செய்யும்

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. “பெப்பர்” குறிப்பு வரைக**

- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரே ரோபோ
- வீடு, வணிகம், படிப்புக்கு ஆகிய மூன்று வகையான ரோபோக்கள் உள்ளன.
- இவை மனிதனின் முக பாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன.
- பெப்பரை வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

**2. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகளை விளக்குக.**

- நம்மை அறியாமலேயே நம் வாழ்க்கையையும் வணிகத்தையும் வளப்படுத்துகிறது.
- ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளும் அறிமுகமாகும் போது வடிவில் மாற்றம் பெறுகின்றன.
- தொழில் நுட்பத்தைக் கண்டு அச்சப்படுபவர்களின் அலறல்களை நாம் எதிர்கொள்வதே முதல் அறைகூவல்.
- மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றிய உடல் நலத்தைப் பேணுகிறது .

- கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்தால் ,மருத்துவரைப் போல் பரிந்துரை செய்தல் போன்ற மேற்கண்ட செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும்.ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

**3.சீன நாட்டில் அமைந்துள்ள தமிழ்க் கல்வெட்டு குறித்து எழுதுக .**

- சீன நாட்டில் காண்டன் நகருக்கு வடக்கே 500 கல் தொலைவில் உள்ளது . சூவன் செள துறைமுக நகர்.
- சூவன் செள துறைமுக நகருக்கு தமிழ்வணிகர் அடிக்கடி வந்து சென்றனர் .
- தமிழ்களின் வரவு காரணமாக சீனாவில் சிவன் கோவில் கட்டும்படியாக அந்நாட்டு மன்னன் குப்லாய்கான் ஆணையிட்டார்.
- இம்மன்னரது ஆணையப்படி இக்கோவில் கட்டப்பட்டது என தமிழ்க் கல்வெட்டு ஒன்று இக்கோவிலில் உள்ளது.
- இக்கோவிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**4. செயற்கை நுண்ணறிவில் கல்வியறிவு - விளக்குக.**

ஒரு காலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. இப்போது கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும், மினன்னணுச் சந்தைப்படுத்துதலையும் அறிந்திருப்பது வாழ்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடைவும் உதவுகிறது. ஆனால் எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றி அறிவும், நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்த உதவும்.

**5. செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில்நுட்ப வரையறையைக் கூறி விளக்குக.**

**வரையறை :**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.

**வடிவமைப்பு :**

ஒலிப்படங்கள், எழுத்துக்கள், காணொலிகள் ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் மென்பொருளை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைக்கின்றனர்.

**முடிவெடுக்கும் திறன் :**

இந்த மென்பொருள் அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதனைப் போல தானே முடிவெடுக்கும் திறன் உடையது.

**சிறப்பு :**

செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை. செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும், கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும். முனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

**6. ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவு குறித்து சுருக்கி வரைக.**

- சில உயர்வகைத் திறன் பேசியின் ஒளிப்படக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது.
- கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன் பேசியைத் திறப்பது பழமையானது.
- உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது இன்றை தொழில்நுட்பம்.
- படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.
- திறன் பேசியில் உள்ள ஒளிப்படக் கருவியில் எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில் நுட்பம் உதவுகிறது

**7. முக்காலக் கல்வியறிவு குறித்து எழுதுக.**

ஒரு காலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. இப்போது கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும், மினன்னணுச் சந்தைப்படுத்துதலையும் அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடையவும் உதவுகிறது.

**எதிர்காலக் கல்வியறிவு :**

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றி அறிவும், நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்தும்.

---

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. செயற்கை நுண்ணறிவு - ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.**

**செயற்கை நுண்ணறிவு :**

செயற்கை நுண்ணறிவு என்பது இயந்திரங்களின் நுண்ணறிவு மற்றும் இதனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கணினி அறிவியலின் ஒரு பிரிவாகும். தன் சூழ்நிலையை உணர்ந்து அதிக வெற்றி வாய்ப்புகளுக்குத் தக்கவாறு செயலில் ஈடுபடும் ஒரு அமைப்பாகும். செயற்கை நுண்ணறிவு பலவகைகளில் மனிதர்களுக்கு உதவுகிறது.

**கண்காணிப்புக் கருவி :**

அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையை செயற்கை நுண்ணறிவால் திருப்புகிறது.

**இதழியல் :**

இதழியலில் செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது. அவற்றுள் விந்தையான ஒன்று இயல்பான மொழி நடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள் அதற்கு வேர்டுஸ்மித் என்று பெயர். தகவல்களைக் கொடுத்தால் போதும் வேர்டுஸ்மித் அழகான கட்டுரையை சில நொடிகளில் உருவாக்கிவிடும்.

**வணிகம் :**

இணையத்தில் வணிகம் செய்யும் தனியார் நிறுவனம் ஒன்று செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி பெரும்பாலும் ஆளற்ற பல்பொருள் அங்காடிகளை உலகெங்கிலும் திறந்து வருகிறது. புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன.

**மெய்நிகர் உதவியாளர் :**

செயற்கை நுண்ணறிவு திறன்பேசிகளில் இயங்க உதவு மென்பொருள், கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது. இவை நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும். திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் தேடும். நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும். எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி கருத்துரைக்கும்.

**செயற்கை நுண்ணறிவின் ஆராய்ச்சி :**

மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பற்றவும், உடல் நலத்தைப் பேணவும், கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறியவும் பட்டறிவு மிக்க மருத்துவரைப் போல மருத்துவம் செய்யும் முறைகளைப் பரிந்துரை செய்யவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

## கற்பவை கற்றபின்

**1. இன்றைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளைச் செய்தித்தாளிலோ இணையத்திலோ கண்டு அட்டவணையாகத் தருக.**

| | |
|---|---|
| போக்குவரத்து | திறன்பேசியில் - போக்குவரத்து நெரிசல் அதிகம் -சுருக்கமான வழி என வழிகாட்டி படம் உதவி செய்கிறது. |
| கல்வி | உயர் கல்வி மாணவர்கள் இணையச் செயல்பாடுகள் மூலம் உயர் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கவும் மருத்துவத்துறையில்செயற்கை நுண்ணறிவின் மூலம் கல்வி கற்பதற்கும் |
| வேளாண்மை | வேளாண்மைக்கு செயற்கை நுண்ணறிவு பெரிதும் உதவும் . எந்தப் பருவத்தில் எதை விதைக்க வேண்டும் . என்பதிலிருந்து எத்தகைய முறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்பது வரை நாம் கற்றுக் கொடுக்கலாம். |

**2. கொடுக்கப்படுகின்ற எல்லாவற்றையும் உள்ளீடு செய்து தேவைப்படும் வேளையில் வெளிப்படுத்துவதில் இன்று மூளைக்கு இணையாகத் தொழில் நுட்பமும் முன்னேறியுள்ளது. இக்கருத்தையும் படத்தையும் ஒப்பு நோக்கிக் கலந்துரையாடுக**

**முத்து** : கொடுக்கப்படுகின்ற எல்லாவற்றையும் உள்ளீடு செய்து, தேவைப்படும் போது வெளியிடுவதில் இன்று மூளைக்கு இணையாகத் தொழில் நுட்பம் முன்னேறியுள்ளது.என்பதைப் பற்றி உன் கருத்து யாது?

**மணி** : இன்றைய தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய பெரும்பாலும் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது. இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில் நுட்பம் செயற்கை நுண்ணறிவே.

**முத்து** : இது தொடர்பாக நூலகத்திற்குச் சென்று நூலை எடுப்பதற்குள் சிரமமாகி விட்டது. மக்கள் எடுத்த இடத்தில் புத்தகத்தை வைப்பதில்லை . எனவே, நாம் தேடும் இடத்தில் அந்தப் புத்தகம் கிடைப்பதில்லை.

**மணி** : அதற்குத்தான் செயற்கைத் தொழில் நுட்பம் நமக்குப் பயன்படுகிறது. மேலும் உங்களுக்குத் தேவையான புத்தகங்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**முத்து** : ஆம் !அதை விட வசதி என்னவென்றால் இதையெல்லாம் நாம் வீட்டிலிருந்த படியே செய்து கொள்ளலாம்.

**மணி** : ஆமாம் !இயந்திரங்கள் நம்மை மாதிரி யோசிக்காவிட்டாலும் அவற்றால் நமக்குப் பல நன்மைகள் உண்டு செயற்கை நுண்ணறிவைப் போற்றுவோம். வாழ்த்துவோம்! வணங்குவோம்.

தொழில்நுட்பம்


ச

கவிதைப் பேழை

# பெருமாள் திருமொழி

– குலசேகராழ்வார்

CBWZSP



பாடல் :

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

**பாடலின் பொருள்**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அதுபோன்று நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிப்பார்த்து வாழ்கின்றேன்.

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| **இயற்றியவர்** | : குலசேகர ஆழ்வார் |
| **பிரிவு (திருமொழி )** | : நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் 5ஆம் திருமொழியாக உள்ளது |
| **பாசுரங்கள்** | : 105 |
| **சிறப்பு** | : திருமாலைப் போற்றும் பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல். |
| **பாடப்பகுதி** | : பெருமாள் திருமொழியின் முதலாயிரத்தில் 691 ஆவது பாசுரத்தில் உள்ளது. |

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : குலசேகர ஆழ்வார் |
| **ஊர்** | : கேரள மாநிலம் -திருவஞ்சைக் களம் . |
| **காலம்** | : கி.பி 8 ஆம் நூற்றாண்டு |
| **அறிந்த மொழி** | : வடமொழி ,தென்மாழி |
| **இயற்றிய நூல்** | : தமிழில் பெருமாள் திருமொழியையும் வடமொழி முகுந்த மாலையும் . |
| **சிறப்பு** | : இராமபிரானிடம் பக்தி மிகுதியில் இவர் குலசேகரப் பெருமாள் என அழைக்கப்படுபவர். |
| **கட்டியமதில்** | : திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால் அதற்குக் குலசேகரன் வீதி என்று இன்றும் வழங்கி வருகிறது. |

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| சுடினும் | - சுட்டாலும் | மீளாத | - நீங்காத |
| மாளாத | - தராத | வாள் | - கத்தி |
| மாயத்தால் | - விளையாட்டல் | துயர் | - துன்பம் |

## இலக்கணக் குறிப்பு தருக

**வாளால் அறுத்து** - மூன்றாம் வேற்றுமை

**மாளா காதல்**
**மீளாத் துயர்**
**ஆளா உனதருளே** } - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

**கோட்டம்மா** } - விளித்தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. அறுத்து = அறு +த் + த் +உ**

**அறு** - பகுதி,

**த்** - சந்தி

**த்** - இறந்த கால இடைநிலை

**உ** - வினையெச்ச விகுதி

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. உனதருளே பார்ப்பன் அடியேனே! - யாரிடம் யார் கூறியது ?**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி இ) நோயாளியிடம் மருத்துவர் **[விடை : இறைவனிடம் குலசேகராழ்வார்]**

**2. குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் அகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே.**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி - மரபு வழுவமைதி

அ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி அ) கால வழுவமைதி, இட வழுவமைதி

**[விடை (இ) பால்வழுவமைதி, திணை வழுவமைதி]**

## குறுவினா

**1. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக .**

மருத்துவர், நோயாளியின் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிக்கும் தன்மையால், அப்புண் ஆறிவிடும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது என்ற செய்தியை விளக்குகிறது. பெருமாள் திருமொழி.

## சிறுவினா

**1. "மாளாத காதல் நோயாளன் போல் "**

**உவமை :**

மருத்துவர், உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். (ஆழ்வார் - நோயாளி அவரை நேசிப்பார்)

**சுட்டும் செய்தி :**

வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கும் பெருமாளே !மருத்துவரைப் போன்று நீ எனக்கு துன்பத்தைத் தந்தாலும் ,உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர் பார்த்து வாழ்கிறேன்.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. குல சேகர ஆழ்வார் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?**

- வடமாழி
- தென்மொழி

**2.ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?**

நாலாயிரத் திவ்வியபிரபந்தம்

**3. "நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேன்" என்று யார் யாரிடம் கூறினார்?**

குலசேகர ஆழ்வார் திருவித்துவக் கோட்டம்மாவிடம் கூறினார்.

**4. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்"**
**மாயம் செய்தவர் யார்?**

**மாயம் செய்தவர் வித்துவக்கோட்டம்மா.**

**5. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்"**
**இவ்வடிகளில் சுட்டப்படும் 'மருத்துவன்' மற்றும் 'நோயாளன்' போன்றவர் யார்?**

மருத்துவன் போன்றவர் : திருவித்துக் கோட்டம்மா.

நோயாளன் போன்றவர் : குலசேகர ஆழ்வார்.

**6. நோயாளி மருத்துவரை நேசிக்க காரணம் என்ன?**

உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அதன் நல்ல விளைவு கருதி, தன் நோய் நீங்கும் என்று நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

**7. திருவித்துக்கோடு எங்கே உள்ளது?**

திருவித்துக்கோடு எனும் தலம் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது.

**8. குலசேகர ஆழ்வார் அன்னையாக உருவகித்துப் பாடுவது யாரை?**

வித்துக்கோட்டு இறைவனான உய்ய வந்த பெருமாளைக் குலசேகர ஆழ்வார் அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. நாலாயிரத் திவ்விய பிரபந்தம் - குறிப்பு வரைக**

தமிழகத்தின் பழம் பெரும் சமயங்களுள் ஒன்றான வைணவ நூலாகும்.

- திருமாலைப் பற்றி பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய நூலாகும்.
- இந்நூல் தேனினும் இனிய தீந்தமிழ் பனுவலாக அமைந்துள்ளது.
- இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டது.
- இதைத் திராவிட வேதம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இதைத் தொகுத்தவர் நாத முனிகள் ஆவார்.

**2. குலசேகர ஆழ்வார் - குறிப்பு வரைக**

| | |
|---|---|
| **பெயர்** | : குலசேகர ஆழ்வார் |
| **ஊர்** | : கேரள மாநிலம் -திருவஞ்சைக் களம். |
| **காலம்** | : கி.பி 8 ஆம் நூற்றாண்டு |
| **அறிந்த மொழி** | : வடமொழி ,தென்மாழி |
| **இயற்றிய நுல்** | : தமிழில் பெருமாள் திருமொழியையும் வடமொழி முகுந்த மாலையும். |
| **சிறப்பு** | : இராமபிரானிடம் பக்தி மிகுதியில் இவர் குலசேகரப் பெருமாள் என அழைக்கப்படுவார். |
| **கட்டியமதில்** | : திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால் அதற்குக் குலசேகரன் வீதி என்று இன்றும் வழங்கி வருகிறது. |

**3. குல சேகரர் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது ?**

- மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியல் அறுத்துச் சுட்டாலும் . அது நன்மைக்கே என, உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பார்.
- இறைவனை! நீ உன் விளையாட்டல் எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும் நோயாளியைப் போல் உன் அருளை எதிர் பார்த்து வாழ்கிறேன்.

## கற்பவை கற்றபின்

**1. தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக .**

<u>தமிழர் மருத்துவ முறை</u>

- தமிழர் மருத்துவம் பழங்காலம் தொட்டு மேம்படுத்தப்பட்டு வந்துள்ளது.
- பல்லாண்டு கால அனுபவ வைத்தியம். பக்க விளைவு இல்லா மருத்துவம்.

- மனித உடல் குறித்தும் பழந்தமிழர் மருத்துவம் குறித்தும் சங்க காலந்தொட்டே இருந்தது என்பதற்கான இலக்கியச் சான்றுகள் உள்ளன. மருந்து என தனி அதிகாரத்தையே வள்ளுவர் படைத்துள்ளார்.
- அளவறிந்து உண்பது குறித்து அன்றே சிந்தித்திருக்கிற தமிழர் மரபு முழுக்க அறிவியல் தன்மைகளைத் தனது பண்பாட்டு விழுமியங்கள் மூலம் கண்டு சிறந்திருக்கின்றது.

**நவீன மருத்துவம்**

"நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப மருத்துவமுறை அமைய வேண்டும். ஆனால், நவீன மருத்துவ முறை இவ்வாறு இல்லையே.

- பக்க விளைவுகள் ஏற்படுவதற்கு, நவீன மருத்துவமுறையில் சாத்திய கூறுகள் அதிகம் உண்டு.
- நோய்க்கிருமிகள் உடனடியாக அழிக்கப்படுகின்றன.
- நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியாது . கவனக் குறைவு ஏற்பட்டால் உயிர் இழப்பு கூட ஏற்பட வாய்ப்பு உண்டு.
- அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மருத்துவத்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகிறது. அறிவியல் முறையில் சுகமளித்தவர்களில் சிறந்தவர் ஹிப்போகிரேடஸ்.

---

## தொழில்நுட்பம்


ச

கவிதைப் பேழை

## பரிபாடல்

– கீரந்தையார்

CRFUU1



நெருப்புப் பந்தாய் வந்து குளிர்ந்த பூமி

**பாடல் :**

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி ,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும் ;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் ,அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும்.....

- பா எண். 2 : 4-12.

**பாடலின் பொருள்**

எதுவுமேயில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்தக்குக் காரணமாக கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது. உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொர்ந்தது. பின்னர்ப் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள்

உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. ஆச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| விசும்பு | - வானம் | ஊழி | - யுகம் |
| ஊழ் | - முறை | வளி | - காற்று |
| தண்பெயல் | - குளிர்ந்த மழை | ஆர் தருபு | - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த |
| பீடு | - சிறப்பு | ஈண்டி | - செறிந்து திரண்டு |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| **ஊழ் ஊழ்** | - அடுக்குத் தொடர் | **செந்தீ, கருவளர், தண் பெயல்** | - பண்புத் தொகை |
| **தலைஇய** | - சொல்லிசை அளபெடை | **வாரா** | - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| **வளர் வானம்** | - வினைத்தொகை | **தோன்றி, ஈண்டி, மூழ்கி** | - வினையெச்சம். |
| **கிளர்ந்த** | - பெயரெச்சம் | | |

## பகுபத உறுப்பிலக்கணம்

**அ) தோன்றி = தோன்று + இ**

| | |
|---|---|
| **தோன்று** | - பகுதி |
| **இ** | - வினையெச்ச விகுதி |

**ஆ) கிளர்ந்த = கிளர் +த்(ந்) +த் +அ**

| | |
|---|---|
| **கிளர்** | - பகுதி |
| **த்** | - சந்தி |
| **த் -ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

## ஆசிரியர் குறிப்பு

**பெயர்** : கீரந்தையார், சங்க காலப் புலவர்களுள் ஒருவர்

**தொல்காப்பிய நெறி** : கீரன் தந்தை என்னும் சொற்கள் சேர்ந்ததால் கீரந்தை என அமைதல்.

## நூற் குறிப்பு - பரிபாடல்

- எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
- 25 முதல் 400 வரை அடிகள் கொண்டிருக்கும்
- திருமாலுக்கு 8பாடல்கள், முருகனுக்கு 31 பாடல்கள், காளிக்கு 1 பாடல், வையை ஆறு 26 பாடல்கள், மதுரைக்கு 4 பாடல்கள் என மொத்தம் 70 பாடல்கள் உள்ளன.

- "ஓங்கு பரிபாடல்" என்ற புகழுக்குரிய நூலாகும்.

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?**

வானத்தையும் பேரொலியையும்.

## குறுவினா

**1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக ?**

ஐம்பெரும் பூதங்களாகிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியனவாகும்.

## நெடுவினா

**1. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க .**

கோடிக்கணக்கான விண்மீன்கள் விண்வெளியில் கண் சிமிட்டுகின்றன. இவற்றை உற்றுப் பார்த்த தமிழன் 27 விண்மீன்கள் மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு துல்லியமாக கணக்கிட்டுள்ளான்.

ஒவ்வொரு நாளும் 27 விண்மீன்களின் பக்கத்தில் நிலவு மாறி மாறித் தோன்றும். இந்த 27 விண்மீன்களையும் 12ஆகப் பிரித்தனர் தமிழர். அவ்வாறு பிரித்ததற்குக் காரணம் ஒவ்வொரு மாதமும் இந்த விண்மீன் வட்டங்களின் வழியாகத்தான் கதிரவன் செல்லும் பாதை அமைகிறது.

இந்த 12 வட்டங்களையே பிற்காலத்தில் ராசி என்ற பெயரில் மாற்றி விட்டனர்.

"விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப" என்று பரிபாடல் கூறுகிறது. இப்பாடலில் கார்த்திகை முதலாக 27 விண்மீன்கள் செல்லும் பாதை"சூரிய வீதி தெரு" என்ற எளிய கலைச்சொல்லால் அழைக்கப்படுகிறது. "நில வழி" எனப்படும் ஊழிக்காலம் தோன்றிய பின்னரும் பல காலங்கள் அவ்வாறே மாற்றமின்றிக் கிடந்தது.

முழு உலகம் தோன்றிய முறையானது நெருப்புக் கோளமான சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனல் பிழம்பு நீண்ட காலம் விண்ணில் சுழன்று பின்னர் படிப்படியாக குளிர்ந்து பூமி உருவானதாக அறிவியல் ஆய்வு தெரிவிக்கிறது. அதன் பின்னர் பூமியில் உயிரினங்கள் உருவாயின என்று உலகத்தின் உயிரின பரிணாமத் தோற்ற வரலாறு கூறுகிறது என்று பரிபாடலில் இடம் பெற்ற

"கருவளர் வானத்திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழி ஊழ் உழியும்"

என்ற வரிகள் விளக்குகின்றது.

பழந்தமிழர்கள் பரந்துபட்ட அறிவியல் சிந்தனை உடையவர்கள் ,இயற்கையை விளக்கும் கற்பனைத் திறன் வாய்ந்தவர்கள் என்பதை இதன் மூலம் அறிலாம்.

## பொருத்துக

1. விசும்பு - (அ) சிறப்பு
2. ஊழி - (ஆ) யுகம்
3. ஊழ் - (இ) வானம்
4. பீடு - (ஈ) முறை

[விடை 1-இ 2-ஆ 3- ஈ 4- அ]

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. சங்க இலக்கிய நூல்கள் மூலம் நீவீர் அறியம் செய்தி என்ன ?**

- அறிவாற்றல் சமூக உறவு
- இயற்கையைப் புரிந்து கொள்ளும் திறன்
- பழந்தமிழரின் வாழ்க்கை முறை

**2. பரிபாடல் -குறிப்பு வரைக**

- எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
- அகம், புறம் சார்ந்த நூலாகும்.
- சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.
- "ஓங்கு பரிபாடல்" என்னும் புகழுடையது.

**3. முதல் ஊழி எது ?**

உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானமே முதல் ஊழியாகும்.

**4. பூமி வெள்ளத்தில் மூழ்கக் காரணம் என்ன ?**

தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது .

**5. அண்டப்பகுதி குறித்து மாணிக்கவாசகர் குறிப்பிடும் செய்தி யாது?**

- அண்டப்பகுதியின் உருண்டை வடிவம் ஒப்பற்ற வளமான காட்சியும் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புடன் நூறு கோடிக்கு மேல் விரிந்து நின்றன.
- கதிரவன் ஒளிக்கற்றையில் தெரியும் தூசுக்கள் போல அவை நுண்மையாக இருக்கின்றன.

**6. பால்வீதி குறித்து எட்வின் ஹப்பிள் நிரூப்பித்து கூறிய செய்திகளை எழுதுக.**

- அண்ட பெருவெளியில் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறுதூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுக்களாகத் தெரியும்.

**7. அண்டத் தோற்றத்திற்குக் காரணமானது எது?**

பெருவெளியில் பேரொலியுடன் தோன்றிய கருவே (பரமாணு) அண்டத் தோற்றத்திற்குக் காரணமாகும்.

**8. அணுக்கள் எத்தகைய ஆற்றல் கொண்டுள்ளன?**

அணுக்கள் ஆற்றல் மிக்கவை. உருவம் இல்லாத காற்று முதலான அணுக்கள் கிளர்ந்து, பருப்பொருள்கள் சிதறும் படியாக வானம் தோன்றிக் கடந்து செல்லக் காரணமானவை.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. சங்க இலக்கியமான பரிபாடலில் ஊழிகளை பட்டியலிடுக .**

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும், அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும்

**2. அண்டப் பெருவெளி குறித்து மாணிக்க வாசகர் மற்றும் எட்வின் ஹப்பிள் ஆகியோர் மூலம் அறியப்படும் செய்தி யாது?**

**மாணிக்கவாசகர் கூற்று**

- அண்டப் பகுதியின் உருண்டை வடிவம், ஒப்பற்ற வளமான காட்சியும் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புடன் நூறு கோடிக்கும் மேல் விரிந்து நின்றன.
- "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்" என்று திருவாசகப் பாடலில் மேற்கண்ட செய்தியை 130 ஆண்டுகளுக்கு முன் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

**எட்வின் ஹப்பிள் கூற்று**

- அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறு தூசி போலக் கோடிக்கணக்கான பால் வீதிகள் தூசுகளாகத் தெரியும்.

மேற்கண்ட செய்தியை அமெரிக்க வாணியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924 இல் நிருபித்தார்.

**3. விசும்பில் .... எனத் தொடங்கும் பரிபாடலில் கீரந்தையார் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.**

பெருவெளியில் அண்டத் தோற்றத்தில் கரு பேரொலியுடன் தோன்றியது வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி. பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. பின்னர் மழை பொழிந்த ஊழிக்காலம் வந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. இப்பெரிய உலகத்தில் உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.

**4. "மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் சுட்டல் :**

"மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" - இவ்வடிகள் பரிபாடலில் கீரந்தையார் பாடலில் இடம் பெறுகின்றது.

**பொருள் விளக்கம் :**

மீண்டும் மீண்டும் நிறைவெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இப்பெரிய உலகத்தில் உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

**கற்பவை கற்றபின்**

**1. பரிபாடல் இசைப்பாடல் ஆகும் . பாடப்பகுதியின் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

**2. பரிபாடல் காட்டும் பெருவெடிப்புக் காட்சியைப் படங்களாக வரைந்து பொருத்தமான செய்தியுடன் வழங்குக.**

நெருப்புப் பந்தாய் வந்து குளிர்ந்த பூமி

உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள் சிதறி பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன.


---

விரிவானம்

## தொழில்நுட்பம் ச

## விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

DL8NV1



**பாடநூல் வினா**

**1. அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண் வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக**

**முன்னுரை :**

வாழ்க்கை எவ்வளவு கடினமானதாகும் இருந்தாலும் வெற்றிக்கான வழி நம்பிக்கைகளையும் அறிவியல் கோட்பாடுகளையும் வலியுறுதியதோடு அதன்படி வாழ்ந்தவர் ஸ்டீபன் ஹாக்கிங்.

**பேரண்ட பெருவெடிப்பு**

பேரண்டம் பெருவெடிப்பினால் உண்டானதே என்பதற்கான சான்றுகளை கணிதவியல் அடிப்படையில் எடுத்துக் கூறப்பட்டது. இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னனியில் இருந்தார் என்பதை மறுக்கப்பட்டது. பிரபஞ்சத்தை இயக்க வைக்கும் ஆற்றல்தான் கடவுள் என்றும் கூற வேண்டியுள்ளது.

**பால்வீதி ___ விண்வெளி**

வானத்தில் ஒரு கருத்துளை காணப்பட்டது.ஸ்டீபன் ஹாக்கிற்கு அருகில் சென்று அதன் விபரத்தைக் கேட்டான். இது ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகளை வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். ஒரு சில நாள்கள் கழித்து கதிர் வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் வெடித்து மறைந்து விடும் என்று கூறினார். நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிருகின்றன அவற்றுள் ஒன்றுதான் ஞாயிறு. விண்மீனின் ஆயுட்கால முடிவில் ஈர்ப்புவிசையால் சுருங்கத் தொடங்கும். சுருங்கச் சுருங்க ஈர்ப்பு விசை அதிகரித்துக் கொண்டே செல்லும் என்று கூறினார்.

**கதிர் வீச்சு**

கருத்துளை என்பது ஒரு படைப்பின்ஆற்றல் கருத்துளையினுள் செல்லக்கூடிய எந்த ஒன்றும் வெளியில் வரவே முடியாது. கருத்துளையின் ஈர்ப்பு பகுதியிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக்கொண்டே இருந்தன. கருத்துளை கருப்பாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால், நேரில் பார்த்த போது தான் அறிந்து கொண்டேன். அண்ட வெளியில் காணப்படும் கருத்துளை படைப்பின் ஆற்றலே என்பதை நான் உணர்ந்தேன்.

**முடிவுரை:**

நாங்கள் விண்வெளியில் பயணம் மேற்கொண்டது. மிகவும் பயனுள்ளதாக இருந்தது. புதுமையான அனுபவமும் இருந்தது. எங்களுக்குத் தெரியாத நிகழ்வுகளை நன்கு பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்டோம் .மன மகிழ்வோடு பூமிக்கும் வந்து சேர்ந்தோம். எங்களை வரவேற்றனர் . பாராட்டி வாழ்த்தும் தெரிவித்தனர். இந்நிகழ்வு என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகவே இருக்கும்.

---

## கூடுதல் வினா

**1. "ஸ்டீபன் ஹாக்கிங்" என்ற அறிவியலாளர் பற்றிய கட்டுரை வரைக.**

ஸ்டீவன் ஹாக்கிங் ஒரு கோட்பாடு அறிவியலாளர், அண்டவியலாளர் நூலாசிரியர் என்றெல்லாம் போற்றக்கூடியவர்.

இவர் ஜனவரி 8 ஆம் நாள் 1942 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தவர் . பள்ளிப்படிப்பில் செயிண்ட் இல்பான்சு பள்ளியில் முடித்தவர். இளங்கலை ஆக்ஸ்போர்டு பல்கலையிலும் முதுகலை கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் முடித்துள்ளார். அண்டவியல் மையத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.

இவர் உரோசர் பெனரோசுடன் இணைந்து பொதுச்சார்புக் கோட்பாட்டில் புவி ஈர்ப்பு அருநிலைத் தேற்றங்களை நிறுவியமை, ஆக்கிங்கு கதிரியக்கம் என அழைக்கப்படும் கருத்துளையின் கதிர்வீச்சு உமிழ் தலை எதிர்வு கூறியமை போன்ற அறிவியல் ஆய்வுகளுக்காகப் பெரிதும் அறியப்படுத்துகிறார். இவர் முதன் முதலில் அண்டவியலுக்கான கோட்பாட்டை உருவாக்கியவர். பொதுச் சார்பு கோட்பாடு, குவாண்டம் இயங்கியல் ஆகியவற்றின் மூலம் விளக்கப்படுத்தினார். இவருக்கு 21 ஆம் அகவையில் நரம்பு பாதிப்பால் அவதிப்பட்டு படுக்கையிலே கிடந்தார். நாளடைவில் பேசும் திறனையும் இழந்தார்.

இவரின் ஆராய்ச்சிக்குக் கிடைத்த விருதுகள் பல. அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருது, உல்ஃப் விருது ,காப்ளி பதக்கம், அடிப்படை இயற்பியல் பரிசு, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது, ஐன்மேன் பரிசு கோலி பதக்கம் முதலிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவர் நரம்பணு நோயால் தாக்குண்ட நிலையில் ,செவித்திறன் குறைந்த போதும் கணினியூடகப் பேச்சுத் தொகுப்பி மூலம் மற்றவர்களைத் தொடர்பு கொண்டவர். தமது 60 ஆவது வயதில் சூடான காற்று நிரப்பிய பலூனில் வானில் பறந்து பிறந்த நாளைக் கொண்டாடினார்.

இயற்பியல் கணிதத்தை மாணவர்களுக்கு எளிய நடையில் புதிய கோணத்தில் உருவாக்கி
"ஒரு வரலாற்றுச் சுருக்கம் " என்ற திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துப் பரிசும் பெற்றார்.
அறிவியல் உலகில் மட்டுமன்றி சமூக உளவியல் அடிப்படையிலும் தன்னம்பிக்கையின் சிகரமாக விளங்கிய ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் தனது 76 ஆவது வயதில் மார்ச் 14, 2018 இல் தம் உலக வாழ்வை நீத்தார்.

## கற்பவை கற்றபின்

"அறிவை விட மிகவும் முக்கியமானது கற்பனைத்திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போதும் அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று இனிநாம் அறிந்து கொள்ளப்போவதையும் உள்ளடக்கியது " — "ஐன்ஸ்டைன்

"வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான்" வெல்வேன், அதன்மூலம் மனித இனம் தொடர வழி வகுப்பேன்" ஸ்டீபன் ஹாக்கிங்.

**1. அகிலா** : ஒரு மனிதன் வாழ்வில் முன்னேற அறிவை விட முக்கியமானது கற்பனைத்திறன் மட்டுமல்ல தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் ஆகும்.

**அணிதா** : ஆமாம். இத்தகைய திறன்களையெல்லாம் பெற்று வாழ்வில் உணர்ந்தவர்தான் ஸ்டீபன் ஹாக்கிங்.

**அகிலா** : ஆமாம். பல்வேறு சிறப்புடையவராக இருந்தாலும், மருத்துவரால் கைவிடப்பட்டவர் சில மாதங்களே வாழ்பவர் என்று கூறிய போதும் அவர் 53 ஆண்டுகள் வாழ்ந்தார்.

**அணிதா** : ஆமாம். இது அவரது அறிவுத்திறன் மட்டுமல்ல அவரது தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் தான் நரம்பு பாதிக்கப்பட்ட போதும் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து வெற்றியும் அடைந்து , 53 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்.

**அகிலா** : இவரின் வாழக்கையானது நமக்கு ஒரு சிறந்த பாடமாக அமைகின்றது

**அணிதா** : இவரைப் போல் நாமும் விடா முயற்சியோடு ,தன்னம்பிக்கையோடு வாழ்ந்து மக்களுக்கு நம்மால் முடிந்தவரை நன்மை செய்ய வேண்டும்.

**2. கருத்துளை சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுதுக.**

கருத்துளை என்பது கருங்குழி போன்று இருக்கும். வலுவான ஈர்ப்பு சக்தியையும் கொண்டுள்ளது. நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் ஞாயிறு. இதன் ஆயுட்கால முடிவினைப் பற்றி அறியலாம்.

ஒரு விண்மீனின் ஆயுட்கால முடிவில் உள் நோக்கி ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் தான் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பு ஆற்றல் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கருத்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதன் முதலில் வெளியிட்டவர் "ஜான்வீலர்". பிரபஞ்சத்தின் மையமே மாபெரும் கருத்துளைதான். எரிபொருள் தீர்ந்த விண்மீன்கள் இறுதியில் அடர்த்தி அதிகமாகி கருத்துளையாகக் கருதப்படுகிறது. இதன் அருகில் செல்லும் பால்வளி மண்டலம் சிதைந்து வெளிப்படும் எக்ஸ் கதிர்கள்.

கருத்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் . கருத்துளை பொதுவாக கருப்பாக இருப்பதில்லை. கருத்துளையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கதிர் வீச்சும் அணுத்துகள்களும் கசிந்து கருத்துளை வெடித்து மறைந்து விடும். இதை கோட்பாடுகளாக வெளியிடாமல் விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு விளக்கியதால் உலகம் கருத்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்து கொண்டது.

கற்கண்டு

தொழில்நுட்பம் ச

# இலக்கணம் – பொது

E1RIWC

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. வருகின்ற கோடை விடுமுறையில காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

**விடை :**

இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது உறுதித்தன்மையே ஆகும். "ஆரல்வாய் மொழிக்குச் செல்ல இருக்கிறேன்" என்று கூறாமல் "செல்கிறேன்" என்று உறுதித்தன்மையைக் கூறுவதால் இது கால வழுவமைதியாகும்.

**2. சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான் .புதியவர்களைப் பார்த்து கத்துவானே தவிர கடிக்க மாட்டான் " என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.**

**விடை :**

"சீசர் எப்போதும் என்சொல்பேச்சைக்கேட்கும். : புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர கடிக்காது".

## சிறுவினா

**1. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது . தந்தை என்னிடம் "இலட்சுமி கூப்பிடுகிறாள் ,போய்ப் பார்" என்றார் இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா ?" என்று கேட்டு, (அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் " நீயும் இவனும) விளையாடுங்கள்" என்று கூறினேன் . அவிழ்த்துவிடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.**

**இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக .**

**1. நேற்று பெய்த மழை தொட்டியை நிறைத்திருந்தது**

நிறைந்தது - கால வழுவமைதி - (விரைவு)

**2. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்ற மாடு கத்தியது.**

குட்டி - மரபு வழுவமைதி (சிறப்பு)

**3. இலட்சுமி கூப்பிடுகிறாள் போய் பார்.**

இலட்சுமி - மாட்டைக் குறிக்கிறது (திணை வழுவமைதி) (உயர்வு )

**4. இதோ சென்றுவிட்டேன்.**

சென்று விட்டேன் - கால வழுவமைதி - (விரைவு)

**5. என்னடா துள்ளி விளையாட வேண்டுமா?**

என்னடா? - மாட்டைக் குறிக்கிறது திணை வழுவமைதி (மகிழ்ச்சி)

**6. அவனை அவிழ்த்து விட்டேன்.**

அவனை - பசு மாட்டைக் குறிக்கிறது திணை வழுவமைதி (உயர்வு)

**7. இலட்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள்.**

இலட்சுமி - பசுவைக் குறிக்கிறது.

நீரைக் குடித்தாள் - திணை வழுவமைதி ( உயர்வு)

## பொருத்துக

1. (அ) நான், யான், நாம், யாம் - 1) தன்மை வினைகள்.
   (ஆ) வந்தேன், வந்தோம் - 2) தன்மைப் பெயர்கள்
   (இ) நீ, நீர், நீவீர், நீங்கள் - 3) முன்னிலை வினைகள்
   (ஈ) நடந்தாய், வந்தீர், சென்றீர் - 4) முன்னிலை பெயர்கள் **[விடை : (அ) -2 (ஆ) -1 (இ) -4 (ஈ) -3]**
2. (அ) செழியன் வந்தது - 1) காலவழு
   (ஆ) கண்ணகி வந்தான் - 2) இடவழு
   (இ) நீ வந்தேன் - 3) பால்வழு
   (ஈ) நேற்று வருவான் - 4) திணை வழு **[விடை : (அ) 4 (ஆ) 3 (இ) 2 (ஈ) 1]**
3. (அ) வீரன், அண்ணன், மருதன் - 1) பெண்பால்
   (ஆ) மகள், அரசி, தலைவி - 2) பலர்பால்
   (இ) மக்கள், பெண்கள், ஆடவர் - 3) ஒன்றன் பால்
   (ஈ) யானை, புறா, மலை - 4) ஆண்பால் **[விடை : (அ) - 4 (ஆ) -1 (இ) -2 (ஈ) -3]**
4. (அ) செழியன் வந்து - 1) திணை வழாநிலை
   (ஆ) செழியன் வந்தான் - 2) திணை வழு
   (இ) கண்ணகி உண்டான் - 3) பால் வழாநிலை
   (ஈ) கண்ணகி உண்டாள் - 4) பால் வழு. **[விடை : (அ) - 4 (ஆ) - 1 (இ) - 2 (ஈ) 3]**

5. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 டன் பொருத்துக.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ) நாய் | 1. கரையும் |
| ஆ) காகம் | 2. கூவும் |
| இ) கோழி | 3. குரைக்கும் |
| ஈ) குயில் | 4. கொக்கரிக்கும் |

அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 1, 4, 2 **[விடை: 3, 1, 4, 2]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. திணை எத்தனை வகைப்படும்? ஆவை யாவை?**

திணை இரண்டு வகைப்படும்

அவை: உயர்திணை அஃறிணை.

**2. பால் என்றால் என்ன? அதன் வகையினைக் கூறுக.**

திணையின் உட்பிரிவு பால் எனப்படும்.

ஆண்பால் , பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

**4. அஃறிணைக்குரிய பால்கள் எத்தனை? அவை யாவை?**

இரண்டு வகைப்படும். அவை ஒன்றன்பால், பலவின்பால்.

**5. வழாநிலை எள்றால் என்ன?**

இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

**6. வழு நிலை என்றால் என்ன?**

இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு நிலை எனப்படும்.

**7. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இடம் மூன்று வகைப்படும்

**அவை :**

- தன்மை
- முன்னிலை
- படர்க்கை.

**8. வழு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வழு ஏழு வகைப்படும்.

**அவை :**

- திணைவழு
- பால்வழு
- இடவழு
- காலவழு
- வினாவழு
- விடை வழு
- மரபுவழு.

**9. வழுவமைதி என்றால் என்ன?**

இலக்கண முறையின்றி அமைந்தாலும் இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி பிழையன்று இலக்கணமுடையது போல் கூறுவது வழுவமைதி எனப்படும்.

**10. வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஐந்து வகைப்படும். அவை :

திணைவழுவமைதி, பால்வழுவமைதி, இடவழுவமைதி, காலவழுவமைதி, மரபுவழுவமைதி.

**11. திணை வழுவமைதி - விளக்குக.**

"என் அம்மை வந்தாள்" என்று பசுமாட்டைப் பார்த்துக் கூறுவது திணை வழுவாகும்.

உவப்பின் காரணமாக அஃறிணை உயர்திணையாகக் கூறுவதால் இது திணை வழுவமைதியாகும்.

**12. பால் வழுவமைதி விளக்குக.**

செல்வன் வந்தார்" - இதில் ஆண்பால் பெயர் பலர்பால் வினைகொண்டு முடிந்துள்ளது பால்வழு.

உயர்வின் காரணமாக ஆண்பாலை பலர்பாலாகக் கூறுவதால் இது பால் வழுவமைதியாகும்.

**13. இடவழுவமைதி - விளக்குக.**

மணி என்பவன் தன்னைப் பற்றி பிறரிடம் கூறும் போதும் "இந்த மணி ஒரு நாளும் பொய் கூற மாட்டான்" எனக் கூறுதல்.

தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவதால் இது இட வழுவமைதியாகும்.

**14. கால வழுவமைதி - விளக்குக.**

குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்"

என்பது கால வழுவாகும்.

வருகையின் உறுதித்தன்மை காரணமாக கால வழுவாயினும் கால வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

**15. மரபு வழுவமைதி ___ விளக்குக.**

"கத்தும் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும்" என்று பாரதியார் கூறுகிறார். இது மரபு வழு.

குயில் கூவும் என்பதே மரபு. குயில் கத்தும் என்பது மரபு வழு. பாரதி கூவும் குயிலோசை என்று கூறாமல் கத்தும் குயிலோசை என்று கூறியிருப்பது மரபு வழுவாயினும் அவர் மகாகவி யாதலால் அது மரபு வழுவமைதியாகக் கூறப்படுகிறது.

**16. வழா நிலை எத்தனை வகைப்படும் ? எவைய ாவை**

ஏழு வகைப்படும்.

**அவை :**

- திணை வழா நிலை
- பால் வழா நிலை
- இடவழாநிலை
- கால வழா நிலை
- வினா வழா நிலை.
- விடை வழா நிலை
- மரபு வழா நிலை.

**17. திணை என்பது யாது?**

'ஒழுக்கம்' அல்லது 'பிரிவு' என்பதே திணை எனப்படும்.

**18. பால் என்றால் என்ன?**

பால் என்பது பகுதி, பிரிவு எனப்படும். பால் என்பது திணையின் உட்பிரிவாகும்.

**19. உயர்திணைப் பால் பிரிவுகளுக்குச் சான்று தருக.**

ஆண்பால் - மன்னன், கண்ணன்.

பெண்பால் - தலைவி, அரசி.

பலர்பால் - ஆடவர், மகளிர்.

**20. உயர்திணை என்றால் என்ன?**

உயர்வாகிய ஒழுகலாறு உடைய மக்கள், தேவர், நரகர் ஆகியோர் உயர்திணை.

**எ.கா :** மனிதன், இந்திரன், நரகர்

**21. அஃறிணை என்றால் என்ன?**

(அல் + திணை) - அஃறிணை. உயர்வு அல்லாத ஒழுக்கம் உடையது அஃறிணை எனப்படும்.

**எ.கா :** காளை, மயில், வீடு.

**22. வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வழுவமைதி ஐந்து வகைப்படும். அவை,

திணைவழுவமைதி, பால் வழுவமைதி, இடவழுவமைதி, கால வழுவமைதி, மரபு வழுவமைதி.

**23. "நான் தேர்வில் தேர்ச்சியடைந்து விட்டேன்" என்று தேர்வு முடிவுகள் வெளிவரும் முன்பு கூறும் வழுவமைதி யாது?**

கால வழுவமைதி : நம்பிக்கையின் அடிப்படையில் கூறப்படுகிறது.

**24. வழு - வழா நிலை இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைக் கூறு.**

| வழு நிலை | வழா நிலை |
|---|---|
| இலக்கண முறையின்றிப் பேசுவதும், எழுதுவதும் வழு நிலை. | இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும், எழுதுவதும் வழா நிலை. |

## கற்பவை கற்றபின்

**1. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

**விடை : கால வழுவமைதி**

ஆ) அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள்.

**விடை : இட வழுவமைதி**

இ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.

**விடை : இடவழுவமைதி**

ஈ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

**விடை : கால வழுவமைதி**

உ) செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

**விடை : பால் வழுவமைதி**

**2. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக**

அ)தந்தை , " மகனே ! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா ?" என்று சொன்னார். (ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக)

தாய், " மகளே !நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வா "! என்று சொன்னார்.

ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

அக்கா நேற்று வீட்டிற்கு வந்தாள் . அக்கா புறப்படும் போது அம்மா வழியனுப்பினார்.

இ) "இதோ முடித்துவிடுவேன்" என்று செயலை முடிக்கும்முன்பே கூறினார். (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)

"இதோ முடித்துவிட்டேன் " என்று செயலை முடிக்கும் முன்னர் கூறினார்.

ஈ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. (படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)

நீ என்னிடமும் அவனிடம் செய்தியை இன்னும் கூறவில்லை

உ) குழந்தை அழுகிறான், பார். (வழுவை வழாநிலையாக மாற்றுக)

குழந்தை அழுகிறது பார்.

## மொழியை ஆள்வோம்

### மொழிபெயர்க்க

**Malar** : Devi, switch off the lights when you leave the room.

**Devi** : Yeah. We have to save electricity.

**Malar** : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

**Devi** : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

**Malar** : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

**Devi** : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!.

**மலர்** : தேவி, இந்த அறையை விட்டு வெளியே செல்லும் போது மின் விளக்குகளை அணைத்து விடு.

**தேவி** : ஆமாம். நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும்.

**மலர்** : நம் நாடு தெரு விளக்கினை எறியச் செய்வதற்கு அதிக மின்சாரத்தைச் செலவு செய்கிறது.

**தேவி** : யாருக்குத் தெரியும்? நம்நாடு வருங்காலத்தில் செயற்கை நிலாவை நிறுவி இரவில் வானத்தில் விளக்குகளை எரிய வைக்கலாம்.

**மலர்** : வருங்காலத்தில் வேறு சில நாடுகள் ஒளியூட்டச் செயற்கைக் கோள்களை தொடங்கப் போகிறது என்பதை நான் படித்துள்ளேன்.

**தேவி** : நல்ல செய்தி!நாம் செயற்கை நிலவை நிறுவினால் அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத நேரத்தில் ஒளியூட்டி நிவாராண உதவிகளைச் செய்ய வழி வகுக்கிறது.

---

### வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக

**காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?**

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும்.

பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

யுரேகா! யுரேகா! - அறிவியல் வெளியீடு

**காகத்திற்கு காது உண்டா ? அதற்கு காது கேட்குமா ?**

எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித் துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலுட்டிகளில் உள்ளது போல புறச் செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு. காது கேட்கும்.

பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

---

## கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க

அ) கொடு - கோடு

மணி **கொடு**த்த அளவுகோலைக் கொண்டு **கோடு** வரைந்தேன்.

ஆ) இயற்கை - செயற்கை

**இயற்கை**யுடன் வாழ் **செயற்கை**யுடன் வாழாதே.

இ) கொள்-கோள்

**கோள்**களின் இயக்கம் பற்றி அறிந்து **கொள்**

ஈ) சிறு - சீறு

**சிறு** புற்றிலிருந்து வந்த பாம்பு **சீறு**வதைக் கண்டேன்

உ) தான் -தாம்

**தான்** செய்யும் தவறு **தாம்** அறிந்தே செய்யக்கூடாது.

ஊ) விதி - வீதி

ஹரிச்சந்திரனின் தலை **விதி** அவனை **வீதி**யில் நிறுத்தியது

---

## பத்தியைப் படித்து பதில் தருக

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாககத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**வினாக்கள் :**

1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவீர் கருதுவன யாவை?

**விடைகள் :**

1. மீண்டும் மீண்டும்.
2. புவி ,தொடர்ந்து பெய்த மழையால் வெள்ளத்தில் மூழ்கியது
3. பெய்த மழை - பெய்மழை (வினைத்தொகை )

**4. அறிவியல் கொள்கை**

பருப்பொருள்கள் சிதறும்படியாக வெப்பமும் மழையும் மாறிமாறி வருவதால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றுகிறது .

5. வெப்பமும், குளிர்ச்சியும் மாறி மாறி நடைபெறுவதால் உயிர்கள் ஏற்ற சூழலாகும்.

## கட்டுரை எழுதுக

### விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்

**குறிப்புச் சட்டம்**

- முன்னுரை
- பிறப்பு
- கல்வி
- ஆராய்ச்சி நிலையங்கள்
- விண்வெளிப் பயணம்
- விருதுகளும் சிறப்பும்
- முடிவுரை

**முன்னுரை**

"வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்" சந்திர மண்டலத்து இயல் கண்டு தெளிவோம்" என்றான் பாரதி". ஆணுக்குப் பெண் சரிசமம்" என்ற கருத்தை மெய்பிக்கும் வகையில் விண்வெளியில் கால் பதித்த இந்தியாவின் முதல் பெண்மணி "கல்பனா சாவ்லா" இவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பிறப்பு :**

ஹரியானா மாநிலத்தில் 1961 ஆம் ஆண்டு ஜீலை 1 ஆம் நாள் பனாராஸ்லால் சாவ்லாவுக்கும் சன்யோகிதா தேவிக்கும் மகளாக கல்பனா சாவ்லா பிறந்தார்.

**கல்வி :**

கர்னலில் உள்ள அரசு பள்ளியில் ஆரம்பக்கல்வியைத் தொடங்கி, பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தித் துறையில் இளங்கலைப் பட்டமும், டெக்சாஸ் பல்கலைக் கழகத்தில் விண்வெளிப் பொறியியல் துறையில் முதுகலைப் பட்டமும் பெற்றார் . 1986 இல் கொலராடோ பல்கலைக்கழகத்தில் இரண்டாவது முதுகலைப் பட்டமும்,1988 இல் விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

**ஆராய்ச்சி நிலையங்கள் :**

முதலில் விண்வெளி ஆய்வு மையம் பெங்களூரில் அமைக்கப்பட்து. ஆந்திராவில் ஸ்ரீஹரி கோட்டாவில் அமைந்துள்ள விண்வெளி ஆராய்ச்சிக் கூடமே முதன்மையானது. அடுத்து கேராளாவின் தும்பா ராக்கெட் தளமும், தமிழகத்தில் நெல்லையில் உள்ள மகேந்திரகிரி திரவத் திட்டமும் சிறப்பு வாய்ந்தவையாகும். அகமதாபாத்திலும் விண்வெளி ஆய்வு மையம் உள்ளது.

**விண் வெளி ப் பயணம் :**

கல்பனா சாவ்லா 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த இவர் கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி. எஸ் 87 இல் பயணம் செய்வதற்கு தேர்வு செய்யப்பட்டார். விண்வெளி சென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் நாள் விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்தலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி. எஸ் 107 அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் பயணித்த விண்கலம், 16நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பிப்ரவரி 1 ஆம் நாள் பூமிக்குத் திரும்பிக் கொண்டியிருந்த போது அமெரிக்காவின் டெக்சாஸ் வான்வெளியில் வெடித்துச் சிதறியது. இதில் கல்பனா உட்பட 7 வீரர்களும் பலியாகினர்.

**விருதுகளும் சிறப்புகளும் :**

- கல்பனா சாவ்லாவை பெருமைப்படுத்தும் விதமாக நியூயார்க் நகரில் உள்ள ஒரு சாலைக்கு அவருடைய பெயர் வைக்கப்பட்டுள்ளது.
- வீரமங்கையை இழந்த இந்தியா ஆண்டுதோறும் பிப்ரவரி 1 ஆம் நாள் கல்பனா சாவ்லாவின் நினைவு தினத்தைக் கடைப்பிடித்து வருகிறது.

- விண்வெளிப்பதக்கம்
- நாசாவின் விண்ணோட்ரப் பதக்கம்
- நாசாவின் சிறப்புமிகு சேவைக்கான பதக்கம்
- 2004 ஆம் ஆண்டிலிருந்து "இளம் பெண் விஞ்ஞானிகளை" ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசாங்கம் "கல்பனா சாவ்லா" விருதினை வழங்கி வருகிறது.

**முடிவுரை :**

பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்தவர் கல்பனா சாவ்லா ஆவார். விடா முயற்சியுடனும் முழுமனதோடும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திச் சென்ற வீரப்பெண்ணாகிய கல்பனா சாவ்லாவை என்றும் போற்றுவோம் வாழ்வில் உயர்வோம்.

---

## நயம் பாராட்டுக

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

- பாரதியார்

**திரண்ட கருத்து:-**

நிலா, விண்மீன், காற்று, இலை ஆகிய அனைத்தையும் அமுதமாக நினைத்து அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றோம். இந்த இயற்கையில் நம் மனதினைப் பறவையாகப் பறக்கவிட்டு மகிழ்ச்சியடைவோம். இதற்கு உவமையாக பலாச்சுளையின் மணத்தை நுகர்வது போல, வண்டு ரீங்காரம் இடுவது போல இவ்வியற்கையைப் பாடி மகிழ்வோம் என்று பாரதியார் கூறுகிறார்.

**மையக்கருத்து**

பாரதியார் இயற்கையின் அழகினை சிறப்பாக உயர்த்திக் கூறியுள்ளார்.

**மோனை நயம் :**

செய்யளில் சீர் தோறும் முதல் எழுத்து ஒன்று வருவதால் மோனை நயம் இடம் பெற்றுள்ளது .

**சான்று :** குலாவும் - குழம்பைக் - குடித்தொரு - பலாவின் - பாடுவதும்

**எதுகை நயம்**

செய்யளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதால் எதுகை நயம் இடம் பெற்றுள்ளது.

**சான்று :** நிலாவையும்
குலாவும்
உலாவும் பலாவின்

**அணிநயம்**

செய்யுளில் கவிஞர் இயற்கையைப் பற்றி மிகவும் உயர்வாக ,அதாவது இயல்பாக நிகழ்கின்ற நிகழ்ச்சியை உயர்வுபடுத்திக் கூறியதால் இதில் உயர்வு நவிற்சியணி இடம் பெற்றுள்ளது.

**தலைப்பு**

இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு

”இயற்கையின் சிறப்பு ”

## மொழியோடு விளையாடு

### தொடரைப் படித்து விடையைக் கண்டறிக

[சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து]

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **கற்றல்.**
2. விதைக்கத் தேவை எரு எனில் ,கதைக்குத் தேவை **கரு.**
3. கல் சிலை ஆகுமெனில் நெல் **சோறு** ஆகும்.
4. குரலில் இருந்தது பேச்சு எனில் ,விரலில் இருந்து **எழுத்து.**
5. மீன் இருப்பது நீரில் ,தேன் இருப்பது **பூவில்**

### குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக

| குறிப்பு | எதிர்மறையான சொற்கள் |
|---|---|
| மீளாத்துயர் | மீண்ட இன்பம் |
| கொடுத்துச் சிவந்த | கொடுக்காது கருத்த |
| முறைத்துக் காட்டு | வெளிப்படுத்தி மூடு |
| அருகில் அமர்க | தொலைவில் நிற்க |
| பெரியவரின் அமைதி | சிறியவரின் ஆரவாரம் |
| புயலுக்குப் பின் | தென்றலுக்கு முன் |

### அகராதியில் காண்க

அவிர்தல் - விரிதல், பிரகாசித்தல்

அழல் - நெருப்பு, கள்ளி

உவா - இளமை, முழுநிலா

கங்குல் - இரவு, இருள்

கனலி - சூரியன், நெருப்பு

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

| | |
|---|---|
|  | மெல்ல மெல்ல கால் பதித்த நான்<br>கீழ் மக்கள் முதல் மேல் மக்கள் வரை<br>மாட்டிற்குப் போடுவது போல்<br>மானிடருக்கும் மூக்கணாங்கயிறு இட்டு<br>என் கட்டளைப்படி நடக்கச் செய்தேன்<br>திறன் பேசி நாயகனாக வலம் வருகிறேன். |

## கலைச் சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Nanotechnology | - மீநுண்தொழில்நுட்பம் | Biotechnology | - உயிரித் தொழில்நுட்பம் |
| Ultraviolet rays | - புற ஊதாக் கதிர்கள் | Space Technology | - விண்வெளித் தொழில்நுட்பம் |
| Cosmic rays | - விண்வெளிக் கதிர்கள் | Infrared rays | - அகச்சிவப்புக் கதிர்கள் |

## நிற்க அதற்குத் தக



தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி. திறன் பேசியிலேயே விளையாடிக்கொண்டிருக்கும் தங்கை : காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன் :
எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியப்படி இருக்கும் தோழி.

இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

1. கோலி, பம்பரம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்யலாம்.
2. நல்ல புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பேன்.
3. உடற்பயிற்சி, யோகா செய்ய ஊக்குவிப்பேன்.
4. பல்வேறு விளையாட்டுகளை விளையாட பயிற்சி அளித்து உடலும் உள்ளமும் புத்துணர்வு பெற வழி வகுப்பேன்.

## இயல் 4

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
2. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
3. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே ___________

II. விடையளி: 3x2=6

4. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
5. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
6. 'இலா' என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.

III. விடையளி: 2x4=8

7. வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.
8. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

IV. விடையளி: 1x6=6

9. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

V. அடிபிறழாமல் எழுதுக: 1x5=5

10. வாளால் .... எனத் தொடங்கும் "பெருமாள் திருமொழி" பாடலை எழுதுக.

VI. மொழிப்பயிற்சி

11. இலக்கணக் குறிப்பு தருக: வாரா. 1x1=1
12. பொருள் தருக: கங்குல் 1x1=1
13. ஒரே சொற்றொடராக்குக: சிறு - சீறு 1x2=2
14. நிறுத்தற்குறி இடுக: 1x1=1

    ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ பெரியதோ என்று கேட்டல்

15. மொழிபெயர்க்க: 1x2=2

    Malar : Devi, switch off the lights when you leave the room.
    Devi : Yeah, we have to save electricity.

16. பகுபத உறுப்பிலக்கணம் தருக: கிளர்ந்த. 1x2=2
17. விடைக்கேற்ற வினா அமை: 1x1=1

    பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் 'இலா' ஆகும்.

18. சந்திப்பிழை நீக்கி எழுதுக: 1x1=1

    இணைய பயன்பாடு மின்னணு புரட்சிக்கு உருவாக காரணமாயின.

19. ஒருமை பன்மைப் பிழையை நீக்கி எழுதுக: 1x1=1

    இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகிறது.

VII. 'பா' நயம் பாராட்டுக. 1x5=5

20. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
    நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
    கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்

ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? - பாரதியார்.

VIII. பத்தியைப் படித்துப் பதில் தருக: 1x5=5

பருப்பொருள்கள் சிதறுப்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

வினாக்கள்:

1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கும் ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## இயல் 4

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
2. 'மீளாத்துயர்' - இத்தொடரில் உள்ள இலக்கணக் குறிப்பு எழுதுக.
3. "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" என்ற பரிபாடலை எழுதியவர் __________.

II. விடையளி: 3x2=6

4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
5. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கின்றேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?
6. அண்டப்பகுதி குறித்து மாணிக்கவாசகர் குறிப்பிடும் செய்தி யாது?

III. விடையளி: 2x4=8

7. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
8. கால வழுவமைதி, மரபு வழுவமைதி - விளக்குக.

IV. விடையளி: 1x6=6

9. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல் இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்துக் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில் .......

V. பாடலைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடை எழுதுக: 1x5=5

10. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

வினாக்கள்:

1. இப்பாடல் இடம் பெறும் நூல் எது?
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
3. இலக்கணக் குறிப்பு தருக: மீளாத் துயர்.
4. மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
5. 'மாயம்' என்ற சொல்லின் பொருள் யாது?

VI. 11. "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. 1x7=7

VII. 12. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1x5=5



VIII. மொழிப்பயிற்சி

13. கலைச் சொல் அறிக: Ultraviolet rays. 1x1=1

14. பொருள் தருக: அழல். 1x1=1

15. இலக்கணக் குறிப்பு தருக: வளர்வானம். 1x1=1

16. பகுபத உறுப்பிலக்கணம் தருக: தோன்றி. 1x1=1

17. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடராக அமைக்க: 1x1=1
இயற்கை - செயற்கை

18. விடைக்கேற்ற வினா அமை: 1x1=1
பேரண்டப் பெருவெடிப்பு, கருத்துளைகள் பற்றியான ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகளில் முக்கியமானவையாகும்.

19. பரிபாடல் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். 1x1=1
- ஒருமை பன்மைப் பிழை நீக்குக.

20. சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக: 1x1=1
கல்வி துறையில் மென்பொருள் தொழில்நுட்பத்தை பலவிதங்களில் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

21. மொழிபெயர்க்க: 1x2=2

Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

இயல் ஐந்து

*கல்வி*

# மணற்கேணி




**கற்றல் நோக்கங்கள்**

- மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையையும் நுட்பத்தையும் உணர்ந்து மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படித்தல், புதிய பகுதிகளைத் தேவைகேற்ப மொழிபெயர்த்தல்.
- கல்வி சார்ந்த கருத்துகளைச் செய்யுள் வாயிலாக அறியவும், சுவைக்கவும், இன்றைய கல்வியுடன் ஒப்பிடவும் அறிதல்.
- படித்துப் பொருள் உணர்வதுடன் கருத்துகளைத் தொகுத்து வரிசைப்படுத்தி எளிமையாக வழங்கும் திறன் பெறுதல்.
- பொருள்கொள்ளும் முறையறிந்து செய்யுளின் பொருளைப் புரிந்துகொள்ளுதல்.

உரைநடை உலகம்

# கல்வி ரு மொழிபெயர்ப்புக் கல்வி

EVJCXC



டேனிஷ் கிறித்துவ நிறுவனத்தால் 723ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் மொழிபெயர்த்து அச்சுருவாக்கம் பெற்ற தமிழ் நூல்.

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் " என்னும் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பு உணர்த்தும் செய்தி யாது?**

அ) சங்க காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது

(இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது

(ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

**[விடை : சங்க காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது]**

## குறுவினா

**1. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக .**

- நான் கற்க விரும்பும் மொழி மலையாளம்
- தமிழ்ச்சொற்களை அதிகமாகப் பயன்படுத்தும் மொழி
- இம்மொழியை எளிமையாகக் கற்று விடலாம்
- திராவிட மொழிகளின் ஒன்றாகத் திகழ்கிறது.
- தமிழ்மொழியைப் போன்றே சொல்லாட்சி முறை எளிமையாக உள்ளது.

## சிறுவினா

**1. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது. ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது, விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்கத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பர். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

1. மொழிபெயர்ப்பு என்பது யாது?
2. ஐ.நா. அவையில் பார்வையாளர், மற்றவர் பேசுவதை எவ்வாறு புரிந்து கொள்வார்?
3. 'Head phone' என்பதன் தமிழாக்கம் என்ன?
4. ஐ.நா. அவையில் மொழிபெயர்ப்பாளர்களின் பணி யாது?
5. ஐ.நா. அவையில் மொழிபெயர்ப்பாளர்கள் எவ்விடத்தில் இருப்பார்?
6. எந்த அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழியில் புரிந்துகொள்ள எங்கு வசதி செய்யப்பட்டுள்ளது?

---

## நெடுவினா

**1. தமிழின் இலக்கியவளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிள வளங்கள் - அறிவியல் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு "செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை" என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை:**

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி" நம் தமிழ் குடி. நம் தமிழ்மொழியில் இல்லாத சொல் வளம், கருத்து வளம் வேறு எந்த மொழியிலும் இல்லை. உலகம் தகவல் தொழில் நுட்பத்தினால் சுருங்கி விட்ட சூழலில் கூட மொழி பொயர்ப்புத்துறை முக்கிய இடம் பெறுகிறது. இத்தகு மொழி பெயர்ப்பு கலை மக்களின் வாழ்வில் எத்தகு போக்கினைச் செய்கிறது என்பதைப் பற்றிக் காண்போம்.

**தமிழின் இலக்கிய வளம் :**

- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு. ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியம் போன்ற நூல்கள் தமிழின் பெருமையை பறை சாற்றுகின்றன. பக்தி இலக்கியங்கள் பக்தி மணம் பரப்புகின்றன. அற இலக்கியங்கள் நீதி நெறியை வழிகாட்டுகிறது. புராணங்கள் தமிழுக்கு அணிகலன்களாகத் திகழ்கின்றன.
- தமிழ் இலக்கிய வளம் பெற வேண்டும் என்றால் பிற மொழியில் உள்ள நூல்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்க வேண்டும்.

**கல்விமொழி :**

மொழி பெயர்ப்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் பெற்று, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்க முடியும். மாற்று மொழியினருக்கும் தமிழ்மொழியைக் கற்கும் ஆவலையும் தமிழ்மொழி கொடுக்கின்றது.

**பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளம் :**

பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்களை மொழி பெயர்ப்பின் மூலம் தெளிவாக அறியலாம். சான்றாக ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிறகு நோபால் பரிசு கிடைத்தது.

**அறிவியல் கருத்துகள் :**

அறிவியலின் சிந்தனைக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்களைத் தேவாரமும் திருவாசகமும் காண முடிகிறது. மொழிபெயர்ப்பு அறிவியல் சார்ந்த துறையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. கலீலியோ கூற்றை கபிலர் கூறியிருப்பது ஒரு வியப்பாகவும் உள்ளது. நீர் சுழற்சி பற்றி வள்ளுவர் கூறியுள்ளதையும் நாம் உணர முடிகிறது.

**பிறதுறைக் கருத்துகள் :**

மொழிபெயர்ப்பின் மூலம் தமிழமொழியிலேயே பிற துறையின் கருத்துகளை அறியமுடிகிறது. திரைப்படம் வானொலி, தொலைக்காட்சி, விளம்பரம் போன்ற துறைகளில் மொழிபெயர்ப்புப்பணி சிறந்து விளங்குகிறது. இதற்குச் சான்றாக வேற்றுமொழியில் உள்ள திரைப்படம், தொலைக்காட்சித் தொடர்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தவுடன் அவற்றில் உணர்த்தும் கருத்தும் கதையும் எளிதில் மக்களைச் சென்றடைகின்றன.

**தமிழுக்குச் செழுமை :**

மொழி பெயர்ப்பின் மூலம் எல்லாத்துறைகளிலும் புதுமையான கலைச்சொற்களைப் பெற்று தமிழ்மொழி செழுமை அடைந்து கொண்டே இருக்கிறது. இன்று எல்லாத் துறை சம்பந்தமான நூல்களையும் தமிழ் மொழியிலே கற்கலாம் என்பது பெருமைக்குறியது.

**முடிவுரை :**

"பிறமொழிச் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவு நனவானது மட்டுமல்லாமல் தமிழுக்கு மேலும் செழுமையும், வளமையும் உடையதாக விளங்குகிறது தமிழ்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை யாது?**

ஒரு மொழி, வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாதது.

**2. மொழிபெயர்ப்பு பற்றி மணவை முஸ்தபா என்ன கூறுகிறார்?**

"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.

**3. மொழிபெயர்ப்பு குறித்து மு.கு.ஜகந்நாத ராஜா குறிப்பிடுவது யாது?**

உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளில் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பு ஒரு காரணமாகும் என்று மு.கு. .ஜகந்நாத ராஜா குறிப்பிடுகிறார்.

**4. மொழிபெயர்ப்பு சமூகத்திற்கு எவ்வாறு உதவுகிறது?**

ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடு செய்ய, வேறு துறைகளில் உச்சங்களில் இருக்கும்.

மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவதே மொழிபெயர்ப்பாகும்.

**5. சின்ன மனூர்ச் செப்பேடு புலப்படுத்தும் செய்தி யாது?**

"மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச்சங்கம்வைத்து" என்னும் சின்னமனூரார்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

**6. வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் சிலவற்றைக் கூறுக.**

பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம்.

**7. மொழிபெயர்ப்பு முயற்சியை மேற்கொண்ட நிறுவனங்களின் பெயர்களைக் கூறுக.**

- சாகித்திய அகாதமி
- தென்னிந்திய புத்தக நிறுவனம்.
- தேசிய புத்தக நிறுவனம்

**8. இந்திய அரசு மக்களிடையே மொழிபெயர்ப்பை எதற்குப் பயன்படுத்தியது?**

மக்களிடையே தேசிய உணர்வை ஊட்டுவதற்கும்ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் மொழிப்பெயர்ப்பை இந்திய அரசு கருவியாகப் பயன்படுத்தியது.

**9. பிற நாட்டு மொழிகள் எங்கு கற்பிக்கப்படுகிறது?**

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், சில தனியார் நிறுவனங்கள்.

**10. மொழிபெயர்ப்பால் திருக்குறள் அடைந்த பெருமை யாது?**

திருக்குறள், உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதால் இதனை உலகப் பொதுமறை என்ற பெருமையை அடைந்துள்ளது.

**11. மொழிபெயர்ப்பு வாயிலாக சர்வதேசத் தன்மை பெறும் முறைகள் யாவை?**

- கருத்து பரிமாற்ற முறை
- இலக்கிய முறை
- தகவல் பகிர்வு முறை
- தத்துவ முறை ஆகியனவாகும்.
- அறநூல் அறிதல் முறை

**12. தன் நூலை தானே மொழிபெயர்த்தவர் யார்? அதனால் அவருக்கு கிடைத்த சிறப்பு யாது?**

- இரவீந்திரநாத் தாகூர், தான் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலி கவிதைத் தொகுப்பை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு வழங்கப்பட்டது.

**13. ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியையும் அறிவையும் மதிப்பிடுவது எது?**

ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

**14. இப்பொழுது நேரடியாக மொழிபெயர்க்கப்படும் நூல்கள் யாவை?**

ப்ரெஞ்சு, ஜெர்மன், ஆப்பிரிக்கா, லத்தின், அமெரிக்கா முதலிய நாடுகளின் நூல்கள்.

**15. இலக்கியத் திறனாய்வு கொள்கை பற்றி எழுதுக.**

- இலக்கியத் திறனாய்வு கொள்கையை நாம் மொழிபெயர்ப்பு மூலம்தான் பெற்றிருக்கிறோம்.
- இன்றுள்ள திறனாய்வு குறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகவே பெற்றிருக்கிறோம்.

**16. மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைய வேண்டும்?**

மொழிபெயர்ப்புகள் கழிவின்றி சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

**17. சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்ற வடமொழிக் காப்பியங்கள் எவை?**

- இராமாயணம்.
- மகாபாரதம்.

**18. விடுதலைக்குப் பிறகு நாட்டின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு உதவியது?**

- விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.

- ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழி பெயர்த்தது.
- பல்வேறு மாநிலங்கில் இருந்த, இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இதற்கு மொழிபெயர்ப்பு பெருந்துணை புரிந்தது.

**19. இந்திய நாட்டின் மொழிபெயர்ப்பு முயற்சிக்கு உதவிய நிறுவனங்கள் யாவை?**

- சாகித்திய அகாதெமி
- தேசியப் புத்தக நிறுவனம்
- தென்னிந்தியப் புத்தக நிறுவனம்

**20. மொழிபெயர்ப்பை கல்வியாக ஆக்கினால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

- மொழிபெயர்ப்பை கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும்.
- பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டவரை எதிர்பார்க்கமாமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கி கொள்ள முடியும்.
- மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும், வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்.
- நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருவகத்தன்மையைப் பெற முடியும்.

**21. ஆங்கிலேயர்கள் வருகையால் மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?**

- 18 ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.
- ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும், ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.
- இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின.
- தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழி பெயர்ப்பால் தான்.

**22. ஒரு நாட்டின் பண்பாட்டையும், அறிவையும் எவற்றை வைத்து மதிப்பிடுவர்?**

- ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவார்கள்.
- அதுபோல ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

**23. மொழிபெயர்ப்பின் மூலம் என்ன புதுமையைப் பெற்றிருக்கிறோம்?**

- மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளைப் பெற்றிருக்கிறோம்.
- இன்றுள்ள புதிய திறனாய்வு முறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகவே பெற்றிருக்கிறோம்.

**24. மொழிபெயர்ப்பு தமிழ் இலக்கியங்களுக்கு எவ்வாறு உதவுகிறது?**

- பிற மொழி இலக்கியங்கள், இலக்கிய வடிவங்கள் பலவும் தமிழுக்கு அறிமுகமாகி மேற்கொள்ளப்படுகின்றன.
- மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி சிந்தனை, வடிவம், உத்தி, மையக்கரு, பண்பாடு போன்ற பலவகைக் கூறுகளை எடை போடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**25. அன்றாட வாழ்வில் மொழிபெயர்ப்பின் பங்கு யாது?**

இது மொழிபெயர்ப்புக் காலம், காலையில் எழுந்தவுடன் நாளிதழ் படிப்பு, மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது. இரவு தொலைக்காட்சியில் காணும் கேட்கும் செய்திகளும் மொழிபெயர்ப்பு மூலமே கிடைக்கின்றன. இடையில் நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் துணை இருந்து கொண்டே இருக்கிறது.

**26. வளரும் நாடுகளுக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு உதவுகிறது?**

இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க, அரசியலை உருவாக்க, பொருளியலை உருவாக்க, சமூகவியலை உருவாக்க, இலக்கியத்தை உருவாக்க மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**27. தமிழ்மொழி பிறமொழிகளில் ஏற்படுத்திய தாக்கம் யாது?**

- புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்களை பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம்.
- அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளில் முறையே தெலுங்கு, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்க மொழி, மராத்தி மொழி போன்றவை இடம் பெறுகின்றன.

**28. தமிழ் மொழிபெயர்ப்பு குறித்து குலோத்துங்கன் கூறுவது யாது?**

"காசினியல் இன்றுவரை அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி
பேசி மகிழ் நிலை வேண்டும்"

என்று குலோத்துங்கன் குறிப்பிடுகிறார்.

**29. மொழிபெயர்ப்பு குறித்து பாரதியார் கூறுவது யாது?**

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"
"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்று பாரதி கூறுகிறார்.

**30. மொழிபெயர்ப்பு பற்றிய கூறிய இலக்கண நூல் எது?**

தொல்காப்பியர் மரபியலில் மொழி பெயர்த்தல் என்ற தொடரைக் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் மொழிபெயர்ப்பு பற்றிக் கூறிய இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதை உணர முடிகிறது.

**31. சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நிறுவுக.**

'மாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம்' வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பின் மூலம் சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை உணர முடிகிறது.

**32. அனைத்துலக அறிவையும் எளிதில் பெறுவதற்கும் நாம் என்ன செய்ய வேண்டும்.?**

மொழிபெயர்ப்பைக் கல்வியாகவும் அதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதில் பெறலாம்.

**33. பிறநாட்டுத் தூதரங்கள் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சிப்பதன் நோக்கம் யாது?**

பிறநாட்டு தூதரங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை மக்களிடம் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனே தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றன.

**34. மொழிபெயர்ப்பு எதற்கு உதவுகிறது?**

பிற மொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளவும் அவை போன்ற புதிய படைப்புகளை உருவாக்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**35. ஆங்கிலேயர் வருகைக்குப்பின் தமிழ் மொழியில் அறிமுகமான பிறமொழி நூல்கள் யாவை?**

ஆங்கிலேயர் வருகைக்குப்பின் ஆங்கில நூல்களும் ஆங்கில வழியாக பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் குறைவே.

**36. மொழிபெயர்ப்பின் தோற்றம் குறித்து எழுதுக.**

எப்பொழுது உலகத்தில் நான்கைந்து மொழிகள் உருவாயினவோ அப்பொழுதே மொழி பெயர்ப்பு தொடங்கியது.

**37. மொழி பெயர்க்கப்படாமையால் உரிய ஏற்பு கிடைக்காத நூல் எது?**

மகாகவி பாரதியின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தால் உலகளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும்.

**38. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது?**

ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தே அந்த நாட்டின் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுகிறார்கள்.

**39. Camel என்பதன் மொழிப் பெயர்ப்பை விளக்குக.**

- Camel என்பதற்கு வடம், ஒட்டகம் என்ற இரு பெயர்கள் உண்டு.
- ஊசி காதில் வடம் நுழையாது என்ற வேற்றுமொழித் தொடரை ஊசி காதில் ஒட்டகம் நுழையாது என தவறுதலாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே மொழிபெயர்க்கும் போது கருத்தும் பொருளும் மாறாமல் சரியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

**40. பிற மொழி கற்கும் வாய்ப்புக் குறித்து எழுதுக.**

தூதரகங்கள் தத்தம் நாட்டு இலக்கியம், பண்பாடு, கலை, தொழில் வளர்ச்சிக் குறித்து அறிமுகப்படுத்த அவ்வந்நாட்டு மொழிகளைக் கற்பித்தன. அதனைச் சார்ந்து தனியார் நிறுவனங்கள் உருவாயின. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களும் பிறமொழி கற்பதற்குரிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

**41. எதை மொழிபெயர்ப்பது என்பது குறித்து எழுதுக.**

பழைய நூல்களை மட்டுமே மொழிபெயர்க்காமல், புதுப்புது நூல்களையும் அறிமுகப்படுத்தும் நிலை வளர வேண்டும். ஒரு குறிப்பிட்ட சிறு குழுவில் பேசப்படும் மொழியில் இருப்பவையும் கூட மொழிபெயர்ப்பின் மூலம் நம்மை வந்தடைய வேண்டும்.

**42. வளரும் நாடுகளின் உருவாக்கத்திற்கு மொழிபெயர்ப்பு உதவுவதனை எழுதுக.**

வளரும் நாடுகளில் இன்றைய அறிவியலை வளர்க்கவும், அரசியலை உருவாக்கவும், பொருளியலை நிலைப்படுத்தவும், சமூகவியலைச் செம்மைப்படுத்தவும், பக்திலக்கியங்களை உருவாக்கவும் மொழிபெயர்ப்புப் பெரிதும் உதவி புரிகிறது.

**43. புள்ளி விவரப்படி மொழிபெயர்ப்புக் குறித்து அறியப்படும் செய்தி யாது?**

- பிறமொழிகளிலிருந்து ஓர் ஆண்டில் ஜெர்மன் மொழியில் 5000 நூல்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன. புள்ளி விவரப்படி தமிழ் நூல்கள் அதிக அளவில் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்படுகின்றன.
- அவ்வகையில் ஆங்கிலம் முதலிடத்திலும், மலையாளம் இரண்டாம் இடத்திலும் உள்ளன. தெலுங்கு, இந்தி, கன்னடம், ரஷ்ய மொழி, வங்கம், மராத்தி அடுத்தடுத்த நிலைகளைப் பெறுகின்றன.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. மொழிபெயர்ப்பு குறித்து அறிஞர்களின் கூற்றுகள் யாவை?**

- "ஒரு மொழியில் உணரப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.
- ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும். உலக நாகரீக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழி பெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்கிறார் முகு.ஜகந்நாதராஜா
- "தொகுத்தல் விரித்தல் தொகை மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தலோடு அனை மரபினவே" என்கிறார் தொல்காப்பியர்.

- "எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்களின் மொழியில் சொன்னவற்றை, எழுதியவற்றை இன்னொரு மொழியில் நமக்குத் தெரிந்த மொழியில் மொழி பெயர்த்து அறிந்து கொள்கிறார்கள். அது தான் மொழி பெயர்ப்பு" என்கிறார் சா. கந்தசாமி

**2. ஆங்கிலேயர்கள் வருகையால் மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?**

- 18 - ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.
- ஆங்கில நூல்களும், ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழிநூல்களும் அறிமுகமாயின.
- இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின.
- தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழி பெயர்ப்பால்தான்.

**3. ஒரு நாட்டின் வரலாற்றிலும் பண்பாட்டிலும் மொழி பெயர்ப்பு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.**

- மொழி பெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழி வளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் மொழிவளம் ஏற்படுகிறது.
- பிற இனத்தவரின் பண்பாடு , நாகரிகம், பழக்க வழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லவற்றை நாம் பெற்றுக் கொள்ள முடிகிறது.
- பிற மொழி இலக்கிய அறிவும் அதன்மூலம் இலக்கியத்தை வளர்க்கவும் முடிகிறது.
- அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கிய படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.
- கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழி பெயர்ப்பினை "பயன்கலை" என்று வழங்குகிறார்கள்.
- ஒரு நாட்டின் வரலாறு, இலக்கியம், பண்பாடு ஆகியனவற்றில் மொழி பெயர்ப்பு ஒரு வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது உறதியாகும்.

**4. மொழி பெயர்ப்பை கற்பதனால் ஏற்ப்படும் நன்மைகளை எழுது.**

- மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.
- மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.
- வேலை வாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்.
- அறிவு, தொழில் துறைகளுக்கு பிற நாட்டினரை எதிர்பாராமல் நமக்கு நாமே வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளலாம்.
- நாடு, இனம், மொழி எல்லைகள் கடந்து ஓர் உலகத்தன்மையைப் பெற முடியும்.
- பிற நாட்டுத் தூதரங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை தத்தம் மொழிகளில் கற்றுக் கொடுக்கும் முயற்ச்சியை மேற்கொண்டு வருகின்றன. இதைச் சார்ந்து தான் பிற மொழிகளைக் கற்றுத் தரும் தனியார் நிறுவனங்கள் உருவாகியுள்ளன.
- பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**5. இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரிக்க.**

Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Tele graph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிற போது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன் ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கு மாறாக Transcribe, Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு Trans என்ற முன் ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. எனவே இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதை நான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**6. மொழிபெயர்ப்புக்கான தேவைகள் என்ன?**

- எல்லாக் காலக்கட்டங்களிலும் மொழிபெயர்ப்பு தேவையான ஒன்றாகும். விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொண்டபோது, தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.
- ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழி பெயர்த்தது. பல்வேறு மாநிலங்களில் இருந்த, இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது.
- சாகித்திய அகாதெமி, தேசியப் புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் மூலம் மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொண்டது.

**7. மொழிபெயர்ப்பைக் கல்வியாக மாற்ற வேண்டியதன் அவசியம் என்ன?**

- மொழிபெயர்ப்பை கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும். பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டவரை எதிர்பார்க்கமாமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கி கொள்ள முடியும்.
- மனித வளத்ததை முழுமையாகப் பயன்படுத்த முடியும், வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருவகத் தன்மையைப் பெற முடியும்.

**8. தமிழ் இலக்கியத்தில் மொழிபெயர்ப்பால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**

- பிறமொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளவும், அவற்றைப்போல் புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது. 18 ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.
- ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும், ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.
- இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால் தான்.

**9. உலக மனிர்தகளை இணைக்கும் நெடுஞ்சாலையாக மொழிபெயர்ப்பு உள்ளதை விளக்குக.**

- காலத்தால், இடத்தால், மொழியால், சிந்தனையால் பிரிக்கப்பட்டிருந்த மானுடத்தை மொழிபெயர்ப்பு இணைக்கிறது. கடந்த காலத்தையும், எதிர் காலத்தையும் இணைக்கும் மொழிபெயர்ப்பு, மனித வாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. வெவ்வேறு மொழிகளில் காணப்படும் சிறப்புக் கூறுகளை எல்லாம் ஒருங்கு சேர்த்து அனைவருக்கும் பொதுமையாக்கும் பணியைச் செய்கிறது.
- இவ்வகையில் மனிதர்களையும் நாடுகளையும் காலங்களையும் இணைக்கும் நெடுஞ்சாலையாக மொழிபெயர்ப்பு இருக்கிறது.

**10. மொழிப்பெயர்ப்பால் ஏற்பட்ட சில தவறுகள் பற்றிக் கூறுக.**

- "Hundred railsleepers were washed away" என்பதை மொழிபெயர்ப்புத் தவறுதலால், "தொடர் வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள்" என்று, ஒரு செய்தித்தாள் தவறாக செய்தியை வெளியிட்டது.
- Camel என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இருபொருள்கள் உண்டு. "ஊசி காதில் வடம் நுழையாது" என்னும் பொருளுடைய வேற்றுமொழித் தொடரை, "ஊசி காதில் ஒட்டகம் நுழையாது" என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம்.

**11. இலக்கிய வளத்தைப் பெருக்க மொழிபெயர்ப்பு உதவுவதனை விவரி.**

**மொழிபெயர்ப்பின் தேவை ஏன்? :**

- மொழிபெயர்ப்பு, பிறமொழி இலக்கியங்களைத் தெரிந்து கொள்ளவும், அவை போன்ற புதிய இலக்கியங்களைப் படைக்கவும் உதவுகிறது. இலக்கியம் என்பது ஒருவருடைய பட்டறிவில் எழுவதாயினும், அது கலைச் சிறப்பைப் பெறும்போது பொது அனுபவமாக மாறுகிறது.
- அப்படிப்பட்ட படைப்புகளுக்கு மொழி வேலியாக அமைகிறது. அந்த மொழி, வேலியை நீக்கி எல்லா மொழியினருக்கும் உரியதாக்க மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**மொழிபெயர்ப்பால் சிறப்பு :**

- 18 ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் மட்டுமே தமிழாக்கம் செய்யப்பெற்றன. மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகமாக ஷேக்ஸ்பியரை ஜெர்மனி மக்கள் தங்கள் நாட்டுப் படைப்பாளியாகவே போற்றுகின்றனர்.
- தமிழ்மொழியின் திருக்குறள், உலகின் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டதால், உலக நூலாகியது. இரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதால், நோபல் பரிசு பெறும் சிறப்பைப் பெற்றது.

**மொழிபெயர்ப்பால் பல்துறை வளர்ச்சி :**

- மொழிபெயர்ப்பு, வளரும் நாடுகளின் அறிவியல், அரசியல், பொருளியல், சமூகவியல், இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது. மொழிபெயர்ப்பு இல்லையானால், இன்று உலகை வலையாகப் பிணித்து நிற்கும் ஊடக வளர்ச்சி இல்லாமல் போயிருக்கும்.
- திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, செய்தி, இதழ்கள், விளம்பரங்கள் என அனைத்திற்கும் மொழிபெயர்ப்பு நெறிகாட்டுகிறது. உலக நாடுகளையும், மனிதர்களையும், காலங்களையும் இணைக்கும் நெடுஞ்சாலையாக மொழிபெயர்ப்பு விளங்குகிறது.

**மொழிபெயர்ப்பின் தாக்கம் :**

- மொழிபெயர்ப்பில் புதிய சொற்கள் உருவாகி, மொழியை மேலும் வளப்படுத்துகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் முதலானவற்றை அறிய மொழிபெயர்ப்பு உதவுகிறது. பிறமொழி இலக்கிய அறிவைப் பெறமுடிவதோடு, பிற நாட்டவரின் நற்பண்புகளைத் தெளிந்து பின்பற்ற முடிகிறது. உலகப் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புகள், கண்டுபிடிப்புகள் முதலானவற்றை அறிய முடிவதால் நாமும் புதுமை படைக்க வழி ஏற்படுகிறது.
- கருத்துப் பகிர்வுக்குத் துணைபுரிவதால், மொழிபெயர்ப்பை பயன்கலை எனக் கூறுவர். ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த மொழி பெயர்ப்பு காரணமாகிறது.

## சொற்றொடரில் அமைத்து எழுதுக

1) <u>மொழி பெயர்ப்பு</u>

ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் <u>மொழி பெயர்ப்பு</u> இன்றியமையாததாகும்.

2) **<u>சங்கமம்</u>**

இன்றைய மதுரையில் நான்காம் தமிழ்ச் <u>சங்கம்</u> இருக்கிறது.

3) **<u>கல்வி</u>**

மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பது <u>கல்வி</u> ஆகும்.

## விடைக் கேற்ற வினா அமைக்க

**1) இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எழுதுவதாகும்.**

இலக்கியம் என்பது யாது?

**2) தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழி பெயர்ப்பதால்தான் வளர்ச்சி பெறுகின்றன.**

எவையெல்லாம் மொழி பெயர்ப்பு மூலம் வளர்ச்சி பெறுகின்றன?

---

## சந்திப்பிழை நீக்கி எழுதுக

**1) கருத்து பகிர்வை தருவதால் மொழி பெயர்ப்பை பயன்கலை என்று குறிப்பிடுவார்கள்.**

கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழி பெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள்.

**2) பிற மொழி கருத்துகளை , கதைகளை தமிழ் படுத்தியமையை புலப்புடுத்துகிறது. புராண இலக்கியங்கள்.**

பிற மொழிக் கருத்துகளை, கதைகளை தமிழ்ப் படுத்தியமையைப் புலப்படுத்துகிறது புராண இலக்கியங்கள்.

---

## ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக

**1) நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டது.**

நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன.

**2) புதிய படைப்புகள் உருவாக மொழி பெயர்ப்பு உதவுகின்றன.**

புதிய படைப்புகள் உருவாக மொழி பெயர்ப்பு உதவுகின்றது.

**3) தொலைக்காட்சி , வானொலி , திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழி பெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றது.**

தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள், போன்ற ஊடகங்கள் மொழி பெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன.

---

## கற்பவை கற்றபின்

**1) தாகூரின் கீதாஞ்சலி தமிழ் மொழி பெயர்ப்புப் பாடல் ஒன்றையும் கலீல் கிப்ரானின் கவிதை ஒன்றின் மொழிப் பெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.**

**கீதாஞ்சலி**

**அன்போடு அளிப்பதை ஏற்றுக்கொள்**

அறிவு கெட்டவனே!
உன் தோளிலிலே சுமந்திடு
உன் பாரதத்தை
பிறரிடம்
பிச்சை எடுப்பவனே
முதலில் உன்வீட்டு வாசல்
முன்னின்று யாசித்திரு!
அனைத்தையும்
தாங்கிக் கொள்ளும்
இறைவன் மேல் சுமையை
இறக்கிவிட்டு
நிம்மதியாய் இருக்கிறாய்

வருத்தப்படாது
திரும்பிப் பாராது!
பேராசை பிடித்து நீ
வெளிவிடும்
பெருமூச்சு சட்டென
விளக்கின் ஒளியை அணைத்து
இருளாக்கி விடுகிறது!
களங்கம் பிடித்த
கரங்கள்
காணிக்கை அளிக்கும்
வெகுமதியைக்
கையேந்திப் பெற்றுக் கொள்ளாதே!
அழுக்கேறியது
அந்த நன்கொடை
புனித அன்புடன்
கனிந்த உள்ளம்
அளிப்பதை மட்டும்
கை நீட்டி ஏற்றுக் கொள்.

**கலீல் இப்ரான் கவிதை**

என் ஆத்மாவைக்
கவர்ந்து கொள்ளும்
மிருதுவான முரட்டுக்
கரங்கள் யாருடையவை?
என் தூக்கம் கழலக்கும் அவை!
என்ன நடக்குதென்று
எவரும் அறியக் காணாது!

கசப்பான களிப்பும்
இனிப்பான வலியும்
கலந்து என் இதயத்தில்
ஊறிப் போயிருக்கும்
ஒயின் எது?
இரவின் மௌன வேளையில்
என் தலையணை மேல்
ஆனந்தக் களிப்பை விடப்
பேருன்னதமான சிரிப்பின்
பிரதிபலிப்பை விடப்
பேரழகுத் துயரம்
கலந்திருக்கும் எனது
பெரு மூச்சில்
---------------
பறக்கும் அந்த சிறகுகள் யாவை?

**2) மொழி பெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச் சுருக்கத்தையும் உங்கள் கருத்துக்களையும் வகுப்பறையில் கூறுக.**

**கர்வத்தின் விலை**

- வல்லிக்கண்ணன்

சிப்பிப் புழு உலகில் அதி முக்கியமான ஜீவனாக தன்னை எண்ணியது. பட்டுப் புழுக்களாலும் பயன் உள்ளது. ஆனால், பட்டு முத்துகளைப் போல அதிக விலை பெற்றுத் தருவதும் இல்லை. ஆகையால்தான் சிப்பிப் புழு தன்னை உயர்வாகவே எண்ணுகிறது.

ஒரு நாள் கடலில் பெரும் புயல் ஏற்பட்டது. சிப்பிப் புழுவானது தன் கூட்டினை மூடிக் கொண்டு பாதுகாப்புக்காகத் தரைப் பகுதிக்குப் போகக்கூடாது என்று எண்ணி கடலுக்குள் இருந்தது. ஆனால் இந்த கடல் அலை சிப்பிப் புழுவினை விட்டு வைக்கவில்லை. கடலில் தூக்கிக் வாரிப் போட்டது. புழு மெல்ல சிப்பியைத் திறந்து வெளியில் எட்டிப்பார்த்தது. அடுத்தடுத்து வேகமாக அலைகள் வந்து வேகமாக அதனை மணலில் தூக்கிப் போட்டது. கடலுக்குள் திரும்பிப் போக வழியில்லாமல் அங்கே கிடந்தது. அது மிகவும் கோபம் அடைந்தது.

காகம் ஒன்று சிப்பியிடம் வெளியே 'வா' என்றது, ஆனால் புழு அருவருப்பான முட்டாளான உன்னிடம் பேச முடியது என்றது. காகம் எவ்வளவு சொல்லியும் புழு வெளிவரவில்லை. மாறாக காகத்தைக் கேலி செய்து கொண்டு இருந்தது.

நான்முத்துகளை உண்டாக்குவதால் தான் கடலுக்குப் பெருமை என்று கர்வமாக புழு கூறியது. "முத்து செய்யும் பெரிய நபரைப் பார்க்கின்றேன்" வெளியே வா என்றது காகம். ஆனால், முடிந்தால் நீ பெரிய புத்திசாலி என்றால் என்

சிப்பியை நீயே திறந்து கொள் என்றது புழு. உடனே காகம் சிப்பியைத் தன் அலகில் தூக்கி மேலே பறந்து போய் பாறைகள் நடுவே போட்டது. சிப்பி தூள் தூளானது. காகம் சிப்பியைத் தன் அலகால் கொத்தி விழுங்கியது. பிறகு காகம் முத்தைப் பார்த்தது. முத்து அதனிடமிருந்து விலகி, சாணக் குவியலில் விழுந்தது. காகம் உயரப் பறந்து மகிழ்வுடன் கத்திச் சென்றது.

கவிதைப் பேழை

கல்வி ௫

# நீதிவெண்பா

*– கா.ப.செய்குதம்பிப் பாவலர்*

FB37YN



பாடல் :

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய்இன்பம்
பொருத்துவம் கல்வியென்றே போற்று.

**பாடலின் பொருள்**

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

## நீதி வெண்பா - நூற்குறிப்பு

- இயற்றியவர் கா.ப. செய்குதம்பிப் பாவலர்
- நீதிக் கருத்துகளை வெண்பா யாப்பில் எடுத்துரைக்கும் நூல்
- 100 வெண்பா பாடலைக் கொண்டது.
- எளிய நடையழகைக்கு கொண்டது இந்நூல்.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | கா.ப. செய்குதம்பிப்பாவலர் |
| **ஊர்** | : | கோட்டாறு- இடலாக்குடி (நாஞ்சில் நாடு) |
| **பெற்றோர்** | : | அமீனா அம்மையார் - பக்கீர் மீரான் சாகிபு |
| **காலம்** | : | கி.பி. 1874 - கி.பி. 1950 |
| **பெற்ற பட்டம்** | : | சதாவாணி (15ஆம் வயதில்) |
| **எழுதிய சில நூல்கள்** | : | நீதி வெண்பா, நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருமதினந்தந்தாதி, கோப்பந்துப் பிள்ளைத்தமிழ், கல்வத்து நாயகம், இன்னிசை பாமாலை. |

## பொருள் அறிக

அருள் - கருணை
மருள் - மயக்கம்
தெருள் - அறிவு
ஆவி - உயிர்
அருந்துவது - பொருளைத் தருவது.

## இலக்கணக் குறிப்பு

**பெருக்கி, திருத்தி, அகற்றி** - வினையெச்சம்.
**அருந்துணை** - பண்புத்தொகை.
**போற்று** - வியங்கோள் வினைமுற்று.

## பகுபத உறுப்பிலக்கணம்

**(அ) பெருக்கி = பெருக்கு + இ**
**பெருக்கு** - பகுதி;
**இ** - வினையெச்சவிகுதி.

**(ஆ) திருத்தி = திருத்து + இ**
**திருத்து** - பகுதி;
**இ** - வினையெச்ச விகுதி

**(இ) அகற்றி = அகற்று + இ**
**அகற்று** - பகுதி;
**இ** - வினையெச்ச விகுதி.

## பொருத்துக

1. சதம் - (அ) உயிர்
2. மருள் - (ஆ) தெளிவு
3. தெருள் - (இ) மயக்கம்
4. ஆவி - (ஈ) நூறு

[**விடை : 1 - (ஈ) ; 2 - (இ) ; 3 - (ஆ); 4 - (அ)**]

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. அருந்துணை என்பதனைப் பிரித்தல் ____________**

(அ) அருமை + துணை (ஆ) அரு + துணை
(இ) அருமை + இணை (ஈ) அரு + இணை

**[விடை: அருமை + துணை]**

**2. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை"**
**- என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?**

(அ) தமிழ் (ஆ) அறிவியல் (இ) கல்வி (ஈ) இலக்கியம்

**[விடை : கல்வி]**

## குறுவினா

**1. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.**

- அருளைப் பெருக்கிட கல்வி கற்போம்!
- அறிவைச் சீராக்கிட கல்வி கற்போம்!
- மயக்கம் அகன்றிட கல்வி கற்போம்!
- அறிவு தெளிந்திட கல்வி கற்போம்!
- உயிருக்குத் துணையாக வரும் கல்வியைக் கற்போம்!
- வாழ்வியில் இன்பம் சேர்க்கும் கல்வியைக் கற்பிப்போம்!
- கல்வி ஆவிக்கு அருந்துணை நமக்கு பெருந்துணை!

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. சதாவதானி என்பது யாது?**

நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டுபவரை சதாவதானி என்று கூறுவர்

**2. சதாவதானம் என்றால் என்ன?**

சதம் என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண் அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தல் சதாவதானம் எனப்படும்.

**3. கல்வியின் சிறப்பாக இலக்கியங்கள் கூறும் கருத்து யாது?**

- கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது சங்க இலக்கியம்.
- தோண்டும் அளவு ஊறும் நீர்ப்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள்.

**4. நீதிவெண்பா உணர்த்தும் கல்வியின் சிறப்பு யாது?**

- அருளைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி
- மயக்கம் அகற்றி , அறிவுக்குத் தெளிவு தந்து; உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, கல்வியைப் போற்றி கற்க வேண்டும்.

**5. கல்வியை எப்போதிலிருந்து போற்றுகின்றனர்?**

கல்வியைப் போற்றுவதைப் புறநானூற்றுக் காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்கின்றனர் தமிழர்.

**6. எவ்வாறு சென்று அறிவு பெற வேண்டும்?**

பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகளைப் போல, நூல்களை நாடிச் சென்று அறிவு பெற வேண்டும்.

**7. செய்குதம்பிப் பாவலரைப் போற்றும் விதமாக அரசு செய்தது யாவை?**

- இவர் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும் பள்ளியும் உள்ளன.
- இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

**8. நீதிவெண்பா உணர்த்தும் கல்வியின் சிறப்பு யாது?**

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**செய்குதம்பிப் பாளவலர் - குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **பெயர்** | : கா.ப. செய்குதம்பிப்பாவலர் |
| **ஊர்** | : கோட்டாறு- இடலாக்குடி (நாஞ்சில்) |
| **பெற்றோர்** | : அமீனா அம்மையார் - பக்கீர் மீரான் சாகிபு |
| **காலம்** | : கி.பி. 1874 - கி.பி. 1950 |
| **பெற்ற பட்டம்** | : சதாவதாணி (15ஆம் வயதில்) |
| **எழுதிய சில நூல்கள்** | : நீதி வெண்பா, நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருமதினந்தந்தாதி, கோப்பந்துப் பிள்ளைத்தமிழ், கல்வத்து நாயகம், இன்னிசை பாமாலை. |

---

### கற்பவை கற்றபின்

1. **எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.**

நான் எதிர்காலத்தில் பயில விரும்பும் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வியாகும்.

- 'ஆசிரியர் பணி அறப்பணி, எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' ஆகவே, ஆசிரியர் பணிக்கான கல்வியைப் படிக்கப் போகிறேன்.
- பணிக்குத் தேவையான கல்வியைப் பயின்று கல்வியைக் தந்து உயர்மதிப்பெண் பெற்று, பணியில் சேர ஆயத்தமாவேன்.
- பல்வேறு நூல்களைக் கற்று தேர்வுக்குரிய பாடப்பகுதியினை நன்கு கற்று தேர்ச்சி அடைந்து மதிப்புள்ளவனாக இருப்பேன்.

---

கவிதைப் பேழை

கல்வி ௫

# திருவிளையாடற்புராணம்

*– பரஞ்சோதி முனிவர்*

**காண்டம் : திரு ஆலவாய்க் காண்டம் (3)**

**படலம் : இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம் (56)**

**படலச் சுருக்கம்**

பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குலேசபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிருஆலவாயில் சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

**இடைக்காடனார் மன்னனின் அவையில் கவிதை படித்தல்**

1. கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்

மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன்
வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு தொடுத்து உரைப்பனுவல் வாசித்தான் ஆல். (2615)

**சொல்லும் பொருளும் :** கேள்வியினான் - நூல் வல்லான், கேண்மையினான் - நட்பினன்

**மன்னன் தன் புலமையை மதிக்காமை குறித்து இறைவனிடம் முறையிடல்**

2. சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர்
நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன்
பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் என்று புகலக் கேட்டுச்
சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது முடி துளக்கான் ஆகி. (2617)

**சொல்லும் பொருளும் :** தார் - மலை, முடி - தலை

3. என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின் இடம் பிரியா இமையப் பாவை
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா
முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி. (2619

**சொல்லும் பொருளும் :** முனிவு - சினம்

**இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்**

4. போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும் அகத்துவகை பொலியுமாற்றான்
ஞானமய மாகியதன் இலிங்கவுரு மறைத்துஉடையாம் நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோவிலின்நேர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண்டு அங்கு இனிதின் அமர்ந்தான் மன்னோ. (2620)

**சொல்லும் பொருளும் :** அகத்து உவகை - மனமகிழ்ச்சி

**கோவிலைவிட்டு நீங்கிய காரணம் அறியாது மன்னன் இறைவனை வேண்டுதல்**

5. அல்லதை என் தமரால் என் பகைஞரால் கள்வரால் அரிய கானத்து
எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ் நாட்டில் எய்திற்றாலோ
தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினரோ தவம் தருமம் சுருங்கிற்றாலோ
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்! எந்தாய்! (2629)

**சொல்லும் பொருளும் :** தமர் - உறவினர்

**இறைவனின் பதில்**

6. ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா. (2637)

**சொல்லும் பொருளும் :** நீபவனம் - கடம்பவனம்

**மன்னன் தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு இறைவனிடம் வேண்டுதல்**

7. பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே. (2638)

**சொல்லும் பொருளும் :** மீனவன் - பாண்டிய மன்னன்

**மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்**

8. விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி. (2641)

**சொல்லும் பொருளும் :** கவரி - சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

**மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்**

9. புண்ணியப் புலவீர்யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா*. (2644)

**சொல்லும் பொருளும் :** நுவன்ற - சொல்லிய, என்னா - அசைச் சொல்

**பாடலின் பொருள்**

1. குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு எனக் கற்றோர் கூறக் கேட்டார் இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின்மேல் அன்புகொண்ட அப்புலவர், மிகவும் இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.
2. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே ! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வதோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான் " என்றார்.
3. இடைக்காடனார் இறைவனிடம், பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் "உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.
4. கோவிலை விட்டு வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார். இறைவன் ஞானமயமாகிய தம்முடை இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை அங்குச் சென்று இருந்தார்.
5. "இறைவனே, என்னால், என்படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏறபட்டதோ? முறையவர் நல்ஒழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையை யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டிய மன்னன்.
6. இறைவன் மன்னனிடம், "சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்க மாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்றார்.
7. வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா? என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.
8. மன்னனது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது ; அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை, பூரண கும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது;

போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

9. பாண்டியன், “புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்” என்று பணிந்து வணங்கினான்/ நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், “மன்னா, நீ கூறிய அமுதம்போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது” என்றனர்.

## திருவிளையாடல் புராணம் - நூற்குறிப்பு

- இயற்றியவர் - பரஞ்சோதி முனிவர்
- 3 காண்டம் 64 படலம் 3363 விருத்தப்பாக்களைக் கொண்ட நூலகும்.
- மதுரைக் காண்டம் (18 படலம்) கூடற் காண்டம் (30 படலம்) திருவாலவாய்க் காண்டம் (16 படலம்) ஆகும்.
- மதுரையில் இறைவன் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களை இப்பாடலங்கள் விளக்குகின்றன.
- பக்திச் சுவையும், தொடை நயமும் மிக்க, இந்நூலை ந.மு. வேங்கடசாமி உரை எழுதியுள்ளார்.

## ஆசிரியர் குறிப்பு

**ஆசிரியர் குறிப்பு - பரஞ்சோதி முனிவர்.**

| | |
|---|---|
| பெயர் | : பரஞ்சோதி முனிவர் |
| ஊர் | : நாகை மாவட்டம் திருமறைக்காடு (வேதாரண்யம்) |
| தந்தை | : மீனாட்சிசுந்தர தேசிகர் |
| பணி | : சிவாலயங்கள் தோறும் சென்று வழிபடுதல் |
| புலமை | : தமிழ், வடமொழி. |
| காலம் | : 17 ஆம் நூற்றாண்டு. |
| இயற்றிய நூல்கள் | : வேதாரண்ய புராணம், திருவிளையாடற் புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி. |

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| தார் | - மாலை | என்னா | - அசைச்சொல். |
| முனிவு | - சினம் | முடி | - தலை |
| தமர் | - உறவினார் | அகத்து உவகை | - மன மகிழ்ச்சி |
| மீனவன் | - பாண்டிய மன்னன் | நீ பவனம் | - கடம்பவனம் |
| கவரி | - சாமரை (கவரிமானின் முடியில் செய்த விசிறியாகிய அரசுச்சின்னம்) | துவன்ற | - சொல்லிய |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| **கேள்வியினான், ஒழுகுதாரானை** | - வினையாலணையும் பெயர். |
| **காடனுக்கும் கபிலனுக்கும், இல்லறனும் துறவறனும்** | - எண்ணும்மை |
| **உணர்ந்த, தொடுத்த, கழிந்த, மொழிந்த, நுவன்ற** | - பெயரெச்சம். |
| **தொடுத்து, வீழ்ந்து, எழுந்து** | - வினையெச்சம். |
| **பிரியா இமையப் பாவை** | - ஈறுகெட் எதிர்மறைபெயரெச்சம். |
| **ஊறுபாடு** | - வினைத்தொகை. |
| **இகழ்தல்** | - தொழிற்பெயர். |
| **பெருந்தகை** | - பண்புத்தொகை |
| **எந்தாய்** | - எம் தந்தாய் என்பதன் மரூஉ. |
| **கோபத்தீ** | - உருவகம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. தணிந்தது = தணி + த்(ந்) + த் + அ + து.**

தணி - பகுதி
த் - சந்தி
'த்' - ' ந்' - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று

**2. பொழிந்த = பொழி + த்(ந்) + த் + அ**
**கழிந்த = கழி + த்(ந்) + த் + அ**
**மொழிந்த = மொழி + த்(ந்) + த் + அ**

பொழி, கழி, மொழி - பகுதி
த் - சந்தி
'த்' - 'ந்' - ஆனது - விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**3. தொடுத்தேன் = தொடு + த் + த் + ஏன்**

தொடு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**4. வந்தோம் = வா(வ) + த்(ந்)+ த்+ஓம்**

வா - பகுதி 'வ' என குறுகியது விகாரம்;
த் - சந்தி.
'த்' - 'ந்' - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஓம் - தன்மை பன்மை வினமைுற்று விகுதி

**5. ஏத்தினான் = ஏத்து + இன் +ஆன்**

ஏத்து - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

**6. எழுந்து = எழு +த்(ந்)+ த்+ உ**

எழு - பகுதி
த் - சந்தி
'த்' - 'ந்' - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**7. மறைத்து = மறை + த் + த் + உ**

மறை - பகுதி
த் - சந்தி
த் - இறைந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி.

## பொருத்துக

அ) 1. பனுவல் - (அ) சினம்
2. தார் - (ஆ) தலை
3. முடி - (இ) மாலை
4. முனிவு - (ஈ) பாட்டு **[விடை : 1 - (ஈ) ; 2 - (இ); 3 - (ஆ); 4 - (அ)]**

ஆ) 1. அணி - (அ) அறிவு
2. மதி - (ஆ) போற்றி
3. பரவி - (இ) சொல்லிய.
4. நுவன்ற - (ஈ) அழகு **[விடை : 1 - (ஈ); 2 - (அ); 3 - (ஆ); 4 - (இ)]**

இ) 1. நீபவனம் - (அ) சாமரை.
2. மீனவன் - (ஆ) உறவினர்.
3. கவரி - (இ) பாண்டிய மன்னன்.
4. தமர் - (ஈ) கடம்பவனம். **[விடை : 1 - (ஈ); 2 - (இ); 3 - (அ); 4 - (ஆ)]**

---

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ___ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ___.**

(அ) அமைச்சர், மன்னன் (ஆ) அமைச்சர், இறைவன்.
(இ) இறைவன், மன்னன் (ஈ) மன்னன், இறைவன். **[விடை : மன்னன், இறைவன்]**

---

## குறுவினா

**1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்".**

- கழிந்த பெரும் கேள்வியினான் (மிகுந்த கல்வியறிவு உடையவர் குலேசபாண்டியன்)
- காதல்மிகு கேண்மையினான் (கபிலரிடம் நட்பு கொண்டவர் இடைக்காடனார்.)

**2. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்**

| | | | |
|---|---|---|---|
| **அமர்** | - பகுதி | **'த்' - 'ந்'** | - ஆனது விகாரம் |
| **த்** | - சந்தி | **த்** | - இறந்தகால இடைநிலை |
| | | **ஆன்** | - ஆண்பால் வினைமுற்று விகுதி. |

---

## சிறுவினா

**1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.**

- பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குலேச பாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப்புலமையில் சிறந்து விளங்கினான்.

- கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர் தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான்.
- மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்ததுவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கிய, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார்
- இதை அறிந்த மன்னர் தன் பிழையைப் பொருத்தளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.

## நெடுவினா

**1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

குலேசன் கல்வியறிவு உடையவன். இதைக் கேள்விப்பட்ட இடைக்காடனார் வேப்ப மாலை அணிந்த குலேசனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையை வாசித்தளித்தான்.

வேப்பம்பூ மாலை அணிந்த குலேச பாண்டியன் தமிழறியும் பெருமையுடையவன். புலவருக்கு நிதி வழங்குபவன். இவர் முன் சுவையுடைய கவிதையைப் பாடினார் இடைக்காடனார். ஆனால், பாண்டிய மன்னன் சிறிது கூட தலை அசைக்காமல் புலவரின் புலமையை அவமதித்தான்.

இடைக்காடனார், பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவமாகிய பார்வதி தேவியையும், பொருளின் வடிவமான உன்னையும் அவமதித்தான் என்று கோபத்துடன் இறைவனிடம் கூறினார்.

இடைக்காடனார் கோவிலை விட்டு வெளியேறினார். இவர் வெளியேறியதும் நண்பர் கபிலருக்கும் மனம் மகிழ்வு உண்டாகும் என நினைத்தார். இறைவனும் கோவிலை விடுத்து வடக்கே வைகை ஆற்றின் தென்பக்கம் கோவில் கொண்டார்.

இறைவனிடம் குலேச பாண்டியன் என்படைகளால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதோ? முறையவர் ஒழுக்கம் குறையானதோ? தவமும், தானமும் சுருங்கியதோ? இலலறமும், துறவறமும் தத்தம் வழியில் தவறினவோ? தந்தையே நான் அறியேன் என்றார்.

உடனே இறைவனும் 'வயல் சூழ்ந்த கடம்ப வனத்தைவிட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம்'. 'இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர உன்னிடம் குற்றம் இல்லை' என்றார். 'இடைக்காடன் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்' என்றார். இறைவனின் சொல் கேட்ட பாண்டியன் பரம்பொருளே! இச்சிறியவனின் குற்றம் பொறுப்பது பெரியவர்க்குப் பெருமை என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டினான்.

மன்னன் தன் மாளிகையை ஒப்பனை செய்து புலவர்கள் சூழ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்தினான். தான் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றான். புலவர்களும், நீர் கூறிய அமுதம் போன்ற சொல்லால் எங்களின் கோபம் தணிந்துவிட்டது என்றனர்.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. பண்டைய காலத்தில் புலவர்களுக்கு கிடைக்கும் சிறப்புகள் யாவை?**

- கண்ணுக்கு எட்டிய திசை வரை தெரியும் நிலங்களைப் புலருக்குக் கொடை கொடுத்து மகிழ்வர்.
- அரசரும் புலவருக்கு கவரி வீசுவர்.
- இறைவனும் அறிவிற் சிறந்த புலவருக்காகத் தூது சென்றான்.
- குலேச பாண்டியன் செய்த தவறு யாது?

- இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை குலேசபாண்டியன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் குசேலபாண்டியன் புலவரை அவமதித்தான்.

**2. மன்னனது மாளிகையின் தோற்றம் குறித்து எழுதுக.**

- குலேச பாண்டிய மன்னரது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது.
- அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை, பூரணகும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது.

**3. மன்னன் இடைக்காடனாருக்குச் செய்த சிறப்பு யாது?**

மன்னன் மாளிகையில், அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

**4. இறைவன் எதற்கு கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கினார்?**

- குலேச பாண்டியனால் அவமதிக்கப்பட்ட இடைக்காடனார், மனம் வருந்தி இறைவனிடம் முறையிட்டார்.
- மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடக்கு நோக்கி திரு ஆலவாயில் சென்று தங்கினார்.

**5. இறைவன் கடம்பவனக் கோவிலுக்கு மீண்டும் ஏன் திரும்பினார்?**

குலேச பாண்டியன், தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு இறைவனை வேண்டி இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். அதனால், இறைவன் மீண்டும் கடம்பவனக் கோவிலுக்குத் திரும்பினார்.

**6. திருவிளையாடற்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?**

திருவிளையாடற்புராணம் மூன்று காண்டங்களையும் 64 படலங்களையும் உடையது. அவை

- மதுரைக் காண்டம் (18 படலம்)
- கூடற் காண்டம் (30 படலம்)
- திருவாலவாய்க் காண்டம் (16 படலம்)

**7. பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்கள் யாவை?**

திருவிளையாடற்புராணம், வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலிய பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்களாகும்.

**8. இடைக்காடனார் யாருடைய அவையில் தம் கவிதையைப் படித்தார்?**

வேப்பமாலை அணிந்த குலேச பாண்டியன் அவையில் இடைக்காடனார், தாம் இயற்றிய கவிதையைப் படித்தார்.

**9. இடைக்காடனாரை மன்னன் எவ்வாறு அவமதித்தான்?**

இடைக்காடனார் பாடிய பாடலைப் பொருட்படுத்தாமல் சிறிதேனும் சுவைத்து தலை அசைக்காமல் மன்னன் அவமதித்தான்.

**10. இடைக்காடனார் இறைவனை எவ்வாறு வணங்கினார்?**

இடைக்காடனார், இறைவன் திருமுன் விழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திரு ஆலவாயில் உறையும் இறைவனே! என்று கூறி வணங்கினார்.

**11. இடைக்காடனார் இவைனிடம் சினந்து கூறியது என்ன?**

இடைக்காடனார் இறைவனிடம் "பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று, சினத்துடன் கூறினார்.

**12. இடைக்காடனாரின் முறையீட்டால் இறைவன் செய்ய நினைத்தது என்ன?**

இடைக்காடனார் சினந்து கூறிய சொற்கள், இறைவன் திருச்செவியில் வேல்படை போல் தைத்தன. எனவே இடைக்காடனாருக்கும் அவர் நண்பர் கபிலருக்கும் மகிழ்ச்சி உண்டாக்கிவிட்டுத் தேவியுடன் திருக்கோவிலினின்றும் வெளியேற முடிவு செய்தார்.

**13. இடம் பெயர்ந்ததற்கான காரணமாக மன்னனிடம் இறைவன் கூறியது யாது?**

"இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. புலவர் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்று, இடம் பெயர்ந்ததற்கான காரணத்தை மன்னனிடம் இறைவன் கூறினார்.

**14. பாண்டியன் புலவர்களிடம் வேண்டியது யாது?**

புலவர்களைப் பாண்டியன், பணிந்து வணங்கி, "புண்ணிய வடிவான புலவர்களே! நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினான்.

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. திருவிளையாடல் புராணம் - குறிப்பு வரைக.**

- இயற்றியவர் - பரஞ்சோதி முனிவர்
- 3 காண்டம் 64 படலம் 3363 விருத்தப்பாக்களைக் கொண்ட நூலகும்.
- மதுரைக் காண்டம் (18 படலம்) கூடற் காண்டம் (30 படலம்) திருவாலவாய்க் காண்டம் (16 படலம்) ஆகும்.
- மதுரையில் இறைவன் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களை இப்பாடல்கள் விளக்குகின்றன.
- பக்திச் சுவையும், தொடை நயமும் மிக்க, இந்நூலை ந.மு. வேங்கடசாமி உரை எழுதியுள்ளார்.

**2. பரஞ்சோதி முனிவர் - குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **பெயர்** | : பரஞ்சோதி முனிவர் |
| **ஊர்** | : நாகை மாவட்டம் திருமறைக்காடு (வேதாரண்யம்) |
| **தந்தை** | : மீனாட்சிசுந்தர தேசிகர் |
| **பணி** | : சிவாலயங்கள் தோறும் சென்று வழிபடுதல் |
| **புலமை** | : தமிழ், வடமொழி. |
| **காலம்** | : 17 ஆம் நூற்றாண்டு. |
| **இயற்றிய நூல்கள்** | : வேதாரண்யப் புராணம், திருவிளையாடற் புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி. |

**3. திருக்கோவிலைவிட்டு இறைவன் வெளியேறியது அறிந்து மன்னன் யாது?**

- இறைவன் திருக்கோவிலை விட்டு வெளியேறியதை அறிந்த மன்னன், "இறைவனை! என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டிலுள்ள விலங்குகளால் இப்பாண்டிய நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்லொழுக்கத்தில் குறைந்தனரோ?
- தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே, யான் அறியேன்" என்று வேண்டினான்.

**4. குற்றம் உணர்ந்த பாண்டிய மன்னன் இடைக்காடனாருக்குச் செய்த சிறப்பு யாது?**

- குற்றம் உணர்ந்த பாண்டிய மன்னன் தனது மாளிகையை வாழை, கமுகு, சாமரை கொண்டு அழகுபடுத்தினான். மேல்விதானத்திலும், மற்ற இடங்களிலும் விளக்குகள் கொண்டு ஒளிரச் செய்தான்.

- அன்றலர்ந்த மலர்மாலைகள், பூரண கும்பம், கதலிகை, கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்தான். ஒளியுடைய மணிகள் பதிக்கப்பட்ட மண்டபத்திற்குப் புலவர்கள் புடைசூழ, இடைக்காடனாரை அழைத்துவந்து மங்கலமாக அழகுபடுத்திய பொன் இருக்கையில் அமரச் செய்ததோடு, புலவர்களிடம் தனது குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டினான். மன்னனின் அமுத மொழிகளால், புலவர்களின் கோபமும் தணிந்தது.

**5. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார். களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார். அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர். உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, கண் விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழை பொழிந்தார்.

**6. இடஞ்சுட்டி விளக்கம் தருக.**

"புண்ணிய புலவீர்யான் இப்பொழுது இடைக்காடனாருக்குப் பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக எனப் பரவித் தாழ்ந்தாள்"

**இடம் :**

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தின் திரு ஆலவாய்க் காண்டப் பகுதியில் இடைக்காடன் பிணக்குத் திர்த்த படலத்தில், பாண்டிய மன்னன் குலேச பாண்டியன், இடைக்காடனார் என்னும் புலவரின் கவிதையை அவமதித்தால் சிவபெருமான் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார். மன்னன் குலேச பாண்டியன் தன் பிழையை பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டியும், இடைக்காடனாருக்குச் சிறப்புகள் செய்தும் கூறிய சொற்கள் இவை.

**விளக்கம் :**

பாண்டிய மன்னன் குலேச பாண்டியனது அரசவையில் உள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அடர்த்தி "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கிக் கூறினான் பாண்டியன்.

## கற்பவை கற்றபின்

**1. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.**

**இடம் :** பாண்டிய நாடு

**நாடக மாந்தர்கள் :** காவலன், புலவர், கபிலன்,மன்னன், இறைவன், புலவர்.
இடைக்காடனார்.

**காவலன் :** வேப்பம்பூ மாலை அணிந்த பாண்டிய மன்னா! வணக்கம். மிகுந்த கல்வியறிவு உடையவனும், கலைகள் முழுவதும் உணர்ந்த கபிலரின் நண்பருமான இடைக்காடனார் தங்களைக் காண வந்துள்ளார்.

**மன்னன் :** உள்ளே வரச் சொல்!

**இடைக்காடனார் :** தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! வணக்கம். உங்கள் முன் கவிதை பாட விரும்புகிறேன்.

**மன்னன் :** ம்...............ம்.............பாடும் (என ஆனவத்தோடு)

**இடைக்காடனார் :** (சொற்சுவை நிரம்பிய கவிதை பாடுதல்)

**மன்னன் :** ம் ..............ம்...........(எதையும் பொருட்படுத்தாமல்) (தலையை அசைத்தபடி)

**இடைக்காடனார் :** (இறைவனிடம் முறையிடல்) சொல்லின் வடிவான பார்வதியையும், பொருள் வடிவான உம்மையும் அவமதித்தான்.

**இறைவன் :** கபிலருக்காவும் இடைக்காடனாருக்காவும், இந்தக் கோவிலை விட்டு விட்டுச் செல்கிறேன். (வெளியேறல் இறைவன்)

**மன்னன் :** இறைவா! என் படையினாலோ, பகைவரினாலோ, கள்வராரேலா, விலங்குகளாலோ எந்த இடையூறும் இல்லை. ஒழுக்கம் தவறினேனோ? தானம் கொடுப்பதை குறைத்தேனா? நான் செய்த தவறுதான் என்ன?

**இறைவன் :** இடைக்காடனாரின பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் இல்லை. புலவர் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்.

**மன்னன் :** பரம்பொருளே! சிறியவரின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமை. ஆதலால், என்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

**(புலவரை ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமரவைத்து பெருமை சேர்த்தல்)**

**மன்னன் :** புலவர்களே! நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**கபிலர் மற்றும் இடைக்காடனார் :** மன்னா! நீ கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது, நீடுழி வாழ்க மன்னா!

---

கல்வி ரு

விரிவானம்

# புதிய நம்பிக்கை

*– கமலாலயன்*

GKDW1Z

## பாடநூல் வினாக்கள்

**உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**

”இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்றார் ஔவையார். அதனால் தான் இளமை கல்விக்கு உரியது. “இளமையில் கல்” என்று கட்டளை இடுகிறார். கல்வி கற்பது இளமைப் பருவம். நாம் இந்த வயதில் பள்ளிக்குச் செல்லாமல், வேலைக்குச் செல்வதால் இன்றைய தேவைகள் பூர்த்தியாகும் , நாளை நம் தேவை பூர்த்தியாகுமா?

இளமைப் பருவம் பசுமரத்தாணி போலப் பதிய வைத்திடும் பருவம். ”ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பதற்கேற்ப இளமையே கற்பதற்குரிய பருவம் ஆகும். முன்னால் குடியரசுத் தலைவர் கலாம் அவர்கள் காலையிலும் மாலையிலும் வேலைக்குச் சென்றும் இடைப்பட்ட நேரத்தில் பள்ளி சென்று கற்றதனால் பார்போற்றும் உத்தமராக வாழ்ந்தார். இவரைப் போல நீ நன்றாக உழைத்தும், உன்னுடைய உழைப்பினால் வாழ்ந்தும், நேர்மையுடன் வாழவேண்டும். அதே போல கல்வியிலும் கவனத்தைச் செலுத்தி வருங்கால வாழ்க்கையை எளிதாக்க நீயும் என்னுடன் பள்ளிக்கு வா! என அழைத்துச் செல்வேன்.

## நெடுவினா

1. **கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே:"**

என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**முன்னுரை :**

வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள்; சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். பலரின் பயணங்களுக்கு வழி வகுக்கிறார்கள்; கல்வி அறிவற்ற இச்சமூகத்தில் ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் விளக்கினை ஏற்றிய மேரியின் வாழ்க்கையோடு என் கருத்தையும் இங்கு விளக்க உள்ளேன்.

**மேரியின் குடும்பமும் இளமையும் :**

மேரி, தந்தை சாம், தாய் பாட்ஸி, பாட்டி, பல சகோதர சகோதரிகளைக் கொண்ட ஏழ்மையான குடும்பமாகும். காலை முதல் மாலை வரை கடுமையாக உழைக்கும் குடும்பம் ஆகும். இக்குடும்பம் கல்வி கற்காததனால் இவர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது என்பதே உண்மை. தன் குடும்பத்தில் இவள் மட்டும் வித்தியாசமானவள் தான். இளமையில் இவளின் சுறுசுறுப்பு பாராட்டுதலுக்குரியது. அம்மா அழைத்தாலும் சரி, அவளின் விருப்பமான பருத்தியின் முதல் பூவைப் பார்க்க வேண்டும் என்றாலும் சரி தான் முதலில் செய்ய வேண்டும் என் எண்ணத்தைக் கொண்டவள்.

**அவமானமும், ஏக்கமும் :**

மேரி தன் அம்மாவுடன் வெள்ளை முதலாளிகள் ஒருவரின் வீட்டிற்குச் சென்றாள். அந்த வீட்டின் பெண், வில்சன். அங்கு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் கண்டு வியப்புற்றுடன் அவள் கண்கள் அருகில், மேஜையில் உள்ள புத்தகத்தின்மீது சென்றது. அதில் உள்ள ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கின்றபோது வில்சனின் இளைய மகள் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி உன்னால் பார்க்க முடியாது என்று கூறினாள். இந்த வார்த்தை மேரி மனதைக்கிழித்தது. உடனே வீட்டை விட்டு வெளியேறினாள்.

"கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதை உணர்ந்தாள்.

அன்று முதல் அவள் மனம் ஒன்றைத் தீர்மானித்தது. அது என்னவென்றால், "நான் படிக்கவேண்டும்" என்ற ஒற்றை வரி அவள்மனதை அசைபோட வைத்தது. மன ஆசையை பெற்றோரிடம் கூற , சரியான பதில் இல்லாமல் ஏக்கம் அடைந்தாள். ஆனால், மேரி முழுமையான நம்பிக்கையுடன் இருக்கிறாள்.

**மேரியின் மீது இரக்கம் :**

இவ்வுலகில் தான் மட்டும் நலமாக இருந்தால் போதாது? அனைவரும் (உலகில் உள்ள) நலமாக வாழ்வதே நாம் மகிழ்வுடன் வாழ வழியாகும். இதைத்தான் வள்ளுவரும்

**"தாம் இன்புறுவது உலகுகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

என்று கூறியுள்ளார். இக்குறளின் தன்மைக்கு ஏற்ப மேரியின் மீது மிஸ் வில்சன் இரக்கம் கொண்டாள். மேரி தன் வயலில் வேலைபார்த்து விட்டு திரும்பும்போது எதிரே அறிமுகம் இல்லாத பெண் நிற்பதைக் கண்டாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்தனர். தன்னைப் பற்றிக் கூறி, உன்னைப் படிக்க வைக்க வேண்டும் என்பதே என் ஆசை. எவ்வளவு சீக்கிரமா முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக மேயெஸ்வில்லிக்கு வரவேண்டும் என்று கூறினாள்.

**மேரியின் கனவும், மகிழ்வும் :**

மேரி தன் வீட்டில் மேசை மீது பல காலமாக இருந்த பைபிளை எடுத்து, இதை நான் படித்துவிடுவேன். என்று கனவு காணத் தொடங்கினாள். அப்பா மேரிக்குத் தேவையானவற்றை வாங்கித்தந்தார். தன்னைச்சுற்றி மகிழ்வில்

எங்களுக்குச் சொல்லித்தா என அனைவரும் கூறினார். நம் சமுதாயத்திற்கு கிடைக்காத தன் குடும்பத்திற்குக் கிடைத்ததை நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்.

**மேரியின் படிப்பும் பட்டமும் :**

அன்றாடம் புதியபுதிய நூல்களைக் கற்றாள். படிப்படியாக வளர்ந்தாள். தன் இனமும் வளர புதிய கல்வியைக் கற்று சிறந்த பெண்ணாக மாறினாள். மேரி, "தோல்வியே வெற்றிக்கு முதல்படி" என்பதை உணர்ந்து, தனக்கு நடந்த அவமானத்தை எண்ணி படித்ததினால் மேன்மை பெற முடிந்தது. அந்த சிறுமியின் செயல், எனக்கு விருது பெற பாடமாக அமைந்தது. தனக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்ற பட்டம் ஒரு அனுபவத்தால் பெற்ற பட்டமாகும்.

**மேற்படிப்பும் பயணமும் :**

படிப்படியாக கல்வியில் உயர்ந்த மேரிக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மேரியிடம் வில்சன் அவர்கள் அடுத்து நீ என்ன செய்யப்போகிறாய் எனக் கேட்டு கொண்டே தன் தோளில் மேரியை சாய்த்து பரிவாகக் கேட்டாள். நான் மேலும் படிக்க வேண்டும் அதுவே என் விருப்பம் என்றார். ஆனால், மேலும் படிக்க வழியின்றி அலைகடலில் அகப்பட்ட கப்பலைப் போல நான் இருக்கிறேன் என்றாள். மீண்டும்

பருத்திக் காட்டில் பணியைத் தொடங்கினாள். அப்போது வில்சன் அங்கு வந்து ஒரு வெள்ளைக்கார பெண்மணி ஒரு கருப்பு இன குழந்தையின் நகரத்தை நோக்கிச் செல் என்றாள்.

மேரி மேல் படிப்பிற்குச் செல்ல, தொடர் வண்டி நிலையம் சென்றாள், ஆனால், ஊரே அவரை வழியனுப்ப வந்தது. 'குட்பை மேரி' குட்பை என கூறி வெற்றி உண்டாகட்டும் என வாழ்த்தி அனுப்பினார்கள்.

**முடிவுரை :**

வாழ்வில் படிப்பறிவற்ற நிலையிலிருந்து தன் முயற்சியாலும் பலருடைய முயற்சியாலும் வாழ்வில் உயர்ந்து சமுதாயத்தின் இருளைப் போக்கத் தோன்றிய மேரி ஜேன்னின் வாழ்வியல் நிகழ்வை சேர்ந்து வாழ்வோம்! வளமான உலகைப் படைப்போம்

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே என்பதை உணர்வோம்.

---

## கற்பவை கற்றபின்

**1. கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார மேரி மெக்லியோட் பெத்யூன், அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றைக் குழுவாக உருவாக்குக.**

**அயோத்திதாசப் பண்டிதர்**

**பிறப்பு:**

காத்தவராயன் என்ற இயற்பெயரைக்கொண்ட அயோத்தியதாச பண்டிதர் 20.05.1845ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை கந்தசாமி தம் ஆசிரியர் மீது பற்றுள்ளம் கொண்டதால் தம் பெயரை அயோத்திய தாச பண்டிதர் என மாற்றிக் கொண்டார். எல்லோரும், எல்லாமே பெற்றிட வேண்டும் என்ற சமூக நோக்கம் கொண்டவர்.

**சமூகப் பணி:**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரும்பாடுபட்டவர். அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு அல்லும் பகலும் அரும்பாடுபட்டவர். எவரையும் சாதிப்பெயரைச் சொல்லி இழிவு படுத்தக் கூடாது என்றார்.

**கல்விப் பணி :**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அப்போதைய சூழ்நிலையில் கல்வி என்பது எட்டாக்கனியாகவே இருந்தது. சென்னையில் ஐந்து இடங்களில் ஆல்காட் பஞ்சமர் பள்ளிகள் அமைத்து இலவசமாக கல்வித்தொண்டு புரிந்தார். கல்வி உதவித் தொகையும், அரசுப் பணிவாய்ப்பும் பெற்றுத் தந்தார்.

**சீர்திருத்தப் பணி:**

இவர் இரங்கூன் சென்று 10 ஆண்டுகள் வாழ்ந்தார். தேயிலை பறிப்போர், உழவுப் பணியாளர், மரம் அறுப்போர் முதலியோரை முன்னேற்றம் அடைய அரும்பாடுபட்டார். சித்த மருத்துவத்திலும் கைதேர்ந்து , மருத்துவப் பணியும் ஆற்றினார். தென்னிந்தியாவின் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை எனவும் மக்களால் போற்றப்பட்டார்.

**எழுத்துப் பணி:**

"ஒரு பைசா தமிழன்" என்னும் இதழைத் தொடங்கி நடத்தினார். புத்தரது ஆதிவேதம், இந்திரதேச சரித்திரம், மேலும் 25க்கு மேற்பட்ட சிறு நூல்களை எழுதி வெளியிட்டார். திருவாசகத்திற்கு உரைநூலும் எழுதியுள்ளார். தமிழ்மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்.

**2. கல்விக் கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**மருத்துவர் முத்துலெட்சுமி**

**இளமைப் பருவம்:**

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் என்ற இடத்தில் நாராயணாசாமி சந்திராம்பாள் இணையருக்கு மகளாக 1886 ஆண்டு முத்துலெட்சுமி பிறந்தார்.

**பெண்ணுரிமை முழக்கம் :**

1826ஆம் ஆண்டு இந்தியப் பெண்கள் மாநாட்டில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்களை அடிமைகளாக நடத்தும் வழக்கம் ஒழிய வேண்டும் என்று முழக்கம் செய்தார்.

**சமூக பணி :**

தேவதாசிமுறை ஒழிப்பு, இருதாரத் தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம்.

**சிறப்பு :**

இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல்தலைவர். சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார்.


கற்கண்டு

கல்வி ரு

## வினா, விடை வகைகள், பொருள்கோள்

GZWR3B



## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப் போக்கர் கேட்டது _______ வினா.
"அதோ,அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது _______விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**[விடை : அறியா வினா, சுட்டு விடை]**

## குறுவினா

**1. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின் விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது.?**

இதோ....இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

**விடை:**

(அ) மின் விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?
**அறியா வினா.**

(ஆ) இதோ.................இருக்கிறதே!
**சுட்டு விடை**

(இ) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா? இல்லையா?
**ஐய வினா.**

## சிறுவினா

**1. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"**

- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக

**சுட்டல்**

இப்பாடலில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

**இலக்கணம்**

பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப்போல் நேராகவே பொருள்கொள்ளுமாறு அமைந்ததால் இது ஆற்று நீர்ப் பொருள்கோள் ஆகும்.

**பொருள்**

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையை உருவாக்கி விடும்.

**விளக்கம்**

முயற்சி செல்வத்தைத் தரும், முயற்சி செய்யாமை வறுமையைத்தரும் இவ்வாறு தொடக்கம் முதல் முடிவு வரை நேராகப் பொருள் கொள்ளுமாறு அமைந்திருப்பதால், இது ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆகும்

## கூடுதல்வினாக்கள் - குறுவினா

**1. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- வினா ஆறு வகைப்படும்.
- அவை : அறிவினா, அறியாவினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா.

**1. அறி வினா - விளக்குக.**

- தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது.
- மாணவரிடம், "இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று ஆசிரியர் கேட்டல்

**2. அறியா வினா - விளக்குக.**

- தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது.
- ஆசிரியரிடம், "இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று மாணவர் கேட்டல்

**3. ஐய வினா - விளக்குக.**

- ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது
- "இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?" என வினவுதல்.

**4. கொளல் வினா ___ விளக்குக.**

- தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது.
- "ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?" என்று நூலகரிடம் வினவுதல்.

**5. கொடை வினா ___ விளக்குக.**

- பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது.
- "என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இருக்கிறதா?" என்று கொடுப்பதற்காக வினவுதல்.

**6. ஏவல் வினா ___ விளக்குக.**

- ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது.
- "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.

**7. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- விடை எட்டு வகைப்படும்.
- சுட்டுவிடை, மறைவிடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை.

**8. வெளிப்படை விடைகள் எத்தனை வகை? அவை யாவை?**

- வெளிப்படை விடைகள் மூன்று வகைபபடும்.
- அவை: சுட்டு விடை, மறைவிடை, நேர்விடை.

**9. குறிப்பு விடைகள் எத்தனை? ஆவை யாவை?**

- குறிப்பு விடைகள் ஐந்து வகைப்படும்.
- அவை: ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை.

**10. சுட்டு விடை - விளக்குக.**

- சுட்டிக் கூறும் விடை.
- "கடைத்தெரு எங்குள்ளது?" என்ற வினாவிற்கு, "வலப்பக்கத்தில் உள்ளது" எனக் கூறல்.

**11. மறை விடை - விளக்குக.**

- மறுத்துக் கூறும் விடை
- "கடைக்குப் போவாயா?" என்ற கேள்விக்குப் "போகமாட்டேன்" என மறுத்துக் கூறல்.

**12. நேர் விடை - விளக்குக.**

- உடன்பட்டுக் கூறும் விடை.
- "கடைக்குப் போவாயா?" என்ற கேள்விக்குப்"போவேன்" என்று உடன்பட்டுக் கூறல்.

**13. ஏவல் விடை - விளக்குக.**

- மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை.
- "இது செய்வாயா?" என்று வினவியபோது, நீயே செய்" என்று ஏவிக் கூறுவது

**14. வினா எதிர் வினாதல் விடை - விளக்குக.**

- வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது .
- "என்னுடன் ஊருக்கு வருவாயா?" என்ற வினாவிற்கு "வராமல் இருப்பேனா?" என்று கூறுவது.

**15. உற்றது உரைத்தல் விடை - விளக்குக.**

- வினாவிற்கு விடையாக ஏற்கனவே நேர்ந்ததைக் கூறல்.
- "நீ விளையாடவில்லையா? " என்ற வினாவிற்குக் "கால் வலிக்கிறது" என்று உற்றதை உரைப்பது.

**16. உறுவது கூறல் விடை - விளக்குக.**

- வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல்.
- "நீ விளையாடவில்லையா?" என்ற வினாவிற்குக் "கால் வலிக்கும் " என்று உறுவதை உரைப்பபது.

**17. இனமொழி விடை - விளக்குக.**

- வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல்.
- "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது.

**18. பொருள்கோள் என்றால் என்ன?**

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ, மாற்றியோ பொருள்கொள்ளும் முறைக்கு பொருள்கோள் என்று பெயர்.

**19. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- பொருள்கோள் எட்டு வகைப்படும்.
- அவை: ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழி மர்றறுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

**20. மொழி நடையின் சிறப்பு யாது?**

வினாவிற்கு ஏற்ப விடையளிப்பதுதான், மொழி நடையின் சிறப்பு.

**21. விடையின் வேறு பெயர்களைக் கூறுக.**

இறை, செப்பு, பதில் என்பன, விடையின் வேறு பெயர்கள்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. ஆற்றுநீர்ப் பொருள் கோளைச் சான்றுடன் விளக்குக**

**இலக்கணம் :**

பாடலின் தொடக்கம் முதல் முடியும் வரை ஆற்று நீரின் போக்கைப் போல நேராகவே பொருள்கொள்வது ஆற்று நீர்ப் பொருள்கோள் எனப்படும்.

**சான்று :**

"சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
மேல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே" - சீவகசிந்தாமணி

**விளக்கம் :**

நெற்பயிர், கருவுற்ற பச்சைப் பாம்பின் வடிவம்போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, செல்வம் சேர்ந்தவுடன் பண்பற்றமக்கள் பணிவின்றித் தலை நிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று, முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்த்தன.

"நெல்" என்னும் எழுவாய் அதன் தொழில்களான இருந்து, ஈன்று , நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் "காய்த்தவே" என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

பாடலின்தொடக்கம்முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்தால் இது "ஆற்றுநீர்ப் பொருள்கோள்" ஆகும்.

**2. நிரல் நிறைப் பொருள்கோள் - சான்றுடன் விளக்குக.**

ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல்நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது "நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

இது முறை நிரல்நிறைப் பொருள்கோள், எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் என இருவகைப்படும்.

**அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்**

செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச்சொற்களை வரிசையாக நிறுத்தி , அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல்"முறை நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

**எ.கா.** "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

இக்குறளில் பண்பு, பயன் என்ற இரு சொற்களை வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய விளைவுகளாக அன்பு, அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும். எனவே , அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனும் பயனிலைகளாக - நிரல்நிறையாக - நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல்"முறை நிரல்நிறைப் பொருள்கோள்" எனப்படும்.

**(ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்**

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் " எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

**எ.கா.** "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்."

இக்குறளில் முதல் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாகக் கற்றார், கல்லாதார் (ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றைக் கற்றார் மக்கள் என்றும்,

கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள்கொள்ள வேண்டும். எனவே, இக்குறள் "எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

**3. கொண்டு கூட்டுப் பொருள்கோள் - சான்றுடன் விளக்குக.**

**இலக்கணம்:-**

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

**எ.கா :** ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு
- மயிலைநாதர் உரை

**விளக்கம்:-**

மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை - என்று கருத்தைக் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

---

## கற்பவை கற்றபின்

### வினா வகைகளையும் விடை வகையையும் சுட்டுக

1. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" - இது அறியா வினா.
2. "இந்த வழியாகச் செல்லுங்கள் " - இது சுட்டு விடை
3. "எனக்கு எழுதித் தருகிறாயா?" - இது ஏவல் வினா
4. "எனக்கு யார் எழுதித் தருவார்கள்" - இது வினா எதிர் வினாதல் விடை

**2. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினா விடை வகைகளைக் கண்டு எழுதுக.**

**பாமகள்** : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே - **(அறியா வினா)**

**ஆதிரை** : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன் - **(நேர் விடை)**

**பாமகள்** : அப்படியா! என்ன தலைப்பு? **(அறியா வினா)**

**ஆதிரை** : கல்வியில் சிறக்கும் தமிழர்! **(நேர் விடை)**

நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ? **(ஐய வினா)**

**பாமகள்** : ஏன் வராமல் இருப்பேனா? **(வினா எதிர் வினாதல் விடை)**

---

### படித்துச் சுவைக்க

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு **(செந்தமிழ்)**
**- பாரதியார்**

It gave Valluva the Great
For all the world to have:
And the fame rose sky high
Of our Tamil - Land
It made a necklace of gems.,
Named "The Lay of the Anklet"

Which grips enraptured hearts
In our Tamil – Land.

**- The voice of Bharati**

## மொழி பெயர்ப்பு

### ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக

| யாழிசை | It's like new lute music |
|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப்பார்த்தேன்<br>பேத்தி<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>- பாரதிதாசன் | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation.<br>- Translated by Kavignar Desini |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Lute music | - | யாழிசை | Grand-daughter | - | பேத்தி |
| Chamber | - | அறை | Rote | - | நெட்டுரு |
| To look up | - | எட்டிப்பார்த்தல் | Didactic compilation | - | நீதி நூல் திரட்டு |

### அட்டவணையில் விடுபட்டதை எழுதுக

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்த் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னாார் | சொன்ன அம்மா | சொல்லிச் சென்றார் | அம்மா சொல்லாதே! | கதையைச் சொன்னார் |
| தா | அரசர் தந்தார் | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | அரசரால் தரப்பட்டது |
| பார் | துளிர் பார்த்தாள் | பார்த்த துளிர் | பார்த்துச் சிரித்தாள் | துளிரே பார்! | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | வந்து நின்றது | குழந்தையே வா! | குழந்தையோடு வந்தான் |

## தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**எ.கா.** அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.**

குளிர்ந்த நிழல் தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.**

இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தரும்.

**3. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.**

ஒழுக்கத்துடன் அறிவின் ஊற்றாகிய கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.

**4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.**

படைப்பாற்றல் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.

---

## மதிப்புரை எழுதுக

**பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகககத்தில் பழத்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.**

**நூல் தலைப்பு : நல்லவண்ணம் வாழலாம்**

**மதிப்புரை :**

அமைதியும், ஆழ்ந்த சிந்தனையும், தெளிந்த ஞானமும், இனிய பேச்சும் ஒருங்கே நிறைந்தவர் திரு. சுகிசிவம். இவருடைய அறிவார்ந்த கருத்துக் கருவூலமே இவ்வரிய நூலாகும்.

கட்டுரைவடிவில் உள்ள இந்நூல் மனித குலத்திடம் அவர் கொண்டுள்ள ஈடுபாடுகள், அம்மனிதகுலம் உயர்வடைய அவர் காட்டுகின்ற வழிகள் முதலியவற்றை நாம் புரிந்துகொள்கிறோம்.

நல்ல தொடக்கம் ஒரு செயலின் வெற்றியாக அமையும். புலனைந்தும் வெல்வதே வீரம். தன்னம்பிக்கை முன்னேற்றம் தரும். படிப்பு நடைமுறைக்கு வர வேண்டும். அன்புதான் பக்தியின் இலக்கணம் உள்ளத்து அனையதே உயர்வு. அவரவர் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவரவரே காரணம்.

உறுதியான உடலும், உயர்வான உள்ளமும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம். நம்மை நாமே எண்ணிப்பார்க்கும்சுய விமரிசனம் வெற்றியை ஈட்டித்தரும். ஆசையே துன்பத்திற்குக் காரணம். பணம் தேவையேயாயினும் அதனை அறவழியில் ஈட்டவேண்டும். விதிக்கொள்கையை வலியுறுத்துவதே அதை வெற்றி கொள்ள வேண்டும் என்பதற்காகவே. ஒவ்வொரு நாளும் பயனள்ளதாக நாம் செயல்பட வேண்டும்.

"பதினாறும் பெற்றுப் பெறுவாழ்வு வாழ்க" என்பது முதுமொழி. இந்நூலில் உள்ள பதினாறு கட்டுரைகளையும் படித்து அதன்படி ஒழுகினால் நாம் பெருவாழ்வு வாழலாம் என்பது உறுதி.

மிக ஆழமான கருத்தை விளக்க வாழ்க்கையில் நாம் காணும் எளிய நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி உள்ளம் கவர்கிறார்.

"டாக்டருக்கே இருமல் ....................அம்மா கையால்
ஒரு தம்ளர் கஷாயம் சாப்பிடும் பிரபல

டாக்டர்கள் போல........

கட்டுரைகள் முழுவதும் கருத்தும் நயமும் பின்னிப்பிணைந்த தொடர்கள் இழையோடுகின்றன. சான்றுகள் சில.

"அழகாய் இருக்க ஆசைப்படு; அழகை
இழந்தாவது அடுத்தவர்க்குப் பயன்படு"

"வீரம் என்பது ஆயுதங்களில் இல்லை
மனிதனின் மனத்தில் இருக்கிறது"

ஆழம் குறைவாக இருந்தாலும் கலங்கிய நீருள் கிடக்கும் பொருள்களை காணமுடியாது. ஆனால், தெளிந்த பளிங்கு போன்ற நீர் நிலையில் ஆழம் அதிகமாயினும் நீரின் தெளிந்த தன்மையால் அதில் கிடக்கும் பொருள்கள் அனைத்தும் நன்றாகத் தெரியும். கிடக்கும் பொருள்கள் அனைத்தும் நன்றாகத் தெரியும். அதைப்போல், இக்கட்டுரைகள் தம் உட்பொருளைத்தெளிவுற வெளிப்படுத்துகின்ற மணிநீர்க் குளங்களாகும்.

உலக மக்களின் உள்ளங்களில் உழவாரப் பணி செய்யும் சுகி. சிவம் அவர்களின் தொண்டு வாழ்க. வாழ்க!

---

## படிவத்தை நிரப்புக

**நூலக உறுப்பினர் படிவம்**

**------------------------ மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய/கிளை/ஊர்ப்புற நூலகம் திருவில்லிப்புத்தூர்

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

**அட்டை எண்** **உறுப்பினர் எண்**

**பெயர்** : ____________________

**தந்தை பெயர்** : ____________________

**பிறந்த தேதி** : ____________________

**வயது** : ____________________

**படிப்பு** : ____________________

**தொலைபேசி எண்** : ____________________

**முகவரி** : ____________________

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ____________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து இத்துடன் காப்புத்தொகை ரூ.________, சந்தா தொகை ரூ.________ஆக மொத்தம் ரூ.__________ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலகநடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : தங்கள் உண்மையுள்ள

நாள் :

திரு/திருமதி/செல்வி/செல்வன் ______________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை பிணைப்பாளர் கையொப்பம்

(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள்,

பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,

சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
நகராட்சி/மாநகராட்சி/ஒன்றிய /பேரூராட்சி உறுப்பினர்கள்)

## நூலக உறுப்பினர் படிவம்

**விருதுநகர் மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய/கிளை/ஊர்ப்புற நூலகம் திருவில்லிப்புத்தூர்

அட்டை எண் : 1409 உறுப்பினர் எண் 6876

**பெயர்** : இரா. அழகுவேல்.

**தந்தை பெயர்** : இரா. இராமசாமி.

**பிறந்த தேதி** : 09.02.1986.

**வயது** : 33

**படிப்பு** : எம்.ஏ

**தொலைபேசி எண்** : 9842150010

**முகவரி** : 6/96 முதல் தெரு, அண்ணா நகர்,
திருவில்லிப்புத்தூர், விருதுநகர் - 626125.

நான் திருவில்லிபுத்தூர் நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய் இத்துடன் காப்புத்தொகை ரூ.1000, சந்தா தொகை ரூ.200ஆக மொத்தம் ரூ.1200 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலகநடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : திருவில்லிபுத்தூர் தங்கள் உண்மையுள்ள

நாள் : 14. 04. 20xx (இரா. அழகுவேல்)

திரு/திருமதி/செல்வி/செல்வன் இரா. அழகுவேல் அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை பிணைப்பாளர் கையொப்பம்

பா. கண்ணப்பன்

(பதவி மற்றும் அலுவலகம்)
(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள்,
பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை
ஆசிரியர்கள், சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
நகராட்சி/மாநகராட்சி/ஒன்றிய/பேரூராட்சி உறுப்பினர்கள்)

## மொழியோடு விளையாடு

### புதிர்ப் பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க

தார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன். நான் யார்? - **காகம்**

## தொழிற்பெயாகளின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க

நிலத்துக்கு அடியில் கிடைக்கும் -------யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில்--------- நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும்.(புதையல், புதைத்தல்).

1. காட்டு விலங்குகளைச் -------தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச்------ --- திருந்த உதவுகிறது. (சுட்டல் , சுடுதல்)

2. காட்டு விலங்குகளைச் ............... தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ............ திருந்த உதவகிறது. (சுட்டல், சுடுதல்)

3. காற்றின் மெல்லிய ------பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான --------பூக்களை மாலையாக்குகிறது. ( தொடுத்தல், தொடுதல்)

4. பசுமையான --------- ஐக் --------- கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

5. பொதுவாழ்வில் ------- கூடாது ----- இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு).

**விடை :**

1. புதையல் - புதைத்தல்.
2. சுடுதல் - சுட்டல்
3. தொடுதல் - தொடுத்தல்
4. காட்சி - காணுதல்
5. நடித்தல் - நடிப்பு.

## அகராதியில் காண்க

| | | |
|---|---|---|
| மன்றல் | - | திருமணம், நெடுந்தெரு |
| அடிச்சுவடு | - | காலடிக்குறி |
| அகராதி | - | அகர வரிசைப் படுத்தி பொருள் காணும் நூல். |
| தூவல் | - | நீர்த்துளி |
| மருள் | - | மயக்கம், வியப்பு. |

## செயல் திட்டம்

"பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

## காட்சியைக் கவிதையாக்குக



"மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.
மாசில்லா வாழ்வை வாழ்வோம்
வனமே நம் உயிர்வளி
காட்டை அழிக்கும் கயவர்களை
கனிவுடன் எடுத்துக்கூறி
காலமெல்லாம் நலமாய் வாழ
விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்."

## நிற்க அதற்கு தக

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | உடன் பிறப்புகளுடன் நட்புறவு கொள்வேன். |
| மரம் வளர்ப்பேன் | தோட்டம் அமைப்பேன். |
| பெரியோரை மதித்து நடப்பேன் | பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன். |

## கலைச்சொல் அறிவோம்

Emblem - சின்னம்
Intellectual - அறிவாளர்
Thesis - ஆய்வேடு
Symbolism - குறியீட்டியல்

## இயல் 5

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது __________ வினா
2. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று
   - இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்.

3. மொகு சாஸ்ட்டு என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள் __________.

II. விடையளி: 4x2=8

4. மொழிபெயர்ப்பு வாயிலாக சர்வதேசத் தன்மை பெறும் முறைகள் யாவை?
5. இறைவன் கடம்பவனக் கோவிலுக்கு மீண்டும் ஏன் திரும்பினார்?
6. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
7. "கழிந்த பெரும் கேளிவியனான் எனக் கேட்டு முழுது
   உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த பெரும் காதல்மிகு
   கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்"
   - இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்?
   காதல்மிகு கேண்மையினான் யார்?

III. விடையளி: 2x4=8

8. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
9. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
   இன்மை புகுத்தி விடும். - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

IV. விடையளி: 1x6=6

10. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

V.11. குறிப்புகளைக் கொண்டு வார இதழ் ஒன்றுக்கு கட்டுரை எழுதுக: 1x7=7

தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மொழி பெயர்ப்புக் கலை.

VI. 12. நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக: 1x6=6

________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ________

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் உறுப்பினர் எண்

1. பெயர் ________
2. தந்தை / கணவர் பெயர் ________
3. பிறந்த தேதி ________
4. வயது ________
5. படிப்பு ________
6. தொலைபேசி எண் ________
7. முகவரி ________
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ________

நான் ________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ______, சந்தா தொகை ரூ______ ஆக மொத்தம் ரூ. ______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன்______ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

VII. மொழிப்பயிற்சிகள்:

13. மொழிபெயர்க்க: 1x3=3

Wondering at the lute music coming from the chamber. Entered I to look up to in still. My grand-daughter learning by rote the verses of a didactic compilation.

14. ‘ஓடு’ என்ற வேர்ச் சொல்லை வினையெச்சத் தொடராக மாற்றுக. 1x1=1

15. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும் 1x1=1
- தொடரில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

16. பொருள் கூறுக: அடிச்சுவடு. 1x1=1

17. இலக்கணக் குறிப்பு தருக: கோபத்தீ 1x1=1

18. கலைச் சொல் அறிக: Thesis 1x1=1

19. ஏற்ற வினா அமை: 1x1=1
இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.

20. சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக: 1x1=1
வாழ்க்கை பயணமே வேறுபட்ட பாடங்களை கற்றுத் தருகிறது.

21. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக: 1x1=1
நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டது.

22. நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக: 1x1=1
இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்றார் ஔவையார்.

## இயல் 5

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. "அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது __________ விடையாகும்.
2. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் __________
   இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் __________
3. 'தகடூர்' எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை யாருக்குக் கவரி வீசினான்?

II. விடையளி: 4x2=8

4. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
5. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிடக் காரணம் எழுதுக.
6. நீதி வெண்பா உணர்த்தும் கல்வியின் சிறப்பு யாது?
7. பொருள்கோள் என்றால் என்ன?

III. விடையளி: 2x4=8

8. மொழிபெயர்ப்பு குறித்து அறிஞர்களின் கூற்றுகள் யாவை?

IV. விடையளி: 1x6=6

9. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
10. 'கற்கை நன்றே கற்கை நன்றே
    பிச்சை புகினும் கற்கை நன்றே' - என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

V. 12. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக. 1x5=5



VI. 13. பள்ளி ஆண்டு விழா மலருக்கு மதிப்புரை எழுதுக 1x7=7

குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப் பொருள் - மொழி நடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

VII. 14. பாடலைப் படித்து வினாவிற்கு விடை எழுதுக: 1x5=5

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி அருந்துணையாய் இன்பம்
பொருந்துவதும் கல்வியென்றே போற்று"

வினாக்கள்:

1. உயிருக்கு இன்பம் தருவது எது?
2. எதனைப் போற்றிக் கற்க வேண்டும்?
3. அடி எதுகையை எடுத்து எழுதுக.
4. பிரித்து எழுதுக: அருந்துணை.
5. இப்பாடலை இயற்றியவர் யார்?

VII. மொழிப்பயிற்சிகள்:

15. மொழிபெயர்க்க : lute music - didactic compilation - 1x2=2
16. 'தா' என்ற வேர்ச் சொல்லைப் பெயரெச்சத் தொடராக்குக. 1x1=1
17. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான் - இத்தொடரில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க. 1x1=1
18. பொருள் கூறுக: தூவல் 1x1=1
19. இலக்கணக் குறிப்பு தருக: அருந்துணை. 1x1=1
20. விடைக்கேற்ற வினா அமை : இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எடுத்துக் கூறுவதாகும். 1x1=1
21. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக: புதிய படைப்புகள் உருவாக மொழிபெயர்ப்பு உதவுகின்றன. 1x1=1

இயல் ஆறு

*கலை, அழகியல், புதுமை*

# நிலா முற்றம்



இசைக்கலைஞர்கள், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர்.

**கற்றல் நோக்கங்கள்**

- தமிழர்தம் நிகழ்கலைகளின் மேன்மையறிந்து, அவற்றை வளர்க்கவும் நிலைபெறச் செய்யவும் தங்களின் பங்களிப்பை நல்குதல்.
- எளிய சொற்களும் கருத்துகளும் கவிதைப் பொருளாகும் திறமறிந்து தானே கற்றல்.
- கவிநயம் நனிசொட்டச் சொட்டப் பாடப்பட்ட பாடல்களைக் கற்று மகிழ்வதுடன் அவை போன்ற பாடல்களைத் தேடித் தேர்ந்து படித்தல், படைத்தல்.
- சந்த நயமும் தொடைநயமும் கொண்ட பாடல்கள் மனனத்திற்கு எளிதானவை. அவற்றைப் பயின்று நாநெகிழ், நாபிறழ் பயிற்சிகளில் ஆற்றல் பெறுதல்.
- கதைகளைப் படித்து மையக் கருத்துணர்தல், கதை குறித்துக் கலந்துரையாடல்.
- தமிழ்ப் புறத்திணைப் பகுப்பின் நுட்பத்தை அறிந்து தமிழரின் போர்முறைகளைப் புரிந்துகொள்ளுதல்.

கலை

சூ

உரைநடை உலகம்

# நிகழ்கலை

HUPK4B







## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர் . இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?**

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

**[விடை : ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.]**

**2. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர் . இத்தொடருக்கான வினா எது?**

அ) கரகாட்டம் என்றால் என்ன?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?

ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

**[விடை : கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?]**


## குறுவினா

**1. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான் . இக்கூற்றை அயற் கூற்றாக எழுதுக.**

- அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையும் சிறந்த நடிப்பையும் ,இனிய பாடல்களையும் நுகர்ந்து மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினார்.

## சிறுவினா

**1. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்கலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக .**



- கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுதல்.
- கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி ஆடுபவரின் தலையில் நன்கு படியும் படி செய்கின்றனர்.
- தலையில் செம்பு நிற்கும் அளவிற்கு செம்பின் உள்ளே மணலையோ பச்சரிசியையோ நிரப்புவர் .
- கண்ணாடியிலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில் கிளி பொம்மை பொருந்திய மூங்கில் குச்சியைச் செருகி வைப்பார்.

## நெடுவினா

**1. நெகிழிப் பைகளில் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது . அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக .**

நெகிழிப் பைகளால் மண்ணின் வளம் குன்றுகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது என்ற தகவலை பொம்மலாட்டம் மூலம் எடுத்துரைத்து பாராட்டுதலுக்குரியது. நெகிழியே நெகிழியே ஒடிப்போ! என்ற பாடலை இசையுடன் பாடியது அனைவர்க்கும் விழிப்புணர்வைத் தூண்டியது.

மரங்களின் மீது நெகிழிப்பைகள் சிக்கிக் கொள்வதால் ஒளிச்சேர்க்கை நடைபெறாது என்பதையும் வெளிப்படுத்தினார்கள். நெகிழியால் நீர்நிலை மாசடைவதையும், நீர் வாழ் உயிரினங்கள் துன்புறுவதையும் பொம்மலாட்டம் மூலம் அருமையாக விளக்கிக் கூறிய குழுவினருக்கு பாராட்டுகளைத் தெரிவித்து கொள்கிறேன். கழிவு நீர்ப் பாதையில் அடைத்து விடுவதால் பல்வேறு நோய்கள் பரவுவதையும், எரிப்பதால் வெளிவரும் நச்சு வாயு புற்று நோய் ஏற்படுத்துவதையும் பாடல்கள் மூலம் எடுத்துரைத்தது சிறப்பாக அமைந்தது இக்குழுவினருக்கும் மனமாரப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. நிகழ்கலை என்றால் என்ன ?**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளைப் பிரித்துப் பார்க்க முடியாத கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.

**2. கரகாட்டம் என்றால் என்ன?**

- கரகாட்டம் கும்பாட்டம் என அழைக்கப்படுகிறது.
- கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ, ஈய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுதல்.

**3. தமிழகத்தில் கரகாட்டம் நிகழ்த்தப்படும் மாவட்டங்கள் யாவை?**

- திருநெல்வேலி
- திண்டுக்கல்
- மதுரை
- தஞ்சாவூர்
- திருச்சி
- கோயம்புத்தூர்

**4. மயிலாட்டம் என்றால் என்ன ?**

- கரகாட்டத்தின் துணையாட்டமே மயிலாட்டம் ஆகும்.
- மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்திற்கு ஏற்ப ஆடும். ஆட்டமே மயிலாட்டமாகும்.

**5. மயிலாட்டத்தில் பின்பற்றப்படும் அசைவுகள் யாவை?**

- ஊர்ந்து ஆடுதல்
- இறகை விரித்தாடுதல்
- தாவியாடுதல்
- தலையைச் சாய்த்தாடுதல்
- மிதந்து ஆடுதல்
- இரு புறமும் சுற்றி யாடுதல்
- அகவுதல்
- தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல்

**6. காவடியாட்டம் ஆடப்படும் நாடுகள் யாவை?**

- இலங்கை
- மலேசியா

**7. ஒயிலாட்டம் என்றால் என்ன?**

- காலில் சலங்கையைக் கட்டி ஒரே நிறத்துணியை முண்டாசு போலச் கட்டுதல்.
- சிறுதுணியை இசைக்கேற்ப வீசி கம்பீரத்துடன் ஒயிலாக ஆடும் ஆட்டமாகும்.

**8. ஒயிலாட்டத்திற்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் யாவை ?**

- தப்பு
- டோலக்
- தவில்
- தோலால் கட்டப்பட்ட குடம்
- சிங்கி

**9. தேவராட்டம் என்றால் என்ன?**

- ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்
- வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள்படுகிறது.

**10. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி குறித்து எழுதுக?**

- தேவதுந்துபி
- இது பொதுவான பெயர் உறுமி

**11. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் இடங்களைக் கூறுக?**

- கோவில் திருவிழா
- திருமண விழா
- விளம்பர நிகழ்வு
- விழிப்புணர்வு
- இறப்பு

**12. "பறை - குறிப்பு வரைக**

- பறை - தமிழிசைக் கருவி பறை என்பதற்கு பேசு என்பது பொருள்
- பேசுவதை இசைக்கப்படும் தாளக் கருவி பறை. தொல்காப்பியர் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்று பறை.

**13. புலியாட்டம் என்றால் என்ன?**

- தமிழரின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்கிறது.
- பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் ஒன்று
- புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக் கோடுகளை இட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டி ஆடுவர்.

**14. தோற்பாவைக் கூத்து என்றால் என்ன ?**

- தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவைக் கூத்து எனப் பெயர் பெற்றது.
- தோலில் செய்த வெட்டு வரைப்படங்களை விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்துவர்.
- கதைக் கேற்ப மேலும் கீழும் ,பக்கவாட்டிலும் அசைத்துக் காட்டி உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து.

**15. இலக்கியத்தில் கரகத்தின் பங்கு யாது?**

**புறநானூறு :**

'நீரிற வறியாக் கரகத்து' என்னும் புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

**சிலப்பதிகாரம் :**

மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் ஒன்று 'குடக் கூத்து' என சிலப்பதிகாரம் கூறுகிறது.

**16. கூத்துப்பட்டறை ந. முத்துசாமி பெற்ற விருதுகள் யாவை?**

- இந்திய அரசின் தாமரைத் திரு விருது (பத்ம ஸ்ரீ)
- தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது.

**17. அர்ச்சுனன் தபசு குறிப்பு வரைக.**

மழை வேண்டி நிகழ்த்தப்படும் தெருக்கூத்து அர்ச்சுனன் தபசு.

**18. தோற்பாவைக் கூத்து எவ்வடிவில் மாற்றம் பெற்றுள்ளது?**

கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம்.

**19. கரகாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் யாவை?**

நையாண்டி மேளம், தவில், நாதசுரம், பம்பை.

**20. கரகாட்டத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

கரகம், கும்பாட்டம், குடக் கூத்து.

**21. பொய்க்கால் குதிரையாட்டம் என்பது யாது?**

மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டமாகும்.

**22. காவடியின் வகைகள் யாவை? எந்தெந்த நாடுகளில் காவடியாட்டம் ஆடப்பெறுகிறது?**

காவடியின் அமைப்புக்கு ஏற்ப மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக் காவடி எனக் காவடி பல வகைப்படும். இலங்கை, மலேசியா உட்படப் புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்பெறுகிறது.

**23. சேவையாட்டம் - சிறு குறிப்பு வரைக.**

சேவை ஆட்டத்தை இசைச் சார்புக் கலையாகவும், வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர். தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகிற கலை, 'சேவையாட்டம்'. ஆட்டக் கலைஞர்கள் சேவப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டே ஆடுகின்றனர்.

## கூடுதல்வினாக்கள் - சிறுவினா

**1. ஒயிலாட்டத்தின் சிறப்புகள் யாவை ?**

- ஒயிலாட்டம் இரு வரிசையாக நின்று ஆடுவர்
- ஒருவருக்கொருவர் இடம்விட்டு விலகி நின்று ஆடும் ஆட்டம் ஒயிலாட்டமாகும் . இது ஆண்கள் மட்டும் ஆடும் ஆட்டமாகும்.
- ஒரே குழுவில் வந்து ,முதியவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு .
- தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் இவ்வாட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

**2. தெருக்கூத்து பற்றி விளக்குக**

- நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலை
- கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவு இயக்கத்துடன் தொடர்புடையது
- ஆடை அணி ஒப்பனைகளுடன், திறந்த வெளியை ஆடுகளமாக்கி வெளிப்படுத்தும் கலை

**3. நிகழ்கலைகள் எவ்வெவ்வாறு நிகழ்கின்றன?**

- சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.
- இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.
- சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும், செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.
- பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

**4. கூத்துக்கலை வளர்ப்பதில் முத்துசாமி அவர்களின் பங்களிப்பினைக் குறிப்பிடுக.**

- தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர் முத்துசாமி.
- "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர்.
- தமிழ்நாட்டின் வழிவழி நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக் கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர்.
- நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம் செய்து இசையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியவர் ந. முத்துசாமி ஆவார்.

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக**

- சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளைப் பிரித்து பார்க்க இயலாத கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள் எனப்படும். இவை மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து கவலைகளைப் போக்குகின்றன
- பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் உயர்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம் இதை கும்பாட்டம் எனவும் அழைப்பர்.
- இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்
- ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொண்டு காலில் சலங்கை அணித்தும் ,இசைக்கு ஏற்ப கையில்ஒரு துணியை வைத்து ஆடும் ஆட்டம் ஒயிலாட்டம்.
- மரத்தால் ஆன பொய்க்காலில் நின்று கொண்டு ,குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டு ஆடும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டமாகும்.
- தோலில் செய்த வரைபடங்களை விளக்கின் ஒளியில் ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி கதைக்கு ஏற்ப மேலும் கீழும் அசைத்து உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து
- நிகழ்கலைகள் மக்களோடு நேரடித் தொடர்புடைய கலையாகும். மகிழ்ச்சி அளித்து கவலையைப் போக்கும் கலையாகும். சமுதாயத்தின் பண்பாட்டு நிகழ்வுகளை வெளிப்படுத்தும் சாதனங்களாகத் திகழ்கிறது.
- தற்போது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள் ஆதிக்கம் உள்ளது. கிராமப்புறங்களில் மக்கள் நாட்டுப்புறக்கலையை வளர்ப்பதில் ஆர்வம் இல்லை. கலைஞர்கள் வறுமையால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.
- இதை வளரச் செய்ய அரசு விழாக்களில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் . கலைஞர்களுக்கு பாராட்டுகளும், பரிசுகளும் வழங்க வேண்டும். ஊர்த் திருவிழாக்களில் இத்தகைய கலைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

---

## மொழிப் பயிற்சிகள்

### விடைக் கேற்ற வினா அமைக்க

**1. கரகாட்டம், நடனம், கரகம், கும்பாட்டம் என்று அழைக்கப்படுகிறது .**

கரகாட்டம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

**2. கரகாட்டத்தின் துணையாட்டமாக மயிலாட்டம் ஆடப்படுகிறது.**

கரகாட்டத்தின் துணையாட்டமாக கருதப்படும் ஆட்டம் எது?

**3. "கா" என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்**

"கா" என்பதன் பொருள் யாது?

## சந்திப் பிழை நீக்கி எழுதுக

1. இரு முனைகளிலும் சம எடைகளை கட்டிய தண்டினை தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். இரு முனைகளிலும் சம எடையைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.
2. தேவராட்டம் வானத்து தேவர்கள் ஆடிய ஆட்டம் என பொருள் கொள்ளப்படுகிறது.
   தேவராட்டம் வானத்துத் (தேவர்கள் ஆடிய ஆட்டம்) எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

---

## ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக

1. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றன.
   தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக **ஆடப்படுகின்றது**
2. பறைபாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகிறது.
   பறைபாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் **காணப்படுகின்றன**

---

## நிறுத்தற் குறியீடு இடுக

**1. தப்தப் என்று ஒலிப்பதால் அந்த ஒலியின் அடியாகத் தப்பி எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது .**

"தப் தப்" என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் தப்பு எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

---

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் வாழும் பகுதியிலுள்ள நிகழ்கலைக் கலைஞர்களை நேர்முகம் கண்டு அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

நிகழ்கலைக் கலைஞர்களிடம் நேர் காணலின் போது ....

**பேட்டியாளர் :**

நிகழ்கலைக் கலைஞர்களே! இன்றைய கால கட்டத்தில் உங்களது கலைத் தொழில் எந்த அளவிற்கு சிறப்பாக உள்ளது.

**கலைஞர் :**

நாங்கள் மிகவும் தொழிலில் நலிவடைந்துள்ளோம். வறுமை நிலையில் இருக்கிறோம். இந்தத் தொழில் மூலம் கிடைக்கும் வறுமானமே எங்கள் வாழ்க்கை. ஆகையால், நாங்கள் வேறு தொழிலில் ஈடுபடலாம் எனக் கருதுகிறோம்.

**பேட்டியாளர் :**

உங்கள் கலைகள் ஏன் நலிவடைந்துள்ளன என்பதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**கலைஞர் :**

தற்போது திரைப்படத்துறைகள், தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வருகையால் எங்கள் கலைக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

**பேட்டியாளர் :**

நீங்கள் வளமுடன் வாழ அரசு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கறீர்கள்?

**கலைஞர் :**

அரசு விழாக்களிலும், ஊர்த்திருவிழாக்களிலும் எங்கள் கலைநிகழ்விற்கு வாய்ப்புக் கொடுத்தும், பாராட்டு, பரிசு கொடுத்தும் எங்களை வளமாக வாழ வழி வகை செய்ய வேண்டும் என விரும்புகிறோம்.

**பேட்டியாளர் :**

அனைவருக்கும் நன்றி

**கலைஞர் :** நன்றி

கலை

சு

கவிதைப் பேழை

# பூத்தொடுத்தல்

–உமா மகேஸ்வரி

IA8F5M



**கவிதை**

இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?
சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்.
இறுக்கி முடிச்சிட்டால்
காம்புகளின் கழுத்து முறியும்.
தளரப் பிணைத்தால்
மலர்கள் தரையில் நழுவும்
வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும்
இந்தப் பூவை
எப்படித் தொடுக்க நான்
ஒரு வேளை என் மனமே நூலாகும்
நுண்மையுற்றாலொழி

**விளக்கம்**

இந்த மணமிக்க பூவினை எப்படித் தொடுப்பது? மிகவும் அமைதியும் அன்பும் நிறைந்த உலகத்தை மிகவும் ஒல்லியான தண்டுகள் தாங்கிப் பிடிக்கின்றன. மிகவும் இறுக்கி முடிச்சுப் போட்டால் தாங்கிப் பிடிக்கின்ற காம்புகளின் கழுத்து முறியும் சிறிது நெகிழ்வாகக் கட்டினால் ,மலர்கள் தரையில் நழுவி கீழே விழும் . தன் முன்னால் மரணம் தயாராக இருப்பதை அறிந்தும் சிறிதளவு கூட வருத்தப்படாமல் சிரிக்கும் . இத்தகைய சிறப்பு வாய்ந்த பூவை எப்படி நான் சேர்த்துக் கட்டுவது. ஒரு சமயம் என் மனதை நூலாக்கி சட்டத்தை அறிந்தால்தான் நான் இதனைத் தொடுக்க இயலும்.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : உமா மகேஸ்வரி |
| **பிறந்த மாவட்டம்** | : மதுரை |
| **எழுதிய நூல்கள்** | : கற்பாவை, வெறும் பொழுது, நட்சத்திரங்களின் நடுவே |
| **பல் துறைகளில் சிறப்பு** | : கவிதை, புதினம், சிறு கதை எழுதுவதில் சிறந்தவர் |
| **வாழும் மாவட்டம்** | : தேனி மாவட்டம் |

## பொருள் கூறுக

| | | | |
|---|---|---|---|
| பிரபஞ்சம் | - உலகம் | தளர | - நெகிழ |
| சாந்தம் | - அமைதி | நுண்மை | - கூர்மையான |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| **இறக்கி** | - வினையெச்சம் | **தொடுக்க** | - பெயரெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**அ) தொடுப்பது = தொடு +ப் +ப் +அது**

| | |
|---|---|
| **தொடு** | - பகுதி; |
| **ப** | - சந்தி |
| **ப்** | - எதிர் கால இடைநிலை; |
| **அது** | - ஒன்றன் பால் வினைமுற்று விகுதி |

**ஆ) தொடுக்க = தொடு +க் +க் +அ**

| | |
|---|---|
| **தொடு** | - பகுதி; |
| **க்** | - சந்தி |
| **க்** | - எதிர்மறை இடைநிலை |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. மலர்கள் தரையில் நழுவும், எப்போது ?**

அ) - அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப்பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால் **[விடை: தளரப்பிணைத்தால்]**

## குறுவினா

**1. சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச்**
**சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்" - இக் கவிதை அடிகள் உணாத்தும் உள்ளழகை எழுதுக**

மலரின் ஒல்லியான தண்டுகள் அமைதியானதொரு உலகத்தைச் சுமப்பதாக இந்த அடிகள் கூறுகின்றன. அதாவது மலரை ஒரு பிரபஞ்சமாக இந்தப் பாடலில் ஆசிரியர் உருவகிக்கிறார்.

## சிறுவினா

**1. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப்பாடலில் வெளிப்படுகிறது ஒப்பிட்டு எழுதுக.**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளில் கழுத்து முறியும்<br>தளரப்பிணைத்தால் மலர்கள் தரையில்<br>நழுவும் வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும் இந்தப்பூவை எப்படித் தொடுக்க நான் | கையாலே பூவெடுத்தா - மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா- மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத்துரட்டி கொண்டு - மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார் |

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. இந்தப் பூவை எப்பொழுது தொடுக்க முடியும் ?**

மலரின் காம்பு முறியாமலும் மலர்கள் தளர்ந்து தரையில் விழாமலும் தொடுப்பது எப்படி? மனத்தை நூலாக்கி கூர்மையாகத் தொடுத்தால் மட்டும் இந்தப் பூவைத் தொடுக்க முடியும்.

**2. பூத் தொடுத்தல் என்னும் கவிதையில் பூவை என்ற சொல் யாரைக் குறிக்கிறது ? அப்பூவைத் தொடுப்பது எப்படி ?**

பூத்தொடுத்தல் என்னும் கவிதையில் பூவை என்ற சொல் பெண்ணைக் குறிக்கிறது . மணமாகிய நுட்பமான நூலால் மட்டுமே தொடுக்க முடியும் .

**3. பூ எப்படிச் சிரித்து நிற்கும்?**

மென்மைத் தன்மையுடைய பூ, காற்றின் அசையில் விழுந்தாலும், பறிப்பவர் கை அழுந்தப் பிடித்தாலும் அழியும். ஆனாலும் அதன் மலர்ச்சி, சிரிப்பது போல் உள்ளது. வாசலில் மரணம் நிற்பதறிந்தும், தன்னைப் பறிக்க வந்துள்ளதை அறிந்தும், வருந்தாமல் பூ சிரித்துக் கொண்டிருக்கிறது.

**4. மலர்களை மென்மையாகத் தொடுக்க வேண்டும் ஏன்?**

மாலை தொடுப்பவர், மலர்களை இறுக்கிப் பிடித்தால், காம்பின் கழுத்து முறியும். தளரப் பிணித்தால், மலர்கள் தரையில் வீழும். ஆதலால், தொடுப்பவர் மலர்களை மென்மையாகத் தொடுக்க வேண்டும்.

**5. 'என் மனமே நூலாகும்**
**நுண்மையுற் றாலொழிய' - இத்தொடரின் பொருள் யாது?**

"தொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் நூலானது மென்மையானதாகவோ, நுண்மையாகவோ இருந்தால், கட்டிய பூக்கள் வீணாகா" என்பதாகும்.

**6. கவிஞர் உமா மகேஸ்வரி படைத்துள்ள கவிதைத் தொகுதிகளைக் கூறுக.**

நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை ஆகிய கவிதைத் தொகுதிகளைக் கவிஞர் உமா மகேஸ்வரி படைத்துள்ளார்.

---

## கற்பவை கற்றபின்

**1. ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளில் எதிர் கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க ?**

அதிகாலையில் கதிரவன் மலைகளுக்கு இடையே வெளியே வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மனதிற்கு இதமாகவும், மன இருளைப் போக்குவதாகும் அமைகிறது. இவ்வேளையில் ஒரு மரத்தின் மீது ஒரு காகம் அமர்ந்திருப்பதைக் கண்டேன். வேறு ஒரு காகம் பறந்து வந்து, அதன் அருகில் நின்றது. பின் தாய்க்காகம் தன் குஞ்சுக்கு உணவு அளிப்பதைப் பார்த்தேன். தன் குஞ்சுகளை பராமறித்த காட்சி எனக்கு வியப்பை அளித்தது. பறக்கின்ற பயிற்சியையும் அளித்து தாய்க்காகம். இதன் குணம் அனைவரையும் கவர்ந்திழுக்கும் பண்பை உடையது.

---

கலை சூ

கவிதைப் பேழை

# முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

–குமரகுருபரர்

IPRA6Y



சேயுடன் மகிழ்ந்து குலாவும் தாய், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.



**ஆடுக செங்கீரை!**

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழயு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை*

செங்கீரைப் பருவம் பா. எண் 8

**பாடலின் பொருள்**

திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்தது ஆடட்டும் . இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும். பசும்பொன் என ஒளிரும் தொந்தியவுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும். பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும். கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடட்டும் . உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துகளோடு ஆடட்டும். தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக.

## நூற் குறிப்பு

- பிள்ளைத்தமிழ் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
- இறைவனையோ, தலைவரையோ, புலவர்களையோ பாட்டுடைத் தலைவராகத் கொண்டு, குழந்தையாகப் பாவித்து பாடப்படும் நூல் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும்.
- பத்து பருவங்களும், பருவத்திற்கு பத்து பாடல்களும் 100 பாடல்களைக் கொண்ட நூல் பிள்ளைத்தமிழ்
- ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிளளைத்தமிழ் என இருவகையான பிள்ளைத்தமிழாகப் பிரிப்பர்.
- கடைசி மூன்று பருவங்கள் மட்டும் ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும், பெண்பால் பிள்ளைத்தமிழுக்கும் மாறுபடும்.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : குமரகுருபரர் |
| **ஊர்** | : திருநெல்வேலி மாவட்டம் - திருவைகுண்டம் |
| **காலம்** | : 17ஆம் நூற்றாண்டு |
| **பெற்றோர்** | : சண்முக சிகாமணிக் கவிராயர் - சிவகாம சுந்தரி |
| **மரபு** | : வேளாளர் மரபு |
| **புலமை** | : தமிழ், வடமொழி, இந்துஸ்தானி |
| **இயற்றிய நூல்கள்** | : கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான் மணிமாலை, காசிக் கலம்பகம், சகலகலா வல்லிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை. |

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| அடி | - திருவடி | அசும்பிய | - ஒளிவீசுகின்ற |
| அரை | - இடை | கதிர் | - ஒளி |
| பண்டி | - வயிறு | மேனி | - உடல் |
| நுதல் | - நெற்றி | முச்சி | - தலையுச்சிக் கொண்டே |
| குழை | - காதணி | | |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| **செம்பொன், பைம்பொன், செங்கீரை** | - பண்புத்தொகை |
| **குண்டலமும் குழைகாதும்** | - எண்ணும்மை |
| **ஆடுக, அருள்க** | - வியங்கோள் வினைமுற்று |
| **கட்டிய** | - பெயரெச்சம் |
| **பதிந்து** | - வினையெச்சம் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**பதிந்து = பதி+ த்(ந்) +த் +உ**

| | | | |
|---|---|---|---|
| **பதி** | - பகுதி; | **'த்' 'ந்'** | - ஆனது விகாரம் |
| **த்** | - சந்தி; | **த்** | - இறந்தகால இடைநிலை; |
| | | **உ** | - வினையெச்ச விகுதி |

## பொருத்துக

| | |
|---|---|
| 1. அரைஞாண் | - (அ) தலையில் அணிவது |
| 2. சுட்டி | - (ஆ) காதில் அணிவது |
| 3. குண்டல ,குழை | - (இ) நெற்றியில் அணிவது |
| 4. சூழி | - (ஈ) இடையில் அணிவது |

**[விடை 1-ஈ 2-இ 3-ஆ 4-அ]**

## பாடநூல் வினாக்கள் - சிறுவினா

**1. வயித்திய நாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

**<u>வைத்திய நாதபுரி முருகன் செங்கீரை ஆடும் அழகு</u> :**

- கால்களில் அணிந்திருந்த சிறு செம்பொன் கிண்கினிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.
- இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரை வட்டங்கள் ஆடின.
- பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடியது.
- பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பந்தாடியது.
- கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.
- உச்சிக் கொண்டை அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துகளோடு ஆடியது.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் குறிப்பிடப்படும் அணிகலன்கள் யாவை?**

சிலம்பு, கிண்கினி - காலில் அணிவது

அரைஞாண் - இடையில் அணிவது

சுட்டி - நெற்றியில் அணிவது

சூழி - தலையில் அணிவது

**2. பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

பிள்ளைத் தமிழ் இரண்டு வகைப்படும்.

அவை 1. ஆண்பால் பிள்ளைத்தமிழ் 2. பெண்பால் பிள்ளைத்தமிழ்

**3. ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பத்து பருவங்களை எழுதுக**

1. காப்புப் பருவம் 2. செங்கீரைப் பருவம் 3. தாலப்பருவம் 4. சப்பாணிப் பருவம் 5. முத்தப்பருவம் 6. வருகைப் பருவம் 7. அம்புலிப் பருவம் 8. சிற்றில் பருவம் 9. சிறுபறை பருவம் 10. சிறுதேர் உருட்டல் பருவம் .

**4. ஆண்பால் ,பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பொதுவான பருவங்கள் எத்தனை ? அவை யாவை?**

பொதுவான பருவங்கள் 7 பருவம்

1. காப்புப் பருவம் 2.செங்கீரைப் பருவம் 3.தாலப்பருவம் 4.சப்பாணிப் பருவம் 5.முத்தப்பருவம் 6.வருகைப்பருவம் 7.அம்புலிப் பருவம்

**5. பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவராகக் கருதப்படுவோர் யார்?**

இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குழந்தையாகக் கருதிப் பாடப்படும்.

**6. பிள்ளைத்தமிழில் சுட்டி குறித்து கூறுவன யாது?**

பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்ட வடிவமான சுட்டி பதிந்தாடட்டும்.

**7. ஆண்பாற் பிள்ளைத் தமிழின் இறுதிப் பருவங்களைக் கூறுக.**

சிற்றில், சிறுபறை, சிறுதேர் என மூன்றும் ஆண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவங்களாகும்.

**8. பெண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவங்களைக் கூறுக.**

கழங்கு, அம்மானை, ஊசல் என்ற மூன்றும் பெண்பாற் பிள்ளைத்மிழின் இறுதிப் பருவங்களாகும்.

**9. முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ் - நூல் குறிப்புத் தருக.**

வைத்தீசுவரன் கோவில் இறைவன் முருகன் பெயர் முத்துக் குமாரசாமி ஆகும். முத்துக் குமாரசாமியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குமரகுருபரரால், பாடப்பட்டதே முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ். இது 101 பாடல்களைக் கொண்டது.

**10. முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டுள்ள அணிகலன்களைக் கூறுக.**

காலில் அணியப்படும் சிலம்புடன் கிண்கிணியும், இடையில் அணியப்படும் அரைஞானும், நெற்றியில் அணியப்படும் சுட்டியும், காதில் அணியப்படும் குண்டலத்துடன் குழையும், தலையில் அணியப்படும் சூழியும் முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழில் குறிப்பிட்டுள்ள அணிகலன்கள்.

**11. குமரகுருபரர் இயற்றிய வேறு நூல்களைக் கூறுக.**

கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலா வல்லி மாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களைக் குமரகுருபரர் இயற்றியுள்ளார்.

**12. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களையும் எழுதுக.**

- காப்பு
- செங்கீரை

- தால்
- சப்பாணி
- முத்தம்
- வருகை
- அம்புலி
- கழங்கு
- அம்மானை
- ஊசல்

**13. காலில் அணியும் இரண்டு அணிகலன்களை எழுதுக.**

சிலம்பு, கிண்கினி.

**14. காதில் அணியும் இரண்டு அணிகலன்களை எழுதுக.**

குண்டலம், குழை.

**15. குமரகுருபரர் எம்மொழிகளில் புலமை மிக்கவர்?**

தமிழ், வடமொழி, இந்துஸ்தானி.

## கூடுதல்வினாக்கள் - சிறுவினா

**1. பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக**

- பிள்ளைத்தமிழ் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
- இறைவனையோ, தலைவரையோ, புலவர்களையோ பாட்டுடைத் தலைவராக் கொண்டு, குழந்தையாகப் பாவித்து பாடப்படும் நூல் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும்.
- பத்துப்பருவங்களும், பருவத்திற்கு பத்து பாடல்கள் வீதம் 100 பாடல்களைக் கொண்ட நூல் பிள்ளைத்தமிழ்
- ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகையான பிள்ளைத்தமிழாகப் பிரிப்பர்.
- கடைசி மூன்று பருவங்கள் மட்டும் ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும், பெண்பால் பிள்ளைத்தமிழுக்கும் மாறுபடும்.

**2. குமரக்குருபரர் குறிப்பு வரைக**

| | |
|---|---|
| **பெயர்** | - குமரகுருபர் |
| **ஊர்** | - திருநெல்வேலி மாவட்டம் -திருவைகுண்டம் |
| **காலம்** | - 17ஆம் நூற்றாண்டு |
| **பெற்றோர்** | - சண்முக சிகாமணிக் கவிராயர் - சிவகாம சுந்தரி |
| **மரபு** | - வேளாளர் மரபு |
| **புலமை** | - தமிழ், வடமொழி, இந்துஸ்தானி |
| **இயற்றிய நூல்கள்** | - கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான் மணிமாலை, காசிக் கலம்பகம், சகலகலா வல்லிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை. |

**3. செங்கீரைப் பருவம் குறிப்பு வரைக**

- பிள்ளைத்தமிழ் பருவங்களில் ஒன்று.
- செம்மை + கீர் +ஐ - சிவந்த வாயையுடைய கிளி பேசுவது போல குழந்தை பேசும். இது 5 முதல் 6 மாதங்களில் அமையும்
- இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி ஒரு காலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலை நிமிர்ந்தும் முகம் அசைத்தும் ஆடும்.

## கற்பவை கற்றபின்

**1. சந்த நயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து வகுப்பறையில் பாடி மகிழ்க.**

**கூடி வாழ்வோம்**

பறவை எல்லாம் பாடுச்சு
பக்கம் வந்து தேடுச்சு
கறவை மாடு சிரிச்சுச்சு
கறந்து பாலம் தந்துச்சு
குடிச்ச பறவை மகிழ்ந்துச்சு
கூட்டம் சேர கத்துச்சு
பசிக்கு இங்கே வந்திட
பாடிப்பாடி அழைச்சிச்சு
எங்கேயிருக்கும் பறவையும்
எகிறிப் பறந்து வந்துச்சு
இனத்தின் குரலைக் கேட்டுச்சு
இறங்கி வந்து பாத்துச்சு

கோமாதா நமக்கு எல்லாம்
குடிக்க பாலும் தந்துச்சு
கூடி நாமும் கூட்டம் போட்டு
"அன்னை" யென்று சொல்லுச்சு
பாதுகாக்கும் தாயாக
பட்டி தொட்டி சொல்லுது
சாதுவாக இருந்த அதுவும்
சினந்து காடு வெல்லுது
பறவைக் கூட்டம் நாமெல்லாம்
போற்றி அதை வணங்குவோம்
சிறகாய் நாமும் இருந்துமே
பறக்க வைத்து மகிழுவோம்

**நட்பு**

நல்லவர்களை என்றும் நாடி
நட்புடன் நற்றாய் பழகிக் கொள்!
நண்பர்கள் உனக்கு அவசியமே
நிகழும் எதிர் வரும் காலங்களில்
நண்பர்கள் உனக்கு உதவிடுவர்
அது போல் நீயும் நண்பர்களுக்கு
என்றும் உதவிகள் செய்திடுவாய்
உள்ளன்போடு பழகிடுவாய்!

கலை


சூ

கவிதைப் பேழை

# கம்பராமாயணம்

– கம்பர்

JJJ47Y



**பாலகாண்டம் - ஆற்றுப்படலம்**

(ஆறு இயற்கையின் தோற்றமாக இல்லாமல் ஓர் ஓவியமாக விரிகிறது. அதை உயிரெனக் காணும் அந்த அழகுணர்ச்சி கவிதையாகி ஓடி நெஞ்சில் நிறைகிறது.)

தாதுகு சோலைதோறுஞ் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும் புது மணற் றடங்கடோறும்
மாதவி வேலிப்பூக வனம்தொறும் வயல்கடோறு
மோதிய வுடம்புதோறு முயிரென வுலாயதன்றே.

**பாடலின் பொருள்**

மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகத்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயுஆறு. அது ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

**பாலகாண்டம் - நாட்டுப்படலம்**

(இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் கவி காட்டுகிறது).

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண்
விழித்து நோக்க,
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும் மாதோ.

**பாடலின் பொருள்**

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட, விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண, நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

**பாலகாண்டம் - நாட்டுப்படலம்**

(ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது என்ற மெய்யியலைக்கொண்டு, ஒரு நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் கம்பனின் உத்தி போற்றத்தக்கது.)

வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்

**பொருள் :**

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை நேருக்குநேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை ; பொய்மொழி இல்லாமையால் , மெய்மை தனித்து விளங்கவில்லை பலவகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

**அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம்**

(இராமனுடைய மாநிற மேனியை வருணிக்கும் கம்பன், மை, மரகதம் என்றெல்லாம் உவமை சொல்லி, நிறைவாகச்சொல்ல இயலவில்லை என்பதை "ஐயோ" என்ற சொல்லில் வைப்பதன் வாயிலாக அதை இயன்றதாக்குகிறான்)

வேய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ? மரகதமோ? மறிகடலோ? மலை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழகு உடையான்

**பாடலின் பொருள்**

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சை மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமே? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன்.

**அயோத்திய காண்டம் - கங்கை காண் படலம்**

கவிதைகள் மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ ! அதில் ஒன்று சந்த இன்பம். பொருள் புரியாவிடினும் சந்த இன்பம் மகிழ்ச்சியூட்டுகிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்று பாரதி சொல்வதை இதில் உணரமுடியும்.

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
"ஏழைமைவேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ?

**பொருள் :**

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றைக் கடந்து செல்வார்களா? யானைகள் கொண்ட சேனையைக் கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்! தோழமை என்று இராமர் சொன்ன சொல், ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகாவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா?

**யுத்த காண்டம் - கும்பகருணன் வதைப் படலம்**

(உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், இடிக்கும் காட்சியைக் கண்முன் எழுப்புகிறது)

உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெ லாம்
இறங்குகின்றது! இன்று காண்; எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,
உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்'!

**பாடலின் பொருள்**

உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய் எழுந்திடுவாய்! கற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப்பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப்படுத்து உறங்குவாயாக!

---

**நூல் குறிப்பு கம்பராமாயணம்**

- இராமனது வரலாற்றைக் கூறும் நூல்
- கம்பர் இந்நூலை இயற்றியதால் கம்பராமாயணம் எனப் பெயரிட்டார். இது ஒரு வழிநூலாகும்.
- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவாதரம் எனப் பெயரிட்டார்

- கம்பராமாயணம் ஆறு காண்டங்களையும் 119 படலங்களையும் உடையது. காண்டம் என்பது பெரும்பிரிவு எனவும் படலம் என்பது உட்பிரிவு எனவும் கூறப்படுகிறது.
- வால்மீகி என்பவர் வடமொழியில் எழுதப்பட்டதை இராமாயணத் தமிழில் எழுதப்பட்டதை இராமாயணத்தை தமிழில் எழுதியுள்ளார் கம்பர்.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : கம்பர் |
| **ஊர்** | : திருவழுந்தூர் - தஞ்சை மாவட்டம் |
| **பணி** | : தமிழ்க்கவிஞர் |
| **காலம்** | : 12-ஆம் நூற்றாண்டு |
| **தந்தை** | : ஆதித்தன் |
| **ஆதரித்தவர்** | : திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் |
| **அறிந்த மொழிகள்** | : தமிழ், சமஸ்கிருதம் |
| **சமகாலப்புலவர்கள்** | : ஔவையார், செயங்கொண்டார், புகழேந்திப் புலவர் |
| **இயற்றிய நூல்கள்** | : கவிச்சக்கரவர்த்தி, கல்வியில் பெரியவர், சிலையெழுபது, சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம், ஏர் எழுபது, மும்மணிக்கோவை, கம்பர் தனிப்பாடல்கள். |
| **சிறப்புகள்** | : கவிச்சக்கரவர்த்தி, கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன், கல்வியில் பெரியவன். |

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| கொண்டல் | - மேகம் | வெய்யோன் | - பகலவன் |
| திரை | - அலைகள் | முகில் | - மேகம் |
| வண்மை | - வளமை | வேழம் | - யானை |
| செறுநர் | - பகைவர் | கறங்கு | - காற்றாடி |
| திண்மை | - வலிமை | | |

## இலக்கணக் குறிப்பு தருக

| | |
|---|---|
| **நெடும்படை, நெடுந்திரை** | - பண்புத்தொகை |
| **கால தூதர்** | - நான்காம் வேற்றுமைத் தொகை |
| **விரிசோதி** | - வினைத்தொகை |
| **வில் பிடித்த** | - இரண்டாம் வெற்றுமைத் தொகை |
| **இடையாளோடும், இளையானோடும்** | - எண்ணும்மை |
| **உறங்குவாய்** | - முன்னிலை ஒருமைவினைமுற்று |
| **உறங்குகின்ற** | - பெயரெச்சம் |

அரியா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம் தருக

**1. விழித்து = விழி + த் + த் + உ**

**விழி** - பகுதி;
**த்** - சந்தி;
**த்** - இறந்தகால இடைநிலை;
**உ** - வினையெச்ச விகுதி

**2. உறங்குவாய் = உறங்கு + வ் + ஆய்**

**உறங்கு** - பகுதி;
**வ்** - எதிர்கால இடைநிலை
**ஆய்** - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உள்ளவர்கள் இல்லாதவர்கள்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால் **[விடை : அங்கு வறுமை இல்லாததால்]**

## குறுவினா

**1. "உறங்குகின்ற கும்பகர்ணன் எழுந்திராய் எழுந்திராய்**
**காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய் "**
**- கும்பகர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?**

கும்பகர்ணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்கு எழுந்திடுவாய்" என்று சொல்லி எழுப்பினார்கள்.

வில்லைப்பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.

## சிறுவினா

**1. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம் பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது . ஒப்பிட்டு எழுதுக .**

- நவீன கவிதையில் "பூவை" என்ற சொல் மலரையும் பெண்ணையும் குறிக்கிறது. நாட்டுப்புறப்பாடல் பெண் தெய்வமாகிய மாரியோடு ஒப்பிட்டு பாடப்பட்டுள்ளது.

- நவீன கவிதையில் பூக்களை இறுக்கமாக முடிச்சிட்டால் காம்பின் கழுத்து முறிவது போல பெண்களின் கழுத்து முறியும். நாட்டுப்புறப் பாடலில் கையாலே பூப்பறித்தால் காம்பு அழுகிவிடும் என்பவரால் கையால் பூப்பறிப்பதில்லை.
- நவீன கவிதையில் தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவுவது போல பெண்ணின் தளர்ந்த வாழ்வும் நழுவும் விரலால் பூப்பறித்தால் பயனற்று வெம்பி விடும் என்று விரலால் பூப்பறிக்கவில்லை. வாசலில் மரணம் வந்து நின்றாலும் வருந்தாமல் சிரிக்கும் பூவைப்போல பெண்ணும் வருத்தப்படாமல் சிரிக்கின்றனர். இந்தப் பெண்ணாகி பூவைத் தொடுப்பது எப்படி? நாட்டுப்புறப்பாடலில் மாரியாகிய பெண் தெய்வத்திற்கு தங்கத் துரட்டி கொண்டு பூப்பறித்தார்.

**2. கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது மலைப்பகுதிகளில் மலைப்பயிர்களும் நிலப்பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன. காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும் பண்டைத் தமிழரின் திணை நிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.**

| நிலம் | தொழில் உணவுப்பயிர் | இன்றைய வளர்ச்சிகள் |
|---|---|---|
| குறிஞ்சி | திணை, நெல், தேன், கிழங்கு, மலை நெல் | ஏற்றுமதிப் பொருளாக உள்ளன. தேன் மருத்துவப்பொருளாகப் பயன்படுகின்றன. |
| மருதம் | செந்நெல்<br>வெந்நெல் | ஏற்றுமதிப் பொருளாக உள்ளன. மக்களின் உணவுப்பொருளாக பயிரிடப்படுகிறது. |
| நெய்தல் | உப்பு<br>மீன் | மீன்களைப் பதப்படுத்துதல் தொழில் உள்ளன. இத்தொழில் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. உப்பு ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. |

## நெடுவினா

**1. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

**அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே வணக்கம் இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் கட்டும் கவி.. தண்டலை மயில்கள் ஆட....**

கம்பராமாயணத்தில் கம்பர் பெரும்பாலான பாடல்களில் சந்தநயம் விரவிக்காணப்படுகின்றன. கற்பவர்க்கு இனிமையும், கவிச்சுவையும் நிறைந்தவையாக இருக்கும்.

‘‘தண்டலை மயில்களாட தாமரை விளக்கந்தாங்க,
கொண்டல்கள் முழவினோங்க குவளைகண் விழித்து நோக்க
தென்டிரை யெழினி காட்ட, தேம்பிழி மகரயாழின்
வண்டுகள்இ னிதுபாட மருதம்வீற்றி ருக்கும் மாதோ’’

சோலையை நாட்டிய மேடையாகவும் மயிலை நடன மாதராகவும் குளங்களில் உண்டான அலைகளைத் திரைச்சீலையாகவும் தாமரை மலரை விளக்காகவும் மேகக்கூட்டங்களை மத்தளமாகவும் வண்டுகளின் ஓசையை யாழின் இசையாகவும் பார்வையாளர்களை குவளை மலர்களாகவும் சித்தரித்து தன் கவித்திறத்தை கம்பர் சிறப்பாகக் கூறுகிறார். இந்தப் பாடலில் கம்பனின் சொல்லாட்சி மாண்புறச் செய்கின்றன. கம்பனின் கவித்திறமும், தான் கையாண்ட விளக்கமும், கம்பன் தமிழுக்குக் கிடைத்த வரம் எனலாம்.

‘‘ வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்

மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?

ஐயோ! இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையன;"

இராமனின் அழகையும் சீதையையும் வருணிக்கும் போது சந்தநயம் சிறப்பாக அமைந்துள்ளது. இராமனது நிறம் மையோ? பச்சை நிற மரகதமோ? மறிக்கின்ற நீலநிறக்கடலோ? கார்மேகமோ? என்று இராமனின் ஒப்பந்த அழியாத அழிகினை எடுத்துக்கூறுகிறார் கம்பர்.

"ஆழ நெடுந்திரை ஆறுகடந்து அவர் போவாரோ

வேழ நெடும் படை.....

எனத் தொடங்கும் பாடல் உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம் உரலில் இடிக்கும் காட்சியினை எடுத்துரைக்கும் கம்பரரின் கவித்திறம்தான் என்னே!

மேலும், உறங்குகின்ற கும்பகர்ணனை எழுப்பும்போது கீழ்க்கண்டவாறு பாடிய கம்பனின் கவித்திறம் மறக்க முழயாத ஒன்றாகக் கருதப்படுகிறது.

"உறங்குகின்ற கும்பகர்ணன் உங்கள் மாய வாழ்வெலாம்

இறங்குகின்றது ! இன்று காண் எழுந்திராய் ! எழுந்திராய்!

கறங்கு போல் வில்பிடித்த கால தூதர் கையிலே

உறங்குவாய், உறங்குவாய்! இனிக்கிடந்து உறங்குவாய்!

## பொருத்துக

1. தாதுகு சோலை - அ)ஆற்றுப்படலம்
2. தண்டலை மயில்களாட - ஆ)நாட்டுப்படலம்
3. வெய்யோன் ஒளி - இ) கங்கைப்படலம்
4. ஆழ நெடுந்திரை - ஈ) கங்கைகாண் படலம்

**[விடை 1(அ), 2(ஆ), 3(இ), 4 (ஈ)]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. கம்பரரின் பெருமையைச் சுட்டும் தொடர்கள் பாவை?**

- கல்வியில் பெரியவர் கம்பர்
- கவிச் சக்கரவர்த்தி கம்பர்
- விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.

**2. கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?**

- சரசுவதி அந்தாதி
- சிலை எழுபது
- சடகோபர் அந்தாதி
- திருக்கை விளக்கம்
- ஏர் எழுபது

**3. கோசல நாட்டில் ஏன் வண்மையில்லை ? திண்மையில்லை?**

- கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால் அங்கு வண்மையாகிய கொடைக்கு இடமில்லை.
- நேருக்கு நேர் நின்று போர் புரியவல்ல பகைவர் இல்லாததால், உடல்வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பு இல்லை.

**4. இராமனின் வடிவை எவற்றிற்கெல்லாம் உவமையாக்கியுள்ளார் கம்பர்?**

- மை
- பச்சைநிற மரகதம்

- நீலக்கடல்,
- கார்மேகம்.

**5. இயற்கை கொலுவிருக்கும் காட்சியைக் கம்பர் எவ்வாறு வருணிக்கிறார்?**

இயற்கை வளம் நிறைந்த மருதநிலம் கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கம்பர், பெரிய அரசவையில் கலை நிகழ்வு நடக்கும் தோற்றமாக வருணிக்கிறார்.

**6. இராமன் கானகம் போனபோது உடன் சென்றவர்கள் யாவர்?**

இராமன் கானகம் போனபோது, நுண்ணிய இடையுடைய சீதையும், இளையவன் இலக்குவனும் உடன் சென்றவராவர்.

**7. இராமனின் அழகைக் கம்பர் 'ஐயோ' என வியந்து வருணித்தது ஏன்?**

இராமனின் மேனி அழகை வருணிக்கும் போது கம்பர், மை, மரகதம், மறிகடல், மழை, முகில் என்றெல்லாம் உவமை கூறியும் இராமன் நிறைவு அடையாத நிலையில், 'ஐயோ!' என்று சொன்ன தன் மூலம் அதனை நிறைவுடைய தாக்குகிறான் எனக் கம்பர் வருணிக்கிறார்.

**8. மோதி உடம்புதோறு உயிரென உலாயதன்றே - உவமையை விளக்குக.**

ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களிலும் சரயு நதி பாய்கிறது.

**9. இராமனுடைய அழகிற்கு எவற்றையெல்லாம் ஆசிரியர் ஒப்பிடுகிறார்?**

- இராமனுடைய நிறம் மையோ? பச்சை நிற மகரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? என்று அவனது ஒப்பற்ற அழியாத அழகினை ஆசிரியர் கூறுகிறார்.
- இராமனின் நிறத்தை எதனோடு ஒப்பிட்டுக் கூறலாம் என மயங்கி, தயங்கி இறுதியில் ஐயோ என்னால் கூற முடியவில்லை என தன் இயலாமையைக் கூறுகிறார் கவிஞர்.

**10. சரயு ஆறு எவ்விடங்களிலெல்லாம் பரவிப் பாய்ந்ததாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்?**

- மகரந்தம் சிந்துகின்ற சோலைகள்
- புதுமணல் தடாகங்கள்
- அரும்புகள் மலரும் பொய்கைகள்
- நெல் வயல்கள்.

**11. கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை? ஏன்?**

- வறுமை இல்லாததால் அங்கே கொடை இல்லை.
- நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.
- பொய்மொழி இல்லாததால் மெய்மை தனித்து விளங்கவில்லை.
- கேள்விச் செல்வம் மிகுந்திருப்பதால் அறியாமை இல்லை.

**12. கங்கை காண் படலத்தில் வேடனின் கூற்றை எழுதுக.**

- யானைகள் கொண்ட சேனையைக் கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில் வீரனல்ல நான்.
- இராமனுடைய தோழமையை எண்ணாமல் ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை அவர்கள் தனியே கடந்து போக விடலாமா?
- அவ்வாறு செய்தால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என்று உலகத்தார் என்னை பழி சொல்ல மாட்டார்களா?

இவ்வாறு வேடன் கூறினான்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. கம்பர் - குறிப்பு வரைக**

| | |
|---|---|
| **பெயர்** | : கம்பர் |
| **ஊர்** | : திருவழுந்தூர் - தஞ்சை மாவட்டம் |
| **பணி** | : தமிழ்க்கவிஞர் |
| **காலம்** | : 12-ஆம் நூற்றாண்டு |
| **தந்தை** | : ஆதித்தன் |
| **ஆதரித்தவர்** | : திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் |
| **அறிந்த மொழிகள்** | : தமிழ, சமஸ்கிருதம் |
| **சமகாலப்புலவர்கள்** | : ஔவையார், செயங்கொண்டார், புகழேந்திப்புலவர் |
| **இயற்றிய நூல்கள்** | : கவிச்சக்கரவர்த்தி, கல்வியில் பெரியவர், சிலையெழுபது, சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம், ஏர் எழுபது, மும்மணிக்கோவை, கம்பர் தனிப்பாடல்கள். |
| **சிறப்புகள்** | : கவிச்சக்கரவர்த்தி, கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன், கல்வியில் பெரியவன். |

**2. கம்பராமாயணம் குறிப்பு வரைக**

- இராமனது வரலாற்றைக் கூறும் நூல்
- கம்பர் இந்நூலை இயற்றியதால் கம்பராமாயணம் எனப் பெயரிட்டார். இது ஒரு வழிநூலாகும்.
- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு 'இராமாவதாரம்' எனப் பெயரிட்டார்
- கம்பராமாயணம் ஆறு காண்டங்களையும் 119 படலங்களையும் உடையது. காண்டம் என்பது பெரும்பிரிவு எனவும் படலம் என்பது உட்பிரிவு எனவும் கூறப்படுகிறது.
- வால்மீகி என்பவர் வடமொழியில் எழுதப்பட்டதை இராமாயணத்தைத் தமிழில் எழுதியுள்ளார் கம்பர்.

**3. சரயு ஆறு எங்கெங்கு பாய்ந்து செல்கிறது?**

- மகரந்தம் சிந்துகின்ற சோலைகள்
- மரங்கள் செறிந்த செண்பகக் காடுகள்
- அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள்
- புதுமணல் தடாகங்கள்
- குருக்கத்தி, கொடிவேலியுடைய கமுகத்தோட்டங்கள்
- நெல் வயல்கள் அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயு ஆறு.

**4. கோசல நாட்டின் வளத்தை கூறுக.**

- வறுமை சிறிதும் இல்லாததால் கொடைக்கு அங்கே இடமில்லை.
- நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வலிமையில்லை.
- பொய்மொழி இல்லாமையால், உண்மை தனித்து விளங்கவில்லை.
- பலவகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

**5. மருதநிலக் காட்சியினைக்கூறுக.**

- குளிர்நிறைந்த சோலையில் மயில்கள் அழகுற ஆடியது.
- விரிந்த தாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல்தோன்றியது.
- சூழும் மேகங்கள் மத்தள ஒலியை எழுப்பியது.
- மலரும், குவளைமலர்கள் கண்களை விழித்துப் பார்ப்பதைப் போல் காணப்பட்டது.

- நீர் நிலைகளில் எழுப்புகின்ற அலைகள் திரைச்சீலைகளாய் விரிந்தன.
- மகர யாழின் இசை தேன் எடுக்கும் வண்டுகளின் ரீங்கார இசைபோன்று இருந்தது என மருத நிலக்காட்சியினை அழகுற வருணிக்கிறார் கம்பர்.

**6. இளையானொடும் போன அழியா அழகுடையானைக் கம்பர் மொழிகண்டு விளக்குக.**

- 'இல்லையோ' என்று எண்ணும்படியான நுண்ணிடையை உடைய சீதையோடு, இளையவனான இலக்குவனோடும் கானகத்தில் நடந்த இராமனின் நீலநிற மேனியில் சூரியனின் ஒளிபட்டு ஒளிர்ந்து, இல்லை எனும்படி மறைந்தது.
- அப்போது இராமனின் மேனிநிற அழகை மையோ, மரகதமோ, நீலக்கடலோ, கார்மேகமோ எனப் பல உவமைகளைக் கூறி, நினைவு பெற இயலாததாக இருந்தது. எனினும், இராமனின் அழியா அழகை 'ஐயோ' எனக் கூறி வியக்க வைப்பதன் வாயிலாகக் கம்பர் நிறைவுடையதாக்குகிறார்.

**7. பரதனைக் குகன் கூறிய வீர உரை வழிப்புலப்படும் உணர்வை விளக்குக.**

- இராமனைக் காண பரதன் கங்கைக் கரையை அடைந்த போது, உண்மை நிலை அறியாது கோபம் கொண்ட குகன், "ஆழமான அலைகளை உடைய கங்கையைக் கடந்து இவர்கள் செல்வார்களோ?
- பரதனின் யானைப் படைகளைக் கண்டு பாய்ந்து ஓடும் வில்லிவீரனோ நான்! 'தோழமை' என்று இராமர் சொல்லிய சொல், ஓர் ஒப்பற்ற சொல் அல்லவா?
- இராமனின் தோழமையை நான் எண்ணாமல், இவர்களைக் கடந்து போக விட்டுவிட்டால், 'அற்பனாகிய இவ்வேடன் இறந்திருக்கலாமே' என, உலகத்தார் எனை ஏசமாட்டார்களா?" எனக் கூறினான்.
- இக்கூற்றில் குகன், இராமன்பால் கொண்ட அன்பும், அவனைக் காக்க உறுதிபூண்டு நிற்கும் வீர உணர்வும் புலப்படுகிறது.

**8. கும்பகர்ணனின் உறக்கத்தைக் கலைப்பதைக் கம்பர் சுவைபடப் புனைந்துரைத்துள்ளதை விளக்குக.**

- ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிற கும்பகர்ணனைக் கையாலும், தடியாலும், உலக்கையாலும் அடித்தும் இடித்தும் எழுப்புகின்றனர். இக்காட்சியைக் கம்பர் சந்த நயம்படப் பாடுகிறார்.
- அதாவது உறங்குகின்ற கும்பகருணனே! பொய்யான உன் வாழ்வு எல்லாம் அழியத் தொடங்கிவிட்டது. அதைக் காண எழுந்திரு! எனவும், "காற்றாடி போலச் சுற்றித் திரிகின்ற வில்லைப் பிடித்த எமதூதர்கள் கையில் இனிப்படுத்து உறங்குவாய்!" எனவும் கம்பர் புனைந்துள்ளார்

---

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. கோசல நாட்டின் சிறப்புகளாக் கம்பர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**பால காண்டம் - ஆற்றுப்படலம்**

தாதுகு சோலைதோறுஞ் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும் புது மணற் றடங்கடோறும்
மாதவி வேலிப்பூக வனம்தொறும் வயல்கடோறு
மோதிய வுடம்புதோறு முயிரென வுலாயதன்றே

மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவி பாய்கிறது சரயு ஆறு. அது ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

**பால காண்டம் - நாட்டுப்படலம்**

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க.
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ,

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட விரி தாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

வண்மையில்லை யோர் வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மையில்லை பலகேள்வி மேவலால்

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை, நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை, பொய்மொழி இல்லாமையால், மெய்மை தனித்து விளங்கவில்லை, பல வகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

**2. உங்கள் ஊரின் சிறப்புகளை வருணனையோடு விவரித்து எழுதுக.**

1. மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவி பாய்கிறது சரயு ஆறு. அது ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

2. குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட விரி தாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட எங்கள் ஊர் வீற்றிருக்கிறது.

3. தஞ்சையில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை, பொய்மொழி இல்லாமையால், மெய்மை தனித்து விளங்கவில்லை, பல வகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

**3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க.
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ,

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட விரி தாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

வண்மையில்லை யோர் வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை, நேருக்கு நேர் போர் புரியவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை, பொய்மொழி இல்லாமையால், மெய்மை தனித்து விளங்கவில்லை, பல வகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?
ஐயோ! இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இலலையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன். இராமனுடைய மாநிற மேனியை கம்பர் இவ்வாறு வருணிக்கிறார்.

”ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
ஏழைமை வேடன் இறந்திலன்” என்று எனை ஏசாரோ?

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றைக் கடந்து செல்வார்களா? யானைகள் கொண்ட சேனையைக் கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்! தோழமை என்று இராமர் சொன்ன சொல், ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகாவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழிசொல்ல மாட்டார்களா?

உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்றது! இன்று காண்; எழுந்திராய் எழுந்திராய்!
கறங்கு போல வில்பிடித்த கால் தூதர் கையிலே
உறங்குவாய்! உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்!

உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்! காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப்படுத்து உறங்குவாயக!.

## கற்பவை கற்றபின்

- அறம் ஒன்றே பெரிதெனக் கருதி அறத்தினின்று விலகுவோரை ஒடுக்க எண்ணும் நிலையினன் வீடணன்.
- அறத்தை உணர்ந்தாலும், அதனின்று விலகுவோன் அண்ணனாயினும் அவனுக்காக உயிர்கொடுக்கும் நிலையை உடையவன் கும்பகர்ணன்.
- கும்பகர்ணன் அறிமுகப்பகுதியில் தீயவனாகவே காட்டப்படுகிறான். இராவணன் செய்தது தவறு என்பதைச் சுட்டிக்காட்டுவதில் முதலிடம் பெறுபவன் கும்பகர்ணனே.

- இராவணன் தன் மனைவியை வெறுத்தது குற்றம் என்று இவன் ஒருவனே எடுத்துரைக்கிறான். மாற்றான் மனைவியைக் கொண்டுவந்து சிறைவைத்திருப்பது தவறு என்பதை முதலில் உணர்த்துகிறான்.
- சீதையைக் கொண்டு வந்து சிறைவைத்தது அறத்திற்கு மாறுபட்டது என்பதை உணர்ந்தபோதும் அத்தவற்றினைத் திருத்திக் கொள்ளாது அறஞ்சாராத மானத்தையே பெரியதாகக் கொள்ளுகிறான் கும்பகர்ணன். வீடணன், போர் செய்யவெண்டும் என்றதன் கருத்துக்கு மாறாகவும், அறத்தைச் சார்ந்தும் அறிய அறிவுரைகளைக் கேட்டுக் கும்பகர்ணன் அறிவுத் தெளிவடைத்தான்.
- இராமன் பக்கத்துப் பெருமையையும், இராவணன் பக்கத்துச் சிறுமையையும் நன்கறிந்தவன். கும்பகர்ணன் செய்ந்நன்றி மறவாதவன். வீடணனும் தானும் கொண்ட கருத்துகளைப் பொருத்தமுடையன் என்பதை ஒப்புக் கொண்டவன். குலமானம் கொண்டவன். தம்பியின் கடமையை ஆற்றுவதில் சிறந்தவன்.
- கும்பகர்ணன் அறத்தையும், பாசத்தையும் மறத்தையும் உணர்ந்தபோதிலும், அண்ணனையும்/ தம்பியையும் அவற்றொடு இணைந்து பார்க்காமல் அனைவரிடத்திலும் பாசம் கொண்டவன்.
- பாசமிக்க தம்பியாகிய இராவணனுக்குச் செயல்படும் அதே சமயத்தில் வீடணனுக்குப் பாசமுள்ள அண்ணனாகச் செயல்படுகிறான் கும்பகர்ணன்.

---

கலை

சா

விரிவானம்

# பாய்ச்சல்

*– சா. கந்தசாமி*

JZ2Y9A



**1. பாய்ச்சல் என்ற கதை மூலம் சா.கந்தசாமி உணர்த்துகின்ற கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

புதின எழுத்துகளால் தனது புகழைத் தமிழ் உலகில் முத்திரை பதித்து சாகித்ய அகாதெமி விருதுபெற்ற சா.கந்தசாமியின் "பாய்ச்சல்" கதை நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக விளங்குகின்றது. கலை ஈடுபாட்டின் முழுமையையும் இக்கதையின் அழகுற கூறியுள்ளார். இதை பின்வருமாறு காணலாம்.

**தெருமுனைக்காட்சிகள் :**

தெருக்களில் அன்றாடம் எத்தனையோ கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன. சாதாரண எளிய மக்களின் பொழுதுபோக்கு, தெருக்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதேயாகும். அனுமார்போல வேடமிட்டு அனைவரும் மகிழ்விக்கும் விதமாக குரங்குபோல ஓடிவந்தான். இரண்டு கால்களையும் மாறிமாறி தலையில் அடித்துக் கொண்டு வேகமாக கைகளை வீசி நடந்தான். சிறிது தூரம் சென்றவுடன் அருகில் உள்ள கடையில் வாழைப்பழங்களைப் பறித்து அருகில் இருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்து தாமும் ஒரு பழம் சாப்பிட்டான்.

**சதங்கை மேள தாளம் :**

சதங்கையும் மேளமும் தாளமும் நாதசுரமும் ஒன்றாக இசைந்தன. அனுமார் ஒலிக்கு ஏற்ப குறுக்கும் நெருக்கமாகத் தாவிக் குதித்து பாய்ந்து சென்றார். நீண்ட வால் மேலே சுழன்று தரையில் அழுத்தி புழுதியைக் கிளப்பினான்.

**அனுமாரின் ஆட்டம் :**

இசைக்கு ஏற்ப ஆடியவன் தன்னையும் மறந்து கைகளை மார்போடு அனைத்துக் கொண்டான். கீச்சீச் என்று கத்திக் கொண்டே பந்தக்காலை பிடித்துக் கொண்டு மேலே ஏறினான். திடீரென மேளதாளம் முழங்க கண்மூடி கண் திறப்பதற்குள் அனுமார் கீழே குதித்தார். வாலில் பெரிய தீப்பந்தம் கண்டு கூட்டம் பின்வாங்கியது. அனுமார் கால்களைத் தரையில் அடித்து உடம்பினைக் குலுக்கினார். நெருப்பு அலை பாய்ந்து. கைகளைத் தட்டிக் குட்டிக்கரணம் போட்டான். கூட்டமானது பயந்து ஓடியது. அனுமார் தன் கம்பீரமான தோற்றத்தோடு நின்று சிரித்தார். பின்பு கூட்டம் அமைதியானது.

**அழகும் அனுமார் வேடனும் :**

அழகு அனுமார் அருகில் சென்றான் வாலைப் பிடித்துப் பார்த்தான். அனுமாரோடு இவனால் நடக்க முடியவில்லை. அனுமார் திரும்பவும் ஆட ஆரம்பித்தார். பயந்தும் பதுங்கியும் ஆடினார். ஆட....ஆட.... புழுதிப்புகைபோல எழுந்தது. ஆட்டம் முடிந்ததும் ஆற்றங்கரையொட்டி சின்னக் கோவில் பக்கம் அனுமார் தன் வேடத்தைக் களைத்தார். இதைப் பார்த்துக் கொண்டே இருந்த அழகு அனுமாரைப் பார்த்து ”எனக்குக் கூட உங்களைப் போல ஆட வேண்டும் என்கிற ஆசை” என்றான். அதற்கு அனுமார் வேடம் போட்டவர் எங்கு ஒரு ஆட்டம் ஆடிக்காட்டு உனக்கு ஆட்டம் வருமான்னு பார்க்கிறேன், “சலங்கையைக் கட்டிக்கிட்டே ஆடு” என்றார்.

**முடிவுரை :**

இக்கதையில் சா.கந்தசாமி அவர்கள் கலைஞர்களின் வாழ்க்கையயை அழகுறக் கூறியுள்ளார். கலைஞர்களின் விருப்பம் மற்றவர்களையும் கலைஞனாக ஆக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கவும் வைக்கிறார்கள். இதே போல் தான், இக்கதையில் வரும் அழகுவையும் ஆடவைத்து மகிழ்வாக இருக்கவும் செய்கின்றன். ஆம்! ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனை உருவாக்கும் உன்னத நிகழ்வு இக்கதையில் உணர்த்தப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

**1. மேடைக் கலைஞர்களும் பகல்வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க**

**ஆசிரியர்** : மாணவர்களே! மேடைக்கலைஞர்களும் பகல்வேடக் கலைஞர்களும் எதிர்க்கொள்ளும் இடர்பாடுகள் குறித்து உங்கள் குழுக்களின் கருத்துகள் என்ன? கூறுங்களேன்!

**பாரதியார் குழு** : மேடைக்கலைஞர்கள் பிறரை மகிழ்விப்பதற்காக வாழ்பவர்கள், நடனம், நளினமான அசைவுகள், நெளிவுகளால் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துவார்கள். கலைஞர்கள் தம் உழைப்பால் நடனமாடி சம்பாதிப்பவர்கள்; வறுமையில் வாழ்பவர்கள் ஏதோ கிடைக்கின்ற பணத்தை வைத்து வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முடியும்.

**கம்பர் குழு** : பகல் வேடக்கலைஞர்களும் பிறரை மகிழ்விக்கும் அளப்பரிய பணியைச் செய்பவர்கள் தன் கலைஞர்களின் நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு கூட்டம் மிகக்குறைவாகத்தான் இருக்கும். மேளக்காரர், நாதஸ்வரம் ஊதுபவர், சிங்கி அடிப்பவர் எல்லோருக்கும் பணம், பிரித்துக் கொடுத்ததுபோக மீதி சிறிதளவுதான் கிடைக்கும். சில இடங்களில் ஏளனப்பேச்சுகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை இருக்கும்.

**இருகுழுவினரும் :** கலைஞர்கள் அனைவரும் எதிர்கொள்கின்ற இன்னல்கள் ஏராளம். அனைவரையும் தங்கள் கலையினால் மகிழ்விக்கும் இவர்கள் மகிழ்ச்சியாக வாழ முடியாத நிலையை நம் சமுதாயத்தில் காண்கிறோம். பிறர் மகிழ தங்களையே வருத்திக் கொள்ளும் ஆடல் கலைஞர்களின் தியாகம் அளப்பரிய ஒன்றாகக் கருதப்படுகிறது.

**நன்றி ! வணக்கம்.**

கற்கண்டு

கலை

சூ

# அகப்பொருள் இலக்கணம்

KEKTAL

## பாடநூல் வினா - பலவுள் தெரிக

**1. குளிர் காலத்தில் பொழுதாகக் கொண்ட நிலங்கள்**

(அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**[விடை : குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்]**

## குறுவினா

**1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும் .**

இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக .

**முதற் பொருள் :**

- நிலம் - முல்லை (காடும் காடு சார்ந்த இடம்)
- பொழுது - பெரும் பொழுது - கார்காலம்
- சிறுபொழுது - மாலை
- கருப்பொருள் - உணவு - வரகு

**2.கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக .**

அ) உழவர்கள் மாலையில் உழுதனர்

ஆ) முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்

- மருத நிலம் - வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகும். உழவர்கள் வயலில் உழுதனர்
- நெய்தல் தாழைப் பூவைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர் .

## கூடுதல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியான விடை வரிசையைத் தேர்ந்தெடு**

குறிஞ்சி - 1) பேரூர், மூதூர்

முல்லை - 2) பட்டினம், பாக்கம்

மருதம் - 3) சிறுகுடி

நெய்தல் - 4) குறும்பு

பாலை - 5) பாடி, சேரி

அ) 3, 4, 1, 2, 5 ஆ) 4, 3, 1, 5, 2 இ) 3, 2, 5, 1, 4 ஈ) 3, 5, 1, 2, 4 **[விடை : 3, 5, 1, 2, 4]**

**2. பொருந்தாத இணையைக் கண்டறிக**

முல்லை - வரகு ,சாமை

மருதம் - செந்நெல், வெண்ணெய்

நெய்தல் - தினை

பாலை - சூறையாடலால் வரும் பொருள் **[விடை : நெய்தல் - தினை]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. அகத்திணைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- அகத்திணைகள் எழு வகைப்படும்
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைகிளை, பெருந்திணை

**2. அகத்திணை என்பது யாது?**

அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது அகத்திணை ஆகும்

**3. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- பொழுது இரண்டு வகைப்படும். அவை,
- சிறுபொழுது
- பெரும் பொழுது

**4. பெரும் பொழுது எத்தனைக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ? அவை யாவை?**

- ஓராண்டின் ஆறு கூறுகளைப் பெரும் பொழுது என்று நம் முன்னோர் பிரித்துள்ளனர்.

- கார்காலம் - ஆவணி, புரட்டாசி
- குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை
- முன் பனிக்காலம் - மார்கழி, தை
- பின் பனிக்காலம் - மாசி, பங்குனி
- இளவேனிற் காலம் - சித்திரை, வைகாசி
- முதுவேனிற்காலம் - ஆனி, ஆடி

**5. கருப்பொருள் என்றால் என்ன?**

ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு, உணவு, பூ, மரம், பறவை, யாழ், பண் மற்றும் தொழில் போன்றவையெல்லாம் கருப்பொருளாகும் .

**6. அன்பின் திணைகள் எத்தனை? அவை யாவை?**

அன்பின் திணைகள் ஐந்து.

அவை : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

**7. அகத்திணைக்குரிய பொருள்கள் எத்தனை? அவை யாவை?**

அகத்தினணக்குரிய பொருள்கள் மூன்று.

அவை : முதற் பொருள், கருப் பொருள், உரிப் பொருள்.

**8. முதற் பொருளாவது யாது?**

அந்தந்த திணைக்குரிய நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்.

**9. எற்பாடு பிரித்து பொருள் எழுதுக.**

எல் + பாடு = எற்பாடு

எல் - சூரியன்

பாடு - மறையும் நேரம்

பொருள் - சூரியன் மறையும் நேரம்.

**10. உரிப்பொருள் என்றால் என்ன?**

கவிதைகளில் கருப்பொருளின் பின்னணியில் அமைத்துப் பாடப்படுவது உரிப்பொருள்.

**11. ஐவகை நிலத்திற்குரிய பறைகளைக் கூறுக.**

| | |
|---|---|
| குறிஞ்சி | - தொண்டகப் பறை |
| முல்லை | - ஏறுகோட் பறை |
| மருதம் | - மண முழா, நெல்லரிகிணை |
| நெய்தல் | - மீன் கோட் பறை |
| பாலை | - துடி |

**12. ஐவகை நிலத்திற்குரிய யாழ், பண் எவை என எழுதுக.**

| நிலம் | யாழ் | பண் |
|---|---|---|
| குறிஞ்சி | குறிஞ்சி யாழ் | குறிஞ்சிப் பண் |
| முல்லை | முல்லை யாழ் | முலலைப் பண் |
| மருதம் | மருத யாழ் | மருதப் பண் |
| நெய்தல் | விளரி யாழ் | செவ்வழப் பண் |
| பாலை | பாலை யாழ் | பஞ்சுரப் பண் |

**13. ஐவகை நிலத்திற்குரிய மரம், பூ ஆகியவற்றை எழுதுக.**

| நிலம் | மரம் | பூ |
|---|---|---|
| குறிஞ்சி | அகில், வேங்கை | குறிஞ்சி, காந்தள் |
| முல்லை | கொன்றை, காயா | முல்லை, தோன்றி |
| மருதம் | காஞ்சி, மருதம் | செங்கழுநீர், தாமரை |
| நெய்தல் | புன்னை, ஞாழல் | தாழை, நெய்தல் |
| பாலை | இலுப்பை, பாலை | குரவம், பாதிரி |

**14. ஐவகை நிலத்திற்குரிய மக்கள் யாரென எழுதுக.**

| நிலம் | மக்கள் | |
|---|---|---|
| | உயர்ந்தோர் | தாழ்ந்தோர் |
| குறிஞ்சி | வெற்பன் | குறவன், குறத்தியர் |
| முல்லை | தோன்றல் | ஆயர், ஆய்ச்சியர் |
| மருதம் | ஊரன் | உழவர், உழத்தியர் |
| நெய்தல் | சேர்ப்பன் | பரதன், பரத்தியர் |
| பாலை | - | எயினர், எயிற்றியர் |

**15. ஐவகை நிலத்திற்குரிய விலங்குகள் மற்றும் பறவைகள் எவை எனக் கூறுக.**

| நிலம் | விலங்குகள் | பறவைகள் |
|---|---|---|
| குறிஞ்சி | புலி, கரடி, சிங்கம் | கிளி, மயில் |
| முல்லை | முயல், மான், புலி | காட்டுக்கோழி, மயில் |

| | | |
|---|---|---|
| மருதம் | எருமை, நீர்நாய் | நாரை, அன்னம், நீர்க்கோழி |
| நெய்தல் | முதலை, சுறா | கடற்காகம் |
| பாலை | வலியிழந்த யானை | புறா, பருந்து |

**16. ஐவகை நிலத்திற்குரிய தொழில்கள் யாவை?**

| நிலம் | தொழில்கள் |
|---|---|
| குறிஞ்சி | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| முல்லை | ஏறுதழுவுதல், நிரை மேய்த்தல் |
| மருதம் | நெல்லரிதல், களை பறித்தல் |
| நெய்தல் | மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் |
| பாலை | வழிப்பறி, நிரை கவர்தல் |

**17. ஐவகை நிலத்திற்குரிய நீரை எழுதுக.**

| நிலம் | நீர் |
|---|---|
| குறிஞ்சி | அருவி நீர், சுனை நீர் |
| முல்லை | காட்டாறு |
| மருதம் | மனைக் கிணறு, பொய்கை |
| நெய்தல் | மணற்கிணறு, உவர்க்கழி |
| பாலை | வற்றிய சுனை, கிணறு |

**18. பொருள் இலக்கணம் என்பது யாது?**

பொருள் இலக்கணம் என்பது ஒழுக்கமுறை, வாழ்வியல் நெறிமுறைகள் எனப்படும். வாழ்வியலை அகம், புறம் எனப் பிரித்தனர் தமிழர்.

**19. பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- இரண்டு வகைப்படும்.
- அவை அகப்பொருள், புறப்பொருள்

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. சிறுபொழுதிற்குரிய கூறுகளையும் அதற்குரிய நேர அளவையும் குறிப்பிடுக**

| | |
|---|---|
| காலை | காலை 6 மணி முதல் காலை 10 மணி வரை |
| நண்பகல் | காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை |
| ஏற்பாடு | பிற்பகல 2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| முல்லை | மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை |
| யாமம் | இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை |
| வைகறை | இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை |

**2. ஐந்திணைக்கும் உரிய பெரும் பொழுதுகள் சிறுபொழுதுகளை எழுதுக.**

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர் காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும் பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும் பொழுதுகள | ஏற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனிக்காலம் | நண்பகல் |

**3. ஐந்திணைக்கும் உரிய கருப்பொருள்களை எழுதுக:-**

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெய் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி,சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரியாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

## கற்பவை கற்றபின்

**1. பண்டைத் தமிழரின் திணை நிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக .**

**பதிவு செய்யப்பட்ட கருத்துகள் :**

**கருத்து - 1 :**

காலங்கள் பல கடந்தாலும் தெய்வ நம்பிக்கையும் சடங்குகளும் பெருமளவில் மாறாமல் உள்ளன. மக்களிடம் சாதி வெறியையும் நீங்கியுள்ளது.

மக்கள் அனைவரும் சமம் என்ற நிலைக்குத் தகுதிப் படுத்தப்பட்டுள்ளனர்.

**கருத்து - 2 :**

உணவு முறையில் இன்று பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது . இயற்கையான தானியங்கள் மற்றும் பயறு வகை உணப் பொருட்கள் பெரும்பாலும் உணவில் சேர்க்கப்படுவதில்லை .

**கருத்து - 3 :**

தங்களுக்கென குறித்த பண், யாழ், பறை ஆகியவற்றை பண்டைத் திணை நில தமிழர் பயன்படுத்தியதைப் போல இன்று யாரும் பயன்படுத்தவில்லை அவரவர் விருப்பமான இசையை இசைப் பள்ளிகளுக்கும் சென்று கற்றுக் கொள்கின்றனர்.

**கருத்து - 4 :**

திணை நிலத்திற்கேற்ப தொழில்கள் இன்று பெருமளவில் நடைபெறவில்லை இயற்கையான விளையாட்டால் இன்று மருதநில தொழில்களும் நெய்தல் நில தொழில்களும் மிகவும் நலிவடைந்துள்ளன. மேலும் அதிக வருமானம் பெறுவதற்காகவும் கல்வியறிவு பெற்று வருவதால் உயர் பதவியில் உள்ள வேலைகளை நாடி நகரங்களுக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்கின்றனர்.

**கருத்து - 5 :**

இயற்கைச் சூழலும் நாகரிக வளர்சியும் காலச் சூழலும் எல்லா நிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் பண்டைய மரபு மாறாது வாழ்கின்றனர்.

---

## மொழியை ஆள்வோம்

### மொழி பெயர்க்க

KOOTHU

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices.Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**கூத்து**

தெருக்கூத்து என்பது அதன் பெயரில் இருப்பது போல் தெருவில் நிகழ்த்தப்படும் ஒரு வகைக் கலையாகும். இராமாயணம் மகாபாரதம் மற்றும் இன்னும் பிற புராணங்களிலிருந்து கதைகள் எடுக்கப்படும். தெருக்கூத்துவில்

நிறைய பாடல்கள் இடம் பெறும் மேலும் வசனங்கள் கலைஞர்களால் கணநேரத்தில் யோசித்துப் பேசப்படும் தெருக்கூத்தில் பதினைந்து முதல் இருபது பேர் வரை இருப்பார்கள். குழுவில் பாடல்கள் இருப்பினும் கலைஞர்கள் தங்கள் சொந்தக் குரலிலேயே பாடுவார்கள். கலைஞர்கள் தங்களுக்குள்ளேயே ஆடை அலங்காரம் மற்றும் ஒப்பனை செய்து கொள்வார்கள். கூத்து கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமானது ஆகும்.

## தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்

ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.

**எ.கா.**

அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார். ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

தொடர்சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.

**எ.கா**

அ) இனிய நிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.

ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.

கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.

**எ.கா.**

அ) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான்.

பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் - முதன்மைத் தொடர்

மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் - துணைத்தொடர்

## தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக

**எ.கா :** அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.

(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்று)

அழைப்புமணி ஒலித்ததால், கயல் விழி கதவைத் திறந்தார்.

1. இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்

(தொடர் சொற்றொடராக மாற்றுக )

இன்னாசியார் புத்தகங்கள் வரிசைப்படுத்தி, அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்து புத்தகங்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

2. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போல கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு ,கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டிக் கொண்டனர்.

ஒயிலாட்டத்தில் குழுவினர் காலில் சலங்கை அணிந்து கொண்டனர்.

ஒயிலாட்டத்தில் குழுவினார் கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசி ஆடுவர்.

3. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார் . கூடியிருந்த மக்கள் அமைதி யாயினர்.
(கலவைச் சொற்றொடராக மாற்றுக )

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

4. ஓடிக் கொண்டியிருந்த மின் விசிறி சட்டென நின்றவுடன்,அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது .(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

ஓடிக் கொண்டியிருந்த மின் விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

## பிற மொழிச் சொற்களைத் தமிழ்சொற்களாக மாற்றி எழுதுக

**புதிர்**

உங்களிடம். ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

**விடை :**

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட் ஆனால் ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்டுகளில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்!ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக் கட்டி | பட் | ஆனால் |
| ஈக்வலாக | சமமாக | ரிப்பீட் | மறுபடி |
| வெயிட் | எடை | ஆன்சரை | விடையை |
| எக்ஸ் பெரி மெண்ட | பரிசோதனை | ஆல்தி பெஸ்ட் | அனைவருக்கும் வாழ்த்துகள். |

## நாட்டுப்புறப் பாடலுக்கேற்ப சூழலை எழுதுக

| | |
|---|---|
| பாடல் | ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம்புள்ளே!<br>அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>தென்னம்புள்ள வாடலாமோ? யம்மாடி! யம்மாடி!<br>வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்<br>வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>வாழைமரம் வாடலாமோ? யம்மாடி! யம்மாடி! |
| பாடல் எழுந்த சூழல் | அண்ணன் நட்டு வைத்த தென்னம்பிள்ளைக்கு நீர் பாய்ச்ச, தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கி விடுகிறாள். தென்னம்பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே குழந்தையின் அழுகையை நிறுத்தி நீரூற்றுதலைத் தொடர்கிறாள். |

| பாடல் | பாடல் எழுந்த சூழல் |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் -நான் தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br>ஏடறியேன் எழுத்தறியேன் -நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்<br>படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா - நான் தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா - நான்தான்<br>எதிரொலிய ஏன் தேடுறேன்<br>நாலெழுத்துப் படிச்சிருந்தா - நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்<br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே - தெனமும்<br>நான் பாடுறேன் தெம்மாங்குதான் | வரப்புகளுக்கு இடையே நின்று வயலில் வேலை செய்யும் விவசாயி ஒருவன் தனக்கு கல்வியறிவு இல்லாத காரணத்தினால் தான் படும் துன்பத்தை எண்ணி வருத்தத்துடன் பாடிக் கொண்டே தன் வேலையைச் செய்கிறான். |

**மனிதனுக்கு மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க**

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்
பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!
பூச்சியைக் கவரும் வண்ணங்களில்
பூக்களிடம் விழுவது மனிதர்களே!
ஆழகைக் கொண்டு பூ கவருகையில்
அப்பூக்களிடம் பணிவது மனிதர்களே!

## கட்டுரை

**உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக**

**முன்னுரை**

எங்கள் ஊர் திருநெல்வேலி மாநகரமாகும் நெல்லையில் கோயில் கொண்டியிருக்கும் நெல்லையப்பரின் தேரோட்டத்தின் போது ஒரு மாதக் காலம் அரசுப் பொருட்காட்சி சிறப்பாக நடைபெறும்.

**இனிய காட்சி**

நெல்லையப்பர் நெடுஞ்சாலையில் மாநகராட்சி அலுவலகத்திற்கு எதிரில் மாநகராட்சி பொருட்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. நாங்கள் அதைக் கண்டுகளிக்க குடும்பத்துடன் ஒரு நாள் மாலை அங்கு சென்றோம்.

**பல் துறை அரங்குகள்**

உள்ளே நுழைந்தாலும் அரசு சார்பாக நடத்தப்படுகின்ற பொருட்காட்சியாக இருப்பதால் காவல்துறை, சுற்றுலாத்துறை, அறநிலையத்துறை, விளம்பரத்துறை, வனத்துறை, தீயணைப்புத்துறை, போக்குவரத்துத் துறை சார்பாக தனித்தனி அரங்குகள் எங்கள் கண்களைக் கவர்ந்தன. வண்ண விளக்குகளுடன் ஏராளமாக புகைப்படங்களுடன், செய்முறைக் காட்சிகளுடன் அரங்குகள் பார்ப்வர்கள் மனதிற்கு விருந்தாக அமைந்திருந்தன.

**விளையாட்டு அரங்குகள்**

சிறுவர்கள், பெரியவர்கள் பொழுபோக்கு ஏராளமான விளையாட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன இராட்டினங்கள், ஊஞ்சல், மின்சாரத் தொடர்வண்டிகள், பேய்வீடு, இராட்சச ராட்டினங்கள் போன்றவற்றில் நாங்கள் விளையாடி மகிழ்ந்தோம். எண்ணிலா மகிழ்ச்சியடைந்தோம்.

**உணவு அரங்குகள்**

எங்களைப் போல் ஏராளமானோர் குடும்பத்துடன் வந்திருந்தார்கள். நாங்கள் பஜ்ஜி, போண்டா, அப்பளம் போன்றவற்றை வாங்கி உண்டு மகிழ்ந்தோம். குளிர்பானங்கள் அருந்தி மகிழ்ந்தோம். ஒன்றாக அமர்ந்து இன்மையுடன் பேசி நேரத்தை மகிழ்வுடன் கழித்தோம்.

**விளையாட்டுப் பொருட்கள்**

பல விளையாட்டு அரங்குகளில் விளையாட்டுப் பொருட்களை வாங்கினோம். வீட்டிற்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கினோம். துணிமணிகள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சிலவற்றை வாங்கி மகிழ்ந்தோம்.

**முடிவுரை :**

பொருட்காட்சியைக் கண்டு களித்தது, ரேந்தில் வந்தது உணவு உண்டு மகிழ்ந்தது அனைத்தும் மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது. குடும்பம் சேர்ந்து மகிழ்ந்த இப்பொருட்காட்சியை என்றும் என்னால் மறக்க இயலாது.

## நிற்க அதற்குத் தக

அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள் ஒரு புறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மாலாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள் இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.

இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்வும் மேன்மேலும் பரவாலகவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

- பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்
- எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்
- எங்கள் ஊர் திருவிழாவில் தாரை தப்பட்டை நிகழ்வை நடத்துவேன்
- எம் பள்ளியில் பொம்மாலாட்டம் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்வேன்
- எங்கள் ஊர் இளைஞர்கள் இணைந்து ஒயிலாட்டப் பயிற்சி பெறுவோம்.
- எங்கள் கிராமத்தில் நாட்டுப்புறக் கலையை வளர்ப்போம்.

## மொழியோடு விளையாடு

### தொடரில் விடுப்பட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக

1. வானம் **கருக்கத்** தொடங்கியது .மழை வரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுக்கள், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது**
3. **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சை** புல்வெளிகளில் கதிரினால் கதிரினால் வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் **கருத்துவிடும்.**

## பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக


**தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பாவை, கவிழும், விருந்து**

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு மரம் வீடு
   வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் **மரவீடு**
2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**
   சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**
3. மலை முகட்டில் மேகம் **தங்கும்** அதைப்
   பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**
4. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் இதைத்
   தத்துவமாயத் **தோற்பாவை கூத்து சொல்லும்**
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கை தட்டலே **விருது** அதில்
   வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து**

## அகராதியில் காண்க

| | | | |
|---|---|---|---|
| தால் | - நாக்கு | ஏந்தெழில் | - மிக்க அழகு |
| உழுவை | - புலி | அணிமை | - சமீபம் |
| அகவுதல் | - அழைத்தல் | | |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



ஆடுவோம் ஆடுவோம்
ஆனந்தமாய் ஆடுவோம்
பழந்தமிழர் கலையை
பாங்குடனே ஆடுவோம்
ஓசைக்கேற்ப ஒய்யாரமாய் ஆடுவோம்
வண்ணத் துணிகளைக் கொண்டு
வடிவுடனே ஆடுவோம்
வளமான கலையை
வாழ நாளும் போற்றுவோம்


## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Aesthetics | - அழகியல், முருகியல் | Airtifacts | - கலைப் படைப்புகள் |
| Terminology | - கலைச்சொல் | Myth | - தொன்மம் |

கலை

சா

வாழ்வியல் இலக்கியம்



# திருக்குறள்

L9DMBL

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் எழுதுக**

தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர் என்பது இத்தொடரின் பொருள்

**2. தஞ்சம் எளியர் பகைக்கு இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்ப்பாடுகளையும் எழுதுக**

தஞ்சம் - நேர் நேர் - தேமா

எளியர் - நிரை நேர் - புளிமா

பகைக்கு - நிரை நேர் - புளிமா

**3. வறுமைக்கு காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்து குறளின் கருத்து என்ன ?**

இகழ்ந்து ஏளனம் செய்யாமல் உதவி செய்ய வேண்டும் . பொருள் கொடுக்க வேண்டும். இப்போது உதவி பெறுபவரின் (இருப்பவரின்) உள்ளத்தில் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

**4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப் போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக?**

- பெரிய கத்தி, இரும்பு, ஈட்டி உழைத்தால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.
- இக்குறளில் கூரான ஆயுதம் உழைத்ததால் கிடைத்த ஊதியம் ஆகும்.
- மற்ற உலக ரீதியான ஆயுதங்கள் எல்லா நேரங்களிலும் கூர்மையாக செயல்படுவதில்லை நிலையாக இருப்பதில்லை. ஆனால், உழைத்து ஈட்டிய செல்வமே எப்போதும் கூரான ஆயுதமாகத் திகழ்கிறது.

## சிறுவினா

**1. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக?**

தொழில் செய்வதற்கு தேவையான கருவி அதற்கு ஏற்ற காலம். செயலின் தன்மை செய்யும் முறை ஆகிறவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பரே அமைச்சர் ஆவர்.

- மனவலிமை குடிகளைக் காத்தல் ஆட்சிமுறைகளைக் கற்றல் நூல்களைக் கற்றல் விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவர்.
- ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல் வழியாக அறிந்திருப்பினும் உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.
- மேற்கூறிய பண்புகள் நம் வாழ்விலும் இருந்தால் தான் நாமும் நம்மை ஆள முடியும்.

**2. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர். அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை ?**

- சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமல் பொருந்திய துணை இல்லாமலும் வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர் கொள்வார்?
- மனத்தில் துணிவு இல்லாதவராய் அறிய வேண்டியவற்றை அறியாதவராய் பொருந்தும் பண்பு இல்லாதவராய் பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரிடும்.
- தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. அமைச்சர் என்பதன் இலக்கணம் யாது ?**

தொடரில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலில் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.

**2. அமைச்சரிடம் அமைய வேண்டிய திறன்கள் யாவை ?**

மனவலிமையை குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடா முயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

**3. பொருளல்லவாரப் பொருளாகச் செய்வது எது?**

ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வதே பொருளின் செயலாகும் .

**4. தீதின்றி வந்த பொருளின் பயன் யாது?**

- பிறருக்கு தீங்கு தராமல் நல்ல வழியில் பொருள் ஈட்ட வேண்டும்
- அத்தகைய பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும்.

**5. எப்போது பகைக்கு ஆட்பட நேரும் ?**

மனத்தில் துணிவு இல்லாதவராய் அறிய வேண்டியவற்றை அறியாதவராய் பொருந்தும் பண்பு இல்லாதவராய் பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்

**6. உலகத்தார் யாரை உறவாகக் கொண்டு போற்றுவர்?**

குற்றம் இல்லாமல் தன் குடிப் பெருமையை உயரச் செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்

**7. சான்றோர் கயவர் இயல்புகள் யாவை ?**

ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவி செய்வர் சான்றோர்
கரும்பை பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால் தான் பயன்படுவர் கயவர்.

**8. குன்று ஏறி யானைப்போர் காண்பதற்குச் சமமானது எது?**

ஒருவன் தன் கையிலுள்ள பொருளைக் கொண்டு ஒரு செயலைச் செய்வதானது, பாதுகாப்பாக மலைமேல் ஏறி நின்று, யானைகள் போரிடுவதைக் காண்பதற்குச் சமமாகும்.

**9. செறுநர் செருக்கறுக்கும் எஃகு - பொருள் தந்து விளக்குக.**

இத்தொடருக்குப் பகைவரது செருக்கை அழிக்கும் கூர்மையான ஆயுதம் (பொருள் செல்வம்) என்பது பொருள். பகைவர் செருக்கை அழித்து வெற்றி பெறப் பொருள் செல்வத்தை ஈட்ட வேண்டும் என்பதாகும்.

**10. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரிய தில் - சீர்மோனையை எடுத்து எழுதுக.**

செய்க, செறுநர், செருக்கறுக்கும்.

**11. தொழுத கை, அழுத கண்ணீர் கொண்டு வள்ளுவர் உணர்த்துவது யாது?**

பகைவரது தொழுகின்ற கைகளிலும் கொலைக்கருவி மறைந்திருக்கும். அவர் அழுது சிந்தும் கண்ணீரிலும் வஞ்சகம் மறைந்திருக்கும் என்பதை உணர வேண்டுமென வள்ளுவர் உணர்த்துகிறார்.

**12. பகைக்கு எளிதில் ஆட்படக் கூடியவர் யார்?**

அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சுபவனும், அறிய வேண்டியவற்றை அறியாதவனும், பிறரோடு இணங்கி நடக்காதவனும், பிறருக்கு ஒன்றைக் கொடுத்து உதவாதவனும், பகைக்கு எளிதில் ஆட்படக் கூடிய வனாவான்.

**13. உலகு யாரைச் சுற்றமாகச் சுற்றும்?**

ஒரு குற்றமும் இல்லாதவராய், தம் குடிப்பெருமை உயர உழைத்து வாழ்பவரை, உலகமே சுற்றமாகக் கொள்ளும்.

**14. 'நிரப்பிடும்பை' என்னும் வறுமை எப்போது கெடும்?**

தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தரும் கொடிய செயலைச் செய்யாத நல்லவரைக் காணும்போது, 'நிரப்பிடும்பை' என்னும் வறுமையின் கொடுமை, முழுமையாக அழியும் (கெடும்).

**15. 'அவரன்ன ஒப்பாரி யாம் கண்டது இல்' - விளக்குக.**

கயவர்க்கும் மக்களுக்கும் இருக்கின்ற தோற்ற (உருவ) ஒப்புமையை வேறு எதிலும் காணமுடியாது என்பதாகும். கீழான செயல்புரியும் கயவர் என்பார், உருவத்தில் மக்களைப் போலவே இருப்பர் என்பதாகும்.

**16. எத்தகைய அமைச்சர்களுக்கு முன் சூழ்ச்சியும் நிற்க இயலாது?**

இயற்கையான நுண்ணறிவு, நூலறிவு இவற்றையுடைய அமைச்சர்களுக்கு முன் சூழ்ச்சிகள் நிற்க இயலாது.

**17. அறத்தையும் இன்பத்தையும் தருவது எது?**

முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்ந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் தரும் இன்பத்தையும் தரும்.

**18. எத்தகைய பொருளை ஏற்காமல் நீக்கிவிட வேண்டும்?**

மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும்.

**19. ஒருவன் தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயல் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?**

ஒருவன் தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயலானது, குன்றின் மேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது.

**20. கூடா நட்பு குறித்து வள்ளுவர் கூறும் செய்தி யாது?**

**கொலைக் கருவி :**

பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளேயும் கொலைக் கருவி மறைந்து இருக்கும்.

**வஞ்சகம் :**

பகைவரின் அழுத கண்ணீர் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும்.

**21. யாரால் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது?**

- சுற்றத்தாரிடம் அன்பு இன்மை
- பொருந்திய துணை இன்மை
- வலிமையின்மை

இவற்றையுடையவன் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது.

**22. ஒருவனது குடி எப்போது சிறந்து விளங்கும்?**

விடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி சிறந்து விளங்கும்.

**23. வறுமையின் கொடுமை முழுவதும் கெடும் எப்போது?**

தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் கண்டால் வறுமையின் கொடுமை முழுவதும் கெடும்.

**24. யாருடைய உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். எப்போது?**

இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

**25. மக்கள், கயவர் குறித்து வள்ளுவர் கூறிய செய்தி யாது?**

கயவர் மக்களைப் போலவே இருப்பர், கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள ஒப்புமை ‘தோற்றம்’ மட்டுமே வேறெந்த ஒப்புமையும் கிடையாது.

**26. தேவர், கயவர் குறித்து வள்ளுவர் கூறியது யாது?**

தேவரும் கயவரும் ஒரே தன்மையர். தேவர்களைப் போலவே கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து வாழ்வர்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. வஞ்சப் புகழ்ச்சி அணியை விளக்குக?**

**இலக்கணம் :**

புகழ்வது போல பழிப்பதும் பழிப்பது போல புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி

**சான்று:** தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவனே செய்தொழுக லான்.

**விளக்கம் :-**

கயவர்களைத் தேவர்களுக்கு ஒப்பாவர் என்று புகழ்ந்து கூறி கயவர்கள் தம் மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்வர். என்று பழித்துக் கூறியதால் வஞ்சப் புகழ்ச்சி அணி ஆயிற்று.

**2. சொற்பொருள் பின் வரு நிலையணியைச் சான்றுடன் விவரி ?**

**இலக்கணம் :**

செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**சான்று :** இன்மையின் இன்னாத தியாதெனின்
இன்மையின் இன்மையே இன்னாதது.

**விளக்கம் :**

இக்குறட்பாவில் ‘இன்மை’ என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து ‘வறுமை’ என்ற ஒரே பொருளைத் தந்ததால் சொற்பொருள் பின்வரு நிலையணி ஆயிற்று.

**3. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக .**

**இலக்கணம்** :

ஒரு பொருளை அத்தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணி எனப்படும். உவமை, உவமிக்கப்படும் பொருள், உவம உருபு மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்கும்.

**எ.கா :** ஒப்பாரி யாம் கண்டதில் மக்களே போல்வர் கயவர் அவரன்ன

**விளக்கம் :**

கயவர் மக்களைப் போலவே இருப்பவர் கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறு எதிலும் நாம் கண்டதில்லை.

**4. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்றுண்டாகச் செய்வான் வினை - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி.

**அணி இலக்கணம் :**

செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும், உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**விளக்கம் :**

உவமை - மலைமேல் பாதுகாப்பாக நின்று யானைப் போரைக் காணுதல்.

உவமேயம் - தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயல்

உவமஉருபு - அற்று (வெளிப்படை)

**பொருத்தம் :**

ஒருவன் தன் கைப்பொருளைக் கொண்டு ஒரு செயலைச் செய்வது மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது.

**5. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன ஒப்பாரி யாம்கண்ட தில் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி ஆகும்.

**அணி இலக்கணம் :**

செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும், உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**விளக்கம் :**

உவமை - கயவர் மக்களைப் போல் இருப்பர்.

உவமேயம் - தோற்ற ஒப்புமையைத் தவிர வேறெந்த ஒப்புமையும் இல்லை.

உவமஉருபு - அன்ன

**விளக்கம் :**

கயவர் மக்களைப் போலவே இருப்பர். கயவருக்கும் மக்களுக்கும் உள்ள ஒப்புமை தோற்றமே தவிர வேறு எதுவும் இல்லை.

## பொருள் தருக

**அமைச்சு**

1. அருவினை - அரிய செயல்

வன்கண் - மன வலிமை

ஆள் வினை - விடா முயற்சி

மதி நுட்பம் - நுண்ணறிவு

கதி நுட்பம் - சூழ்ச்சிகள்

**குடி செயல் வகை**

நீள் வினை - இடை விடா முயற்சி

சுற்றம் - உறவினர்

**நல்குரவு**

இன்மை - வறுமை

**இரவு**

இடும்பை - துன்பம்

எள்ளா - ஏளனம் செய்யாமல்

ஈவார் - கொடுப்பவர்

உவப்பு - மகிழ்ச்சி

**கயமை**

ஒப்பார் - சமமானவர்

ஒழுகுதல் - நடத்தல்

## பிரித்து எழுதுக

| | |
|---|---|
| அருவினை | - அருமை + வினை |
| நூலோடுடையார் | - நூலோடு + உடையார் |
| அறனீனும் | - அறன் + ஈனும் |
| தீதின்றி | - தீது + இன்றி |
| குன்றேறி | - குன்று + ஏறி |
| மகிழ்ந்துள்ளோம் | - மகிழ்ந்து + உள்ளோம் |
| கற்றறிதல் | - கற்று + அறிதல் |
| பொருளல்ல | - பொருள் + அல்ல |
| திறனறிந்து | - திறன் + அறிந்து |
| பொருளாக்கம் | - பொருள் + ஆக்கம் |
| அன்பிலன் | - அன்பு + இலன் |

## இலக்கணக் குறிப்பு

**கருவியும் காலமும்** - எண்ணும்மை
**அருவினை** - பண்புத்தொகை

## திருக்குறள்

**குறள் 1:**

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்ட தமைச்சு.**

**விளக்கம் :**

தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை,செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.

**குறள் 2 :**

**வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ**
**டைந்துடன் மாண்ட தமைச்சு.**

**விளக்கம் :**

மனவலிமை, குடிகளைக் காத்தல், கற்றல், விடா முயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

**குறள் 3 :**

**மதிநுட்பம் நூலோ டுடையாரக் கதிநுட்பம்**
**யாவுள முன்நிற் பவை.**

**விளக்கம் :**

இயற்கையான நுண்ணறிவும், நூலறிவும் உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகள் நிற்க முடியும்? (எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது).

**குறள் 4 :**

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
**தியற்கை அறிந்து செயல்.**

**விளக்கம் :**

ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

**குறள் 5 :**

**பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்**

**விளக்கம் :**

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம். அஃது அல்லாமல் உலகில் சிறந்த பொருள் வேறு இல்லை.

**குறள் 6 :**

**அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்.**

**விளக்கம் :**

முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்ந்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்.

**குறள் 7 :**

**அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்.**

**விளக்கம் :**

மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாம்ல ஈட்டும் பொருளை ஏற்றுக் கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும்.

**குறள் 8 :**

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை.**

**விளக்கம் :**

தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது.

**குறள் 9 :**

**செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகதனிற் கூரிய தில்.**

**விளக்கம் :**

ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும், அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லலை.

**குறள் 10 :**

**தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து.**

**விளக்கம் :**

பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அதுபோல் அவர் அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

**குறள் 11 :**

**அன்பிலான் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.**

**விளக்கம் :**

சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும், வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர்கொள்வார்? (எதிர் கொள்ள முடியாது).

**குறள் 12 :**

**அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.**

**விளக்கம் :**

மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

**குறள் 13 :**

**ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின்**
**நீள்வினையால் நீளும் குடி.**

**விளக்கம் :**

விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்.

**குறள் 14 :**

**குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.**

**விளக்கம் :**

குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

**குறள் 15 :**

**இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.**

**விளக்கம் :**

ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும்.

**குறள் 16 :**

**கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.**

**விளக்கம் :**

தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

**குறள் 17 :**

**இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்**
**உள்ளுள் உவப்ப துடைத்து.**

**விளக்கம் :**

இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

**குறள் 18 :**

**மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பார் யாம்கண்ட தில்.**

**விளக்கம்:**

கயவர் மக்களைப் போலவே இருப்பர். கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

**குறள் 19 :**

**தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்.**

**விளக்கம் :**

தேவரும் கயவரும் ஒரு தன்மையர். எவ்வாறு எனில் தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்.

**குறள் 20 :**

**சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.**

**விளக்கம் :**

ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவி செய்வர் சான்றோர். கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால் தான் பயன்படுவர் கயவர்.

---

## இயல் 6

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ___________
2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர்.
   இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?
3. கரகாட்டத்தைக் குப்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

II. விடையளி: 4x2=8

4. கரகாட்டம் என்றால் என்ன?
5. குன்று ஏறி யானைப்போர் காண்பதற்குச் சமமானது எது?
6. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும்.
7. சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச்
   சுமக்கின்றன ஒல்லித்தண்டுகள்
   - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

III. விடையளி: 2x4=8

8. வைத்திய நாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
9. சரயு ஆறு எங்கெங்கு பாய்ந்து செல்கிறது.

IV. விடையளி: 1x6=6

10. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றனை எழுதுக.

V.11. அடிபிறழாமல் எழுதுக: 1x10=10

செம்பொ னடிச்சிறு .... எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடலை எழுதுக.

VI. . மொழிப்பயிற்சிகள்:

12. மொழிபெயர்க்க: 1x2=2

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists.

13. இனிய நிலா பேச்சுப் போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார். (கலவைத் தொடராக்கு) 1x1=1

14. ஏற்ற தமிழ்ச் சொல் எழுதுக: எக்ஸ்பெரிமெண்ட். 1x1=1

15. விடுபட்ட இடத்தை உங்களின் எண்ணங்களை எழுதுக: 1x1=1

வானம் __________ தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.

16. சரியான சொல்லை எடுத்து எழுதுக: 1x1=1

காலை ஒளியினில் மலரிதழ் __________ (அவிழும், கவிழும்)

17. பொருள் கூறுக: உழுவை. 1x1=1

18. கலைச் சொல் அறிக: Terminology. 1x1=1

19. நிறுத்தற் குறியிடுக: 1x1=1

நீரற வறியாக் கரகத்து என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெறுகிறது.

20. இலக்கணக் குறிப்பு தருக: ஆடுக. 1x1=1

21. பகுபத உறுப்பிலக்கணம் தருக: உறங்குவாய். 1x2=2

22. சந்திப்பிழை நீக்குக: 1x1=1

பிள்ளைதமிழ் 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும்.

23. ஒருமை பன்மைப் பிழை நீக்குக: 1x1=1

தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றன.

24. விடைக்கு ஏற்ற வினா அமை : 1x1=1

இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டமாகும்.

## இயல் 6

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
2. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
3. உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படுவது __________

II. விடையளி: 4x2=8


4. ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களையும் எழுதுக.
5. இராமனின் வடிவை எவற்றிற்கெல்லாம் உவமையாக்கியுள்ளார் கம்பர்?
6.பகைக்கு எளிதில் ஆட்படக் கூடியவர் யார்?
7. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

அ) உழவர்கள் மலையில் உழுதனர்.

ஆ) முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்

III. விடையளி: 2x4=8

8. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.



9. குமரகுருபரர் குறிப்பு வரைக.


IV. விடையளி: 1x6=6

10. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

V. அடிபிறழாமல் எழுதுக: 1x5=5

11. தண்டலை .... எனத் தொடங்கும் கம்பராமாயனப் பாடலை எழுதுக.

VI. 12. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1x5=5



VII. மொழிப்பயிற்சிகள்:

13. மொழிபெயர்க்க: 1x2=2

The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas.

14. ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது (தனிநிலைத் தொடராக மாற்றுக) 1x1=1

15. ஏற்ற தமிழ்ச் சொல் எழுதுக: கோல்டு பிஸ்கட் 1x1=1

16. விடுபட்ட இடத்தை உங்களின் எண்ணங்களை எழுதுக: 1x1=1

வெயிலில் அலையாதே; உடல் __________

17. சரியான சொல்லை எடுத்து எழுதுக: 1x1=1

விரட்டாதீர்கள் __________ பறவைக்கு மரம் __________ (விருது, வீடு)

18. பொருள் கூறுக: தால். 1x1=1

19. கலைச் சொல் அறிக: Artifacts. 1x1=1

20. நிறுத்தற் குறியிடுக: 1x1=1

ஒரு நிலத்தின் தெய்வம் மக்கள் தொழில் விலங்கு இவையெல்லாம் கருப் பொருள்கள்.

21. இலக்கணக் குறிப்பு தருக: நெடும்படை. 1x1=1

22. பகுபத உறுப்பிலக்கணம் தருக: பதிந்து. 1x2=2

23. சந்திப்பிழை நீக்குக: 1x1=1

குளிர்காலத்தை பொழுதாக கொண்ட நிலங்கள் குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியனவாகும்..

24. ஒருமை பன்மைப் பிழை நீக்குக: 1x1=1

பறையாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகிறது.

25. விடைக்கு ஏற்ற வினா அமை: 1x1=1

தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.

**இயல் ஏழு**

*நாகரிகம், நாடு, சமூகம்*

# விதை நெல்



மேற்கத்தியர் மேற்கொண்ட கடல்வழிக் குதிரை வணிகம்,
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர்.

**கற்றல் நோக்கங்கள்**

- தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமையின் கருத்து வெளிப்பாட்டுத் தன்மையினைப் புரிந்து, அதுபோல எழுத முற்படுதல்.
- நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு வித்திட்ட பெண்களின் பங்களிப்பினைக் கலைநிகழ்ச்சி விவரிப்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுதல்
- காப்பியம், மெய்க்கீர்த்தி ஆகிய இலக்கியங்களை அவற்றின் தனித்தன்மைகளுடன் படித்துச் சுவைத்தல்.
- பொருளிலக்கணத்தில் புறப்பொருள்பெறும் இடமறிந்து, அதனைச் செய்யுளில் கண்டறியும் திறன்பெறுதல்.


உரைநடை உலகம்

நாடு

எ

# சிற்றகல் ஒளி

– ம.பொ.சிவஞானம்



## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் -மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே **திருப்பதியும் திருத்தணியும்**

   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது **சிலப்பதிகாரம்**

   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

## குறுவினா

**1. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக .**

- நூல் வாங்குதற்கு போதிய பணவசதியின்மையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் செல்வர்.
- விருப்பமான புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கும் வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்.
- உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு பட்டினி கிடந்திருக்கின்றார்.
- செவிவழியாகவும் இலக்கிய அறிவைப் பெற்றிருக்கிறார்.

**2. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக**

- பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தார் ம.பொ.சி

- பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி; சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி; சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி; நம் அருமைத் தமிழநாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி; விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தார் - ம.பொ.சி

## சிறுவினா

**1. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடம் சுட்டி விளக்குக?**

**இடம் :**

இத்தொடர் சிற்றகல் ஒளி என்னும் ம.பொ.சி.யின் தன் வரலாற்றுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

ஆந்திராவின் தலைநகரம் சென்னையாக்க வேண்டும் என்று நீதிபதி வாஞ்சுவின் கருத்து. இக்கருத்தினை எதிர்த்து ம.பொ.சி . வாதிட்டார்.

**விளக்கம் :**

மாநகரத்தை செங்கல்வாரயன் தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அப்பொழுது தமிழ் மாநிலத்தின் தலைநகர் "சென்னை" என்ற தீர்மானத்தை முன் மொழிந்தனர். முன் மொழிந்து, தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று ம.பொ.சி. முழங்கினார். 25.03.1953 இல் பிரதமர் நேரு, சென்னை தமிழருக்கே என்ற உறுதிமொழியை நாடாளுமன்றத்தில் நடுவணரசின் சார்பில் வெளியிட்டார்.

## நெடுவினா

**1. நாட்டுவிழாக்கள்- விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக .**

**மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் :**

- அவையோர் அனைவருக்கும் என் இனிய மாலை வணக்கம். மாணவர்களுக்கு கல்வி கற்கும் பருவத்தில். மொழி மற்றும் நாட்டுப்பற்றும் வளர வேண்டும். நம் நாட்டின் எதிர்காலம் கல்வி கற்கும் இடத்திலிருந்து தான் உருவெடுக்கப்படுகிறது.
- நம் நாட்டில் பல்வேறு விழாக்களைக் கொண்டாடி மகிழ்கிறோம். இவற்றுள் முக்கியமனதாக குடியரசுத்தினம், சுதந்திர தினம் ஆகும். இவ்விரண்டையும் பெறுவதற்கு நம் முன்னோர்கள் செந்நீரையும், கண்ணீரையும் இன்னுயிரையும் இழந்ததை நாம் உணர வேண்டும்.
- நமது தேசியக் கொடி கீழே விழாமல் தாங்கிப் பிடித்த கொடிகாத்த குமரனும், திருநெல்வேலி கலெக்டர் ஆஷ்துரையைச் சுட்டுக்கொன்று தன்னையும் மாய்த்துக் கொண்ட வாஞ்சி நாதனும் மறக்க முடியாதவர்கள். வாஞ்சிநாதனை தமிழகத்தின் "பகத்சிங்" என அழைக்கப்பட்டார்.
- அகிம்சை, அந்நிய துணிக்கடை மறியல், தீண்டாமை விலக்கு, கதராடை விற்பனை, வெள்ளையனே வெளியேறு போன்ற விடுதலைப் போராட்ட முறைகளை நாம் மறந்து விடக் கூடாது. தீரன் சின்னமலை, வீரபாண்டிய கட்டபொம்மன், சுப்பிரமணிய சிவா, மருது பாண்டியர்கள், சுபாஷ், படேல், திலகர் போன்றோர் இந்திய விடுதலைக்காக தன் இன்னுயிரை ஈந்தனர். பெண் விடுதலை வீரர்களும் ஏராளமானோர் உள்ளனர்.

- இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள். இவர்கள் சமுதாய உணர்வுடன் வாழ வேண்டும். அவ்வாறல்லாமல் "தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்தியம்" என்று கடுகு போன்ற உள்ளமுடையவர்களாக வாழக்கூடாது நம் சமுதாயம். வறுமை, கல்வியின்மை, அறியாமை, சாதிமத வேறுபாடின்றி வாழ வேண்டும். நாட்டு விழாவில் நம் தேசியக் கொடியை உளமாற மதிக்க வேண்டும்.
- மாணவப் பருவத்தில் நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை ஆகியவற்றில் இணைந்து நாட்டுப் பற்றையும், சேவை மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- நமக்கு பிறர் எதைச் செய்யக்கூடாது என்று நினைக்கிறாயோ அதனை நாம் மற்றவர்களுக்கு செய்யக்கூடாது. இந்தியாவின் வளர்ச்சி மாணவர்களின் கையில் தான் உள்ளது.
- நாட்டுப்பற்று உடையவர்களாலேயே பொருளாதாரம், தொழில் முதலியவற்றை வளர்ச்சி அடையச் செய்ய முடியும். மாணவர்களின் முக்கிய கடமை இன்றைய காலக்கட்டத்தில் தீவிரவாத சக்திகளுக்கு எதிராக போராட்டம் நடத்துவதேயாகும். இந்தியாவை அச்சுறுத்தக்கூடிய தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு மாணவ சமுதாயம் நல்ல பல யுத்திகளைக் கையாண்டு உள்ளது.
- நாட்டின் வளர்ச்சிக்கு மாணவர்களின் பங்கு மிக முக்கியமானது. மாணவர்கள் நாட்டு ஒருமைப்பாடுடன் செயல்பட்டால் நாடும் முன்னேறும் வீடும் முன்னேறும், புதிய இந்தியாவை உருவாக்குவோம்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. ம.பொ.சி.யின் பெற்றோர் யாவர் ?**

தந்தை - திரு. பொன்னுச்சாமி

தாய் - திருமதி. சிவகாமி

**2. 1906 ஆம் ஆண்டின் சிறப்புகள் யாவை ?**

- சென்னை ஆயிரம் விளக்கு சால்வன் குப்பத்தில் 1906 ஆம் ஆண்டு ம.பொ.சி பிறந்தார்.
- காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம் அறப்போர் தொடங்கிய ஆண்டு.
- வ.உ.சி அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய ஆண்டு.

**3. ம.பொ.சி. இளமையில் கற்ற அம்மானைப் பாடல்கள் யாவை?**

- பவளக்கொடி மாலை
- அல்லி அரசாணி மாலை

**4. ம.பொ.சி. வகித்த பதவிகளைக் குறிப்பிடுக**

- 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினர்
- 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவைத் தலைவர்

**5. ம.பொ.சி. வாழ் நாள் மகிழ்ச்சியாக எதனைக் குறிப்பிடுகிறார் ?**

- புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிறவற்றில் தமிழகத்தின் வட எல்லை வேங்கட மலையாகவும், தென் எல்லை குமரி முனையாகவும் உள்ளது.
- இதைப் படித்த ம.பொ.சி க்கு மகிழ்ச்சியாய் இருந்தது.
- மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதும் நம் தவப்பயன். இத்தகைய தெய்வீக எல்லையை. தமிழகம் திரும்பப் பெற்றதே என் வாழ்நாளில் பெரு மகிழ்ச்சி என ம.பொ.சி குறிப்பிடுகிறார்.

**6. கேரளாவிலிருந்து சென்னை மாநிலத்திற்கு இணைந்த பகுதிகள் யாவை?**

கல்குளம், தோவாளை, செங்கோட்டை, விளவங்கோடு, அகத்தீசுவரம்.

**7. ம.பொ.சி. அறிவு விளக்கம் பெற தேர்ந்தெடுத்த வழிகள் யாது?**

கல்வி, கேள்வி.

**9. ம.பொ.சி. சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பிய காரணம் என்ன?**

சிலப்பதிகாரம் தமிழினத்தின் பொதுச்சொத்து. இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும், தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு உண்டான செய்திகள் அனைத்தும் சிலப்பதிகாரத்தில் காணப்பட்டதால் மக்களிடையே சிலப்பதிகாரத்தைக் கொண்டு சென்றார்.

**10. விடுதலைப் போரில் ஈடுபட்ட முன்னணித் தலைவர்களாக ம.பொ.சி. குறிப்பிடுவோர் யாவர்?**

காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம்.

**11. ஞானப்பிரகாசம் என்ற இயற்பெயர் பெற்ற தமிழறிஞர் யார்? அவரின் பெற்றோர் யாவர்?**

- ஞானப்பிரகாசம் என்ற இயற்பெயர் பெற்ற தமிழறிஞர் ம.பொ. சிவஞானம்.
- அவரின் பெற்றோர் : பொன்னுசாமி - சிவகாமி.

**12. ம.பொ.சிக்குச் சிவஞானம் என்னும் பெயர் அமையக் காரணம் யாது?**

- ம.பொ.சிக்குப் பெற்றோர் இட்ட பெயர் : ஞானப்பிரகாசம்.
- சரபையர் என்ற முதியவர் ஒருவர் 'ஞானப்பிரகாசம்' என்ற இயற்பெயரை மாற்றி 'சிவஞானி' என்றழைத்தார்.
- சிவஞானி என்ற பெயர் திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

**13. பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க புனித நாள் எது?**

1942 ஆகஸ்டு 8.

**14. சென்னை மாநிலத்திலிருந்து கேரளாவுடன் இணைந்த மாவட்டம் எது?**

சென்னை மாநிலத்திலிருந்து கேராளவுடன் இணைந்த மாவட்டம் மலபார்.

**15. ம.பொ.சி. தமது வாழ்நாளில் சேர்த்த சொத்துக்களாக எவற்றைக் கூறுகிறார்?**

- நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால், பேரானந்தம் கொள்வார் ம.பொ.சி. குறைந்த விலைக்கும் கிடைக்கும் பழைய நூல்களை வாங்கிக் கற்றதோடு, சேமித்து வைத்தார்.
- இவ்வகையில், அவரது வாழ்நாளில் முயன்று சேர்த்து வைத்துள்ள சொத்துகள், அவரிடம் உள்ள பல்லாயிரக்கணக்கான நூல்கள்தாம் என்று, அவரே கூறுகிறார்.

**16. காங்கிரஸ் கட்சியுடன் ம.பொ.சி.க்கு இருந்த உறவு பற்றி எழுதுக.**

தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை ஆகியவற்றிலே காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஈடுபட்டனர். காங்கிரஸ் கட்சியால் நடத்தப்பட்ட ஊர்வலங்களிலும், கதர் விற்பனையிலும் தவறாமல் கலந்து கொண்டார் ம.பொ.சி.

**17. ம.பொ.சி. ஏன் பிரிட்டிஷரால் சிறைப்படுத்தப்பட்டார்?**

30.09.1932 ல் 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காகப் பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து ம.பொ.சிக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும், முந்நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

**18. ம.பொ.சியின் போராட்டத்தால் தலைநகர் சென்னை எப்படி மீட்கப்பட்டது?**

- ஆந்திர மாநிலம் பிரிந்தபோது, சென்னைதான் ஆந்திராவின் தலைநகரமாக இருக்கவேண்டும் என, ஆந்திரத் தலைவர்கள் முடிவு செய்தனர். அப்போது முதல்வராக இருந்த இராஜாஜியிடம் இந்த நிலை குறித்து விளக்கப்பட்டது. அவர், தலைநகர் காக்கத் தம் பதவியைத் துறக்க முடிவு செய்தார்.
- மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டித் 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்ற தீர்மானத்ததை ம.பொ.சி. நிறைவேற்றி முழங்கினார். இதற்குச் செவிசாய்த்த மத்திய அரசு, சென்னையைத் தமிழகத்தின் தலைநகராக அறிவித்தது.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. மார்ஷல் ஏ.நேசமணி பற்றி எழுதுக.**

- இளம் வயதில் சமூக விடுதலைக்காகப் போராடியவர்.
- நகர்மன்றத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்தவர்.
- குமரி மாவட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதால் "மார்ஷல்" என்று அழைக்கப்பட்டார்.
- 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1இல் தமிழ் நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்து தமிழகத்தின் தென் எல்லையாக மாறக் காரணமாக இருந்தவர்.
- தமிழக அரசு இவர் நினைவாக நாகர்கோவிலில் சிலையும் மணி மண்டபமும் அமைத்து சிறப்பித்துள்ளது.

**2. ம.பொ.சி. பற்றிய குறிப்புகளை எழுதுக.**

- ம.பொ.சி.அவர்கள் சென்னை மயிலாப்பூர் சால்வன் குப்பத்தல் பொன்னுச்சாமி, சிவகாமி இணையருக்கு சூன் 26 ஆம் நாள் 1906 ஆண்டு பிறந்தார்.
- பெற்றோர் இட்ட பெயர் "ஞானப்பிரகாசம்". சரபையர் என்ற முதியவர் இவரை "சிவஞானி " என்று கூறிய பெயர் வழங்கலாயிற்று.
- சிலப்பதிகாரத்தின் பெருமையை உலகறியத் செய்ததால் "சிலம்புச் செல்வர்" என்று போற்றப்படுகின்றார்.
- இவர் சிறந்த விடுதலைப் போராட்ட வீரர் ஆவார்.
- 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.
- 1966 இல் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலுக்கு சாகித்ய அகாதெமி விருதினைப் பெற்றார்.
- தன் வரலாற்று நூலாக 'எனது போராட்டம்' என்ற நூலைப் படைத்துள்ளார்.
- இவருக்கு தமிழக அரசு திருத்தணி மற்றும் சென்னை தியாகராயர் நகரிலும் சிலை அமைத்து பெருமைப்படுத்தியுள்ளது.
- மதுரை பல்கலைக்கழகம் 'பேரவைச் செல்வர்' என்ற பட்டமும், இந்திய அரசு "பத்ம ஸ்ரீ" விருதும் வழங்கியது.

**3. சிலப்பதிகாரம் குறித்து சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கூறுவன யாவை? அல்லது ம.பொ.சி. சிலப்பதிகாரத்தை விரும்பக் காரணம் என்ன?**

- இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தக்கூடிய ஓர் இலக்கியம் சிலப்பதிகாரமாகும் என்றார்.
- ஆகையால், சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பினேன். அதற்காக திருக்குறளையோ கம்பராமாயணத்தையோ விரும்பாதவனும் அல்லன் என்றார்.
- இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரம், தமிழ் இனத்தின் பொதுச்சொத்தாகும். ஆகவே, தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினேன் என்றார்.
- இவர் சிலம்பு பற்றிய செய்திகளை மக்களிடத்தே கொண்டு சென்றதால், இவரை சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் "சிலம்புச் செல்வர்" என்ற பட்டத்தை வழங்கினார்.

**5. பண்டைய கடல் கடந்த தமிழ் வணிகம் குறித்து எழுதுக.**

- ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரான வியன்னாவில் உள்ள அருங்காட்சியத்தில் 'பேபிரஸ்தாளில்' எழுதப்பட்ட கையெழுத்து சுவடி கண்டுபிடிக்கப்பட்டது.

- அச்சுவடியில் சேரர் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும், எகிப்தின் 'அலெக்ஸாண்டிரியா' துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையில் ஏற்பட்ட வணிக ஒப்பந்தம் பற்றிய குறிப்புகள் உள்ளன.
- இது கி.பி. 2ம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே ஏற்படுத்தி கொள்ளப்பட்டதாகும்.
- இதிலிருந்து பண்டைத் தமிழர் கடல் கடந்த வணிகத்தில் சிறந்திருந்தனர் என்பதை அறியலாம்.

**6. சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் 'புத்தகப்பித்தன்' என்பதை நிறுவுக.**

- நூல் வாங்குவதற்குப் போதிய பணம் இல்லாத குறையைப் போக்க பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று, விருப்பமான புத்தகங்களை, மிகக் குறைந்த விலையில் வாங்குவதை வழக்கமாகக் கொண்டு இருந்தார் ம.பொ.சிவஞானம்.
- உணவுக்காக வைத்திருந்த பணத்தில் புத்தகம் வாங்கி, பல வேளைகளில் பட்டடினி கிடந்தார்.
- குறைந்த விலைக்கு நல்ல நூல் ஒன்று கிடைத்தால் பேரானந்தம் அடைவார்.
- இவர் தன்னுடைய வாழ்நாளில் சேர்த்து வைத்துள்ள சொத்துகள் பல்லாயிரக்கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்றார்.

இதன் மூலம் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் 'புத்தகப்பித்தன்' என்பதை அறியலாம்.

---

## மொழிப்பயிற்சிகள்

### விடைக்கேற்ற வினா அமை

1. **ம.பொ.சி யின் அன்னையார் அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார்.**

   ம.பொ.சியின் அன்னையார் எப்பாடல்களைப் பாடுவார்?

2. **இளங்கோவடிகள் தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச் சொத்து ஆகும்.**

   இளங்கோவடிகள் தந்த தமிழின் பொதுச் சொத்து எது?

3. **இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாள் 1942 ஆகஸ்டு 8ம் நாள் ஆகும்.**

   1942 ஆகஸ்டு 8-ம் நாள் எந்நாளகக்குறிப்பிடப்படுகிறது? (அல்லது) இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாள் எது?

---

### சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக

1. **காலையிலேயே பாட புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னை கண்டித்தார்.**

   காலையிலேயே பாடப் புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார்.

2. **மார்ஷல், நாகர்கோவில் நகர்மன்ற தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற தலைவராகவும் பணியாற்றினார்.**

   மார்ஷல், நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்றத் தலைவராகவும் பணியாற்றினார்.

---

## ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக

1. **சிலப்பதிகாரம் தமிழினத்தின் பொதுச்சொத்தாகப் போற்றப்படுகின்றன.**
   சிலப்பதிகாரம் தமிழினத்தின் பொதுச்சொத்தாகப் போற்றப்படுகின்றது.
2. ம.பொ.சி. சிலை அமைந்துள்ள இடம் **திருத்தணி மற்றும் தியாகராய நகர்.**
   ம.பொ.சி. சிலை அமைந்துள்ள இடங்கள் திருத்தணி மற்றும் தியாகராயநகர்.
3. **சிறையில் வேளாவேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தன.**
   சிறையில் வேளாவேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது.

---

## கற்பவை கற்றபின்

**1. எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.**

பாவாணர் வாழ்வில் நடந்த நிகழ்வு பற்றி:-

நான் தெருவில் பால் வாங்கிக் கொண்டு வரும் போது என் மீது மிதிவண்டி ஒன்று மோதியது. அதனால், என் செம்பிலிருந்த பால் சிந்தியது. கை, கால்களில் சிறுசிறு காயங்கள் ஏற்பட்டன. உடனே மிதிவண்டிக்கார், ஐயா! மன்னித்துக் கொள்ளுங்கள் என்றார். அதற்கு நான், 'மன்னிப்பு' என்பது உருதுச்சொல். 'பொறுத்துக்கொள்க' எனத் தமிழில் கூற வேண்டும் எனக்கூறி மிதிவண்டிக்காரரைச் சொல்லச் செய்தேன்.

**2. நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.**

ஆசிரியர் அவர்களுக்கும், மாணவ நண்பர்களுக்கும் என் இனிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் படித்துச் சுவைத்த நூல் நந்திக்கலம்பகமாகும்.

இது நந்திவர்ம பல்லவ மன்னனின் வரலாற்று நூலாகும். இந்நூலினை எழுதியவர் யார், என்று அறியப்படவில்லை.

கி.பி.9ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் அரசாண்ட மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவமன்னன் மீது பாடப்பெற்ற ஒரு தனி நூலாகும். இந்நூல் 96 வகைச் சிற்றிலக்கிய நூல்களுள் ஒன்றாகும்.

- இதன் முதல் சிறப்பு தமிழ்மொழியில் முதன்முதலாகத் தோன்றிய கலம்பக நூலாகும்.
- இரண்டாவது சிறப்பு கலம்பகத்திற்கு தோற்று வாயாக நெடுங்காலமாக இலக்கிய உலகில் வழங்கிய கதையாகும்.
- மூன்றாவது சிறப்பு, பாட்டுடைத் தலைவனான நந்திவர்மனின் சிறப்பாகும்.
- நான்காவது சிறப்பு, இச்சிறு நூலின் இணையற்ற கவிச்சுவையாகும்.
- "கலபம்பகம்" என்ற சொல்லுக்கு பல்வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. ஆனால், கலம் + பகம் = கலம்பகம் எனப் பிரிக்கப்பட்டு கலம் என்பது 12 அதில் பாதி 6 எனக்கூறப்பட்டுள்ளது. கலம் என்பது 12 மரக்கால், இதில் பகம் 6 மரக்கால் மொத்தம் 18 மரக்கால் நெல் ஆகும். இதை 18 வகையான உறுப்புகளைக் கொண்ட நூல் கலம்பகம் என விளக்கிக் கூறப்பட்டுள்ளது.
- நந்திவர்மனின் வெற்றி, கொடை, புகழ் பற்றிக்கூறும் நூலாகும்.
- இந்நூலின் கதை பல்வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. கலம்பகப்பாடல் யார் மீது பாடப்படுகிறதோ,அந்த நபர் இறுதியில் இறந்துவிடுவர் என்பதைப்பற்றி கூறப்பட்டுள்ளது.
- நந்தியின் வரலாறு, தமிழ்ப்பற்று கூறப்பட்டுள்ளன.

- 18 வகையான உறுப்புகள் பற்றியும் கூறுப்பட்டுள்ளன.
- அறத்தோடு நிற்றல், நெஞ்சோடு கிளத்தல், நலம் புனைந்துரைத்தல், வெறிவிலக்கல், கையறுநிலை ஆகியவை பற்றித் தெள்ளத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

---

நாடு ஏ

கவிதைப் பேழை

## ஏர் புதிதா?

–கு.ப.ராஜகோபாலன்

MIPBDX

முதல்மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகிவிட்டது.
வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ நண்பா!
காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!
பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு
மாட்டைப் பூட்டி
காட்டைக் கீறுவோம்.
ஏர் புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது,
காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான்
கை புதிதா, கார் புதிதா? இல்லை.
நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது!
ஊக்கம் புதிது, உரம் புதிது!
மாட்டைத் தூண்டி, கொழுவை அமுத்து
மண்புரளும், மழை பொழியும்,
நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும்.
எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்;
கவலையில்லை!
கிழக்கு வெளுக்குது
பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை.

**கவிதையின் பொருள்**

முதல் மழை விழுந்ததும் மண் உழுவதற்கு பதமாகி விட்டது. சூரியன் உதிக்க ஆரம்பித்து விட்டது. விரைவாக முன்னே செல். வயலை நோக்கி காளைகளுடன் சித்திரை மாதத்தில் ஐம்புலன்களை அடக்கி நிலத்தை உழுவதற்கு வழிபாடு செய். காளைமாடுகளைக் கொண்டு நிலத்தை பிளவுபடுத்து ஏர்புதியதல்ல. காளையில் கழுத்தில் பூட்டியுள்ள மரத்தடியால் உழுவதற்கு தயாரானது. வயல் நிலம் உழுவதற்கு புதியன அல்ல. ஏற்கனவே அறுவடை செய்த நிலம் தான். உழவர்களின் கையும் புதியதல்ல. பெய்கின்ற மழையும் புதியதல்ல விதைக்கும் நாள் தான் புதியது. நட்சத்திரமாகிய விதையும் புதியது, ஊக்கம் புதியது, வலிமையும் புதியது, காளைமாடுகளை ஏற்பாடு செய்து உழவனின் கையில் உள்ள கொழுக்கொம்புகளை நிலத்தில் பதியச் செய். கீழ்மண் மேலும் மேல்மண் கீழும் மாறும். மழை பெய்தவுடன் மண் தானாகவே புரளும் நிலமும் வளமாகும். பிறகு நாற்று நிமிர்ந்து வளரும். எல்லைத் தெய்வங்கள் வயல் பகுதியை நன்றாகக் காத்துக்கொள்ளும் இனி கவலையில்லை. கிழக்கே சூரியன் தோன்றிவிட்டது. உழுகின்ற நிலத்தில் நேரம் கூடக்கூட பிரகாசிக்கும் எனவே, நல்ல நேரம் நெருங்கிவிட்டது. நாற்றுக்கு அருகே கொழுவை நிலை நாட்டுவோம்.

---

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | - | கு.ப.ராஜகோபாலன் |
| **பிறப்பு** | - | ஜனவரி 1902 |
| **பெற்றோர்** | - | பட்டாபிராமையர் - ஜானகி அம்மாள் |
| **சிறப்பு** | - | சிறுகதை ஆசான் |

**ஊர்** - கும்பகோணம்

**பணி** - எழுத்தாளர், தமிழ்நாடு பாரத மணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழில் ஆசிரியர்.

**படைப்புகள்** - சிறுகதை, கவிதை, வசனகவிதை, ஆசிரியர் திறனாய்வு, ஓரங்க நாடகம், வாழ்க்கை வரலாறு, மொழி பெயர்ப்பு, அகலிகை, கண்ணன் என் கவி, பாரதியே மகாகவி, ஆறு நவயுக நாவல்கள், ஸ்ரீ அரவிந்த யோகி, டால்ஸ்டாய் வாழ்க்கையும் உபதேசமும்.

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| கடுகி | - விரைவாக | அழுத்து | - பதியச்செய் |
| பதம் | - பக்குவம் | சிலிர்க்கும் | - வளப்படும் |
| வெள்ளி | - சூரியன் | கார் | - மழைக்காலம் |
| கீறுவோம் | - உழுவோம் | கொழு | - கொம்பு |
| நுகத்தடி | - மரத்தடி | | |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| **விரைந்து, கடுகி, தொழுது, பதமாகி** | - வினையெச்சம் |
| **நண்பா!** | - விளித்தொடர் |
| **பொன்ஏர்** | - உவமைத்தொகை |
| **மாட்டைப் பூட்டி**<br>**காட்டைக் கீறுவோம்**<br>**கொழுவை அழுத்து** | - இரண்டாம் வேற்றுமை விரி |
| **நாட்டுவோம்** | - தன்மைப் பன்மை வினைமுற்று |

## பகுபத உறுப்பிலக்கணம்

**அ) தொழுது = தொழு + த் + உ**

**தொழு** - பகுதி

**த்** - இறந்த கால இடைநிலை

**உ** - வினையெச்ச விகுதி

**ஆ) கீறுவோம் = கீறு + வ் + ஓம்**

**கீறு** - பகுதி

**வ்** - எதிர்கால இடைநிலை

**ஓம்** - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

## பொருத்துக

அ)
1. விரி - அ) பொருள்
2. மெய் - ஆ) பயன்
3. மொழி - இ) பனுவல்

4. நூல் - ஈ) அருள் **[விடை 1 (ஆ), 2 (ஈ), 3 (அ), 4 (இ)]**

ஆ) 1. முதல் மழை - அ) பதமாகியது
2. மேல் மண் - ஆ) முளைத்தது
3. வெள்ளி - இ) தொழுது
4. பொன்ஏர் - ஈ) விழுந்தது. **[விடை 1 (ஈ),2 (அ, 3 (ஆ), 4 (இ)]**

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க**

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர்,உழவு,
இ) உழவு / ஏர்/ மண்/ மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண் **[விடை : உழவு / ஏர்/ மண்/ மாடு]**

## சிறுவினா

**1. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா.கவிபாடுகிறார்?**

- முதல் மழை விழுந்தவுடன் நிலம் உழுவதற்கு பதமாகிவிட்டது
- விரைந்து சென்று, பொன் ஏரிலே காளைகளைப் பூட்டி நிலத்தை உழுதனர். ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர்.
- மழை பொழிய நிலம் குளிர்ந்தது. நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன. கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறந்தது.

## கூடுதல்வினாக்கள் - குறுவினா

**1. கு.ப. ராஜகோபாலன் பணிபுரிந்த இதழ்கள் யாவை?**

- தமிழ்நாடு
- பாரத தேவி
- பாரதமணி
- கிராம ஊழியன்

**2. பொன் ஏர் பூட்டுதல் என்றால் என்ன?**

உழவர்கள் தங்களது வேளாண்மை செழிக்கவும், மானுடம் தழைக்கவும் சித்திரை மாதத்தின் முதல் நாளில் இறைவனுக்கு விழா எடுப்பர். இதுவே பொன் ஏர்பூட்டுதல் எனப்படும்.

**3. மண் எப்போது புரளும்?**

மாட்டைத்தூண்டி, கொழுவை அழுத்தினால் மண் புரளும்.

**4. கு.ப. ராஜகோபாலனின் பன்முகங்களைக் குறிப்பிடுக.**

- சிறுகதை எழுத்தாளர்
- நாடக ஆசிரியர்
- கவிஞர்
- மறுமலர்ச்சி எழுத்தாளர்

**6. உழவுத் தொழில் பற்றி உனக்குத் தெரிந்த சில கருத்துகளைக் கூறுக.**

உழுவோர் உலகத்துக்கு அச்சாணி எனப் போற்றப்பட்டனர். உழவே தலையான தொழில். ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்’ என்பது திருக்குறள். தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும்

போற்றினர். மருதநிலம் வயல் சார்ந்த பகுதியாகும். மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

**7. கு.ப.ராவின் படைப்புகள் அடங்கிய நூல் தொகுப்புகளை குறிப்பிடுக.**

அகலிகை, ஆத்ம சிந்தனை.

**8. விரைந்து போ நண்பா எனக் கவிஞர் கூறக் காரணம் யாது?**

முதல் மழை விழுந்துவிட்டதாலும், மேல் மண் பக்குவமானதாலும், வெள்ளி முளைத்ததாலும் ஏறினைப் பூட்ட விரைந்து போ என்கிறார் கவிஞர்.

**9. உழவர் நண்பரை அழைத்துக் கூறுவது யாது?**

நண்பா என விளித்த உழவர், விடியற்காலை நேரம் கிழக்கில் வெள்ளி தோன்றிவிடும். எனவே, பொன்ஏர் பூட்ட விரைந்து, காளைகளை ஓட்டிச் செல் என்று கூறுவார்.

**10. எவையெவை புதியன அல்ல எனக் கு.ப. ராஜகோபாலன் கூறுகிறார்?**

ஏர் புதியதன்று, நுகத்தடியும் புதியதன்று, காடும் கரையும் புதியதல்ல எனக் கு.ப. ராஜகோபாலன் கூறுகிறார்.

**11. எவையெவை புதியன என்று கு.ப. ராஜகோபாலன் கூறுகிறார்?**

நாள் புதிது; நட்சத்திரம் புதிது; ஊக்கம் புதிது; மனத்தில் உள்ள உரமும் புதிது என்று, கு.ப. ராஜகோபாலன் கூறுகிறார்.

**12. கொழுவை நிலத்தில் நாட்டுவதால் ஏற்படும் பயன் யாது?**

ஏர்க்கொழுவை அழுந்த உழுவதால் மன் புரளும், நிலம் சிலிர்க்கும், நாற்றுகள் நிமிர்ந்து நிற்கும், பயிர்கள் செழிக்கும்.

**13. கொழுவை நிலத்தில் நாட்டுவது எப்போது?**

விடியற்காலைப் பொழுதில் கிழக்கு வெளுக்கிறது, விடியப் போகிறது, பொன் போன்ற கதிரவனின் ஒளியும் வரப்போகிறது. அந்த நல்ல வேளையில் கொழுவை நிலத்தில் நாட்டுவார்.

**14. தமிழர் பண்பாட்டின் மகுடம் எது?**

வேளாண்மை செழிக்கவும், மானுடம் தழைக்கவும், சித்திரைத் திங்களில் நடத்தப்படும் ‘பொன்ஏர் பூட்டுதல்’ என்பது தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. கு.ப. ராஜகோபாலன் பற்றிக் கூறுக (அல்லது)**

**ஆசிரியர் குறிப்பினை எழுதுக**

| | |
|---|---|
| **பெயர்** | - கு.ப.ராஜாகோபலன் |
| **பிறப்பு** | - ஜனவரி 1902 |
| **பெற்றோர்** | - பட்டாபிராமையர் ஜானகி அம்மாள் |
| **சிறப்பு** | - சிறுகதை ஆசான் |
| **ஊர்** | - கும்பகோணம் |
| **பணி** | - எழுத்தாளர், தமிழ்நாடு பாரத மணி, பாரததேவி, கிராம ஊழியன் ஆகிய இதழில் ஆசிரியர். |
| **படைப்புகள்** | - சிறுகதை, கவிதை, வசனகவிதை, ஆசிரியர் திறனாய்வு, ஓரங்க நாடகம், வாழ்க்கை வரலாறு, மொழி பெயர்ப்பு, அகலிகை, கண்ணன் என் கவி, பாரதியே மகாகவி, ஆறு நவயுக நாவல்கள், ஸ்ரீ அரவிந்த யோகி, டால்ஸ்டாய் வாழ்க்கையும் உபதேசமும். |

**2. உழவின் சிறப்பினைக் கூறும் வள்ளுவரின் குறட்பாக்கள் சிலவற்றைக் கூறுக.**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

**4. 'பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்**
**நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் சுட்டல் :**

கு.ப. ராஜகோபாலனின் 'கு.ப.ரா. படைப்பு'களில் ஏர் புதிதா? என்ற கவிதைகளில் இவ்வரிகள் இடம் பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :**

பொழுது விடிந்து ஏரின் அடியில் பொன்னொளி பரப்பும் நல்ல காலைப் பொழுதில் ஏர் முனையின் கலப்பை இரும்பை நிலத்தில் நாட்டுவோம்.

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. ஏர் புதிதா? என்னும் கவிதைத் தொகுப்பில் கு.ப.ரா.கூறும் கருத்துக்களை எழுதுக.**

"அச்சாணி இல்லாத தேர் முச்சானும் ஓடாது" என்றார் சான்றோர். ஆம்! உழுவோர் உலகத்தார்க்கு அச்சாணி யாகத் திகழ்கின்றனர். உழவே தலையான தொழிலாகும். உழவுத் தொழிலை தொழிலாகக் கருதாமல் ஒரு பண்பாட்டு நிகழ்வாக எடுத்துரைக்கின்றார். கு.ப. ராஜாகோபலன் அவர்கள்

முதல் மழை விழுந்ததும் மண் உழுவதற்கு பதமாகி விட்டது. சூரியன் உதிக்க ஆரம்பித்து விட்டது. விரைவாக முன்னே செல் வயலை நோக்கி காளைகளுடன். சித்திரை மாதத்தில் ஐம்புலன்களை அடக்கி நிலத்தை உழுவதற்கு வழிபாடு செய். காளைமாடுகளைக் கொண்டு நிலத்தை பிளவுபடுத்த ஏர்புதியதல்ல. காளையில் கழுத்தில் பூட்டியுள்ள மரத்தடியால் உழுவதற்கு தயாரானது. வயல் நிலம் உழுவதற்கு புதியன அல்ல. ஏற்கனவே அறுவடை செய்த நிலம் தான். உழவர்களின் கையும் புதியதல்ல; பெய்கின்ற மழையும் புதியதல்ல; விதைக்கும் நாள் தான் புதியது. நட்சத்திரமாகிய விதையும் புதியது, ஊக்கம் புதியது, வலிமையும் புதியது, காளைமாடுகளை ஏற்பாடு செய்து உழவனின் கையில் உள்ள கொழுக் காம்புகளை நிலத்தில் பதியச் செய். கீழ்மண் மேலும் மேல்மண் கீழும் மாறும். மழை பெய்தவுடன் மண் தானாகவே புரளும், நிலமும் வளமாகும். பிறகு நாற்று நிமிர்ந்து வளரும். எல்லைத் தெய்வங்கள் வயல் பகுதியை நன்றாகக் காத்துக்கொள்ளும் இனி கவலையில்லை. கிழக்கே சூரியன் தோன்றிவிட்டது. உழுகின்ற நிலத்தில் நேரம் கூடக்கூட பிரகாசிக்கும். எனவே, நல்ல நேரம் நெருங்கிவிட்டது. நாற்றுக்கு அருகே கொழுவை நிலை நாட்டுவோம்.

## கற்பவை கற்றபின்

1. "முதல் மழை விழுந்தது" தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ஏர்புதிதா கவிதை கொண்டு வரிசைப்படுத்திப் பேசுக.

- உழவர்களை மகிழச்செய்யும் வகையில் முதல் மழை மண்ணில் விழுந்துவிட்டது. இம் மழையினால் நிலமானது உழவு செய்வதற்கு ஏற்ற நிலமாக பதமாகிவிட்டது. உழவர்களே சோம்பலுடன் உறங்கிக் கொண்டு இருக்காதீர்கள். சூரியன் முளைத்துவிட்டது. எழுந்து வா நண்பா! விரைவாக. ஏர்பூட்டி காளைகளை வயலுக்கு ஓட்டிக் கொண்டு போ!
- காடும், ஏரும் நமக்குப் புதிதன்று. கரையும் நம் வசப்பட்டதுதான். காளைகளும் புதியவை அன்று. பொன்னாலான ஏரினைத் தொழுது, மாட்டினைப் பூட்டி நிலத்தினை உழுவோம். உழவு செய்யும்போது மண்புரளுகின்ற வகையில் ஏர்முனை அழுந்த நன்கு உழுவோம். மேலும், மழை பொழியும். நம் நிலமும் குளிரும்.
- புதிய ஊக்கத்துடனும், புதிய வலுவுடனும் உழைப்போம். நாற்று நிமிர்ந்து வளரும். எல்லைத் தெய்வம் நம்மைக்காக்கும். கவலைகள் நமக்கு இனி இல்லை. புதுமையான விடியலின் அடையாளம் கிழக்கும் வெளுத்து விட்டது. உழைப்பால் உயர்வோம், உன்னத வாழ்வைப் பெறுவொம், நாட்டை உயர்த்துவோம்.

---

நாடு

ஏ

கவிதைப் பேழை

# மெய்க்கீர்த்தி

–இரண்டாம் இராசராச சோழன்

MY86F9

இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி
வுந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய
படியானையே பிணிப்புண்பன
வடிமணிச்சிலம்பே யரற்றுவன
செல்லோடையே கலக்குண்பன
வருபுனலே சிறைப்படுவன
மாவே வடுப்படுவன
மாமலரே கடியவாயின
காவுகளே கொடியவாயின
கள்ளுண்பன வண்டுகளே
பொய்யுடையன வரைவேயே
போர்மலைவன எழுகழனியே
மையுடையன நெடுவரையே
மருளுடையன இளமான்களே
கயற்குலமே பிறழ்ந்தொழுகும்
கைத்தாயரே கடிந்தொறுப்பார்
இயற்புலவரே பொருள்வைப்பார்
இசைப் பாணரே கூடஞ்செய்வார்
என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல்இதுவென
நின்றுகாவல் நெறிபூண்டு நெறியல்லது நினையாது
தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர்
தாயராகியும்
மைந்தரில்லொரு மைந்தராகியும்
மன்னுயிர்கட்குயிராகியும்
விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற
அருளென்னவும்
மொழிபெற்ற பொருளென்னவும் முகம்பெற்ற
பனுவலென்னவும்
எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய்.....

**பொருள்**

இந்திரன் முதலாகத் திசைபாலர் எட்டுப்பேரும் ஓருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன். அவன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன (மக்கள் பிணிக்கப்படுவதில்லை). சிலம்புகள் மட்டுமே

புலம்புகின்றன (மக்கள் புலம்புவதில்லை). ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன (மக்கள் கலக்கமடைவதில்லை). புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது (மக்கள் அடைக்கப்படுவதில்லை).

மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன (மக்கள் வடுப்படுவதில்லை). மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன (மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை). காடுகள் மட்டுமே கொடியவனாய் - அதாவது கொடி உடையவனாக உள்ளன (மக்கள் கொடியவராய் இல்லை). வண்டுகள் மட்டுமே கள் உண்ணுகின்றன - அதாவது தேன் உண்ணுகின்றன (மக்கள் கள் உண்பதில்லை). மலை மூங்கில் மட்டுமே உள்ளீடு இன்றி வெறுமையாய் இருக்கின்றது (மக்களிடையே வெறுமை இல்லை). வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன (வேறு போர் இல்லை).

நீண்ட மலைகளே இருள் சூழ்ந்திருக்கின்றன (நாட்டில் வறுமை இருள் இல்லை). இளமான்களின் கண்களே மருள்கின்றன (மக்கள் கண்களில் மருட்சியில்லை). குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன (மக்கள் நிலை பிறழ்வதில்லை). செவிலித்தாயாரே சினங் காட்டுவர் (வேறு யாரும் சினம் கொள்வதில்லை). புலவர் பாட்டில் மட்டுமே பொருள் பொதிந்து (மறைந்து) இருக்கின்றது. (யாரும் பொருளை மறைப்பதில்லை). இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் (தேவையற்று வேறு யாரும் அவ்வாறு செய்வதில்லை). இராசராசன் காக்கும் திரு நாட்டின் இயல்பு இது.

அவன் நெறியோடு நின்று காவல் காக்கின்றான். தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருக்கின்றான். தாயில்லாதோருக்குத் தாயாய் இருக்கின்றான். மகனில்லாதோருக்கு மகனாக இருக்கின்றான். உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றான். விழிபெற்ற பயனாகவும் மெய் பெற்ற அருளாகவும் மொழி பெற்ற பொருளாகவும் புகழ் பெற்ற நூல் போலவும் திகழ்கிறான். புகழ் அனைத்திற்கும் தலைவனாகி யாதும் புரிகின்றான்.

## நூற்குறிப்பு

கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்னு பட்டங்கள் கொண்ட இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி பாடமாக உள்ளது. இம்மெய்க்கீர்த்திப் பகுதியன் இலக்கிய நயம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் ஒருசேர உணர்த்துவதாக உள்ளது. இவருடைய மெய்க்கீர்த்திகள் இரண்டு. ஆதில் ஒன்று 91 வரிகளைக் கொண்டது. அதில் 16 - 33 வரையான வரிகள் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன. இப்பாடப் பகுதிக்கான மூலம் தமிழ் இணையக் கல்விக் கழகத்திலிருந்து பெறப்பட்டது.

முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன. மெய்க்கீர்த்திகளே கல்வெட்டின் முதல்பகுதியில் மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள். இவை புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.

## ஆசிரியர் குறிப்பு

- இரண்டாம் இராசராச சோழன் இரண்டாம் குலோத்துங்களின் மகனாவான்.
- இவரின் ஆட்சிமுறையைப் பற்றி பல கல்வெட்டுகளில் செதுக்கப்பட்டுள்ளன.
- இக்கல்வெட்டில் அடங்கியுள்ள பல மெய்க்கீர்த்திகள் இவரின் ஆட்சியின் நிலப்பரப்பையும், சிற்றரசர்களின் பெயர்களையும் அவர்களின் நிலைமைகளையும் தெரிவிக்கின்றன.
- இரண்டாம் இராசராச சோழன் பெற்ற பட்டங்கள் கோப்பர கேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி.

## பொருள் கூறுக

| | | | |
|---|---|---|---|
| எண்மரும் | - எட்டு பேரும் | மருள் | - மயக்கம் |
| வடிவம் | - உருவம் | கைத்தாயார் | - செவிலித்தாயார் |
| கா | - காடு | கடிந்து | - கண்டித்தல் |
| வரை | - மலை | ஒறுப்பார் | - கோபப்படுவார் |
| வேய் | - மூங்கில் | மெய் | - உடல் |
| மை | - இருள் | இறை | - தலைவன் |
| கயல் | - மீன் | கழனி | - வயல் |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| **வருபுனலே** | - வினைத்தொகை | **புலவரே** | - விளித்தொடர் |
| **மாமலர்** | - உரிச்சொல் தொடர் | **செய்வார்** | - வினையாலணையும் பெயர் |
| **நெடுவரை, இளமான்** | - பண்புத்தொகை | **நெறி பூண்டு** | - நான்காம் வேற்றுமைத் தொகை |

## பகுபத உறுப்பிலக்கணம் தருக

**அ) நின்று = நில் (ன்) +ற் +உ**

| | |
|---|---|
| **நில்** | - பகுதி; |
| **ல் -ன்** | - ஆகத் திரிந்தது விகாரம் |
| **ற்** | - இறந்த கால இடைநிலை; |
| **உ** | - வினையெச்ச விகுதி |

**ஆ) செய்வார் = செய் +வ் +ஆர்**

| | |
|---|---|
| **செய்** | - பகுதி; |
| **வ்** | - எதிர் கால இடைநிலை |
| **ஆர்** | - பலர் பால் வினைமுற்று விகுதி |

## பொருத்துக

அ)
1. யானை - அ) புலம்புகின்றன
2. சிலம்புகள் - ஆ) பிணிக்கப்படுவன
3. ஓடைகள் - இ) வடுப்படுகின்றன
4. மாங்காய்கள் - ஈ) கலக்கமடைகின்றன

**[விடை -1 - ஆ, 2-அ, 3-ஈ, 4-இ]**

ஆ)
1. முகம் - அ) மலை
2. வரை - ஆ) செவலித்தாய்
3. கைத்தாயர் - இ) நூல்
4. பனுவல் - ஈ) முன்னுரை

**[விடை -1 - ஈ, 2-அ, 3-ஆ, 4-இ]**

இ)
1. நெற்கதிர்கள் - அ) இருள் சூழ்ந்திருக்கின்றன
2. மலைகள் - ஆ) மருள்கின்றன
3. மான்களின் கண்கள் - இ) பிறழ்ந்து செய்கின்றன

| | | | |
|---|---|---|---|
| | 4. குளத்து மீன்கள் | - ஈ) போராக எழுகின்றன் | **[விடை : 1-ஈ, 2-அ, 3- ஆ, 4- இ]** |
| (ஈ) | 1. மலர்கள் | - அ) பறிக்கப்படுகின்றன | |
| | 2. காடுகள் | - ஆ) தேன் உண்ணுகின்றன | |
| | 3. வண்டுகள் | - இ) கொடியன | |
| | 4. மலை மூங்கில் | - ஈ) உள்ளீடு இன்றி வெறுமை | **[விடை : 1-அ, 2-இ, 3-ஆ, 4-ஈ]** |
| உ) | 1. உருவம் | - அ) செவிலித் தாயார் | |
| | 2. மை | - ஆ) மயக்கம் | |
| | 3. மருள் | - இ) வடிவம் | |
| | 4. கைத்தாயர் | - ஈ) இருள் | **[விடை - 1-இ, 2-ஈ, 3-ஆ , 4-அ]** |
| ஊ) | 1. பிணிப்பு | - அ) நீர் | |
| | 2. புனல் | - ஆ) கட்டுதல் | |
| | 3. கழனி | - இ) இருள் | |
| | 4. மை | - ஈ) வயல் | **[விடை - 1-ஆ , 2-அ, 3-ஈ, 4-இ]** |

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1.** "தன் நாட்டு மக்களுக்கு தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**[விடை : நெறியோடு நின்று காவல் காப்பவர் ]**

## குறுவினா

**1. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது ?**

முன்னர்தாம் நாட்டின் வளத்தையும் ஆட்சித் சிறப்பையும் காலம் கடந்தும் உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக புகழும் பெருமையும் அழியாத வகையில் இவை அனைத்தையும் கல்லில் செதுக்கியார்கள். இதுவே மெய்க்கீர்த்தி பாடப்டுவதன் நோக்கமாகும்.

## சிறுவினா

**1. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.**

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வம்ச பாரம்பரியம் வியந்து ஓதுக்கப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வம்ச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

**மையக்கருத்து :**

இப்பத்தியானது சோழ மன்னருடைய ஆட்சி முறை ,போர் வெற்றிகள், அவனது வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறது. சாசனம் எழுந்த நிகழ்வு பற்றியும் தன் தேவியோடு நீடு வாழ்தல் போன்ற மெய்ப்புகழை எடுத்துக் கூறுகின்றது.

## நெடுவினா

**1. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக .**

**திரண்ட கருத்து**

இந்திரன் முதலாகத் திசைபாலர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன். அவன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன (மக்கள் பிணிக்கப்படுவதில்லை). சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன (மக்கள் புலம்புவதில்லை). ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன (மக்கள் கலக்கமடைவதில்லை). புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது (மக்கள் அடைக்கப்படுவதில்லை).

மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன (மக்கள் வடுப்படுவதில்லை). மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன (மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை). காடுகள் மட்டுமே கொடியவனாய் - அதாவது கொடி உடையவனாக உள்ளன (மக்கள் கொடியவராய் இல்லை). வண்டுகள் மட்டுமே கள் உண்ணுகின்றன - அதாவது தேன் உண்ணுகின்றன (மக்கள் கள் உண்பதில்லை). மலை மூங்கில் மட்டுமே உள்ளீடு இன்றி வெறுமையாய் இருக்கின்றது (மக்களிடையே வெறுமை இல்லை). வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன (வேறு போர் இல்லை).

நீண்ட மலைகளே இருள் சூழ்ந்திருக்கின்றன (நாட்டில் வறுமை இருள் இல்லை). இளமான்களின் கண்களே மருள்கின்றன (மக்கள் கண்களில் மருட்சியில்லை). குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன (மக்கள் நிலை பிறழ்வதில்லை). செவிலித்தாயாரே சினங் காட்டுவர் (வேறு யாரும் சினம் கொள்வதில்லை). புலவர் பாட்டில் மட்டுமே பொருள் பொதிந்து (மறைந்து) இருக்கின்றது. (யாரும் பொருளை மறைப்பதில்லை). இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் (தேவையற்று வேறு யாரும் அவ்வாறு செய்வதில்லை). இராசராசன் காக்கும் திரு நாட்டின் இயல்பு இது.

அவன் நெறியோடு நின்று காவல் காக்கின்றான். தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருக்கின்றான். தாயில்லாதோருக்குத் தாயாய் இருக்கின்றான். மகனில்லாதோருக்கு மகனாக இருக்கின்றான். உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றான். விழிபெற்ற பயனாகவும் மெய் பெற்ற அருளாகவும் மொழி பெற்ற பொருளாகவும் புகழ் பெற்ற நூல் போலவும் திகழ்கிறான். புகழ் அனைத்திற்கும் தலைவனாகி யாதும் புரிகின்றான்.

**மையக்கருத்து :**

இரண்டாம் இராசராசன் காலத்தில் அவர் நாட்டில் வாழும் மக்கள் மற்றும் எல்லா உயிர்களும் எல்லா உரிமைகளும் பெற்று வாழ்ந்தனர் என்பதை இப்பாடல் தெளிவாக விளக்குகின்றது.

**மோனைநயம் :**

செய்யுளில் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயமாகும்.

**சான்று :** மாவே இயற்புலவரே

**மா**மலரே இசைப் புலவரே

**எதுகை நயம் :**

செய்யுளில் இரண்டாம் எழுத்துகள் ஒன்றி வரத் தொடுப்பது எதுகை நயமாகும்.

**சான்று :** இந்திரன் படியானையே கயற்குலமே விழிபெற்ற
வந்தபடி வடிமணிச் இயற்புலவரே மொழி பெற்ற

**இயைபு நயம் :**

செய்யுளில் அடி தோறும் இறுதி சீரோ இறுதி எழுத்தோ ,இறுதி அசையோ ஒன்று போல் இயைந்து வருவது இயைபுத்தொடை நயமாகும்.

**சான்று :** பிணிப்புண்பன கலக்குண்பன
யாற்றுவன சிறைப்படுவன
வகுப்படுவன

**சந்த நயம் :**

இப்பாடல் பாடுவதற்கு இனிமையாகவும், பொருள் புரிவதற்கும் எளிமையாகவும் அழகிய சந்த நயத்துடன் காணப்படுகிறது.

**அணிநயம் :**

இப்பாடலில் உயர்வு நவிற்சியணி இடம் பெற்றுள்ளது. இராசராசன் நாட்டைக் காக்கும் தன்மையை உயர்வாகக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பாடல் உயர்வு நவிற்சியாணியாயிற்று.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. திசாபாலர் எண்மர் யாவர் ? (அ) திசைபாலர் எட்டுப்பேர் யாவர்?**

எண்திசை தெய்வங்களின் பெயர்களைக் கூறுக.

- இந்திரன்
- அக்கினி
- யமன்
- நிருதி
- வருணன்
- வாயுகுபேரன்
- ஈசானன்

**2. இராசராசனின் நாட்டில் புலம்புவதும், அடைக்கப்படுவதும் எது?**

- புலம்பப்படுவது - சிலம்புகள் (சிலப்பதிகாரம் )
- அடைக்கப்படுவது - நீர் மட்டுமே மக்கள் எதற்காகவும் சிறைப்படுத்தி அடைக்கப்படுவதில்லை.

**3. காவல் நெறி பூண்டு ஆண்டவன் இராசராசன் என்பதை மெய்க்கீர்த்தி எவ்வாறு கூறுகின்றது?**

- தந்தையில்லாதோர்க்குத் தந்தையாய் இருந்தான்
- தாயில்லாதோர்க்கு தாயாயத் திகழ்ந்தான்
- மகனில்லாதோர்க்கு மகனாய் இருந்தான்.
- உலகின் உயிர்களுக்கெல்லாம் உயிராக இருந்து காவல் நெறி பூண்டு ஆண்டான் என்று மெய்க்கீர்த்தி போற்றுகிறது.

**5. இராசராசன் நாட்டின் இயல்புகளைக் கூறுக?**

இராசராசன் நாட்டின் மலைகள் இருளாகவும், மான்களின் கண்கள் மருண்டும், குளத்து மீன்கள் பிறழ்ந்தும், செவிலித்தாயார் சினங்கொண்டும், புலவர் பாட்டில் பொதிந்தும், இசைப்பாணர் தெருவில் ஆடிப் பாடியும் மகிழ்ந்தனர்.

**6. இரண்டாம் இராசராசனின் பட்டங்கள் யாவை?**

கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி ஆகியவை ஆகும்.

**7. 'படியானையே பிணிப்புண்பன**

**வடிமணிச்சிலம்பே யரற்றுவன' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**இராசராச சோழன் நாட்டில் :**

- யானைகள் பிணிக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் பிணிக்கப்படுவதில்லை.
- சிலம்புக்ள புலம்புகின்றன. ஆனால் மக்கள் புலம்புவதில்லை.

**8. இராசராசனின் புகழ் பற்றி எழுதுக.**

- விழி பெற்ற பயனாகவும்,
- மெய் பெற்ற அருளாகவும்,
- மொழி பெற்ற பொருளாகவும்,
- புகழ் பெற்ற நூல் போலும் - புகழ் அனைத்திற்கும் தலைவனாகக் கருதப்படுகிறான்.

**9. 'செல்லோடையே கலக்குண்பன**

**வருபுனலே சிறைப்படுவன' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**இராசராச சோழன் நாட்டின் :**

- ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன. ஆனால் மக்கள் கலக்கமடைவதில்லை.
- புனல் (நீர்) மட்டுமே அடைக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் அடைக்கப்படுவதில்லை.

**10. 'மையுடையன நெடுவரையே**

**மருளுடையன இளமான்களே' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**இராசராச சோழன் நாட்டில் :**

- நீண்ட மலையை இருள் சூழ்ந்து இருக்கின்றன. ஆனால் நாட்டில் வறுமை இருள் இல்லை.
- இளமான்கள் கண்கள் மருள்கின்றன. மக்கள் கண்களில் மருட்சி இல்லை.

**11. 'கயற்குலமே பிறழ்ந்தொழுகும்.**

**கைத்தாயரே கடிந்தொறுப்பர்' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**இராசராச சோழன் நாட்டில் :**

- குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன. ஆனால் மக்கள் நிலை பிறழ்வதில்லை.
- செவிலித்தாய் சினம் காட்டுவார். ஆனால் வேறு யாரும் சினம் கொள்வதில்லை.

**12. இரண்டாம் இராசராச சோழன் எவ்வாறு ஆட்சி செய்தான்?**

இந்திரன் முதலான திசைப்பாலகர்கள் எட்டுப்பேரும் ஓர் உருவர் பெற்றுவந்ததுபோல், இரண்டாம் இராசராச சோழன் ஆட்சி செய்தான்.

**13. "மாவே வடுப்படுவன மாமலரே கடிய வாயின" - இத்தொடரால் உணர்த்தப்படும் குறிப்புப் பொருள் யாது?**

சோழ நாட்டில் மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன. மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன என்பது பொருள். இதனால், மக்கள் வடுப்படுவதோ, மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதோ இல்லை என்னும் குறிப்புப் பொருள் உணர்த்தப்பட்டது.

**14. சோழநாட்டில் போர் இல்லாமைக்குக் காரணம் என்ன?**

சோழநாட்டின் வயல்களில் நெற்கதிர்கள் மட்டுமே போராகக் குவிக்கப்படுகின்றன. மக்கள் போரிட எழுவதில்லை.

**15. சோழநாட்டில் சினம் கொள்பவர் யார்?**

சோழநாட்டில் செவிலித்தாயரே சினங்கொள்வர். வேறு யாரும் சினம் கொள்ளமாட்டார்கள்.

**16. மெய்க்கீர்த்திகள் எக்காலம் முதல் உருவாக்கப்பட்டன?**

மெய்க்கீர்த்திகள், முதலாம் இசாசராசன் காலந்தொட்டுக் கல்லில் வடிக்கப்பட்டன. கல்வெட்டின் முதற்பகுதியில் புலவர்களால் மன்னனைப் பற்றிப் புகழ்ந்து, இலக்கிய நயம்பட எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கப்படுகின்றன.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. சோழ நாட்டில் மையுடையன, மருளுடையன யாவை ?**

**மையுடையன :**

- ‘மை’ என்றால் ‘இருள்’ என்று பொருள்
- சோழ நாட்டில் உள்ள மலைப்பகுதியும், மலைக் குகைகளுமே இருள் சூழ்ந்து காணப்படுவன ஆகும். ஆனால், சோழ நாட்டில் வாழும் மக்களின் வாழ்வில் வறுமை என்னும் இருள் சூழ்வதில்லை.

**மருளுடையன :**

- "மருள்" என்பது ஒரு வித பய உணர்வு ஆகும்
- இத்தகைய பய உணர்வு இளமான்களின் கண்களில் மட்டுமே காணப்பட்டன. சோழ வள நாட்டில் வாழும் மக்களின் உள்ளத்தில் எந்த வித பயஉணர்ச்சியும் அடைவதில்லை.

**2. மெய்க்கீர்த்தி குறிப்பு வரைக.**

- எழுதப்படும் காலத்தில் ஆட்சியில் உள்ள அரசனின் உண்மையான புகழுக்குரிய செயல்களைச் செதுக்கும் கல்வெட்டாகும்.
- அரசர்கள் தம் வரலாறும், பெருமையும் காலம் கடந்தும் நிலைத்து நிற்கச் செய்யும்.
- பல்லவர்கள் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் எழுதிவந்த நிலையில் சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப் பெயர் பெற்றது.
- முதலாம் இராசராசன் காலத்திலிருந்தே மெய்க்கீர்த்தி கல்லில் வடிக்கப்பட்டது.
- ஒரு மன்னரின் ஆட்சிச் சிறப்பு, நாட்டு வளம் ஆகியனபற்றி ஒரு சேர உணர்த்துவதாகும்.

**3. இராசராசசோழன் மெய்க்கீர்த்தியில் எவற்றுக்கெல்லாம் உவமைப்படுத்தப்பட்டுள்ளான் .?**

- தாயில்லாதவர்க்குத் தாயாகவும்
- மகனில்லாதவர்க்கு மகனாகவும்
- தந்தையில்லாதவர்க்கு தந்தையாகவும்
- உலக உயிர்களுக்கு உயிராகவும்
- மொழி பெற்றபொருள், மெய்ப்பட்டபெற்ற அருள், விழிபெற்ற பயன், புகழ் பெற்ற நூல்

ஆகினவற்றுக்கெல்லாம் மெய்க்கீர்த்திகள் மூலம் உவமைப்படுத்தப் பட்டுள்ளன என்பதனை அறியலாம்.

**5. ‘படியானையே பிணிப்புண்பன**
**வடிமணிச்சிலம்பே யரற்றுவன’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல் :**

இராசராச சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதியில் இவ்வரிகள் இடம்பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :**

இராசராச சோழன் நாட்டில் யானைகள் பிணிக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் பிணிக்கப்படுவதில்லை. சிலம்புகள் புலம்புகின்றன. ஆனால் மக்கள் புலம்புவதில்லை.

**6. 'கயற்குலமே பிறழ்ந்தொழுகும்.**

**கைத்தாயரே கடிந்தொறுப்பர்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல் :**

இராசராச சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதியில் இவ்வரியில் இடம்பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :**

இராசராச சோழன் நாட்டில் குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன. ஆனால் மக்கள் நிலை பிறழ்வதில்லை. செவிலித்தாய் சினம் காட்டுவார். ஆனால் வேறு யாரும் சினம் கொள்வதில்லை.

---

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**2. இந்திரன் முதலாகத் திசைப்பாலர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றது போல் இரண்டாம் இரசாராச சோழன் தன் நாட்டில் ஆட்சி செலுத்தினான். அவன் நாட்டில் நிகழ்ந்தனவும் நிகழாதனவும் எவையெவை எனப் பட்டியலிடுக.**

இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்திக் கூறும் ஆட்சியில்

| நிகழ்ந்தன | நிகழாதன |
|---|---|
| யானைகள் மட்டுமே பிணிக்கப்பட்டன | மக்கள் பிணிக்கப்படவில்லை |
| சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன | மக்கள் புலம்புவதில்லை |
| ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன | மக்கள் கலக்கமடைவதில்லை |
| புனல் மட்டுமே தடுத்து அடைக்கப்படுகிறது | மக்கள் அடைக்கப்படுவதில்லை |
| மாங்காய் மட்டுமே வடுப்படுகிறது | மக்கள் காயப்படுவதில்லை |
| மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன | மக்கள் உரிமை பறிக்கப்படுவதில்லை |
| காடுகள் மட்டுமே கொடிகள் உடையவனாய் உள்ளன | மக்கள் கொடியவராய் இருப்பதில்லை |
| வண்டுகள் மட்டுமே தேனாகிய கள்ளை உண்கின்றன | மக்கள் கள் உண்பது இல்லை |
| மலை மூங்கிலில் மட்டுமே உள்ளீடு வெறுமையாய் உள்ளது | மக்கள் உள்ளங்களில் வெறுமை இல்லை |
| வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராகின்றன | மக்கள் போருக்குச் செல்வதில்லை |
| மலைகளே இருண்டு காணப்படுகின்றன | நாட்டில் வறுமை இருள் இல்லை |
| இளமான்களில் கண்களே மருள்கின்றன | மக்கள் கண்களில் மருட்சி இல்லை |
| குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன | மக்கள் நிலை பிறழ்ந்து இல்லை |
| செவிலித்தாயே சினம் கொள்வர். | மக்கள் சினம் கொள்வதில்லை |
| புலவர் பாட்டில் மட்டுமே பொருள் மறைந்து கிடைக்கின்றன | மக்கள் யாரும் பொருளை மறைப்பதில்லை |
| இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் | வேறு யாரும் ஆடிப் பாடுவதில்லை |

- ➢ இவையாவும் இரண்டாம் இராசராசன் ஆட்சியில் நிகழ்ந்தனவாகவும் நிகழாதனவாகவும் மெய்க்கீர்த்தி கூறுகிறது. மக்கள் அனைவருக்கும் மன்னன் தந்தையாக, தாயாக, மகனாக, உயிர்களுக்கு எல்லாம் உயிராகவும் விளங்கினான். புகழ் அனைத்திற்கும் தலைவனாகி, யாதுமாகி ஆட்சிபுரிகின்றான்.

## கற்பவை கற்றபின்

**உங்கள் ஊரில் உள்ள பண்டை வரலாற்றுச் சின்னங்களின் ஒளிப்பாடல்களைத் திரட்டி படத்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.**



மீனாட்சி கோவில்



அழகர் கோவில்



நாயக்கர் மகால்



திருப்பரங்குன்றம்

நாடு
ஏ

கவிதைப் பேழை

# சிலப்பதிகாரம்

*–இளங்கோவடிகள்*

NDR1GK

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்

**பாடலின் பொருள் :**

புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி ,குளிர்ந்த மனச்சாந்து, பூ நறுமணப் புகைப்பொருட்கள், அகில் முதலான மணப்பொருட்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால் வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்"

**பாடலின் பொருள் :**

இங்குப் பட்டு, பருத்தி நூல், முடி இவற்றினைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகள் உள்ளன. இங்குப் பட்டும் பவளமும், சந்தனமும் அகிலும், முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும் வளம் நிறைந்த அகன்ற வணிக வீதிகளும் உள்ளன. மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்,
மீன்விலைப் பரதவர், வெள் உப்புப் பகருநர்,
பாசவர், வாசவர், பல் நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்

**பாடலின் பொருள் :**

மருவூர்பாக்கத்தின் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் செய்கின்றனர்.

கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரம் கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
மண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்

**பாடலின் பொருள் :**

இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக் கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர். பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.

பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;
குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்

**பாடலின் பொருள் :**

இவ்வாறாகப் பழுதின்றிக் கைத்தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ஸ,ரி,க, ம, ப,த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களில் இருப்பிடங்களும் உள்ளன.

சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்

**பாடலின் பொருள் :**

இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

## நூற் குறிப்பு

- சிலப்பதிகாரம் = சிலம்பு +அதிகாரம். கண்ணகியின் சிலம்பால் எழுந்த கதையை முதன்மையாகக் கொண்டது.
- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
- இது முதன்மைக் காப்பியம் என்று கூறப்படுகிறது.
- மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது . புகார்க் கண்டம் 10 காதை; மதுரைக் காண்டம் 13 கதைகள்; வஞ்சிக் காண்டம் 7 காதைகளும் உள்ளன.
- முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப் பல்வேறு பெயர்களைக் கொண்டது.
- காலத்தாலும் கதைத் தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்ட சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியம் என வழங்குகின்றனர்.
- இந்நூலினை இயற்றியவர் இளங்கோவடிகள்

இந்நூல் மூன்று உண்மைக் கருத்துகளைக் கூறுகின்றன.

1. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏததுவர்.
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : இளங்கோவடிகள் |
| **இயற்பெயர்** | : குடக்கோச்சேரல் ,இளங்கோ |
| **பெற்றோர்** | : இமய வரம்பன் நெடுஞ்சேர லாதன் - நற்சோனை |
| **ஊர்** | : சேர நாடு, வஞ்சி மாநகரம் |
| **தமையன்** | : சேரன் செங்குட்டுவன் |
| **காலம்** | : கி.பி 2ஆம் நூற்றாண்டு |
| **சமயம்** | : சமண சமயம் |
| **சமகாலப் புலவர்கள்** | : சீத்தலைச் சாத்தனார் |
| **பெயர்க்காரணம்** | : அரச குடியில் பிறந்தாலும் இளமையிலேயே துறவு பூண்டதாலும் இளங்கோ என்ற பெயர் இளங்கோவடிகள் என அழைக்கப்பட்டார். |

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| தண் | - குளிர்ச்சி | நிணம் | - இறைச்சி |
| சுண்ணம் | - நறுமணப் பொடி | ஓசுநர் | - எண்ணெய் விற்பவர் |
| காருகர் | - நெசவாளர் | கருங்கை | - இரும்பு |
| தூசு | - பட்டு | மண்ணுள் வினைஞர் | - ஓவியர் |
| துகிர் | - பவளம் | துன்னக்காரர் | - தைப்பவர் |
| வெறுக்கை | - செல்வம் | இருக்கை | - இருப்பிடம் |
| நொடை | - விலை | நிறம் | - திறமை |
| பகிருநர் | - உமணர் | மறு இன்றி | - குற்றமின்றி |
| பாசவர் | - வெற்றிலை விற்பவர் | | |

## இலக்கணக் குறிப்பு அறிக

**எண்ணும்மை :**

வண்ணமும் சுண்ணமும், பூவும் புகையும், பட்டினும் மயிரினும், தூசும் துகிரும், ஆரமும் அகிலும், மணியும் பொன்னும், குழலினும் யாழினும்.

**பெயரெச்சம்**

தெரிந்த, குவித்த

| | |
|---|---|
| **வினையெச்சம்** | **- இசைத்து** |
| பருத்திநூல் | - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை |
| நன்கலம், அரும் பெறல் | - பண்புத்தொகை |
| அறியா | - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| செய்வினை, பயில் தொழில் | - வினைத்தொகை |

## பகுபத உறுப்பிலக்கணம்

**அ) மயங்கிய - மயங்கு + இ(ன்) +ய் +அ**

| | |
|---|---|
| **மயங்கு** | - பகுதி |
| **இ(ன்)** | - இறந்த கால இடைநிலை (ன் - புணர்ந்து கெட்டது) |
| **ய்** | - உடம்படு மெய்; |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

**ஆ) குவிந்த = குவி +த் (ந்) ,த் +அ**

| | |
|---|---|
| **குவி** | - பகுதி, |
| **த்** | - சந்தி; |
| **த்-ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இற்நதகால இடைநிலை; |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

**இ) இசைத்து = இசை +த் +த் +உ**

| | |
|---|---|
| **இசை** | - பகுதி; |
| **த்** | - சந்தி; |
| **த்** | - இறந்த கால இடைநிலை |
| **உ** | - வினையெச்ச விகுதி |

**ஈ)செறிந்த = செறி +த் (ந்) +த் +அ**

| | |
|---|---|
| **செறி** | - பகுதி; |
| **த்** | - சந்தி; |
| **த்- ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்த கால இடைநிலை; |

அ - பெயரெச்ச விகுதி

## பொருத்துக

அ) 1. கிழி - அ) நறுமணப் பொடி
2. துகிர் - ஆ) பட்டு
3. தூசு - இ) துணி
4. சுண்ணம் - ஈ) பவளம் **[விடை : 1- இ, 2-ஈ, 3-ஆ, 4-அ]**

ஆ) 1. சிற்பி - அ) மண்ணுள் வினைஞர்
2. ஓவியர் - ஆ) மண்ணீட்டாளர்
3. தொழில் - இ) கிழி
4. துணி - ஈ) வினை **[விடை : 1- ஆ, 2-அ, 3- ஈ, 4-இ]**

இ) 1. புகார்கண்டம் - அ)13
2. மதுரைக் காண்டம் - ஆ) 7
3. வஞ்சிக் காண்டம் - இ) 10 **[விடை 1-இ, 2-அ, 3-ஆ]**

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. பாசவர் வாசவர், பல நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?**

பாசவர் - வெற்றிலை விற்பவர்கள்
வாசவர் - நறுமணப் பொருட்களை விற்பவர்கள்
பல் நிண விலைஞர் - பல்வகை இறைச்சிகளை விலை கூறி விற்பவர்கள்.
உமணர் - உப்பு விற்பவர்

## சிறுவினா

**"பகர்வனர் திர்திரு நகரவீதியும்;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"**

**அ) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?**

சிலப்பதிகாரம்

**ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.**

பகர்வனர் - பட்டினும்

**இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.**

பட்டினும் மயிரினும் - கட்டு நுண்வினா

**ஈ) காருகர் - பொருள் தருக.**

நெய்பவர் - நெசவாளர்

**உ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?**

சந்தனமும் - அகிலும்

## நெடுவினா

**1. சிலப்பதிகார மருவூர் பக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக?**

- சிலப்பதிகாரம் மருவூர்ப் பாக்கத்து வணிக வீதிகளில் வண்ணக் குழம்பு, சுண்ணப் பொடி விற்பது போல இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் விற்கப்படுகின்றன. குளிர்ச்சி பொருந்திய சந்தனம், பூ வகைகள், ஊதுவத்தி அகில் போன்ற நறுமணப் பொருள்களும் இங்கு விற்கப்படுகின்றன.
- மருவூர்ப் பாக்க வீதிகளில் பொன், மணி, பவளம், முத்து விற்பனை செய்யப்பட்டது போல இன்றைய வணிக வளாகத்திலும் நகைக் கடைகளிலும் விற்கப்படுகிறது
- அன்று வணிக வீதிகளில் குவியலாகக் கிடந்தது. தானிய வகைகள். இன்று அங்காடிகளில் தானிய வகைளை எடைபோட்டு விற்பனை செய்கின்றனர். மருவூர்ப்பாக்கத் தெருக்களில் செய்யப்பட்டது போல், இன்றைய அங்காடிகளிலும் விற்கப்படுகிறது.
- வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப் பொருட்கள், இரும்புப் பொருட்கள் கிடைப்பதைப் போல, இன்றைய அங்காடிகளிலும் விற்கப்படுகின்றது. கூடுதலாக பல நவீனப் பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள (நெகிழி) பொருட்கள், நவீன அலங்காரங்களுடன் கிடைக்கின்றன.
- மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் செய்பவர், தையற்காரர், துணியாலும் கட்டையாளும் பொம்மை செய்பவர்கள் என பல கைவினைஞர்கள் வாழ்ந்து வந்தனர். இதைப் போலவே இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் இத்தகைய தொழில் வல்லுநர்களும், அழகு மிளிர கைவினைப் பொருள்களைச் செய்து விற்பனையும் செய்கின்றனர்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?**

- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
- ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

**2. மருவூர்ப்பாக்கத்தில் எவ்வித மணப்பொருள்கள் வணிகம் செய்தனர் ?**

- வண்ணக் குழம்பு
- நறுமணப் புகைப்பொருள், பூ
- சுண்ணப் பொடி

**3. ஏழு இசைகள் யாவை ?**

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

**4. மரூவூரப் பாக்கத்தில் வணிகம் செய்யும் விலை உயர்ந்த பொருள்கள் யாவை ?**

பட்டு, பவளம், சந்தனம், அகில், முத்து, மணி, பொன் முதலியன

**5. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் யாவை ?**

- முதல் காப்பியம்
- ஒற்றுமைக் காப்பியம்
- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்

**6. கூலம் குவிந்த கூல வீதியும் தொடர் பொருள் கூறுக**

மருவூர்பாக்கத்தின் எட்டு வகைத் தானியங்களும் குவித்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்கள் உள்ளன.

**7. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை ?**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

**9. எண்வகைக் கூலமாவன யாவை?**

நெல், புல், வரகு, திணை, சாமை, இருங்கு, துவரை, மூங்கில் ஆகியன எண்வகைக் கூலங்களாகும்.

**10. மருவூப்பாக்கத் தெருக்களில் என்னென்ன வியாபாரங்கள் நடைபெற்றன?**

பிட்டு, அப்பம், கள், மீன், உப்பு, வெற்றிலை, நறுமணப் பொருள்கள், பல்வகை இறைச்சிகள், எண்ணெய் ஆகிய பொருள்களின் வியாபாரங்கள், மருவூர்ப்பாக்கத் தெருக்களில் நடைபெற்றன.

**11. மருவூர்ப்பாக்கத் தெருக்களில் எத்தகைய கடைகள் இருந்தன?**

வெண்கலம், செம்புப்பாத்திரக் கடைகள், பொன் ஆபரணங்கள், இரத்தினங்கள் பதிக்கப்பட்ட கடைகள் ஆகிய கடைகள் மருவூர்ப்பாக்கத் தெருவில் இருந்தன.

**12. ஏழிசைக்குரிய சுரங்களைக் கூறுக.**

குரல் - ஸ, துத்தம் - ரி, கைக்கிளை - க, உழை - ம, இளி - ப, விளரி - த, தாரம் - நி ஆகியவை, ஏழிசைக்குரிய சுரங்களாகும்.

**13. மதுரையில் கணவனை இழந்த கண்ணகி எங்குச் சென்றடைந்தாள்?**

மதுரையில் கணவனை இழந்த பின்னர்க் கண்ணகி, வைகை ஆற்றின் தென்கரை வழியே நடந்து சுருளிமலை என்னும் நெடுவேள் குன்றத்தை அடைந்து, வேங்கைக்கானல் என்னும் இடத்தை அடைந்தாள்.

**14. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் விளக்குக.**

- உரையிடையிட்ட பாட்டுடை என்பது ‘உரைப்பாட்டு மடை’ என்னும் தமிழ்நடை.
- இது சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகிறது.
- உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு என்பது பொருளாகும்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. இளங்கோவடிகள் குறிப்பு வரைக**

<u>ஆசிரியர்குறிப்புகள்</u>

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | இளங்கோவடிகள் |
| **இயற்பெயர்** | : | குடக்கோச்சேரல் ,இளங்கோ |
| **பெற்றோர்** | : | இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் - நற்சோனை |
| **ஊர்** | : | சேர நாடு - வஞ்சி மாநகரம் |
| **தமையன்** | : | சேரன் செங்குட்டுவன் |
| **காலம்** | : | கி.பி 2ஆம் நூற்றாண்டு |
| **சமயம்** | : | சமண சமயம் |
| **சமகாலப் புலவர்கள்** | : | சீத்தலைச் சாத்தனார் |
| **பெயர்க்காரணம்** | : | அரச குடியில் பிறந்தாலும் இளமையிலேயே துறவு பூண்டதாலும் இளங்கோ என்ற பெயர் இளங்கோவடிகள் என அழைக்கப்பட்டார். |

**2. சிலப்பதிகாரம் குறிப்பு வரைக**

- சிலப்பதிகாரம் = சிலம்பு + அதிகாரம் கண்ணகியின் சிலம்பால் எழுந்த கதையை முதன்மையாகக் கொண்டது.
- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
- இது முதன்மைக் காப்பியம் என்று கூறப்படுகிறது.
- மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது. புகார்க கண்டம் 10 காதை; மதுரைக் காண்டம் 13 கதைகள்; வஞ்சிக் காண்டம் 7 காதைகளும் உள்ளன.
- முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என பல்வேறு பெயர்களைக் கொண்டது.
- காலத்தாலும் கதைத் தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்ட சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியம் என வழங்குகின்றனர்.
- இந்நூலினை இயற்றியவர் இளங்கோவடிகள்.

இந்நூல் மூன்று உண்மைக் கருத்துகளைக் கூறுகின்றன.

1. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏததுவர்.
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

**4. ‘பால்வகை தெரிந்த பகுதிப் பாண்மொடு**
**கூலம் குவித்த கூல வீதியும்’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் சுட்டல் :**

சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் இந்திர விழா ஊரெடுத்த காதையில் மருவூர்ப்பாக்கத் தெருக்களில் நடைடெற்ற வணிகம் பற்றிக் கூறுமிடத்தில் இவ்வரிகள் இடம் வருகின்றன.

**பொருள் விளக்கம் :**

மருவூர்ப்பாக்கத் தெருக்களில் பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலத்தெருக்களும் உள்ளன.

**5. மருவூர்ப்பாக்கத்தில் அமைந்த வீதிகள் குறித்து எழுதுக.**

மணப்பொருள்கள் விற்கும் வீதிகள், கைத்தொழில் வல்ல நெசவாளர்கள் வாழும் வீதிகள், பல்வேறு பண்டங்களின் விற்பனை நடைபெறும் வீதிகள், எட்டுவகைத் தானியங்கள் குவிந்த கூலக்கடைத் தெருக்கள், பிட்டு, அப்பம், மீன், இறைச்சி விற்கும் வீதிகள், பாணர்கள், சிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வீதிகளும் மருவூர்ப்பாக்கத்தில் அமைந்திருந்தன.

---

## கூடுதல் வினாக்கள் - நெடுவினா

**1. சிலப்பதிகார மரூவூர்ப்பாக்கத்தில் நடைபெற்ற வணிகங்கள் பற்றிவிளக்கிக் கூறுக**

- புகார் நகர மருவூர்ப்பாக்கத்திலவணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப் பொடி குளிர்ந்த மனச்சாந்து, பூ, நறுமணப் புகைப் பொருள்கள், அகில் முதலான மணப்பொருள்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டியிருக்கின்றனர்.
- இங்குப் பட்டு, பருத்தி, நூல், முடி இவற்றினைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளார் வாழும் வீதிகள் உள்ளன. இங்குப் பட்டும் பவளமும், சந்தனமும், அகிலும்,

முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

- மருவூர்ப்பாக்கத்தில் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.
- இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக் கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர். பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்கார், தோல் பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.
- இவ்வாறாகப் பழுதின்றிக் கைத்தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைகள் (ஸ,ரி ,க,ம,ப,த ,நி என்னும் எழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்து சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.
- இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தில் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

## கற்பவை கற்றபின்

**1. சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.**

காவிரிப்பூம்பட்டினத்துப் பெரு வணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன். காவிரிப்பூம்பட்டினத்து பெருவணிகர் மாநாய்கனின் மகள் கண்ணகி. இவள் திருமகள் போன்ற அழகும், கற்புத்திறனும் மிக்கவள். இவ்விருவரும் மனையறம் பூண்டு இனிமையாக வாழ்ந்நதனர். கோவலன் ஆடலரசி மாதவியை விரும்பியதால் கண்ணகியை விட்டுப் பிரிந்தான். தன் செல்வத்தையெல்லாம் இழந்தான். மாதவி இந்திர விழாவில் கானல் வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்து கொண்டு கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்தான். பிரிந்தவன் தன் மனைவி கண்ணகியுடன் இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணி வணிகம் செய்யும் பொருட்டு மதுரையை நோக்கிச் சென்றான்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் வழித்துணையாக சமணத்துறவி கவுந்தியடிகள் சென்றார். மதுரையில் இடையர் குல மூதாட்டியான மாதரியின் வீட்டில் அடைக்கலப் படுத்தினார் கவுந்தியடிகள். கோவலன் சிலம்பு விற்றுவர மதுரை நகரக் கடைவீதிக்குச் சென்றான். விலைமதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றனைக் கோவலன் விற்பதனைப் பாண்டிய மன்னனின் பொற் கொல்லன் அறிந்தான்.

பாண்டி மாதேவியின் காற்சிலம்பைக் களவாடியப் பொற்கொல்லன் பொய்யான பழியைக் கோவலன் மேல் சுமத்தினான். அதனை ஆராய்ந்து பாராத மன்னன் அவனைக் கொன்று சிலம்பைக் கொணர்க என ஆணையிட்டான். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதிரி மூலம் அறிந்த கண்ணகி பெருந்து யருற்றாள். அவள் தன் கணவன் கள்வன் அல்லன் என மன்னனுக்கும் உலகத்தார்க்கும் உணர்ந்த எண்ணி பாண்டிய மன்னன் அவைக்குச் சென்று வழக்குரைத்தாள். மன்னன் தன் தவறை உணர்கிறான். தவறுக்கு தன் இன்னுயிரையும் ஈந்தான்.

**2. சிலப்பதிகாரம் காட்டும் மரூவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத் தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக .**

**கனி :** மரூவூர்பாக்கத்தில் கடை வீதிகளில் உள்ளது போல் இன்றைய கடைத் தெருவுடன் நடைபாதைகளாக உள்ளன.

**மணி :** அன்றைய நாள்களில் தெருக்களில் அனைத்துப் பொருள்களும் விற்பனை செய்தது போல் நடுத்தர மக்களுக்கும் கடைத்தெருக்கள் வசதியாக உள்ளன.

**கனி :** கடைத்தெருக்களில் உள்ள பொருள்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும். மரூவூர்பாப்பத்திலும் பொருள்கள் குறைந்த விலையிலும், பண்ட மாற்று முறையிலும் நடந்தன.

**மணி :** மரூவூர்ப்பாக்கத்தில் நெசவாளர் வீதி, வணிக வீதி, கூலக்கடைத்தெரு என ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியே வீதி அமைப்புகள் இருந்தன.

---

விரிவானம்

## நாடு எ

## மங்கையராய்ப் பிறப்பதற்கே...

NSZZG9

### பாடநூல் வினா

**1. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக**

**மகளிர் நாள் விழா**

**இடம் :** பள்ளிக் கலையரங்கம் **நாள் :** 8.3.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

**மகளிர் நாள் விழா**

எம் பள்ளிக் கலையரங்கில் 8.3.2019 அன்று மகளிர் நாள் விழா நடைபெற்றது. அவ்விழாவினைப் பற்றிய அறிக்கையாவது.

**இடம் :** பள்ளி கலையரங்கம்

**நாள் :** 08.03.2019

மார்ச் 8 ஆம் நாள் 2019 ஆம் ஆண்டு திருவில்லிபுத்தூர் உள்ள தியாகராசர் மேல் நிலைப்பள்ளி கலையரங்கத்தில் மகளிர் நாள் விழா கொண்டாடப்பட்டது.

காலை 10 மணியளவில் தொடங்கிய இவ்விழாவில் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். இப்பள்ளியின் தலைமையாசிரியர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி.பாரதி பாஸ்கர் அவர்கள் பெண்களுக்கான உரிமைகள் பற்றியும் சமுதாயத்தில் முன்னேறியுள்ள சில பெண்களைப் பற்றியும் மாணவர்களுக்கு நல்ல அறிவுரைகளையும் வழங்கினார். பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் பல நடந்தன. பள்ளியின் உதவித் தலைமையாசிரியர் அவர்கள் சிறப்பு விருந்தினரையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் வாழ்த்திப் பேசினார். பின்பு பள்ளியின் மாணவத் தலைவன் நன்றியுரை கூறினார். இந்நிகழ்ச்சி காலை 12.30 மணியளவில், நாட்டுப்பண் முழங்க இனிதுடன் விழா நிறைவடைந்தது.

## கூடுதல் வினாக்கள் - கட்டுரை வடிவில்

**1. சமுதாயத்தில் உழைத்த மகளிர் பற்றிக் கட்டுரை வடிவில் எழுதுக**

**முன்னுரை :**

சமுதாயக் கொள்கைக்காக, மூட நம்பிக்கைகளுக்காக, விடுதலைக்காக, எண்ணற்ற கொடுமைகளுக்காக போராட்டம் நடத்திய தியாகிகள் பலர் இருந்தனர். இவர்களில் பெண்களும் அடங்குவர். வாழ்வில் முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். என்ற எண்ணம் கொண்டு வெற்றியும் பெற்றவர்கள் பல சாதனைகளையும் சமுதாயத்தில் புரிந்துள்ளார்கள். அவர்களில் சிலரைப் பற்றி பின் வருமாறு காணலாம்.

**முகில்நாச்சி**

இசையால் வளர்ந்த எம்.எஸ். சுப்புலட்சுமி இசை மேதை ஆனார். 17 வயதில் கச்சேரியில் பாடி பலரின் பாராட்டைப் பெற்றார் . காந்தியடிகள் முன் இரகுதி இராகவ இராஜாராம் என்ற பாடலைப் பாடினார். 1947 இல் சென்னை வானொலியில் ஹரிதும் ஹரோ என்னும் மீரா பஜன் பாடலைப் பாடினார். 1954 இல் தாமரையணி விருதும்,1974இல் மகசேச விருதும் இந்திய மாமணி விருதும் பெற்றர். இவர் தெலுங்கு, இந்தி, சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், இந்தி, குஜராத்தி, ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் பாடியுள்ளார்.

**மோகனா**

பரதக்கலையில் சிறந்தவர். இவர் 15 ஆவது அகவையில் சென்னையில் சங்கீத சமாஜம் அரங்கில் தனது நடன நிகழ்வை நடத்தினார். காசி மற்றும் கல்கத்தாவிலும் நடந்த மாநாட்டிலும் இந்திய தேசிய காங்கிரஸ் கண் காட்சியிலும் நம் நாட்டுப் பண்ணாகிய ஜனகனமன பாடலுக்கும் ஆடினார். அமெரிக்கா ஐரோப்ப முதலிய நாடுகளில் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

**வளர்மதி**

ஒரு சமுதாய எழுத்தாளர். சமுதாயத்தில் ஏற்படும் இன்னல்களைப் பற்றி கதைகளாகவும் புதினங்களாகவும் எழுதக் கூடியவர். "பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி" என்னும் வரலாற்றுப் புதினத்தை எழுதி வெளியிட்டுள்ளார். தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையை "கரிப்பு மணிகள்" என்ற புதினமும் படுகர் இனமக்களின் வாழ்வியலை "குறிஞ்சித்தேன்" என்ற புதினமும் மீனவர்களின் சிக்கல்களை "அலை வாய்க்கரையில் என்ற புதினமும் வேளாண் தொழிலாளரின் உழைப்புச் சுரண்டலை "சேற்றில் மனிதர்கள் வேருக்குநீர்" என்ற புதினமும் எழுதியுள்ளார்.

**அன்பரசி**

காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் முதலியவற்றில் பங்கு பெற்றவர் அன்பரசியாகிய கிருஷ்ணம்மாள், ஜெகந்நாதன் அவர்கள். உழுபவருக்கே நில உரிமை இயக்கம் எனத் தொடங்கி வேளாண் தொழில் இல்லாத காலத்திலும் உழுபவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர்.

**மாதவி**

மகளிரின் வாழ்விற்காகவே மேம்பாடு அடைய பாடுபட்டார். பெண்களோடு பெண்களாகப் பணி செய்து கூலியைச் சரிசமமாகப் பங்கிடக் கூடியவர். மாற்றுத் திறனாளிக்கும், வயதானவர்களுக்கும் திறமைக்கும் ஏற்ப வேலை வாய்ப்பும், அவர்களின் குடும்பங்களுக்கு ஏற்ப உதவியாகவும் இருப்பவர். முந்நாள் பாரதப் பிரதமரான வாஜ்பாயிடம் பெண் ஆற்றல் என்ற விருது, இந்திய அரசு சார்பாகவும் "ஔவை" என்ற விருது தூர்தர்ஷனின் பொதிகை விருதையும் தமிழக அரசு சார்பாகவும் பெற்றவர்.

**முடிவுரை**

"பெண்கள் வீட்டின் கண்கள்", பெண்களைத் தாயாகவும் தெய்வமாகவும் போற்றுகிறார்கள். இத்தகைய பெண்கள் சமுதாயத்தில் தங்களின் முயற்சியாலும் திறமைகளினாலும் சாதித்துள்ளனர் என்பதற்கு மேற்கண்ட பெண்களே சான்றாகக் கருதலாம்.

## கற்பவை கற்றபின்

**உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் சிறப்பு மிக்கவர் - போற்றத் தக்கவர் என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக.**

**(குறிப்பு : பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர் )**

எங்கள் ஊரில் கண்ணன் என்பவர் கடுமையாக உழைத்து வாழ்வில் உயர்ந்த மனிதர் .இவருக்கு இரு குழந்தைகள் ஆண் ஒன்று பெண் ஒன்று. இவர் சாலை ஓரம் இட்டிலிக் கடை நடத்தி வருகிறார். அன்றாடப் பல மனிதர்களைச் சந்திகிறவர். வாழ்வில் பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்தார்.

பல துன்பங்களைப் பெற்றும் தன் குழந்தைகள் ஒழுக்கத்துடன் அறிவுடனும் வளர்த்தவர். இவர் பெற்ற துன்பங்களைப் பிள்ளைகள் பெறக்கூடாது என்பதற்காக துன்பத்தையே தன் ஊன்று கோலாக எண்ணி உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டார். "உழைப்பே உயர்வு தரும்" என்பதற்கு ஏற்ப உழைப்பே உயிர் மூச்சாய்க் கொண்டு வாழ்ந்தவர் ஒரு மகன் மருத்துவராகவும் மற்றொரு மகன் மாவட்டத்தையே ஆட்சி செய்பவராகவும் உயர்ந்த நிலையை அடைவதற்கு கண்ணனின் உழைப்பும், விடா முயற்சியும் காரணமாக அமைந்தது.

---

கற்கண்டு

# நாடு ஏ புறப்பொருள் இலக்கணம்

P8IUHK

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1.இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்.**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**[விடை : வலிமையை நிலைநாட்டல்]**

## குறுவினா

**1. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப் படுத்துக**

| புறத்திணை | எதிர்திணை |
|---|---|
| வெட்சி | - கரந்தை |
| வஞ்சி - | - காஞ்சி |
| நொச்சி | - உழிஞை |
| தும்பை - | - வாகை |
| பாடாண் | - பொதுவியல் |
| கைக்கிளை | - பெருந்திணை |

## பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. வெட்சித்திணை | - (அ) கோட்டையைக் காத்தல் | 1. (இ) |
| 2. கரந்தைத் திணை | - (ஆ) எதிர்ததுப் போரிடல் | 2. (எ) |
| 3. வஞ்சித்திணை | - (இ) ஆநிரை கவர்தல் | 3. (உ) |
| 4. காஞ்சித் திணை | - (ஈ) மதில் வளைத்தல் | 4. (ஆ) |
| 5. நொச்சித் திணை | - (உ) மண்ணாசை காரணமாக போர் | 5. (அ) |
| 6. உழிஞைத்திணை | - ( ஊ ) இருதிறத்து வீரமும் போரிடுவது | 6. (ஈ) |
| 7. தும்பைத் திணை | - ( எ) ஆநிரை மீட்டல் | 7. (ஊ) |

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. புறத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

- புறத்திணைகள் பன்னிரண்டு வகைப்படும்
- அவை : வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை.

**2. பாடாண் திணையை விளக்குக.**

- பாடு +ஆண் +திணை = பாடாண் திணை
- பாடப்படும் ஆண்மகனாது, கல்வி, வீரம், புகழ், செல்வம், ஈகை முதவியவற்றைப் போற்றிப் பாடுவதாகும்

**3. பூக்கள் இடம் பெறாத புறத்திணைகள் எத்தனை? அவை யாவை ?**

பூக்கள் இடம் பெறாத புறத்திணைகள் நான்கு

- பாடாண் திணை
- பொதுவியல் திணை
- கைக்கிளை
- பெருந்திணை

**4. பொதுவியல் திணை என்பது யாது?**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளுக்குபொதுவானவற்றையும் அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**5. மதில் போர் பற்றிய திணைகள் யாவை?**

- நொச்சித்திணை
- உழிஞைத் திணை

**6. ஆநிரை பற்றிய திணைகள் யாவை?**

- வெட்சித்திணை
- கரந்தைத் திணை

**7. புறப்பொருள் பற்றி உரையாடியவர்களைக் கூறுக.**

- கிள்ளி வளவன்
- சேரலாதன்

**9. நொச்சிப் பூக்களின் வகைகளைக் குறிப்பிடுக.**

மணிநொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்நொச்சி - போன்றவையாகும்.

**10. போரிடும் அரசர்கள் இருவரும் ஒரே வகைப்பூவைச் சூடுவர் - எப்போது? எவ்வகைப்பூ?**

பகைமன்னர் இருவரும் வலிமை பெரிது என்று நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவர்.

**11. தொல்காப்பியர் காலத்தில் அகத்திணையாக இருந்து புறத்திணையாக்கப்பட்ட திணைகள் யாவை?**

கைக்கிளை, பெருந்திணை.

**12. எதிர் எதிர் புறத்திணைகள் யாவை?**

- வெட்சித்திணை (கவர்தல்)
- காஞ்சித்திணை (எதிர் போரிடல்)
- கரந்தைத்திணை (மீட்டல்)
- நொச்சித்திணை (கோட்டை காத்தல்)
- வஞ்சித்திணை (மண்ணாசை கருதிப் போரிடல்)
- உழிஞைத்திணை (கோட்டை முற்றுகையிடல்)

**13. வெற்றிப் பூ எது? விளக்குக.**

வெற்றிப்பூ : வாகை

போரில் வெற்றி பெற்ற மன்னனுக்கு வாகைப்பூ சூடி மகிழ்வர்.

**14. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெரும்போர் நடக்கின்றது. இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணம் வழி விளக்குக.**

**புறுப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணம் :**

பகைமன்னர் இருவரும் வலிமை பெரிது என்று நிலைநாட்ட, தம் வீரர்களுக்கு தும்பைப் பூவைச் சூடி போரிடுவர். இது தும்பைத் திணை.

**விளக்கம் :**

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் தங்கள் வலிமை பெரிது என்று நிலைநாட்ட தம் வீரர்களுடன் போரிடுவதால், இதனைத் தும்பைத் திணையாகக் கொள்ளலாம்.

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.**

1. இத்தொடருக்கான பொருத்தமான திணையானது வஞ்சித்திணை ஆகும்
2. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணையாகும்.

அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் பகை கொண்டு போர்புரிந்து மருத நாட்டைக் கைப்பற்ற நினைப்பதால் இந்நிகழ்வு "வஞ்சித்திணையாகும்".

**1. அகம், புறம் இரண்டு திணைகளிலும் வரும் பொதுவான திணைகள் யாவை? விளக்குக.**

பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது பாடாண்திணை ஆகும். வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளல் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணை ஆகும். கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.

**2. அவந்தி நாட்டு மன்னன் மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டினைக்** கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வை புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தில் படி விளக்குக.

**வெட்சித்திணை :** மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர். ஒரு குழுவினரிடமிருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது.

ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். ஆநிரை கவர்தல் வெட்சித்திணை எனப்பட்டது.

**கரந்தைத்திணை :** கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச்செல்வர். அப்போது கரந்தைப் பூவைச் சூடிக்கொள்வர். அதனால் கரந்தைத் திணை என்று பெயர் பெற்றது.

**வஞ்சித்திணை :** மண்(நாடு) சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று. மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி போருக்கு செல்வது.

**காஞ்சித்திணை :** தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை

**நொச்சித்திணை :** மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன. கோட்டையைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடி உள்ளிருந்தே போரிடுவது நொச்சித்திணை.

**உழிஞைப் பூவை :** உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை

**தும்பைத் திணை :** பகைவேந்தர் இருவரும் வலிமை பெரிது என்பதை நிலைநாட்ட தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை.

**வாகைத் திணை :** போரிலே வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை ஆகும்.

**பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன். **எ.கா :** இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன்.

**அ) இல்லாமல் இருக்கிறது :**

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே ஏரி, குளங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது.

**இ) கொஞ்சம் அதிகம் :**

இன்று வெய்யில் நேற்றை விட கொஞ்சம் அதிகம்.

**ஈ) முன்னுக்குப்பின் :**

கையும் களவுமாக மாட்டிக்கொண்ட திருடன் முன்னுக்குப்பின் முரணாகப்பேசினான்.

**உ) மறக்க நினைக்கிறேன் :**

கடந்தாண்டு எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை மறக்கநினைக்கிறேன்.

## மொழியை ஆள்வோம்

### படித்தும் பார்த்தும் சுவைக்க



ஏர்பிடிக்கும் கைகளுக்கே
வாழ்த்துக் கூறுவோம் - வறுமை
ஏகும் வரை செய்பவர்க்கே
வாழ்த்துக் கூறுவோம்!என்றும்
ஊர் செழிக்கத் தொழில் செய்யும்
உழைப்பாளிகள் - வாழ்வு
உயரும் வகை செய்பவர்க்கே
வாழ்த்துக் கூறுவோம்! - கவி. கா.மு. ஷெரீப்

## மொழி பெயர்க்க

Among the five geographical divisions of the Tamil country in Sangam Literature, the Marutam region was the fit for cultivations, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

தமிழ் நாட்டில் உள்ள சங்கத்தமிழ் இலக்கியங்களில் ஐந்து புவியியல் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் மருத நிலப்பகுதி உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் இருந்தது. ஆந்த நிலப்பகுதியில் உழவர்களின் வளமை, சூரிய ஒளி, பருவத்தாலே மழை, மண் வளம் முதலியவற்றை நம்பி இருந்தது . பழங்காலத் தமிழர்களின் கணிப்புப்படி இயற்கை உறுப்புகளிலும் சூரிய ஒளியே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க

(வரப் போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்)

1. இன்னும் சிறிது நேரத்தில் **வரப்போகிறேன்**.
2. எங்கள் ஊர் முன்னேற்றம் **இல்லாமல் இருக்கிறது**
3. எங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு சுட்டித்தனம் **கொஞ்சம் அதிகம்**
4. காவல் துறையினரிடம் திருடன் **முன்னுக்குப் பின்** முரணாகப் பேசினான்
5. எனக்குத் துரோகம் செய்தவர்களை நிரந்தரமாக **மறக்க நினைக்கிறேன்**.

## தொகைச் சொற்களை பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

| தொகைச்சொல் | எண்ணுரு | தொகைச்சொல் விரி |
|---|---|---|
| 1. இருதிணை | உ | உயர்திணை, அஃறிணை |
| 2. முத்தமிழ் | ங | இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| 3. முப்பால் | ங | அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் |
| 4. நாற்றிசை | ச | கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு |
| 5. ஐந்திணை | ரு | குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை, பாலைத்திணை |
| 6. அறுசுவை | சா | இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு |

## கடிதம் எழுதுக

**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர் :**

இரா. மணிகண்டன்,
67,வடக்கு மாசி வீதி,
மதுரை-1.

**பெறுநர் :**

ஆசிரியர் அவர்கள்,
தி இந்து நாளிதழ் ,
மதுரை-2.

**மதிப்பிற்குரிய ஐயா**

**பொருள்:- "பொங்கல் மலரில்" என் கட்டுரையை வெளியிட வேண்டுதல் சார்பாக.**

**வணக்கம் :**

தங்கள் நாளிதழின் சார்பாக பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளியிடும் பொங்கல் மலருக்காக "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளேன். அக்கட்டுரையைத் தங்களுக்கு அனுப்பிள்ளேன். அதனைப் படித்துப் பார்த்தால், உழவர்களைப் போற்றதும் கருத்தினை தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளேன். இதன் சிறப்பினை உணர்ந்து தாங்கள் என் கட்டுரையைத் தங்கள் நாளிதழ் சார்பாக வெளியிடுகின்ற சிறப்பு மலரில் வெளியிட ஆவன செய்யும் படி தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இடம் : மதுரை — இப்படிக்கு,
நாள் :- 24.4.2019 — இரா. கண்ணன்.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர் :**

ஆசிரியர் அவர்கள்,
தி இந்து நாளிதழ் ,
மதுரை-2.

---

## கவிதையை உரையாடலாக மாற்றுக

**மகள் சொல்லுகிறாள் :**

அம்மா என் காதுக்கொரு தோடு - நீ
அவசியம் வாங்கி வந்து போடு!
சும்மா இருக்க முடியாது - நான்
சொல்லி விட்டேன் உனக்கு இப்போது!

**தாய்சொல்லுகிறாள் :**

காதுக்குக் கம்மல் அழகன்று - நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகுபணிவாய் -நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்!

**மகள் மேலும் சொல்லுகிறாள் :**

கைகிரண்டு வளையல் வீதம் - நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
பக்கியென் றென்னை யெல்லோரும் - என்
பாடசாலையில் சொல்ல நேரும்!

**<u>தாய் சொல்லும் சமாதானம்</u> :**

வாரா விருந்து வந்த களையில் - அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதிதுலங்கு - பெண்ணே
அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!

**<u>பின்னும் மகள்</u>**

ஆபரணங்கள் இல்லை யானால் - என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் - என்
குறைதவிர்க்க முடியும்

**<u>அதற்குத் தாய்</u> :**

கற்பது பெண்களுக்கா பரணம்- கெம்புக்
கல் வைத்த நகைதீராத ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு - தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு

- பாரதிதாசன்.

**<u>மகள்</u> :**

அம்மா! என் காதுக்குஒரு தோடு வாங்கித் தாங்கம்மா !தோடு இல்லாமால் வெறுங்காத்தோடு என்னால் இருக்க முடியாது. சொல்லிட்டேன்.

**<u>அம்மா</u> :**

மகளே! காதுக்கு கம்மல் அழகல்ல. நான் இப்பபோது கூறுவதை நன்றாகக் கவனி . சான்றோரின் மொழிகளை பணிவுடன் கேட்டு உன் காதில் அணிந்து கொள்.

**<u>மகள்</u> :**

கைக்கு இரண்டு வளையல்கள் கடன் வாங்கியாவது எனக்கு வாங்கித்தா அம்மா. பக்கி வளையல் இல்லையா என்று பள்ளியில் என்னை எல்லோரும் கேலி செய்கிறார்கள்.

**<u>அம்மா</u> :**

மகளே! வராத விருந்தினர் கூட வந்தாலும் கையில் வளையல் அணிந்துதான் உபசரிக்க வேண்டும் என்பதில்லை. அறிவார்ந்த மகளே கேள்! அவர்கள் சொல்லும் வளையலானது உனக்கு கைவிலங்கு ஆகும்.

**<u>மகள்</u> :**

அணிகலன்கள் இல்லாமல் சென்றால் என்னை யாரும் தெருவில் மதிக்க மாட்டார்கள். யார் தான் என்னை மதிப்பர்? இதைச் சொன்னால் உனக்கு கோபம் வருகிறது நீ நினைத்தால் என் குறையைப் போக்க முடியும்.

**<u>அம்மா</u> :**

கல்விதான் பெண்களுக்கு உண்மையான அணிகலனாகும். சிவப்பு இரத்தினக்கல்வைத்த நகை ஆராத ரத்தத்தைப் போன்றது. கல்வியைக் கற்ற பெண்களை இந்த நாடு கண்ணுக்குள் வைத்துப் போற்றும் என்பதனை உணர்ந்து கொள்.

## மொழியோடு விளையாடு

### ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக

| | | | |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | - தஞ்சை | புதுச்சேரி | - புதுவை |
| புதுக்கோட்டை | - புதுகை | கும்பகோணம் | - குடந்தை |
| திருச்சிராப்பள்ளி | - திருச்சி | திருநெல்வேலி | - நெல்லை |
| உதகமண்டலம் | - உதகை | மன்னார்குடி | - மன்னை |
| கோயம்புத்தூர் | - கோவை | மயிலாப்பூர் | - மயிலை |
| நாகப்பட்டினம் | - நாகை | சைதாப் பேட்டை | - சைதை |

## படம் தரும் செய்தியை பத்தியாக தருக


வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி

பகை கொண்ட இரு நாட்டு அரசர்களும் எதிர்த்துப் போரிட்டு பகைவர்களின் நாட்டினைக் கைப்பற்றவேண்டும் எண்ணத்தோடு செல்வதாக அமைந்துள்ளது. கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவினைச் சூடிக் கொண்டு போர்ப் பாறையை முழங்குவது போல் காட்சி அளிக்கிறது. முப்படைகள் மட்டுமே போருக்குச் செல்வது போல் காட்சியளிக்கப்பட்டுள்ளது. இப்படம் நெல்லை மாவட்டம் திருப்புடை மருதூரில் உள்ள 17 ஆம் நூற்றாண்டு சுவரோவியம் ஆகும்.

## அகராதியில் காண்க

| | | | |
|---|---|---|---|
| மிரியல் | - மிளகு | வருந்தனை | - பெருகுதல் |
| அதசி | - சணல் | துரிஞ்சல் | - உசில மரம், வௌவால் வகை |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



வைகறையில் துயில் எழுந்து
வயலிலே உழவு செய்து
நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த
பசித்தவனுக்குப் பசியாற்ற
சந்ததிகள் செழித்து வளர
கரம் நீட்டிக் கொடுக்கும் வள்ளலே உழவன்
உழைப்பவன் அழகன்
உழைப்பவன் ஒப்பில்லா அன்னையாவான்
உழைப்போம் உழவரைப் போற்றுவோம்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Consulate | - துணைத்தூதரகம் | Guild | - வணிகக் குழு |
| Patent | - காப்புரிமை | Irrigation | - பாசனம் |
| Document | - ஆவணம் | Territory | - நிலப்பகுதி |

## நிற்க அதற்குத் தக

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த, பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அது போல கோவில்களும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும். அவைநாம் பழம் பெருமையும் வரலாற்றையும் அறியச் செய்யும் ஆவணங்கள் என்று அறிவீர்கள் தானே? இவற்றைப் பராமாரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்.

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன். |
| கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | வரலாற்று சாசனம் என்பபை உணரச் செய்வேன். |
| கோவில்களில் உள்ள கல்வெட்டுச் செய்திகளை மக்களுக்கு எடுத்துறைப்பதுடன் வரலாற்றின் பெருமைகளையும் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பேன் | நினைவுச் சின்னங்கள் திருடு போவதற்கு அனுமதிக்க மாட்டேன். |

## இயல் 7

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. ‘மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்’ - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை __________ , __________
2. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் __________
3. "வெள்ளி முளைத்திடுது விரைந்து போ நண்பா" என்று பாடியவர் __________.

II. விடையளி: 3x2=6

4. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
5. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
6. மதில் போர் பற்றிய திணைகள் யாவை?

III. விடையளி: 2x4=8

7. மார்ஷல் ஏ. நேசமணி பற்றி எழுதுக.
8. ‘முதல் மழை விழுந்ததும்’ என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

IV. விடையளி: 1x6=6

9. பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

V. விடையளி: 2x5=10

10. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.
11. பாடலைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையை எழுதுக.

"பகர்வனர் திரிதிரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்”

வினாக்கள் :

1. காருகர் - பொருள் தருக.
2. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?
3. இப்பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
4. எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
5. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

VI. 12. காட்சியைக் கண்டு கினுற எழுதுக: 1x4=4



VII. 13. சமுதாயத்தில் உழைத்த மகளிர்கள் பற்றிக் கட்டுரை வடிவில் எழுதுக. 1x6=6

VIII. மொழிப்பயிற்சிகள்:

14. மொழிபெயர்க்க: 1x2=2

Among the five geographical of the Tamil country in sangam literature, the Marutam region was the fit for caltivation, as it had the most fertile lands.

15. பொருத்தமான தொடர் அமைக்க: கொஞ்சம் அதிகம் 1x1=1

16. மயிலாப்பூர் என்ற ஊரின் மரூஉ என்ன? 1x1=1

17. பொருள் கூறுக: மிரியல். 1x1=1

18. இலக்கணக் குறிப்பு தருக: கீறுவோம். 1x1=1

19. விடைக்கேற்ற வினா அமை: 1x1=1

இளங்கோ தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச் சொத்து ஆகும்.

## இயல் 7

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது __________.
2. ‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்’ என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் __________
3. சோழனுடைய நாட்டில் புலம்புவது __________.

II. விடையளி: 3x2=6

4. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
5. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
6. சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?

III. விடையளி: 2x4=8

7. சோழ நாட்டில் மையுடையன, மருளுடையன யாவை?
8. “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்”

   - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

IV. விடையளி: 1x6=6

9. சிலப்பதிகார மருவூர்ப் பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

V. விடையளி: 2x6=12

10. அழப்பிறழாமல் எழுதுக:

தூசும் துகிரும் .... எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

11. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ‘மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. (நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு)

VI. 12. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக: 1x4=4



VII. 13. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக. 1x5=5

மகளிர் நாள் விழா

இடம்: பள்ளிக் கலையரங்கம். நாள்: 14.09.2019.

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரி வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

VIII. மொழிப்பயிற்சிகள்:

14. கலைச் சொல் அறிக: 1x2=2

Consulate -

Patent -

15. பொருத்தமான தொடர் அமைக்க: 1x1=1

மறக்க நினைக்கிறேன்.

16. பொருள் கூறுக: துரிஞ்சில். 1x1=1


17. ‘நாகப்பட்டினம்’ என்ற சொல்லின் மரூஉ வை எழுதுக. 1x1=1

18. இலக்கணக் குறிப்பு தருக: செய்வார். 1x1=1

## இயல் எட்டு

அறம்,
தத்துவம்,
சிந்தனை

# பெருவழி



மன்னன் மக்களுக்குக் கொடை அளிப்பது – 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

**கற்றல் நோக்கங்கள்**

- அறக்கருத்துகளை வேராகக் கொண்ட சங்க இலக்கியங்களின் மையப்பொருளறிதல்.
- கட்டுரை, நாடகம் போன்றவற்றின் வடிவங்களைப் படித்துணர்ந்து, சொல்லப்புகும் கருத்தினை வெளிப்படுத்த ஏற்ற வடிவத்தினைத் தேர்ந்தெடுத்து வலுவாகப் பயன்படுத்துதல்.
- தத்துவக் கருத்துகளைச் சொல்வதற்கு ஏற்ற மொழி தமிழ் என்பதைப் பாடல்கள் வழி உணர்ந்து சுவைத்தல்.
- தமிழின் நான்கு பாவகைகள் குறித்து அறிமுகம் பெற்று மேலும் கற்க ஆர்வம் கொள்ளுதல்.

உரைநடை உலகம்

அறம்

அ

# சங்க இலக்கியத்தில் அறம்

QHUIJW



## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. மேன்மை தரும் அறம் என்பது?**

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறு பிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது? **[விடை : கைம்மாறு கருதாமல் அறம் செய்வது]**

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன்

**அதியன், பெருஞ்சாத்தான்**

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தான்

இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

**[விடை : அதியன்; பெருஞ்சாத்தான்]**

---

## குறுவினா

**1. குறிப்பு வரைக - அவையம்**

- அறம் கூறும் அவையம் பற்றி அறம் அறங்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.
- அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிகின்றன.
- மதுரையில் இருந்த அவையம் துலாக் கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது மதுரைக் காஞ்சி.

## சிறுவினா

**1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

**அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை :**

**அன்றைய அரசியல். வாணிகம் ;**

**அரசியல் :**

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்க கூடாது என்பது சங்க கால மக்களின் கருத்தாக இருந்தது.

**வணிகம் :**

இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயன் மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் இருக்கக் கூடாது.

**இன்றைய அரசியல் வணிகம்:**

**அரசியல் :**

இன்றைய அரசியலில் நாம் நல்லாட்சியை எதிர் நோக்கி வாழ வேண்டிய அவல நிலையில் வாழ்கிறோம் .

**வணிகம் :**

இக்காலத்தில் பொருட்களில் கலப்படம், விலை அதிகமாக விற்றல் போன்ற நேர்மையற்ற செயல்கள் நடைபெறுகின்றன.

**போரில் தமிழனின் நிலை :**

**அன்றைய போர்முறை :**

- தமிழர் அன்றைய போரில் அறநெறிகளைப் பின்பற்றினர். பசு (ஆநிரை), பெண்கள், நோயாளிகள், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்குவராமல் போர் புரிய வேண்டும். என்று ஒரு பாடல் கூறுகிறது.
- தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**இன்றைய போர் முறை**

- இன்று போர் நடைபெறாவிட்டால் மக்களுக்கு ஏற்படும் சாதி, மத, இன சண்டைகள் அறநெறி காட்டும் வழியில் அமைந்திருக்கிறதா என்பது கேள்விக்குறி!

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. அறத்தின் குறியீடாக போற்றப்பட்டவை எவை ?**

மன்னர்களுடைய செங்கோலும், வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

**2. அமைச்சரின் கடமைகளாகச் சங்க இலக்கியம் யாது கூறுகிறது?**

- அமைச்சன், அறநெறியில் ஆட்சி செய்ய அரசனுக்கு உதவி செய்தல் வேண்டும்.
- நன்றும், தீதும் ஆய்ந்தும், அன்பையும் அறனையும் காத்தலும் அமைச்சரின் கடமை என மதுரைக்காஞ்சி கூறுகிறது.

**3. வாய்மை பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுவதைக் கூறுக .**

- பொய்யாச் செந்நா
- பிழையா நன்மொழி-நற்றிணை
- பொய்படு பறியா வயங்கு செந்நா
- பொய்மொழிக் கொடுஞ்சொல்

**4.அறங்கூறவையம் இருந்த இடங்கள் யாவை ?**

- உறையூர்
- மதுரை

**5.வள்ளல்கள் எவ்வாறெல்லாம் போற்றப்பட்டனர் ?**

இல்லோர் ஒக்கல் தலைவன், பசிப்பிணி மருத்துவன் என்று போற்றப்பட்டனர்.

**6.வள்ளல் எழுவாரின் கொடைச்சிறப்பைப் புலப்படுத்துவன எவை ?**

வள்ளல் எழுவாரின் கொடைச்சிறப்பையும் சிறுபாணாற்றுப்படையும் பெருஞ்சித்திரனார் பாடல்களும் புலப்படுத்துகின்றன.

**7. தனிச்சிறப்புப் பெற்ற அவையம் எவை?**

- உறயூரில் இருந்த அற அவையம் தனிச்சிறப்பு பெற்றிருந்தது.
- மதுரையில் இருந்த அவையமும் சிறப்புப் பெற்று இருந்தது.
- இவ் அவையங்கள் துலாக் கோல் போல் நடுநிலைமையுடன் இருந்தன.

**8. அக இலக்கியங்களில் ஈதல் பற்றிக் கூறப்பட்டுள்ளதை விளக்குக.**

- புற இலக்கியங்களில் மட்டுமல்ல, அக இலக்கியங்களிலும் ஈகை பற்றிய செய்திகள் உள்ளள.
- ஈயாமை இழிவு
- இரப்போர்க்கு ஈயாது வாழ்வதைவிட உயிரை விட்டு விடுதல் மேலானது என்று கலித்தொகை கூறுவதே இக்கூற்றுக்குச் சான்றாகும்.

**9. கொடையில் சிறந்த மன்னர்களை நால்வரைக் குறிப்பிடுக.**

- உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் - அதியன்
- மறுமை நோக்கி கொடுக்காதவன் - பேகன்.
- இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்துக் கொடுப்பவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.
- எல்லாவற்றையும் கொடுப்பவன் - திருமுடிக்காரி.

இவ்வாறு மன்னர்கள் கொடையால் சிறந்திருந்தனர்.

**10. ‘அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்’ என்ற புறநானூற்று வரிகளின் உட்கருத்தைப் புலப்படுத்துக.**

இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுப்பிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது. அத்ததகைய நோக்கம் இல்லாதவன் வள்ளல் ஆய்.

**11. உண்மையான செல்வம் எது என நல்வேட்டனார் குறிப்பிடுகின்றார்?**

பிறர் துன்பம் தீர்ப்பது தான் உண்மையான செல்வம் என நல்வேட்டனார் குறிப்பிடுகின்றார்.

**12. ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாக உள்ளன - இக்கூற்றில் சுட்டப்படும் ஆற்றுப்படை இலக்கியங்கள் யாவை?**

- திருமுருகாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- கூத்தராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை

**13. குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிடும் செய்தி யாது?**

தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, நாட்டை இழந்த துன்பத்தை விடப் பெருந்துன்பம் என்று குமணன் வருந்தியாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிடுகின்றார்.

**14. ‘இல்லோர் ஒக்கல் தலைவன்’ யார் என்பதை விளக்குக.**

பொருள் இல்லாத ஏழைச் சுற்றத்திற்குத் தலைவன் வள்ளல்கள் ஆவர்.

**15. எப்போது மகிழ்ச்சி பெருகும்?**

மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக் கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது.

**16. எது உண்மையான மகிழ்ச்சி?**

ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பது தான் மகிழ்ச்சி.

**17. ஜென் தத்துவம் என்பது யாது?**

- கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதி தர்மர் என்னும் சமயப்பெயர் பூண்டு சீனாவுக்குச் சென்றார்.
- பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார்.
- அதிலிருந்து உருவானதே ஜென் தத்துவமாகும்.

**18. அரசன் எத்தகைய ஆட்சியை மேற்கொள்ளுதல் வேண்டும்?**

- சங்ககாலப் பாக்களில் அரசர்களை முதன்மைப்படுத்தியே பெரும்பாலும் அறவுரைகள் கூறப்பட்டுள்ளன.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', 'அறநெறி பிழையாத் திறனறி' மன்னர் என்று மன்னர்களுடைய செங்கோலும், வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

- செங்கோல் போன்று நேரிய ஆட்சியை அரசன் மேற்கொள்ள வேண்டும் என்பது, பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டடுள்ளது.

**19. அரசின் கடமைகள் யாவை?**

- நீர்நிலை பெருக்கி, நில வளம் கண்டு, உணவுப்பெருக்கம் காண்பதும், அதனை மக்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமை எனக் கூறப்பட்டடுள்ளது.
- அறத்தின் அடிப்படையில் குற்றங்களை ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன்பொதிப் பசுங்குடையார். அரசன் தன் கடமையாற்ற, அமைச்சர்கள் உதவி செய்தல் வேண்டும்.

**20. போர் அறம் குறித்து ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுவது என்ன?**

- போரிடுவதிலும் அறநெறியைக் கடைப்பிடித்த தமிழரின் போர் அறம் என்பது, வீரமற்றோர், புறமுதுகிட்டோர் சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.
- போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்டிர், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும்.
- இதனைத் தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்னும் ஆவூர் மூலங்கிழாரின் புறநானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது.

**21. கொடைப் பெருமைகளாகப் பேசப்படுவன யாவை?**

"இல்லோர் ஒக்கும் தலைவன்" என்றும், "பசிப்பிணி மருத்துவன் என்றும்" வள்ளல்கள் போற்றபபட்டனர். ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும், நாள்தோறும் அரியன என்று கருதாதும் தங்காதும் கொடுத்தாலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.

**22. புலவர்களும் கொடை கொடுத்து மகிழ்ந்ததைப் புறநானூறு வழி கூறுக.**

வள்ளல்கள் மட்டுமல்லாமல் புலவர்களும் தாம் பெற்றதைப் பிறருக்கு ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளத்தைப் புறநானூறு புலப்படுத்தி இருக்கிறது.

**23. சங்க இலக்கிய அறங்கள் முதல் தரமானவை எப்படி?**

தாமே சிந்திக்காமல், பிறர் சொல்லக் கேட்டு அறியும் அறம் மூன்றாம் தரமானது. தாமே சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம், இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறமே முதல் தரமானது. இவ்வகையில் சங்க இலக்கிய அறங்கள், இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1.கொடையின் சிறப்பை இலக்கியங்கள் போற்றுவது பற்றி எழுதுக .**

- சிறுபாணாற்றுப் படையில் கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பு கூறப்பட்டுள்ளது.
- ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாகவே உள்ளன.
- பதிற்றுப் பத்து, சேர அரசர்களின் கொடைச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.
- புறநானூற்றிலும் சில மன்னர்களின் கொடைச் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

**2.மகிழ்ச்சி பெருக என்ன செய்ய வேண்டும் ?**

- மனிதன் என்பவன் சமூகக் கடலின் ஒரு துளி.
- சமூகத்தோடு சமூகமாய் தன்னை எவன் ஒருவன் இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவு மகிழ்ச்சி பெறுவான்.
- பொது விதியின் அறத்தினை மனிதன் ஏற்று நடந்தால் மேலும் மகிழ்ச்சி பெருகும்
- அறம் பெருகினால் மகிழ்ச்சியும் பெருகும்.

**3. அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது - விவரி.**

- அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.
- இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்குக் கூடாது எனக் கூறப்பட்டது.
- நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

**4. வாய்மையைப் பற்றி இலக்கியங்கள் கூறும் செய்தி யாது?**

- "பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.
- நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது என்பது பலபாடல்களில் வலியுறுத்தப்பட்டடுள்ளது.
- வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன.

**5. போதிதர்மர் குறித்துக் குறிப்பெழுதுக.**

- காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர் பூண்டு, கி.பி (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சீனாவுக்குச் சென்றார். பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார்.
- அதிலிருந்து உருவானதே ஜென் தத்துவம். அது பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டிச் சிலைவைத்து, இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**6. சங்ககால அரசியல் அறம் குறித்து நீவிர் அறிவன யாவை?**

- மன்னர்களுடைய செங்கோலும், வெண் கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. சங்கப் பாக்களில் அறம் குறித்த அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முன்னிலைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் அரசன் தன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள

வேண்டும் எனப் பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்து. நீர்நிலை பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப்பெருக்கம் காண்பதும், அதனை மக்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது.

- "அறத்தின் அடிப்படையில் குற்றங்களை ஆராய்ந்து, தண்டனை வழங்க வேண்டும்" என்கிறார் புலவர் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன், அறநெறியில் ஆட்சி செய்வதற்கு, அமைச்சரும் அறங்கூறும் அவையினரும் உதவினர்.

## மொழிப் பயிற்சிகள்

### விடைக்கேற்ற வினா அமை

1. **"கவிதை வாழ்க்கையின் திறனாய்வு " என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார் ?**

   **விடை :** கவிதை திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுவதென்னா?
2. **வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.**

   **விடை :** எதனை சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன?

### ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக

1. **அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தது :**

   விடை : அறநெறிக்கால அறங்கள் சமயம் **சார்ந்தவை**
2. **வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டன.**

   விடை : வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது
3. **மெய் பேசும் "நா" மனிதனை உயர்த்துகின்றன**

   விடை : மெய் பேசும் "நா" மனிதனை **உயர்த்துகிறது .**

### சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக

1. வீரத்தை போலவே கொடையும் தமிழர்களால் விரும்பபட்டது.

   வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் **விரும்பப்பட்டது .**
2. பதிற்றுபத்து சேர அரசர்களின் கொடை பதிவாகவே உள்ளது.

   பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.

## கற்பவை கற்றபின்

1. **பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக .**

   **"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
   **அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்"**

என புறநானூறு அறம் செய்வதில் வணிக நோக்கம் கூடாது - என்கிறது.

**"செல்வத்துப் பயனே ஈதல்"**

என புறநானூறு மக்கள் மகிழ்வுடன் வாழ்வதற்கு கொடை கொடுத்தலே சிறந்தது என்கிறது.

**"அறநெறி முதற்றே அரசின் கொற்றம் "**

- என நீதி மொழியானது

நேர்மையான ஆட்சியும், அறச்செயலும் மக்கள் மகிழ்வுடன் இருக்கக் கூறுகிறது.

- நற்றிணையில் நல்வேட்டனார் உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பத்தைத் தீர்ப்பது தான் என்று கூறப்படுகிறது.
- "பிழையோ நன்மொழி" என நற்றிணை வாய்மை எனப்படுவது தவறியும் பொய் பேசாதிருத்தல். நிலமே பெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது எனக் கூறுகிறது.

**2. கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து ,அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக்கருத்துகளை எடுத்துக் கொண்டு, அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.**

<u>அறநூல்களின் பெயர்கள்</u> :

ஆத்திச்சூடி, உலக நீதி, கொன்றவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி

<u>நல்வழி</u>

- நற்செயலால் நன்மையும், தீய செயலால் தீமையும் உண்டாகும்.
- ஏழைகளுக்கு கொடுத்து வாழ்வது உயர்ந்த சாதி என்றும் கொடுக்காது வாழ்பவர் தாழ்ந்த சாதி என்று கூறுகிறார்.
- பிச்சை எடுத்து வாழ்வதை விட இழிவான வாழ்க்கை வேறு எதும் இல்லை எனக் கூறுகிறது.
- "சிவாய நம" என்னும் திருமந்திரத்தை நினைத்தால் ஒரு நாளும் துன்பம் ஏற்படாது.
- நல்ல நிலத்தால் நீருக்குப் பெருமை உண்டு, கொடையால் பெரியோர்க்குப் பெருமை உண்டு.
- திருநீறு பூசாத நெற்றி பாழாகும்
- நன்மை, தீமை, நான், தான் என்ற பேச்சு நீங்கி இறைவனை உள்ளத்தால் உணர்தலே செம்மை நிலையாகும்.
- இலக்கணப் பிழை கொண்ட செய்யுளும் ஒழுக்கம் இல்லாத உயர்குடியும் தீராத பழியை விளைவிக்கும். என நல்வழி எடுத்துரைக்கிறது.

கவிதைப் பேழை

அறம்

அ

# ஞானம்

– தி.சொ.வேணுகோபாலன்

QXDDL8



**பாடல் :**

சாளரத்தின் கதவுகள், சட்டம்;
காற்றுடைக்கும்,
தெருப்புழுதி வந்தொட்டும்.
கரையான் மண் வீடு கட்டும்.
அன்று துடைத்தேன்,
சாயம் அடித்தேன்,
புதுக்கொக்கி பொருந்தினேன்.
காலக்கழுதை
கட்டெறும்பான
இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை,
கந்தைத்துணி, கட்டைத் தூரிகை:
அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை!

- கோடை வயல் - தொகுப்பு

**விளக்கம் :**

- சன்னலின் கதவுகளை, சட்டங்களை காற்றானது உடைக்கும்.
- தெருக்களிலிருந்து மண் துகளானது சன்னலில் ஒட்டும்.
- சன்னலில் கரையான் மண்ணால் வீடு கட்டும்.
- சன்னலைத் துடைத்தேன். சாயம் அடித்தேன். புது கொக்கியும் பொருத்தினேன்.
- காலக்கழுதை கட்டெறும்பானாலும் இன்றும் கையில் வாளித் தண்ணீர் கொண்டு சன்னலைக் கழுவினார்.
- சாயக்குவளையில் நிரப்பினார்.
- கந்தைத் துணியால் சன்னலைத் துடைத்தார்.
- கட்டைத் தூரிகை கொண்டு வர்ணம் பூசினார். அறப்பணி ஓய்வதில்லை.
- ஓய்ந்துவிட்டால் இவ்உலகம் இல்லை.

## பொருள் தருக

1. சாளரம் - சன்னல்
2. புழுதி - மண்தூள்.
3. சாயம் - வர்ணம்
4. தூரிகை - வண்ணம் தீட்டும் கருவி
5. ஓய்வு - தளர்வு

## பிரித்து எழுதுக

1. **காற்றுடைக்கும்** - காற்று + உடைக்கும்
2. **வந்தொட்டும்** - வந்து + ஒட்டும்
3. **காலக்கழுதை** - காலம் + கழுதை
4. **சாயக் குவளை** - சாயம் + குவளை
5. **உலகமில்லை** - உலகம் + இல்லை

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. துடைத்தேன் = துடை +த் +த் +ஏன்**

**துடை** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**ஏன்** - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**2. அடித்தேன் - அடி +த் +த் +ஏன்**

**அடி** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்த கால இடைநிலை
**ஏன்** - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. வீட்டைத் துடைத்துச் சாரல் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது**

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

**[விடை : இடையாறது அறப்பணி செய்தலை]**

## குறுவினா

**1. காலக்கழுதை கட்டெறும்பானாலும் கவிஞர் செய்வது யாது ?**

- காலக்கழுதை கட்டெறும்பானதும் கையில் வாளித் தண்ணீர் எடுத்தசன்னலைக் கழுவினார்.
- சாயக்குவளையில் வர்ணத்தை நிரப்பினார்
- கந்தையான துணியால் சன்னலைத் துடைத்தார்.
- கட்டைத் தூரிகை கொண்டு வர்ணத்தால் பூசினார்.

## சிறுவினா

**1. வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி**
**கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.**

- ஒவ்வொரு வீட்டிலும் அவ்வப்போது நிகழும் நிகழ்வை கவிஞர் அழகாக எடுத்துரைக்கிறார்.
- வீட்டினைப் புதுப்பித்தல் பணி தொடர்ச்சியாக அவ்வப்போது நடைபெற்றால்தான் வீடு தூய்மையாக விளங்கும்.
- வாளியிலிருந்து தண்ணீரைத் தெளித்து சன்னலைத் தூய்மைப்படுத்த வேண்டும்
- சாயக்குவளையில் வர்ணக் கலவையை நிரப்ப வேண்டும்.
- கந்தையான துணியால் துடைத்து விட்டு கட்டைத் தூரிகையால் வர்ணம் அடித்து சன்னலை புதிதாக்க வேண்டும்.

**2. சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம் என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் ஒவ்வொருவரின் உள்ளத்தில் ஏற்படும் மாற்றமே சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும்.

**உரைகுறிப்பு**

சுற்றுச் சூழல் என்றால் என்ன? சுற்றுச் சூழலின் அவசியம் - மாசுபடுதற்கான காரணம் - அரசின் திட்டங்கள் - விழிப்புணர்வு வேண்டும் - விழப்புணர்விற்கு எனது பங்கு - நாளை உலகிற்கு தேவையான இன்றைய அறம்.

**தவிர்க்க வேண்டுவன -** கடைப்பிடிக்க வேண்டியவை - நம்பிக்கை - உறுதி மொழி

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. சாளரத்தினை எவை எவை பாதிப்புக்கு உள்ளாக்கும் ?**

- சன்னலின் கதவுகளை, சட்டங்களை காற்றானது உடைக்கும் .
- தெருக்களிலிருந்து மண்துகளானது சன்னலில் ஒட்டும்.
- சன்னலில் கரையான் மண்ணால் வீடு கட்டும்.

**2. வேணுகோபாலனின் கவிதைத் தொகுப்புகள் யாவை?**

கோடை வெயில், மீட்சி விண்ணப்பம் ஆகியவை ஆகும்.

**3. ஞானம் என்னும் கவிதையில் இடம் பெறும் அஃறிணை உயிர்கள் யாவை?**

கரையான், கழுதை, கட்டெறும்பு.

**4. 'காலக்கழுதை கட்டெறும்பான**
**இன்றும் கையிலே' - என இவ்வடிகளுக்கு இணையான தமிழ்ப்பழமொழி எழுதுக.**

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது.

**5. சாளரத்தினை எவை எவை பாதிப்புக்கு உள்ளாக்கும்?**

- சன்னலின் கதவுகளை, சட்டங்களை காற்றானது உடைக்கும்.
- தெருக்களிலிருந்து மண்துகளானது சன்னலில் ஒட்டும்.
- சன்னலில் கரையான் மண்ணால் வீடு கட்டும்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. கவிஞர் வேணுகோபால் - ஆசிரியர் குறிப்பு வரைக**

தி .சொ .வேணுகோபாலனின் கோடை வயல் என்னும் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

- இவர் திருவையாற்றில் பிறந்தவர்.
- மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- எழுத்து காலப் புதுக் கவிஞர்களில் ஒருவர்.
- இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு மீட்சி விண்ணப்பம்.

**2. அறப்பணி ஓய்வதில்லை**

**ஓய்ந்திடில் உலகமில்லை!**

**அ) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?**

கோடை வயல்.

**ஆ) இவ்வடிகள் இடம் பெற்ற கவிதை எது?**

ஞானம்.

**இ) எது ஓய்வதில்லை?**

அறப்பணிகள் ஓய்வதில்லை.

**ஈ) இவ்வடியில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்கள் எழுதுக.**

ஓய்வதில்லை உலகமில்லை

**3. காலக்கழுதை கட்டெறும்பான**

**இன்றும் கையிலே**

**வாளித் தண்ணீர் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் சுட்டுதல் :** தி.சொ. வேணுகோபலனின் கோடைவயல் தொகுப்பில் 'ஞானம்' என்னும் தலைப்புக் கவிதையில் இவ்வரிகள் இடம் பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :** காலமாகிய கழுதை கட்டெறும்பாகத் தேய்ந்து போன இன்று வரை கையில் வாளித் தண்ணீர் மட்டுமே வைத்துள்ளோம்.

## நெடுவினா

**1. பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்தையும் அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு கடிதக் எழுதுக .**

28.06.2019,

மதுரை.

**அன்பு அத்தைக்கு**

வணக்கம். அத்தை! நானும் அப்பா, அம்மா மற்றும் தம்பி அனைவரும் நலம்.

உங்கள் நலமும் அத்தை மற்றும் மதிவண்ணன், நிறை முகில் நலமும் அறிய ஆவல்.

ஊங்களுக்கு இக்கடிதம் எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த வாரம் எங்கள் பள்ளியில் நான் விளையாடிவிட்டு வகுப்பறைக்கு திரும்பிய போது ஒரு பையில் நிறைய பணத்துடன் கீழே கிடந்தது.

உடனே எனது பள்ளி தலைமையாசிரியரிடம் பணப்பையை ஒப்படைத்தேன் தலைமையாசிரியர் பள்ளிப் பேரவையில் தகவலை அறிவித்தார்.

தலைமையாரியர், எனது வகுப்பு ஆசிரியர் மற்றும் மாணவர்கள் என்னை மிகவும் பாராட்டினார்கள். பணப்பைக்கு உரியவர் விபரத்தைக் கூறி தலைமையாசிரியரிடமிருந்து அதனை பெற்றுக் கொண்டார்.

பணப்பையின் உரிமையாளர் என்னை மிகவும் பாராட்டி எனக்கு ரூ.500 பரிசு அளித்தார். எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நேர்மைக்கு கிடைத்த பரிசு இது உங்களிடம் இந்த நிகழ்வைப் பகிர்வதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அடுத்த மாதம் உங்கள் இல்லம் வரும் போது சந்திப்போம். அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

(நன்றி )

இடம் : மதுரை,
நாள் : 28.06.2019

**இப்படிக்கு,**
உங்கள் அன்புள்ள,
சு. நிறை முகில்.

**உறை மேல் முகவரி :**
**பெறுநர்**

முு. தமிழ்செல்வி,
73, பாரதியார் தெரு,
கோவை-1.

## கற்பவை கற்றபின்

**1. துளிப்பா ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதில் வெளிப்படும் கருத்தினைப் பற்றி வகுப்பறையில் இரண்டு நிமிடம் உரை நிகழ்த்துக.**

<u>சுதந்திரகூடு</u>

66 ஆண்டுகளாகச்
சுதந்திர கூட்டுக்குள்
வாழ்ந்து கொண்டு தாம்
இருக்கிறோம்!
பறக்க முடியாமல் இல்லை
பழக்கதோசத்தால்!

-அருணா செல்வம்

நம் இந்தியத் திருநாடு சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகளாயும் மக்கள் வாழ்வில் சுதந்திரம் இல்லாமல்தான் வாழ்கிறார்கள். கிளிகளைப் போலவே மக்கள் வசதி படைத்தவர்களிடத்தும் அரசியல்வாதிகளிடத்தும் அடிமைப்பட்டு கூண்டுக்குள் தான் வாழ்கின்றனர். இது பழக்கதோசமாகவும் அமைந்துள்ளது. என கவிஞர் அருணா செல்வம் கூறுகிறார்.

**2. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகர வரிசைப்படுத்தி அதன் பொருளினை எழுதுக.**

அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள் உள்ளன. அவை:

1. அடக்கமுடைமை - அடக்கத்தின் மேன்மை.
2. அருளுடைமை - கருணை உடையவராய் இருத்தல் வேண்டும்.
3. அவாவறுத்தல் - பேராசையை விலக்கு.
4. அழுக்காறாமை - பொறாமை நீக்க வேண்டும்.
5. அறன் வலியுறுத்தல் - அறத்தின் சிறப்பை எடுத்துக்கூறுதல்.
6. அன்புடைமை - அன்பின் மகத்துவம்.

7. இல்வாழ்க்கை - குடும்ப வாழ்வின் சிறப்பு, பெருமை.
8. இன்னா செய்யாமை - துன்பம் செய்யாதிருத்தல்.
9. இனியவை கூறல் - இனிய சொற்களின் சிறப்பு.
10. ஈகை - கொடுத்து வாழ்தலின் சிறப்பு
11. ஊழ் - விதி வலிமை.
12. ஒப்புரவறிதல் - கொடுத்தல்
13. ஒழுக்கமுடைமை - ஒழுக்கமே உயர் செல்வம்.
14. கடவுள் வாழ்த்து - இறைவனை வாழ்த்துதல்.
15. கள்ளாமை - மது அருந்துதல் கூடாது.
16. கூடாவொழுக்கம் - பொய் ஒழுக்கம்.
17. கொல்லாமை - உயிர்க்கொலைக் கூடாது.
18. செய்ந்நன்றியறிதல் - ஒருவர் செய்த நன்மையை நினைத்தல்.
19. தவம் - துன்பத்தைப் பொறுத்தல், பிறருக்குத் துன்பம் செய்யாமை.
20. தீவினையச்சம் - தீச் செயல் செய்ய அஞ்சுதல்.
21. துறவு - உலகப் பற்றை நீக்குதல்.
22. நடுவு நிலைமை - பாரபட்சம் பாராதிருத்தல்.
23. நிலையாமை - எதுவும் நிலையன்று.
24. நீத்தார் பெருமை - துறவு மேற்கொள்பவர் சிறப்பு.
25. பயனில் சொல்லாமை - பயனற்ற சொற்களைத் தவிர்த்தல்.
26. பிறனில் விழையாமை - பிறர் மனைவி, பொருளை விரும்பாமை.
27. புகழ் - சிறப்பு.
28. புலால் மறுத்தல் - ஊன் உண்ணாதிருத்தல்.
29. புறங்கூறாமை - ஒருவர் இலாதிடத்து அவரைப் பற்றிப் பேசுதல்.
30. பொறையுடைமை - பொறுமை.
31. மக்கட்பேறு - பிள்ளைச் செல்வம்.
32. மெய்யுணர்தல் - பொய் மயக்கத்திலிருந்து விடுபடுதல்.
33. வாழ்க்கைத் துணை நலம் - நன்மனையாள் பெருமை.
34. வாய்மை - உண்மையின் மேன்மை.
35. வான்சிறப்பு - மழையின் சிறப்பு.
36. விருந்தோம்பல் - விருந்தினரை உபசரித்தல்.
37. வெகுளாமை - சினம் கொள்ளாமை.
38. வெஃகாமை - பிறர் பொருளை விரும்பாமை.

அறம்

அ

கவிதைப் பேழை

# காலக்கணிதம்

– கண்ணதாசன்

RCW8MJ




**பாடல் :**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவை சரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!
செலவர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன் பற்றுதல் மிகுத்தேன்!
ஆசை தருவனஅனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;
இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்
புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம்இறந்துவிடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!
*மாற்றம் எனது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர்கொள்க; குரைப்போர்குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது
நானே தொடக்கம்; நானே முடிவு
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!*

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்...........
   (அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
   (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   (இ) இகழ்ந்தால் இறந்தவிடாது என்மனம்
   (ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

**[விடை: இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது]**

## குறுவினா

**1. கொள்வோர் கொள்க ,குரைப்போர் குரைக்க !**

**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது**

**அ) அடியெதுகைகை எடுத்தெழுதுக**

கொள்வோர் உள்வாய்

**ஆ)இலக்கணக் குறிப்பு**

**கொள்க, குரைக்க** - வியங்கோள் வினைமுற்றுகள்

---

## நெடுவினா

**1. காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக .**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னிலும் விலைமிகு பொருளென் செல்வம்
இவை சரியென்றால் இயம்புதென் தொழில்
இவை தவறாயின் எதிர்ப்ப தென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக! **- கவிஞர் கண்ணதாசன்**

**முன்னுரை**

கவிஞர் கண்ணதாசன் தமிழக அரசவைக் கவிஞராக இருந்தவர். ஏராளமான திரைப்படப் பாடல்களை எழுதிப் புகழ் பெற்றவர். சாகித்ய அகாதெமி விருதுபெற்றவர். அவரது பாடல்கள் சந்த நயமும், பொருள் நயமும் கொண்டு எளிய மக்களும் சுவைத்து இன்புறும் வகையில் இருக்கும்.

**பாடலின் திரண்ட கருத்து**

கவிஞனாகிய நான் ஒரு காலத்தை கனிக்கும் கவிஞனாவேன். உள்ளத்தில் தோன்றும் உண்மைப் பொருளை எல்லோருக்கும் தெரியும்படி வெளிப்படுத்துவேன். இந்தப் பூமியில் நான் எல்லோராலும் போற்றப்படும் தெய்வமாவேன். பொன்னை விட விலை மிகுந்த செல்வம் என்னுடையது. இவையெல்லாம் சரி என்று சொன்னால் அதை கூறுவது என் பணி. இவை தவறு என்று சொன்னால் அதைக் கூறுவது என் பணி. இவை தவறு என்று சொன்னால் எதிர்ப்பது என் பணி . ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று பணிகளையும் இறைவனும் நானும் மட்டும் அறிந்தவையாகும். அதனை நீங்களும் அறிவீர்களாக.

**தொடை நயம் :**

“தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்” என்பதைப் போல் இப்பாடலில் எதுகை, மோனை நயங்கள் நிறம்பட அமைந்துள்ளன.

**மோனைத்தொடை**

**அடி**தோறும் அல்லது **சீர்**தோறும் **முதல் எழுத்து ஒன்றி வருவது மோனைத்** தொடை .

**சீர் மோனை**

| | | | |
|---|---|---|---|
| கவிஞன் | - காலக்- கணிதம் | பொன்னிலும் | - பொருளென் |
| புவி | - புகழுடைய | இவை | - இயம்புவதென் |

அவனும் - அறிந்தவை

**அடி மோனை**

| | | | |
|---|---|---|---|
| கவிஞன் | புவியில் | இவை | ஆக்கல் |
| கருப்படு | பொன்னிலும் | இவை | அவனும் |

**எதுகைத் தொடை**

அடித்தோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை எனப்படும்.

**சீர் எதுகை**

கருப்படு, உருப்பட பொருளை, பொருளென் அறிந்தவை, அறிக

**அடி எதுகை**

இவை இவை

**சொல் நயம்**

**"அர்ச்சுனனுக்கு வில்லு பாடலுக்கு சொல்லு"** கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் சொல் நயம் மிகச்சிறப்பாக அமைந்துள்ளது.

**எ.கா :** "யானோர் காலக்கணிதம்
நானோர் புகழுடைத் தெய்வம்"

என்ற அடிகளில் சொல் நயம் மிளிர்வதைக் காணலாம்.

**சுவை நயம்**

"புவியில் நானோர் புகழுடைத் தெய்வம் பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்" என்னும் அடிகளில் பெருமிதச்சுவை மிகுந்துள்ளதைக் காணலாம்.

**அணிநயம்**

கவிஞர் கண்ணதாசன் தன்னையே "யானோர் காலக் கணிதம்" என்றும் "நானோர் புகழுடைத் தெய்வம்" என்றும் உருவகப் படுத்திக் கூறியுள்ளமையைக் காணலாம்.

**முடிவுரை**

காலக் கணிதம் எனும் கண்ணதாசன் பாடலில் பொருள் நயம், தொடை நயம், சுவைநயம், சொல் நயம் உருவகம் போன்ற பல்வேறு நயங்கள் அழகுபட மிக எளிமையாகப் பாடப்பட்டுள்ளது. இப்பாடலை நாமும் படித்து பிறகு மீண்டும் படிக்கத் தூண்டும் அளவுக்கு இனிமை மிகு பாடலாக இருக்கிறது.

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. அவனும் யானுமே அறிந்தவை என கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் இறைவனும் நானுமே அறிதலை ஆசிரியர் கூறுகிறார்.

**2. தொழில், வேலைப் பற்றி கவிஞர் உரைப்பான எவை?**

எவை சரியோ அவற்றைக் கூறுவது எனது தொழில். எது தவறோ அவற்றை எதிர்ப்பது எனது வேலை என்று ஆசிரியர் கூறினார்.

**3. கவிஞன் என்பவன் யார்?**

மனம் என்னும் வயலில் சொல்லேர் கொண்டு உழுது சிந்தனை விதைகளைத் தூவி, மடமை என்னும் களை பறித்து தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவனே கவிஞன் ஆவான்.

**4. எவையெல்லாம் மாறாதவை?**

காடு, மேடு, மரம், கல், வனவிலங்குகள் ஆகியவை மாறாதவையாகும்.

**5. கண்ணதாசனின் பெற்றோர் யாவர்?**

கண்ணதாசனின் பெற்றோர் : சாத்தப்பன், விசாலாட்சி ஆவர்.

**6. 'கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்' யார்?**

கருப்படு பொருளை உருப்பட வைப்பவர் கவிஞர் (கண்ணதாசன்).

**7. கவிஞர் ஒரு காலக்கணிதம் ஆவது எவ்வாறு?**

கவிஞர், பின்னர் வருதை முன்னரே அறிந்து, உண்மைப் பொருளை எல்லாரும் அறியும்படி கவிதையில் கூறுவதால் கவிஞர் ஒரு காலக்கணிதம் ஆகிறார்.

**8. கவிஞர் எவற்றைக் கவிதையாக்குகிறார்?**

தம் உள்ளத்தில் கருவாகத் தோன்றும் மூலப் பொருள்களை எல்லாம் கவிஞர் கவிதையாக உருவாக்குகிறார்.

**9. கவிஞனும் கடவுளும் எச்செயல்களால் ஒன்றாகிறார்கள்?**

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் கடவுள் செய்கிறார். உலக மக்களுக்குத் தேவையான கருத்துகளைப் படைத்தல், அறக்கருத்துகளைக் காத்தல், தீயனவற்றை அழித்தல் ஆகிய மூன்று தொழில்களை கவிஞர் செய்கிறார். ஆதலால், கவிஞனும் கடவுளும் ஒன்றாகிறார்கள்.

**10. கண்ணதாசன் யாரெல்லாம் சொல்லாதவற்றைச் சொல்ல முனைவர்?**

'கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் எல்லாம் சொல்லாதனவற்றை யான் சொல்லிட முனைவேன்' என்று, கண்ணதாசன் கூறுகிறார்.

**11. புகழ்ச்சியோ இகழ்ச்சியோ தன்னைப் பாதிக்காது எனக் கண்ணதாசன் கூறுவது எவ்வாறு? அல்லது கவிஞனின் தனித்தத்துவம் என்ன?**

என்னை யாரேனும் புகழ்ந்து பேசினால், என்னுடல் சிலிர்த்து நிற்காது. யாரேனும் இகழ்ந்து பேசினாலும், என் மனம் ஒரு போதும் வருத்தப்படாது என்று, புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தன்னைப் பாதிக்காது எனக் கண்ணதாசன் கூறுகிறார்.

**12. மாற்றம் குறித்துக் கண்ணதாசன் கூறியுள்ளது என்ன?**

"மாற்றம் எமது மானிடத் தத்துவம்" என்று பாடிய கண்ணதாசன் தனது வாழ்வில் திரைப்படம், அரசியல் ஆன்மீகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பல்வேறு மாற்றங்களைக் கண்டவர். ஆதலினால் "மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்" என்கிறார். எனினும், தாம் செல்லும் சாலை நன்மை தீமை அறிந்தே செல்வதாகக் கூறுகிறார்.

**13. கவிஞர் அட்சய பாத்திரம் என எதனைக் கூறுகிறார்?**

நாட்டில் தலைவர்கள் எல்லாம் மாறுவர், அரசவை அங்கத்தினர் மாறுவர், தத்துவம் மட்டுமே மாறாதது. அதுவே, அட்சய பாத்திரமாம் அமையும் எனக் கூறியுள்ளார்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. மாறாதிருக்க யான் வன விலங்கல்லன் என ஆசிரியர் கூறக் காரணம் யாது?**

- என்னை யாராவது புகழ்ந்தால் என் உடல் பரவசமடையாது.
- இகழ்ந்தால் என் உள்ளம் இறந்து விடாது.
- வளமார்ந்த கவிதைகள் வாக்குமூலங்கள். நான் இறந்த பின்னர் எழுதுங்கள் எனக்கு தீர்ப்பளியுங்கள்.
- கல்லாக, மரமாக, காடுமேடாக மாறாமல் இருக்க யான் காட்டிலுள்ள விலங்கு அல்லேன்.

**2. கவிஞர் கண்ணதாசன் குறிப்பு வரைக**

- இயற்பெயர் - முத்தையா

- பிறப்பு - 1927 ஜீன்
- இறப்பு - 1981 அக்டோபர் 17
- புனைப் பெயர்கள் - வணங்காமுடி, காரை முத்துப்புலவர், ஆரோக்கியநாதன்
- பிறந்த ஊர் - சிறு கூடல் பட்டி, சிவகங்கை மாவட்டம்
- பெற்றோர் - சாத்தப்பன் - விசாலாட்சி
- எழுதிய நூல்கள் - ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, இயேசு காவியம், கல்லக்குடி
- நாடகங்கள் - அனார்கலி, சிவகங்கைச் சீமை
- புதினங்கள் - ஆயிரந்தீவு - அங்கயற்கண்ணி - சேரமான் காதலி

**3. கவிஞன் யானோர் காலக்கணிதம் கருப்படு பொருளை உருப்படவைப்பேன் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டல் :**

கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் காலக்கணிதம் என்னும் தலைப்பில் இவ்வரிகள் கவிஞர் கூறுவதாக அமைந்துள்ளது.

**பொருள் விளக்கம்:**

கவிஞனாகிய நான் காலமாகிய கணிதம் போன்றவன். கவிதைகளில் கருவான பொருளைக் கூட பயன்படும் பொருளாக ஆக்குவேன் என்கிறார் கவிஞர்.

**4. 'நானே தொடக்கம் நானே முடிவு**

**நானுரைப்பது தான் நாட்டின் சட்டம்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டல் :**

கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் காலக்கணிதம் என்னும் தலைப்பில் இவ்வரிகள் கவிஞர் கூறுவதாக அமைந்துள்ளது.

**பொருள் விளக்கம்:**

கவிஞனாகிய நானே அனைத்தின் தொடக்கம் ஆவேன். நானே முடிவும் ஆவேன். நான் சொல்வது தான் நாட்டினுடைய சட்டம் ஆகும்.

**5. கவிஞரின் இயல்புகளாகக் கண்ணதாசன் கூறியுள்ளன யாவை?**

- கவிஞர், பின்னர் வருவதை முன்னரே அறிந்து, உண்மைப் பொருளை எல்லாரும் அறியும்படி கவிதையில் கூறுவர். தமது உள்ளத்தில் உருவாகின்ற கருத்தை இனிய கவிதையாய்ப் படைப்பவர். கவிதையை ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று செயல்களாலும் கடவுளுக்கு இணையானவர்.
- சமுதாயத்தில் காணப்படுகிற செயல் சரியானதாக இருந்தால் போற்றிப் புகழ்வதும், தவறானதாக இருந்தால் எதிர்த்துப் பேசுவதும் கவிஞரின் இயல்புகள் என்று, கண்ணதாசன் கூறியுள்ளார்.

**6. கண்ணதசான் தான் செய்ய இருப்பதாகக் கூறும் செயல்களைக் கூறுக.**

என்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பேன்; இல்லாவிட்டால் எம்மவர் இல்லக் கதவைத் தட்டுவேன்; தேன் வண்டினைப் போல் உலகத்ததுச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டுவந்து தருவேன்; கம்பன், பாரதி, பாரதிதாசன் ஆகியோர் சொல்லாதனவற்றைச் சொல்ல முனைவேன்; வளமிகுந்த கவிதைகளைத் தருவேன் எனக் கண்ணதாசன் தான் செய்ய விரும்புவதாகக் கூறுகிறார்.

## கற்பவை கற்றபின்

**கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க**

கவிதைச்சக்கரவர்த்தியும் கவியரசும்
நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையைன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ
இதற்கென்னை வெகுண்ட தென்றல்
**- கம்பன்**

நதி வெள்ளம் காய்ந்து விட்டால்
நதி செய்த குற்றம் இல்லை
விதி செய்த குற்றம் இன்றி
வேறு - யாரம்மா
**- கண்ணதாசன்**

1. இருவர் எழுதியுள்ள கவிதைகளும் ஒரே கருத்தைத்தான் கூறுகின்றன.
2. ஆற்றில் நீர் இல்லையென்றால் ஆற்றின் குற்றமா இல்லையே. விதி செய்த குற்றமே. அதற்காக என் மீது கோபப்படுவது ஏன் என்று கம்பர் கேட்கிறார். விதி செய்த குற்றம் இல்லாமல் வேறு யாரம்மா? என கண்ணதாசன் கேட்கிறா்.
3. பின் இருவருமே நம்மை மீறி நடைபெறுகிறது என்றால் விதியின் பிழையே என இருவரும் ஒப்புக் கொண்டனர்.

விரிவானம்

அறம்

அ

# இராமானுசர் – நாடகம்

RS67M8

## நெடுவினா

**1. "இராமானுஜர் என்னும் நாடகத்தின் கதையைச் சுருக்கி எழுதுக**

**முன்னுரை :**

12ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்வது குறிஞ்சி தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே மூங்கில். நம் தலைமுறைக்கு ஒரு முறை பிறப்பவர்களே ஞானிகள். அத்தகைய ஞானிகளுள் ஒருவர் இராமானுஜர் அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**துண்டும் கொடியுமாக:**

திருமந்திரக் திருவருள் பெறத் துண்டும், கொடியுமாக இராமானுஜரை வரச் சொல்லுங்கள் என்னும் செய்தி, பூரணரால் திருவரங்கத்திற்கு அனுப்பட்டது. அதனால் இராமானுஜர் கூரேசர் முதலியாண்டான் ஆகிய மூவரும் பூரணர் இல்லத்திற்கு வந்தனர். அவர்களைக் கண்ட பூரணர் கோபம் காண்டு "நான் உனக்கு மட்டும் தான் அம்மந்திரத்தைச் சொல்வேன். "நீ உறவுகளுடன் ஏன் வந்தாய்?" என வினவினார். அதற்கு இராமானுஜர் தாங்கள் கூறிய துண்டுக் கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எனவே, கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும். என்று கூறினார்.

**ஆசிரியரின் கட்டளை :**

பூரணர் மூவரையும் வீட்டிற்குள் அழைத்து நான் கூறப் போகும் திருமந்திர மறை பொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதைக் கூறினால் அது ஆசிரியர் கட்டளையை

மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும் என்றார். பின்னர் திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். "திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன் " என்று பூரணர் கூறிய திருமந்திரத்தை மூவரும் மூன்று முறை உரக்கச் சொன்னர்கள்.

**திருமந்திரத்தை மக்களுக்கு உரைத்தல்**

திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவில் மதில் சுவரின் மேல் இராமானுஜர் நின்று கொண்டு, உரத்த குரலில் பேசத் தொடங்கினார். "கிடைப்பதற்குரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்கு கூறுகிறேன். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள்". அவர் சொல்லச் சொல்ல அனைவரும் உரத்த குரலில் மூன்று முறை கூறினார்கள்.

**குருவின் சொல்லை மீறுதல்**

குருவின் (பூரணரின்) சொல்லை மீறியதற்காக கோபம் கொண்ட பூரணரிடம் "கிடைப்பதற்குரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அதன் பயனை அனைவருக்கும் கிட்ட வேண்டும். அவர்கள் பிறவிப்பிணி நீங்கி பெரும் பேறு பெற்றிட நான் மட்டும் நகரத்தை அடைவேன்" என்று விளக்கமளித்தார்.

**குருவின் ஆசி**

இராமானுஜரின் பரந்த மனத்தைக் கண்ட குரு பூரணர், அவரை மன்னித்து அருளினார் மேலும் இறைவனின் ஆசி பெற அவரை வாழ்த்தினார். இராமானுசத்திற்கு தன் மகன் சௌம்ய நாராயணனை அடைக்கலமாக அளித்தார்.

**முடிவுரை**

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உயரிய மந்திரத்தை வாழ்வாக்கியவர் இராமானுஜர் . தனக்கென வாழாது பிறருக்கு நரகமும் செல்ல முன் வந்த பெருமகனார்.

மாணவன் -கொக்கைப் போல, கோழியைப் போல, உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் குப்பையை கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

## குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக

**நாடகம் எழுதுதல்**

**காட்சி ஒன்று**

**இடம்** : வகுப்பரை

**பங்கு பெறுவோர்** : தமிழாசிரியர், மாணவர்கள்

**நேரம்** : முற்பகல்

தமிழாசிரியர் வகுப்பறைக்குள் நுழைகிறார். மாணவர்கள் அனைவரும் எழுந்து வணக்கம் ஐயா சொல்கிறார்கள்.

**தமிழாசிரியர்** : மாணவர்களை! வணக்கம்! அமருங்கள். நான் நேற்று வகுப்பறையில் கூறியது உங்களுக்கு நினைவிருக்கும் அல்லவா?

**மாணவர்கள்** : ஆமாம் ஐயா! எந்தப் பொருளையும் இழிவாகக் கருதக் கூடாது என்பது தானே ஐயா!

**ஆசிரியர்** : நன்றி நினைவில் வைத்துள்ளீர்கள். ஆண்டவர் எந்தப் பொருளையும் இழிவுடன் படைத்தது இல்லை. கொக்கென்றாலும், கோழியென்றாலும் உப்பென்றாலும் வேறு எது என்றாலும் அதையும் ஏழு காரணத்தோடு படைத்துள்ளான்.

**மாணவர்கள்** : புரியவில்லையே ஐயா!

**ஆசிரியர்** : ஒற்றைக் காலில் நிற்கும் கொக்கு நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறது? வாய்ப்பு வரும் வரை காத்திரு. வந்தவுடன் பயன்படுத்த - வேண்டும், என்பதைத்தானே?

**மாணவர்கள்** : ஆமாம் ஐயா! அருமை! அருமை

**ஆசிரியர்** : குப்பையைக் கிளறுகிறது கோழி! அது நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறது.

**மாணவர்கள்** : அதில் என்ன இருக்கிறது ஐயா?

**ஆசிரியர்** : குப்பையைக் கிளறு கிளறு என்று கிளறினாலும் தனக்கு எது உணவோ அதை மட்டும் தான் உண்ணும் மற்றவற்றைக் கண்டு கொள்ளாது .

**மாணவர்கள்** : இது எல்லாம் எப்படி ஐயா?

**ஆசிரியர்** : குடலைப் புறட்டும் உப்பு நமக்குக் கற்றுக் கொடுப்பது என்ன?

**மாணவர்கள்** : ஆமாம். உப்பு தான்!

உப்பில்லா உணவை யாரும் விரும்ப மாட்டார்கள் ஆனாலும் உணவோடு உப்பினைக் கலக்கும் போது அது உணவோடு கலந்து மறைந்து போனாலும், உணவுக்குச் சுவையைக் கொடுக்கும். அது போல மாணவர்கள் எந்தத் துறையில் இறங்கினாலும் அதில் சிறப்பான தன்மையை வெளிப்படுத்தி தனது மறைவுக்குப் பின்னர் அதை இவர்தான் செய்தார் என்று கூறும்படித் திகழ வேண்டும்.

**மாணவர்கள்** : சரி ,ஐயா!

**ஆசிரியர்** : இப்போது உண்மைக்கு வருகிறேன். கொக்கு, கோழி, குடலைப்புரட்டும் உப்பு என்ற இந்த மூன்றையும் போலவும் மாணவர்கள் விளங்க வேண்டும். வாய்ப்பு வருகின்றவரை கொக்கு போலக் காத்திருக்க வேண்டும். வாய்ப்பு வந்தவுடன் உடனே வேகமாகச் செயல்பட்டு வெற்றி அடைய வேண்டும். குப்பையை கிளறிக் கொண்டு இருந்தாலும் உணவை மட்டும் கண்டு உண்டு மகிழ்கிறதே கோழி .அது போல நம்மைச் சுற்றி எது நடந்தாலும் அதில் மனதைச் செலுத்தாமல் படிப்பில் மட்டுமே கவனமாக இருக்க வேண்டும். நீரில் கரைந்த உப்பு கண்ணுக்குத் தெரியாது ஆனால், சுவைத்துப் பார்த்தவர்கள் உப்பை உணர்ந்தும் கொள்வார்கள். அது போல மாணவர்கள் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் தங்கள் திறமையால் தங்கள் உழைப்பைக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும். கொக்கும், கோழியும், உப்பும் என்றும் நமக்கு ஆசிரியர்கள். அது போல நாம் வாழ வேண்டும் வாழ்வீர்கள் அல்லவா?

**மாணவர்கள்** : வாழ்வோம், ஐயா!

எளிமையான பொருளுக்குள்ளே இத்தனை உண்மைகளா ஐயா! மகிழ்ச்சி நாங்களும் நீங்கள் கூறியது போல் வாழ்வோம். பள்ளி மணி ஒலிக்கிறது, உணவு இடைவேளை வகுப்பு கலைகிறது.

கற்கண்டு

அறம்

அ

# பா - வகை அலகிடுதல்

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. சிலப்பதிகாரத்திலும் மணி மேகலையிலும் அமைந்த பாவினம்**

(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா **[விடை : அகவற்பா]**

---

## குறுவினா

**1. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக**

- ஈற்றடி முச்சீராய் ஏனைய அடி நாற்சீராய் வரும்
- இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
- இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும்.
- செப்பலோசை பெற்று வரும்.
- இரண்டு அடிகளைப் பெற்று வரும்.
- ஈற்றுச் சீர் நாள், மலர், காசு பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

(எ.கா.) **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"**

---

## சிறுவினா

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் எழுதுக**

- அளவடிகளைப் பெற்று வரும்
- இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) பயின்று வரும்.
- ஆசிரியத் தளைகள் பயின்று வரும்.
- மூன்றடிச் சிற்றல்லையுடன் பாடும் புலவரின் மனக் கருத்திற்கேற்ப பல அடிகளைப் பெற்று வரும்.
- இரண்டு அடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும்.
- அகவல் ஓசை பெற்று வரும்.

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

"பா" நான்கு வகைப்படும்.

**அவை:**

1. வெண்பா
2. ஆசிரியப்பா
3. கலிப்பா
4. வஞ்சிப்பா

**2. நான்கு பாக்களுக்கு உரிய ஓசைகள் யாவை?**

1. வெண்பா - செப்பல் ஓசை
2. ஆசிரியப்பா - அகவல் ஓசை
3. கலிப்பா - துள்ளல் ஓசை
4. வஞ்சிப்பா - தூங்கல் ஓசை

**3.அசை என்றால் என்ன? அசை எத்தனை வகைப்படும் ?**

- செய்யுளில் சீர்களைப்பிரிப்பது அசை எனப்படும்.
- அசை இரண்டு வகைப்படும்.
- அவை நேரசை, நிரையசை

**சீர் பிரிக்கும் முறையை எழுதுக.**

| நேர் அசை | | நிரை அசை | |
|---|---|---|---|
| குறில் தனித்து | - க | இரு குறில் தனித்து | - பட |
| குறில் ஒற்று | - கல் | இரு குறில் ஒற்று | - படம் |
| நெடில்தனித்து | - கா | குறில் நெடில் தனித்து | - படா |
| நெடில்ஒற்று | - கால் | குறில் நெடில் ஒற்று | - படாம் |

| | | |
|---|---|---|
| தே / மா | - நேர் நேர் | - தேமா |
| புளி / மா | - நிரை நேர் | - புளிமா |
| கரு / விளம் | - நிரை நிரை | - கருவிளம் |
| கூ/ விளம் | - நேர் நிரை | - கூவிளம் |

**4. கீழ்க்காணும் குறளை அலகிட்டு எழுதுக**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பெருளல்ல தில்லைப் பொருள்

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தில்/லைப் | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

**5. யாப்பின் உறுப்புகள் யாவை?**

எழுத்து, அசை, சீர், அடி, தொடை, தளை ஆகியவை ஆகும்.

**6. வெண்பாவின் வகைகள் யாவை?**

வெண்பா ஐந்து வகைப்படும். அவையாவன : குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகியவையாகும்.

**7. ஆசிரியப்பாவின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

ஆசிரியப்பாவின் வகைகள் நான்கு வகைப்படும். அவை : நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

**8. அகவலோசையில் அமைந்த நூல்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.**

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை.

**9. ஓரசைச் சீர்கள் யாவை?**

நேர் - நாள் : நிரை - மலர்

நேர்பு - காசு : நிரைபு - பிறப்பு.

**10. ஈரசைச் சீர்கள் யாவை?**

நேர் நேர் - தேமா : நிரை நேர் - புளிமா

நிரை நிரை - கருவிளம் : நேர் நிரை - கூவிளம்

**11. மூவகைச் சீர்கள் யாவை?**

| காய்ச்சீர் | கனிச்சீர் |
|---|---|
| நேர் நேர் நேர் - தேமாங்காய் | நேர் நேர் நிரை - தேமாங்கனி |
| நிரை நேர் நேர் - புளிமாங்காய் | நிரை நேர் நிரை - புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் - கருவிளங்காய் | நிரை நிரை நிரை - கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் - கூவிளங்காய் | நேர் நிரை நிரை - கூவிளங்கனி |

**12. வெண்பா எத்தனை வகைப்படும்? அவையாவை?**

வெண்பா ஐந்து வகைப்படும். அவை :

- குறள் வெண்பா
- சிந்தியல் வெண்பா
- நேரிசை வெண்பா
- இன்னிசை வெண்பா
- பஃறொடை வெண்பா

**13. அலகிடுதல் என்றால் என்ன?**

அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து அசைக்கேற்ற வாய்பாடு காணுதல் ஆகும்.

**14. ஈரசைச் சீர்கள் எப்பாவிற்கு உரியவை? அவை வேறு எவ்வாறு வழங்கப்படும்?**

மாச்சீர் இரண்டும், விளச்சீர் இரண்டும் ஆகிய நான்கும் ஈரசைச் சீர்கள்; ஆசிரியப்பாவிற்கு உரியவை. இவை 'இயற்சீர்', 'ஆசிரிய உரிச்சீர்', 'அகவல் சீர்' என்றும் வழங்கப்படும்.

**15. சீர் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- நேரசை, நிரையசைகள் தனியாகவும் சேர்ந்தும் அமைவது, 'சீர்' எனப்படும். அஃது நான்கு வகைப்படும்.
- அவை : ஓரசைச்சீர். ஓர் அசையே சீராக அமைவது ஓர் அசைச் சீர் இரண்டு. அவை நேர், நிரை, அவற்றை 'அசைச்சீர்' கள் எனவும் கூறுவர்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.**

- ஈற்று அயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும், ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று வருவது, 'நேரிசை ஆசிரியப்பா'.
- **எ. கா :** "பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர் பாரி ஒருவனு மல்லன் மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே"

**2. அடி மறி மண்டில ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.**

- ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, அடிகளை முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும், ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா.
- **எ.கா :**

தாய்மொழி வளர்த்தல் தமிழரின் கடனே
வாய்மொழி புரத்தல் வல்லவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞரின் கடனே.

**3. ஆசிரியப்பாவிற்குரிய தளைகள் யாவை? சான்றுடன் விளக்குக.**

- ஆசிரியப்பாவிற்குரிய தளைகள் இரண்டு.
- அவை : நேரொன்றாசிரியைத் தளை, நிரையொன்றாசிரியாத் தளை.

i. நேரொன்றாசிரியத் தளை என்பது 'மா முன் நேர்' வருவது.

**எ.கா :** சேர்ந் / தார் சென் / றார்.
நேர் நேர் தேமா நேர் நேர் தேமா

முற்சீர் தேமா - 'நேர்' என முடிகிறது; வரும் சீர் 'நேர்'எனத் தொடங்குகிறது (நேர் அசைகள் ஒன்றி வருகின்றன). மா முன் நேர், நேரொன்றாசிரியாத் தளை.

ii. நிரையொன்றாசிரியத் தளை என்பது 'விளம் முன் நிரை' வருவது.

**எ.கா :** சுவைத் / தனர் புகழ்ந் / தனர்
நிரை நிரை கருவிளம் நிரை நிரை கருவிளம்

முதற்சீர் கருவிளம் - 'நிரை' என முடிகிறது. வரும் சீர் 'நிரை' எனத் தொடங்குகிறது. (நிரை அசைகள் ஒன்றி வருகின்றன). விளம்முன் நிரை நிரையொன்றாசிரியாத் தளை.

**4. வெண்பாவுக்குரிய தளைகள் யாவை? அவை எவ்வாறமையும்?**

வெண்பாவிற்குரிய தளைகள் இரண்டாகும். அவை இயற்சீர் வெண்டனை, வெண்சீர் வெண்டளை.

i. இயற்சீர் வெண்டளை - மா முன் நிரை, விளம் முன் நேர்

ii. வெண்ச்சீர் வெண்டளை - காய் முன் நேர்.

**எ.கா :** மா முன் நிரை வந்தது, இயற்சீர் வெண்டளை.

**அ) இயற்ச்சீர் வெண்ளை :**

அக / ர /
நிரை நேர் புளிமா
முத / ல
நிரை நேர் புளிமா

**ஆ) இயற்சீர் வெண்டளை :**

மலர் / மிசை
நிரை நிரை கருவிளம்
ஏ / கினான்
நேர் நிரை கூவிளம்

விளம் முன் நேர் வந்தது, இயற்சீர் வெண்டளை.

மா / தி

நேர் நேர் தேமா

**இ) வெண்சீர் வெண்டளை :**

எழுத் / தெல் / லா

நிரை நேர் நேர் புளிமாங்காய்

காய் முன் நேர் வந்தது, வெண்சீர் வெண்டளை

**5. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.**

- வெண்பா செப்பல் ஓசை பெற்று வரும்
- ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

**6. அகவற்பாவை விளக்கி, சான்று தருக.**

- அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது.
- இலக்கணக் கட்டுக் கோப்பு குறைவாகவும், கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா.

**சான்று :** சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியவையாகும்.

## கற்பவை கற்றபின்

**1. பாடநூலில் இடம் பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் ”பா ” வகைகளையும் வகைப்படுத்திபட்டியல் இடுக .**

| | | |
|---|---|---|
| அன்னை மொழியே | - | ஆசிரியப்பா |
| காற்றே வா | - | இணைகுறள் ஆசிரியப்பா |
| முல்லைப் பாட்டு | - | கலி வெண்பா |
| மலைபடுகடாம் | - | ஆசிரியப்பா |
| திருக்குறள் | - | குறள் வெண்பா |
| பெருமாள் திருமொழி | - | ஆசிரியப்பா |
| பரிபாடல் | - | கலி வெண்பா |
| நீதி வெண்பா | - | வெண்பா |
| திரு விளையாடல் புராணம் | - | வெண்பா |
| பூத்தொடுத்தல் | - | இணைகுறள் ஆசிரியப்பா |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | - | ஆசிரியப்பா |
| கம்பராமாயணம் | - | கலிப்பா |
| ஏர் புதிது | - | ஆசிரியப்பா |
| மெய்க்கீர்த்தி | - | ஆசிரியப்பா |
| சிலப்பதிகாரம் | - | ஆசிரியப்பா |
| ஞானம் | - | ஆசிரியப்பா |
| காலக் கணிதம் | - | ஆசிரியப்பா |
| சித்தாளு | - | இணைகுறள் ஆசிரியப்பா |
| தேம்பாவணி | - | ஆசிரியப்பா |

**2.வெண்பாவில் அமைந்த நூல்கள் ஆசிரியப்பாவில் அமைந்த நூல்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக**

வெண்பா பாடல் இலக்கியங்கள் எளிதாகப் பாட முடியாது . இலக்கணம் (யாப்பு) கற்றவர்கள் மட்டுமே எழுத முடியும் . இதனால் தான் வெண்பா பாடல்கள் உள்ள இலக்கியம் பிற்காலத்தில் குறைவாகவே எழுதப்பட்டிருந்தன.

ஆசிரியப்பா பாடல்களும் அவ்வாறு தான் எழுதுவது எளிதாகவும் அனைவருக்கும் புரியும் வண்ணம் அமையும். அதனால் தான் ஆசிரியப்பா பாடல் அதிகமாக எழுதப்பட்டன.

## மொழியை ஆள்வோம்

### படித்துச் சுவைக்க

மரம் தேடிய களைப்பு
மின்கம்பியில்
இளைப்பாறும் குருவி.
- நாணற்காடன்

விற்பனையில்
காற்றுப் பொட்டலம்
சிக்கனமாய் மூச்சு விடவும் ....
- புதுவைத் தமிழ் நெஞ்சன்

### மொழி பெயர்க்க

Once upon a time there were two beggers in rome . the first beggar used to cry in the streets of the city , "He is Helped whom God helps". The second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard is so often that he decided to help the beggar who popularized him in the sreets of Rome. He ordered a loaf of bread to be basked and filled with piece of gold . When the beggar felt the heavy weight of the bread , he sold it to his friend as soon as he met him . The latter carried it home . When he cut the loaf of bread he found sparkling piece of gold . Thanking God, He stopped beggig from that day . But the other continued to beg through the city . Puzzled by the beggar's behavior the Emperor summoned him to his presence and asked him ." what have you done with the loaf of bread that I had sent you lately ?" The man replied ," I sold it to my friend , because it was heavy did not seem well baked" Then the emperor said ." Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

Once upon a time there were

முன்னோரு காலத்தில் இரண்டு பிச்கைக்காரர்கள் ரோம் நகரில் வாழ்ந்து வந்நதனர். அதில் முதல் பிச்சைக்காரர் உதவி பெறுபவன். கடவுளால் உதவி பெறுகிறான் என்று கூறி பிச்சை எடுத்து வந்தான். ஆனால், மற்றொரு பிச்சைக்காரன் "உதவி பெறுபவன் மன்னரால் உதவி பெறுகிறான்" என்று கூறி பிச்சை எடுத்து வந்தான். இதைக் கேள்விப்பட்ட மன்னர் அவர் புகழைப் பரப்பிய பிச்சைக்காரனுக்கு உதவி செய்யமுடிவெடுத்து ஒரு ரொட்டித் துண்டில் மின்னும் தங்கக் கட்டிகளை வைத்து தயார் செய்ய உத்தரவிட்டார். பின்னர் அதனை அவரைப் புகழ்ந்த பிச்சைக்காரனுக்கும் பரிசளித்தார். அதனைப் பெற்ற பிச்சைக்காரன் ரொட்டித் துண்டு மிகவும் கனமாக இருந்ததால் தன்னோடு பிச்சையெடுத்த பிச்சைக்கார நண்பனுக்கு விற்று விட்டார். அதை வீட்டில் துண்டாக்கும் போது தங்கக் கட்டிகள் ஒளிர்வதைக் கண்டு மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி சொல்லி அன்றிலிருந்து பிச்சை எடுப்பதை நிறுத்திவிட்டான். முதலாம் பிச்சைக்காரன் தொடர்ந்து பிச்சை எடுக்க அவனை அரசவைக்கு வரவழைத்து மன்னர் விசாரித்தார். "நான் வழங்கிய ரொட்டித் துண்டை என்ன செய்தாய்?" என்று மன்னர் கேட்டார். அதற்கு அவன் தாங்கள் வழங்கிய ரொட்டித் துண்டு மிகவும் கனமாகவும் நன்கு வேகாமலும் இருந்ததால் அதனை என்னுடன் பிச்சை எடுத்த நண்பனுக்கு விற்றுவிட்டேன் என்று கூறினான். அதற்கு மன்னர் "உண்மையாகவே உதவி பெறுபவனுக்கு கடவுள் உதவி செய்கிறார்" எனக் கூறி முதலாம் பிச்சைக்காரனை தனது அரசவையில் இருந்து வெளியேற்றினார்.

## மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக

| | | |
|---|---|---|
| மணக் கோட்டை | - | மதியழகன் தான் பெரிய அமைச்சராக வேண்டும் என்ற **மனக் கோட்டை** கட்டினான். |
| கண்ணும் கருத்துமாக | - | தாய் தன் குழந்தையே **கண்ணும் கருத்துமாக** பார்த்துக் கொண்டார். |
| அள்ளி இறைத்தல் | - | தனக்கு அதிக பணம் இருக்கு என்று **அள்ளி இறைத்தல்** கூடாது. |
| ஆறப் போடுதல் | - | ஒரு சில பிரச்சனைகளை ஆறப் போட்டு செய்தல் வேண்டும். |

## பின்வரும் உரையாடலில் பேச்சு வழக்கினை எழுத்து வழக்கமாக மாற்றுக

"தம்பி? எங்க நிக்கிறே?"

"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!" எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது அங்னனக்குள்ளேயே பேப்பர் படிச்சிக்கிட்டு இரு "நா வெரசா வந்துருவேன்"

"அண்ணே! சம்முவத்தையம் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு"

"அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

"ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்."

"இப்ப ஒசரமா வளர்ந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது !ஊருக்கு எங்கூட வருவாம்பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிட்டேன்". சரிங்கண்ணே.

**விடை**

"தம்பி! எங்கே நிற்கிறாய்

"நீங்கள் கூறிய இடத்தில் தான் அண்ணா!

எதிர் பக்கத்தில் ஒரு தேனீர்க் கடை இருக்கிறது.

"அந்த இடத்திற்குள்ளே தேனீர் அருந்தி விட்டு செய்தித் தாளைப் படித்துக் கொண்டு இரு நாட்களில் விரைவாக வந்து விடுவேன்."

"அண்ணா! சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்து வெகு நாட்களாகியும் விட்டன."

"அவன் பாட்டியோடு வெளியூர் போய் இருக்கிறான். உங்க ஊருக்கே அவனை அழைத்துக் கொண்டு வருகிறேன்."

"மிகச்சிறிய வயதில் பார்த்தது அண்ணா அப்பொழுது அவனுக்கு மூன்று வயது இருக்கும்!"

"இப்போது உயரமாக வளர்ந்து விட்டான் உனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்களுடன் வருவான் பார். சரி தொலைபேசியை வை. நான் புறப்பட்டு விட்டேன்

"சரி அண்ணா,"

## கடிதம் எழுதுக

**உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன . அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையுறுகளை எழுதி ஆவண செய்யும் படி மின் வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர் :**

மு. அன்பரசன்,

34/27 இ பாரதியார் தெரு,

கமுதி அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**பெறுநர்**

மின் வாரிய அலுவலர் அவர்கள்,
தமிழ்நாடு மின் வாரிய அலுவலகம்,
கமுதி அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**பொருள் :**

எங்கள் தெருவில் பழுதடைந்த மின் விளக்குகளை சீர் செய்து தருமாறு வேண்டுதல் தொடர்பாக.

**மதிப்பிற்குரிய ஐயா :**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எங்கள் பகுதியில் சுமார் 2000 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறோம்.

எங்கள் பகுதியில் உள்ள இரண்டாவது மூன்றாவது வார்டுக்குச் சொந்தமான தெருவில் மின் விளக்குகள் பழுதாகி உள்ளன. இதனால் இரவு நேரங்களில் மக்கள் சாலைகளில் அச்சமுடன் செல்ல வேண்டியுள்ளது. வழிப்பறி திருட்டு பயம் அதிகமாக இருப்பதால் விரைவாக மின் விளக்குகளை மாற்றித்தருமாறு வேண்டுகிறோம்.

நன்றி

பாரதியார் தெரு, இப்படிக்கு
25.06.20xx தங்கள் உண்மையுள்ள,
மு. அன்பரசன்.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்,**

மின் வாரிய அலுவலர் அவர்கள்,
தமிழ்நாடு மின் வாரிய அலுவலகம்,
கமுதி அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்.

---

## பா நயம் பாராட்டல்

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்தே
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே
ஆடையிலே எனை மணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே

**- வள்ளலார்**

**ஆசிரியர் குறிப்பு**

"இறையருள் பெற்ற குழந்தை" என்று பிறந்தவுடனே பாராட்டப்பட்ட இராமலிங்கர் என்ற வள்ளலார் தன் அன்பு அறப்பணிகள் மூலம் சமுதாயத்திற்கும் சிறந்த தொண்டாற்றியுள்ளார்.

**மையக்கருத்து**

இறைவனின் உண்மைத் தன்மையை இப்பாடல் அழகாக எடுத்துரைக்கிறது.

**திரண்ட கருத்து**

**"வாழைக்கு குருத்து அழகு**
**கவிதைக்குக் கருத்து அழகு"**

என்பது போல இப்பாடல் கருத்து நயத்துடன் விளங்குகின்றது.

வறண்ட கோடைக்காலத்தில் நான் ஓய்வெடுக்க கிடைத்த குளிர்ச்சி வழங்கும் மரமே மரம் வழங்கும் சுவை மிகுந்த கனியே. நீர் ஓடுகின்ற ஓடையில் ஊறுகின்ற சுவைதரும் தண்ணீரை அந்த நீரினிடையில். மலர்ந்து மணம் வீசும் மலரே, மென்மையான காற்றே அந்தத் தென்றல் காற்றினால் ஏற்படும் இன்பமே என்னை மணந்த மணவாளா அம்பலத்தில் ஆடுகின்ற அரசே என் பூமாலையை அணிந்து கொள்வாயாக.

**தொடை நயம்**

"தொடையற்ற பாட்டு நடையற்று போகும்" என்பதனைக் கருத்தில் கொண்டு இப்பாடல் எதுகை, மோனைகளைத் திறம்பட அமைத்துள்ளார்.

**சீர் மோனை**

கோடையிலே - கொள்ளும் வகை
மேடையிலே - மெல்லிய
ஆடுகின்ற - அரசே - அலங்கள்

**அடிமோனை**

கோடையிலே - குளிர் தருவே ஓடையிலே - உகந்த
மேடையிலே - மென் காற்றில் ஆடையிலே - ஆடுகின்ற

**எதுகை நயம்**

"எது-கை கொடுக்காவிட்டாலும்
எதுகை கை கொடுக்கும்" என்பதற்கேற்ப இப்பாடலில் எதுகை நயம் பயின்று வந்துள்ளது.

**அடி எதுகை**

கோடையிலே - ஓடையிலே
மேடையிலே - ஆடையிலே

**இயைபு நயம்**

செய்யுளில் கடைசிச்சீர் ஒன்றி வரத் தொடுப்பது இயைபு நயமாகும்

தண்ணீரே
காற்றே

**சொல் நயம்**

செய்யுளில் சொல் நயம் சிறப்பாக அமைந்துள்ளது

குளிர் தருவே, தரு நிழலே

**அணிநயம்**

"பெண்ணுக்கு சிரிப்பழகு என்பது போல கவிதை மலருக்கு அணியழகு". என்பதற்கேற்ப இப்பாடல் இயல்பாக அமைந்து இன்பம் பயப்பதால் இயல்பு நவிற்சி அணியாயிற்று

**முடிவுரை**

வள்ளலாரின் பாடலைப் படித்துணர்ந்த நாம் இப்பாடல் தரும் இனிய கருத்துகள் வாழ்வில் பின்பற்றி வாழ்வோமாக.

## மொழியை ஆள்வோம்

**1. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக.**

1. ஒறுத்தார்க்கு **ஒரு நாளை** இன்பம் பொறுத்தார்க்குப்
   பொன்னுந் துணையும் புகழ் **குறள் 156**
2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப **இவ்விரண்டும்**
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு **குறள் 392**
3. தூங்காமை கல்வி துணிவுடைமை **இம்மூன்றும்**
   நீங்கா நிலனாள் பவர்க்கு **குறள் 383**
4. கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
   உடையானாம் வேந்தர் கொளி **குறள் 330**
5. பொறிவாயில் **ஐந்து வித்தான்** பொய்தீர் ஒழுக்க
   நெறி நின்றார் நீடு வாழ்வார் **குறள் -6**
6. படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
   உடையான் அரசருள் ஏறு **குறள் 381**
7. ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
   **எழுமையும்** ஏமாப் புடைத்து **குறள்-398**
8. கோளில் பொறியில் குணமிலவே **எண்குணத்தான்**
   தாளை வணங்காத் தலை **குறள் -9**
9. பல்லார் பகை கொளலிற் **பத்தடுத்த** தீமைத்தே
   நல்லார் தொடர்கை விடல்

## சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக

**1. கானடை**

| | | |
|---|---|---|
| கான் அடை | - | காட்டைச் சேர் |
| கான் நடை | - | காட்டுக்கு நடத்தல் |
| கால் நடை | - | காலால் நடத்தல் |

இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம்

**2. வருந்தாமரை**

| | | |
|---|---|---|
| வரும் + தாமரை | - | வருகின்ற தாமரை (தாமரை மலர்) |
| வரும் +தா +மரை | - | தாவுகின்ற மான் வருகிறது. |
| வருந்தா + மரை | - | துன்புறாத மான் |

**3. பிண்ணாக்கு**

| | | |
|---|---|---|
| பிள் +நாக்கு | - | பிளவுப்பட்ட நாக்கு |
| பிண்ணாக்கு | - | புண்ணாக்கு என்பது கடலை, எள் அரைக்கும் போது கிடைப்பது |

**4.பலகையொலி**

| | | |
|---|---|---|
| பல + கையொலி | - | பல கைகளால் சேர்ந்த ஒலி |
| பலகை + ஒலி | - | பலகையால் ஏற்படும் ஒலி |

**அகராதியில் காண்க**

| | | |
|---|---|---|
| ஆசுகவி | - | விரைவில் கவி இயற்றுவோன், பிறப்புக் கவிஞன் |

மதுரகவி - இலக்கண முறைப்படி கவிதை இயற்றுபவர் அமுதமுறப் பாடும் கவி, இனிய கவி
சித்திரக்கவி - இறைக்கவி, 21 நயங்களோடு கவிதை இயற்றுபவர்
வித்தாரக்கவி - இறை நயங்களில் கவிதை இயற்றுபவர், விரித்து கவிதை இயற்றுபவர்

## கலைச்சொல் அறிவோம்

Belief - நம்பிக்கை
Philosopher - மெய்யியலாளர்
Renaissance - மறுமலர்ச்சி
Revivalism - மீட்டுருவாக்கம்

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



ஈயென இரத்தல் இழிவானது
இரக்கம் இல்லா மனிதன்
ஈனம் உள்ள மனிதனாவான்
போதும் என்ற மனமே
பொருள் பெற வழியாகும்
ஏழைக்கு இரக்கம் காட்டு
ஏங்கும் மக்களை வாழ்வை
ஏற்றமுடன் இருக்கும் உன்வாழ்வு

## நிற்க அதற்குத் தக

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில் பலருடனோ, உடன் பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் சினம் கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம். கேட்கிறோம். கைகலப்பில் ஈடுபடுகிறோம்: இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்.

| நாம்செய்ய வேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களை தேர்ந்தெடுத்துப் பேசுதல் | நட்புடன் நலமாய் வாழலாம் |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல் | தேவையற்ற சண்டையைத் தவிர்த்து ஒற்றுமையுடன் வாழலாம் |
| பழி வாங்கும் எண்ணத்தைக் கைவிடல் | அனைவரிடத்தும் நண்பர்களாகப் பழகி, மன அமைதியுடன் வாழ்ந்ததால் நற்பெயரை எடுக்கலாம் |

## மரபுத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக

**1. பசுமரத்தாணிபோல**

என் இளமைக் காலச் செயல்கள், **பசுமரத்தாணிபோல** நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.

**2. அத்தி பூத்தாற்போல**

பல நாள்களாகப் பள்ளிக்கு வராமல் இருந்த கந்தனை வகுப்பறையில் கண்ட ஆசிரியர், "என்ன **அத்தி பூத்தாற்போல** வந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

**3. ஆயிரங்காலத்துப் பயிர்**

சமுதாயத்தில் திருமண நிகழ்ச்சியை, **ஆயிரங்காலத்ததுப் பயிர்** எனப் போற்றுகின்றார்.

**4. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது**

தொடர்ந்து படித்துப் பல பட்டங்கள் பெற்ற பிறகு வேலை தேடி அலைந்த முகிலன், சென்ற இடத்தில் எல்லாம் 'பணி அனுபவம் உண்டா?' எனக் கேட்டபோது, **ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது** என்பதை உணர்ந்தான்.

**5. அவலை நினைத்து உரலை இடித்தல்**

தேர்தல் நேரத்தில் அளவில்லாமல் வாக்குறுதிகளை அரசியல் வாதிகள் வழங்குவது, **அவலை நினைத்து உரலை இடித்தல்** உள்ளது.

**6. முதலைக் கண்ணீர்**

இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளான மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யாமல், அனுதாபம் தெரிவித்த அரசியல் வாதிகளை சிலரின் செயல், **முதலைக் கண்ணீர்** வடிப்பது போல் இருந்தது.

**7. அவசரக் குடுக்கை**

ஆசிரியரிடம் நல்ல பெயர் எடுக்க மாணவர் சிலர், அவசரக் **குடுக்கைகளாகச்** செயல்பட்டுத் தங்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கிக் கொள்கின்றனர்.

**8. ஆகாயத் தாமரை**

பதவியைப் பிடிக்க எண்ணும் அரசியல் வாதிகள் சிலர் பொது மக்களிடம் தேர்தலின் போது, **ஆகாயத் தாமரையைக்** கொண்டு வருவதாகப் பேசுவார்கள். செய்லபடுத்தமாட்டார்கள்.

**9. கம்பி நீட்டல்**

நிதி நிறுவனங்கள் என்ற பெயரில் தொழில் தொடங்கும் சிலர், பொது மக்களிடம் பணத்தைத் திரட்டிய பிறகு திடீரென்று **கம்பி நீட்டி** விடுகின்றன.

**10. தாளம் போடுதல்**

தங்கள் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ள, அதிகாரிகள் சிலர், அமைச்சர்களுக்குத் **தாளம் போடுதல்** தவறான செயலாகும்.

**11. கானல் நீர்**

வேலை தேடி நேர்காணலுக்குச் சென்ற எழிலனுக்குச் சரியான தகுதி இல்லாததால், அவன் நம்பிக்கை **காணல் நீரானது.**

**12. பஞ்சாய்ப் பறத்தல்**

வெடிச்சத்தம் கேட்டதும், காக்கைகள் **பஞ்சாய்ப் பறத்தல்.**

**13. குட்டிச்சுவர்**

கட்டி முடிக்கப்பட்ட மருத்துவமனை திறக்கப்படாமையால் **குட்டிச்சுவர்** போல் உள்ளது.

**14. கொட்டியளத்தல்**

அமெரிக்கா சென்று வந்ததிலிருந்து காண்பவரிடமெல்லாம், தன் பயணம் பற்றிக் கலைவாணன், **கொட்டியளக்கத்** தொடங்கி விட்டான்.

---

## இயல் 8

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. மேன்மை தரும் அறம் என்பது __________.
2. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது __________.
3. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் __________.

II. விடையளி: 3x2=6

4. 'கொள்வோர் கொள்க குரைப் போர் குரைக்க!
   உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'
   அ) அடியெதுகையை எடுத்து எழுதுக.
   ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக: கொள்க, குரைக்க.
5. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
6. அமைச்சரின் கடமைகளாகச் சங்க இலக்கியம் யாது கூறுகிறது.

III. விடையளி: 2x4=8

7. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
8. மகிழ்ச்சி பெருக என்ன செய்ய வேண்டும்?

IV. விடையளி: 4x5=20

9. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
10. வெண்பாவின் பொது இலக்கணத்தைச் சான்றுடன் விளக்குக.
11. குறிப்புகளைக் கொண்டு நாடகம் எழுதுக.

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

12. 'பா' நயம் பாராட்டுக.

"கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக". - கண்ணதாசன்.

V. அழபிறழாமல் எழுதுக: 1x10=10

13. மாற்றம் எனது மானிட .... எனத் தொடங்கும் காலக் கணிதப் பாடலை எழுதுக.

VI. மொழிப்பயிற்சி: 3x1=3

14. மரபுச் சொல்லை தொடரில் அமைத்து எழுதுக: கண்ணும் கருத்தும்

15. பொருள் தருக: சித்திர கவி.
16. கலைச் சொல் அறிக: Renaissance.

## இயல் 8

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் __________ , __________ .
2. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் __________.
   அ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது.
   ஆ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது.
3. ஆசிரியப்பா __________ வகைப்படும்.

II. விடையளி: 3x2=6

4. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி சான்று தருக.
5. குறிப்பு வரைக: அவையம்
6. சாளரத்தினை எவை எவை பாதிப்புக்கு உள்ளாக்கும்?

III. விடையளி: 2x4=8

7. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில சான்றுகள் தருக.
8. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச் சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

IV. விடையளி: 5x5=25

9. அலகிடுக:
   "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
   கல்லார் அறிவிலா தார்"
10. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



11. ஆசிரியப்பாவின் பொது இலக்கம் தருக.
12. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.
13. 'பா' நயம் பாராட்டுக.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந் தருளே. - வள்ளலார்.

V. மொழிப்பயிற்சிகள்:

14. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக: 1x2=2
    பிண்ணாக்கு
15. மரபுச் சொல்லை தொடரில் அமைத்து எழுது: 1x1=1
    மனக்கோட்டை
16. பொருள் கூறுக: ஆசு கவி 1x1=1
17. கலைச் சொல் அறிக: Belief. 1x1=1
18. இலக்கணக் குறிப்பு தருக: அழித்தல் 1x1=1
19. விடைக்கேற்ற வினா அமை: 1x1=1
    தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.
20. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக: 1x1=1
    வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டன.

இயல் ஒன்பது

மனிதம், ஆளுமை

# அன்பின் மொழி




**கற்றல் நோக்கங்கள்**

- மாற்றுச் சிந்தனைகள் சமூகத்தில் ஒருவரைத் தனித்து அடையாளம் காட்டுவதை உணர்ந்து, அதுபோன்று சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதல்
- மனித மாண்புகளையும் விழுமியங்களையும் வெளிப்படுத்தும் வாயில்களான இலக்கியங்களின் உட்பொருளை அறிய முற்படுதல்.
- நேர்த்தியும் செப்பமும் கொண்ட கதைகளை ஆர்வத்துடன் படிக்கவும் எழுதவும் பழகுதல்.
- ஓர் ஆளுமையை மையமிட்ட கருத்துக்களைத் தொகுத்து முறைப்படுத்திச் சீர்மையுடன் இதழ் வடிவில் வெளிப்படுத்தும் திறன் பெறுதல்.
- அணியிலக்கணக் கூறுகளைச் செய்யுளுடன் தொடர்புபடுத்தி அதன் சுவையுணர்ந்து நயத்தல்.

மனிதம்

சூ

# ஜெயகாந்தன் நினைவு - இதழ்



## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது.**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்.

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது.

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள். **[விடை : பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது]**

**2. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது.**

அ) நம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப் பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார். **[விடை : சமூகப் பார்வையோடு கலைப் பணி புரியவே எழுதினார்]**

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு. நான் எழுதுவதற்கு தூண்டலுக்குரிய காரணம் உண்டு.

## பாடநூல் வினாக்கள் - சிறுவினா

1. **ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றை "தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.**

- ஜெயகாந்தன் தன் பையில் இருந்த ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தில் பன்னிரண்டணாவை இரயில் கட்டணத்திற்காக ஒதுக்கிவிட்டு இரண்டணாவை வைத்து காபி குடிக்கின்றார். மீதமுள்ள இரண்டணாவை என்ன செய்யலாம் என்று யோசிக்கையில், ஸ்டேஷனுக்குள் நுழையும் இடத்தில் ஒரு ஓரமாய் உட்கார்ந்திருந்த அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனைப் பார்க்கிறார். அவன் எதிரே இருந்த அலுமினியப் பாத்திரத்தில் வெறும் செப்புக் காசுகளே கிடந்தன. அவனுக்கு அவர் இரண்டணா பிச்சை போடுகிறார்.
- பின்னர் இரயில் கட்டணம் பதின்மூன்று அணா என்றறிந்து ஒரு அணாவிற்காக என்ன செய்வது என்று யோசிக்கிறார். பிச்சைக்காரனுக்குப் போட்ட இரண்டணாவிலிருந்து ஓரணாவை எடுத்துக் கொள்ளலாமா என்று யோசிக்கிறார். அதற்காக மிகவும் தயங்கி பின்னர் மெதுவாக தைரியம் கொண்டு ஓரணாவைப் போட்டுவிட்டு இரண்டணாவை எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்கிறார். அப்படி எடுத்துக் கொள்ளும்போது பிச்சைக்காரன் அவரை "சாமி, இது தானுங்களா தர்மம்? யாரோ ஒரு புண்ணியவான் இரண்டணா போட்டாரு, அதை எடுத்துக்கிட்டு, ஓரணா போடறியே? குருடனை ஏமாத்தாதே, நரகத்துக்குதான் போவே!"என்று சொல்லவும் நெருப்புக்கட்டியைக் கையிலெடுத்தது போல் அந்த இரண்டணாவை அலுமினியத் தட்டில் மீண்டும் உதறுகிறார். இப்பொழுதாவது அவர் கணக்கில் மூன்றணா தர்மம்.

இவ்வாறு ஜெயகாந்தன் கதை மாந்தரின் மனப் போராட்டத்தை துல்லியமாக சித்தரிப்பதின் மூலம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறியதில்லை.

---

## பாடநூல் வினாக்கள் - நெடுவினா

1. **ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.**

**இதோ! ஓர் அரிய வாய்ப்பு** **இனிமை வார இதழ் வெளியிடும்.**

**சிறுகதை மன்னன்**

**ஜெயகாந்தனின் நினைவுச் சிறப்பிதழ் !**

வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்! உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

மாணவர்களுக்கு சிறப்பு சலுகை உண்டு.

அனைத்து கடைகளிலும் கிடைக்கும்.

முன்பதிவுக்கு / தொலைபேசி எண் 044-45521350

## பொருத்துக

1) சிறுகதை மன்னன் - அ) சாகித்திய அகாதமி விருது
2) யாருக்காக அழுதான் - ஆ) குறும்புதினம்
3) சில நேரங்களில் சில மனிதர்கள் - இ) ஜெயகாந்தன்
4) ரிஷிமூலம் - ஈ) சினிமா **[விடை : 1) இ, 2) ஈ , 3) அ , 4) ஆ]**

## சொற்றொடரில் அமைத்து எழுதுக

**1) வெற்றி**

வாழ்க்கையில் விடா முயற்சி இருந்தால் **வெற்றி** பெற முடியும்.

**2) வாழ்க்கை**

**வாழ்க்கை** என்பது ஒரு போராட்டம். அதை வாழ்ந்து தான் பார்க்கணும்.

**3) அடையாளங்கள்**

ஆதி மனிதர்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை **அடையாளங்களாக** விட்டுச் சென்றனர்.

## விடைக்கேற்ற வினா அமைக்க

**1) தமிழிலக்கிய உலகில் மிகப்பெரிய ஆளுமையாகத் திகழ்ந்தவர் ஜெயகாந்தன்?**

**விடை :** தமிழிலக்கிய உலகில் மிகப் பெரிய ஆளுமையாக திகழ்ந்தவர் யார்?

**2) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன்.**

**விடை :** நான் எதற்காக எழுதிகிறேன்?

**3) வாழ்க்கையின் உரைகல் என்பர் இலக்கியத்தை .**

**விடை :** வாழ்க்கையில் உரைகல் எது?

## சந்திப்பிழை நீக்கி எழுதுக

**1) பிரித்து பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்து சொல்கிறேன்.**

**விடை :** பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன்.

**2) தலைச்சிறந்த உரத்தச் சிந்தனை பேச்சாளாராக திகழ்ந்தார் ஜெயகாந்தன்.**

**வினா :** தலைசிறந்த உரத்த சிந்தனைப் பேச்சாளராகத் திகழ்ந்தார் ஜெயகாந்தன்.

## ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக

**1.ஜெயகாந்தனுக்கு இப்படிப்பட்ட வெற்றிகள் வாழ்கையில் நிறைவே சம்பவித்தது.**

**விடை :** ஜெயகாந்தனுக்கு இப்படிபட்ட வெற்றிகள் வாழ்கையில் நிறையவே **சம்பவித்தன.**

**2.ஜெயகாந்தனின் படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர் வினைகளாக இருக்கின்றது.**

**விடை :** ஜெயகாந்தனின் படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளாக **இருக்கின்றன.**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?**

- குடியரசு தலைவர் விருது - உன்னைப் போல் ஒருவன் - திரைப்படம்
- சாகித்ய அகாடமி விருது - சில நேரங்களில் சில மனிதர்கள் - புதினம்.
- சோவியத் நாட்டு விருது - ( இமயத்துக்கு அப்பால்)
- ஞானபீட விருது, தாமரைத்திரு விருது ஆகியன.

**2. ஜெயகாந்தன் சிறுகதைத் தொகுப்புகள் யாவை?**

- குருபீடம், யுகசந்தி, ஒருபிடி சோறு, உண்மை சுடும், இனிப்பும் கரிப்பும், தேவன் வருவாரா, புதிய வார்ப்புகள் ஆகியன.

**3. ஜெயகாந்தன் இயற்றிய குறும்புதினங்கள் நான்கனைக் குறிப்பிடுக.?**

- ரிஷிமூலம்
- கைவிலங்கு
- சினிமாவுக்குப் போன சித்தாளு
- கருணையினால் அல்ல

**4. திரைப்படமான ஜெயகாந்தனின் படைப்புகள் யாவை?**

- சில நேரங்களில் சில மனிதர்கள்.
- உன்னைப்போல் ஒருவன்.
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்.
- யாருக்காக அழுதான்.

**5. ஜெயகாந்தனின் மொழி பெயர்ப்பு நூல்கள் யாவை?**

- ஒரு கதாசிரியனின் கதை
- வாழ்விக்க வந்த காந்தி.

**6. ஜெயகாந்தனின் இன்னொரு முகம் கவிஞன் என்பதற்குச் சான்று தருக.**

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றி கவிதை எழுதியதே, ஜெயகாந்தன் ஒரு கவிஞர் என்பதற்கு சான்றாகும். எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும் பண்ணொடு சந்தமும் பாய்ந்துவரும் - பழைய மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்.

**7. பாயிரந்தோன்றி மும்மை யினொன்றாய் - இவ்வடிவில் உள்ள மும்மை எவை?**

- இறப்பு
- நிகழ்வு
- எதிர்வு

**8. ஜெயகாந்தனின் சிறப்பான அடையாளங்கள் யாவை?**

நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு, கம்பீரமானகுரல், வளமான புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் படிக்காத மேதை - இவைகள் தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள்.

**9. வெற்றி, தோல்வி குறித்து ஜெயகாந்தன் கருத்து யாது?**

வெற்றி என்ற வார்த்தைக்குப் பொருளில்லை. நினைத்தது நடந்தால் வெற்றி என்பது நினைத்துக் கொள்கிறோம். தோல்வி நிச்சயம் எண்ணித் தோற்றால், அந்தத் தோல்வியே வெற்றிதான்.

**10. ஜெயகாந்தன் குறித்து நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

- ஜெயகாந்தன், சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டகமாகக் காட்டியவர்.
- நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர்.
- உள்ளடக்க விரிவால், மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர்.
- தன்மையறிதல் என்பதிலும், தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர்.

**11. ஜெயகாந்தன் குறித்த தீபம் இதழ் வாசகர்களின் கருத்து என்ன?**

கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புது விளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம்சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம். அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை என்பன ஜெயகாந்தன் எழுத்துக் குறித்துத் தீபம் இதழ் வாசகர்களின் கருத்தாகும்.

**12. ஜெயகாந்தனின் திரைப்படத்திற்கான படைப்புகள் யாவை?**

சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஊருக்கு நூறுபேர், உன்னைப்போல் ஒருவன், யாருக்காக அழுதான் ஆகியன ஜெயகாந்தனின் திரைப்படத்திற்கான படைப்புகள்.

**13. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் குறித்து ஜெயகாந்தன் எழுதிய கவிதையைக் குறிப்பிடுக.**

சில கவிதைகளையும், திரைப்படப் பாடல்களையும் எழுதிய ஜெயகாந்தன், பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் குறித்தும் எழுதிய கவிதை.

எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
பண்ணொடு சந்தமும் பாய்ந்துவரும் - பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்துவரும்.

**14. எழுத்தில் தம்மைப் பெரிதும் பாதிப்பவையாக ஜெயகாந்தன் குறிப்பிடுவது எதை?**

மனத்தாலும் புத்தியாலும் உணர்வாலும் நான் அறிந்து அனுபவப்படாத எதைப்பற்றியும் நான் எழுதுவதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை, மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு, அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியன, மனித வாழ்வின் பிரச்சினைகளே என்கிறார் ஜெயகாந்தன்.

**15. மனிதம் குறித்த ஜெயகாந்தன் பார்வை யாது?**

மனிதம் என்பது, பரந்து விரிந்த வானம் போன்று எல்லைகள் அற்றது. இதை நம்மால் மேற்கொள்ள முடியாது என்று ஒதுங்கிவிடக் கூடாது. ஆறுதல் அளிக்கும் சொற்கள், ஒரு புன்னகை, ஒரு தோல் தட்டல் தன்னால் இயன்ற சிறு உதவி இவையெல்லாம மனிதம் தாம். மனிதத்தின் துளியளவு வெளிப்பாடும் கூட ஏதோ ஒருவகையில் நமக்கு உதவக்கூடும் என்பது, மனிதம் குறித்த ஜெயகாந்தன் பார்வையாகும்.

**16. ஜெயகாந்தன் சிறுகதை மன்னன் என அழைக்கப்படக் காரணம் என்ன?**

ஜெயகாந்தன் தாம் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட சமுதாயச் சிக்கல்கள் பலவற்றை ஆராய எடுத்துச் சொல்ல, தம் பார்வைக்கு உட்பட்ட தீர்ப்பைச் சொல்ல, அவர் மேற்கொண்ட நடவடிக்கையே சிறுகதைப் படைப்பு. அவருடைய படைப்புகள், உணர்ச்சி சார்ந்த எதிர் வினைகளாக இருக்கின்றன. இதுவே அவருக்குச் சிறுகதை மன்னன், என்ற பட்டத்தைத் தேடித்தந்தது.

**17. ஜெயகாந்தனின் சாதனைகளை எடுத்துக் கூறுக.**

- ஜெயகாந்தன், சிறுகதைகள் மட்டுமின்றி குறும்புதினங்களையும், புதினங்களையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் படைத்துள்ளார். தம் கதைகளைத் திரைப்படமாக இயக்கியிருக்கிறார்.

- தலைசிறந்த உரத்த சிந்தனைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். சாகித்திய அகாதெமி விருதையும், ஞானபீட விருதையும் பெற்ற இவருடைய கதைகள், பிற பொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதை, ஜெயகாந்தனின் சாதனைகளாகும்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. ஜெயகாந்தன் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **பெயர்** | : ஜெயகாந்தன் |
| **ஊர்** | : கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பம். |
| **பெற்றோர்** | : தண்டபாணிப்பிள்ளை, மகாலெட்சுமி அம்மாள் |
| **பிறப்பு** | : 24.04.1934 |
| **பணிகள்** | : அச்சகத்தில் பணியாளர், இதழ்கள் விற்பனையாளர், காலணி விற்பனையாளர், படைப்புப்பணி, திரைத் துறைப்பணி, உதவி ஆசிரியர். |
| **படைப்பு** | : சிறுகதைகள், குறும்பு தினங்கள், புதினங்கள், மொழி பெயர்ப்புகள், திரைப்படப் படைப்புகள், கட்டுரைகள், கவிதைகள். |
| **வெளியான இதழ்கள்** | : சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன், குடியரசுத்தலைவர் விருது, ஞானபீட விருது. |
| **புகழ்** | : படிக்காத மேதை, சிறுகதை மன்னன், சிறுகதை வேந்தன், சிறுகதை ஜம்பவான். |
| **இறப்பு** | : 08.04.2015. |

**2. ஜெயகாந்தனின் புகழ்பெற்ற புதினங்கள் யாவை?**

- சுந்தரகாண்டம்.
- பாரிசுக்குப்போ.
- கங்கை எங்கே போகிறாள்.
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்.
- இன்னும் ஒரு பெண்ணின் கதை.
- ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்.

**3. எதற்காக எழுதுகிறேன் என்று ஜெயகாந்தன் விளக்கமளிக்கிறார்?**

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு.
- முழுக்க முழுக்க வாழ்க்கையில் இருந்து நான் பெறும் கல்வியின் முயற்சியின் பயனை வெளிப்படுத்த எழுதுகிறேன்.
- சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவும் எழுதுகிறேன்.
- கலாதேவியின் (கலை) காதல் கணவனாக இருப்பதாலும், சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாக இருப்பதாலும் எழுதுகிறேன் என்று ஜெயகாந்தன் விளக்கம் அளிக்கிறார்.

**4. இலக்கியம் படைப்பது தவம் என்பதை ஜெயகாந்தன் மொழி கொண்டு விளக்குக.**

- பாரீசுக்குப்போ என்ற புதினத்தின் முன்னுரையில் ஜெயகாந்தன் ஒரு தேசத்தின் நாகரிகத்தின், ஒரு காலத்தின், ஒரு வளர்ச்சியின், ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம் ..... ஓர் எழுத்தாளன் ஆத்ம சக்தியோடு எழுதுகிறேன், அது கேவலமான பிழைப்போ ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம்.
- நீங்கள் கதை என்று நினைத்து கொண்டிருக்கிறீர்களே, அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம் என்று எழுதியுள்ளார். இதில் இலக்கியம் படைப்பது தவம் என வலியுறுத்தியுள்ளார்.

மனிதம்

கூ

கவிதைப் பேழை

# சித்தாளு

– நாகூர்ரூமி

TGZQQV



பொற்காலமாக இருந்தாலும்
இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்
தொலைந்ததே வாழ்வு என
தலையில் கைவைத்து
புலம்புவார் பூமியிலே
தன் வாழ்வு தொலைக்காமல்
தற்காத்து வைப்பதற்காய்
தலையில் கைவைக்கிறாள் இவள்.
வாழ்வில் தலைக்கனம்
பிடித்தவர் உண்டு.
தலைக்கனமே வாழ்வாக
ஆகிப்போனது இவளுக்கு.

அடுக்குமாடி அலுவலகம்
எதுவாயினும்
அடுத்தவர் கனவுக்காக
அலுக்காமல் இவள் சுமக்கும்
கற்களெல்லாம்
அடுத்தவேளை உணவுக்காக
செத்தாலும் சிறிதளவே
சலனங்கள் ஏற்படுத்தும்
சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது.

**விளக்கம் :**

இன்றைய காலம் பொற்காலம். இவை உலகில் எல்லோருக்கும் அமைந்தாலும், சித்தாளாக வேலை செய்பவளின் தலையில் எழுதி இருப்பதோ கற்களைச் சுமக்கும் காலம் மட்டுமே. வாழ்வில் பல பேர் எப்போதும் தங்கள் வாழ்வு தொலைத்ததே என்று தலையில் கை வைத்து பூமியில் புலம்புவார்கள். ஆனால், சித்தாளோ தன் வாழ்வைத் தொலைக்காமல் பாரதத்தைச் சுமந்து தன்னைக் காப்பதற்காய் தலையில் கை வைக்கிறாள். வாழ்வில் பணம், பதவி, பட்டம் என்று தலைக்கனம் பிடித்தவர்கள் உண்டு. அனால், சித்தாளுக்கோ தலையில் உள்ள கனமே வாழ்வாக ஆகிப்போனது. அடுக்குமாடி அலுவலகம் போன்ற உயர்ந்த கட்டடம் எதுவாயினும் அடுத்தவர்களுடைய கனவுகளுக்காக அலுக்காமல் சித்தாளு சுமக்கும் கற்களெல்லாம் அடுத்த வேளை உணவுக்குத்தான். சித்தாளுகள் செத்தாளும் மக்களின் மனதில் சிறிதளவே சலனங்கள் ஏற்படும். சித்தாளின் மனதில் ஏற்படுகின்ற சுமைகளை உணர்வற்ற, உயிரற்ற செங்கற்கள் அறியாது.

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும் - இவ்வடிகளில் கற்காலம் என்பது.**

அ) தலைவிதி ஆ) பழையகாலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல்சுமப்பது

**[விடை : தலையில் கல் சுமப்பது]**

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. "வாழ்வில் தலைக்கனம்: "தலைக்கனமே வாழ்வு" என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?**

நாள்தோறும் சுமக்கும் தலைச்சுமைதான் "தலைக்கனமே வாழ்வு" என்று சித்தாளின் வாழ்வைக் குறித்து நாகூர் ரூமி கூறுகிறார்.

## பாடநூல் வினாக்கள் - சிறுவினா

**1. "சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது" - இடச்சுட்டிப் பொருள் தருக.**

**இடம் :**

நாகூர் ரூமி எழுதிய "சித்தாளு" என்னும் கவிதையில் இடம் பெறுகின்ற வரிகள்.

**பொருள் :**

நாகூர் ரூமி எழுதிய "சித்தாளு" என்னும் கவிதையில் சித்தாளாகப் பணிபுரிபவரின் மனச்சுமைகளைச் செங்கற்கள் அறியாது.

**விளக்கம் :**

- சித்தாளாகப் பணிபுரிபவர்களின் வாழ்க்கையின் அவலங்களை நாகூர்ரூமி வர்ணிக்கிறார்.
- கற்கால வாழ்க்கை வாழ்பவன் தலைக்கனமே வாழ்வாகக் கொண்டு ஆள்வான்.
- அடுத்தவர்கள் கனவுக்காக அலுக்காமல் உழைப்பவள்
- அடுத்த வேளை உணவுக்காக அவள் செத்தாலும் பெரிய மாற்றங்கள் உண்டாவதில்லை.

## பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. கப்பலுக்கு போன மச்சான் | - | அ) கவிதை |
| 2. ஏழாவது சுவை | - | ஆ) நாகூர் ரூமி |
| 3. முகமது ரஃபி | - | இ) புதினம் |
| 4. புதிய பார்வை | - | ஈ) இதழ் |

**[விடை : 1-இ 2-அ 3-ஆ 4-ஈ]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. நாகூர் ரூமியின் படைப்புத்தளங்கள் யாவை?**

மொழி பெயர்ப்புக் கவிதைகள், சிறுகதைத் தொகுதிகள், கவிதை, குறுநாவல், மொழிபெயர்ப்பு என பல தளங்களில் நாகூர் ரூமி தொடர்ந்து இயங்கி வருகிறார்.

**2. நாகூர்ரூமியின் படைப்புகள் வெளியான இதழ்கள் யாவை?**

கணையாழி, மீட்சி, சுபமங்களா, புதிய பார்வை, குங்குமம், கொல்லிபார்வை இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.

**3. நாகூர்ரூமியின் கவிதைத் தொகுப்புகள் யாவை?**

நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.

**4. "செத்தாலும் சிறிதளவே**
**சலனங்கள் ஏற்படுத்தும்"**

**அ) இத்தொடரின் ஆசிரியர் யார்?**

நாகூர்ரூமி

**ஆ) இவ்வடிகள் அமைந்த கவிதைத் தலைப்பு?**

சித்தாளு

**இ) சிறிதளவே சலனப்படுத்துவது எது?**

சித்தாளின் மரணம்.

**5. தலைக்கனமே வாழ்வாக ஆகிப்போனது இவளுக்கு ஏன்? யாருக்கு?**

செங்கற்களைச் சுமந்து, சித்தாளுக்குத் தலைக்கனமே ஆகிப்போனது.

**6. யாருடைய தலையெழுத்து கற்காலமானது?**

சித்தாள் பணி செய்பவர் பொற்காலமாக இருந்தாலும் தலையில் செங்கற்களைச் சுமக்க வேண்டியிருப்பதால் அவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான்.

**7. தலையில் கைவைக்கிறாள் இவள்- யார்? தலையில் கைவைப்பது ஏன்?**

சித்தாள் தலையில் கைவைக்கிறாள். தன் வாழ்வைத் தொலைக்காமல் இருப்பதற்காகச் செங்கற்களைத் தலையில் வைக்கிறாள்.

**8. முகம்மது ரஃபியின் இலக்கியப் பணியைக் கூறுக.**

முகம்மது ரஃபி எனும் இயற்பெயரைக் கொண்ட நாகூர்ரூமி, கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் இலக்கியப் பணியாற்றுகிறார்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. நாகூர்ரூமி குறித்து எழுதுக:-**

முகம்மது ரஃபி என்னும் இயற்பெயரைக் கொண்ட நாகூர்ரூமி தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர் இவர் எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர். எம்.ஏ ஆங்கிலம் படித்தவர். பி.எச்.டி பட்டம் பெற்றவர். கடந்த 25 ஆண்டுகளாக ஆங்கிலத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். தாய்மொழி தமிழ் 1980 ஆம் ஆண்டு முதல் எழுத்துப் பணி புரிந்து வருகிறார். மணிச்சுடர், கணையாழி, மீட்சி போன்ற சிறுபத்திரிக்கைகளிலும் குமுதம்,

ஆனந்தவிகடன், கல்கி போன்ற வார இதழ்களிலும் திண்ணை, தமிழோவியம், திசைகள் போன்ற இதழ்களிலும் கட்டுரை, கதை, கவிதை, தமிழாக்கம் என பல வடிவங்களிலும் எழுதி வருகிறார்.

2000 திலிருந்து 2010 வரையில் இவர் 1. நதியின் கால்கள் 2. குட்டியாப்பா (சிறுகதைத் தொகுப்பு) 3. கனவுகளின் விளக்கம் (மொழிபெயர்ப்பு நூல்) 4. ஏழாவது சுவை (கவிதைத் தொகுப்பு) 5. பாரசீக கவிஞானி ஜலாலுதீன் ரூமியின் கதைகள். 6. கவிதைகள் (ஆங்கிலத்திற்கு தமிழாக்கம்) போன்ற படைப்புகளை படைத்துள்ளார். இது போன்ற 28 படைப்புகளை வெளியிட்டுள்ளார். பல மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளார். எழுத்துப்பணி மட்டுமின்றி பல ஊர்களிலும்; Personality Development தொடர்பாக வகுப்புகள் நடத்துகிறார். ஆல்ஃபா தியானப் பயிற்சியும் மாதம் ஒருமுறை சென்னையில் கொடுத்து வருகிறார்.

**2. சித்தாளின் இன்னல்களை விளக்குக**

- இக்காலம் பொற்காலமாக இருந்தாலும் சித்தாள் தலையில் எழுதப்பட்டதோ கற்காலம்.
- தன் வாழ்வைத் தொலைத்துவிடாமல் தன்னைக் காத்துக் கொள்வதற்காக தன் தலையில் கை வைப்பவள் சித்தாள்.
- தலைக்கனமே சித்தாளுக்கு வாழ்வாகிப் போனது.
- அடுத்தவர் வாழ்வை வளமாக்க அலுக்காமல் சுமக்கும் சித்தாளின் மனச் சுமைகளை செங்கற்கள் அறியாது.

**3. 'அலுக்காமல் இவள் சுமக்கும் கற்களெல்லாம்**
**அடுத்த வேளை உணவுக்காக' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல் :**

நாகூர் ரூமியின் சித்தாளு என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் சித்தாள் ஒருவர் கூறுவதாக இவ்வரிகள் இடம் பெற்றுள்ளன.

**பொருள் விளக்கம் :**

அடுக்குமாடி வீடாகவோ அல்லது அலுவலகமாகவோ, எதுவாக இருப்பினும் அடுத்தவர் கட்டும் கட்டிடத்தின் கனவுக்கு அலுப்பில்லாமல் கற்களைச் சுமந்து உழைப்பது எல்லாம் சித்தாளின் அடுத்த வேளை உணவுக்காகத் தான்.

---

## கற்பவை கற்றபின்

**மனிதநேயத்தை வெளிபபடுத்தும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக**

மனிதனையும் விலங்கினையும்
வேறுபடுத்துவது மனித நேயம்தான்
ஆகையால் மனிதனே! என்றும்
மனித நேயத்தைப் போற்றுவோம்!
பல்பொருள் அங்காடியில்
பல்வேறு இளைஞர்கள்
பல்வேறு இன்னல்களை
பலவிதமாக அடைகின்றனர்
புதியதோர் உலகினைப் படைப்போம்!
இன்னல்களைக் கொடுக்கும்
இரக்கமில்லா முதலாளிகளின்
மனிதநேயம் எங்கே?

மனிதம்

கூ

கவிதைப் பேழை

# தேம்பாவணி

– *வீரமாமுனிவர்*

TWIKS7

**முன் நிகழ்வு**

கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை அருளப்பன் என்றும் குறப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார். கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**பாடல்**

**எலிசபெத்து அம்மையார் அடக்கம், கருணையின் கண்ணீர்**



இரங்கி அழும் கருணையனுக்கு இரங்கும் இயற்கை

1. பூக்கையைக் குவித்துப் பூவே
புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே.

2. பொய்மணி யாகக் கூறும்
வாய்மையே மழைநீ ராகித்
தாய்மணி யாக மார்பில்
தயங்கியுள் குளிர வாழ்ந்தேன்
தூய்மணி யாகத் தூவும்
துளியிலது இளங்கூழ் வாடிக்
காய்மணி யாகு முன்னர்க்
காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ.

3. விரிந்தன கொம்பில் கொய்த
வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
இரும்புழைப் புண்போல் நோகப்
பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பில் செல்லும்
தடவிலா தனித்தேன் அந்தோ!

4. உய்முறை அறியேன் ஓர்ந்த
ஊணர்வினொத்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்; மெய்தான்
விரும்பிய உணவு தேடச்
செய்முறை அறியேன் கானில்
செல்வழி அறியேன் தாய்தன்
கைமுறை அறிந்தேன் தாயும்
கடிந்தெனைத் தனித்துப் போனாள்.

**இயற்கை கொண்ட பரிவு**

5. நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன

தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

**விளக்கம்**

1. கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து, "பூமித்தாயே!" என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

2. "என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன். ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணிபோன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!"

3. " என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன். சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்".

4. "நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன். நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன். உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன். காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன். என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!".

5. நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினான். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டான்.

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| செக்கை | - படுக்கை | அசும்பு | - நிலம் |
| கொம்பு | - கிளை | தயங்கி | - அசைந்து |
| யாக்கை | - உடல் | உய்முறை | - வாழும்வழி |
| புழை | - துளை | காய்ந்தேன் | - வருந்தினேன் |
| பிணித்து | - கட்டி | ஓர்ந்து | - நினைத்து |
| கான் | - காடு | கடிந்து | - விலக்கி |
| வாய்ந்த | - பயனுள்ள | உவமணி | - மணமலர் |
| தேம்ப | - வாட | படலை | - மாலை |
| இளங்கூழ் | - இளம்பயிர் | துணர் | - மலர்கள் |

## இலக்கணக் குறிப்பு

**காக்கெண்டு** - "காக்கவென்று" என்பதன் தொகுத்தல் விகாரம்.
**கணீர்** - கண்ணீர் என்பதன் இடைக்குறை விகாரம்.
**மெய்முறை** - வேற்றுமைத் தொகை.
**கைமுறை** - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
**காய்மணி**, **உய்முறை**, **செய்முறை** - வினைத் தொகை
**இளங்கூழ்** - பண்புத்தொகை
**ஒலித்து** - வினையெச்சம்
**அறியேன்** - தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று
**வாழ்ந்தேன்** - தன்மை ஒருமை வினைமுற்று.

## பகுபத உறுப்பிலக்கணம் தருக

**1)அறியேன் = அறி + ய் + (ஆ) +ஏன்**
**அறி** - பகுதி,
**ய்** - சந்தி,
**(ஆ)** - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது.
**ஏன்** - தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று விகுதி.

**2) ஒலித்து = ஒலி + த் + த் + உ**
**ஒலி** - பகுதி,
**த்** - சந்தி,
**த்** - இறந்த கால இடைநிலை.
**உ** - வினையெச்ச விகுதி.

**3) வாழ்ந்தேன் = வாழ் + த் (ந்) + த் + ஏன்**
**வாழ்** - பகுதி,
**த்** - சந்தி,
**த் "ந்"** - ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை,
**ஏன்** - தன்மை ஒருமை வினை முற்று விகுதி

**4) விரிந்தன = விரி + த் (ந்) + த் + அன் + அ**
**விரி** - பகுதி,
**த்** - சந்தி,
**த் "ந்"** - ஆனது விகாரம்,
**த்** - இறந்தகால இடைநிலை,
**அன்** - சாரியை,
**அ** - பெயரெச்ச விகுதி.

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பூக்கையைக் குவித்துப் பூவே பரிவோடு காக்க என்று வேண்டினார்.**
அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக
இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக **[விடை : கருணையன் எலிசபெத்துக்காக]**

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?**

- நெற்பயிர் வளர்ந்து கதிரை ஈன்று நெல்மணிகளைக் காணும் முன்னரே மழைத்துளி இல்லாமல் காய்ந்துவிட்டது போல என்பது உவமை.
- திருமுழுக்கு யோவான், கானகத்தில் தன்தாயார் எலிசபெத் அம்மாளுடன் வாழ்ந்த சூழலில் அவருடைய தாயார் இறந்து விட்டார். எனவே, நெற்பயிர் கதிரை ஈன்று நெல்மணிகள் முற்றுவதற்கு முன்னால் மழையின்றிப் பட்டுப் போனதைப் போல, திருமுழுக்கு யோவான் வளர்ந்து பெரிய மனிதராகி இச்சமுதாயத்திற்கு நற்பலன்களை வழங்குவதற்கு முன்னரே அவருடைய தாய் எலிசபெத் இறந்து போனது, நெற்பயிர் காய்ந்தது என்ற உவமைக்குக் கருத்தாக அமைகிறது.

## சிறுவினா

**1. எவை யெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

- "நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்"
- "நினைந்து கண்ட அறிவனுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்".
- "உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிகளை அறியேன்".
- "காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்" என்று கருணையன் கூறுகிறார்.

## நெடுவினா

**1. கருணையின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**

- எலிசபெத்து அம்மையார் அடக்கம், கருணையன் கண்ணீர், கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று கூறி குழியினுள் அழகிய மலர் படுக்கையைப் பரப்பினார். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன் மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.
- "என் தாய், தன் வாயாலே மணி போன்று கூறும் உண்மையான சொற்களையே மழை நீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணி மாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன், ஐயோ! இளம் பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல் மணிகளைக் காணும் முன்னே தூயமணி போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப் போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!"
- "என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப்பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன். சரிந்த வழுக்கு நிலத்திலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல ஆனேன்."

- "நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன், நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன், உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன், காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன், என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்கவிட்டு விட்டு என் தாய் தான் மட்டும் தனியாகப் போய் விட்டாளே!"

**இயற்கை கொண்ட பரிவு :**

நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினான். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன் மலர்கள் பூத்த மலர்கள் தோறும் உள்ள மணம் வீசும் மலர்களும் மலர்ந்த சுனைதோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போல் கூச்சலிட்டன.

---

## பொருத்துக

1. கான் - அ)துளை
2. புழை - ஆ) படுக்கை
3. சேக்கை - இ) கிளை
4. கொம்பு - ஈ) காடு

**[விடை : 1-ஈ, 2 - அ , 3 - ஆ , 4 - இ]**

---

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. எவையெல்லாம் ஒரு தாய்க்கு ஈடில்லை என்று ஒரு கவிஞர் கூறுகிறார்?**

பசுந்தங்கம், புதுவெள்ளி, மாணிக்கம், மணிவைரம் யாவும் ஒரு தாய்க்கு ஈடில்லை என்கிறார் ஒரு கவிஞர்.

**2. மனிதத்தின் முகவரிகள் யார்?**

துயரத்தைத் தாங்கிக் கொள்ளும் மனங்கள் மனிதத்தின் முகவரிகள்.

**3. எது இருந்தால் ஆறுதல் கிடைக்கும் ?**

சாதாரண உயிரினங்களுக்கும் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் மனிதம் இருந்தால் ஆறுதல் கிடைக்கும்.

**4. கருணையன் குறித்து கூறப்பட்டுள்ள செய்தி யாது?**

- கிறித்துவிற்கு முன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான்.
- இவரை அருளப்பர் என்றும் குறிப்பிடுவர்.
- இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி.
- வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார்.
- கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார்.
- அச்சூழலில் அவருடைய தாய் இறந்தவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்கு கொண்டு கலங்கி ஆறுதல் அளிக்கிறது.

**5. தேம்பாவணி - பொருள் தருக.**

தேம்பாவணி - தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா+ அணி எனப் பிரிந்து தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.

**6. வீரமாமுனிவர் படைத்த இலக்கியங்கள் யாவை?**

சதுர் அகராதி, சிற்றிலக்கியங்கள், தொன்னூல் விளக்கம், உரை நடை நூல்கள், பரமார்த்த குரு கதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள்.

**7. கருணையன் துயரம் எதனைப் போன்றிருந்தது?**

தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது அவர் துயரம்.

**8. தேம்பாவணி குறிப்பு வரைக.**

- இந்நூலினை இயற்றியவர் வீரமாமுனிவர்.
- தேம்பாவணி பெருங்காப்பிய வகை நூல்.
- மூன்று காண்டங்களையும், 36 படலங்களையும், 3615 பாடல்களையும் உடையது.
- இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பை பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூலாகும்.

**9. "அழுங்கணீர் மொழிந்தான் " யார்? ஏன்?**

1. அழுங்கணீர் பொழிந்தவர் திருமுழுக்கு யோவான்.

2.திருமுழுக்கு யோவான் (கருணையன்) தன் அன்னையின் உடலை மண்ணுள் அடக்கம் செய்து, அதன் மேல் மலர்களையும் கண்ணீரையும் ஒன்றாகப் பொழிந்தான்.

**10. கருணையன் இரும்புழைப் புண்போல் நோகக் காரணம் யாது?**

கருணையனின் தாய் இறந்து விட்டார். தாயை இழந்து வாடும் அவர், தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்று வருந்துகின்றார்.

**11. 'நவமணி வடக்கயில் போல்' - அவ்வடிகள் சுட்டும் நவமணிகள் யாவை?**

- கோமேதகம்
- நீலம்
- பவளம்
- மரகதம்
- மாணிக்கம்
- முத்து
- புருபராகம்
- வைடூரியம்
- வைரம்

**12. திருமுழுக்கு யோவான் என்பவர் யார்?**

- கிறித்துவிற்கு முன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான்.
- இவரை அருளப்பன் என்னும் குறிப்பிடுவர்.
- இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி.
- தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் காட்டினில் வாழ்ந்தார்.
- வீரமாமுனிவர் கருணையன் என்று இவரை அழைக்கின்றார்.

**13. எதைப் பகிர்ந்தால் பெருகும்? எதைப் பகிர்ந்தால் குறையும்?**

மகிழ்ச்சியைப் பகிர்ந்தால் பெருகும்

துயரைப் பகிர்ந்தால் குறையும்.

**14. கருணையன், தன் தாயை எவ்வாறு அடக்கம் செய்தான்?**

குழியினுள் அழகிய மலர்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கையை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன் மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

**15. கிறித்துவின் வருகையை அறிவித்தவர் யார்?**

அருளப்பன் என்று குறிப்பிடும் கிறித்துவிற்கு முன்தோன்றிய திருமுழுக்கு யோவான் என்பவரே. கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி ஆவார்.

**16. இயற்கையும் கருணையனுக்கு ஆறுதல் அளித்தது ஏன்?**

தாய் எலிசபெத் அம்மையாருடன் கருணையன், கானகத்தில் வாழ்ந்து வந்தார். அப்போது அவருடைய தாயார் இறந்துவிடவே, கருணையன் புலம்பியதைக் கேட்டு, மரங்களில் உள்ள மணம் வீசும் மலர்களும், பறவைகளும், வண்டுகளும் அழுவது போன்று கூச்சலிட்டு ஆறுதல் அளித்தது.

**17. கருணையன் பூமித்தாயிடம் வேண்டியது என்ன?**

தன் மலர்போன்ற கைகளைக் குவித்துக் கருணையன், பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக என்று வேண்டினான்.

**18. காட்டில் தான் எவ்வாறு வாடுவதாகக் கருணையன் கூறுகிறான்?**

துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போலத் தான் காட்டில் அழுது இரங்கி வாடுவதாகக் கருணையன் கூறுகிறான்.

**19. வீரமாமுனிவர் உருது மொழியைக் கற்றது ஏன்?**

திருச்சியை ஆண்ட சாந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக, வீரமாமுனிவர் இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார்.

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. கருணையன் தன் துயரத்தை எவ்வாறு பிறவற்றோடு ஒப்பிட்டு கூறுகிறார்.?**

- இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளை காணும்முன்னே தூய மணி போன்று தூவும் மழைத்துளி இல்லாமல் வாடி காய்ந்து விட்டதைப் போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேன்.
- என் மனம் பரந்து நின்ற மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான. புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம்.
- துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன்.
- சரிந்த வழுக்கு நிலத்திலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன், என்று ஒப்பிட்டுக் கூறுகிறார்.

**2. வீரமாமுனிவர் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | வீரமாமுனிவர். |
| **இயற்பெயர்** | : | கான்சுடான்சு ஜோசப் பெஸ்கி. |
| **புனைப்பெயர்** | : | தைரியநாதர். |
| **காலம்** | : | கி.பி. 1680 - கி.பி. 1747. |
| **அறிந்த மொழிகள்** | : | இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், ஆங்கிலம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, உருது, சமஸ்கிருதம். |
| **இலக்கியப் பணி** | : | இலக்கண நூல், மொழி பெயர்ப்பு, உரைநடை, சிற்றிலக்கியம். |
| **இயற்றிய நூல்கள்** | : | தொன்னூல் விளக்கம், சதுரர் அதராதி, பரமார்த்த குரு கதைகள், தேம்பாவணி, ஞானோபதேசம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், வேதியர் ஒழுக்கம், கித்தேரியம்மாள் அம்மானை. |

**மறைந்த ஊர்** : அம்பலக்காடு.
**பணி** : எழுத்துப்பணி, மறை போதகர் பணி
**பெற்றோர்** : கொண்டல் போபெசுகி - எலிசபெத்.

**3. 'தூய்மணி யாகத்தூவும்**
**துளியிலது இளங்கூழ் வாடி' என்ற உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.**

**உவமை :**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னர் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்தல்.

**பொருள் :**

கருணையன் தாயை இழந்து வாடுதல்.

**பொருத்தம் :**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னர் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்தல் போன்று கருணையன் தன் தாயை இழந்து வாடுகின்றார்.

**4. கருணையன், தன் துயரத்தை எவ்வாறு பிறவற்றோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்?**

"ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னர் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டதைப் போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே! என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன். சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்" என்று ஒப்பிட்டுக் கூறுகிறார்.

**5. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

- நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்.
- அறிவுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்குத் தேவையான உணவைத் தேடிக் கொணரும் வழிவகை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்.

## கற்பவை கற்றபின்

**1) வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கிப் பணி செய்த இடங்களைப் பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப்பணியைப் பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டுக.**

- வீரமாமுனிவர் 1710 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு வருகை புரிந்து 1747 ஆம் ஆண்டு வரை தமிழ்ப்பணி ஆற்றினார்.
- தமிழகத்தில் சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கணம் கற்று புலமை பெற்றார்.
- இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் தேடிச் சென்று எடுத்ததால், "சுவடி தேடும் சாமியார்" எனவும் அழைக்கப்பட்டார்.
- தமிழின் சிறப்பை மேல்நாட்டார் உணர்வதற்கு திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திசூடி ஆகிய நூல்களை ஐரோப்பிய மொழியில் வெளியிட்டார்.
- இலத்தீன் அகராதியை உருவாக்கினார். இதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீனில் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் "தமிழ் அகர முதலி" (சதுரகாதி) ஆகும்.
- திருக்குறளில் உள்ள அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார்.

- 1728 ஆம் ஆண்டு புதுவையில் இவரின் "பரமார்த்த குருவின் கதை" என்ற நூல் முதன்முறையாக இவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
- தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம், உரை நடை எனப்பிற இலக்கிய வகைகளில் நூல்கள் எழுதியிருப்பது பெருமைக்குரியன.
- வீரமாமுனிவர் தமிழ்ப் பணிகளை மதுரை, திருச்சி, கன்னியாகுமரி, ஆற்காடு - வேலூர், சிவகங்கை, இராமநாதபுரம் என பல்வேறு இடங்களில் தங்கிப் பணியாற்றினார்.

**2) கண்ணதாசனின் இயேசு காவியத்தில் மாலைப் பொழிவுப் பகுதியைப் படித்து அதில் வரும் அறக் கருத்துகளை எழுதுக.**

- எளிய மனதை உடையவர் பெரும்பேறு அடைந்தனர்.
- துயரம் அடைபவர்கள் பெரும்போது அடைந்தவர்களால் ஆறுதல் பெறுவார்கள்.
- வஞ்சகம் இல்லாத நெஞ்சமுடன் பிறரைப் பழி சொல்லாமல் வாழக்கூடியவர் விண்ணரசு எய்துவர்.
- கொடிய செயல் அனைத்திற்கும் மரணம் உண்டு. நெஞ்சத்தை சுடுவார்க்கு நரகமேகிட்டும்.
- சாந்தம் உடையவர் பேறு பெற்றவர்கள், உலகம் முழுவதும் அவர்களுக்கு உரியன.
- ஊருக்குத் தீமைகள் செய்து நீ உள்ளம் மகிழ்ந்திருத்தல் பாவம்.
- பொய் சத்தியத்தை நீக்கி தீமைகள் செய்வதை விட்டு விலக வேண்டும்.
- நீதியின் மேல் பற்றுக் கொண்டு வாழ்பவர்கள் பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்.
- ஒரு கண்ணத்தில் அறைந்தவனுக்கு மறு கண்ணத்தையும் காட்டு.
- மன்னித்துவிட்டால் மன்னிக்கப் படுவீர்கள்.
- கொடுங்கள், அது போல உங்களுக்கும் கொடுப்பார்கள்.
- தூய மனதையுடையவர்கள் சிறப்புப் பெற்றவர்களாவார். தோன்றும் கடவுளை அவர்கள் நேரில் காண்பார்கள்.

விரிவானம்

மனிதம்

கூ

## ஒருவன் இருக்கிறான்

– கு. அழகிரிசாமி

UC2FTI



**1) அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையின் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**

**முன்னுரை :**

ஆதரவின்றி வாழும் நிலை இரக்கத்தக்கது! எப்படிப்பட்டவருக்கும் ஒரு துணை இருக்கும். அந்தத் துணை தான் மனிதத்தின் வேருக்கு நீர். அதில் மனிதம் துளிர்க்கும். யாரையும் அலட்சியப்படுத்தாமல் அனைவரையும் நேசிக்க வேண்டும்.

**குப்புசாமியின் தோற்றம் :**

குப்புசாமிக்கு வயது இருபத்தைந்து இருக்கும். எலும்பும் தோலுமான உடம்பு எண்ணெய் காணாத தலை, காடாக வளர்ந்துள்ளது. சட்டையும் வேஷ்டியும் ஒரே அழுக்கு. சட்டையில் ஒரு பொத்தான்கூட இல்லை. காய்ந்து போன விழிகளில் ஒருவிதமான பயம். தன் நிலையை எண்ணிக் கூசும் ஓர் அவமானம்.

**வயிற்றுவலிக்காரன :**

குப்பச்சாமிக்குத் தாய் தகப்பன் கிடையாது. காஞ்சிபுரத்திலுள்ள தாய் மாமன் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு சைக்கிள் ரிப்பேர்க் கடையில் கூலி வேலை செய்தான். வயிற்று வலி காரணமாக ஆறேழு மாதங்களாக வேலை இல்லை. சம்பாத்தியமும் இல்லை. நோயும் வேறு. தாய்மாமன் விரட்டி விட்டதால் வைத்தியம் பார்ப்பதற்கு சித்தியை நம்பி சென்னைக்கு வந்துள்ளான்.

**பக்கத்து வீட்டுக்காரர் மனைவியின் கரிசனம் :**

சித்தி வீட்டில் படுக்க இடம் இல்லாததால் தன் ஜன்னலுக்கு நேராகப் படுத்திருந்த குப்புசாமியைப் பற்றி பக்கத்து வீட்டுக்காரர் தன் மனைவியிடம் குறை சொன்னபோது "பாவம் நோயாளியாய் இருக்கிறான் கிடந்துட்டுப் போகட்டும்" என்றாள். மிகுந்த இரக்கத்தோடு குப்புசாமியைப் பற்றி தன் கணவர் குறை கூறும் பொழுதெல்லாம் கண்டித்தாள்.

வீரப்பனின் கடிதத்தைப் படித்துவிட்டு ஏழைகள்தான் எவ்வளவு பிரியமாக இருக்கிறார்கள்! என்று உணர்ச்சிவயப்பட்டாள். குப்புசாமியைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போகலாமா? என்று கணவன் கேட்டதும் ஆனந்தமடைந்து பழங்கள் வாங்கிச் செல்லலாம் என்றாள் கனிவுடன்.

**காஞ்சிபுரத்தான் ஆறுமுகத்தின் மனிதம் :**

குப்புசாமியைத் தேடி காஞ்சிபுரத்திலிருந்து ஆறுமுகம் வந்தான். குப்புசாமி வேலை செய்த சைக்கிள் கடைக்கு எதிரே ஒரு விறகுக் கடையில் கூலி வேலை செய்கிறான். குப்புசாமியின் நண்பன் வீரப்பன் கொடுத்தனுப்பிய மூனு ரூபாயையும் ஒரு லெட்டரையும் பக்கத்து வீட்டுக்காரரிடம் கொடுத்து குப்புசாமியிடம் கொடுக்கச் சொன்னான்.

ஒரு நிமிஷம் யோசித்தவன். தன் பிள்ளைகளுக்கு வாங்கிய நாலு சாத்துக்குடி பழங்களிலிருந்து இரண்டு பழங்களை எடுத்துக் கொடுத்தான். மேலும் தன் உபயமாக ஒரு ரூபாய் நோட்டு ஒன்றையும் கொடுத்து குப்புசாமியிடம் சேர்க்கச் சொன்னான். அவன் குப்புசாமிக்காகக் கொடுத்தானோ. குப்புசாமிக்காக காஞ்சிபுரத்தில் கண்ணீர் வடிக்கும் வீரப்பனுக்காகக் கொடுத்தானோ? தெரியாது. ஆனால், அவனிடம் துளிர்ந்த மனிதம் மகத்தானது.

**இடுக்கண் களையும் நட்பு :**

குப்புசாமி நோய் காரணமாக வேலையை இழந்திருந்த சமயத்தில் தாய்மாமன் வீட்டில் துன்பப்பட்டுக் கொண்டிருந்த போது வீரப்பன் தான் அவ்வப்போது சாப்பாடு போடுவானாம், வீரப்பன் ஒரு மேஸ்திரியிடம் சிப்பந்தியாக வேலை செய்பவன். வேலை இல்லாமல்போய் வரும்படியும் இல்லாமல் கஷ்டப்படுகின்ற ஏழையாக இருந்தாலும் கடன் வாங்கியாவது தன் சிநேகிதன் குப்புசாமிக்கு உதவி செய்தானாம்.

**மனிதநேயக் கடிதம் :**

என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு. நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை. நீ உடம்ப சௌக்கியமாகி வர வேண்டும் என்று தினமும் கோயிலுக்குப் போகிறேன். ஆறுமுகம் பட்டணம் போவதாகச் சொன்னதும் கடன் வாங்கி மூன்று ரூபாய் அவனிடம் கொடுத்தனுப்பியிருக்கிறேன். இன்னோரு இடத்திலும் பணம் கேட்டிருக்கிறேன், கிடைத்ததும் பார்க்க வருவேன். உன்னைப் பார்த்தால்தான் நான் தின்னும் சோறு சோறாக இருக்கும் என்று வீரப்பன் எழுதிய கடிதம் அவனது மனித நேயத்தை மிளிரச் செய்கிறது.

**ஒருவன் இருக்கிறான் :**

கடிதத்தைப் படித்த பக்கத்து வீட்டுக்காரரால் நிம்மதியாக உட்கார முடியவில்லை. மனைவியின் எதிரே கண்ணீர் விட வெட்கப்பட்டு அவளிடம் கடிதத்தைப் கொடுத்துவிட்டு குளியல் அறைக்குள் போய் கண்ணீர் சிந்தினார். குப்புசாமி

நலம் பெறப் பொய்யாக வாழ்த்தியதை எண்ணி வருந்தினார். மனைவியிடம் குப்புசாமியைப் பார்க்க நாமும் ஆசுபத்திரிக்குப் போகலாமா? என்று கேட்டு, அவளை ஆனந்தப்படுத்தினார்.

உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்திருக்கும் அந்த புண்ணிய மூர்த்தியைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான். குப்புசாமிக்கு மட்டுமா? எனக்குமே ஒருவனாக அவன் கடைக்குச் சென்றான். வீரப்பனின் கடிதம் கல் நெஞ்சையும் கரைய வைத்து அதில் மனிதத்தைத் துளிரச் செய்தது.

**முடிவுரை :**

மனிதர்கள் அன்பால் பிணைக்கப்பட்டவர்கள். அவர்களின் தலையாயப் பண்பே மனித நேயம்தான். ஒருவருக்கொருவர் ஆதரவாய் அரவணைப்பாய், ஆறுதல்மொழி கூறுபவராய் இருந்தால் வாழ்வே சொர்க்கமாகும். இத்தகு மனிதநேயப் பண்பு மிக்க மனிதர்களால்தான் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறது.

---

## கற்பவை கற்றபின்

**1. சமூகத்தொண்டு செய்து உயர்ந்த விருதுகளைப் பெற்ற ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்கள் செய்த சமூகப்பணி குறித்துக் கலந்துரையாடுக.**

**சமூகத் தொண்டு செய்து உயர்ந்தோர் :**

- அன்னை தெரசா
- ராச்மோகினி தேவி
- பாபா ஆம்தெ
- சிவானந்தா இராஜாராம்
- சுதா மூர்த்தி

**1. அன்னை தெரசா :**

**கலந்து கொள்பவர்கள் :** பாலா, புவனா.

**பாலா** : புவனா சமூக சேவகர் அன்னை தொரசா எங்கு? எப்போது பிறந்தார்? உனக்குத் தெரியுமா?

**புவனா** : ஓ! தெரியுமே. அல்பேனியா நாட்டில் ஆகஸ்டு 26, 1910-ஆம் ஆண்டு பிறந்தார்

**பாலா** : வேறு ஏதேனும் அவரைப் பற்றித் தெரிந்தால் கூறுமே.

**புவனா** : அன்னைதெரசா, உரோமன் கத்தோலிக்க அருட் சகோதரி ஆவார். இவரின் இயற்பெயர் "ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியு" ஆகும். 1950 இல் கொல்கத்தாவில் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறவினார்.

**பாலா** : இவரின் சேவையைப் பற்றிக் கூறு.

**புவனா** : உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அற்றவர்களுக்கும், முடமானவர், விதவைகள், குருடர்கள், தொழுநோயாளர்கள் ஆகியோர்களுக்கு சேவை செய்தார். அனாதை இல்லங்களும், தொண்டு மையங்களும், எய்ட்ஸ் நலவாழ்வு மையங்களும் நிறுவி சேவை செய்தார். ஊனமுற்றோர், அகதிகள், முதியோர், மது அடிமைகள், வறுமையுடையோர் ஆகியோரை ஆதரிக்கும் இடமாக இவரின் நிறுவனங்கள் இன்றும் விளங்கி வருகிறது.

**2. "அகநக நட்பதே நட்பு" என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.**

அல்லிநகரம் என்ற ஓர் அழகிய குக்கிராமம். அங்குள்ள மக்கள் மகிழ்வுடன் சிறந்து வாழ்ந்து வருகிறார்கள். அங்கு அனைத்து வசதிகளும் இருப்பதனால் மக்கள் எந்தக்கவலையும் இன்றி வாழ்கிறார்கள். அவ்வூரில் முரளி என்ற சிறுவன் "உள்ளத்து பொய்யாது ஒழுகின்" என்ற தொடருக்கு ஏற்ப வாழ்ந்து வந்தான். இவனுக்கு பல நண்பர்கள் இருந்தாலும் பக்கத்து வீட்டில் வசிக்கும் பிரபுவின்மீது அன்பும் பாசமும் அதிகம். ஆனால், குடும்பப்பிரச்சனை

காரணமாக இருகுடும்பத்தாரும் ஒருவரை ஒருவர் பேசமாட்டார்கள். இருவரும் அருகில் உள்ள ஊரில் சென்று பள்ளிப் படிப்பை படித்துக்கொண்டு வருகின்றனர். பல்வேறு காலங்களில் சில சூழ்நிலையில் பள்ளியிலும், வெளிப்புறத்திலும் பிரபுவிற்கு முரளி உதவி செய்துள்ளான். ஆனால், இது பிரவிற்குத் தெரியாது.

ஒருநாள் பேருந்தில் இருவரும் பள்ளிக்குச் செல்லும்போது படிக்கட்டில் நின்றிருந்த பிரபு தவறி கீழே விழுந்துவிட்டான். உடனே முரளி அவனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காப்பாற்றினான். இந்த செய்தி கேட்ட பெற்றோர் முரளியை அழைத்து மிக்க நன்றி என்று கூறி கட்டி அரவணைத்துக் கொண்டனர். முரளியின் பெற்றோரும் சகசமாக பேசினர். அன்றிலிருந்து இரு குடும்பமும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

ஒருவரை ஒருவர் முகம் பார்த்துதான் நட்பு கொள்ள வேண்டிய அவசியமட இல்லை. உள்ளத்திலே நல்ல எண்ணம் இருந்தால் போதும். அதே போல் தான் பிரபுவிற்கு முரளி உள்ளத்தால் நட்பு கொண்டிருந்தான் சரியான நேரத்தில் உதவியும் செய்தான்.

வள்ளுவர் கூறுவதைப் போல

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**ஆகநக நட்பதே நட்பு”**

என்று வாழ்ந்து வாழ்வில் வளம் பெறுவோம்!

---

மனிதம் கூ

கற்கண்டு

## அணி

URBET7

### பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. வாய்மையே மழைநீராகி - இத் தொடரில் வெளிப்படும் அணி**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றணி இ) உருவகம் ஈ) தீவகம் **[விடை : உருவகம்]**

### பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. தீவக அணியின் வகைகள் யாவை?**

தீவக அணி, முதல் நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

**2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்

## பாடநூல் வினாக்கள் - சிறுவினா

**1. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.**

**அணி விளக்கம் :**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**எ:கா :**

போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
"வாரல்" என்பன போல் மறித்துக்கை காட்ட

**பாடலின் பொருள் :**

கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பது போல கை காட்டியது என்பது பொருள்.

**அணிப் பொருத்தம் :**

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்ற போது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்றையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து இம்மதுரைக்குள் வரவேண்டாம் என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றி கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

## பொருத்துக

(அ)
1. தற்குறிப்பேற்ற அணி - அ) ஒரு சொல் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருள் கொள்ளல்
2. தீவக அணி - ஆ) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்ளல்
3. நிரல் நிறை அணி - இ) உண்மையான இயல்புத் தன்மை
4. தன்மை அணி - ஈ) கவிஞனின் குறிப்பேற்றல் **[விடை : 1 - ஈ, 2 - அ, 3 - ஆ, 4 - இ]**

(ஆ)
1. சேந்தன - அ) பகை
2. தெவ் - ஆ) சிவந்தன
3. சிலை - இ) பறவை
4. புள் - ஈ) வில் **[விடை : 1 - ஆ , 2 - அ, 3 - ஈ, 4 - இ]**

## கூடுதல் வினாக்கள் - குறுவினா

**1. தன்மையணி என்றால் என்ன?**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அழைத்துப்பாடுவது தன்மையணியாகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர்.

**2. தன்மையணி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தன்மையணி நான்கு வகைப்படும். அவை பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என்பதாகும்.

**3. அணி என்றால் என்ன?**

மக்களுக்கு அழகு சேர்ப்பன அணிகலன்கள். அதுபோன்று செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன அணிகள்.

**4. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் சிறப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**5. தீவக அணி என்றால் என்?**

தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். ஓா அறையில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

**6. தீவக அணியின் வகைகள் யாவை?**

முதல் நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் எனத் தீவக அணி மூன்று வகைப்படும்.

**7. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?**

- இக்குறளில் சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அதே வரிசைப்படி இணைத்துப் பொருள் கொள்ளுமாறு கூறியுள்ளதால், நிரல் நிறை அணி அமைத்துள்ளது.
- இவ்வாழ்க்கையில் அன்பே பண்பு அறமே பயன் என, நிரல்பட வைத்துக் கூறியுள்ளமை காண்க.

**8. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை ஒரு தொடர்களாக்குக.**

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு.
- நான் எழுதுவதற்கு உரிய காரணம் உண்டு

---

## கூடுதல் வினாக்கள் - சிறுவினா

**1. நிரல் நிறை அணியை சான்றுடன் விளக்குக :**

நிரல் - வரிசை, நிறை - நிறுத்துதல்

சொல்லையும், பொருளையும் வரிசையாக அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்ளுவது நிரல் நிறை அணி எனப்படும்.

**சான்று :**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணி பொருத்தம் :**

இக்குறளில் "அன்பும் அறனும்" என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி "பண்பும் பயனும்" என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணிக்கு சிறந்த சான்று.

**2. தீவக அணியை விளக்கி சான்று கூறுக.**

**அணி விளக்கம் :**

தீவகம் என்ற சொல்லுக்கு விளக்கு என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்டுள்ள விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களில் உள்ள சொற்களோடு சென்று பொருந்தி பொருளை விளக்குவதால் இ꞉து தீவக அணி எனப்படும்.

**எ.கா :**

சேந்தன வேந்தன் திருநெடுங்கண் - தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து
திசை அனைத்தும் வீரச் சிலைபொறித்த அம்பும்.
மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து
வேந்தன் கண் சேந்தன

தெவ்வேந்தர் தோள் சேந்தன
குருதி - பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன
அம்பு, சேந்தன
புள்குலமும் வீழ்ந்து
மீசை அனைத்தும் சேந்தன.

**அணிப்பொருத்தம் :**

இவ்வாறாக முதலில் நிற்கும் சேந்தன எனும் சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது.

**3. தன்மையணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.**

**இலக்கணம் :** எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன்உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும்.

**எ.கா :**

மெய்யிற் பொடியும் விளித்த கருங்குழலும்
கையில் தனிச் சிலம்பும் கண்ணீரும் - வையைக்கோள்
கண்டனவே தோற்றாக் அக்காளிகைதான் சொற்செவியில்
உண்டனவே தோற்றான் உயிர்.

**(சிலப்பதிகாரம்)**

**விளக்கம் :**

கண்ணகியின் துன்பம் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

---

## கற்பவை கற்றபின்

**1. முன் வகுப்புகளில் கற்ற அணிகளை எடுத்துக்காட்டுடன் தொகுத்து ஒப்படைவு ஒன்றை உருவாக்குக.**

**உவமையணி :**

"உருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை".

**எடுத்துக்காட்டு உவமைஅணி :**

"புறந்தூய்மை நீரா லமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

**உருவக அணி :**

"இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

**பிறிது மொழிதல் அணி :**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்."

**உயர்வு நவிற்சி அணி :**

"விண்ணைத் தொடும் மலை"

**வேற்றுமையணி :**

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

**சொல் பின்வருநிலையணி :**

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

**பொருள் பின்வரு நிலையணி :**

"அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை ___ மகிழ்ந்திகழ்
-----------------------------------
-----------------------------------

**சொற்பொருள் பின்வருநிலையணி :**

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

" உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

**வஞ்சப்புகழ்ச்சியணி :**

"தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"

**ஏகதேச உருவக அணி :**

"பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

**தற்குறிப்பேற்ற அணி :**

"அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய்விழ
வெள்ளம்தீப் பட்டதென வெரீஇப்பு ள்ளினம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு"

**2. பாடப்பகுதியில் உள்ள திருக்குறளில் பயின்று வரும் அணிகளைக் கண்டறிந்து வகுப்பறையில் விளக்குக.**

**அ) தீவக அணி :**

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" (133)

"மடியுளாள் மாமுகடி என்ப மடியிலாள்
தாளுளாள் தாமரையி னாள்"

**ஆ) உவமையணி :**

"அழுக்கா(று) உடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு"

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால்
தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை"

"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்"

"மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையினாள்"

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து"

"தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்"

"சீருடைச் செல்வர் சிறுதுளி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து"

**இ) சொற்பொருள் பின்வருநிலையணி :**

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"

**ஈ) சொல் பின்வருநிலையணி :**

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"

**உ) எடுத்துக்காட்ட உவமையணி :**

"முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை"

**ஊ) உருவக அணி :**

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

## மொழியை ஆள்வோம்

### படித்து சுவைக்க

"எழுத்தால், பேச்சால், ஆற்றலால், அறிவால், தொண்டால், பண்பால், பணியால், கனிவால் தமிழக வரலாற்றில் குறிக்கப்படும்படியான அந்த அறிஞர் பெருமகனாரின் அருமைத் திருமுகத்தைக் கடைசியாகத் தரிசிக்க வழியெல்லாம் விழியெல்லாம் நீர்தேக்கி ஊர்வலத்தைப் பார்க்கக் காத்திருந்த மக்கள் எத்தனை லட்சம் பேர்! அண்ணாவின் பொன்னுடலை நன்றாகத் தாங்கி வந்த பீரங்கி வண்டி தூரத்தில் வந்தபோதே பொங்கிப் பொருமித் துடித்த உள்ளங்கள் எத்தனை எத்தனை லட்சம்! தமது வாழ்வுக் காலத்தையே ஒரு சகாப்தமாக்கி முடித்துவிட்டுச் சென்ற அந்தப் பேரறிஞர்

திருமுகத்தைக் கண்டதும் குவிந்த கரங்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணீரை அருவியாய்க் கொட்டிய கண்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணுக்கு ஒளியாய்த் தமிழுக்குச் சுவையாய் மக்களுக்கு வாழ்வாய் அமைந்துவிட்ட அந்தத் தலைவரின் இறுதிப் பயணம் சென்ற வழியெல்லாம் மலர் தூவி மாலைகளை வீசிய கரங்கள் எத்தனை எத்தனை லட்சம்! அந்த அறிவுக் களஞ்சியத்தைத் தாங்கிய வண்டி தங்களை விட்டு முன்னோக்கி நகர்ந்தபோது இதயத்தையே, உயிர்மூச்சையே இழந்துவிட்டது போலக் கதறித் துடித்துத் தரையில் புரண்டு புரண்டு புழுவாய்த் துடித்தவர்கள் எத்தனை லட்சம் பேர்கள்!

## மொழிபெயர்க்க

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein.
2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
4. Success is not final. failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

**எ.கா :**

1. பள்ளியில் கற்றபின் எது நமது நினைவில் நிற்கின்றதோ அதுவே கல்வி - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
2. நாளையே இந்த வாரத்தின் மிகப் பரபரப்பான நாள் - ஸ்பானீஷ் பழமொழி
3. நம் வாழ்வில் மிகவும் இருண்ட காலத்தில் தான் நாம் அகவொளியைக் காண முற்பட வேண்டும் - அரிஸ்டாடில்
4. வெற்றி என்பது முடிவல்ல தோல்வி என்பது மரணமல்ல தொடர்ந்து முனைகின்ற துணிவே கணக்கில் உள்ளது - வின்ஸ்டன் சர்ச்சில்.

## உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக

**1. தாமரை இலை நீர் போல**

என் நண்பன் தாமரை இலை நீர் போல பட்டும் படாமலும் பழகுவான்.

**2. மழைமுகம் காணாப் பயிர்போல**

தாயை இழந்த கருணையன் மழை முகம் காணாப் பயிர்போல வாடினான்.

**3. கண்ணினைக் காக்கும் இமைபோல**

காக்கை தன் குஞ்சுக் காக்கையை (பறவையை) கண்ணினைக் காக்கும் இமைபோல காக்கும்.

**4. சிலை மேல் எழுத்து போல**

சிறு வயதில் கற்கும் அடிக்கருத்துகள் சிலை மேல் எழுத்து போல மனதிலே நிலைத்து நின்று நம் வாழ்வை வழி நடத்தும்.

## பொருத்தமான நிறுத்தற் குறியிடுக

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

சேரர்களின் பட்ட பெயர்களில் " கொல்லி வெற்பன்", "மலையமான்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**2. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.**

**வாழ்த்துரை**


**அன்பார்ந்த மாணவர்களே! நாட்டு நலப்பணித்திட்ட தொடக்க விழாவில் உமக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்கிறேன்.**

- ➢ மாணவப் பருவத்திலே உங்களுக்கு நாட்டுப்பற்று சமூக அக்கறை தொண்டுள்ளம் ஆகியவற்றை வளர்ப்பதற்கே நலப்பணித் திட்ட முகாம் நடத்தப்படுகிறது.
- ➢ உங்கள் பள்ளியில் பயிலும் மற்ற மாணவர்களுக்குக் கிடைக்காத பெரிய வாய்ப்பை இங்கு கூடியிருக்கின்ற நீவிர் பெற்றுள்ளீர்! அதற்காக வாழ்த்துகிறேன்.
- ➢ இக்கிராமத்தை தத்தெடுத்து ஒரு வார காலம் தங்கியிருந்து இச்சிற்றூருக்குத் தேவையான சில அறப்பணியைச் செய்துள்ளீர்.
- ➢ கோவில் வளாகம் சுத்தம் செய்தல் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்துதல் (சாலை பாதுகாப்பு நெகிழி ஒழிப்பு போன்றவை) போன்ற அரிய செயல்களைச் செய்யும் நீவிர்!
- ➢ நாளைய சமுதாயத்தின் விடி விளக்குகளாய் சமூக அக்கறை கொண்ட ஆர்வலர்களாய், மனிதநேயம் மிக்கவர்களாய் மாறுவீர்கள் என்பதில் ஐயமில்லை.
- ➢ இந்த நாட்டு நலப்பணித்திட்டம் நடைபெறும் நாட்கள் முழுவதும் முழுமனதுடன் அதில் செயல்பட்டு இச்சமுதாயத்தின் செயல் வீரர்களாய் நீவீர் திகழ வாழ்த்திப் பாராட்டி மகிழ்கிறேன்.

(நன்றி)

---

## குறுக்கெழுத்துப் போட்டி



**இடமிருந்து வலம்**

1. சிறுபொழுதின் வகைகள் ஒன்று (2)
2. நேர் நேர் - வாய்ப்பாடு (2)
11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5)
14. மக்களே போல்வர் ----------- (4)

**வலமிருந்து இடம்**

15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்-ஆசிரியர் (4)
16. மதிமுகம் உவமை எனில் முகமதி -------(5)

**மேலிருந்து கீழ்:**

1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5)
2. மொழிஞாயிறு (9)
3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல்- (5)
4. கழை என்பதன் பொருள்(4)
7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும் (4)
10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு ----- (4)
12. --------- என்பது புறத்திணைகளுள் ஒன்று (4)

**கீழிருந்து மேல்**

5. விடையின் வகைகள் (3)
6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5)
8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் (4)
9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று(6)
13. மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது(7)
17. 96 வகை சிற்றிலக்கிய வகைகள் ஒன்று(7)
18. செய்தவம் - இலக்கணக்குறிப்பு(5)

**இடமிருந்து வலம்**

1. காலை
2. தேமா
11. கலித்தொகை
14. கயவர்

**வலமிருந்து இடம்**

15. ஔவையார்
16. உருவகம்

**மேலிருந்து கீழ்**

1. கார்காலம்
2. தேவநேயப்பாவாணர்
3. குறுந்தொகை
4. மூங்கில்
7. திங்கள்
10. சிங்கம்
12. கைக்கிளை

**கீழிருந்து மேல்**

5. எட்டு
6. தேம்பாவணி
8. செங்கீரை
9. திருக்குறள்
13. மெய்க்கீர்த்தி
17. பிள்ளைத்தமிழ்
18. வினைத்தொகை

**2. பாடலில் இடம்பெற்றுள்ள தமிழப் புலவர்களின் பெயர்கள்:**

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ.

1. கம்பன்
2. உமறுப்புலவர்
3. ஆசுகவி
4. அபுல் காசிம்
5. குணங்குடி மஸ்தான்
6. சேகனாப் புலவர்
7. செய்குத்தம்பி பாவலர்
8. ஜவ்வாதுப்புலவர்
9. சேக்கிழார்.

**3. மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்.**

**சேர்க்கை எண் - 489** **தேதி - 15.06.2019** **வகுப்பும் பிரிவும் - 11- அ**

| | | |
|---|---|---|
| **1. மாணவ / மாணவியின் பெயர்** | : | மு. முருகன் |
| **2. பிறந்த தேதி** | : | 06-08-2003 |
| **3. தேசிய இனம்** | : | இந்தியன் |
| **4. பெற்றோர்/ பாதுகாவலர் பெயர்** | : | முத்துக்குமார் |
| **5. வீட்டு முகவரி** | : | 5/483 பாரதி தெரு |

திருநெல்வேலி.

**6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு** : பத்தாம் வகுப்பு

**7. பயின்ற மொழி** : தமிழ்

**8. பெற்ற மதிப்பெண்கள்** : 498

**9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி** : அரசு மேல்நிலைப்பள்ளி, களக்காடு

| தேர்வின் பெயர் | பதிவு என் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| அரசு பொதுத் தேர்வு | 0467879 | தமிழ் | 100 |
| | | ஆங்கிலம் | 100 |
| | | கணிதம் | 99 |
| | | அறிவியல் | 99 |
| | | சமூக அறிவியல் | 100 |
| | | மொத்தம் | 498 |

**10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா?** : ஆம்

**11. தாய்மொழி** : தமிழ்

**12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும்** : கணிதம், தமிழ்

மாணவ/ மாணவியின் கையெழுத்து

**நன்றியுரை எழுதுக:**


பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம் நடுவிழாவுக்கு" வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் " பசுமைப் பாதுகாப்புப் படை ஸ்ரீ" சார்பாக நன்றியுரை எழுதுக.

- எம் பள்ளி பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக கொண்டாடிக் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி.
- எம் அழைப்பிற்கிணங்க, பல அலுவல்களுக்கு மத்தியிலும் தன் நேரத்தை எங்களுக்காக ஒதுக்கித் தந்து இவ்விழாவை சிறப்பு செய்து கொண்டிருக்கும் வனச்சரக அலுவலர் அவர்களுக்கு எம் நன்றியை உரித்தாக்குகிறேன்.
- அது மட்டுமின்றி, மரம் நடுவதற்குத் தேவையான மரக்கன்றுகளைத் தந்து உதவியதற்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் பெற்றோர்களுக்கும், எம்மை ஊக்குவித்த தலைமை ஆசிரியர்க்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் அமைதி காத்த நண்பர்களுக்கும் எம் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன்.

நன்றி

வணக்கம்!

## விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க




**"சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு" விழா**

**ஜனவரி 18 நெல்லை :**

விருதுநகர் மாவட்டம் தென்காசியில் சாலை திருவில்லிபுத்தூரில் பாதுகாப்பு விழிப்புணர்வு விழா கொண்டாடப்பட்டது. போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் தலைமையேற்றார். சாலைக் குறியீடுகளை விளக்கி குறியீடுகள் உணர்த்துவதை மனதில் கொண்டு கட்டுப்பாட்டுடன் கூடிய வேகத்தில் வாகனத்தை ஓட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். குழந்தைகள், மாணவர்கள் மனதில் சாலை விதிகளை மதித்து விழிப்புணர்வுடன் வளர்க்க அறிவுறுத்தினார். தலைக்கவசம் நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது இருக்கை பெல்ட்டை கட்டாயமாக போட்டுக் கொள்ள வேண்டும் என்றார். நிறைவாக வருகை தந்திருந்த பெரியோர், குழந்தைகள், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இணைந்து "சாலை விழிப்புணர்வை வலியுறுத்தித் தொடர் ஓட்டம்" நிகழ்த்தினர்.

## கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்ட தமிழெண்களால் நிரப்புக

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | ந | ச |
| ரு | சா | எ | அ | சு | க 0 | க க |
| க உ | க ந | க ச | க ரு | க சா | க எ | க அ |
| க சு | உ 0 | உ க | உ உ | உ ந | உ ச | உ ரு |
| உ சா | உ எ | உ அ | உ சு | ந 0 | | |

## அகராதியில் காண்க

குணதான் - முனிவர், நற்குணமுள்ளவன்

செவ்வை - நேர்மை, மிகுதி, வழி, செப்பம், சரியான நிலை

நகல் - சிரிக்கை. மகிழ்ச்சி, நட்பு, படி, ஏளனம்

பூட்கை - கொள்கை, வலிமை, மனஉறுதி, சிங்கம், யானை

## செயல் திட்டம்

மாணவர்களே விளையாட்டு உலகில் உங்களுக்குப் பிடித்த ஆளுமைத்திறன் மிக்க விளையாட்டு வீரர் பற்றிய படங்கள், செய்திகளைத் தொகுத்து தொகுப்பேடு (Album) செய்து கொள்ளுங்கள்.
**(சான்று :** சச்சின் டெண்டுல்கர்)

## காட்சியைக் கண்டு கவிதை எழுதுக



அறம் என்பது
வலக்கைக் கொடுப்பது
இடக்கைக்கு தெரியக் கூடாது - இது
தர்மத்தின் வேர்
அறமும் நியதியும்
அக்காலமும் இக்காலமும் உண்டு
தர்மம் செய்வது விளம்பரமல்ல
தாழ்ந்தோர் உயர்வு பெற
சுயப்படம் எடுத்து
வலைதளம் அனுப்பும்
வழக்கமே இன்று அறமா?

## நிற்க அதற்கு தக

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்ற படியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம் சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம்; தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்!

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவியபோது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மனமகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு! |
| பேருந்தில் பயணம் செய்த போது உடன்பயணம் செய்த முதியோருக்குப் பயணச் சீட்டு எடுத்துக் கொடுத்து உதவியபோது | மனநிறைவும் அவரது முகத்தின் அமைதியும் மகிழ்ச்சியும் என்னையும் மகிழச் செய்தது. |
| ஒரு வேளை உணவு வழங்கிய போது | பசிப் பிணி தீர்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது. |

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| HUMANISM | - மனிதநேயம் | CABINET | - அமைச்சரவை |
| CULTURAL BOUNDARIES | - பண்பாட்டு எல்லை | CULTURAL VALVES | - பண்பாட்டு விழுவியங்கள் |

## கடிதம் எழுதல்

கடிதம் எழுதுவது சிறந்த கலை. அன்றாட வாழ்வில் பயன்படுவது. கற்பனை நயத்தோடு, நேருக்கு நேர் பேசும்போது செய்திகளைத் தெரிவிப்பது போலக் கடிதம் எழுதவேண்டும். பெறுநர் முகவரி முதலிய உறுப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து அமைத்து எழுத வேண்டும்.

### 1. சாதாரணக் கடிதம்

இக்கடிதம் பெற்றோர், உறவினர், நண்பர் ஆகியோருக்கு எழுதப்படுவது அமைப்பு:

1. கடிதத்தின் மேற்புறம் வலப்பக்கத்தில் எழுதுவோரின் வீட்டு எண், தெருப்பெயர், ஊரின் பெயர், நாள் ஆகியன இடம் பெறவேண்டும்.
2. அன்புள்ள அப்பா, யாதினும் இனிய நண்பா என்பன போன்ற விளிச்சொல் இடம் பெறவேண்டும்.
3. நலம் வேண்டலும், கடிதச் செய்திகளும் ஓரிரு பத்திகளில் இடம் பெற வேண்டும்.
4. எழுதி முடித்தபின் கடிதத்தின் கீழே வலப்பக்கத்தில் "தங்கள் அன்புள்ள" என்று எழுதிக் கையொப்பம் இட வேண்டும்.
5. இறுதியில் இடப்புறம் பெறுநர் முகவரியை எழுத வேண்டும்.

### 2. விண்ணப்பம்

இது அரசு, தனியார் அலுவலர்களுக்கு எழுதப்படுவது

**அமைப்பு :**

முதலில் அனுப்புநர் முகவரியும், தொடர்ந்து பெறுநரின் அலுவலக முகவரியும், பின்னர் விளிச் சொல்லும், கடிதச் செய்திகளும் இடம்பெறவேண்டும். கடிதம் எழுதி முடித்த பின்னர், கடிதத்தின் கீழே வலப்புறம் "தங்கள் உண்மையுள்ள" என எழுதிக் கையொப்பமிட வேண்டும்.

> குறிப்பு : தேர்வில் கடிதம், விண்ணப்பங்களின் அமைப்புக்குத் தனியாக மதிப்பெண் வழங்கப்படுவதால் அமைப்பு முறை எழுதுவதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

---

### எழுத்தர் வேலை வேண்டி விண்ணப்பம்

**அனுப்புநர்**

த. கதிரவன்,
100, மறைமலையடிகள் தெரு,
மேலக்கால்,
மதுரை மாவட்டம்.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

**மேதகு ஐயா**

**பொருள்:** எழுத்தர் வேலை தர வேண்டுதல்.

வணக்கம். நான் இளங்கலைப் பட்டம் பெற்றவன். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சும், சுருக்கெழுத்தும் கற்றுத் தேர்ச்சியுற்றவன், படித்து முடித்து ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. இன்னமும் வேலை கிடைக்கவில்லை.

குடும்பத்தில் மூத்தவன் நான். முதுமை எய்திவிட்ட என் பெற்றோரைக் காப்பதோடு, என் தங்கையை மணமுடித்துக் கொடுக்க வேண்டியவனாவும் இருக்கிறேன். எங்களுக்குச் சொந்த வீடோ, நிலமோ இல்லை. வறுமையில் வாடும் எங்கள் குடும்பத்தைக் காக்க, நானும் என் தங்கையும் துணிக்கடை ஒன்றில் வேலை செய்கிறோம். எங்கள் வருவாய் மிகக் குறைவு.

இந்நிலையில் எனக்கு அரசு பணி கிடைத்தால் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். என் கல்வித் தகுதியையும் குடும்ப நிலையையும் கருத்தில் கொண்டு, தங்கள் அலுவலகத்தில் எனக்கோர் எழுத்தர் வேலை வழங்கி உதவுமாறு தங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

மேலக்கால் **தங்கள் உண்மையுள்ள,**

20.04.2019 த. கதிரவன்

---

**களவு போன பொருளை மீட்டுத் தருமாறு**
**காவல் ஆய்வாளருக்கு வேண்டுகோள் மடல்**

**அனுப்புநர்**

கு. அறிவொளி,
143, இராமசாமி தெரு,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

**பெறுநர்**

காவல்துறை ஆய்வாளர்,
காவல்நிலையம்,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

**ஐயா**

**பொருள்:** களவுபோன மிதிவண்டியை மீட்டுத் தர வேண்டுதல்.

வணக்கம். இன்று காலை 10.00 மணியளவில் பெருமாள் கோவில் தெருவிலுள்ள நூலகத்திற்கு மிதிவண்டியில் சென்றேன். 11.00 மணியளவில் வீடு திரும்ப வெளியில் வந்தேன். பூட்டி வைத்திருந்த என் மிதிவண்டியைக் காணவில்லை. அதிர்ந்து போனேன். தேடியும் கிடைக்கவில்லை.

என் மிதிவண்டி "பிலிப்சு" நிறுவனப் படைப்பு. "மில்லர்" நிறுவன மின்விளக்குப் பொருத்தப்பெற்றது. இளம் பச்சை வண்ணம் கொண்ட புதுவண்டி வாங்கி ஒரு வாரந்தான் ஆகிறது. வண்டி எண்.12345.

களவு போன எனது இவ்வண்டியைக் கண்டுபிடித்து மீட்டுத் தருமாறு தங்களை மிகப் பணிவுடன் வேண்டுகிறேன்.

திருவில்லிபுத்தூர் **தங்கள் உண்மையுள்ள,**

26.02.2019 கு.அறிவொளி

**உறைமேல் முகவரி :**

பெறுநர்

காவல்துறை ஆய்வாளர்,
காவல்நிலையம்,

திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

---

**புது வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம்**

**அனுப்புநர்**

எ. கண்ணன்,
100, மறைமலையடிகள் தெரு,
பாவாணர் நகர்,
சிதம்பரம்.

**பெறுநர்**

பொறியாளர் அவர்கள்,
மின் நிலையம்,
சிதம்பரம்.

**ஐயா**

**பொருள் :** புதிதாய்க் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டுதல்.

வணக்கம். மேற்கண்ட முகவரியில் புதிதாய்க் கட்டியுள்ள என் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டும். மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மின்கம்பி இணைப்பு முதலிய எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன.

மின் துறைப்பணியாளர்களின் தணிக்கையும் நிறைவுற்றது. புதிதாய் மின் இணைப்புப் பெறுவதற்குச் செலுத்தவேண்டிய வைப்புத்தொகை செலுத்துவதற்குரிய பற்றுச்சீட்டை இவ்விண்ணப்பத்துடன் இணைத்துள்ளேன்.

தாங்கள் இவ்விண்ணப்பத்தை ஏற்று, விரைவில் மின் இணைப்பு வழங்குமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

சிதம்பரம் **தங்கள் உண்மையுள்ள,**
20.04.2019 எ.கண்ணன்

**உறைமேல் முகவரி :**

பெறுநர்

பொறியாளர் அவர்கள்,
மின் நிலையம்,
சிதம்பரம்.

---

**நூலகம் கேட்டு விண்ணப்பம்**

**அனுப்புநர்**

வி. மணி,
27, இளங்கோ தெரு,
திருநகர்,
மதுரை மாவட்டம்.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

**மேதகு ஐயா**

**பொருள்:** நூலகம் அமைத்து தரக் கோருதல்.

வணக்கம். எங்கள் ஊரில் ஏறக்குறைய 5000 பேர் வசிக்கின்றனர். இங்கு சில பள்ளிகள் உள்ளன. கல்லூரி மாணவர்களும் பலர் உள்ளனர். இங்குள்ள மாணவர்களும் பொதுமக்களும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள நூலகம் இல்லை. "வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்" என்றார் அறிஞர் அண்ணா. ஊருக்காவது ஒரு புத்தகசாலை வேண்டாவா?

மாணவரும் பிறரும் தங்கள் ஓய்வுநேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்கச் சிறந்த இடம் நூலகமன்றோ? மாணவர்கள் தங்கள் பாடத்தொடர்பான செய்திகளை விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுவது நூலகம். "நூல் பல கல்" என்று கூறியுள்ளார் ஔவை. ஆதலால், எங்கள் ஊர்மக்கள் நூல் பல கற்று நுண்ணறிவு பெற்றுச் சிறக்க இங்கு நூலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

திருநகர் **தங்கள் உண்மையுள்ள,**

20.04.2019 வி.மணி

**உறைமேல் முகவரி :**

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

---

**மருத்துவமனை அமைக்கக் கோரி விண்ணப்பம்**

**அனுப்புநர்**

மு. இளவரசன்,
30, பாரதிதாசன் தெரு,
ஐராவத நல்லூர்,
மதுரை மாவட்டம்.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

**ஐயா**

**பொருள்:** மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுதல்.

வணக்கம். எங்கள் ஊரில் ஏறக்குறைய 5000 பேர் வசிக்கின்றனர். எங்களுக்கு இப்போதுள்ள மருத்துவ வசதி போதாது. தனியார் மருத்துவ மனைகள் ஒன்றிரண்டு உள்ளன. வறுமை காரணமாக ஏழையர் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. மதுரையிலுள்ள அரசு இராஜாஜி மருத்துவமனைக்குச் சென்றால் ஊர் திரும்ப அரை நாள் ஆகிவிடுகிறது. இதனால் வேலை கெடுகிறது.

எங்கள் இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அரசு சார்பில் அல்லது எங்கள் ஊர் சார்ந்துள்ள திருப்பரங்குன்றம் பேரூராட்சி சார்பில் எங்களுக்கு மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தருமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஐராவத நல்லூர் **தங்கள் உண்மையுள்ள,**

24.04.2019 மு. இளவரசன்

**உறைமேல் முகவரி :**

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

---

**பேருந்து வசதி வேண்டிக் கூட்டு விண்ணப்பம்**

**அனுப்புநர்**

ஊர்மக்கள்,
மு.வ.நகர்,
மேலக்கால்,
மதுரை மாவட்டம்.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

**மேதகு ஐயா**

**பொருள்:** பேருந்து வசதி கோரல்.

வணக்கம். எங்கள் சிற்றூர் அண்மைக் காலத்தில் மேலக்காலுக்கு மேற்கே 3 கி.மீ தொலைவில் உருவானது. நெசவாளர்கள் இங்கு வாழ்கின்றனர். மேலக்காலிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உறுப்பினராகி, தத்தம் வீடுகளில் நெசவு வேலை செய்துவரும் இவர்கள் நூல் முதலியன பெற்று வரவும். நெய்து முடித்தவற்றைக் கொண்டுபோய்க் கொடுக்கவும் நாள்தோறும் மேலக்கால் சென்றுவர வேண்டியுள்ளது. நகர்ப்பேருந்து வசதி இல்லாததால் நடந்தே சென்று வருகின்றனர்.

இங்குத் தொடக்கப்பள்ளி மட்டும் ஒன்று உள்ளது. எனவே, ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க விரும்பும் பிள்ளைகள் மேலக்கால் நடந்தோ மிதிவண்டியிலோ செல்ல வேண்டும். மிதிவண்டி வாங்கித் தரும் வசதி ஏழை நெசவாளர்களுக்கு இல்லை.

எனவே, இவ்வூருக்கு நகர்ப்பேருந்து வசதி கட்டாயம் வேண்டும். காலை 8.30 மணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை பேருந்து கிடைத்தாலும் போதும். உடனே ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தங்கள் உண்மையுள்ள,**
பு. எழிலரசன்
எ. இராவணன்
இ. மாதவி
மா. மணிமேகலை
(ஊர்மக்கள் சார்பாக)

மு.வ. நகர்
20.04.2019

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

---

**விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற**
**நண்பனுக்குப் பாராட்டு மடல்**

256, பாவாணர் தெரு,
குன்றக்குடி,
சிவகங்கை மாவட்டம்,
27.04.2019.

**ஆருயிர் நண்பா,**

நலம், விழைவதும் அஃதே. இவ்வாண்டு மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகளும் பாராட்டும் பெற்றுள்ள உன்னை எண்ணி மகிழ்ந்து நானும் பாராட்டுகிறேன்.

இளமையிலிருந்தே விளையாட்டார்வம் மிக்க நீ இடைவிடாத முயற்சியால் விளையாட்டுத் திறனை வளர்த்துக் கொண்டாய். ஒவ்வோராண்டும் பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் பல பரிசுகள் பெற்று விளையாட்டு வீரனாகத் திகழ்ந்த நீ இப்போது மாவட்ட அளவிலேயே வெற்றி பெற்றிருப்பது விளையாட்டுத் துறையில் உன் வளர்ச்சியைக் காட்டுகிறது. உன் பள்ளிக்கும், பெற்றோர்க்கும் பெருமை கூட்டுகிறது. வருங்காலத்தில் மாநில விளையாட்டு வீரனாகவும் விளங்குவாய் என்னும் நம்பிக்கை ஊட்டுகிறது. அதை மெய்ப்பித்துக் காட்ட முயல்க! வெல்க!

விளையாட்டு வீரர்களுள் பெரும்பாலோர் படிப்பில் மிகவும் பின் தங்கியிருப்பர். நீயோ படிப்பிலும் முன்னேற்றம் கண்டு வருகிறாய். படிப்பில் ஆறாவது இடத்தில் உள்ள நீ இன்னும் சற்றுக் கடுமையாக உழைத்தால் முதலிடத்திற்கே வரலாம். முயற்சி செய். உயர்ச்சி கொள்.

குன்றக்குடி,
27.04.2019.

**உன்னுயிர்த்தோழன்,**
பு. தமிழன்பன்.

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்**

செல்வன் வ. தான்லி பிரித்தோ,
10, அனுப்பானடிச் சாலை,
மதுரை - 625 009

---

**பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற**
**நண்பனுக்குப் பாராட்டு மடல்**

2362, காமராசர் தெரு,
மானாமதுரை,
26.04.2019.

**நினைவிற்கினிய நண்பா,**

நலம். நாடுவதும் அஃதே. கடந்த வாரம் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் மாநில அளவில் நடத்திய திருக்குறள் பேச்சுப் போட்டியில் நீ முதலிடம் பெற்றுச் சுழற்கேடயத்தைப் பள்ளிக்குப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்துள்ளதை அறிந்து இவ்வெற்றி உன் பெற்றோர்க்கும் பள்ளிக்கும் பெருமை தருவதாகும்.

எந்தக் குறளை எப்படிக் கேட்டாலும் சொல்லும் நினைவாற்றலைப் பெருக்கி வரும் நீ திருவள்ளுவர் கழகப் பேச்சுப் போட்டியில் குறட்கருத்து மலிய, உனக்கே உரித்தான உரத்த குரலில் உயர்தமிழ் நடையில் பேசியிருப்பாய்.

கடந்த ஆண்டு இதே திருவள்ளுவர் கழகச் சுழற்கேடயத்தைப் பெற்ற நீ இந்த ஆண்டும் பெற்றுள்ளாய். அடுத்த ஆண்டும் இதனைத் தொடர்ந்து பெற்றால் இச் சுழற்கேடயம் உன் பள்ளிக்கே நிலையாக உரியதாகிவிடும். அந்த நல்ல வாய்ப்பை நீ தவறவிடமாட்டாய் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணிய ராகப் பெறின்".

என்னும் குறள் உனக்கு நன்றாகவே தெரியும். நினைத்ததை முடிக்க நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

மானாமதுரை, அன்பு மாறா உண்மை நண்பன்,

26.04.2019. எ. புகழேந்தி.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

செல்வன் வ. தான்லி பிரித்தோ,

10, அனுப்பானடிச் சாலை,

மதுரை - 625 009

## கட்டுரை

**மழைநீர் சேகரிப்பு**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. தண்ணீர்த் தட்டுப்பாடு
3. கிராமங்களின் நிலை
4. நகரங்களில் நிலை
5. நன்மைகள்
6. சேமிப்பு வழிமுறைகள்
7. முடிவுரை

**முன்னுரை :**

இயற்கையின் அமைப்பில் நாம் வாழும் பூமிப்பகுதி மட்டுமே மூன்றில் இரண்டு பாகம் தண்ணீரைக் கொண்டுள்ளது. அதனை நம்பியே உயர்திணை, அஃறிணை உயிர்கள் வாழ்கின்றன. அதனாலேயெ திருவள்ளுவர் "நீரின்றி அமையாது உலகு" என்ற நீரின் தேவையை வலியுறுத்துகின்றார். நீருக்கு அடிப்படை மழையாகும். பெய்கின்ற மழைநீரை எவ்வாறு எல்லாம் சேமிக்க வேண்டும் என்று இங்கு காண்போம்.

**தண்ணீர்த் தட்டுப்பாடு :**

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**

**பசும்புல் தலைகாண்ப(து) அரிது"**

மழைதரும் மரங்கள் வெட்டப்படுவதால் மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்வதில்லை. பெய்கின்ற மழையின் அளவும் குறைந்து கொண்டே வருகின்றது. முன்பெல்லாம் மண்தரை அதிகமாக இருந்தது. மழைநீரைத் தரை உறிஞ்சிச் சேமித்துக் கொள்ளும். எந்த இடத்தில் தோண்டினாலும் நீர் ஊறும். இப்பொழுது கிணறுகளும், ஆழ்குழாய் ஆகியன பெருகிவிட்டன. இதனால் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. எனவே, சேமிப்பது அவசியமாகிறது.

**கிராமங்களின் நிலை :**

**"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை"**

கிராமப்புறங்களில் பெய்யும் மழைநீர் வீணாக வழிந்தோடி பயனற்று விடுகிறது. ஆக்கிரமிப்பு மற்றும் பல காரணங்களால், ஊருணிகள், கிராமக்குளங்கள் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்த இயலுவதில்லை. மழைநீரைக் குளங்கள் அல்லது ஏரிகள் உள்ள பகுதிகளுக்கு நீரோடை மூலமாகத் திருப்பி மழைநீரைச் சேமிக்க இயலும். இத்தகைய குளங்களால் சுற்றுப்பகுதியின் நிலத்தடிநீர் பெருமளவில் உயருகின்றது.

**நகரங்களின் நிலை :**

**"மாரியல்லது காரியமில்லை"**

சென்னை போன்ற பெருநகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றைச் சுற்றியுள்ள இடங்கள் திறந்த வெளியாக விடப்படாமல் சிமிண்ட் கான்கிரீட்டால் மூடப்படுகின்றன. இதனால் மொட்டை மாடியிலும், குடியிருப்பைச் சுற்றியுள்ள இடங்களிலும் விழும் மழைநீர் பூமிக்குச் செல்ல வாய்ப்பில்லை. இங்கெல்லாம் மழைநீரை நிலத்தடி நீராகச் சேமிக்க ஆவண செய்ய வேண்டும்.

**நன்மைகள் :**

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை"**

மழைநீரைச் சேமிப்பதால் நிலத்தடிநீரின் அளவு குறையாமல் காக்கலாம். நீர்வளத்தைப் பெருக்கலாம். நிலத்தடி நீரின் தரத்தை உயர்த்தலாம். கடலோரப் பகுதிகளில் கடல்நீர் நிலப்பகுதியில் உட்புகுவதைத் தடுக்கலாம். மேலும், வருங்காலத் தலைமுறையினரைக் குடிநீர்த் தட்டுப்பாட்டில் இருந்து காக்கலாம்.

**சேமிப்பு வழிமுறைகள் :**

**"மழையின்றேல் மன்னுயிர் இல்லை"**

மொட்டை மாடியில் பெய்யும் மழைநீரைக் குழாய் மூலம் கீழே கொண்டுவந்து தொட்டியில் தேக்க வேண்டும். பின்னர் திறந்த வெளிக் கிணறுகளில் இறக்கவிடலாம். திறந்த வெளிக்கிணறுகள் இல்லாத இடங்களில் தேங்கும் நீரைக் குழாய்க் கிணறு தோண்டி அதன் வழி நிலத்தடியில் சேர்க்கலாம். மேலும் கசிவுநீர்க் குழாய்கள், துளையுடன் கூடிய கசிவு நீர்க்குழிகள், கசிவுநீர்ப்படுகை, துளையுள்ள கசிவுநீர்ப்படுகை, குறைந்த விட்டம், அகலமுடைய நீர் ஊற்றுக் கிணறுகள், அதிக விட்டம், அகலமுடைய நீர் ஊற்றுக் கிணறுகள், அதிக விட்டம், அகலமுடைய நீர் ஊற்றுக் கிணறுகள் ஆகியவை மூலம் சேமிக்கலாம்.

**முடிவுரை :**

**"மாமழை போற்றுதும், மாமழை, போற்றுதும்"**

என்று இளங்கோவடிகள் மழையைப் போற்றுகிறார். எனவே, நாம் மழைவளம் பெருக்க மரம் வளர்ப்போம். பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் தடுக்க அரசுடன் ஒத்துழைப்பு கொடுப்போம். ஒவ்வொரு வீட்டிலும் அலுவலகங்களிலும் மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைத்திடுவோம்.

**மழைநீர் !அது நம் உயிர்நீர் !**

**மழைநீரைச் சேமிப்போம் ! நிலத்தடி நீரைப் பெருக்குவோம் !**

---

## 2. சிறுசேமிப்பு

**குறிப்புச்சட்டகம்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 5. | சேமிப்பின் பயன்கள் |
| 2. | சேமிப்பின் இன்றியமையாமை | 6. | சேமிப்புத் திட்டங்கள் |
| 3. | செலவின் வகைகள் | 7. | சேமிப்பில் மாணவர் பங்கு |
| 4. | வீண்செலவுகளைத் தவிர்த்தல் | 8. | முடிவுரை |

**முன்னுரை :**

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை" என்றார் திருவள்ளுவர். "பணம் இல்லாதவன் பிணம்" என்பது பழமொழி. எனவே, மனித வாழ்க்கைக்குப் பணம் மிகவும் தேவை என்பது விளங்கும். அப்பணத்தை ஓடியாடி உழைத்துத் தேட வேண்டும். தேடும் பணம் முழுவதையும் செலவு செய்துவிடாமல் நம் பிற்கால வாழ்க்கைக்கு என்று சிறிது சேமித்து வைக்க வேண்டும். அவ்வாறு சேமித்து வைப்பதின் சிறப்புப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சேமிப்பின் இன்றியமையாமை :**

**"சிறுகக் கட்டிப் பெருக வாழ்"**

என்பது பழமொழி, மலையிலிருந்து புறப்படும் ஆறு கண்டவாறு பாய்ந்தோடிக் கடலில் சென்று கலந்து விடுவதால் என்ன பயன்? அந்நீரே அணைகளில் தேங்கி குளங்களில் நிறைந்து, வாய்க்கால் வழியோடி வயல்களில் பாய்ந்தால், அதில் எவ்வளவு நன்மை !அதுபோல மனிதன் தன் உழைப்பினால் ஈட்டிய ஊதியத்தைத் தனக்கும் நாட்டுக்கும் பயன்படுமாறு சேமித்தல் வேண்டும். தமிழ் இலக்கியங்களில் "எய்ப்பில் வைப்பு" என்றொரு சொல்லைக் காணலாம். தளர்ச்சிக் காலத்தில் உதவுவதற்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள் என்பது இதன் பொருள். எனவே நாம் சேமிப்பது அவசியமாகிறது.

**செலவின் வகைகள் :**

**"அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்**
**சகடக்கால் போல் வரும்" - நாலடியார்**

அன்றாடச் செலவுகள், எதிர்காலச் செலவுகள், எதிர்பாராச் செலவுகள் எனச் செலவு மூன்று வகைப்படும். உணவு, உடை, தொழில் முதலியவற்றுக்காக அன்றாடம் செய்யும் செலவே அன்றாடச் செலவாகும். கல்வி, திருமணம், வீடு கட்டுதல் போன்றவற்றிற்குச் செய்யும் செலவு எதிர்காலச் செலவாகும். நோய், விபத்து ஆகியவை விளைவதால் ஏற்படும் செலவு எதிர்பாராச் செலவு, முதுமை காலச் செலவும் எதிர்கால செலவில் அடங்கும்.

**வீண்செலவுகளைத் தவிர்தல் :**

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகி தோன்றாக் கெடும்".**

என்பது தமிழ்மறை, வறுமையில் வாடுவோரும் மணவிழா, வளைகாப்பு, இறுதிக்கடன் போன்றவற்றை ஆரவாரமாகச் செய்து கடன்படுகின்றனர். புகை, மது, சூது முதலியவற்றால் பொருள் இழப்பாரும் உளர். இத்தகைய வீண் செலவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

**சேமிப்பின் பயன்கள் :**

**"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை" .**

சேமிப்பது சிறந்த பழக்கம். அது வீண் செலவுகள் மற்றும் ஆடம்பரச் செலவுகள் ஆகியவற்றை தவிர்க்கிறது. சேமிக்கும் பணம் நேரடியாக நமக்கும், மறைமுகமாக நாட்டிற்கும் பயன்படுகிறது. முதுமைக் காலத்திலும், அவசர நேரங்களிலும் நமக்கு உதவி புரிகிறது. "ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீட்டுக்காகச் சிறு சேமிப்பின் மூலம் 3,150 கோடி ரூபாய் திரட்டப்பட்டுள்ளது".

**சேமிப்புத் திட்டங்கள் :**

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு".**

என்ற வள்ளுவரின் சிந்தனை அரசுக்கு மட்டுமின்றி தனி மனிதனுக்கு பொருந்தும். மக்களின் நல்வாழ்வுக்கென நமது அரசு பல சிறுசேமிப்புத் திட்டங்களை வகுத்து வெளியிடப்பட்டுள்ளது. மாத ஊதியம் பெறுவோரும், கூலி வேலை செய்வோரும் சேமிக்கின்ற வகையில் அரசாங்கம் பல திட்டங்களை வைத்து உள்ளது. ஆயுள் காப்பீட்டுத் திட்டம், ஏழாண்டு தேசியச் சேமிப்புத் திட்டம், பாதுகாப்பு சேமிப்புத் திட்டம், உயிர் காப்புத் திட்டம் (Insurance) எனப் பல உள்ளன. இதில் சேமிக்கும் பணம் " சிறுதுளி பெருவெள்ளம்" என்பது போல பெருந்தொகையாக நாளடைவில் கிடைக்கின்றன.

**சேமிப்பில் மாணவர் பங்கு :**

**"சேமிப்பு இல்லாத வீடு மேற்கூரை இல்லாத வீடு"**

என்பதை மாணவர்கள் நன்கு உணர வேண்டும். பணத்தை பெரியவர்கள் மட்டுமே சேமிக்க வேண்டும் என்பதில்லை. சிறுவர்களும், மாணவர்களும் சேமிக்கலாம். மாணவர்கள் அஞ்சலகங்களில் சேமிக்கலாம். மேலும், பள்ளியில் தலைமையாசிரியர் கீழ் செயல்படும் "சஞ்சாயிகா" திட்டத்திலும் மாணவர்கள் சேமிக்கலாம்.

**முடிவுரை :**

சேமிப்பும், சிக்கனமும் வாழ்க்கையில் இருகண்கள். சேமிப்பு நமது எதிர்காலத்தை இன்பமாக்குகிறது. இந்தப் பழக்கத்தை இளமை முதலே பெறுவது நல்லது. எனவே, மாணவப் பருவத்திலேயே சேமிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். வருவாய் பெருக்கிச் செலவைச் சுருக்கிச் சேமித்து வைத்தால் "வறுமை அணுகாது , பெருமை அகலாது".

**"வருவாய்க்குத் தக்கசெலவு செய்தல் வளம் பெருக்கும்**
**ஒரு சிறிது ஒதுக்கிவைத்தால் ஓங்குபுகழ், உண்டாக்கும்".**

---

## 3. காலத்தை வெல்லும் கணினி

**குறிப்புச் சட்டகம் :**

1. முன்னுரை
2. கணினியின் தோற்றம்
3. கணினியின் செயற்பாடு
4. கணினியின் ஆற்றல்
5. பயன்கள்
6. இணையம்
7. முடிவுரை

**முன்னுரை :**

**"உயிர் வகைகள் அனைத்திலும் மனிதன் மட்டுமே கருவிகளைப் படைக்கும் ஆற்றல் உள்ளவன்"** என்றார் ஆம்பிரெட் வாலஸ் மனித நாகரிக வளர்ச்சியில் மூன்று முக்கியக் கட்டங்களைக் காணலாம். அவை வேளாண்மை யுகம், தொழில் யுகம், கல்வி யுகம். இப்போது நடப்பது கல்வி யுகம். இந்த யுகத்தில் மனிதனின் அரிய கண்டுபிடிப்பே கணினி. மனிதனின் வேலைப் பளுவைக் குறைத்து விரைவில் செயற்படுவதற்கு உறுதுணையாக இருப்பதால் " திரும்பும் திசையெங்கும் கணினி" என்ற நிலை உருவாகி இருக்கிறது.

**கணினியின் தோற்றம் :**

**கணினியை நம்புங்கள், கணினி உங்கள் நண்பன்**

**"கம்ப்யூட்டர் டிஜிட்"** ஆகிய இரண்டு சொற்களும் இலத்தீன் மொழிச் சொற்களாகும். "கம்ப்யூட்டர்" என்றும் சொல்லுக்கு கணக்கிடுதல் என்று பொருள். கணக்கிடுவதற்காக 1821 ஆம் ஆண்டு "சார்லஸ் பாபேஜ் (Charles Babbage)" ஒரு புதுவகையான கருவியை உருவாக்கினார். இதற்கு முன்னோடியாக இருந்தது. **"அபாக்கஸ்"** என்னும் கருவி பாபேஜ் "கணினியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்." நவீன கம்ப்யூட்டரை 1945 இல் "ஜான்வான் நாய்மன் (John Von Neuman) என்பவர் வடிவமைத்தார்.

**கணினியின் செயற்பாடு :**

**" மனிதர்கள் தவறு செய்யலாம்.**
**கணினி செய்வதில்லை"**

கணிப்பொறி நாம் தரும் கட்டளைக்குக் கீழ்ப்படித்து செயற்படும் கருவியாகும். அதில் "புரோகிராம் (Programme)" என்னும் செயல்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. கணிப்பொறியால் தானே எதையும் சுயமாகச் செய்ய முடியாது. அதன் செயல்பாடுகளை மனிதன் தானே வகுத்துத் தர வேண்டும். கணினியில் உள்ள உள்ளிடு அலகுகள் (Input Unit) செய்திகளைப் பெறுகின்றன. மையவகை செய் அலகு (Central Processing Unit) ஒழுங்குப்படுத்தி உத்தரவிடுகிறது. வெளியிடு அலகுகள் (Output Unit) முடிவுகளை வெளியிடுகின்றன.

**" கணினி அறிவியல் என்பது கணினியைப் பற்றியது**

**அல்லது அது வாழ்வைப் பற்றியது".**

**கணினியின் ஆற்றல் :**

**" வளரும் உடலுக்கு உயிரைப் போல**
**உலக வாழ்க்கைக்கு கணினி வேண்டும்"**

கணினி ஓய்வு ஒழிவின்றி உழைக்கும் ஆற்றல் பெற்றது. அதற்குச் சோர்வு, உறக்கம் ஏதுமில்லை. துல்லியம், விரைவு, நினைவாற்றல், நம்பகத்தன்மை ஆகியவை அதன் செயலாகத்தில் அடங்கியுள்ளன. ஒரு கணிப்பொறி ஓராயிரம் பேர் செய்யும் பணியைச் செவ்வனே செய்து முடித்துவிடும். கணிப்பொறிக்கு மொழியுண்டு, விழியுண்டு, சிந்தனையுண்டு, செயலுண்டு, ஒளியுண்டு, உழைப்பும் உண்டு, ஆனால் ஓய்வில்லை.

**பயன்கள் :**

**"நான் கணினியைக் கண்டு அஞ்சவில்லை கணினி இல்லையென்றால் என்ன ஆகும் என்றே அஞ்சுகிறேன்".**
**- ஐசக் அசிமொவ்**

கணினி முதலில் கணக்கு மட்டுமே செய்ய பயன்பட்டது. ஆனால் இன்று வானூர்தி ஏவுகணை, இராக்கெட்டு போன்ற சாதனங்களைக் கணினி இயக்குகிறது. பெரிய தொழிற்சாலைகளில் இயந்திரங்களை இயக்க கட்டுப்படுத்தப் பயன்படுகிறது. மருத்துவத் துறையில் நோய் அறி ஆய்வுகளை நுட்பமாகச் செய்து தருகின்றது. வானில் செயற்கைக் கோள்களைக் கட்டுப்படுத்துகிறது செய்தித்தாள், அழைப்பிதழ்கள், புத்தகங்கள் போன்றவற்றில் இலட்சக்கணக்கான படிகளை விரைவாக வெளியிடக் கணினி பயன்படுகிறது.

**இணையம் :**

இணையம் கணினியோடு தொடர்புடையது. இணையத்தின் பயன்கள் அளவற்றவை. அவற்றுள் இன்றியமையாத ஒன்று இ.மெயில் (E-mail) பல நிறுவனங்கள் தகவல் பரிமாற்றத்திற்காக இதைப் பயன்படுத்தப்படுகின்றன. இணைய வலையகங்கள் (Internet website) மூலமாகப் பல நிறுவனங்கள் தம் நிறுவனத்தின் வரலாற்றை, பொருள்களை விரிவாகத் தந்துள்ளன.

**முடிவுரை :**

நம்மை எதிர்நோக்கியிருக்கும் ஐந்தாவது தலைமுறையில், இட்ட பணியைச் செய்யவல்ல கணிப்பொறி தானாகச் சிந்திக்கும் திறனையும் பெறவிருக்கிறது. இவ்வாறு காலையில் எழுந்தவுடன் பயன்படுத்தும் பற்பசை பத்திரிக்கை முதல் இரவில் படுக்கச் செல்லும் படுக்கையறை வரை கணினி அன்றாட வாழ்வில் பயன்படுகின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் ஒவ்வொரு வீட்டிலும் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி போலக் கணினியும் பயன்படுத்தும் நிலை வந்துவிடும் என்பதில்லை ஐயமில்லை.

**" காலத்தை வென்ற கணினி, இனி நாட்டையும்**
**வெல்லும், வீட்டையும் வெல்லும்".**

---

## 4. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**குறிப்புச் சட்டம்:**

1. முன்னுரை
2. தூய்மையின் இன்றியமையாமை
3. நிலத்தூய்மை
4. நீர்த்தூய்மை
5. காற்றுத்தூய்மை
6. ஓர் ஆய்வறிக்கை தரும் விபரம்
7. மாணவர் கடமை
8. முடிவுரை

**முன்னுரை :**

ஒவ்வொருவரின் உடல், உணவு, உடை, உறைவிடம் ஆகியன தூயனவாக இருக்க வேண்டும். அனைத்து உயிர்களும் நிலம், நீர், காற்று ஆகிய மூன்றையும் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. "கந்தையானாலும் கசக்கிக் கட்டு",

"சுத்தம் சோறு போடும்" என்பன தூய்மையை வலியுறுத்தும் அமுத மொழிகளாகும். "நோய்க்கு இடங்கொடல்" என்பது ஔவையாரின் ஆத்திச்சூடி நலமான வளமான வாழ்விற்கு சுற்றுச்சூழலில் தூய்மை இன்றியமையாதது ஆகும்.

**தூய்மையின் இன்றியமையாமை :**

"நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தைப் பெற வேண்டுமென்றால் சுற்றுப்புறம் தூய்மையாக இருக்க வேண்டும். இந்தியாவில் பெரும்பான்மையான கிராம மக்கள் சேரிகளிலும் தண்ணீர் தேங்கிய தாழ்வான பகுதிகளிலும் வாழ்கிறார்கள். சுற்றுப் புறங்களில் குப்பைக் கூளங்கள் தேங்கியுள்ளன. இந்நிலையில் மக்கள் நோய்வாய்ப்பட்டுத் துன்புறுகிறார்கள்.

**நிலத்தூய்மை:**

**"வெற்றிடமின்றிக் குவித்து வைக்கும்**
**வேண்டாக் குப்பையைத் தவிர்த்திடுவோம்" - பூங்கோவன்**

பெரிய நகரங்களில் அன்றாடம் சேரும் திடக்கழிவுப் பொருள்களால் நிலம் மாசுபடுகிறது. கண்ட இடங்களில் குப்பைகளைக் கொட்டாமல் அவற்றை உரிய குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். பொது இடங்களில் சிறுநீர், மலம் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும். விவசாயத்திற்காகப் பயன்படும் இரசாயண உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றை அளவாகப் பயன்படுத்த வேண்டும்.

**நீர்த்தூய்மை :**

**" தாயைப் பழித்தாலும்,**
**தண்ணீரைப் பழிக்காதே"**

சாக்கடை நீரை தெருக்களில் ஓட விடாமல் செடிகள் நட்டு அவற்றிற்குப் பாய்ச்சலாம். பாதாளச் சாக்கடை அமைக்கலாம். தொழிற்சாலைகளிலிருந்தும் வெளிவரும் கழிவு நீர் நீர்நிலைகளில் கலப்பதால் அவை மாசு அடைகின்றன. எனவே அவற்றைத் தொட்டிகளில் தேக்கி நச்சுத்தன்மையை நீக்கி வெளிவிட வேண்டும்.

**காற்றுத்தூய்மை :**

**"புகை நம் உயிருக்குப் பகை"**

வாகனங்கள், தொழிற்சாலைகள், அனல்மின் நிலையங்கள், அணுமின் உலைகள் முதலியவற்றால் வெளிப்படும் புகை, தூசு, சாம்பல், கதிர்வீச்சு முதலியன காற்றைப் பாழ்படுத்துகின்றன. எனவே, நாம் மாசுபட்ட காற்றையே உட்கொள்ள முடிகிறது. இந்த நச்சுவாயுக்கள் நீருடன் வினைபுரிந்து கந்தக அமிலக்கரைசலாக மாறும். இது அமில மழையை உருவாக்கும். அமில மழை தாவரங்களுக்கும் நீர்வாழ் உயிர்களுக்கும் நஞ்சாகிறது.

**ஓர் ஆய்வறிக்கை தரும் விபரம் :**

கங்கை, காவிரி, நாட்டில் ஓடும் எல்லா ஆறுகளிலும் தூய்மையற்ற நீரும், சாக்கடைக் கழிவு நீரும் கலந்து தூய்மைக்கேடு ஏற்பட்டுள்ளது எனவும், அதன் காரணமாக அறுபது விழுக்காடுகளுக்கு மேற்பட்ட நோய்கள் தண்ணீர் மூலமாகப் பரவி வருவதாகவும் ஒருசுற்றுச்சுழல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

**மாணவர் கடமை :**

"உலக மக்கள் இன்பமுற சுற்றுச்சூழல் தூய்மைபெற வேண்டும்" என்பதை மாணவர்கள் தங்கள் மனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் இன்றியமையாமையை மக்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். கண்ட இடங்களில் துப்புதல், குப்பைக் கொட்டுதல், சிறுநீர், மலங்கழித்தல் முதலியவற்றை தவிர்க்குமாறு அறிவுறுத்தலாம். குடிநீரைக்காய்ச்சிப் பருக வேண்டியதன் அவசியத்தை உணர்த்த வேண்டும். அவற்றை நாடகங்கள், திரைப்படங்கள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் விளக்கலாம். விதிகளுக்கு மாறாகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டாலும், செயற்பட்டாலும் அதனை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

**முடிவுரை :**

ஒவ்வோராண்டும் "ஜூன் ஐந்தாம் நாளை" உலகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடி வருகிறோம். ஒவ்வொரு நாளும் நம் இருப்பிடத்தையும், சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், நம்மை நோய்கள் நெருங்கும், நம் வாழ்நாள் சுருங்கும்.

**"புறத்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை**
**வாய்மையாற் காணப்படும்".**

என்றும் வள்ளுவர் வாக்கை என்றும் மறவாமல் அறமும், புறமும் தூய்மை காப்போம்.

---

## அலகிடுதல்

**01. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்**
**சார்பிலார்க் கில்லை நிலை.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | முத/லிலார்க் | நிரை, நிரை | கருவிளம் |
| 2. | கூ/திய | நேர், நிரை | கூவிளம் |
| 3. | மில்/லை | நேர், நேர் | தேமா |
| 4. | மத/லை/யாம் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 5. | சார்/பிலார்க் | நேர், நிரை | கூவிளம் |
| 6. | கில்/லை | நேர், நேர் | தேமா |
| 7. | நிலை | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**02. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பல்/லார் | நேர், நேர் | தேமா |
| 2. | பகை/கொள/லிற் | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 3. | பத்/தடுத்/த | நேர், நிரை, நேர் | கூவிளங்காய் |
| 4. | தீ/மைத்/தே | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 5. | நல்/லார் | நேர், நேர் | தேமா |
| 6. | தொடர்/கை | நிரை, நேர் | புளிமா |
| 7. | விடல் | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**03. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பொரு/ளல் | நிரை, நேர் | புளிமா |
| 2. | லவ/ரைப் | நிரை, நேர் | புளிமா |

| | | | |
|---|---|---|---|
| 3. | பொரு/ளா/கச் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 4. | செய்/யும் | நேர், நேர் | தேமா |
| 5. | பொரு/ளல்/ல | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 6. | தில்/லை | நேர், நேர் | தேமா |
| 7. | பொருள் | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**04. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | இல்/லா/ரை | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 2. | எல்/லா/ரும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 3. | எள்/ளுவர் | நேர், நிரை | கூவிளம் |
| 4. | செல்/வரை | நேர், நிரை | கூவிளம் |
| 5. | எல்/லா/ரும் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 6. | செய்/வர் | நேர், நேர் | தேமா |
| 7. | சிறப்/பு | நிரைபு | பிறப்பு |

**இக்குறள் "பிறப்பு" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**05. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பொரு/ளென்/னும் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 2. | பொய்/யா | நேர், நேர் | தேமா |
| 3. | விளக்/கம் | நிரை, நேர் | புளிமா |
| 4. | இரு/ளறுக்/கும் | நிரை, நிரை, நேர் | கருவிங்காய் |
| 5. | எண்/ணிய | நேர், நிரை | கூவிளம் |
| 6. | தே/யத்/துச் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 7. | சென்/று | நேர்பு | காசு |

**இக்குறள் "காசு" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**06. அறினீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அற/னீ/னும் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 2. | இன்/பமும் | நேர், நிரை | கூவிளம் |
| 3. | ஈ/னும் | நேர், நேர் | தேமா |
| 4. | திற/னறிந்/து | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 5. | தீ/தின்/றி | நேர், நேர், நேர் | தேமாங்காய் |

| | | | |
|---|---|---|---|
| 6. | வந்/த | நேர், நேர் | தேமா |
| 7. | பொருள் | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

07. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அரு/ளொடும் | நிரை, நிரை | கருவிளம் |
| 2. | அன்/பொடும் | நேர், நிரை | கூவிளம் |
| 3. | வா/ராப் | நேர், நேர் | தேமா |
| 4. | பொரு/ளாக்/கம் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 5. | புல்/லார் | நேர், நேர் | தேமா |
| 6. | புர/ள | நிரை, நேர் | புளிமா |
| 7. | விடல் | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

08. உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | உறு/பொரு/ளும் | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 2. | உல்/கு | நேர், நேர் | தேமா |
| 3. | பொரு/ளுந்/தன் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 4. | ஒன்/னார்த் | நேர், நேர் | தேமா |
| 5. | தெறு/பொரு/ளும் | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 6. | வேந்/தன் | நேர், நேர் | தேமா |
| 7. | பொருள் | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

09. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியால் உண்டு.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அரு/ளென்/னும் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 2. | அன்/பீன் | நேர், நேர் | தேமா |
| 3. | குழ/வி | நிரை, நேர் | புளிமா |
| 4. | பொரு/ளென்/னுஞ் | நிரை, நேர், நேர் | புளிமாங்காய் |
| 5. | செல்/வச் | நேர், நேர் | தேமா |
| 6. | செவி/லியால் | நிரை, நிரை | கருவிளம் |
| 7. | உண்/டு | நேர்பு | காசு |

**இக்குறள் "காசு" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**10. குன்றேறி யானைப் போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | குன்/றே/றி | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 2. | யா/னைப்/போர் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 3. | கண்/டற்/றால் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 4. | தன்/கைத்/தொன் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 5. | றுண்/டா/கச் | நேர், நேர், நேர் | தேமாங்காய் |
| 6. | செய்/வான் | நேர், நேர் | தேமா |
| 7. | வினை | நிரை | மலர் |

**இக்குறள் "மலர்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**11. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகதனிற் கூரிய தில்.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | செய்/க | நேர், நேர் | தேமா |
| 2. | பொரு/ளைச் | நிரை, நேர் | புளிமா |
| 3. | செறு/நர் | நிரை, நேர் | புளிமா |
| 4. | செருக்/கறுக்/கும் | நிரை, நிரை, நேர் | கருவிளங்காய் |
| 5. | எஃ/கத/னிற் | நேர், நிரை, நேர் | கூவிளங்காய் |
| 6. | கூ/ரிய | நேர், நிரை | கூவிளம் |
| 7. | தில் | நேர் | நாள் |

**இக்குறள் "நாள்" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

**12. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்**
**ஏனை யிரண்டும் ஒருங்கு.**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒண்/பொருள் | நேர், நிரை | கூவிளம் |
| 2. | காழ்ப்/ப | நேர், நேர் | தேமா |
| 3. | இயற்/றியார்க் | நிரை, நிரை | கருவிளம் |
| 4. | கெண்/பொருள் | நேர், நிரை | கூவிளம் |
| 5. | ஏ/னை | நேர், நேர் | தேமா |
| 6. | இரண்/டும் | நிரை, நேர் | புளிமா |
| 7. | ஒருங்/கு | நிரைபு | பிறப்பு |

**இக்குறள் "பிறப்பு" என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.**

## கவிதை

### நட்பு

அன்னையின் வடிவமாம் நட்பு
அன்பின் வடிவமாம் நட்பு
இன்ப ஊற்றாம் நட்பு
துன்பத்தைக் களைவதாம் நட்பு
வளர்ச்சியில் துணைவரும் நட்பு
சோர்வில் தோள் கொடுக்கும் நட்பு
உயிருக்கு உயிர்தரும் நட்பு
வாழ்விற்கு என்றும் அடித்தளம் நட்பு.

### முயற்சி

முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்
முயற்சி திருவினை யாக்கும்.
முயற்சி வாழ்வினை உயர்த்தும்
முயற்சி வெற்றியின் அறிகுறிகள்
முயற்சி இலார்க்கு தாழ்வு உண்டு
முயற்சியும் பயிற்சியும் ஒருங்கே சேர
ஆட்சியும் மாட்சியும் ஒருங்கே சேரும்

### கடல்

அலை அலையாய் ஓடிக்கை நீட்டும் கடல்
ஆதாரமாய் விளங்கும் கலங்கரை விளக்கம்
இன்பக் குளியலை அடைவோம் கடலிலே!
இன்பச் செல்வங்கள் அனைத்தும் இனிதுடனே
ஈகையாய் அள்ள வழங்கிய கடலே
உழைப்பால் உயர்ந்த மீனவ நண்பர்கள்
ஊதியமாய் பெறுவார்கள் கடல் செல்வத்தால்
ஒற்றுமையாய் வாழ்ந்து கடலை வணங்குவோம்.

### குழந்தை

பொக்கைச் சிரிப்பினில் பூக்கள் மலரும்
மழலை மொழியால் மண் வளரும்
பிசைந்த கூழோ அமிழ்தினும் இனிக்கும்
தளர்நடையினிலே தங்கரதம் தோன்றும்
குன்றெனச் செல்வம் கொட்டி வைத்தாலும்
குழந்தைச் செல்வமே உயர்ந்து நிற்கும்.
மண்ணில் மானுடம் நிலைப்பது உலகில்
தலைமுறை தழைப்பதும் தத்தம் குழந்தை யாலே!

### மழை

மழைநீர் எங்கள் உயிர்நீர்
மழை எங்களின் வாழ்வாதாரம்
மழை இன்றேல் மண்ணுயிர் இல்லை
மழை பெறுவோம் வளம் பெறுவோம்
மழை பொழிய மரங்கள் நடுவோம்.
மழை பொழிய தடை செய்யும்
கயவர்களை அழித்து நாட்டைக் காப்போம்
நாமும் வாழ்வில் வளம் பெறுவோம்

### பள்ளி

அறிவை வளர்க்கும் பள்ளி
ஆன்மீகத்தைக் கொடுக்கும் பள்ளி
இன்பத்தைத் தரும் பள்ளி
ஈடுபாட்டை வளர்க்கும் பள்ளி
உண்மையை உரைக்கும் பள்ளி
ஊக்கத்தை தரும் பள்ளி
எண்ணும் எழுத்தும் தரும் பள்ளி
ஏற்றத்தைத் தரும் பள்ளி
ஐயத்தைப் போக்கும் பள்ளி
ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கும் பள்ளி
ஓமின் ஒலியாய் அமையும் பள்ளி
ஔடதமாய் அமையும் எங்களுக்கு பள்ளி.

## திருக்குறள்

**மெய் உணர்தல்**

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

**பெரியாரைத் துணைக்கோடல்**

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**கண்ணோட்டம்**

பண்என்னாம் பாடற் கியைபின்றேல், கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**ஆள்வினை உடைமை**

அருமை உடைத்தென் றசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

**அமைச்சு**

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

**பொருள் செயல் வகை**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

**குடிசெயல் வகை**

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

**நல்குரவு**

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

---

## இயல் 9

### அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. நிரப்புக. 3x1=3

1. "இவள் தலையில் எழுதியதோ
   கற்காலம்தான் எப்போதும் ....." - இவ்வடிகளில் கற்காலம் என்பது ___________.
2. பூக்கையைக் குவித்துப் பூவே பரிவொடு காக்க என்று ___________ , ___________ .
3. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் ___________ இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது ___________.

II. விடையளி: 3x2=6

4. தீவக அணியின் வகைகள் யாவை?
5. ‘வாழ்வில் தலைக்கனம்’, ‘தலைக்கனமே வாழ்வு’ என்று நாகூர்ரூபி யாருடைய வாழ்வைக் குறித்து கூறுகிறார்?
6. ஜெயகாந்தன் இயற்றிய குறும்புதினங்கள் நான்கனைக் குறிப்பிடுக.

III. விடையளி: 1x4=4

7. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

IV. விடையளி: 1x6=6

8. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கிதாஞ்சலியை விவரிக்க.

V. விடையளி: 4x5=20

9. அடிபிறழாமல் எழுதுக:
   நவமணி வடக்க .... எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்
10. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித் திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.
11. அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

12. 'பா' நயம் பாராட்டுக.

"வாய்மணி யாகக் கூறும்
வாய்மையே மழைநீ ராகித்
தாய்மணி யாக மார்பில்
தயங்கியுள்ள குளிர வாழ்ந்தேன்
தூய்மணி யாகத் தூவும்
துளியிலது இளங்கூழ் வாடிக்
காய்மணி யாகு முன்னரக்
காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ".

VI. மொழிப்பயிற்சிகள்:

13. மொழிபெயர்க்க: 1x1=1

Education is what remains after one has forgotten what one has learned in school.

14. தாமரை இலை நீர்போல - சொற்றொடர் உருவாக்கு. 1x1=1

15. பொருள் கூறுக: பூட்கை. 1x1=1

16. கலைச் சொல் அறிக: Cabinet. 1x1=1

17. இலக்கணக் குறிப்பு தருக: கணீர். 1x1=1

18. பகுபத உறுப்பிலக்கணம் தருக: ஒலித்து. 1x2=2

19. சந்திப்பிழை நீக்கி எழுதுக: 1x1=1

அணியிலக்கண கூறுகளை செய்யுளுடன் தொடர்புபடுத்தி அதன் கலையுணர்நது நயத்தல்.

20. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக. 1x1=1

ஜெயகாந்தன் கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

21. விடைக் கேற்ற வினா அமை: 1x1=1

தாயின் அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது.

22. நிறுத்தற்குறி இடுக: 1x1=1

குப்புசாமியா அப்படி இங்கே யாரும் இல்லையே நீ யார் என்று நான் கேட்டேன்.

## இயல் 9

## அலகுத் தேர்வு 2

மதிப்பெண்கள்: 50

I. நிரப்புக. 3x1=3

1.சுதந்திர இந்தியாவில் மகத்தான சாதனையும் சாவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது __________.

2. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி __________.

3. நாகூர்ரூமி முதன் முதலில் எழுதிய இதழ் __________.

II. விடையளி: 3x2=6

4. நாகூர்ரூமி கவிதைத் தொகுப்புகள் யாவை?

5. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

6.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

III. விடையளி: 1x4=4

7. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

IV. விடையளி: 1x6=6

8. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

V. விடையளி: 4x5=20

9. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

10. பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடுவிழாவுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியுரை எழுதுக.

11. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



12. மேல்நிலை வகுப்பு சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் தேதி வகுப்பும் பிரிவும் :

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | / 500 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ/ மாணவியின் கையெழுத்து

VI. மொழிப்பயிற்சிகள்:

13. மொழிபெயர்க்க: 1x1=1

Tomorrow is often the busiest day of the week.

14. உவமை கொண்டு சொற்றொடர் உருவாக்குக. 1x1=1

மழைமுகம் காணாப் பயிர்போல.

15. பொருள் கூறுக: செவ்வை. 1x1=1

16. கலைச் சொல் அறிக: Cultural Boundaries. 1x1=1

17. இலக்கணக் குறிப்பு தருக: செங்கல். 1x1=1

18. பகுபத உறுப்பிலக்கணம் தருக: அறியேன். 1x2=2

19. சந்திப்பிழை நீக்கி எழுதுக: 1x1=1
தலைச்சிறந்த உரத்தச் சிந்தனை பேச்சாளராக திகழ்ந்தார் ஜெயகாந்தன்.
20. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக. 1x1=1
ஜெயகாந்தன் கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
21. விடைக் கேற்ற வினா அமை: 1x1=1
வாழ்க்கையின் உரைகல் என்பார் இலக்கியத்தை.
22. நிறுத்தற்குறி இடுக: 1x1=1
சாமி நீங்க போற வழிக்கெல்லாம் புண்ணியமுண்டு என்று வாழ்த்தினான்.


## Our Retailers (Book Shops)

- **Attur** : Saraswathi Book Centre - 9443340904.
- **Bhavani** : Dhana Book Company - 04256-230921,
: Lakshmi Stores - 04256-230709.
- **Chennai** : A.R.Book Mart - 9941516187, A.V.M.Stores - 22263213,
: Aashiq Book Centre - 9840492444, Arraba Book Traders - 9884488789,
: Badusha Book Depot - 9677045424, Basha Paper Mart - 9710248730,
: Bell Co - 9444101894, Bismi Publications - 9840399500,
: Books & Books - 9940137153, : Excellent Stationary - 24314100,
: F.A. Stores - 9941966670, Gauttham Book Centre - 9962954948,
: Golden Book House - 9941477870,
: Golden Book House, N.S.K. Nagar - 9790929257,
: Indian Book Centre - 9381175511,
: Indian Book House - 24327784, Jayam Traders, M.G.R.Nagar -9382334454,
: Kamal Store - 24419202, Kings Book House - 25383398,
: Limra Book Centre - 9940039953, M.K.Stores - 25386955,
: M.S.K.Book Centre - 25381002, MR Book Store - 2536 4596,
: New Books & Books - 9940102539, New Golden Book House - 26644095,
: New Mylai Stationers - 9841313062, Nivas - 9840089961,
: New Golden Enterprises - 9791599446, Parrys Book House - 2538 3308,
: Prine Book House- 9840676112, Ravie Agencies - 24941761,
: Ruby Books - 26425958, S.A.Stores - 9940666933, Sriram & Co - 9791186186,
: Sudhaa Store - 9840130040,
: The Purasai Books - 9840068767,
- **Chidambaram** : Jeyam Book Centre - 9786915969,
: Sriram Book Centre - 9486383334.
- **Coimbatore** : Cheran Book House - 0422-2396623, Kannan Puthaga nilayam - 0422-2398890,
: Majestic Book House - 0422-2383055,
: Sri Rajaganapathy Puthaga Nilayam - 94438-92421,
: Radhamani Books - 0422-2392122, Murugan Book Dept - 0422-2396531,
: Vasantham Stores - 0422-2234243, 9843082762
- **Cuddalore** : Cuddalore Emporium - 944388202028, Bell Book House - 08428745342.
: Indian Book House - 9443079942.
- **Dharmapuri** : Sathees Book Shop - 486015051, Siva Stores - 04342-264068,

: Sri Krishna School Needs - 04342-263347,
: Sri Sathiya Sayi Book House - 9443267210.

- **Dindigul** : Ayyanar book centre - 04512426561,
: KV NarayanaIyyar - 04512433753.
- **Erode** : Dhana Book Company - 0424-2221230, Motherland Book House - 0424-2226161,
: Senthil Book Palace - 0424-2214311, Selvam Books - 4243367027,
: Palaniyappa - 0424-2256261.
- **Harur** : Srikalyani Store - 9789966464.
- **Hosur** : Gowri Book Centre - 9443541320.
- **Kallakurichi** : Sri Kiruba Stationery Shop - 8122457114.
- **Karur** : Book Park - 9944531896,
: Vani Book Shop - 9443941210,
: SPN Note books - 04342-262795.
- **Krishnagiri** : Vijaya book centre - 04343-231210.
: Sri Ramana Book House - 9445060536 / 9025313661
- **Kumbakkonam** : Jaisri Books - 9952882002, Sri Books - 944374884,
: Sri Markandeya Book Depot - 9488337750, Sri Balaji Books - 9688356093.
- **Kanchipuram** : VBC Books - 044-27228343.
- **Madurai** : Arasu Book Stall - 9865706255, Jayam Book Centre - 9894658036,
: Mano Book Centre - 0452-2621577, Meenakshi Book Shop - 0452-2627010,
: Sunmathi Traders - 0452-2338966, Vetri Book Centre - 9843461624, 0452-2627839
- **Mayiladuthurai** : Balaji - 09865768502.
- **Nagapattinam** : Sri Kalaimagal Book Emporium - 9894669926.
- **Nagerkovil** : M.Arumugampillai Book Shop - 04652-230728, M.S Books - 9443744493,
: Golda Stores - 9791402491.
- **Paramakudi** : Lakshmi Book Center Mdp - 9488022699.
- **Namakkal** : Saravana Books - 097880 14000.
- **Nannilam** : Mullai Book Shop - 072002 42836.
- **Pattukottai** : Arasu Paper Store - 9791950463, Arasi - 043732 57507.
- **Pollachi** : Vasavi Stationaries - 94437-38383.
- **Pondicherry** : Saraswathi Book Stall - 9894440532 / 9500703094, Balaji Book Stall - 9894043457,
: Saraswathi Book Centre - 9361057339, Selvi Stores - 9488121105,
: Sri Lakshmi Book Stall - 94430 85499, Sri Saraswathi Book Stall - 9443790398.
- **Perambalur** : Chandra Stores - 9842360332.
- **Rajapalayam** : Sri Durga Stores - 9842168949.
- **Ramanathapuram** : Aruna Stores - 9443491772,
: Aruna Note Book Stores - 9842537005.
- **Rasipuram** : Sakthi Books - 9443752673,
: Babu Books - 04287-223159.
- **Salem** : A.K.Chandraiah Chettair & Sons - 9787552233,
: Ajantha Book Centre - 0427-417755, Kalaivani Book Centre - 2450979,
: Pattu Book Centre - 98424-28861, Sri Rajaganapathy Cards - 9443006703,

: The Ajantha Agencies - 0427-2266194, Saraswathi Paper Store - 0427-2211794,
: Sree Vignesha Book Centre - 0427-4020409, 9150780853.

- **Srivilliputhur** : Aandavar Stores - 94864621 02, New Raja Stores - 04563260892.
- **Seerkazhi** : Semmalar - 9626506207.
- **Sivagangai** : New Ayyanar Books - 999 4079 013
- **Thanjavur** : L.K.R.Puthaga Nilayam - 04362-2333109,
: Sri Murugan Publications - 9944144446.
- **Theni** : Maya Super Bazaar - 9500621295,
: Raja Kai Stores - 253323.
- **Thenkasi** : Maheswari Book Centre - 04633-224406.
- **Thiruvanamalai** : Pichandimudaliar.A - 9443214725,
: Sri Vasavi Stationery & General Store - 94438-85507
- **Thiruvarur** : Arasu Book Centre - 9443742424, Manonmoney Vilas - 9443491894,
: Anand Papers - 04366-222306, Enbajothy Vilas - 04366-220584
- **Tiruchengode** : Sri Chola Book House - 9842853949.
- **Tirunelveli** : Padma Book Stall - 0462-2337650, Eagle Books - 0462-2578899,
: Sri Shyamala Puthaga Angadi - 0462-232 2277.
- **Tirupattur** : Sri Sundar Stores - 9486242313.
- **Tirupur** : Chola Book House - 0421-3263608, Maheswari Puthaga Nilayam - 9442004254,
: S.P.S. Agencies - 0421-4334702, Sampath Stores - 0421-2201397,
: Senthil Stores - 2247274, Surya Papers - 94431-35864.
- **Trichy** : Raghavendra Stores - 9788757427, Murugan Book Centre - 0431-4011516,
: P.R.&Sons - 9443370597, Rasi Publications - 0431-2703692,
: Sumathy Pblications - 0431-2703230, Viswas Book Centre - 0431-2701965,
: Mani Puthaga Nilyam - 0431-270 8966
- **Thoothukudi** : Eagle Books - 0461-2392333,
: Sri Durga Stores - 09600333452.
- **Udumalpet** : Vela Book Centre - 04252-221847.
- **Vellore** : Bharath Book House - 9597449340, Radhakrishna Book Depot - 9442147266,
: Radhakrishna Stores - 9443489890, Vellore Book Centre - 0416-2225034,
: Swami Vivekananda Book House - 0416-2224406.
- **Vilupuram** : Sabarinathan Brothers - 04146-222581,
: Book Park - 04146-220266, Ganesh Book Agency - 8248849077.
- **Virudhunagar** : Sethu's Book Centre - 04562-248400.